உளவியல் துறைகள்

(இரண்டாம் தொகுதி)

ஆசிரியர்

டாக்டர் மு. இராசமாணிக்கம், எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்.டி.,

உளவியல் துறைத் தலைவர்,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,

அண்ணாமலை நகர்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—September, 1974

T.N.T.B.S. (C.P.) No. 586

FIELDS OF PSYCHOLOGY (Vol. II

DR. M. RAJAMANICKAM

Price Rs. 10-25

Published by the Tamilnadu Text book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

Printed by
M/s. INIYAN ACHAGAM,
9, Rundals Road,
VEPERY, MADRAS-600007.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினைந் காண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் எடுத்து வரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

பல துறைகளில் பணி புரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான 'உளவியல் துறைகள்-இரண்டாம் தொகுதி' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 586ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 621 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூக நல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக் கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின் கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பக்கம்

6. விலங்கு உளவியல்

7. வேற்றுமை உளவியல்

9. பிறழ்வு உளவியல்

5. உடற்கூற்று உளவியல்

1. உடற்கூற்று உளவியலின் நோக்கமும், எல்லையும், முறைகளும்

நோக்கமும் எல்லையும்

உளவியல் மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்கு முறையாக அறிகின்ற ஓர் அறிவியலாகும். மனிதர்களின் நடவடிக்கைகளை மட்டுமின்றி மிருகங்களின் நடவடிக்கைகளையும் அது அறிகின்றது. உளவியல் பல துறைகளையுடைய அறிவியலாகும். எல்லாத் துறைகளிலுமே அதனுடைய முக்கிய நோக்கம் மனிதர்களின் நடத்தையை முழுமையாக ஆராய்வதாகத்தானிருக்கிறது. மனிதன் ஒருமைப்படுத்தப்பட்ட ஓர் உயிரியல் அலகு என்றும் உளவியல் கருதுகின்றது. அதனால் சூழ்நிலையிலுள்ள தூண்டல்களுக்குத் தேர்ந்தெடுத்த தேவையான துலங்களைச் செய்கின்றான். இந்தச் செயல்முறையைப் பாகுபாடு செய்து பார்க்கும்போது துலங்கல்கள் எல்லாம் உள உடற்கூற்று இயந்திர நுட்பம் பொருந்தியதாக இருக்கின்றன. எனவே, மனிதனுடைய உடலின் இயந்திர நுட்பங்களை ஒழுங்குமுறையாக நாம் அறிய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆனால், உடற்கூறுகளில் மனித இயந்திரம் எவ்வாறு செயல்படுகின்றது என்று அறிவதற்கு ஒரு பழமையான கருத்தை உளவியலார் நெடுநாள்கள் கடைபிடித்து வந்தனர். அதற்கு ஒரு மாதிரியாக அவர்கள் தூண்டல்-துலங்கல் சூத்திரத்தை எடுத்துக்கொண்டிருந்தார்கள். புலனுறுப்பின் அறிவு எளிய மறிவினையில் உட்பொழிகின்றது என்றும், அந்த அறிவை மேற்பரப்பு நரம்பு வெளியில் செலுத்துகின்றது என்றும் கருதப்பட்டது. இக்

கருத்து அந்த நடத்தையின் நிகழ்ச்சிக்கும் போதுமான விளக்கமாக அமைகின்றது என்று நம்பப்பட்டது. உதாரணமாக, புலன் காட்சி, ஊக்கமூட்டப்பட்ட கற்றல், கருதுகோள் உருவாதல் போன்ற நடத்தைகளும் இவ்வாறே விளக்கப்பட்டன. ஆனால் இக் கருத்தின்மீது கொண்டிருந்த நம்பிக்கை வெளித் தூண்டலைக் கட்டுப்படுத்துவதில் நிறைவு தரக்கூடிய கொள்கையாக இல்லை.

எனவே, எல்லா உளவியலார்களும் எந்த விதமான விதிவிலக்குமின்றித் தேர்ந்தெடுத்த மைய நரம்புக் கூறை இப்பொழுது காரணமாக அடையாளம் காணுகின்றனர்கள். அந்த நரம்புக் கூறு ஒரு தூண்டலை வலிமை பெறச் செய்கின்றது; பிறகு மற்றொன்றை அவ்வாறே செய்கின்றது. ஆனால், இந்த இரண்டு வகையான செயல் முறைகளையும் பாகுபாடு செய்வோமானால் அவ்வளவு வேறுபாடு அவற்றினிடையே இல்லை என்றுதான் தோன்றுகின்றது. இரண்டு கொள்கைகளும் தூண்டலைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. நரம்பு மண்டலத்தின் செயல்முறை இரண்டிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

ஆகவே, தூண்டல்-துலங்கல் சூத்திரம் எளிய ஆக்க நிலையுறுத்தல் செயலை விளக்குவதற்கு வசதியாக இருப்பதாகத் தோன்றுகின்றது. நடத்தை ஆராய்ச்சி மூளையை மிகவும் ஒரு சிக்கல் வாய்ந்த நரம்பு சார்ந்த மின்னணுவின் அமைப்பு (Neuro-electronic System) என்று கருதுகின்றது. மூளையானது ஒரு சேமிப்புக் கிடங்கைப் போன்று ஏராளமான பொருள்களைக் கொண்டிருக்கின்றது. நரம்பு சார்ந்த ஒலி அளவுகளாக அவை தலையிடுகின்றன. மின் ஓட்ட மண்டலத்தின் விசை வளைந்து பின் சென்று வெளிப் பகுதியான புலனுணர்ச்சியின் உள் பொழிவோடு நீண்ட நாள்களுக்கு முன்பு தொடர்பு கொண்ட துலங்கல்களையும் ஏற்படுத்த வல்லது. இக் கருத்துப்படி, உள உடற்கூற்றுச் செயல்முறையின் ஆராய்ச்சி திட நிலையிலுள்ள உயிரினத்தில் மிகவும் கடினமான செயலாகும் என்று சிலர் கருதுகின்றனர்.

உடல் பகுதிகள் இணைந்து செயல்படுவதை மட்டும் நாம் ஆராயவில்லை. அவை தனித்தனியே செயல்படுவதையும் நாம் ஆராய்கின்றோம். உதாரணமாக, கண்ணிமைப்பு. கண்ணிமையின் எதிர்வினை அல்லது மறிவினை ஒரு சிறு தூசு கண்ணை நோக்கி வந்தாலும் உடனே ஏற்படுகின்றது. நம்மையறியாமல் உடம்பின் மீது ஏதும் மோதும்போது உடனே துள்ளிக் குதிக்கின்றோம். இதில் அடங்கியிருக்கும் செயல்முறைகளை நாம் அறிய வேண்டியவர்களாக இருக்கின்றோம். மேலும், தானியங்கும் செயல்முறைகள் மூளையின் முழு இயக்கத்தையும் புலனுணர்ச்சிக்குத் துலங்கவும்

அல்லது புறக்கணிக்கவும் செய்கின்றன. மிக அண்மையில்தான் பெறப்பட்ட ஒரு துலங்கல், தூண்டுகின்ற ஒரு தூண்டலைச் சாதாரணமாக விலக்குவதற்கு ஈடாக வெளிச் செலுத்துகின்றது என்பதை உணரத் தொடங்கினர். மேலும், நாடி நரம்புகளைப் பின்னோக்கி ஊட்டமளித்துத் தூண்டவும் செய்கின்றது. இஃது உடலின் இரசாயன சமநிலையைக் கலங்கச் செய்து, எஞ்சியுள்ள மன இறுக்கத்தோடு இணைந்துள்ள சில உள வழி உடல் கோளாறுகளைக் கொண்டுவருகின்றது. மூளை அலைகளின்மீது நடத்தப்பட்ட பரிசோதனைகளின் பதிவேடுகள், ஒரு சமயத்தில் ஒரு மனிதன் ஒரு திரைப்படத்தின்மீது புறத்தெறிந்த உள் சிந்தனைகளை அறிவதற்கு உதவி செய்யலாம். ஆனால், இந்தக் கட்டத்தை நாம் அடைவதற்கு முன்பு மனிதனுடைய உடலின் மூன்று சிக்கல் பகுதிகளைப் பற்றி நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும். அவை மனிதனுடைய நரம்புத் தசை மண்டலத்தில் (Neuro-muscular System) அடங்கியுள்ள புகுவாய்கள் (Receptors), பொருந்துவாய்கள் (Adjustors), இயக்குவாய்கள் (Effectors) என்பவை.

புலனுறுப்புகள், புகுவாய்கள், சுரப்பி இயக்கிகள், தசை இயக்கிகள், நரம்பு பொருந்துவாய்கள் ஆகியவை மனிதனுடைய நடத்தையில் தலையிடுகின்றன. எனவே, அவற்றின் உடற்கூற்றியலையும், உடலமைப்பியலையும் சரியாகப் புரிந்துகொண்டால் தான் மனிதனுடைய முழு நடத்தையையும் நாம் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். மொத்தச் செயல் முறையையும் சிறு கூறுகளாக்குவது, சில பகுதிகளின் செயலை உடைப்பதன் மூலந் தான் நடைபெற முடியும். ஏனென்றால், வெளிப்படுகின்ற ஒவ்வொரு செயலுக்குப் பின்னாலும் ஒரு பெரும் சிக்கலினுடைய பின்னணிக்கூடம் இருக்கின்றது. அந்தப் பின்னணிக்கூடத்தில் மறைந்திருக்கின்ற பொருளைத் தெளிவுபடுத்துவதற்கு உடற்கூற்று உளவியலார் எடுத்துக்கொள்ளுகின்ற முயற்சிகளை ஒரு பொறி வண்டி எப்படி வேலை செய்கின்றது என்பதை ஓர் இயந்திர நுட்ப அறிவுள்ள மனிதன் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளோடு ஒப்பிட்டுக் காட்டலாம்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டிருப்பவர்கள் அவரவர் தொழிலில் எவ்வளவோ தேர்ச்சி பெற்றிருக்கலாம். அந்த அறிவு முழு இயந்திரத்தின் நடவடிக்கைக்கு மறைமுகமாகவே தொடர்பு கொண்டிருக்கின்றது. பொறி வண்டியைப் புரிந்துகொள்ளுவதில் உள்ளார்ந்த வாயு எரிவதன் கோட்பாடுகளை ஒருவர் பாராட்டத் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்

மேலும், பொறி வண்டியிலுள்ள பொருந்து கருவி மாற்றம், தேய்மானம் முதலியவற்றைப் பற்றியும் பொறி வண்டி வேலை செய்வதற்கு முன்பு தெரிந்துகொள்ள வேண்டும். இதுபோன்றே உடற்கூற்று உளவியலாரும் மனித நடத்தையின் இயந்திர நுட்பத்தைப் பரிசோதனை செய்வதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்வதற்கு முன் உடலின் அமைப்புகளைப்பற்றியும், செயல் முறைகளைப் பற்றியும் முழு அறிவு பெற வேண்டுவது அவசிய மாகின்றது.

ஆனால், இத்துடன் உடற்கூற்று உளவியலின் கடமை முடிந்து போய்விட்டது என்று கருத முடியாது. உடலமைப்புகளைப் பற்றித் தெரிந்துகொண்டு விடுவதாலேயே நடத்தையைப்பற்றிய முழு அறிவும் ஏற்பட்டுவிடும் என்று நம்ப முடியாது. அந்தத் துறைகளிலிருந்து பெற்ற உண்மைகளும், கோட்பாடுகளும் செயல் சார்பான உபயோகங்களுக்கு ஏற்றவையா என்று பரிசோதனை செய்து பார்க்க வேண்டும். மேலும், உடற்பகுதிகள் ஒன்று சேர்ந்தபோது ஏற்படுகின்ற நடவடிக்கைகள் தனித்தனியே அவை செயல்படுவதிலிருந்து வேறுபடுகின்றனவாதலால், ஒருமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைதான் உடற்கூற்று உளவியலில் பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

உளவியல் செயல் முறையும் உடலமைப்பும்: உளவியல் செயல் முறைக்கும் உடலமைப்புக்கும் இடையில் சரியான போக்குவரத்து நடைபெறக் கூடியதாக இல்லை. ஒவ்வோர் உடல் பகுதியும் பல்வேறு பட்ட உளவியல் நடவடிக்கைகளுக்கு உதவியளிக்கக் கூடியதாக இருக்கின்றது. மூளை, தெளி உணர்வு நிலையின் இருப்பிடமாக இருக்கின்றது. சுரப்பிகள், மன எழுச்சியின் அடிப்படையாக இருக்கின்றன. ஆனால், இந்த உண்மைகள் எல்லாம் நாம் சிந்திக் கின்ற பிரச்சினைகளுக்கு அவ்வளவாகத் தேவையில்லை என்பது என்னமோ உண்மைதான். பல உடலமைப்புகள் சரியாக வரையறுக்கப்படாத செயல் முறைகளைக்கொண்டிருப்பதாலும், பல உளவியல் கோளாறுகள் உறுப்புச் சார்பான அடிப்படையைக் கொண்டிருக்கவில்லையாதலாலும் உளவியல் பாகுபாடுகள் போது மான அளவில் கிடைக்கப் பெறுகின்ற காலம் வரையிலும், உடல் இணைப்புப் பொருத்தப்பாடு மிகவும் கூர்மையாக வரையறுக்கப் படுகின்ற நாள் வரையிலும் உடற்கூற்று உளவியலார் மன வெழுச்சி, கற்றல், மற்ற நடவடிக்கைகள் ஆகியவற்றின் நரம்பு சார்ந்த மின்னணு பற்றி எழுதியவற்றை விட்டுச் செல்லு கின்றனர்.

முதலில் உடம்பின் அடிப்படை ஒழுங்கு முறைகளைப் புரிந்து கொள்ளுவதை அமைக்க வேண்டும். இரண்டாவதாக, அந்த அறிவை முழு நடத்தைக்கும் பயன்படுத்த வேண்டும். இதனால் உளவியல் செயல் முறைகளைத் தொடங்குவதைவிட அறிவியல் முன்னேற்றத்தை உடற்கூற்று உளவியலார் ஈட்டுகின்றனர். ஆகையினால், நாம் சில உடற்கூற்றுச் செயல் முறைகளின்மீது கவனத்தைச் செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். அவை நடத்தையை ஒருமைப்பாடு செய்வதையும், இந்தச் செயல் முறைகளுக்குப் பல்வேறு உடலமைப்புகள் பங்களித்து உதவுவதையும் உள்ளடக்கிக்கொண்டிருக்கின்றன.

நடவடிக்கையின் சக்திகள் : மனித உயிரினம் ஒரு சக்தியை ஓர் அமைப்பிலிருந்து மற்றோர் அமைப்புக்கு மாற்றுவதற்காகத் தனிப்பட்ட முறையில் உருவாக்கப்பட்ட ஓர் இயந்திரம் என்று கருதப்படுகின்றது. நாம் உட்கொள்ளுகின்ற உணவு சக்தியாக மாற்றப்பட்டுச் சேமிக்கப்படுகின்றது. அந்தச் சக்தி நரம்புகளையும், தசைநார்களையும், சுரப்பிகளையும், மற்ற உடல் பகுதிகளையும் நம்முடைய புலனுறுப்புகளைத் தாக்கும் தூண்டல்களுக்கு எதிர் வினை புரிவதற்கு எழுச்சியூட்டும் ஒரு நிலையை உண்டாக்குகின்றது. நம்முடைய நடத்தையின் செயல் நிறைவேற்றத்தில் சக்தி வெளிப்படுகின்றது. அஃது ஒரு கடுமையான ஒலிக்குத் தன்னிச்சையாக ஓர் உயிரினம் திடுக்கிடுகின்ற நிகழ்ச்சியிலிருந்து உயர்ந்த கணிதங்களுக்கு விடை கண்டுபிடிக்கும் நிகழ்ச்சி வரையிலும் சிக்கலின் தரத்திற்கேற்பப் படித்தரத்தில் மாறுதலுடையதாக இருக்கின்றது. வெளிப்புறத் தூண்டலின் விளைவுகளுக்கான துலங்கல்களில் தான் சக்தி வெளிப்பாடு உள்ளடங்கியிருக்கின்றது என்றாலும், உள்ளார்ந்த தூண்டல் நிலைமைகளுங்கூட உயிரினத்தை அமர்வு செய்து துலங்கல் வெளிப்போகச் செய்கின்றது.

இவ்விதமான செயல்முறையின் நிலைமைகளைப் புரிந்து கொள்ளுவதற்கு மனித உயிரினம் உண்மையில் ஓர் உள்ளார்ந்த இயந்திரமன்று. ஏனென்றால், அது வெளிப்புறச் சக்தி மூலங்களினால் இயக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுவதில்லை. ஒலியை எழுப்பும் காற்றலைகளாகிய வெளிப்புறத் தூண்டல் அல்லது வயிற்று வலியை உண்டாக்குகின்ற வயிற்றுத் தசைநார்களின் இறுக்கம் போன்ற உள்ளார்ந்த தூண்டல் மருந்தடைக்கப்பட்ட ஒரு துப்பாக்கியின் விசையைப் போன்று முறுக்கிவிட்ட தசைநார்களில் ஏற்கெனவே சக்தி சேமித்து வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தசைநார்கள் தான் துலங்கலை வெளிப்பாடாக நிறைவு செய்கின்றன.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் தூண்டலுக்கு நாம் எதிர் வினை செய்யும்போது சக்தி மாற்றம் ஏற்படுகின்றது. இதை வேலை என்று கூறுகின்றோம். மேலும், நம்முடைய பயனுறுதித்திறம் மற்ற இயந்திரங்களைப் போன்று அளவிடப்படுகின்றது. உட்பொழிந்த சக்தியை வேலை விளைபொருளால் வகுத்து, அஃது அளவிடப்படுகின்றது. வழக்கமாக வெளிப்புறத் தூண்டல் விளைவுகளுக்கு ஏற்படுகின்ற நரம்பு-தசைநார்களின் எதிர்வினைகள் சக்தி வெளிச் செல்லுவதில்தான் உள்ளடங்கியிருக்கின்றன என்றாலும் உள்ளார்ந்த தூண்டல் உறுப்புகளின் தொகுதி எதிர் வினையும் இதில் நிகழக்கூடியதாகவே இருக்கின்றது. இதை உள் உறுப்புகள் அவையாகவே தொடங்கி வைக்கின்றன. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டுமானால், மனித நடவடிக்கை மூன்று நிறைவுறுப்புத் தொகுதிகளைச் சுற்றி அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டாக வேண்டும்.

உணவுச் சக்திகள் செறிமான மண்டலத்தினால் வீறு பெருக்கப்பட்ட ஒரு வகை இரசாயன எரிபொருளாக மாற்றப்படுகின்றன. இது நரம்பு-தசைநார் மண்டலத்தின் உள் உறுப்புகளுக்கு (tissues) குருதியோட்ட மண்டலத்தினால் எளிதாகக் கிடைக்கச் செய்யப்படுகின்றது. இந்த உள் உறுப்புகளின் வெளி, உள் தூண்டல், ஒரு துலங்கல் நடைபெறும்பொழுது நரம்பு-தசை நார் மண்டலத்திற்குக் கிடைக்கின்ற எரிபொருளை வெறுமனே தொட்டுச் செல்லுகின்றது. எனவே, செறிமான மண்டலம், குருதியோட்ட மண்டலம், நரம்பு-தசைநார் மண்டலம் ஆகிய மூன்றும் ஓர் அலகாகச் செயல் புரிவதற்குச் சார்ந்து இயங்குகின்றன.

இந்தச் செயல்முறையில் நடைபெறுகின்ற உள் உறுப்புத் துலங்கல் ஏன் நடைபெறுகின்றது என்றால், மிகவும் சிக்கலான சக்தி மாற்றங்கள் உடலின் உள் உறுப்புகளுக்குள்தான் நடைபெறுகின்றன. வெளித் தூண்டல் சக்திகள் உறுப்புகளின்மீது செயல்பட்டு நடைபெறுகின்ற சிக்கலான சக்தி மாற்றங்களைவிட உள் உறுப்புகள்தான் தீவிரமாகச் செயல்படுகின்றன. உதாரணமாக, உணவைப் பார்த்தவுடன் சாப்பிட வேண்டுமென்ற செயலோ, தண்ணீரைக் கண்டவுடன் குடிக்க வேண்டுமென்ற செயலோ ஏற்படுவதில்லை. ஒருவனுக்குப் பசி எடுத்தபோதும், தாகம் எடுத்தபோதும்தான் உண்ணவும் குடிக்கவும் அவன் நடத்திச் செல்லப்படுகின்றான். பால் சார்பான நடவடிக்கைகள் உயிரினங்களிடையே நடைபெறுவதற்கு முன்பு சில உள் உறுப்புகளின் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. எனவே

உண்பதிலும், குடிப்பதிலும், பால் நடவடிக்கையிலும் உடலின் உள் உறுப்புகளில் இரசாயன மாற்றங்கள் நடைபெறுகின்றன.

உயிர் வாழ்கின்ற எல்லா மிருகங்களின் நடத்தையும் தன் னொழுங்கு முறையாக இருந்து வருகின்றது. உயிரியல் சார்பான அடிப்படை உண்மை இதுவாகத்தானிருக்கின்றது. இந்தத் தன் னொழுங்கு முறை, அடிப்படை உள் உறுப்பு நிலைமைகள் அளவுக்கு மிஞ்சிய அல்லது பற்றுக்குறை நிலைமைகளை அடையும்போது உள் தூண்டலை எழச் செய்து பொது நடவடிக்கைக்கு உடலைத் தூண்டு கின்ற செயல்முறையை உள்ளடக்கிக்கொண்டிருக்கின்றது. அடுத்தபடியாக, வெளிப்படையான எதிர்வினையின் இயந்திர நுட்பங்கள் தேவையான நிறைவை உள்ளார்ந்த தன்மையாகப் பெறக் கூடியவையாகும். இதன் மூலம் உள் உறுப்புகளின் நிலைமைகளை மிகவும் இயல்பான நிலைக்குத் திரும்பிச் செல்லுமாறு செய்யப்படுகின்றது. எனவே, முழு உடலும் சமநிலைக்குக்கொண்டு வரப்படுகின்றது.

உணவும் தண்ணீரும் இல்லாதபோது அவற்றைப் பெறு வதற்கான நடவடிக்கைகள் தோன்றுகின்றன. அத்தகைய எதிர்வினைகள் உயிரினத்திற்கு நேரடியானதும் உடனடியானது மானதாக இருக்கின்றன. அவை உள்ளார்ந்த அடிப்படை விரைப்புகளைச் சமநிலைக்குக் கொண்டுவருவதற்கு உதவுகின்றன. வெகு நாள்களுக்கு முன்பு எழுப்பப்பட்ட கவலைகளும் மனமுறிவு களும் சமநிலைச் செயல்களில் இவ்வாறு உள்ளார்ந்த செயல் முறையில் முடிவதை வெளியிலிருந்து காண முடியாது.

உடற்கூற்று உளவியலார்களின் கவனமெல்லாம் நடத்தை நடைபெறுவதற்கு வழிகாட்டும் இரண்டு செயல்முறைகளின்மீது இருந்து வருகின்றது. நடவடிக்கையின் சக்திகள் முக்கிய மாக எழுப்பப்படுகின்ற கட்டத்தைச் சுற்றியும், கட்டுப்பாட்டு இயந்திர நுட்பங்களைச் சுற்றியும் அமைகின்றன. இவை இரண் டுந்தான் நடத்தையைச் சரியாகச் செலுத்துகின்றன. இத் துறையில் நடைபெற்ற ஆராய்ச்சிகள், பசியின்போது வயிற்றுத் தசைநார்களில் ஏற்படுகின்ற சுருக்கங்கள் தீவிரமான பொது நட வடிக்கையின் காலக்கூறுகளோடு பொருந்துவதாக இருக்கின்றன என்றும், இது வெளித்துலங்கல்களுக்கான சக்தியைத் திரட்டுதலில் உள்ளார்ந்த நிலைமைகளைச் சுட்டிக் காட்டுகின்றது என்றும் கூறு கின்றன. அதாவது, நடவடிக்கைகளின் உச்சகட்டத்திற்கு ஏற்ப வயிற்றுத் தசைநார்களின் சுருக்கத்தில் வேகம் அதிகரிக்கின்றது. பசியை நிறைவு செய்துகொள்ளும்பொருட்டு அதற்கான நடவடிக்கையை நோக்கி உயிரினம் தன்னுடலின் சக்தியை

ஒருமுகப்படுத்துகின்றது. இச் செயல் உடலினுள்ளே என்ன நடைபெறுகின்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

பரிசோதனைகளில் நாளமில்லாச் சுரப்பிகள் நீக்கப்பட்டிருக்கின்றன; பொருத்தப்பட்டுமிருக்கின்றன. இது சக்தி விளைவுகள் மிக அதிகமாகப் பரவுவதைப்பற்றி நாம் மேலும் அதிகமாகத் தெரிந்துகொள்ளுவதற்குத் துணை புரிகின்றது. சக்தி விளைவுகள் அதிகமாகப் பரவுவதில் உள் உறுப்புத் தேவை வெளி நடத்தைக்கு நேரடியாக நடத்திச் செல்லுவதில்லை. ஆனால், உடலின் உள் உறுப்புகளை அதிகமாகத் தூண்டச் செய்வதோடு உயிர்ப்பொருள் மாறுபாட்டை உயர்த்துவதில் தன்னைத்தானே வெளிப்படுத்துகின்றது. உள் உறுப்புகள் அதிகமாகத் தூண்டப்படுவதில் உள்வழி உடல் நோயும்கூட வெளிப்படுகின்றது.

சுரப்பி மண்டலமும் குருதியோட்ட மண்டலமும் புதிய தூண்டல் விளைவுகளைப் புறக்கணிப்பதற்கோ அல்லது பெறுவதற்கோ இயங்குவதைவிட இருக்கின்ற உடல் சக்திகளைப் பேணுவதற்காக மிக நன்றாக ஒத்துழைக்கின்றன. ஏற்படுகின்ற புதிய தூண்டல்களின் விளைவுகள் தொடர்ந்து நடைபெற வேண்டிய உறுப்புச்சார்ந்த செயல் முறைக்கு நன்மை பயப்பதாகவுமிருக்கலாம்; அல்லது ஊறு விளைவிப்பதாகவுமிருக்கலாம்.

ஊறு விளையும் தேவையாக இருக்குமானால், அஃது உடனே நரம்பு-தசைநார்மேல் கிடக்கின்ற கருவிக்குத் தெரிவிக்கப்படுகின்றது. அதனுடைய தலையாய பண்புக்கூறு என்னவென்றால், மிகப் பொருத்தமான திசையில் நடத்தையை மாற்றவோ திருத்தியமைக்கவோ அதிகமான ஆற்றலைப் பெற்றிருப்பதாகும். எனவே, இவ்வாறு உடலின் சமநிலை சீர் குலைகின்றபோதெல்லாம் அல்லது சமநிலையில் மாற்றம் வலியுறுத்தப்படுகின்றபோதெல்லாம் உயர்ந்து நின்ற நரம்பு-தசைநார் மண்டலத்தின் உயர்ந்து எழுகின்ற அளவானது சூழ்நிலையில் உயிரினத்தோடு பொருந்திச் சென்று போதிய ஓய்வை உண்டாக்க வல்ல துலங்கல்களை ஈட்டவோ விருத்தி செய்யவோ வேண்டும். இந்த நடைமுறைத் திறம் சில சமயங்களில் தவறி விடுகின்றது. குடல் புண்கள், எஞ்சியுள்ள தசைநார்களின் விறைப்புகள் ஆகியவையிருப்பதால், நரம்பு-தசைநார் மண்டலங்களில் ஏற்படும் கலக்கத்தின் உயர்ந்த மட்டத்தைக் குறைப்பதற்குப் பதிலாகப் பின்னோக்கிச் சென்று கலக்கத்தைத் தொடருமாறு செய்துவிடுகின்றது. சூழ்நிலையும், உள்படித்தர நிலையும் என்றும் மாறிக்கொண்டே இருப்பதால், நன்றாகத் துலங்கும் கருவிகளுக்கு

உயர்ந்த செயல்முறைச் சார்பான குழைவுத் தன்மை மிகவும் தேவைப்படுகின்றது.

நரம்பு-தசைநார் கருவிகள் : நரம்பு-தசைநார் கருவி ஒரே சீராயுள்ள ஒரு நிகழ்ச்சியன்று. அது மூன்று பகுதிகளையுடைய ஒரு திட்டத்தோடு தொடர்பு கொண்டுள்ள அமைப்பாக இருக்கின்றது. அவை புலனுணர்ச்சிக்குரிய புகுவாய்கள், மையப் பொருந்துவாய்கள், இயக்கஞ்சார்ந்த இயக்குவாய்கள் என்பவை.

வெளித் தூண்டல்கள் புகுவாய்களின்மீது செயல்படுகின்றன. மேலே கூறப்பட்ட அமைப்புகளால் வெளிப்படுத்தப்பட்ட சக்தி, நடைபெறுகின்ற வேலைக்குக் கொடுத்துதவப்படுகின்றது. இது மையப் பொருத்தப்பாட்டு நரம்பு உயிரணுக்களையும் தானியங்கும் பொருத்தப்பாட்டு உயிரணுக்களையும் தூண்டுகிறது. இந்த நரம்பு உயிரணுக்கள் திரும்பச் சுழன்று சில இயக்கஞ்சார்ந்த இயக்குவாய் உறுப்பின்மீதோ சுரப்பி சார்ந்த இயக்குவாய் உறுப்பின்மீதோ கடமையைச் செலுத்துகின்றன. இஃது ஒரு நடத்தைக்குரிய துலங்கலாக விரிவடைகின்றது.

நரம்பு-தசைநார் கருவிகளைப் பற்றிய ஒரு குறுக்குப் பகுப்பியல் கருத்து உண்டு. நரம்பு-தசைநார் கருவிகள் எந்தச் சமயத்திலும் மிகவும் விரிந்த எண்ணிக்கையுள்ள நரம்பு செலுத்தல்களைக் கண், காது, உள் உறுப்புகள் ஆகியவற்றின் புதுவாய்களிலிருந்து மூளைக்கும், நரம்பு மண்டலத்தின் தானியங்கும் தண்டுவட மையத்திற்கும் செலுத்துகின்றன. அதே சமயத்தில் அதே எண்ணிக்கையுள்ள நரம்பு செலுத்தல்கள் பொருந்துவாய் நரம்புகளிலிருந்து இயங்குவாய் உறுப்புகளுக்கும், தசைநார்களுக்கும், சுரப்பிகளுக்கும் செல்லுகின்றன. இந்த விதமான நரம்பு செலுத்தல்கள் (discharges) மின்னியல்பு சார்ந்த நிகழ்ச்சிகளாகும். இவை நரம்பு உயிரணுக்களில் சக்தி மாற்றத்தோடு உடனியங்குகின்றன. மின் வலியால் மிகைப்படுத்தப்படும் மென்மையான பொறியமைப்பு மூலம் அவற்றைக் காணும்போது நரம்பு-தசைநார் கருவிகள் எவ்வாறு வேலை செய்கின்றன என்பது பற்றி நமக்குச் சில கருத்துகள் கிடைக்கின்றன.

நரம்பு செலுத்தல்கள் வெளித் தூண்டல்களினால் இருக்குமானால், அவை ஒரு குறிப்பிட்ட இயக்க வெளிப்போக்குக்கோடு (motor outlet) ஓர் ஒருபடிவார்ப்பு ஒட்ட மண்டலத்தின் மூலமாக நேரடியாக இணைக்கப்படுவதில்லை. அதற்கு மாறாக, அவ்விதமான நரம்பு செலுத்தல்கள் பொருந்துவாய் மையங்களை அடையும்போது

உள்ளார்ந்த தொடக்கத்தின் தூண்டலோடு ஒருமைப்படுத்தப் படுகின்றன. இஃது அந்தச் செலுத்தல், பொருத்தமான இயக்கத் தூண்டலை வெளியிடுவதற்கு முன்பு ஏற்படுகின்றது. இந்த வழியில் முழுக்கருவியின் நேர்மை பாதுகாக்கப்படுகின்றது. மிகவும் இசையாததும் ஊறு பயப்பதுமான நடத்தை புறக்கணிக்கப்படுகின்றது. ஒரு நரம்பு-தசைநார் உறுப்பு கொடுக்கப்பட்ட தூண்டலுக்கு ஏற்ப இல்லாமல் குறைவாகவோ மிக அதிகமாகவோ செயல்படுமானால் மண்டலத்தின் சமநிலை குலைகின்றது. எஞ்சியுள்ள தசை விறைப்புகள், உள்நோக்கிச் சென்று பின்னோக்கி ஊட்டமளித்தல், தொடர்ந்து உடல் நிலை குலைவு ஆகியவை ஏற்படுகின்றன. மூன்று உறுப்புகளிலும் நடைபெறும் பரிமாற்றச் செயல்முறையில் ஏற்படும் இசைவிணக்கத்திலுள்ள சிக்கலான பிரச்சினைகளை இது சுட்டிக் காட்டுகின்றது.

ஆராய்ச்சி முறைகள்

மனித நடத்தையில் நடைபெறுகின்ற செயல் நுட்பங்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்கு உடற்கூற்று உளவியலார் பெரு முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். பலவேறுபட்ட முறைகளை அவர்கள் கையாண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய ஆராய்ச்சிக்குட்பட்ட பிரச்சினை நரம்பு-தசைநார் உறுப்புகளில் எந்த ஒரு குறிப்பிட்ட பகுதியினால் ஏற்படுவதாக இருந்தாலும் சரி, அந்தப் பகுதி நீக்கப்பட்ட பிறகு ஏற்படுகின்ற நடத்தை மாற்றம் பிரச்சினை ஏற்படுவதற்கு முன்பிருந்த நடத்தையோடு ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டது.

பிரச்சினை பெரிதும் செயல் சார்பானதாக இருக்குமானால், அதனுடைய மூலம் ஆராயப்பட்டது. அது நடத்தையில் எந்த அளவுக்குப் பங்கு கொண்டிருக்கின்றது என்றும் ஆராயப்பட்டது. தவிர, பிரச்சினை நரம்பு-தசைநார் உறுப்புகள் சார்புடையனவாக இருக்குமானால், அவ்வுறுப்பு மின்வலியால் தூண்டப்பட்டு வெளிப்படுகின்ற நடத்தை பதிவு செய்யப்பட்டது.

சில சமயங்களில் பிரச்சினை பெரும் பொருந்துவாய் மையங்களாக இருக்கலாம். அவை குறிப்பிட்ட செயல் நிறைவேற்றத்தில் உள்ளடங்கியிருக்கக் காணலாம். பிரச்சினைக்குரிய நடவடிக்கை தொடங்கப்படுகின்றது. அதே சமயத்தில் தீவிரப்படுத்தப்பட்ட நடவடிக்கையின் மின்னடையாளங்களுக்கு மூளையின் பல்வேறு அமைப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன என்று துருவி ஆராயப்படுகின்றன.

இந்த மூன்று முறைகளும் பெரும்பாலும் மிருகங்களின்மீது நடத்தப்படுகின்ற பரிசோதனைகளில்தான் உபயோகிக்கப்பட்டு வந்தன. ஆனால், மனிதர்களிடையே அதே போன்ற நடவடிக்கைகளை அதே முறையில் ஆராய்வதில் பல சிரமங்கள் இருக்கின்றன. நடத்தை மாற்றங்களுக்கும் நோய்ப்புண்களுக்குமிடையில் உள்ள இணைப்புப் பொருத்தப்பாடுகள், பேச்சு இழப்புக்கும் மூளையில் கட்டி வளருமிடத்திற்கும் உள்ள தொடர்பு போன்று, அடிக்கடி உதவி புரிவதாக இருக்கின்றது.

இதைவிட இன்னும் பயன்தரத்தக்க முறை மையச் செயல் முறையின் மேற்பரப்பைக் காட்டும் பல்வேறு கருவிகளைப் பயன் படுத்துகின்றது. உதாரணமாக, குருதியமுத்தம், மின்னோட்டத் தோல் தடுப்பு, மூளையிலிருந்து வரும் மின்னலைகள் முதலியவை பொருத்தமான கருவிகளைக் கொண்டு ஆராயப்படுகின்றன. இந்த உடற்கூற்று எதிர் வினைகள் எல்லாம் மிகவும் கூருணர்ச்சி யுள்ளவையாதலால், அவை தம் விருப்பக் கட்டுப்பாட்டுக்குள் வருவதில்லை. அவை, குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் குருதியமுத்தம் மாறுவதில் உள்ள உபயோகத்தைப் போலவும், காக்கை வலிப்பு திடீரென்று தாக்குவதை எச்சரிக்கை செய்யும் மூளை அலையின் பதிவேட்டின் உபயோகத்தைப் போலவும் மூல மறிவதில் பெரிய மதிப்பீடுகளாக இருக்கின்றன.

எனவே, இதுவரையிலும் நாம் விளக்கிக் கூறிய கருத்துகளை ஆராய்ந்து பார்க்கும்போது உடற்கூற்று உளவியல் மிகவும் செயல் சார்பான முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அறிவியல் என்று தோன்றுகின்றது; அதே சமயத்தில் மிகவும் சிக்கலான ஆராய்ச்சித் துறையாகவுமிருக்கின்றது. ஆகவே, இத் துறையில் தனித்திறமை பெறுகின்றவர்கள் பல்துறைப் புலமை வாய்ந்தவர்களாகவும், பல கடினமான தொழில் நுட்பங்களில் திறமை பெற்றவர்களாகவு மிருக்க வேண்டும்.

2. புலனுறுப்புச் சார்ந்த செயல்முறைகள்

நரம்பு-தசைநார் செயலின் மூன்று வகையான செயல் முறைகளில் புகுவாய் இயந்திர நுட்பங்கள் முக்கியமாக நடத்தையின் தொடக்கத்தோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளன. குருதியோட்டத்தில் உள்ள பொருள்களினுல் தூண்டப் படுகின்ற தசைநார், சுரப்பி ஆகியவற்றின் நிகழ்ச்சிகள் விதி விலக்காக இருக்கின்றன. அவற்றைத் தவிர, மனிதன் தன்னுடைய புலனுறுப்புக்களில் விளைவை உண்டாக்குகின்ற சக்தி மாற்றத்திற்குத்தான் எதிர்வினை புரிகின்ருன். இந்த இயக் கங்கள் பண்புக்குரிய வகையில் வேறுபட்ட விளைவுகளைத் தரு கின்றன. உதாரணமாக, பச்சை, சிவப்பு போன்ற நிறம் சம்பந்த மானதும், அழுத்தம், வலி போன்ற உணர்ச்சி சம்பந்தமானதும் பல்வேறு படித்தரமான பண்புகளைப் பெற்றிருக்கலாம். மேலும் செறிவு, காலத்தொடர்ச்சி ஆகியவற்றில் பரும அளவு மாற்றங்களையும் தருகின்றன.

உடற்கூற்று உளவியலார் புலனுறுப்புச்சார்ந்த செயல் முறையின் இந்த இரண்டு வேறுபட்ட பண்புக்கூறுகள் எவ்வாறு புகுவாய் உறுப்புகளின் செயலுடன் தொடர்புகொண்டிருக் கின்றன என்று தனியார்வம் கொண்டிருக்கின்றனர். இந்த அமைப்புகள் குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்ட உயிரணுக் களாக இருக்கின்றன. அவை இரண்டு வகைகளில் அடங்குகின்றன. ஒரு வகை, சில வகையான தூண்டல்களுக்குக் கிளர்ச்சியின் தாழ்ந்த வாயில்களைக்கொண்டிருக்கின்றன. இவற்றில் ஏற் படுகின்ற துலங்கல் போதியதாக இருப்பதில்லை. மற்ருெரு வகை, மற்ற எல்லாச் சக்தி வெளிப்பாடுகளுக்கும் உயர்ந்த வாயில் களைக் கொண்டிருக்கின்றன.

அவை பல்வேறு படித்தரத்தில் தன்னுரிமையான அலகு களாக இருந்து உடலின் உள்ளுறுப்புகள் முழுவதும் பரவி யிருக்கின்றன; தோலில் பரவியிருப்பது போன்று விரிவான புலனுறுப்புகளில் ஒன்முகத் திரட்டப்பட்டிருக்கின்றன. அவை தனிப்பட்ட புலனுணர்ச்சியுறுப்புகளைப் பெற்றிருப்பதோடு, பல ஒத்துதவுகின்ற பகுதிகளைக் குறிப்பிட்ட வகைத் தூண்டல் சக்தி யின்மீது ஒருமுகப்படுத்துவதற்கு ஒத்தமைத்துக்கொள்ளுகின்றன. கண், காது போன்ற உறுப்புகளைப் போன்று என்றும் கூறலாம்.

புகுவாய்கள் அவற்றின் தூண்டல்களுக்கு ஏற்ப இரண்டு பெரும் வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவை புறப் பொறிகள் (Exteroceptors) என்றும், உட்பொறிகள் (Interoceptors) என்றும் கூறப்படுகின்றன. புறப்பொறிகள் உடலின் மேற்பரப்பின் ஒரு பகுதியாக அவை இருக்கின்றன. அவை கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகியவை உள்ளடங்கிய தாக இருக்கின்றன. அவை வெளிச் சூழ்நிலையின் தூண்டல் களுக்கு எதிர்வினை புரிகின்றன. உட்பொறிகள் உள் உடல் உறுப்புகளில் பதிந்திருக்கின்றன. குறிப்பாகத் தசைநார்களிலும் செரிமான உறுப்புகளிலும் அவை பதிந்திருக்கின்றன. அவை உள் தூண்டலாக இருக்கின்ற இந்தப் பகுதிகளின் செய லிலிருந்து எழுகின்ற தூண்டல்களின் அழுத்தத்திற்கு எதிர்வினை புரிகின்றன. எனவே, புறப் பொறிகள் தூண்டல்களை வெளியி லிருந்து பெறுகின்றன; உள்பொறிகள் உள்ளிருந்து பெறுகின்றன.

குணத்தை ஆய்கின்ற வேறுபாடுகள்

பல்வேறுபட்ட புகுவாய் அமைப்புகளுக்கும் வேற்றுமையான பண்புள்ள அனுபவங்களுக்கும் இடையிலுள்ள தொடர்புறவு சம்பந்தமாக மிகுந்த ஆய்வுகள் எழுந்திருக்கின்றன. தற்சமயம் புறக்கணிக்கப்பட்ட ஒரு கருத்து என்னவென்முல், கண், காது, மற்ற உறுப்புகளிலிருந்து வருகின்ற நரம்புகள் குறிப்பிட்ட நரம்புச் சக்தியின் பல்வேறு வகைகளை எடுத்துச் செல்லுகின்றன என்ப தாகும். ஆனல், இன்று நிலவும் கருத்து என்னவென்முல், புகுவாய்களிலிருந்து மைய நரம்பு மண்டலத்திற்குக் கிளர்ச்சிகளைக் கொண்டு செல்லும் எல்லா நரம்புகளும் ஏறக்குறைய ஒரே மாதிரி யாகத்தான் நடந்துகொள்ளுகின்றன. அதனல் ஒவ்வொரு புலன் சார்ந்த நரம்பும் ஒரு தனிப்பட்ட வகையான துலங்கலை எழுப்புகின்றது. அது பெரும்பாலும் அந்த நரம்போடு தொடர்பு கொண்டுள்ள உள் உறுப்பின் வகையினல் நிர்ணயம் செய்யப்படு கின்றது.

அதனுடைய பொருள் என்னவென்றால், கண் நரம்பைக் காதோடு இணைக்க நம்மால் முடியுமானால், அதே போன்று கேள்வி நரம்பைக் கண்ணோடு இணைக்க முடியுமானால், நம்மால் இடியைப் பார்க்க முடியும் என்றும், மின்னலைக் கேட்க முடியும் என்றும் கூறலாம். புலனோட்டத்தின் மூளை உயிரணுக்கள் எல்லையிலுள்ள புகுவாய்கள் ஆகியவற்றிலுள்ள பல்வேறு புலன் சார்ந்த பண்புகளின் தோற்றத்தைக் காண்பதற்கான ஆராய்ச்சியிலுள்ள விரிந்த சிக்கல் ஒரு கருத்து மாறுபாட்டைத் தோற்றுவித்திருக்கின்றது.

இதிலுள்ள மிகப் பொதுவான கருத்து என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட புலன் முறையிலுள்ள ஒவ்வொரு பண்புக்கும் தனிப்பட்ட புகுவாய் அமைப்புகளிருக்கின்றன என்பதாகும். ஆகையினால், இதனுடைய பாகுபாடு உடல் எல்லையைச் சார்ந்ததாக இருக்கின்றது. ஆனால், இதற்கு ஒரு மாற்றுக் கருத்துமிருக்கின்றது. அது, கண் போன்ற ஒரு குறிப்பிட்ட புலனுறுப்பின் புகுவாய் அமைப்புகள் பெரிதும் ஒரே மாதிரியிருக்கின்றன என்பதாகும். அதனால் தூண்டலின் முழு வடிவமும் பொதுப் பாகுபாட்டுக்காக மூளையை நோக்கி அனுப்பப்படுகின்றது.

தனிப்பட்ட புகுவாய்க் கோட்பாட்டின் கருத்து என்னவென்றால் தோலிலுள்ள பல்வேறு புகுவாய் அமைப்புகள் தனியுரிமையுடன் ஒரு வகையான தூண்டலுக்கே துலங்குகின்றன என்பதாகும். அதற்குத் தரப்பட்ட முதல்தரமான உதாரணமாக, குளிர்ச்சிக்கு ஒன்றும், சூட்டுக்கு ஒன்றும், அழுத்தத்திற்கு ஒன்றும், வலிக்கு ஒன்றும் துலங்குவதைக் கூறலாம். எவ்வாறிருப்பினும், நேரடியான இணைப்புப் பொருத்தப்பட்டு ஆராய்ச்சிகள் காட்டுவது என்னவெனில், தோலில் குளிருணர்புள்ளிகளுக்கடியிலும், சுடு புள்ளிகளுக்கடியிலும் தனிப்பட்ட புகுவாய்கள் ஏதுமில்லை என்பதாகும். கட்டற்ற நரம்பு எல்லைகளும் குருதிக்குழாய்களில் உள்நோக்கிச் செல்லுகின்ற நார்களுந்தான் தோலில் இருக்கின்றன.

எந்த விதமான மாறுபாடுமில்லாத எல்லை உறுப்புகளின் மீது சுடு தூண்டலும், குளிர் தூண்டலும் கொடுக்கின்ற மாறுபாடுள்ள விளைவுகளைப் பற்றி அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளில் புலனுணர்ச்சிப் பாகுபாட்டில் மைய மூளையின் செயல் முறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. கேள்விப் புலன் துறையிலும் தனிப்பட்ட புகுவாய்க் கோட்பாடுகள் மிகவும் மரபுரையாக இருக்கின்றன. கேள்விப் புலன் நரம்பை மின்வலி கொண்டு துலங்க வைத்து நடத்தப்பட்ட ஆராய்ச்சியானது மையப் பாகுபாட்டுக் கோட்பாட்டுக்கு ஆதரவு நல்குவதாக

இருக்கின்றது. பார்வைக்குரிய துறையிலுங்கூட, கண்ணில் தனிப்பட்ட அமைப்புகளையுடைய பல்வேறு ஒளி இரசாயனப் பொருள்களை (Photo-chemical substances) நிறத்தினுடைய புலனுணர்ச்சிகளுக்கு அடிப்படையாகக்கொள்ளும்படி அடிக்கடி கருத்து வெளியிடப்பட்டது. பச்சை, சிவப்பு, நீலம் போன்ற நிறங்கள் மைய மூளைக்கூறுகளின் முக்கியத்துவத்தை வெளிப் படுத்தத் தொடங்கியிருக்கின்றன.

ஆனால், இத் துறைகளில் எதிலும் புலன் சார்ந்த செயல்முறை களின் குணப் பாகுபாட்டில் மூளை உயிரணுக்கள், புகுவாய்கள் ஆகியவற்றின் தொடர்புடைய முக்கியத்துவத்தைப்பற்றிக் கூறுவதற்கு இன்னும் காலம் கனியவில்லை. ஆனால், இந்தப் பகுதி பயன் தரும் கற்பனையோடும், கருவியோடும் நுண்மையான உடற் கூற்று ஆராய்ச்சியைத் தொடங்கும் எந்த ஆராய்ச்சியாளருக்கும் உண்மையான செய்திப் பொருளை நல்கும் என்பது உறுதியாகும்.

பரும அளவை ஆராய்கின்ற வேறுபாடுகள்

புலனுணர்ச்சிச் செயல்முறைகளில் பரும அளவு (quantitative) சார்பான வேறுபாடுகள் பற்றிச் சற்று அதிகமாகவே செய்திகள் கிடைக்கின்றன. அவை இணைக்கப்பட்ட நரம்பு செலுத்தலில் புகுவாய்களின் இயங்காத தன்மையின் அளவோடும் காலத் தொடர்புகளோடும் செயல்படுகின்றன. அனைத்தும் அல்லது ஒன்றுமில்லை விதிப்படி (All-or-nothing Law) ஒவ்வொரு புகுவாயும் செலுத்துவதற்கு முன்னேற்பாடாக ஒரு பரும அளவு சக்தியைப் பெற்றிருக்கின்றது. புகுவாயினுடைய இயங்காத தன்மையுள்ள வாயிலை எந்தத் துலங்கலாவது வெற்றி கொள்ளுமளவுக்குச் செறிவாக இருந்து, அந்தச் சக்தியைத் தொடுமானால், சக்தி முழு வதையும் செலுத்துகின்றது.

தூண்டலின் செறிவு அதிகரித்துச் சென்று, அது மூளையில் பதிவு செய்யப்பட்டால், அஃது அதிகமான புகுவாய்களின் உள் ளடக்கத்தை வெளிப்படுத்துகின்றது. ஒவ்வொரு புகுவாய்க்கும் செலுத்தலின் அலையதிர்வும் அதிகரித்துச் செல்லும். ஏனென்றால், வலிமை மிக்க தூண்டல்கள் நரம்பை வெகு சீக்கிரம் கிளர்ச்சியுறச் செய்துவிடுகின்றன. எந்த ஒரு குறிப்பிட்ட புலனுறுப்பிலும் புகு வாய்களின் எண்ணிக்கை ஓர் எல்லைக்குட்பட்டிருப்பதால், துலங் கலில் படித்தரங்களிருக்கின்ற பிரச்சினை முக்கியமானதொன்று கின்றது.

தூண்டல், துலங்கல்களின் செறிவுகளைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்திக் கருத்துகள் வெளியிட்ட வீபர் (Weber), ஃபெக்னர்

(Fechner) காலந்தொட்டு, புலன் காட்சியாக உணரக்கூடிய அளவு தூண்டலின் செறிவில் குறைந்த அளவு அதிகரிக்கச் செய்தல், தாழ்ந்த செறிவிலிருந்து உயர்ந்த செறிவிற்கு முன்னேற்றமடைந்து பெரிதாகிக்கொண்டு செல்லுகின்றது. நரம்பு செலுத்தலின் அலையதிர்வில் அடுக்கு மூலம் (Logarithmic) அதிகரித்துச் செல்லுவதற்குச் சமமாகத் தூண்டலின் அதிகரிப்பும் உடன் செல்லுவதாகக் கண்டறிந்திருக்கின்றனர். பெரும்பாலான புகுவாய்கள் செறிவுகளின் தாழ்ந்த வீழ்ச்சுக்குத் துலங்கும் பொருட்டு உணர்ச்சியாக்கப்பட்டிருக்கின்றன.

தூண்டல் மிகவும் செறிவாக இருக்கும்பொழுது புகுவாய்க் கருவி துலங்குவதில்லை. ஒரு தூண்டலின் காலத் தொடர்ச்சியும், அதனுடைய செறிவும் புகுவாய் இயந்திர நுட்பத்தில் விளைவுகளை உண்டாக்குகின்றன. நீண்ட காலச் செயலிலிருக்கும்போது புகுவாய் கிளர்ச்சிக் குணத்தை இழந்துவிடுகின்றது. இதைப் புலன் தழுவல் (sensory adaptation) என்று கூறுகின்றனர். புகுவாய் களும், அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள நரம்பு நார்களும் ஒரே விதமான வெளிச் சக்தி உள்ளே செலுத்தப்படும்போது வெவ் வேறு வீதத்தில் துலஙகுகின்றன. புகுவாய் தன்னுடைய கிளர்ச்சித் தன்மையை மிக மெதுவாக இழக்கின்றது. அதே சமயத்தில் அவற்றோடு இணைக்கப்பட்டுள்ள நரம்பு நார்கள் துலங்கு கின்றன; ஓய்வு பெறுகின்றன. புகுவாய்கள் ஓய்வு பெறுவதற்குள் புல முறைகள் மறுபடியும் இவை துலங்குகின்றன.

தொடர்ச்சியாக நடைபெறுகின்ற தூண்டலை இடையிடையே தொடர்பில்லாத நரம்பு செலுத்தல்களின் வரிசைகளாக மாற்று வதில் ஒரு மின்வலி தடை வகை புகுவாய் இயங்குகின்றது. இடையில் நரம்பு உயிரணு தன்னுடைய கிளர்ச்சித் தன்மையைத் திரும்பப் பெற இயலுகின்றது. நரம்பு நார் போதுமான காலம் தூண்டப்பட்டால், அது சீக்கிரம் கிளர்ச்சியடைகின்றது. எளிதில் இணங்காத காலக்கூறில் முன் கூட்டியே அஃது ஓய்வு பெற முயலும் போது இறுதியாக முற்றிலும் களைப்படைந்து விடுகின்றது. ஆனால், இந்தப் பெரியு உடற்கூற்று வலுக்குறைவு நிகழுவதற்கு முன் / புகுவாய் செயலிழந்து விடுகின்றது. புலன் நரம்புக்கு மேற்கொண்டு தூண்டல் விளைவுகளை அனுப்ப முடிவதில்லை. மைய நரம்பு மண்டலத்தின் மற்றப் பகுதிகளுக்கும் தூண்டல் விளைவுகளை அனுப்ப முடிவதில்லை. புலன் தழுவலில் புகுவாயின் இந்த அடி தாங்கிச் (buffer) செயல் உண்மையில் நீண்ட நேரத்து வெளித் தூண்டலினால் கொண்டுவரப்படுகின்ற களைப்பு விளைவுகளிலிருந்து மூளை உயிரணுவைப் பாதுகாக்கின்றது.

3. இயக்கச் செயல் முறைகள்

புகுவாய்களின் செயல்முறையில் முக்கியமாக நடைபெறுவது தூண்டல் விளைவுகளைப் பெறுவதாகும். அடுத்து நடைபெறுகின்ற செயல்முறை இயக்கச் சம்பந்தமானதாகும். இச் செயலில் ஈடுபடும் கருவிக்குப் பெயர் இயக்குவாய் (Effector) என்பதாகும். இயக்குவாய் அமைப்புகள் தனிப்பட்ட வகையான உயிரணுக்களாக இருக்கின்றன. அவை புகுவாய் அலகுகளாலும், பொருந்துவாய் அலகுகளாலும் கொண்டு செல்லப்பட்ட நரம்புச் செலுத்தல்களிடம் குறிப்பிட்ட வழிகளில் எதிர்வினை புரிகின்றன.

பட்டைத் தசைநார்களோ அல்லது எலும்புத் தசைநார்களோ சூழ்நிலையில் உடல் வேலைத்திட்டத்தை அசையச் செய்கின்றன. வயிறு, குடல், குருதிக்குழாய்கள் போன்ற உட்குழிவான உள் உறுப்புகளின் மென்மையான தசைநார்கள் உடல் முழுவதும் எரிபொருள்கள் ஒழுங்காகப் பரவிச் செல்லுவதைப் போற்றிக் காக்கும்பொருட்டுச் சுருக்கவும் தளர்த்தவும் செய்யப்படுகின்றன. நாளமுள்ள சுரப்பிகளான கண்ணீர், உமிழ்நீர், வியர்வை ஆகியவை அதே வேலைகளுக்குத் தேவையான பொருள்களைத் திரட்டிக் கொடுக்கின்றன. நாளமில்லாச் சுரப்பிகளின் சுரப்பி நீர்கள் சுரப்பி உயிரணுச்சுவர்களின் வழியாகக் குருதியோட்டத்தில் நேரடியாகச் சென்று கலக்கின்றன. அவற்றின் செயல்களை உயர்த்தியும் தாழ்த்தியும் சுரப்பி நீர்கள் உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

உடற்கூற்று உளவியல் இந்த இயக்குவாய் இயந்திர நுட்பங்களின் செயல்களோடு தொடர்புள்ள இரண்டு பொதுப் பிரச்சினைகளைக்கொண்டிருக்கின்றது. அவை, தசைநார்களும் சுரப்பிகளுமாகும். ஒன்று, வெளிப்படையான பொருத்தப்பாடுகளின் குறிப்பிட்ட எல்லா இயந்திர நுட்பங்களையும் வகைப்படுத்துவ

தாகும். மற்றொன்று, எந்தப் பின் நிகழ்ச்சி, இயக்குவாய் நடவடிக்கைகளின் செல்வாக்கு பெறுகின்றது என்றும், நரம்பு-தசைநார் உறுப்பின் மற்றப் பகுதிகளின்மீது அதைச் செலுத்துகின்றது என்றும் நிர்ணயிக்கின்றது. மனிதனுடைய உடலமைப்பு வெறுமனே தொட்டுச் செல்லுகின்ற இயந்திர நுட்பத்தைப் பெற்றிருக்கவில்லை. வெளிப்பகுதியான தூண்டலை வெளிப்பகுதித் துலங்கலாக மட்டும் அது மாற்றுவதில்லை.

தசைநார்களும் சுரப்பிகளும் குறிப்பிட்ட பொருத்தப்பாடுகளை உண்டாக்கும் பணிகளைச் செய்கின்றன. அவை வெளிச் சூழ்நிலையோடு உயிரினத்தின் தொடர்புறவை நல்லாதரவான முறையில் மாற்றியமைக்கின்றன; மற்ற எதிர்வினை உறுப்புகளுக்கு வலுவூட்டி ஆதரவளிக்கும் செயலில் ஈடுபடுகின்றன. முதல்வகைச் செயல்முறையைப் பகுதி எதிர்வினைகள் (Phasic reactions) என்றும், இரண்டாம் வகைச் செயல்முறையை வலிமை தரும் எதிர்வினைகள் (Tonic reactions) என்றும் வகைப்படுத்தலாம்.

பகுதி எதிர்வினைகள் மிகவும் குறைந்த காலத்தொடர்பைக் கொண்டிருக்கின்றன. நொடிப்பொழுது நேரம் தோன்றி விரைந்தோடுகின்ற தூண்டலுக்குக்கான தற்காலிகப் பொருத்தப்பாட்டை இது வெளிப்படுத்துகின்றது. உதாரணமாக, சூடான ஒரு பொருளைத் தொட்டவுடன் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொள்ளுகின்ற மறிவினை நடவடிக்கை இதை விளக்கிக் காட்ட உதவுகின்றது. வலிமை தரும் எதிர்வினைகள் நீண்ட காலத் தொடர்ச்சியைக் காட்டுகின்றன; ஆனால் அவ்வளவாகக்குறிப்பிட்ட பொருத்தப்பாடுடையவையல்ல. உயிரினத்தினுடைய நடத்தையில் ஒரு சில தொடர்ச்சியைப் பாதுகாக்கும்பொருட்டுத் திட்டம் செய்யப்பட்டவையாகும். மேலும் அவை, ஊறு விளைவிக்கும் சூழ்நிலைத் தூண்டலோடு எதிர்பாராத தொடர்பு கொண்டு அதைக்கூட எடுத்துச் செல்லுகின்றன; பொருத்தமான பகுதித் துலங்கல்களை ஆதரிக்கின்றன. தன்னிச்சை அல்லது மறிவினை இயல்புள்ள பகுதிச் செயல்கள் தசைநார்கள் சிறிது இறுக்கமான நிலையிலுள்ளபோதுதான் நிகழ்கின்றன.

வலிமை தரும் அதே நடவடிக்கைகள் மூளை உயிரணுக்களுக்குப் பின் நிகழ்கின்ற கிளர்ச்சியின் பெரும்பகுதியை வழங்கிவிடுகின்றன. அதனால் விழிப்பு நடவடிக்கையின்போது புலன் கிளர்ச்சிக்குத் தங்களுடைய வாயில்கள் தாழ்ந்துவிடுவதன் பெரும் பொறுப்பை அவை ஏற்க வேண்டியிருக்கின்றன. இந்த உண்மைகளை எடுத்துக்கொண்டு பார்க்கும்போது எல்லா இயக்கு

வாய் உறுப்புகளும் பகுதிச் செயல்முறைகளையும், வலிமை தரும் செயல் முறைகளையும் கொண்டிருக்கின்றன என்று தெரிகின்றது. எனவே, ஒரு குறிப்பிட்ட வகையைச் சார்ந்த இயக்குவாய்களுக்கு மட்டுமேயுள்ள வகையான எதிர்வினையைக் குறிப்பிட்டுக் காட்டுவது மிகவும் கடினமான செயலாகும்.

ஆனால், அதே சமயத்தில் சுறுசுறுப்பு அல்லது தளர்ச்சியின் வலிமை தரும் உடல் போக்குகள் நாளமுள்ள அல்லது நாளமில்லாச் சுரப்பிகளின் நடவடிக்கையினால் பெரிதும் செல்வாக்கு பெறுகின்றன. மிகச் செறிவானதும் சிறிது நேரமே இருக்கக்கூடியதுமான எலும்புத் தசைநாரின் சுருக்கங்களும், நாளமுள்ள சுரப்பிகளின் சுரப்பி நீர்களும் வலிமைதரும் செயல்முறைக்குச் சிறிதளவே துணைபுதவியளிக்கின்றன.

இந்தச் செயல் முறைகளைச் சரிநுட்பமாக அறிவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகள் வலியுறுத்தும் கருத்துகள் சில உள. அவை தசைநாரின் உள் உறுப்பின் இரண்டு வேறுபட்ட வகைகளுக்கான சான்றும், மையப் பொருந்துவாய்க் கட்டுப்பாட்டில் வேறுபாடுகளும், புலன் தூண்டல்மூலங்களில் வேற்றுமைகளும் என்பனவாகும். ஆனால், இவற்றைப் பற்றிப் பொதுக் கருத்து ஒற்றுமை ஏற்பட்டால் ஒழிய எல்லாப் பொருந்துவாய் இயந்திர நுட்பங்களும் உள்ளார்ந்த பகுதி எதிர்வினைகளையும், வலிமை தரும் எதிர்வினைகளையும் பெறக்கூடியவை என்று நாம் நினைக்க முடிகின்றது. ஆனால், இவை இரண்டையும் அடிக்கடி பிரித்து வைப்பதும் கடினமாகும். ஒவ்வோர் இயக்கப் பொருந்தப்பாட்டு நடவடிக்கையிலும் பரஸ்பரத் துணைபுதவிகளிருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

பகுதி எதிர்வினைகள்

பல்வேறான பகுதி எதிர்வினைகளை நம்முடைய இந்தச் சிறிய எல்லைக்குள் போதுமான அளவில் ஆய்வு செய்ய முடியாது. உதாரணமாக, சமநிலையைப் பாதுகாப்பதற்கான பல சரியான பொருந்தப்பாட்டு இயந்திர நுட்பங்கள், பொருள்களைப் பற்றுதல், செறிமானப் பரப்பிலிருந்து ஊறு பயக்கும் பொருள்களை விலக்குதல் முதலியவை இந்த எல்லைக்குள் அடங்குபவையாக இல்லை. எனவே, அத்தகைய எல்லாத் துலங்கல்களிலும் பொதுவாக இருக்கின்ற சில பரும அளவு வேறுபாடுகளைப்பற்றி மட்டும் விளக்கமாகக் காண்போம்.

ஒரு தசைநாரோ அல்லது சுரப்பியோ அதனோடு தொடர்புடைய இயக்க நரம்புகளின்மீது சக்தியின் மிகப் பெரியதொரு

செலுத்தலினால் தூண்டப்பட்ட போது அது திடீரென்று எதிர் வினை புரிகின்றது. அதன் காரணமாக வெளிப்படையான இயக்கம் நடைபெற்று, சுரப்பிகள் நீரைச் சுரக்கின்றன. அந்த உறுப்பு தசைநாராக இருந்தால், துலங்கல் தூண்டலின் செறிவுக்கு ஏற்பப் படித்தரங்களைக் கொண்டிருக்கின்றது. தூண்டல் நீண்ட நேரத்திற்குத் தொடர்ந்திருக்குமானால் துலங்கலில் படிப்படியாகக் குறைதல் ஏற்படுகின்றது. இது சாதாரணமாகக் களைப்பு என்று கூறப்படுகின்றது. தொழில் நுட்பமாக இதை இயக்கம் ஒத்தமைதல் (motor adaptation) என்று கூறலாம்.

தசைநாரின் துலங்கலின் இழப்புக்கான அடிப்படைக் காரணம் சிதறிய கழிவுப் பொருள்கள் விரைவாக ஒன்று சேர்தலாகும். குறிப்பாக நரம்புக்கும், தசைநாருக்குமிடையிலுள்ள சந்திப்புள்ளியில் இஃது அதிகமாக நடைபெறுகின்றது. உடலின் எல்லா உயிரணுக்களைப் போலவே தசைநார்களும் எரிபொருள்களை எரிப்பதன் மூலந்தான் வேலையைச் செய்ய இயலுகின்றது. குருதியின் மூலம் கொண்டுவரப்பட்ட உணவைக் கொண்டுதான் அவை இந்த எரிபொருள்களை உற்பத்தி செய்கின்றன. இயக்க நடவடிக்கை அடிக்கடி நிகழும்போது, எரிபொருள் மூலக்கூறுகள் நடவடிக்கையினால் சிதறுகின்ற வீதம் குருதியோட்டத்தின் உயிரகத்தினால் (oxygen) அவை எரிக்கப்படுகின்ற வீதத்தைவிட அதிகமாக இருக்கின்றது. இந்த எரிதலிலிருந்து விளைகின்ற நஞ்சுப் பொருள்கள் தசைநாரின்மீது திரளுகின்றன. எனவே, மைய நரம்பு மண்டலத்தோடு அதனுடைய தொடர்பைக் குறைத்துக்கொள்ளுகின்றது.

இந்த வகையான தொடர்புறுப்பு ஏற்பாடு, தசைநார்கள் கடுமையாகப் பழுதடைவதற்கு முன்பு மேலும் நடவடிக்கை தொடராவண்ணம் தூண்டலைத் துண்டிக்கும் இயக்கம் ஏற்படுகின்றது. ஓய்வு நேரத்தின்போது கழிவுப்பொருள்கள் நீக்கப்பட்டு, புதிய எரிபொருள்கள் வழங்கப்படுகின்றன. அதனால் தசைநார் தன்னுடைய எரிபொருளைத் திரும்பப் பெறுகின்றது. மனிதனுடைய வேலையினால் வருகின்ற விளைபொருள்களும் காலம் செல்லச் செல்லக் குறைந்து கொண்டு வருகின்றன. எனவே, பல உளவியலார் இந்த நிகழ்ச்சியைத் தவளையின் உடம்பில் நரம்பு-தசைநார்ப் பரிசோதனையில் கண்ட களைப்பு விளைவுகளைக் கொண்டே விளக்கிக் கூறுவதற்கு முயற்சி செய்தனர்.

கணிதம் போன்ற நீண்ட நேரம் தேவைப்படுகின்ற நடவடிக்கைகளில் உண்மையான இயக்கக் களைப்பு இல்லாமலேயே குறைவான வேலை விளைவை ஒரு மனிதன் காட்டலாம். இவ்வித

மான நிலைமை, கடுமையானதும் திருப்பித்திருப்பிச் செய்யப்படுவதுமான சில வேலைகளைச் செய்வதில் படிப்படியாக வலிமை மிக்க உள் தூண்டலை உபயோகிக்கும்பொழுது ஏற்படுகின்றது. நிலைமை புதுப்பிக்கப்படுகின்றபொழுது இயக்கக்கருவியின் செயல் வெளிப்படுகின்றது. உண்மையில் இயக்க ஒத்தமைதலும் புலன் ஒத்தமைதலும் மைய நரம்பு மண்டலம் பழுதடைவதிலிருந்து பாதுகாக்கும் நடத்தையாக இருக்கின்றது. மற்றோர் உண்மை என்னவென்றால், மையப் பொருத்தப்பாடுகள் நஞ்சான எதிர்வினைகளின் பின் நிகழ்ச்சியிலிருந்து புதிய தூண்டல் மூலங்களைப் பெற முடியும். அதனால் உயிரினம் பகுதி துலங்கல் தன்மையின் இழப்பை ஈடு செய்யும்பொழுது இந்தத் தடைகளையெல்லாம் தூண்டிச் செல்ல முடியும்.

வலிமை தரும் எதிர்வினைகள்

பகுதி எதிர்வினைகள் தூண்டலுக்குத் தேவையானவையாகும். அவை வலிமை தரும் உடல் போக்குகளின்மீது மேலான தோரணை கொண்டிருக்கின்றன. மிகப் பெரியதோர் இயக்க அணிவகுப்புச் செயல்முறைகள் இந்த உறுப்புச்சார்பான கிளர்ச்சிப் பின்னணியாகச் சேர்ந்திருக்கின்றன. அவை தனியாக அமைக்கப்பட்ட வெளித் துலங்கலின் வழிகளில் புலன் தூண்டலை வழிகாட்டுவதற்குச் செயல்படுகின்றன. பகுதி எதிர்வினையின் மீது அவற்றின் வலிமையூட்டும் விளைவுகள் எலும்பு-தசைநார் இறுக்கத்தின் செயல்முறைகளாக இருக்கின்றன. கவனம் சிதைகின்றபோது வேலை செய்வதாலும், தூக்க இழப்பின் விளைவினாலும் ஏற்படுகின்ற உடல் சிதைவை அவை அடிக்கடி ஈடு செய்து கொண்டிருப்பதை நாம் காணலாம்.

மென்மை தசைநார் உள் உறுப்பில் நிலை மாற்றங்களும் உள் உறுப்பு இறுக்கங்களும் முழுமையாக அறியப்படவில்லை என்றாலும், அவற்றின் முக்கியத்துவம் அறியப்பட்டிருக்கின்றது. இவை மனமுறிவின் எஞ்சியுள்ள விளைவுகளை நீண்ட நேரங்களுக்கு அடிக்கடி எடுத்துச் செல்லுகின்றன. வெளி நடவடிக்கை குறுக்கீட்டால் கெடுவதால், இது மையக்கிளர்ச்சிவடிவத்தில் ஒருவழித் திருப்பமாகி விடுகின்றது. பொது நடவடிக்கை அளவுக்கு எல்லாவற்றையும் விட மிக முக்கியமான கூறுகள் உள்நோக்கிச் சுரக்கின்ற சுரப்பிகளின் சுரப்பி நீர்களாகும். அவற்றை ஆட்டோகாயிட்ஸ் (autocoids) என்று குறிப்பிடுகின்றனர். அவை குருதியோட்டத்தில் நேரடியாகக் கலக்கின்றன. சில சுரப்பி நீர்கள் ஹார்

மோன்கள் (Hormones) என்று வழங்கப்படுகின்றன. கிளர்ச்சி யூட்டுவதில் அவை ஈடுபடுகின்றன. மற்றொரு வகையான பொருள்கள் சலோன்கள் (Chalones) என்று வழங்கப்படுகின்றன. அவை உடலின் உள் உறுப்புகளையும் மற்றச் சுரப்பிகளையும் தளர்ச்சியடையச் செய்து, அவற்றின் நடவடிக்கையின் வேகத்தைக் குறைக்கின்றன.

இந்த வழியில் கோழைச் சுரப்பி (Pituitary gland) பால் உட் சுரப்பிகளின் (Gunads) இயக்கம் என்று கருதப்படுகின்றது. அவற்றின் சில சுரப்பி நீர்கள் செயற்கை முறையில் பால் உயிர்ச் சக்தியை அதிகரிக்கவும் குறைக்கவும் ஊசி மூலம் உட்செலுத்தப் படுகின்றன. புரிசைச் சுரப்பியின் (Thyroid gland) ஹார் மோனின் நல்லாதரவான விளைவில் மற்றொரு நிகழ்ச்சி காணப் படுகின்றது. அது குறைவான உயிர்ப்பொருள் மாறுபாடோடுள்ள நோயாளியின் பொது உந்து நிலையாகும். மாங்காய்ச் சுரப்பியும் (Adrenal gland), கணையச் சுரப்பியும் (Pancreatic gland) சுரக்கின்ற சுரப்பி நீர்கள் தானியங்கும் நரம்புகளோடு சேர்ந்து இயங்கி உடலின் பொது சக்தி மட்டத்தைக் குறைக்கவும் அதிகரிக்கவும் செய்கின்றன.

வலிமை தரும் நடவடிக்கையில் உள்ள பல குணப் பண்பின் வேறுபாடுகளை மிக விரிவாக இங்கு நாம் காட்ட முடியாது. ஆனால், இந்த வகையான எல்லாச் செயல்முறைகளுக்கும் பயன் படும் சில இயக்கங்களின் ஆய்பொருள்களைப்பற்றி மட்டும் கூறலாம்.

முதன்மையானதும், முக்கியமானதுமான பிரச்சினையாக இருப்பது, மைய நரம்பு மண்டலத்தின் எச்சரிக்கையாகும். இதனால் ஏற்படும் வலிமை தரும் நடவடிக்கையின் தொடர்புறவில் பருமஅளவு அதிகரிப்பதுமாகும். மூளை எப்பொழுது தூக்கத்தி லிருக்கின்றது என்றும், எப்பொழுது அது தெளி உணர்நிலை என்று கூறப்படும் கிளர்ச்சி நிலையிலிருக்கின்றது என்றும் நாம் கேட்கலாம்.

உள முயற்சியும் வலிமை தரும் இயக்க நடவடிக்கையும் கொண்டுள்ள தொடர்புறவு பல தடவை செயல் விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. அந்தப் பரிசோதனைகள், இந்தச் செயல்முறைகளிலிருந்து எழுகின்ற பின்னிகழ்ச்சிக் கிளர்ச்சி விழிப்பு நேரங்களின்போது மூளை நடவடிக்கைக்குத் தேவையான பெரும் தூண்டல் பகுதியை வழங்குகின்றது என்று காட்டுகின்றன. எனவே, தசைநார் இறுக்கமும், தொடர்புடைய வலிமை தரும்

செயல்முறைகளும் ஒரு குறிப்பிட்ட புள்ளி வரையில் அதிகரித்துச் செல்லும் விசைவுள்ள செயல் நிறைவேற்றத்தை ஆதரிக்கின்றன என்று நாம் கருதலாம்.

கீழான படித்தரத்திலுள்ள வலிமை தரும் நடவடிக்கையினால் பாதுகாக்கப்பட்ட செயல் நிறைவேற்ற அளவுகள் தூக்க நிலை போன்றே இருக்கின்றன; சுறுசுறுப்பாகவோ எழுச்சியாகவோ காணப்படுவதில்லை; ஆனால் மேல் அளவிலுள்ள எதிர்வினை அழிவு ஏற்படுமளவுக்கு எழுச்சி பெற்ற நடத்தையைத் தொடர்ந்து வருகின்றது. வெளிப்பகுதி நடவடிக்கை, அதனுடைய குறிக்கோளை அடைவதிலிருந்து தடுக்கப்படும்பொழுது அதற்கு ஆதரவளிக்கின்ற வலிமைதரும் செயல்முறைகள் தீவிரப்படுத்தப் பட்ட நடவடிக்கையாகத் தோன்றுகின்றன. ஆகையினால், ஒரு கிளர்ச்சி வடிவம் உருவாகி நிலையான அழுக்கத்தை அதிக மாகவோ, குறைவாகவோ செலுத்துகின்றது. இவ் வகையில் நடத்தப்பட்ட பரிசோதனைகள், ஒரு தூண்டல் சூழ்நிலையிலுள்ள மிகவும் வெற்றிகரமான வெளி எதிர்வினை தோன்றும்போது எஞ்சிய இறுக்கம் குறைவாக இருக்கின்றது என்று காட்டு கின்றன. இந்த முன்னேற்றம் எப்போதும் தெளிவில்லாம லிருந்து வரும் நரம்புப்பிணிப் பிரச்சினைகளின்மீது ஒரு புதிய அறி வொளியை வீசுகின்றது. இஃது இன்னும் தெளிவுபடாத பகுதி யாகவே இருந்து வருகின்றது. உளமருத்துவத் துறையின் உள் ளார்ந்த துணையுதவியை இப்பொழுதுதான் உடற்கூற்று உளவியல் உணரத் தொடங்கியிருக்கின்றது. அதை முற்றும் பெற்ற பிறகு இத் துறையின் அறிவு விளக்கம் சிறப்புறும் என்றும், சிக்கலான பகுதிகள் எளிதாக்கப்படலாம் என்றும் நம்பலாம்.

4. மூளையும் மூளையின் நடத்தையும்

முந்திய அத்தியாயத்தில் புகுவாய்களின் இயக்கத்தைப்பற்றியும், இயக்குவாய்களின் இயக்கத்தைப்பற்றியும் விவரமாகக் கண்டோம். மூன்றாவது கருவியான பொருந்துவாய்கள்பற்றி ஒரு சில இடங்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவற்றைப்பற்றி விளக்கமாக அறிய வேண்டுவது நமது கடமையாக இருக்கின்றது. பொருந்துவாய்களின் இயந்திர நுட்பம் எல்லாச் செயல் முறைகளிலும் காணப்படுவதோடு, பொருந்துவாய்கள் இடைப்பட்ட செயல்முறையில் ஈடுபடும் கருவிகளாகவுமிருக்கின்றன.

பொருந்துவாய் இயந்திர நுட்பங்களின் அடிப்படைச் செயல் முறை என்னவென்றால், புகுவாய்களிடமிருந்து வருகின்ற பல்வேறு கிளர்ச்சிகளை ஒருமைப்பாடு செய்து தூண்டல் நிலைமைகளுக்கு ஏற்ப இயக்குவாய் துலங்கல்களை வழிகாட்டுவதாகும். மூளையிலும், தண்டுவடத்திலும் (spinal cord) உள்ள இயந்திர நுட்பங்களின் கட்டுப்பாடு முழு புகுவாய் - பொருந்துவாய் – இயக்குவாய் தொடர்ச்சியில் மிகவும் முழுமையாக அறியப்படாத ஓர் இணைப்பாகவே இருந்து வருகின்றது. குறிப்பிட்ட வகையான நடத்தையில் இந்த மையங்களின் செயல்முறை எவ்வாறு இயங்குகின்றது என்று பல விரிவான கோட்பாடுகள் ஊகிக்கப்பட்ட நரம்பு உயிரணுக்களின் பொதுப் பண்பைத்தான் சார்ந்திருக்கின்றன. அவை உடற்கூற்றுப் பரிசோதனையின் அடிப்படையில் அமைந்திருக்கவில்லை.

பெரும்பாலான இந்த விளக்கங்களுக்குத் தொடக்கமாக இருப்பது மூளை இயல் தோன்றிய காலத்திலிருந்த கோட்பாடாகும். கால் (Gall) என்ற மூளை இயல் வல்லுநரின் கருத்துப்படி, உளவியல் நடவடிக்கைகள் மிக நுட்பமான மூளைப்பகுதிகளுக்குள் தான் இடம் பெறுகின்றன என்பதாகும். ஆனால், தொடர்புடைய

மற்றொரு கருத்து என்னவென்றால், ஒருமைப்பாடு செய்யப்பட்ட எல்லா நடவடிக்கைகளும் தண்டுமறிவினைக்குப் பின் வடிவமாக்கப் படுகின்றன என்பதாகும். எனவே, ஒரு கோட்பாடு, எல்லாச் செயல்களுக்கும் மூளைதான் காரணம் என்று கூறுகின்றது. மற்றொரு கோட்பாடு தண்டுவடத்திற்குப் பிறகுதான் செயல்கள் உருவாகின்றன என்றும், மூளை காரணமல்ல என்றும் கூறுகின்றது. உண்மையில் இரண்டு கோட்பாடுகளும் சரியாக இதைக் கூறவில்லை.

கால் என்பவருடைய இடம் காணல் கோட்பாடு ஆதரவு பெறுவதாகத் தெரிகின்றது. அவர் காட்டுகின்ற சான்று என்ன வென்றால், மூளையின் சில பகுதிகளில் அழிவு ஏற்படுவதால் நிச்சய மான வலுக்குறை ஏற்படுகின்றது என்பதாகும். இந்த முடிவைத் தெளிவாகக் காட்டியுள்ளார். ஆனால், ஓர் இடத்தில் பெறுகின்ற செயல்முறையின் பல எதிர்மறை நிகழ்ச்சிகளை அவர் கணக்கில் காட்டவில்லை. மேலும், பல்வேறு பகுதிகளும் எவ்வாறு அவற் றினுடைய செயல்முறைகளைப் பயிலுவிக்கின்றன என்ற முக்கிய மான வினவுக்கு அவர் கோட்பாடு விடையளிக்கவில்லை.

இக் கோட்பாடு மறிவினை ஒருமைப்பாடு குறித்தும் கூறு கின்றது. இந்தப் பிரச்சினையை விளக்கிக் கூறுவதற்கு அஃது ஏற்ற தாகத் தெரியவில்லை. ஏனென்றால், பல தண்டு எதிர்வினைகள் புகுவாய்களிலிருந்து இயக்குவாய்களுக்குத் துடிப்புகளைச் செய்து உண்டாக்க முடியும். உதாரணமாக, முழங்கால் குலுக்கலை (knee jerk) இவ்வாறு ஒரு வரையறுக்குட்பட்ட வழியில் உண்டாக்க முடியும். எனவே, மிகவும் சிக்கலான நடத்தை வடிவங்களை விளக்கிக் கூறுவதற்கு மைய நரம்பு மண்டல இணைப்பின் பெரும் இயக்கம் தேவைப்படுகின்றது.

மூளையின் செயல்முறை எங்கு நடைபெறுகின்றது என்பதைக் காட்டும் பரிசோதனைச் சான்றுகள் இரண்டு வகையான ஆராய்ச்சி களில் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை யான விடையைக் கொடுத்துதவுகின்றது. வழக்கமாக இப் பிரச்சினையை அணுகும் முறை, மூளையின் சில பொதுப் பகுதியைத் தூண்டுவதோடு அல்லது அகற்றுவதோடு இயக்க நடவடிக்கையிலோ அல்லது புகுவாய் நடவடிக்கையிலோ ஏற்படு கின்ற மாற்றத்தை இணைப்புப் பொருத்தப்பாடு செய்வதில் அடங்கியிருக்கின்றது. ஆனால், மூளையின் ஒரு பகுதியோடு தனியாக இவ்விதமான செயல் தொடர்பு கொள்ளுவது செயற்கையான நிகழ்ச்சியாகும். ஆகையினால், புதியதோர் ஆராய்ச்சி முறையில்

சில நன்கு வரையறுக்கப்பட்ட நடத்தை வடிவங்கள் அடக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, கற்ற எதிர்வினை, மூளையின் உள் உறுப்புகளைச் சிறு சிறு பகுதியாக நீக்கி, செயல் முறை இழக்கச் செய்து, அத்துடன் வரையறுக்கப்பட்ட எதிர்வினையை இணைப்புப் பொருத்தப்பாடு செய்வது அம் முறையாகும். முதல் முறை, முற்றிலும் வேற்றுமையான உடற்கூற்று அமைப்புகள் முழு நடத்தை இயக்கத்திற்கும் தனிச் செயல்முறை சார்ந்த துணை யுதவிகள் செய்யப்பட்டதைப்பற்றிக் கூறுகின்றது. ஆனால், இரண்டாவது முறை கூறுவது என்னவென்றால், முழு அமைப்புகளுக்குள் உள்ள அதே மாதிரியான உடற்கூற்று அலகுகள் பெரிதும் பல மாறுபட்ட செயல்முறைச் சார்பான நடவடிக்கைகளில் உபயோகப்படக் கூடியவை என்று கூறுகின்றது.

எதிர்வினை மட்டங்களின் அமைப்பு

பொருந்துவாய்க் கருவியின் மொத்தப் பிரிவுகள்தான் துலங்கல் பெறுகின்ற மொத்த வடிவத்திற்கும் பொறுப்புள்ளதாக இருக்கின்றன. அதே இயக்க இயந்திர நுட்பங்களும் புகுவாய் நுட்பங்களும் பல்வேறு வகையான நடத்தையில் செயல்படுகின்றன. ஆனால், மைய நரம்பு மண்டலத்தின் அமைப்பு ஏற்பாடு அதை ஒரு மட்டங்களின் அமைப்பாக ஆக்குகின்றது. அதனால் அதனுடைய சில பகுதிகள் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியின்போது நடத்தையில் ஆதிக்கம் செய்கின்றன.

இந்தச் செயல்முறையை விளக்கிக் காட்டும்பொருட்டு நரம்பு மண்டலத்தின் அமைப்புக்கும் ஓர் அலுவலகத்தின் அமைப்புக்கும் ஒப்புமை செய்து காட்டலாம். ஓர் அலுவலகத்திலுள்ளவர்கள் சாதாரண வினுக்களுக்கு விடை காண்பதிலிருந்து பல சிக்கல் நிறைந்த வினுக்களுக்கு விடைகாணும் முயற்சி வரையில் ஈடுபட்டிருக்கலாம். அதே போன்று உடலின் மைய நரம்பு மண்டலமும் எளிய எதிர்வினையிலிருந்து சிக்கல் நடவடிக்கை வரையில் ஈடுபட வேண்டியிருக்கின்றது. பயனுறுதித் திறத்தை முன்னிட்டு எளிய செய்திகளுக்கும் உடனடியான செய்திகளுக்கும் கீழ்நிலையிலுள்ள அலுவலகப் பணியாளர்களே விடையளித்து விடுகின்றனர். ஆனால் சிக்கலானதும் கொள்கை முறை சம்பந்தமானதுமான செய்திகள் உயர்ந்த நிலையிலுள்ள அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றன. அச் செய்தி முழு அலுவலகத்திற்கும் தொடர்புடையதாக இருக்குமானல், எல்லாத் துறைகளுக்கும் செய்திகளை அனுப்பி ஒவ்வொரு துறையிலிருந்தும் விவரங்களைச் சேகரித்துத் தலைமை அதிகாரிக்கு

அனுப்பப்பட்டு, அங்கிருந்து வெளியுறுப்புக்குச் செல்லுகின்றது. எந்தெந்தச் செய்திகளுக்குக் கீழ் நிலை அதிகாரிகள் விடையளிக்க முடியவில்லையோ அவற்றிற்கு மேல் நிலை அதிகாரிகள் விடையளிக்கின்றார்கள்.

நரம்பு மண்டலத்தில் நடைபெறும் வேலையும் இந்த அலுவலகத்தில் நடைபெறுவதைப் போன்றிருக்கின்றது. மைய நரம்பு மண்டலத்தில் பெருமூளை உருண்டைகள் (cerebral hemispheres) உச்சி நிலை அதிகாரியைப் பிரதிபலிக்கின்றன. தண்டுவடம் கீழ் நிலை அதிகாரிகளைப் பிரதிபலிக்கின்றது. மற்ற மூளை மையங்கள் இடைத்தர அதிகாரிகளைப் பிரதிபலிக்கின்றன. புகுவாய் இயந்திர நுட்பங்களின்மூலம் உருவாகிய நரம்புத்துடிப்புகள் இயக்கத் துலங்கல்களை ஏற்படுத்துவதற்கு வேறுபட்ட பொருந்துவாய் மையங்களின் மூலம் செல்லுகின்றன. குறிப்பிட்ட சிறிய வழி இணைப்பு ஒருமைப்பாட்டுக்கான ஆதிக்க மையத்தை நிர்ணயிக்கின்றது.

தண்டுவடம் ஒருமைப்பாட்டு மையங்களைக் கொண்டிருக்கிறது; அதன்மூலம் உறுப்புக்குரிய மறிவினைத் துலங்கலைச் செய்கின்றது. அதனால் உடல் தூண்டலும் நடைபெறுகின்றது. இத்துடன் மற்றப் பொருந்து மையங்களிலிருந்தும் மற்றப் பொருந்து மையங்களுக்கும் நரம்பு செலுத்தல்கள் உள் செல்லுவதற்கும் வெளிச் செல்லுவதற்கும் பெரும் குருதிக்குழாய்களைக் கொண்டிருக்கின்றது. தண்டின் ஒவ்வொரு துண்டுப் பகுதிகளும் ஓர் அமைப்புச் செயல்முறைப் பிரிவைக் கொண்டிருக்கின்றன. இவை, நரம்பு நார்கள் தண்டுவடத்தின் முதுகுப்பக்கம் புலனுணர்ச்சி உறுப்பாகச் செல்ல உதவியளிக்கின்றன. வயிற்றின் பக்கம் செல்லும் நரம்பு நார்கள் இயக்க உறுப்புகளாகச் செயல்படுகின்றன. தண்டுவடத்திற்கு இணையாகச் செல்லும் பகுதிகள் தானியங்கும் நரம்புச் சங்கிலிகளாகும். இவை சுரப்பிகளுக்கும், பென்மை தசைநார்களுக்கும் தன்னுரிமையான இணைப்புப் பொருத்தப்பாட்டு மையங்களாகவும், இடைமாற்றுச் சந்திப்புகளாகவும் செயல் புரிகின்றன.


நரம்பு மண்டலத்தின் இவ் வகையான பிரிவுகள் எதிரான செயல்முறைகளைக் கொண்டிருக்கின்றன. அவை ஒத்துணர்வு நரம்பு மண்டலம் (Sympathetic Nervous System) என்றும், ஒத்துணரா நரம்பு மண்டலம் (Para Sympathetic Nervous System) என்றும் கூறப்படுகின்றன. ஒத்துணர்வு நரம்பு மண்டலம் செறிமான வேலையைத் தடுத்து, உடல் சக்திகளை ஒன்று திரட்டித் திடீர்த்தேவைகளுக்கு அனுப்புகின்றது. உதாரணமாக, ஆபத்-

திலிருந்து தப்பும் நடவடிக்கையிலும், எதிரியைத் தாக்கும் நடவடிக்கையிலும் இச் செயல்முறை நடைபெறுகின்றது. ஒத்துணரா நரம்பு மண்டலம் உடல்சக்திகளைப் பசி நாட்ட நடவடிக்கைக்காகக் கட்டுப்படுத்துகின்றது. மேலும், எல்லாவிதமான நடவடிக்கைகளிலும் ஒத்துணர்வு நரம்பு மண்டலத்திற்கு எதிராகவே இது ஈடுபடுகின்றது.

மூளை : மூளையின் அமைப்பு மூன்று பிரிவுகளாக இருக்கின்றன: அவை, பின் மூளை (Hind brain), நடு மூளை (Mid brain), முன் மூளை (Fore brain) என்பவை. பின் மூளையில் நரம்புத்தண்டின் மேல் முனையும், சிறுமூளையும் (Cerebellum) அடங்கியிருக்கின்றன. முன் மூளையில் தாலமஸும் (Thalamus), பெருமூளை உருண்டைகளும் அடங்கியிருக்கின்றன. நரம்புத்தண்டின் மேல் முனை அல்லது முகுளம் (Medulla Oblongata) கட்டுப்பாட்டு மையங்களைக் கொண்டிருக்கின்றது. மூச்சு மண்டலம், குருதியோட்ட மண்டலம், வாழ்க்கை தொடருவதற்குத் தேவையான எண்ணுதியங்கும் எதிர்வினைகளும் கட்டுப்பாட்டு மையங்களில் அடங்குகின்றன.

சிறுமூளையும், நடுமூளையும் தசைநார்த் துலங்கல்களுக்கு இரண்டு ஒருமைப்பாட்டு மையங்களாக இருக்கின்றன. தாலமஸ் தலைவாயிலாக இருந்து பெருமூளை அரைக்கோளங்களில் புலன் தூண்டல் செல்ல அனுமதிக்கின்றது; மேலும், சில உடல் நடவடிக்கைகளின் ஒழுங்குக்காக ஓர் இயக்க மையமாகவும் இருக்கின்றது. குறிப்பாகத் திடீர் என்று ஏற்படுகின்ற மனவெழுச்சித் தேவைகள் உள்ளடங்கிய நடவடிக்கைகளைக் கூறலாம். பெருமூளை அரைக்கோளங்கள் கீழ்மையங்களில் நடவடிக்கைகளை இணைக்கும் வேலையைச் செய்கின்றன; மேலும், மிகவும் சிக்கலான நரம்பு-தசைநார் எதிர்வினை வடிவங்களை வழிப்படுத்துவதில் தனித்திறமை பெற்றிருக்கின்றன. மூளையின் இந்தப் பல்வேறு பகுதிகள் தண்டுவடத்தின்மீது முறையாக மேலான தோரணை கொண்டிருக்கின்றன.

மனித மூளையில் பெருமூளை அரைக்கோளங்கள் மிகப்பெரியதாக வளர்ந்திருப்பதால் வெளி அடை (outer layer) அல்லது புறணி அதன்மீதே மடிந்து கிடக்கின்றது. எனவே, புறணி பல மடிப்புகளாகக் காட்சியளிக்கின்றது. இந்த அமைப்பு சார்ந்த வளர்ச்சியானது மற்றப் பொருந்துவாய் உறுப்புகளின்மீதுள்ள செயல் சார்ந்த ஆதிக்கத்தின் ஒருபடித்தரத்திஞல் சமமாக்கப்படுகின்றது. இது வேறு எந்த உயிரினத்திலும் கிடையாது. மனித மூளையில்தான் இந்தச் செயல்முறை நடைபெறுகின்றது.



படம் 5-1.

மனித மூளையின் பகுதிகள்

பெருமூளை சார்ந்த புறணியின் சில பகுதிகள் தனித்திறமையின் ஒரு குறிப்பிடத்தக்க படித்தரத்தைக் காட்டுகின்றது. அதே சமயத்தில் உயிரணுக்களின் பெருங்குழுக்கள் அதே அளவுக்கு மிகவும் பொதுவான உதவியளிக்கும் செயல் முறைகளையும், தடுக்கும் செயல் முறைகளையும் கொண்டிருக்கின்றன. இயக்கக் கட்டுப்பாட்டின் முதன்மையான மையங்கள் மையப்பிளவின் முன்னால் அமைந்திருக்கின்றன. அந்தப் பிளவின் தாழ்ந்த முனையில் பேச்சுக் கட்டுப்பாட்டின் மையங்களில் ஒன்று இருக்கின்றது. இந்தப் பகுதியில் ஏதேனும் பழுது ஏற்படுமாயின், பேச்சை இழக்க நேரிடும்; அல்லது புரிந்துகொள்ள இயலாமை ஏற்படலாம். தசைநார்களிலிருந்தும் மற்ற உள் உறுப்புகளிலிருந்தும் எழுகின்ற தூண்டலுக்கான முதன்மையான வரவேற்பு மையங்கள் உடல் பகுதிகளை இயக்கும் புறணிப் பகுதியில் (Parietal lobe) இருக்கின்றன இயக்க மையங்களுக்குப் பொருத்தமானவையாகவும், தொடர்புள்ளவையாகவும் இந்தப் பகுதிகள் அமைகின்றன.

தனிப்புலன்கள்கூடச் சரியாக வரையறுக்கப்பட்ட வரவேற்புப் பகுதிகளைக் கொண்டிருக்கின்றன. கண்களை இயக்கும் புறணிப் பகுதியின் (Occipital lobe) மைய பகுதியில் பார்வை மையம் அமைந்திருக்கின்றது. அதே போன்று ஒலியை இயக்கும் புறணிப் பகுதியில் கேள்வியின் மையமிருக்கின்றது. நடவடிக்கைகளை இயக்கும் புறணிப் பகுதி (Frontal lobe) போன்ற மற்றப் பகுதிகள் எல்லாம் பொது ஒருமைப்பாட்டு மையங்களாக இயங்குகின்றன. இந்தப் பகுதிகள் எல்லாம் பெருமூளை சார்ந்த புறணியாகும். இவை மிகவும் தழுவல் தன்மையுடையவை; ஊறு பயக்கும் நடத்தையின் ஒருபடி வார்ப்பைத் தடுக்க வல்லவை. மற்ற மிருகங்களிடமிருந்து மனிதன் தன்னை உயர்த்திக் காட்டுவதற்கு இப் பகுதிகள்தான் மிகவும் பயன்படுகின்றன.

பெருமூளைப் புறணியின் பெரும் செயல்

நரம்பு சார்ந்த பல்வேறு படிமுறைகள் பல்வேறு வகையான எதிர்வினைகளில் ஆதிக்கம் வகிக்கின்றன. ஆனாலும், ஒரு குறிப்பிட்ட மூளைப்பகுதியில் தனிநரம்பு உயிரணுக்கள் சரியான செயல் முறைக் குறிப்பைக்கொண்டிருக்கவில்லை. பெருமூளைப் புறணியிலும் இந்த உண்மை விளங்குகின்றது. இங்கு அவற்றின் செயல்முறையின் சம அளவு மிக மேலோங்கியிருக்கின்றது. ஒரு கற்ற எதிர்வினையின் அடையாளம் ஒரு நரம்புப் பிணைப்பை அடுத்துள்ள இரண்டு நரம்பு உயிரணுக்களுக்கிடையில் தாழ்வைப்பதன் மூலம் அடிக்கடி விளக்கப்படுகின்றது. இது ஒரு குறிப்பிடத்தக்க அளவு விரிதந் பரப்பை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது.

எலிகளும் உயர்ந்த மிருகங்களுங்கூட, குறிப்பிட்ட புறணியின் பகுதி அகற்றப்பட்ட போதிலும் முன்பு கற்ற பழக்கத்தின் எஞ்சிய விளைவுகளைக் காட்டுகின்றன. கற்ற பழக்கம் மிகவும் சிக்கலாக இருக்குமானால் முக்கிய நரம்பு படிவத்தின் முழு இருப்பிடத்தையுங் கூட நிலை நிறுத்துவதில் மிருந்த சிரமத்தை அனுபவிக்க வேண்டியிருக்கின்றது. பொதுவாக, புறணியின் உள் உறுப்புகளின் பெரும்பகுதி பழுதுபடுமானால் செயல்முறையின் இழப்பு மிகவும் கடுமையாகின்றது. செயல்முறை நடைபெறும் இடத்தைக் கண்டறியும் திட்டத்தின்படி, மூளையின் மேற்பரப்பில் செயல் முறையின் முந்திய நடவடிக்கையின் அடையாளங்கள் காணப்படுவதில்லை என்று கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் ஒரு விரிந்த புறணியின் எல்லைப்பகுதியில் அடையாளங்கள் கிளர்ச்சியின் விகிதங்களாகக் காணப்படுகின்றது என்றும் கூறுகின்றனர்.

புறணி உயிரணுக்களின் குறிப்பாக இல்லாத இந்தத் துலங்கல், சிக்கலான நடத்தையை வேறுபடுத்திக் காட்டும் கட்டுப்பாட்டில் பெரும் செயல் அல்லது மொத்தமான நடவடிக்கை (mass action) என்று கூறப்படுகின்றது. பெருமூளையின் அரை உருண்டைகளை முற்றிலும் அகற்றுவதனால் அல்லது திடுக்கிடச் செய்யும் ஒரு தூண்டலினால் தொடர்பு காட்டும் செயல்முறைச் சார்பான தொலிப்பு (decortication) உண்டாக்கப்படுவதனால் தாலமஸ் மையங்கள் மன வெழுச்சி வெளிப்பாடு போன்றே செயல்படுகின்றன. ஆனால், மிருகங்களின் மூளைகளின்மீது நடத்தப்பெற்ற முடிவுகள் எந்த அளவுக்கு மனிதர்களிடம் செயல்படுத்த முடியும் என்பது சிக்கலான பிரச்சினையாக இருக்கின்றது. உள் உறுப்புகளின் குணத்தைப் பொருத்த வரையில் பரிசோதனை முடிவுகள் ஒப்பிட்டுப் பார்க்கத் தகுந்தவையாக இருக்கின்றன. மனித மூளையிலுள்ள புறணியின் உள் உறுப்புகள் பொதுவாக மொத்த நடவடிக்கையுள்ளதாக இருக்கின்றன. நுண்ணறிவுச் செயல் முறையில் கடுமையான பழுது ஏற்படாமல் நடவடிக்கைகளை இயக்கும். புறணியின் பகுதி (Frontal lobe) முற்றிலும் அகற்றப் பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட மனிதர்கள் நல்ல குணமடைந்திருக்கின்றனர் என்று நிகழ்ச்சி வரலாறுகள் காட்டுகின்றன.

5. உடலின் அமைப்பும் ஆளுமையும்

உடலின் அமைப்புக்கும் ஆளுமைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று நெடுநாள்களாகவே பொது அறிவு உலகமும் அறிவியல் உலகமும் நம்பி வந்திருக்கின்றன. இக் கருத்து பரிசோதனைகளின் மூலம் நிலைநிறுத்தப்படாமலும் தெளிவின்றியுமே இருந்து வருகின்றது. அரைகுறையான அறிவியல் முறைகளும் மரபு நிலையாக இருந்து வருகின்ற அறிவும் பொது அறிவு உலகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம். உதாரணமாக, மூளை இயல், முகக்குறி இயல் (Physiognomy) ஆகியவை அறிவியல் விழிப்பற்ற மக்கள்மீது இன்னும் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், சில உளமருத்துவர்களிடையே குறிப்பிட்ட உடல் வகைகளின் மனக்கோளாறுகளுடைய குணப்பண்புகளைப்பற்றிப் பேசப்பட்டு வருகின்றது. உடல் அமைப்பு வகைகளையும், மனக்கோளாறுகளின் குணப்பண்புகளையும் இணைத்து அவர்கள் மூலமறிய முயலுகின்றனர்.

இந்தப் பிரச்சினையை நன்கு ஆராய்ந்து சான்றுகளைக் கண்டறிய வேண்டுவது மிகவும் முக்கியமாகும். இந்த முயற்சிக்கு உளவியல் சோதனைகள் மிகவும் துணை புரியும் என்றும் நம்பப்படுகின்றது. ஆனால், உளவியல் சோதனைகள் எல்லாம் வல்ல மந்திர சக்திகளைப் பெற்றிருக்கவில்லை. ஆளுமையின் பல்வேறு பண்புக் கூறுகளைக் கண்டறிவதற்கு நம்பிக்கையும் ஏற்புடையதுமான செய்திகளைக் கொடுக்கும் தொடக்கக்கருவியேயாகும். அண்மைக்காலம் வரையில் தொடர்புடைய நுண்ணறிவுத் திறமைகளையெல்லாம் உடனுக்குடன் நிகழ்கின்ற அமைப்பை அளவிடுகின்ற மனிதர்களின் அபிப்பிராயங்களின்மீதே அமைத்து வந்தனர். இன்றுகூட இயல்பிறழ்ந்த நடத்தையின் மொத்த வகைப்படுத்தல்கள், நுண்ணறிவு சாராத ஆளுமைப் பண்புக்கூறுகளின் அல்லது மனவெழுச்சிக் கூறுகளின் பரிசோதனைகள்

தொடர்ந்து வரிசைப்படி அமைக்கப்பட்ட சோதனைகளின்மீது தான் அமைகின்றன.

உளவியல் துறையிலுள்ள இவ்வகையான விளக்கங்களும் மக்கள் தொகையிலிருந்து தேர்ந்தெடுத்த அதிகமான மாதிரி களின்மீது மிகச் சிரமத்துடன் செய்கின்ற முழு உடலமைப்புச் சார்பானதும் உடற்கூற்றுச் சார்பானதுமான கருமுயற்சிகளும் சில தெளிவான விளக்கங்களையே கொடுத்திருக்கின்றன. ஆளுமைக்கும் உடலமைப்புக்கும் இடையிலுள்ள மிக நெருக்கமான தொடர்பு சம்பந்தமான மற்றச் சான்றுகள் எதிர்மறையானவையாக இருக் கின்றன.

உள உடலமைப்பு வகைகள்

மனிதர்களையெல்லாம் அவர்களுடைய பொது அமைப்புச் சார்ந்த வளர்ச்சியின்படிப் பல பிரிவுகளில் தனித்தனி அறை களில் வைக்க முடியும் என்று உள உடலமைப்பு வகைபாட்டினர் நம்புகின்றனர். அந்தப் பிரிவுகள் ஓரளவுக்கு அடிப்படையான வேற்றுமைகளோடும், உணர்ச்சியியல்போடும், நுண்ணறிவோடும் ஒத்திருக்கின்றன, இந்தக் கருத்து ஹிப்போகிரிட்டிஸ் (Hippocrates) என்ற கிரேக்க மெய்ப்பொருளியல் அறிஞர் காலத்திலிருந்து வழக்கிலிருந்து வருகின்றது. அக் காலந்தொட்டு மிகவும் சரியான அளவீடுகளைக்கொண்டு இத் துறை முன்னேற்றம் காண முயலு கின்றனர். ஆனால் அளவுகளின் உட்கருத்தில் முன்னேற்றங்கள் காணப்படவில்லை.

மனிதர்களுடைய உயரம், எடை, உயரத்திற்கும் எடைக் கும் உள்ள விகிதம், தலையின் உருவாக்கம், உடற்பகுதியின் வளர்ச்சிக்கும் கைக்கும் உள்ள தொடர்பு முதலியவை எல்லாம் தேவைப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, உயரத்திற்கும் எடைக்கும் உள்ள விகிதங்களும் சராசரி மக்களிடம் சோதிக்கப் பட்ட நுண்ணறிவும் இணைப்புப் பொருத்தப்பாடு செய்யப்பட் டது. இது மிகவும் குறைவாக இருந்தது. பருமனில் கடைசி எல்லைகளில் உள்ள இயல்பான தனியாள்கள் நுண்ணறிவில் கீழ்நிலையிலிருந்து உச்சிவரையில் எந்தப் படித்தரத்திலும் நிற் பவர்களாக இருக்கின்றனர். உடலமைப்பு வகைக்கும் மன வெழுச்சிக் கோளாறுகளுக்குமிடையிலுள்ள இலேசான தொடர்பு தனியாளை முன்னறிந்து கூறுவதற்கு அடிப்படையாக அமைய வில்லை.

ஆகையினால், உடலமைப்புக்கும் ஆளுமைக்கும் இடையில் நிகழக்கூடிய தொடர்பு சில பொது நிர்ணயக் கூறுகளிலிருந்து வர

வேண்டும். உதாரணமாக, நாளமில்லாச் சுரப்பிகளாக இருக்க வேண்டும். கடைசி எல்லையிலுள்ள நிகழ்ச்சி வரலாறுகளில் மட்டும் தெளிவான தொடர்புகளை நாம் எதிர்பார்க்கலாம். உதாரணமாக, புரிசைச் சுரப்பி நீரின் பற்றுக்குறையினால் ஏற்படுகின்ற உடல்நிலை. இந்தக் கூறுகளில் ஏற்படுகின்ற உடல் நிலை தெளிவான காரணத்தை வெளிப்படுத்துகின்றது. எனவே, நாளமில்லாச் சுரப்பிகள் பொது நிர்ணயக் கூறுகளாக இருக்கின்றன. உள உடலமைப்புத்துறையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் தாழ்ந்த இணைப்புப் பொருத்தப்பாடுகளையுடையவையாக இருந்தாலும் மிகுந்த வரவேற்புடையவையாக இருக்கின்றன. இந்த நிலை அறிவியல் வளர்ச்சிக்கு உகந்ததன்று.

ஆனால், இக் கருத்தை வேறு ஒரு நிலையிலிருந்தும் காணலாம். ஒரு பொறிவண்டியின் இயந்திர வேலைக்காரர் உடல்கட்டுக்கும் இயந்திரத்தின் சக்திக்கும் இடையில் இருப்பதாகக் காணப்படும் உயர்ந்த இணைப்புப் பொருத்தப்பாட்டினால் தவறாக வழி காட்டப்படுவதில்லை. அவர் தம்முடைய கவனத்தைச் சக்தியின் பருப்பொருள் சார்ந்த இணைப்புகளில் செலுத்துகின்றார். மனிதர்களின் உடல் சம்பந்தப்பட்டவையிலும் இப்படிப்பட்ட ஒரு மனப்போக்கு கொள்வதுதான் அறிவுடைமையாகத் தோன்றுகின்றது.

நரம்பு-உடலமைப்புச் சார்பான வேற்றுமை

ஆளுமையின் நுண்ணறிவுச் சார்பான பண்புக் கூறுகளோடு நரம்பு அமைப்பிலுள்ள வேறுபாடுகளை இணைப்புப் பொருத்தப்பாடு செய்வதற்குப் பல முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் எடை, பருமன், மடிப்புகளின் எண்ணிக்கை, புறணி அடுக்கின் மொத்தம் ஆகியவற்றின்மீது மூளைகளை இறந்த பிறகு ஆய்கின்ற முறை அவற்றை வகைப்படுத்துவதற்கு இன்னும் உதவவில்லை. ஆணின் மூளைக்கும் பெண்ணின் மூளைக்கும் ஆறு சதவிகிதம் வேற்றுமை இருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால், இந்த வேறுபாடு, ஆண்களின் உடல் எடையின் விகித அளவுக்குச் சரிபார்க்கும்போது மறைந்து போகின்றது. ஆகையினால், மேன்மையான செயல்முறைக்கான சான்று அமையவில்லை.

மேதைகளின் மூளைகளைப்பற்றி நடத்தப்பட்ட அளவாய்வுகள் அடிக்கடி மிக விரிவாகக் குறிப்பிடப்படுகின்றன. ஆனால், அவற்றில் புள்ளி விவரமான நம்பகமிருப்பதாகத் தெரியவில்லை. புறணியின் உள் உறுப்புகளின் பெரும்பகுதிகள் இல்லாதிருத்தல் கற்பதற்கான ஆற்றலை உறுதியாகக் குறைக்கின்றன. மிக

உயர்ந்த மனிதர்களின் மூளைகள் உள் உறுப்புகளின் திறனை விரிவாகப் பெற்றிருப்பதோடு, அவற்றின் அமைப்பும் மிக உயர்ந்ததாக இருக்கின்றது. ஆனால், இந்த ஆராய்ச்சிகளில் எல்லாம் சிக்கலான ஒரு கூறு இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட மூளையின் எந்தப் பகுதி ஒரு சமயத்தில் செயல் முறையில் சுறுசுறுப்பாக இருந்தது, எந்தப் பகுதியின் உள்ளுறுப்பு செயலற்று இருந்தது, முயற்சியுள்ள பகுதிகளுக்கு ஆதரவும், பாதுகாப்பும் வெறுமனே திரட்டித் தருகின்ற பகுதி எது என்பன போன்ற வினாக்களுக்கு உறுதியான விளக்கம் கிடைக்காமலிருக்கின்றதுதான் பெரும் சிக்கல் என்று சிலர் கருதுகின்றனர்.

மூளைகளை வேறுபடுத்திக் காட்டுவதற்கான மிக நுட்பமானதும், கலை நயம் வாய்ந்ததுமான தொழில் நுட்பத்திறங்களின் தேவை மிக அதிகமாக இருக்கின்றது. இந்த இடத்தில்தான் மூளை இரசாயனம் மிகவும் பயனுள்ளது என்று நிரூபிக்கின்றது. அஃது உயிரணு நடவடிக்கையின் உற்பத்தியைத் தன்னுடைய மாற்றாகக் காட்டுகின்றது.

உடற்கூற்று வேற்றுமை

நடத்தையை உடற்கூற்றுப் பாகுபாடு செய்வதன்மூலம் உணர்ச்சியியல்புகள் போன்ற பல ஆளுமைப்பண்புக்கூறுகள் உடல் அடிப்படைகளை வெளிப்படுத்தக் கூடியவையாக இருக்கின்றன. உடல் அமைப்புகளோடு நடத்தப்படுகின்ற இணைப்புப்பொருத்தப்பாட்டுமுயற்சிகளைவிடச் சிறந்தவையாகவும் கருதப்படுகின்றன; இந்தப் பிரச்சினைக்கு முக்கியமானதாகக் கருதப்படும் அளக்கக் கூடிய வேறுபாடுகள் பல இருக்கின்றன. அவை உயிர்ப்பொருள்களின் மாறுபாட்டு வீதம், குருதிஊழுத்தம், மின்வலித் தோல் எதிர்ப்பு, தசைநார் விறைப்பு, குருதியின் புளிப்புத்தன்மை, மூத்திரம், உமிழ்நீர் முதலியவையாகும். குருதியிலுள்ள சுரப்பி நீரின் உள்பொருளின் வேறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கின்றன. ஆனால், உடல் இரசாயன மாற்று இந்தத் துறையிலுள்ள சிக்கலை ஆராய்ச்சி செய்து பார்ப்பதற்கு இன்னும் தகுதி பெறவில்லை.

பல்வேறுபட்ட இந்த உடற்கூற்று அளவுகள் 'பொது வேற்றுமை உடல் இரசாயனம்' என்ற பெயரில் சுட்டிக்காட்டுவது என்ன என்று இன்னும் சரியாகக் கூற முடியாமலிருக்கின்றது. தனியாள்கள் உளப்பிணியினர் என்று கூறப்படுகின்றார்கள்; மனவெழுச்சி திடநிலையற்றவர்களாக இருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றார்கள். இவையெல்லாம் காட்டுவது என்னவென்றால்

உயர்தரமான மாறும் நிலையும் மின்வலித் தோல் எதிர்ப்பு நடவடிக்கையில் ஏற்படும் மெதுவான சமநிலை மீட்பும் தூண்டலை இடம் பெயரச் செய்யும்போது ஏற்படுகின்ற செயல்முறையின் நிலைகளைக் காட்டுகின்றன என்பதாகும். ஆனால், இவ்விதமான முடிவுகளைக் குறிப்பிட்ட சுரப்பி நிலைகளோடும் தசைநார் நிலைகளோடும் தொடர்புபடுத்தும் முயற்சிகள் வெற்றிகரமாக இருப்பதில்லை.

எனவே, இந்த நிலைமைகளைப்பற்றிப் போதுமான செய்திகள் கிடைக்காதபோது பயனற்ற சிந்தனையிலீடுபடுவது மிக எளிதாகி விடுகின்றது, அப்படிப்பட்டவர்கள் மகிழ்ச்சி, துன்பம் ஆகிய உணர்ச்சிகளை வேண்டியபோது உண்டாக்கக்கூடிய சுரப்பி நீர்களைப் புட்டிகளில் மருத்துவர்கள் வைத்திருக்கக்கூடிய காலம் உண்டு என்றும் ஆருடம் கணிக்கின்றார்கள். அப்படிப்பட்ட சிந்தனைகளும் கூற்றுகளும் எத் துறையிலும் அறிவியல் வளர்ச்சியைத் தடுக்கக்கூடியவையாக இருக்கின்றன. உடற்கூற்று உளவியல் துறையிலும் அத்தகைய நிலைமை ஏற்படுமானால், நாளமில்லாச் சுரப்பிகளின் நடவடிக்கைகளுக்கும் முழு மனித நடத்தைக்கும் இடையிலுள்ள தெளிவான தொடர்புறவுகளைப் பற்றி நடைபெறுகின்ற ஆராய்ச்சிகள் தடைகளுக்குள்ளாக நேரிடலாம். ஆகவே, உடற்கூற்று உளவியல் துறையில் மேற்கொண்டு நாம் ஏதேனும் கூற வேண்டுமானால், நடைபெற்று வருகின்ற ஆராய்ச்சி முடிவுகளின்மீது நம்பிக்கைகளை வைத்தாக வேண்டும்.

குறிப்பு நூல் தொகுப்பு
(Bibliography)

அத்தியாயம் 1

1. Loucks, R. B., 'The Contribution of Physiological Psychology,' Psychological Review, Vol. 6, 1941, 105-126.

2. Morgan, C. T., and Stellar, E., 'Physiological Psychology', New York: Mcgraw - Hill Book Company, 1950.

3. Wenger, M.A., Hones, F. N., and Jones, M.H., 'Physiological Psychology', New York : Holt, Rinehart and Winston, 1956.

4. Freeman, G. L., 'Physiological Psychology', New York : Van Nostrand, 1948.

அத்தியாயம் 2

1. Adrian, E.D., 'The Basis of Sensation', New York : W.W. Norton and Company, 1928.

2. Bartley, S.H., 'Vision,' New York : Van Nostrand, 1941.

3. Geldard, F.A., 'The Human Senses', New York : Wiby, 1953.

அத்தியாயம் 3

1. Adrian, E.D., 'Thc Mechanism of Nervous Action', Philadelphia : University of Pennsylvania Press, 1932.

2. Freeman, G.L., 'Physiological Psychology', New York : Van Nostrand, 1948.

3. Child, C.M., 'Physiological Foundations of Behaviour', New York : Henry Holt and Company, 1924.

அத்தியாயம் 4

1. Hebb, D.O., 'The Organization of Behaviour', New York Wiby, 1949.

2. Wenger, M.A., Jones, F.N., and Jones, M.H., 'Physiological Psychology', New York : Holt, Rinehart and Winston, 1956.

3. Morgan, C.T., and Stellar, E., 'Physiological Psychology', New York : Mcgraw-Hill Book Company, 1950.

அத்தியாயம் 5

1. Paterson, D.G., 'Physique and Intellect', New York: , D. Appleton-Century Company, 1930.

2. Lashley, K.S., 'Brain Mechanisms and Intelligence'' Chicago : University of Chicago Press, 1929.

6. விலங்கு உளவியல்

1. விலங்கு உளவியலின் வளர்ச்சியும், நோக்கமும், முறைகளும்

உளவியல் துறைகளில் விலங்கு உளவியலும் ஒன்றெனக் கருதப்படுகின்றது. மனித உளவியல் தோன்றிய காலத்திலேயே விலங்கு உளவியலும் தோன்றிவிட்டது என்ற உண்மை கருத்து மாறுபாட்டுக்கு இடமில்லாததொன்றாகும். இத் துறை கிரேக்க நாட்டுத் தத்துவ அறிஞர் அரிஸ்டாடல் என்பவரால் தோற்று விக்கப்பட்டதாகும். அக் காலத்தில் மெசபடோமியாவை ஆண்டு வந்த பேரரசர் அலெக்சாண்டர் என்பவர் அரிஸ்டாடலுக்கு ஆதரவாளராக இருந்து வந்தார். அவருடைய துணைகொண்டு அரிஸ்டாடல் அறிவியலின் எல்லாத் துறைகளுக்கும் வேண்டிய செய்திகளைத் திரட்டினார்; அவற்றை வகைப்படுத்தி உள வாழ்க்கையோடும் மிருக நடத்தையோடும் தொடர்புபடுத்தினார். இதற்கு அவர் பல ஆண்டுகளைச் செலவு செய்தார்.

மிருக உளவியலும் மற்ற அறிவியல் துறைகளைப் போன்றே அரிஸ்டாடல் காலம் முதல் வளர்ந்து முன்னேறிக்கொண்டு வந்திருக்கின்றது. அதனுடைய வளர்ச்சி மிகவும் அதிகரித்தது பத்தொன்பதாம் நூற்றாண்டில் என்று கூறலாம். டார்வின் (Darwin) என்ற உயிர்நூல் வல்லுநர் 1859ஆம் ஆண்டில் இனங்களின் தோற்றம் (Origin of Species) என்ற நூலை வெளியிட்டார். அது சமயம் நிலவிவந்த பல பிரச்சினைகளை இந் நூல் தெளிவு படுத்திற்று. டார்வின் கண்ட பரிணாமக் கோட்பாடு (The theory of evolution) உடனடியானதும், மிக விரிவானதுமான பிரச்சினையையும் கிளப்பிற்று.

எல்லா உயிர்வாழ் இனங்களிலும் ஓர் உளத் தொடர்ச்சி இருக்கின்றது என்று அவர் கூறினர். இந்தப் புதுக்கருத்து மிருகங்களின் உள வாழ்க்கையிலும், நடத்தை வாழ்க்கையிலும் மிகவும் பரவலான கவர்ச்சியை எழுப்பிற்று. இக் கருத்திலிருந்து எழுந்த இயக்கம், உயிரியல் ஒரு தனி அறிவியலாக உருப்பெறும் வழியை உண்டாக்கிற்று. இன்றைய அறிவியலின் நோக்கு நிலைகளையும் திட்டங்களையும் சரியான முறையில் புரிந்துகொள்ள வேண்டுமானல், டார்வின் காலத்திலிருந்து, ஏற்பட்டுவரும் முக்கியமான வளர்ச்சிகளைச் சுருக்கமாகக் கண்டறிய வேண்டும். அவற்றைக் கண்டறியும் முயற்சியில் இரண்டு திரும்புக் கட்டங்களை முக்கியமாக நாம் கவனித்தாகவேண்டும். அவற்றைச் செய்தித்துணுக்குக் காலம் (Anecdotal period) என்றும், பரிசோதனைக் காலம் (Experimental period) என்றும் கூறுகின்றனர்.

செய்தித்துணுக்குக் காலம்

செய்தித்துணுக்குக் காலம் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைக்காலத்தில், அதாவது டார்வினுடைய இனங்களின் தோற்றம் என்ற நூல் வெளி வந்த ஆண்டில் தொடங்கிப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில், அதாவது 1890ஆம் ஆண்டில் முடிவடைகின்றது. உயிர் சார்பான அறிவியல்கள் இக் காலத்தில் பெற்ற வளர்ச்சிகள் பெரும்பாலும் செய்தித்துணுக்கு முறையைக்கொண்டிருந்தன என்றே கூறலாம். ஆனல், இந்தக் காலத்தில் செய்தித்துணுக்குகளைக்கொண்டு அறிவியல் முன்னேற்றமடைந்தது என்று கூறுவதற்கான ஒரே சான்று மிருகங்களை வழக்கத்திற்கு மேலாகப் பயன்படுத்திக்கொண்டதுதான். மிருகங்களிடமிருந்து ஏராளமான செய்திகளைச் சேகரித்தனர்.

அந்தச் செய்திகள் வெளியிடப்பட்ட மூலங்களிலிருந்து பரிணமக் கொள்கையின் முதல் ஆதரவாளர்களால் சேகரிக்கப்பட்டன. மேலும், தனிப்பட்ட செய்திப் போக்குவரத்துகள் பிறரிடமிருந்து கேட்டுப் பெறுதல் போன்ற மூலங்களிலிருந்தும் அவர்கள் சேகரித்தார்கள்.

டார்வினுடைய கோட்பாடு வெளிவந்த முப்பது ஆண்டுகளுக்குள் ஏராளமான செய்திப்பொருள்கள் செய்தித்துணுக்கு மூலம் சேகரிக்கப்பட்டன. பூனை, நாய், குதிரை, யானை, குரங்கு ஆகிய மிருகங்கள் பொதுவான ஆராய்ச்சிக்குரிய மிருகங்களாக இருந்து வந்தன. சில செய்தித்துணுக்குகள் நம்பிக்கையற்ற மூலங்களிலிருந்தும் பெறப்பட்டன. ஆனல், அவற்றில் பெரும்

பாலானவை கதைகளை அடிப்படையாகக்கொண்டிருந்தன. எவ்வாறிருப்பினும், ஆராய்ச்சியாளர்களிடமிருந்து பெறப்பட்ட விவரங்கள் மிருகங்களின் நடத்தையைப் புகழக்கூடியவையாகவும், மனிதத் தன்மையாக்கக்கூடியவையாகவும் இருந்தன. உயர்ந்த வகையைச் சார்ந்த மிருகங்களின் பொது இடங்களில் காணப்படுகின்ற நடத்தைகூடச் செய்தித்துணுக்கு அமைப்பில் மனிதர்களின் நடத்தையை விவரிப்பது போன்றே காணப்பட்டது. மிருகங்களைப்பற்றிய தொகுப்பு நூல்களைக் கற்காமல் இந்தக் காலத்தின் உண்மையான போக்கைப் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தது.

செய்தித்துணுக்கும் உயர்ந்த மிருகங்களும்: செய்தித்துணுக்குகள் மூலம் மிருகங்களைப்பற்றிச் சேகரிக்கின்ற விவரங்கள் எல்லாம் உயர்ந்த மிருகங்களை மனிதப் பண்புக்குள்ளாக்குவதாகவே இருந்தன. பொதுவாக, இந்தச் செய்தித்துணுக்குகள் உயர்ந்த மிருகங்களிடத்தில் மனிதர்களிடமிருப்பது போன்ற ஆற்றல்கள் இருக்கின்றன என்பதற்கான சான்றுகளை எடுத்துக் காட்டுவதற்காகவே இருந்தன. உதாரணமாக, பகுத்தறியும் திறமை (Reasoning ability), சமூகக் கூட்டுறவு (Social co-operation), முதல் தர மனவெழுச்சிகளும் பற்றுகளும் (Primary emotions and sentiments), வளர்ச்சியடையாத ஒழுக்க உணர்ச்சி (Rudimentary moral sense) போன்ற ஆற்றல்கள் மிருகங்களிடத்திலும் காணப்படுகின்றன என்று செய்தித்துணுக்கு விவரங்களில் எடுத்துக் காட்டப்பட்டன.

பகுத்தறியும் திறமையை மிருகங்களிடம் காணப்படும் சில நடவடிக்கைகளின்மூலம் சுட்டிக் காட்டப்பட்டது. உதாரணமாக, மிருகங்கள் தந்திரங்களைக் கற்க முடிகின்றது. பொறிகளின் மூலம் அவற்றைக் கைப்பற்றுவதை அவை தவிர்க்கின்றன; காலத்தைப் பின்பற்றுவதில் மனிதனை மிஞ்சுகின்றன. இப்படிப்பட்ட நடவடிக்கைகள் பகுத்தறியும் திறமையைக் காட்டுகின்றன என்பது அவர்களுடைய கருத்து. சமூகக் கூட்டுறவு, உணவைப் பற்றுவதில் இரண்டு மிருகங்கள் எவ்வாறு திட்டமிட்டு, அறிகுறிகளையும் ஒலிகளையும் உபயோகிக்கின்றன என்பதன்மூலம் காட்டப்பட்டது. வீட்டு மிருகங்கள் செய்தித்துணுக்குகளுக்கு மிகப் பல மூலங்களைத் திரட்டித் தருகின்றன. உதாரணமாக, பரிவுணர்ச்சி (sympathy), அறிவார்வம், பொறுமை, போட்டியிடல், இன்னும் மற்ற மனவெழுச்சிகளிலும் மனிதர்களைப் போன்றே மிருகங்களும் இயங்குகின்றன என்று அச் செய்திகள் காட்டுகின்றன.

ஆனால், உயர்ந்த மிருகங்களிடத்தில் ஒழுக்கப்பற்றுகளும், நீதி உணர்ச்சியும், வெட்க உணர்ச்சியுங்கூட உண்டு என்று கூறுகின்றனர். இவற்றைப் பார்க்கும்போது மிருகங்களை அளவுக்கு மீறி மனிதப்பண்புள்ளவையாக ஆக்கிக் காட்டுவது கேலிக்குரியதாகத் தெரிகின்றது. இக் கருத்துக்கடியிலுள்ள பொருள் என்னவென்றால், மிருகங்கள் மனிதர்களைப் போன்று நடந்துகொள்ளுகின்றன என்றால், அவை மனிதர்களைப் போன்று உணரவுங்கூடும் என்று நாம் ஊகிக்க முடியும். இதை எவ்வாறு பரிசோதித்துப் பார்ப்பது என்பது ஒரு புதிய பிரச்சினையாகின்றது.

செய்தித்துணுக்குகளின் அனுகூலங்களும் குறைபாடுகளும் : செய்தித்துணுக்குகளின் தொகுப்பு மிகவும் அதிகமாகப் பழக்கப் படுகின்றன. அவை பொதுமக்களின் கற்பனைத் திறமைகளை மிக ஆழமாகக் கிளறிவிடுகின்றன. அந்தக் காலத்து அறிவியலார் மிகவும் அடக்கமானவர்கள். அவர்களால் பயன்படுத்தப்பட்ட இந்தச் சான்றுகள், உளத் தொடர்ச்சிக் கோட்பாட்டின்மீது சீற்றம் கொண்டு எழுந்த கசப்பான கருத்து வேறுபாடுகளினால் விளக்கப்படுகின்றன. இஃது ஒரு நற்பேறற்ற நிலையேயாகும். அந்தச் சான்றுகள் உண்மையான மதிப்பைப் பெற்றிருந்தாலும் இல்லாமலிருந்தாலும் பரிணாமக் கோட்பாட்டை இறுதியாக நிலை நிறுத்துவதில் அவை முக்கிய செல்வாக்குப் பெறுகின்றன.

மேலும், மிருகங்களை மனிதப்பண்புக்குள்ளாக்கும் மனப் போக்கில் பிழைபாடு இருக்குமானால், மனிதர்களின் உள வாழ்க் கைக்கும் மிருகங்களின் உள வாழ்க்கைக்குமிடையில் உள்ள வழக்கமான வேறுபாட்டை உடைத்தெறிவதில் பயன் விளைவு ஏற்படச் செய்யலாம். எவ்வாறிருப்பினும், செய்தித்துணுக்கு இயக்கத்தின் முக்கிய மதிப்பு, மிருக உளவியல் துறையில் எழுப்பப் பட்ட விரிவான கவர்ச்சியைப் பாதுகாப்பதில்தான் அடங்கியிருக் கின்றது. காலம் செல்லச் செல்ல இந்தக் கவர்ச்சி உளத் தொடர்ச்சியின்மீதுள்ள கருத்து வேறுபாடுகளிலிருந்து ரத்து செய்யப்பட்டுவிடும். பிறகு அஃது அறிவியல் ஆராய்ச்சித்திசை யில் திரும்பிவிடும்.

பரிசோதனைக்காலம்

டார்வினுடைய கோட்பாடு அறிவியல் துறைகளில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திற்று. அவருடைய காலத்திற்குப் பிறகு எழுந்த கோட்பாட்டின் நோக்கு நிலைக்கும், முறைக்கும் எதிராக ஒரு புதிய இயக்கம் தொடங்கிற்று. டார்வின் கண்ட உளத் தொடர்ச்சிக் கோட்பாடு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

எனவே, செய்தித்துணுக்கு விவரங்களை மேற்கொண்டு உபயோகப் படுத்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இந்தக் காரணங் களினுல் மிருகங்களின் நடத்தையை மனிதர்களின் நடத்தையைப் போன்று கருத வேண்டுமென்ற ஆர்வம் குறைந்துகொண்டு வந்தது. தொடக்கக் காலத்திலிருந்து வந்த கருத்து வேறுபாடு களுக்குப் புறம்பாக மிருகங்களின் நடத்தையை ஆராயும் முயற்சி மிருகங்களுக்காகவே இருக்க வேண்டும் என்ற போக்கு பெருகி வந்தது.

முதலில் நடத்தையை ஒழுங்குமுறையாகவும், கவனமாகவும் உராய்வு செய்யும் முறையின்மூலம் செய்தித்துணுக்கு முறையை மாற்றியமைத்தனர். சிறிது காலத்திற்குப் பிறகு எளிய ஆய்வுக் கூடப் பரிசோதனை முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பொருட்டுத் தனி முறைகளும், தொழில் நுட்பங்களும் கண்டு பிடிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இருபதாம் நூற் ருண்டின் முதல் ஐம்பது ஆண்டுக் காலத்தில் இந்த அறிவியல் துறையில் பரிசோதனை முறைப்படி பிரச்சினைகளை அணுகும் போக்கு அதிகரித்துக்கொண்டு வந்தது. இந்த வளர்ச்சி பரிசோதனைக்கூட முறைகளின் முன்னேற்றத்திலும், அம் முறைகள் விரிவடைதலிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்று வந்தது. பொருளடக் கத்திலும், சொல்லமுத்தத்திலும் எதிர்பார்த்தது போல் ஏற்பட்ட இந்த மாற்றம் கருத்துச் சார்பான மாற்றத்தோடு இணைந்து ஏற்பட்டது. எனவே, அறிவியலின் இன்றைய நிலையைப் புரிந்து கொள்ள வேண்டுமானுல், பெரும் வளர்ச்சிகள் ஏற்பட்ட காலத் தைச் சுருக்கமாக நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியிருக்கின்றது.

புது முயற்சியாளர்கள்: உயிரியல் சார்ந்த அறிவியல்களின் புதிய இயக்கம் 1890ஆம் ஆண்டில் தொடங்கிற்று. அந்த இயக் கத்தின் முன்னோடிகளாக இருந்தவர்கள் லப்போக் (Lubbock), மார்கன் (Morgan), லோயிப் (Loeb), வெர்வான் (Verworn) என்ற நால்வருமாவர். இந்த நால்வரும் தனித்தனியாகவே தம்முடைய ஆராய்ச்சிகளை நடத்தி வந்தனர். என்றாலும், அவர் களிடையே சில ஒற்றுமைகள் இருந்தன. லப்போக் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர் இயற்கையியலிலும், அரசியலிலும் புகழ் பெற்று விளங்கியவர். இவர் டார்வினுடைய சொந்த செல்வாக்கினுல் கவரப்பட்டுப் பூச்சிப் புழுவினத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்வதில் மிகவும் கவனம் செலுத்தினுர். மார்கன் என்பவரும் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவர் ஓர் உயிரியல் வல்லுநராகவும், சிந்தனையாளராகவும் இருந்தார்; உயர்ந்த வகை மிருகங்களின் நடத்தையைப்பற்றி மிகவும் விரிவான ஆராய்ச்சிகள் செய்து வந்தார்.

ஆனல், லோயிப், வெர்வான் என்ற இருவரும் ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த உடற்கூற்று வல்லுநர்களாவர்; கடுமையான அறிவியல் முறைப்படி தாழ்ந்தவகை மிருகங்களின் நடவடிக்கைகளை ஆராய்ச்சி செய்து வந்தனர். இவர்கள் அனைவரும் தனித்தனியே ஆராய்ச்சிகளை நடத்தி, தனிமுறைகளை வகுத்து, தங்களுக்கென்று தனி நோக்குநிலைகளை நிறுவினர்கள். இந்த நால்வரின் ஆராய்ச்சி வழிகளும் முடிவுகளும் ஓரிடத்தில் கூடியபொழுது ஒரு தனி இயக்கம் தோன்றியது. வெற்றிகரமான மிருக உளவியல் உண்மையான அறிவியல் முறைப்படித் தோன்றிற்று. இந்த நால்வரில் முதன்முதலில் பரிசோதனை முறையை உபயோகித்தவர் லப்போக் என்பவராவர். இவருடைய ஆராய்ச்சிகளின் முதல் தொகுப்பு நூல் 1882ஆம் ஆண்டில் வெளிவந்தது. இவர் சிக்கலறை முறையையும் பிரச்சினை முறையையும் கண்டு பிடித்தார். மிருகங்களுக்கு அடையாளமிடும் தொழில் நுட்பத்தையும் கண்டவர் இவர்தான். இதனல் மிருகங்களின் நடமாட்டத்தை எளிதில் கண்டுகொள்ள முடிந்தது. மேலும், நடத்தையின் பரிசோதனை முடிவுகளை முதன்முதலில் பட்டியலில் போட்டுக் காட்டி, தனியாள் வேறுபாடுகளையும், குழு வேறுபாடுகளையும் சுட்டிக் காட்டியவர் இவர்தான்.

மிருகங்களின் நுண்ணறிவைப் பரிசோதனைகளின்மூலம் கண்டறிய முடியும் என்று இன்றுள்ள கோட்பாட்டை உருவாக்கியவர் லப்போக் என்பவர்தான். ஒரு மிருகத்திற்கும் ஒரு தூண்டு பொருளுக்கும் இடையில் ஒரு தடையை வைத்து மிருகத்தின் நடத்தையை ஆராய்வதன்மூலம் அதனுடைய நுண்ணறிவு வெளிப்படுகின்றது என்பது இவருடைய கருத்தாகும். பல மிருகங்களில் எந்த மிருகம் தடையை வெற்றி கொள்ளுகின்றது என்பது நுண்ணறிவின் வெளிப்பாடாகும். இவ்விதமான ஆராய்ச்சிகளைப் பல ஆண்டுகள் நடத்திய பிறகு, அவற்றைத் தொகுத்து ஒரு நூல் வெளியிட்டார். 'புலன்கள், இயல்பூக்கங்கள், மிருகங்களின் நுண்ணறிவு' என்ற இந்த நூலில் செய்தித் துணுக்குச் சிறிதுமின்றி, முற்றிலும் பரிசோதனை முடிவுகளே அடங்கியிருந்தன.

உயர்ந்த மிருகங்களின் நடத்தையை ஆராய்வதில் முதன்முதலில் பரிசோதனையை உபயோகித்தவர் மார்கன் என்பவராவார். இவர் மிகப் பலவான பறவைகளின் வகைகளையும், குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மிருகங்களையும் பற்றி ஆராய்ச்சிகள் நடத்தி, அவற்றினுடைய இயல்பூக்கக் களஞ்சியத்தை ஒத்திட்டுப் பார்த்து, அவற்றினுடைய கற்றல் வழிகளை

நிர்ணயிக்க எளிய சோதனைகளை உருவாக்கினர். பறவைகளின் இயல்பூக்கம் வெளிப்படுவதில் பெற்றோர்களின் செல்வாக்கு முன்னமே ஏற்படுவதைத் தடுக்கும்பொருட்டு அடைகாத்தல் நுட்பத்தை இவர் தோற்றுவித்தார். இவர் தம்முடைய ஆராய்ச்சி முடிவுகளைப்பற்றி 1896ஆம் ஆண்டில் சிக்காகோ, ஹார்வார்டு பல்கலைக்கழகங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். அந்தச் சொற்பொழிவுகளே பிறகு 'இயல்பூக்கங்களும் பழக்கங்களும்' என்ற தலைப்பில் நூலாக வெளியிடப்பட்டது. இந்தச் சொற்பொழிவுகளே அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் பரிசோதனை முறைகளைத் தொடங்குவதற்குக் காரணமாக இருந்தன.

இவை நடைபெறுவதற்கு முன்பே முயற்சியும் பிழைபாடும் (Trial and error) என்ற கருத்துக்கோளை உபயோகித்து வந்தார். இது பொது உளவியல் கோட்பாட்டில் மிக முக்கிய பங்கேற்றுள்ளது. இவர் தம்முடைய ஒப்புமை உளவியலை (Comparative Psychology) 1894ஆம் ஆண்டில் உருவாக்கியபோதுதான் வெளியுலகத்திற்கு நன்ருக அறிமுகமானர்.

தொடக்கக் காலத்தில் லொயிப், தம்முடைய ஆராய்ச்சிகளையெல்லாம் தாவரம் போன்ற நிலையிலுள்ள மிகத் தாழ்ந்த உயிரினங்களின்மீதே நடத்தி வந்தார்; இந்த உயிரினங்கள் எல்லாம் ஒளி, பூமி ஈர்ப்பு முதலிய தூண்டல்களை நோக்கி நேரிடையாகச் செல்லுகின்றன அல்லது அவற்றினிடமிருந்து விலகிச் செல்லுகின்றன என்பதைக் கண்டுபிடித்தார். இத்தகைய வழி காட்டும் பயிற்சித் துலங்கல்கள் தாவரங்களிடம் இருப்பதாக நெடுநாள்களுக்கு முன்பே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் துலங்கல்கள் புதை உணர் செயல்முறைகளையும், உடல் இரசாயன செயல்முறைகளையும் கொண்டிருக்கின்றன என்றும் கண்டறிந்திருக்கின்றனர். ஆனல், லொயிப்பின் ஆராய்ச்சி முடிவுகள் தாவரங்கள் போன்ற கீழ்நிலை மிருகங்களின் நடத்தை இயல்பானது என்று கூறும் கருத்தைத் தோற்றுவிக்கின்றன. நான்கள் செல்லச் செல்ல லொயிப் தம்முடைய கருத்தை எல்லா இயல்பூக்க நடத்தைக்கும் விரிவடையச் செய்தார். மனவாழ்க்கை எல்லா மிருகங்களுக்கும் உண்டு என்ற கருத்தை இவர் மறுத்தார்; ஆனல், உயர்ந்த மிருகங்களிடமுள்ள கற்கும் திறமையைச் செயல் விளக்கம் செய்ய முடியும் என்று கூறினர்.

பரிசோதனை முறைகளை வெர்வான் ஓரணு உயிரினங்கள் வரையில் நீட்டிச் சென்ருர். இந்த ஆராய்ச்சிகள் 1889ஆம் ஆண்டில் நூலாகத் தொகுக்கப்பட்டன. இவருடைய முதல்

ஆராய்ச்சிகளையெல்லாம் ஜென்னிங்ஸ் (Jennings) என்பவர் விரிவு படுத்தினர். லொயிப்பின் கோட்பாட்டைப் போன்றே வெர்வான் என்பவரும் ஓர் இயல்பூக்கக் கோட்பாட்டை உருவாக்கினர். கீழ்நிலை உயிரினங்களின் எதிர்வினைகளெல்லாம் பெருமளவுக்கு உள்ளார்ந்த கூறுகளினுல்தான் நிர்ணயிக்கப்படுகின்றன என்று இவர் கூறுகின்ருர். எதிர்வினைகளை நிர்ணயிக்கின்ற உள்ளார்ந்த கூறுகள் உடற்கூறு சம்பந்தப்பட்டவையே தவிர, உளக்கூறு சம்பந்தப்பட்டவையல்ல. இவர் தம்முடைய கருத்தைப் பல உயிரணு உயிரினங்களுக்கு விரிவாக்க முயற்சிக்கவில்லை. பரிசோதனைப் பாகுபாட்டுக்கு ஒரு புதுத் துறையைத் திறக்க வேண்டுமென்பதுதான் இவருடைய முக்கிய நோக்கமாக இருந்தது.

பிந்திய வளர்ச்சிகள்: புது முயற்சியாளர்களின் ஆராய்ச்சிகள் எல்லாம் அறிவியலின் தொடக்கத்தைதான் பிரதிபலித்தன. ஆனல், அவை தலைசிறந்த முயற்சிகளாகக் கருதப்பட்டன. என்ருலும், அவை மிகவும் விரிவாக்கப்பட்டுத் திருத்தம் செய்யப்பட வேண்டியவையாக இருந்தன. புதிய சீராக்கப்பட்ட முறைகள் கண்டுபிடிக்க வேண்டியிருந்தன. அவை பல்வேறு வகையான மிருகங்களின்மீது பரிசோதனைக்காகச் செலுத்தப்பட வேண்டும். எனவே, ஒழுங்கு முறையான உண்மைகளைப் பெருமளவுக்குப் படிப்படியாகச் சேகரித்து, முழு வளர்ச்சியடைந்த அறிவியல் துறையளவுக்கு இத் துறையையும் உயர்த்த வேண்டும். பரிசோதனை முறைகளில் சில பிந்திய காலத்தில் இந்தத் தேவைகளை நிறைவேற்றியிருக்கின்றன. அந்த வளர்ச்சியைப்பற்றிச் சிறிது நாம் கவனித்தாக வேண்டும்.

உளவியலார்களிடையிலும், உயிரியலார்களிடையிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திடீரென்று தோன்றியது என்னவென்ருல்,மிருகங்களிடையே நடத்தப்பட்ட பரிசோதனைகள் தான் என்று கூறலாம். ஜென்னிங்ஸ் என்பவர் ஓரணு உயிரினங்களிடையே விரிவான ஆராய்ச்சிகளை நடத்தி, முயற்சியும் பிழைபாடும் நடைபெறும் நடவடிக்கைகளையும், எளிய பழக்கம் உருவாதலையும் இந்தத் தாழ்ந்த வகையைச் சேர்ந்த உயிரினங்களிடம் செயல் விளக்கம் செய்து காட்டினர். அதே சமயத்தில் ஜெர்மனி, ஃபிரான்ஸ், அமெரிக்கா போன்ற நாடுகளில் பல ஆராய்ச்சியாளர்கள் மிகவும் சிக்கலான முதுகெலும்பில்லாத மிருகங்களின் கற்றல் நடவடிக்கைகளைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தி வந்தார்கள். எர்கிஸ்(Yerkes)என்பவர் சிக்கலறை முறையை நண்டுகளின் மீதும், மீன்களின்மீதும் உபயோகித்தார். தாண்டைக் (Thorndike) என்பவர் பிரிக்கப்பட்ட சிக்கலறை முறையை மீண்

களின்மீது உபயோகித்தார். லப்போக்கின் ஆராய்ச்சி முறையைப் பின்பற்றித் தொடர்ந்து சமூகப் புழுப்பூச்சிகளின் நடத்தையைப் பல ஆராய்ச்சியாளர்கள் இக் காலத்தில் தீவிரமாக ஆராய்ச்சி களில் ஈடுபட்டார்கள். மார்கன் என்பவர் பறவைகளின்மீது தம்முடைய ஆராய்ச்சிகளை நடத்தினர். தாண்டைக்கும், கிளையின் (Kline) என்ற மற்றொரு அமெரிக்க உளவியலாரும் மார்கனைப் பின்பற்றி அவருடைய முறைகளை விரிவுபடுத்தினர்.

இக் காலத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம், மிருகங்களின்மீது உபயோகித்து வந்த முறைகளையெல்லாம் குட்டி போட்டுப் பால் கொடுக்கும்' உயிரினங்களின்மீது உபயோகித்ததாகும். இது காலம் வரையிலும் அவற்றின்மீது உராய்வு முறை மூலமே ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. இந்த உயர்ந்த மிருகங்களின்மீது ஆய்வுக்கூடப் பரிசோதனைகளை வெற்றி கரமாக நடத்த முடியாது என்று பொதுவாக நம்பப்பட்டு வந்தது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் புது முறையான பரிசோதனைகளைத் தாண்டைக், கிளையின், பேவ்லோவ் போன்ற வர்கள் தொடங்கி வைத்தார்கள். தாண்டைக் மிகவும் விரிவான ஆராய்ச்சிகளைப் பூனைகள், நாய்கள், குரங்குகள் போன்ற மிருகங் களிடம் மிகப் பல பிரச்சினைப் பெட்டிகளைக்கொண்டு நடத்தினர். அந்தப் பெட்டிகளை அவரே கண்டுபிடித்தார்.

மிருகங்களின் கற்றல் நடவடிக்கைகளையும் பின்பற்றல் நடவடிக்கைகளையும் தாண்டைக் பாகுபாடு செய்த முறை பலரிடம் மிக்கக் கவர்ச்சியை உண்டாக்கி, மேற்கொண்டு ஆராய்ச்சிகளைத் தொடங்குமாறு செய்தது. எனவே, கிளையின் என்பவரும், ஸ்மால் (Small) என்பவரும் வெள்ளைச் சுண்டெலி களின் கற்றல் நடவடிக்கையைத் தனியாக உருவாக்கப்பட்ட பிரச்சினைப் பெட்டிகளைக்கொண்டும், சிக்கலறைகளைக்கொண்டும் ஆராய்ந்தனர்; ஆய்வுக்கூடப் பரிசோதனைகளுக்கு இம் மிருகம் மிகவும் பொருத்தம் என்று கண்டறிந்தனர். ரஷ்ய நாட்டு உடற் கூற்றியல் வல்லுநர் நாயின்மீது பரிசோதனைகளை நடத்தி வந்தார். ஆக்க நிலையுறுத்தல் மறிவினையை அவர் நாயிடம் கண்டுபிடித்தார். இந்தப் புது முறையும் ஆராய்ச்சித் துறையில் முக்கியமான திருப்பங்களைத் தோற்றுவித்தது. இங்கு நாம் குறிப்பிட்ட ஆராய்ச்சியாளர்களின் முயற்சிகள் எல்லாம் உயர்ந்த மிருகங் களின்மீது பிற்காலத்தில் நடத்தப்பட்ட பரிசோதனைகளுக் கெல்லாம் மாதிரிகளாக இருந்தன.

இத்துடன் அப் பரிசோதனை முறைகள் நின்றுவிடவில்லை; மேற்கொண்டும் சென்றன. மிருக உளவியல் முறைகளெல்லாம்

மனிதர்களின்மீது ஆராய்ச்சிகளை நடத்துவதற்கு உபயோகிக்கப் பட்டன. மனிதர்களிடம் காணப்படும் பல கற்றல், நுண்ணறிவுப் பிரச்சினைகள் மிருக ஆராய்ச்சி முறைகளை உபயோகப்படுத்தி, பிறப்பு மரபியல் கோணத்திலிருந்து அணுக முடியும் என்பதை உளவியலார் உணர்ந்து வருகின்றனர். இந்த உணர்வு ஏற்பட்ட வுடன் அமெரிக்காவிலுள்ள முக்கியப் பல்கலைக்கழகங்கள் பரிசோதனைக்கூடங்களை அமைத்தன; மிருக ஆராய்ச்சி முடிவுகளை வெளியிடுவதற்கென்று தனிப் பத்திரிகைகள் தொடங்கப் பெற்றன. இந்தப் போக்கு புதிய முறைகளையும், திருந்திய முறைகளையும் உருவாக்கும் திருப்பத்தை உண்டாக்கிற்று. மிருகங் களின் நடத்தை சம்பந்தமான ஒழுங்குமுறையான உண்மைகள் படிப்படியாகச் சேர்க்கப்பட்டு வந்தன.

புறநிலையாக நோக்குநிலை: மிருகங்களின் நடத்தைக்கு மனிதத் தன்மை கொடுக்கின்ற போக்கைப் பரிசோதனை முறைகளை உருவாக்கிய புது முயற்சியாளர்கள் முற்றிலும் புறக்கணித்து விட்டார்கள்; ஆனால், சிலர் சில குறிப்பிட்ட நடத்தைகளில் ஓரளவுக்கு அப் போக்கு இருப்பது தவறன்று என்று நம்புகின்றனர். பரிசோதனை முறைகள் தொடங்கிய காலத்திலும் அதற்கு முன்பும் மிருக உள்ளத்தின் இயல்பைப்பற்றிய பல பிரச்சினைகள் சிந்தனையைக் கிளறி வந்தன. மிருகங்களுக்கும் உள்ளம் உண்டு என்ற கருத்து ஒரு கோணத்திலிருந்து மிருக உளவியலில் நேரடியான செல்வாக்குப் பெற்றிருப்பதால், அக் கருத்தைப்பற்றியும் சிறிது கூறுவது பொருத்தமாக இருக்கும்.

மிருகங்களுக்குத் தெளி உணர்நிலை உண்டு என்பதற்கும், இல்லை என்பதற்கும் உபயோகித்த கட்டளைவிதிபற்றி எழுந்த வேறு பாடுகள் மிக அதிகமாக இருக்கின்றன. இதுபற்றி லோயிப்பின் கருத்து என்னவென்றால், மிருகங்களிடமுள்ள கற்பதற்கான திறமை அவற்றின் தெளி உணர்நிலையைச் சார்ந்திருக்கின்றது என்பதும், அதுவே இதற்குச் சரியான சான்று என்பதுமாகும். லப்போக்கும் மார்கனும் இந்தக் கட்டளைவிதி ஒரு சார்பானது என்று மறுக்கின்றனர். மறிவினைகளையும் இயல்பூக்கச் செயல் களையும் செயல் நிறைவேற்றம் செய்யும்போதுதான் மிருகங்கள் தெளிவுணர்நிலையடைகின்றன என்று அவர்கள் கூறுகின்றார்கள். அவர்கள் கருதுவது என்னவென்றால், உயிர்வாழ்கின்ற எல்லா உயிரினங்களுமே ஏதேனும் ஒருவகையான தெளிவில்லாத தெளி உணர்நிலையைப் பெற்றிருக்கின்றன என்பதாகும்.

இக் கருத்தை மறுத்துரைக்கலாம். ஆனால், மறுத்துரைக் கின்றவர் ஒரு பிரச்சினையையும் எழுப்புகின்றனர். மிருக

வகைகளின் பரிணாமத்தில் தெளி உணர்நிலை முதலில் எப்பொழுது தோன்றிற்று, எவ்வாறு தோன்றிற்று என்பதுதான் அந்தப் பிரச்சினையாகும். ஓரணு உயிரினங்கள்கூடக் கற்க முடியும் என்பதை ஜென்னிங்ஸ் என்பவர் செயல் விளக்கம் செய்து காட்டிய பிறகு லொயிப்பின் கருத்து முக்கியத்துவம் இழந்து விட்டது. இந்தப் புதிய உண்மைகள் எல்லாம் லப்போக், மார்கன் ஆகியவர்களின் வாழ்க்கையும் தெளி உணர்நிலையும் ஒருங்கே காணப்படுகின்றது என்ற கருத்துக்கு ஆதரவு தருவதாக இருக்கின்றன.

உளநடவடிக்கையில் மட்டங்கள் இருப்பதாக ஆழ்ந்தாராய்தல் முறை வலியுறுத்துகின்றது. மார்கன் ஓர் அளவுகோலை அதற்கு ஏற்படுத்தியுள்ளார். அந்த அளவுகோல் மூன்று மட்டங்களைக் கொண்டிருக்கின்றது. அவை புலனுணர்ச்சி மட்டம், விளைவுள்ள தெளி உணர்நிலை மட்டம், தன்-உணர்நிலை மட்டம் என்பவை.

புலனுணர்ச்சி மட்டம் (sentience level) என்பது ஒரு மங்கலான விழிப்பு நிலை; மிகமிக எளிய உயிரினங்களிடம் காணப்படுவது.

விளைவுள்ள தெளி உணர்நிலை மட்டம் (effective consciousness level) என்பது கடந்த கால அனுபவங்களோடு தொடர்புடையதாக இருக்கின்றது. அதன்மூலம் பிந்திய நடவடிக்கைகள் வழி காட்டப்படுகின்றன.

தன்-உணர்நிலை மட்டம் (self-consciousness) என்பது பகுத்துப் பார்க்கக்கூடிய சிந்தனைத் திறமையோடு தொடர்பு கொண்டிருக்கின்றது. இந்த மட்டம் சிக்கலான மைய நரம்பு மண்டலத்தின் நடவடிக்கைகளைத் தொடர்புபடுத்துகின்றது; அத்துடன் மொழி உபயோகத்தையும் சுட்டிக் காட்டுகின்றது. எனவே, இந்த மட்டம் மனிதர்களுக்கு மட்டுமே இருக்க முடியும் என்று தெரிகின்றது.

இது போன்றே பல அளவுகோல்களை மற்றவர்களும் உருவாக்கினார்கள். எல்லா அளவுகோல்களிலும் உள அளவுகோலில் ஓர் இனத்தை நிறுத்துவது, அந்த இனத்தின் நடத்தையையும் சிக்கலான அதனுடைய உடலமைப்பையும்பற்றிக் குறிப்பெடுத்துக் கொண்டுதான் செய்ய வேண்டும். ஆகையினால், வகுக்கப்பட்ட உளநிலை ஊகிக்கப்படக்கூடியதாக இருக்கின்றதே தவிர, நேரடியாகப் பார்த்தறிந்த உண்மையாக இருக்கவில்லை. அவ்வாறு அந்த

அளவுகோல் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தாலுங்கூட அதனைச் செயல்படுத்துவதில் அவ்வளவு நம்பிக்கையான உண்மை ஏற்படுவது சந்தேகமே. உண்மையில் மிருகங்களின் உலகத்தை இத்தகைய எளிய மூன்று மட்டங்களைக்கொண்ட உளவியல் வகைப்படுத்தலில் அடைப்பதன்மூலம் பெறப்படுவது என்ன என்பதை யாரும் கூறவில்லை.

மிருக உளவியல் துறையில் முன்னேறி வந்த பரிசோதனை முறைகளும், பரிசோதனை முடிவுகளும் பல இளம் உளவியலாரைத் துடித்து எழச்செய்து ஆராய்ச்சிகளில் ஈடுபடுமாறு செய்தன. அதன் விளைவாக ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் பல உளவியல் கோட்பாட்டுக் கிளைகளைத் தோற்றுவிக்கக் காரணமாக இருந்தன. அவ்வாறு எழுந்த கோட்பாட்டுக்கிளைகளில் ஒன்று நடத்தைக் கோட்பாடும் (behaviourism) ஒன்று. அதைத் தோற்றுவித்தவர் வாட்சன் (Watson) என்பவர். மிருக உள்ளத்தின் இயல்பைப்பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சிகள் அனைத்தையும் அவர் கடுமையாகத் தாக்கினார். மிருகங்களின் மன வாழ்க்கையில் நுழைகின்ற இந்த வகையான முயற்சிகள் எல்லாம் உபயோகமற்ற கருத்து வேறுபாடுகளைத்தான் உண்டாக்குகின்றன. மிருகங்களின் மன வாழ்க்கையை மனிதர்கள் நேரடியாகக் காண முடியாது. ஆகையினால், இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவே முடியாது என்று கண்டிப்பாகக் கூறினார்.

மிருகங்களின் அமைப்பைக்கொண்டும் நடத்தையைக் கொண்டும் அவற்றின் மன வாழ்க்கையை ஊகித்தறியும் முயற்சி மறுபடியும் மிருகங்களுக்கு மனிதத்தன்மை அளிக்கும் கோட்பாட்டிற்கே திரும்பிச் செல்லுவதாகத்தான் முடியும் என்று வாட்சன் வலியுறுத்தி வந்தார். ஏனென்றால், அக் கொள்கையில் நியாயவாத வலிமையில்லை. அஃது ஒரு வட்டத்தின் தொடக்கத்தையும் முடிவையும் கண்டறியும் முயற்சியாகும். அது முடிவில்லாமல் சுற்றிச் சுற்றிச் செல்லும் கதை.

மிருகங்களுக்கு ஓர் உள் வாழ்க்கை என்ற ஒன்று இருக்குமானால், மனிதர்களுடைய நோக்கத்திலிருந்து அஃது உள்ளப் பொழுதும் மறைக்கப்பட்டுத்தானிருக்கும். எனவே, நாம் விவாதிக்கும் இந்தப் பிரச்சினை அறிவியல் ஆராய்ச்சித் துறைக்கு வெளியில்தானிருக்கின்றது. மிருக மனப்பான்மையைப்பற்றி விளக்கும் செய்யும் எல்லா முயற்சிகளும் பாசாங்குகளாகவும் உபயோகமற்ற சிந்தனைகளாகவுந்தான் இறுதியில் மாறுகின்றன. எனவே மிருக உளவியல் உண்மையான அறிவியலாக இருக்க வேண்டுமானால், அஃது

உவமைகளைக்கொண்டு உய்த்துணரும் கோட்பாட்டைப் புறக்கணிக்க வேண்டும்; மிருகங்களுக்கு மனிதப் பண்புகளைப் புகட்டும் முயற்சிகளையும் விட்டொழிக்க வேண்டும்.

உய்த்துணரும் முறைகளையும் மனிதப் பண்புகளை மிருகங்களுக்குக் கற்பிக்கும் முயற்சிகளையும் கடுமையாக எதிர்த்த வாட்சன் நேர்நிலையான கருத்துகளையும் வெளியிட்டார். மிருக உளவியலார் தூண்டல்-துலங்கல் தொடர்புறவுகளை அளவாய்வு செய்ய வேண்டும் என்றும், அஃது இயற்கையான சூழ்நிலையிலும், ஆய்வுக்கூடத்திலும் நேரிடையாகக் கண்டதுபோலவே இருக்க வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினர். தூண்டல்-துலங்கல் என்ற இந்த இரண்டு கருக்கோள்களும் புற நிலையானவையாக இருப்பதால், அப்படிப்பட்ட ஒரு செயல் தொடர்பு முறை மிருக உள்வியல் நிச்சயமாக இயற்கை அறிவியல்களின் வரிசையில் ஒன்றாக வைக்கும் என்று நம்பலாம்.

உயிரினத்தின் நடத்தை முழுமையாகத் தானே விளக்கம் கூறும் ஓர் ஒழுங்குமுறையாகக் கருதப்பட வேண்டும். அப்பொழுதுதான் சிக்கலான நடவடிக்கைகளை எளிய செயல்களாகப் பாகுபடுத்த முடியும். இந்த நடத்தை மட்டங்கள் உளமட்டங்களைக் கொண்டுள்ள பழைய கருத்தை மாற்றியமைக்கின்றன. உளச் சார்பான கருத்துச் சொற்கள் ஏதுமின்றி மிருக நடவடிக்கைகளை நுண்ணறிவின் படித்தரங்களாகக்கூடத் தரவீடு செய்யலாம். ஏனென்றால், சூழ்நிலைகளில் வெற்றிகரமான பொருத்தப்பாடுகளைச் செய்துகொள்வதுதான் நுண்ணறிவு என்று கருதப்படுகின்றது. இவ் வகையான உண்மைகளைப் புறநிலையாகப் பரிசோதித்துப் பார்த்துக்கொள்ள முடியும்.

ஆனால், வாட்சனுடைய கொள்கை மனிதர்களைப் பொருத்த மட்டில் எந்த அளவுக்கு வெற்றிகரமாக அமைய முடியும் என்று கருதப்பட்டாலும் மிருக உளவியலைப் பொருத்த மட்டில் முற்றிலும் சரியானதாகத்தான் தெரிகின்றது. தொடக்கக் காலத்தில் வாட்சனுடைய கொள்கைக்குக் கடுமையான எதிர்ப்புகள் காணப்பட்டாலும், அவருடைய கொள்கை இன்றைய அறிவியலில் நிலைநாட்டப்பட்டுவிட்டது. எனவே, இறுதியாக மிருக உளவியல் புறநிலையாக நோக்கு நிலையை ஏற்றுக்கொண்டு, மிருகங்களுக்கு மனிதப் பண்புகள் கற்பிக்கும் கொள்கையை முற்றிலும் கைவிட்டு விட்டது. இம் முறையில் மிருக உளவியலில் இருந்து வந்த அடிப்படையான பிரச்சினை தீர்க்கப்பட்டுவிட்டது.

விலங்கு உளவியலின் இன்றைய ஆய்பொருள்கள்

அறிவியல்களின் அடிப்படை நோக்கம் என்னவென்றால், ஒழுங்குமுறையான வழிகளில் அவற்றின் அறிவெல்லைகளை எந்த அளவுக்கு வளர்த்துக்கொள்ள முடியுமோ அந்த அளவுக்கு வளர்த்துக்கொள்ளுவதாகும். எந்த ஓர் அறிவியலின் திட்டமும் இதுதாகத்தானிருக்க முடியும். மிருக உளவியல் துறையும் தன்னுடைய அறிவெல்லையை அந்த முறையில்தான் வளர்த்துக்கொள்ள வேண்டும். அதனுடைய திட்டத்தை வெற்றிகரமாகச் செலுத்தும் பொருட்டு அத் துறை பெரும்பிரிவுகளாகவும், சிறு பிரிவுகளாகவும் ஆக்கப்பட வேண்டும்.

எனவே, மிருகங்களின் எல்லா வகையான நடத்தைகளையும் முறையாக வகைப்படுத்தல் செய்ய வேண்டும். பிறகு அவற்றைப் பாகுபாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு வகையிலும் உள்ள பிரச்சினையைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். இஃது ஒரு தனி மிருகத்தோடோ குழுவோடோ தொடர்புடைய கிடைக்கக்கூடிய அறிவின் எல்லையைச் சுட்டிக்காட்டுவதற்கு உதவக்கூடும்.

இரண்டாவதாக, நடத்தையைப் பாகுபாடு செய்வதில் உபயோகப்படுத்தப்படும் அணுகும் முறைகள் பலவற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதும், ஒப்பிட்டுப் பார்த்து வேறுபாடுகளைக் கூறுவதுமாகும்.

நடத்தையை வகைப்படுத்தல் : நீண்ட காலமாகவே மிருக நடத்தையை இரண்டு முக்கிய வகைகளில் அடக்கி வந்தனர். அவை இயற்கையான நடவடிக்கைகள் என்றும், வந்தேறிய நடவடிக்கைகள் என்றும் இரண்டு வகைகளாகும். முதல்வகை நடவடிக்கைகளில் மறிவினைகள், பிறப்புடன் வந்தவை, இயல்பூக்கங்கள் ஆகியவை அடங்குகின்றன. இரண்டாவது வகையில் பழக்கங்கள் அல்லது கற்ற எதிர்வினைகள் அடங்குகின்றன. நடத்தையின் இந்த இரு வகைப்பாடு பழைய கருத்தின்மீது படிவதாகத் தெரிகின்றது. அதாவது, நடத்தைத் துறையில் மரபுநிலைக் கூறுகளுக்கும் சூழ்நிலைக் கூறுகளுக்கும் இடையில் ஒரு தெளிவான பிளவு இருக்கின்றது என்பதாகும்.

ஆனால், மிருகங்களின் பிறப்பு மரபியல்பற்றி விரிவான ஆராய்ச்சிகள் நடைபெற்ற பிறகு இக் கருத்து புறக்கணிக்கப்பட்டு விட்டது. வளர்ச்சிக்காலம் முழுவதும் மரபுநிலைக் கூறுகளும், சூழ்நிலைக் கூறுகளும் சேர்ந்தே இயங்குகின்றன என்பதற்கான சான்றுகள் காட்டப்படுகின்றன. கருத்தரித்த காலத்திலிருந்து

அவை ஒன்றோடொன்று ஊடுருவிச் செல்லுகின்றனவே தவிர, தன்னுரிமையாக இயங்குவதில்லை. எனவே, எல்லா வகையான நடத்தைகளும் ஒரு பகுதி மரபுரிமையானவையாகவும், மறு பகுதி கற்று வந்தேறியவையாகவும் இருக்கின்றன என்று தெரி கின்றது.

தொடக்கக் காலத்தில் தோன்றுகின்ற நடத்தையின் எளிய படிவங்கள் பலவும் சந்தேகத்திற்கு இடமின்றி மரபுநிலையானவை யாக இருக்கின்றன. ஏனென்றால், அவை சூழ்நிலைக்கூறுகள் நடத்தையில் செல்வாக்குப் பெறுவதற்கு முன்பே தோன்றி விடுகின்றன. ஆனால், எவ்வாறிருப்பினும் வாழ்க்கையின் பிற் காலத்தில் தோன்றுகின்ற நடத்தையின் பல சிக்கலான வகை களில் இந்த இரண்டு கூறுகளும் தழுவி நிற்கும் ஆதிக்கத்தைச் செயல் விளக்கம் செய்து காட்டுவது சிரமமேயாகும். எவ்வாறி ருப்பினும், மிருகங்களிடம் காணப்படும் எதிர்வினைகளின் மிகப் பல வகைகளை முறைப்படுத்திக் கூறுவதில் இந்த இருவழி வகைப் படுத்தல் அவ்வளவு ஏற்புடையதாக இல்லை.

ஆகையினால், மிக விரிவான புதியதொரு வகைப்படுத்தலைத் தருவதுதான் சிறப்புடைய வழியாகத் தெரிகின்றது. அத்தகைய வகைப்படுத்தலில் உள்ளார்ந்த கூறுகளுக்கும், வந்தேறிய கூறு களுக்கும் மாறுபாடு புலப்படக் கூடாது. எனவே, நடத்தையை உயிர்-உளவியல் செயல்முறைகளுக்கு ஒத்திருக்கின்ற வகையில் பிரிப்பதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவ் வழியில் நடவடிக்கைகளை இரண்டு முக்கிய குழுக்களாக ஏற்றுக்கொள்ளச் செய்திருக்கின்றனர். அவை எளிதில் ஏற்கின்ற ஆற்றல்கள் (receiptive capacities), எதிர்வினை ஆற்றல்கள் (reactive capacities) என்பன.

எளிதில் ஏற்கின்ற ஆற்றல்கள் புலன் உணர்ச்சிச் செயல் முறைகளும் புலன் காட்சிச் (perceptual) செயல்முறைகளும் உள்ளடங்கியவை. எதிர்வினை ஆற்றல்கள் நடத்தை சார்ந்த எதிர்வினைகளைக் குறிக்கின்றன. ஆய்வுக்கூட நிலைமைகளிலும், இயல்பான இருப்பிட நிலைமைகளிலும் நடைபெறுகின்ற எதிர் வினைகள் உள்ளடங்கியிருக்கின்றன. மேலும், இவை தெளிவான வாழ்க்கை நடவடிக்கைகளாகவும், முக்கியமானவையாகவு மிருக்கின்றன. இந்த இரண்டு பெரும் வகைகளிலும் பல கிளை வகைகள் அடங்கியிருக்கின்றன.

நடத்தையைப் பெரும் வகைகளாகவும் பல கிளை வகைக ளாகவும் செய்துவிட்டால், பிரச்சினை முடிவுற்று விடவில்லை. ஒவ்வொரு வகையும் வேறுபட்ட பிரச்சினைகளை எழுப்புகின்றது.

எனவே, அவற்றிற்கு ஏற்பச் சரியான முறைகளையும் வகுக்க வேண்டும். உதாரணமாக, எளிதில் ஏற்கின்ற ஆற்றல்கள் என்பவை பல்வேறுபட்ட புலனுணர்ச்சிகளைத்தான் குறிக்கின்றன. உளவியலில் பொதுவாக அறியப்படுபவை எட்டு புலனுணர்ச்சிகளாகும். அவை மோப்பப் புலனுணர்ச்சி, சுவைப் புலனுணர்ச்சி, தொடு புலனுணர்ச்சி. கேள்விப் புலனுணர்ச்சி, பார்வைப் புலனுணர்ச்சி, தசைப் புலனுணர்ச்சி, உள்புலனுணர்ச்சி, நிலையியக்கப் புலனுணர்ச்சி என்பவை. இவற்றையெல்லாம் தனித்தனி முறைகளின்மூலமே அறிய முடியும்.

எனவே, ஒவ்வோர் ஆற்றலையும் பகுத்தாராயும்போது மிகவும் பொதுவான சில பிரச்சினைகள் தோன்றுகின்றன. அவற்றை மூன்று வகைகளில் அடக்குகின்றனர். அவை பயனுள்ள தூண்டல்களுக்கான உணர்ச்சித் திறமையின் (sensitivity) வீச்சு, தூண்டல்களைப் பிரித்தறிதல், இயல்பான புலன்காட்சி வாழ்க்கையில் ஒரே பொருளைப்பற்றிய புலனுணர்ச்சியின் முக்கியத்துவம் என்பவை.

மிருகங்கள் மனிதர்களைப் போன்று கேள்விப்புலனிலுள்ள பல்வேறு குணப்பண்புகளையும் பார்வையிலுள்ள குணப்பண்புகளையும் கண்டறிந்து வேறுபாடுகளைப் பிரித்தறிய முடியுமா? ஒலி ஏற்படுகின்ற இடத்தைச் சரிநுட்பமாக மிருகங்கள் கண்டறிந்து துலங்க முடியுமா? இந்தப் பிரச்சினைகள் தோன்றும் போது அவற்றிற்கு ஏற்ற முறைகளைக் கண்டறிய வேண்டும். மேலும், மிருகங்களிடம் அகக் காட்சியைக் (Introspection) கேட்டறிய முடியாது. அவற்றையும் வெளிப்படுத்த முடியாது. எனவே, எளிதில் ஏற்கின்ற பல ஆற்றல்களைப் பொருத்தமட்டில் தலையாயப் பிரச்சினை என்னவென்றால், மிருகங்களின் வாழ்க்கை முறை பற்றிய பொருத்தமான அறிவை அவற்றினுடைய இயற்கையான இருப்பிடத்தில் இருந்தே பெறுவதுதான்.

எனவே, இப்படிப்பட்ட ஒரு பின்னணிச் சூழ்நிலை, ஊக்கமூட்டி, கற்றல், நுண்ணறிவு ஆகியவற்றை அளவிடுவதற்குத் தேவைப்படுகின்றது. அந்தப் பின்னணிச் சூழ்நிலையில் பொருத்தமான ஆய்வுக்கூட நிலைமைகளை ஒழுங்குபடுத்த முடியும். இந்தத் துறைகளைப்பற்றி அடுத்துத் தொடரும் அத்தியாயங்களில் விரிவாகக் காணலாம்.

ஆராய்ச்சி முறைகள்

இங்கு நாம் கூறவிருக்கின்ற முறைகள் பொதுவாக எல்லா அறிவியல்களுக்கும் பொருந்தக்கூடியவையாகும். எனவே, அவை

எல்லா உளவியல் துறைகளுக்கும் குறிப்பாக மிருக உளவியல் துறைக்கும் பொருந்தக்கூடியவையாகும். அவை உராய்வும் பரிசோதனையும், பிறப்பு மரபியல் பாகுபாடு, ஒப்புமை இணைப்பு என்பவை. ஆனால், உண்மையான செயல் சார்ந்த நடவடிக்கைகளில் இந்த முறைகளின்மூலம் நடத்தும் ஆராய்ச்சி களில் மிகுந்த வேற்றுமைகள் காணப்படுவதில்லை. அவை முறை களிலும் பொருளடக்கத்திலும் ஒன்றையொன்று தழுவி நிற் கின்றன; என்றாலும் செயல்படுத்துவதிலும், செய்திப்பொருள் களைச் சேகரிப்பதிலும் ஒன்றுக்கொன்று வேறுபாடுகளைக்கொண் டிருக்கின்றன என்பதைக் காணலாம்.

உராய்வு முறையும் பரிசோதனை முறையும் ; மற்ற அறிவியல் களில் நடைபெறுவது போலவே மிருக உளவியலிலும் உராய்வு முறையும், பரிசோதனை முறையும் முக்கிய பங்கேற்றுள்ளன. மிருக நடத்தையின் எல்லா ஆராய்ச்சிகளிலும் இந்தப் பொதுவான அடிப்படை முறை பயன்படுத்தப்பட வேண்டும். ஏனென்றால், இம் முறையின்மூலந்தான் உறுதியான உண்மைகளைச் சேகரிக்க முடியும். ஆய்வுக்கூடக் கட்டுப்பாடுகளை உபயோகப்படுத்துவதில் உராய்வு முறையிலிருந்து பரிசோதனை முறை வேறுபடுகின்றது. ஏனென்றால், பரிசோதனை முறை தன்னுடைய முடிவுகளைச் சரி நுட்பமாகவும் மிகவும் குறிப்பாகவும் தருகின்றது.

தூண்டல் இம் முறையில் சரியாக வரையறுக்கப்படுகின்றது. எல்லா வகையான கவனச் சிதைவுகளும் தவிர்க்கப்படுகின்றன. தூண்டல்களுக்கான துலங்கல்கள் உறுதியாகவும் சரிநுட்பமாகவு மிருக்கின்றன. ஒலி கட்டுப்பாடு அறைகளையும், இருளறைகளையும், தானே இயங்கும் தூண்டல்களையும், பரிசோதனை செய்யப்படு கின்ற மிருகத்தின் உரிமையைக் கட்டுப்படுத்தும் கருவிகளையும், இவை போன்ற பல்வேறு சோதனைக்கூடப் பொறியமைப்புகளையும் உபயோகித்துப் பரிசோதனையில் கட்டுப்பாட்டை உண்டாக்கலாம்.

மேலும், இயற்கைச் சூழ்நிலையில் நிகழ முடியாத குறிப்பிட்ட பிரச்சினையையும் அமைத்துக் காட்டலாம். அந்தச் சூழ்நிலையில் பரிசோதனையைத் திருப்பித் திருப்பிச் செய்து, புள்ளி விவரப்படி நிறைவான முடிவுகளைப் பெறும் வரையில் சோதனையைத் தொடரலாம்.

ஆனால், பெரும்பாலான எதிர்வினை ஆற்றல்கள் ஒழுங்கு முறையான கள ஆய்வு முறைப்படிதான் ஆராயப்பட வேண்டும். குறிப்பாக, இம் முறையைப் பாதுகாப்பு நடத்தை, முழு நடத்தை,

இனவிருத்தி நடத்தை முதலியவற்றை ஆராய்வதில் உபயோகிக்க வேண்டும். உராய்வு முறையும் பரிசோதனை முறையும் முடிவுகளைத் தரும் படித்தரத்தில்தான் வேறுபடுகின்றனவேயன்றி, ஒன்றுக்கொன்று குறை நிரப்பும் கருவிகளாகவும் இவை பயன்பட்டு வருகின்றன.

பிறப்பு மரபியல் முறை : பொது உளவியல் முறைகளை அறியும்போதும் பிறப்பு மரபியல் (Genetic) முறை கூறப்படுவதை நாம் காணலாம். அங்கு மனிதர்களின் நடத்தையை அறிவதற்கு உபயோகிக்கப்பட்டது. அதே முறையில் மிருகங்களின் நடத்தைக்கும் இம் முறை பெரிதும் பயன்படுகின்றது. வாழ்க்கையின் காலம் முழுவதும் நடத்தைக்களஞ்சியத்தில் தொடர்ச்சியான மாற்றங்கள் நிகழ்வதுதான் இங்கு மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கின்றது. தொடக்கக் காலத்தில் தோன்றுகின்ற ஒவ்வொரு நடவடிக்கையின் காலமும் இதில் அடங்கியிருக்கின்றது. தவிர, முதிர்ச்சிக்காலத்திலும், அதன் பிறகு ஏற்படுகின்ற வீழ்ச்சிக்காலத்திலும் ஏற்படுகின்ற வேறுபாடுகளைப் பதிவு செய்வதும் இம் முறையில் அடங்குகின்றது.

உண்மையான நடைமுறையில் மிருகங்களிடம் பிறப்பு மரபியல் பாகுபாடு குமரப்பருவத்திற்குப் பிறகு மிக அரிதாகவே உபயோகிக்கப்படுகின்றது. ஏனென்றால், இளமைப்பருவக் காலத்து வளர்ச்சிதான் ஆராய்ச்சிக்கு மிகவும் அனுகூலமாகவும் கவர்ச்சிகரமாகவுமிருக்கின்றது. மேலும், இந்தப் பருவத்தில்தான் மரபுநிலைக் கூறுகளும், சூழ்நிலைக் கூறுகளும் கொண்டுள்ள ஆதிக்கம் சம்பந்தமான சிறந்த சான்றுகள் காணப்படுகின்றன. நடைமுறை இவ்வாறு இருந்தாலும் முழு பிறப்பு மரபியல் முறை உயிரினங்களின் முழு வாழ்க்கையையும் தழுவி நிற்கின்றது.

பிறப்பு மரபியல் சில சமயங்களில் உராய்வு முறையையும், சில சமயங்களில் பரிசோதனை முறையையும் உண்டாக்கிக் கொண்டிருக்கின்றது. எவ்வாறிருப்பினும், உராய்வு முறையையும் பரிசோதனை முறையையும் உபயோகிக்கின்றபோது பிரச்சினைகளும், நோக்கு வாய்ப்புகளும் வழக்கமான ஆராய்ச்சிகளிலிருந்து மிகவும் மாறுபடுகின்றன. நடத்தை வாழ்க்கைச் சுழற்சியை ஒரு பொதுக்கருத்தாக உயிரினங்களுக்கு உருவாக்கும் முயற்சியில் பிறப்பு மரபியல் பாகுபாடு, மிகுமுயற்சி, பால், வயது போன்ற வேற்றுமைகளையும் கணக்கிட வேண்டும்.

ஒப்புமை இணைப்பு முறை : மிருக இனங்களின் நடத்தை முழுவதையும் அகன்ற பரிணாம முறைப்படி அணுகும்போது ஒப்புமை

இணைப்பு முறை பொருத்தமாகத் தெரிகின்றது. இம் முறை இனங்கள், ஒழுங்குகள், வகுப்புகள் முதலிய குழுக்களின் நடத்தை மட்டத்தில் ஒப்புமை காண்பதாக இருக்கின்றது. அத் தகைய ஒப்புமை ஒரு சில நேச உறவுள்ள இனங்களுக்கு மட்டும் எல்லை வரம்பு செய்யலாம்; அல்லது அதைப் பெரும் குழுக் களுக்கும் விரிவுபடுத்திச் செல்லலாம். ஒப்புமை முறை ஒரு தனி நடவடிக்கைக்கும் குறுகிச் செல்லலாம். உதாரணமாக, காணும் திறம் (vision) என்ற ஒரு நடவடிக்கையிலிருந்து விரிந்து சென்று நடத்தையை முற்றிலும் இணைக்கின்ற நிலை வரையில் செல்லலாம். நடத்தை முற்றிலும் விரிந்து செல்லுவதைப் பொது நுண்ணறிவு என்றும் குறிப்பிடுகின்றனர். எனவே, ஒப்புமை இணைப்பு என்பது, நடத்தை ஆற்றல்களில் அடங்கியுள்ள எல்லா இணைக் குழு வேற்றுமைகளையும் கணக்கிடுதல் என்பதாகும். ஒப்புமை இணைப்பு முறையின் முக்கிய நோக்கம் என்னவென்றால், வயதுக்கு வயது மிருகங்களின் அமைப்புச்சிக்கல் அதிகரித்து வருகின்றது. அந்த மாற்றத்தை அடிப்படையாகக்கொண்டு நடத்தைச்சிக்கல் அதிகரித்து வருவதை அடையாளம் காணமுடியும் என்பது ஒரு நம்பிக்கையாக இருந்து வருகின்றது.

இஃது இறுதியில் மிக எளிய உயிரினத்திலிருந்து மிக உயர்ந்த உயிரினமான மனிதன் வரையில் எல்லா உயிரினத்தையும் உள்ளடக்கிக்கொண்டு விடுகின்றது. எனவே, பொது நுண்ணறிவின் பரிணமத்தையும் விரிந்த ஒப்புமை இணைப்பில் உள்ளடக்குகின்றனர். அப்படிப்பட்ட இணைப்பு, நடத்தைச் சிக்கலின் எல்லா மட்டத்திலும் மிருக வகைகளின் பிரதிநிதிகளின் மீது விரிவாகவும் ஆழமாகவும் ஆராய்ச்சி நடத்தக்கூடியதாக இருக்க வேண்டும். இந்தக் கட்டம் இறுதியானதாகவும் மிருக உளவியலின் குறிக்கோளை அடைவதற்கு உதவி புரிவதாகவு மிருக்கின்றது. ஆனால், இதுநாள் வரையிலும் குறிக்கோளை அடைவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. ஒப் புமைப் பாகுபாடு சில அடிப்படையான சிரமங்களை வெளிப் படுத்துகின்றது. அவை இத் துறையில் ஏற்படும் ஒழுங்கு முறையான முன்னேற்றத்தைத் தடுக்கக்கூடியவையாக இருக் கின்றன. அவற்றில் மிக முக்கியமானது, மிருக வகைகளிடையே யுள்ள செயல்முறையிலும் அமைப்பிலும் காணப்படும் விரிந்த வேற்றுமையிலிருந்து உருவாகின்றதைக் குறிப்பிடலாம்.

இந்த வேற்றுமைகளெல்லாம் எதிர்வினை இயந்திர நுட்பங் களோடு தொடர்பு கொண்டிருப்பதால் மிகவும் குறிப்பிடத் தக்கவை என்று கருதப்படுகின்றன. இந்த எதிர்வினை இயந்திர

நுட்பங்களின்மீதுதான் எல்லா நடவடிக்கைகளும் சார்புடையவை யாக இருக்கின்றன. உதாரணமாக, சில மிருகங்கள் நகருகின்றன, சில நடக்கின்றன, சில நீந்துகின்றன, மற்றும் சில பறக்கின்றன. இந்த வகையான மிருகங்களையெல்லாம் பரிசோதனை செய்வதற்கான கருவிகளை உருவாக்குவது மிகவும் சிரமமாகும். ஒப்புமை செய்யப்பட வேண்டிய மிருக இனங்களிடம் ஒரே பிரச்சினையை வைக்க வேண்டும். நடத்தை மட்டத்தில் வேற்றுமைகள் சம்பந்தமாக உண்மையான முடிவுகளைப் பெற வேண்டுமானால், இந்த வழிதான் சிறந்ததாகும். மேலும், அந்தச் சோதனை நிலைமைகள் எல்லா மிருக இனங்களுக்கும் ஒரே மாதிரி இருக்க வேண்டும். ஒப்புமை இணைப்பு முறையின்மூலம் உண்மையான முன்னேற்றத்தை உண்டாக்குவதற்கு முன்பு ஒத்துக்கொள்ளத் தக்க வகைகளின் வேறுபாட்டைச் சோதிப்பதற்கு ஏற்றதான கருவியை உருவாக்கி வரையளவு செய்ய வேண்டும்.

இன்றைய நோக்கம்: இன்றைய உளவியலாரின் நோக்கமெல்லாம் கள ஆய்வு முறையைவிட்டு, ஆய்வுக்கூட ஆராய்ச்சிகளில் அதிகமாக ஈடுபடுவதாகவே இருக்கின்றன. ஏனென்றால், பரிசோதனை முறைகளை வளர்ப்பதுதான் இன்றைய இயக்கத்தின் முக்கிய காரணமாக இருக்கின்றது. மேலும், கள ஆய்வு முறை இயற்கை அறிவியலாருக்கு உரியது என்றும், அது முதல் வகை முக்கியத்துவம் வாய்ந்ததன்று என்றும் ஒரு கருத்து வழக்கத்திலிருந்து வருகின்றது. மேலும், ஆய்வுக்கூட ஆராய்ச்சிக்கு மிகவும் ஏற்றதான தலைப்புகள் உளவியலுக்குரியவையாக இருப்பதோடு மனிதர்களுக்கான துறைகளோடு தொடர்புள்ளவையாக இருக்கின்றன.

அந்தத் தலைப்புகள் மூன்று வகைகளில் அடங்குகின்றன. அவை எளிதாக ஏற்கின்ற ஆற்றல்கள், ஊக்கமூட்டி, கற்றலும் நுண்ணறிவும் என்பவை. ஆய்வுக்கூட ஆராய்ச்சிகள் விரிந்த ஒழுங்கு முறையைத் தோற்றுவிக்க வழி வகுக்கின்றன என்பதற்கான குறிப்புகள் காணப்படுகின்றன. இஃது உயர்ந்த மிருகங்களைப் பற்றியும், மற்ற மிருகங்களைப்பற்றியும் மிக விரிந்த பல கள ஆய்வுகளை அதிகரிப்பதற்கான கருத்தை வெளியிடுகின்றது. ஆராய்ச்சியில் இன்னும் குறுகிச் செல்லக்கூடிய முறையின் செல்வாக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இவையெல்லாம் காட்டுகின்ற குறிப்பு என்னவென்றால், இத் துறைகளில் முன்னேறி வருகின்ற அறிவு மனித உளவியலில் மிகச் சிறந்த அறிவு வளர்ச்சியை உண்டாக்க முடியும் என்பதாகும்.

எவ்வாறிருப்பினும், நடத்தைப் பிரச்சினைகளில் உயிரியலார் தனிக் கவர்ச்சி கொள்ளுவதால் முதுகெலும்புள்ள உயர்ந்த மிருகங்களின் நடவடிக்கைகளையும், தாழ்ந்த மிருகங்களின் நடவடிக்கைகளையும் ஆராய்ச்சி செய்யும்படி அவர்களுக்கு விடப்பட்டிருக்கின்றது. இப்பொழுது காணப்படுகின்ற அறிகுறிகளைக் காணும்போது இந்த நிலைமை மேற்கொண்டு தொடர்ந்து செல்லும் என்று தோன்றுகின்றது. இன்றைய ஆய்வுக்கூடத்திலிருந்து வெளிவரும் செய்திகளும் உண்மைகளும் மிருக உளவியல் துறையிலுள்ள பொதுப் பிரச்சினைகள் சம்பந்தமாகத்தானிருக்கின்றன. எனவே, நோக்கம் என்னவென்றால், எல்லா உயிரினங்களுக்கும் உபயோகப்படுத்தக்கூடிய ஒரு பொதுக் கோட்பாட்டை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் கற்றல் செயல்முறையை விரிவாகப் பாகுபாடு செய்வதாகும்.

குட்டி போட்டுப் பால் கொடுக்கும் உயர்ந்த மிருகங்களான பூனைகள், நாய்கள், குரங்குகள், வாலில்லாக் குரங்குகள் ஆகியவற்றின் மீது நடத்தப்படுகின்ற ஆராய்ச்சி மனிதர்களின் கற்றல் செயல்முறையின் இயல்பின்மீது அறிவொளியை வீசக்கூடும் என்று நம்புவது பொருத்தமாக இருக்கின்றது. மேலும், உயர்ந்த மிருகங்களின்மீது நடத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள், வலியுறுத்தி வந்த உண்மைகள் பூனையின் நடத்தையின்மீது கொண்டிருந்த உண்மைகளும் கருத்துகளும் திருத்தப்படுவதற்குக் காரணமாக இருந்திருக்கின்றன.

மிருக உளவியலார்களும் மற்றையோரும் மிருகங்களைப் பரிசோதனைப் பொருளாகத்தேர்ந்தெடுப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. மிருகங்கள் பல அறிவியல் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றன. எல்லாப் பிரச்சினைகளுக்கும் பொதுவான காரணம் என்னவென்றால், பரிசோதனையாளர்கள் மனிதர்களைப் பரிசோதனைப் பொருளாக உபயோகிப்பதைவிட மிருகங்களை உபயோகிப்பதில் அதிகமான கட்டுப்பாட்டைப் பரிசோதனைச் சூழ்நிலையில் உபயோகிக்க முடியும்.

உதாரணமாக, பரிசோதனையாளர் மிருகங்களை அவற்றின் வாழ்நாள் முழுவதும் பரிசோதனைப் பொருளாக உபயோகிக்க முடியும்; ஒவ்வொரு கட்டத்திலும் ஏற்படுகின்ற உணர்ச்சிகளையும் மாற்றங்களையும் சரியாகக் கவனிக்க முடியும்; அவற்றை ஆய்வுக்கூடச் சூழ்நிலையில் வேண்டியபடி மாற்றியமைக்கலாம்; முக்கிய உறுப்புகளில் அறுவை சிகிச்சைகளும் செய்து பார்க்கலாம். ஆனால், இவற்றையெல்லாம் பரிசோதனையாளர் மனிதர்களிடம் செய்ய முடியாது.

மேலும், பரிசோதனை முறைகளின்மூலம் மிருகங்களிடம் பிறப்புக்கு முன்புள்ள நிலைமைகளிலும் கட்டுப்பாட்டையும் மாற்றத்தையும் உண்டாக்கலாம். பரிசோதனையாளர் மிருகங் களின் உணவுகளில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தலாம். ஊக்க மூட்டியை நிர்ணயிக்கின்ற கூறுகளில் கட்டுப்பாட்டை உண்டாக்க லாம். மிருகத்திற்கு வேண்டிய தண்ணீரைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்து அதனுடைய நடத்தையை ஆராயலாம். இவை மட்டுமன்றி, புலனுணர்ச்சிகளிலும் மாற்றங்களைச் செய்து ஆராயலாம். எனவே, இன்று வளர்ந்து வருகின்ற ஆய்வுக்கூடப் பரிசோதனை முறை மிருக உளவியல் துறையில் மட்டுமன்றி மனித உளவியல் துறையிலும் மற்றத் துறையிலும் சரியான அறிவு விளக்கத்தைப் 'பெறுவதற்குப் பெருந்துணை செய்யும் என்று உறுதியாக நம்பலாம்.

பரிசோதனை முறைகளை மிருகங்களின்மீது உபயோகிப்பதை விட்டு மனிதர்களின்மீது உபயோகித்துக்கொண்டிருப்போமானால், நூறு ஆண்டுகள் ஆனாலும் பரிசோதனைகளை நாம் நிறைவுபடுத்த முடியாது. ஆனால், இப்பொழுது கடைப்பிடித்து வரும் முறையில் சிக்கலான உயிரினங்களின் நடத்தைகளையும் எளிதாக்க முடியும். கிடைக்கின்ற உண்மைகளை மனிதர்களுக்கு விரிவுபடுத்துவதில் எந்த வகையான சிரமமும் ஏற்படுவதில்லை.

2. எளிதில் ஏற்கின்ற ஆற்றல்கள்

எளிதில் ஏற்கின்ற ஆற்றல்கள் என்று கூறப்படுபவை புலனுணர்ச்சிகள்தான் என்பதை முன்பே கண்டோம். அவற்றைப் பற்றி இங்கு நாம் சற்று விளக்கமாக ஆராய்வோம். எனவே, புலனுணர்ச்சிகளைப் பாகுபாடு செய்து மிருகங்களின் வாழ்க்கைச் செயல்களில் புலனுணர்ச்சிகளின் பங்கு என்ன என்பதை நிர்ணயம் செய்ய வேண்டும். உதாரணமாக, சுவை, மோப்பம், கேட்டல், பார்த்தல், தொடுதல் முதலிய புலனுணர்ச்சிகள் மிருகங்களின் நடத்தையில் என்ன விளைவுகளை ஏற்படுத்துகின்றன என்று காண்பதுதான் இங்கு நம்முடைய முக்கிய நோக்கமாகும். இந்த நல்ல முடிவை நாம் எளிதாக ஏற்கின்ற செயல்முறைகளின் உண்மைகளை ஆய்வுக்கூட அட்டவணையில் சுருக்கமாகப் பெறுவதன்மூலந்தான் அடைய முடியும். அந்தச் செயல் முறைகளைப் பிறகு இயற்கையான இருப்பிடத்தின் சிக்கலான நடத்தையோடு சோதித்துப் பார்க்க முடியும்.

இதைச் செய்து முடிக்கின்ற வரையில் ஊக்கமூட்டி, கற்றல், நுண்ணறிவு ஆகிய துறைகளில் பொருத்தமான பிரச்சினைகளை அமைப்பதும் கடினமானதாகத்தானிருக்கும். ஏனென்றால், அந்தப் பிரச்சினைகள் குறிப்பிட்ட இனங்களுடைய புலனுணர்ச்சித் தொடர்புகளோடு இசைவிளக்கம் கொள்ளுமாறு வகுத்தமைக்க வேண்டும்.

உதாரணமாக, பெரும்பாலான பறவைகளுக்கு மோப்பப் புலனுணர்ச்சி கிடையாது; சிலவற்றிற்குச் சிறிதளவே உண்டு. ஆகையினால், அவற்றின் மோப்பப் புலனுணர்ச்சியை அறிவதற்கு வழிகளை வகுப்பது நகைப்பிற்கிடமான செயலாகும். அப்படிப் பட்ட முயற்சிகள் நாய்களுக்கு மிகவும் ஏற்றவையாக இருக்கலாம். ஏனென்றால், நாய்களுக்கு மிக நுட்பமான மோப்பப் புலனறிவு

உண்டு. ஆகையினால், சிக்கலான நடத்தையின் வடிவங்களின்மீது பரிசோதனைகளை நடத்துவதற்கு முன்பு புலனுணர்ச்சிப் பாகுபாடு செய்தாக வேண்டுமென்பது மிகவும் தெளிவான உண்மையாக இருக்கின்றது.

பரிசோதனைகளின் முடிவுகள்

மிருகங்களின் புலனுணர்ச்சிகள் கருத்தளவில் விரிவாகவும், அதிகமான எண்ணிக்கையோடு பேசப்பட்டாலும் பரிசோதனை உண்மைகளைக்கொண்டு பாகுபாடு செய்தல் இன்னும் சரியாக விரிவடையவில்லை. ஒழுங்குமுறையான புலனுணர்ச்சிப் பாகுபாடு மிருக உளவியல் துறையில் இன்னும் நடத்தப்படவில்லை. முக்கியத் துறைகளில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகள் நமக்குக் கிடைத்த அளவில் இங்கு நாம் விவாதிக்கலாம்.

முதுகெலும்புள்ள மிருகங்களின் புலனுணர்ச்சி ஆற்றல்களின் பரிணமத்தின் முக்கியப் போக்குகளில் சிலவற்றையும் நாம் காணலாம். எல்லாப் புலனுணர்ச்சிகளைப்பற்றியும் தெளிவான விளக்கம் மிருக நடத்தைத் துறையில் கிடைக்கப் பெறுவது அரிதாகையால், மிகவும் முக்கியமான மூன்று புலனுணர்ச்சிகளைப் பற்றிமட்டும் காண்பது சிறப்பாக அமையும். அந்த மூன்று புலனுணர்ச்சிகள் மோப்பம், கேட்டல், பார்வை என்பவை. அந்த மூன்றும் முதுகெலும்புள்ள மிருகங்களின் புலனுணர்ச்சித் திறமைகளின் பரிணமத்தை விளக்கும் முக்கியக் கருவிகளாக இருக்கின்றன. மூளையின் அமைப்பில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் தொலைவிலுள்ள புகுவாய்கள் விரிவடைதல் சமமாக்கப்படுகின்றது. இந்த இரண்டு செய்முறைகளும் இணைந்து சென்று, நடத்தை வாழ்க்கையின் சிக்கலோடும், புலனுணர்ச்சியின் சிக்கலோடும் அதிகரித்துக் கொண்டு செல்லுகின்றன.

மோப்பப் புலன் ; மோப்பப் புலனுணர்ச்சி மீன்களிடம் மிகுந்த அளவுக்கு விரிவடைந்திருக்கின்றது. பெரும்பாலான மீன் வகைகளில் இந்தப் புலன்தான் உணவுதேடும் நடவடிக்கையாலும் மற்ற நடவடிக்கையாலும் ஆதிக்கம் வகிக்கின்றது. வாழ்க்கையின் இளமைக்காலத்தில் இருவாழ் உயிர்களிலும் இஃது உண்மையாக இருக்கின்றது. எவ்வாறேனும் முதிர்ந்த பருவத்தில் அந்த இருவாழ் உயிர்களான தவளை, தேரை முதலியவை பார்வையை உபயோகிப்பதன் காரணமாக அவற்றின் மோப்பப் புலனுணர்ச்சி குறைகின்றது. முதிர்ந்த பறவைகள், ஊர்ந்து செல்லுகின்ற உயிரினங்களைப் போன்று புலனுணர்ச்சிக் கூர்மையைப் பெற்றிருக்கின்றன. இந்த உணர்ச்சிக்கு இணையான சிக்கல் நிறைந்த

பார்வைச் செயல்முறைகள் விரிவடைகின்றபொழுது மோப்ப ஆற்றல் முற்றிலும் மறைந்து போகின்றது. பெரும்பாலான உயர்ந்த இன்றைய பறவைகளிடம் மோப்ப ஆற்றல் சிறிதுகூடக் காணப்படுவதில்லை.

குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மிருகங்கள், ஊர்ந்து செல்லும் மிருகங்களைப் போன்று மோப்ப உணர்ச்சிக்கூர்மையை ஓரளவுக்காகிலும் பெற்றிருக்கின்றன. பூமியில் வாழ்கின்ற பல மிருகங்களிடையே இந்த மோப்ப உணர்ச்சியில் மேலும் ஒரு பரிணாமம் ஏற்பட்டிருக்கின்றது என்று நம்புவதற்குக் காரணங்கள் இருக்கின்றன. நாய்களையும் அவற்றின் இன மிருகங்களையும் காணும்போது இந்தக் காரணம் புலப்படுகின்றது. மோப்ப வழி காட்டும் குறிப்புகளை அடையாளம் கண்டறியும் திறமைகளையுடைய நாய் மனிதனுடைய மோப்ப அறிவையும் மிஞ்சுகின்றது. மற்ற மிருகங்களையும்விட இவை மோப்ப உணர்ச்சியை அதிகமாகப் பெற்றிருக்கின்றன. பரிசோதனைச் சான்றுகளின்மூலம் இந்த உண்மை உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. மேலும், பூமியில் வாழ்கின்ற குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மிருகங்களின் தொலைவு வரவேற்பில் மோப்ப உணர்ச்சிதான் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருக்கின்றது.

கேள்விப்புலன் : ஒலி புலனுணர்ச்சி மீன்களிடம் மிகக் குறைவாகவே விரிவடைந்திருக்கின்றது; இல்லை என்றேகூடச் சொல்லிவிடலாம். முதுகெலும்புள்ள மிருகங்களிடம் கேட்டலின் பரிணாமத்தைக் காட்டும் உறுப்பு செவிச்சுருளாகும் (cochlea). இது படிப்படியாகச் சமநிலை உறுப்பிலிருந்து பரிணமிக்கின்றது.

கேள்விப்புலன் கூர்மை சில மிருகங்களுக்கு அதிகமாக இருக்கலாம்; சில மிருகங்களுக்குக் குறைவாக இருக்கலாம். இது பல காரணக்கூறுகளைப் பொருத்து இருக்கின்றது. மீன், தவளை, பல்லி, மனிதன் முதலிய உயிரினங்களை ஒப்புமைசெய்து பார்க்கும் போது மனிதனுக்குத்தான் கேள்விப்புலன் கூர்மை மிகுதியாக இருக்கின்றது. கேள்விப்புலனுணர்ச்சி புரு வகைகளுக்கும் பொதுவாகப் பாம்புகளுக்கும் குறைவாக இருக்கின்றது. முதலைகளுக்கும் அந்த வகையைச் சேர்ந்த மிருகங்களுக்கும் கேள்விப் புலனுணர்ச்சியுண்டு.

பறவைகளின் கேள்விப்புலனுணர்ச்சியின் வீச்சு பல்லிகளின் புலனுணர்ச்சி வீச்சுக்குச் சமமாக இருப்பதாகக் கண்டிருக்கின்றனர். குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மிருகங்களின்

கேள்விப்புலனுணர்ச்சி நன்கு வளர்ச்சியுற்றிருக்கின்றது. இந்த வகையான சில மிருகங்களின் கேள்விப்புலனுணர்ச்சியின் வீச்சு குரங்குகள், வாலில்லாக் குரங்குகள் ஆகியவற்றின் வீச்சுக்கும் மனிதர்களின் புலனுணர்ச்சி வீச்சுக்கும் சமமாக இருக்கின்றது. உயர்ந்த மிருகங்களைவிடச் சில தாழ்ந்த மிருகங்கள் குறைந்த ஒலிச் செறிவுக்குத் துலங்குகின்றன என்று தெரிகின்றது. உதாரணமாக, கினியர் பன்றியும் (guinea pig), நாயும் இதற்குச் சான்றாக இருக்கின்றன.

பார்வைப்புலன் : மற்றெல்லாப் புலன்களையும்விடப் பார்வைப் புலன் மிகவும் சிக்கலான செயல்முறையைக் கொண்டிருக்கின்றது. இந்தப் புலனுணர்ச்சிச் செயல்முறையில் கூரிய ஒளி, அளவு, வடிவம், அமைப்பு, நிறம் ஆகியவை உள்ளடங்கியிருக்கின்றன. பார்வை சார்ந்த எல்லாத் துறைகளிலும் நிறப்பார்வை பரிணாம முன்னேற்றத்திற்குச் சான்று என்று கருதப்படுகின்றது. ஏனென்றால், நிறப்பார்வை ஏற்படுவதற்கு முன்பே கண்ணின் விழித்திரை (Retina) நன்கு விரிவடைந்து உயர்ந்த செயல் திறமைக்கு ஆதரவு தருகின்றது. ஆகையினால், முதுகெலும்புள்ள மிருகங்களிடம் நிறத்தின் பரிணாமத்தைப்பற்றிமட்டும் சுட்டிக் காட்டினால் போதும் என்று சிலர் நம்புகின்றனர்.

நல்ல நீரிலுள்ள மீன்களில் சில வகைகள்தான் ஓர் எல்லைக் குட்பட்ட நிறப்பார்வை கொண்டிருக்கின்றன என்று தோன்று கின்றது. ஆனால், சாதாரண வாழ்க்கை நடவடிக்கைகளில் மிகவும் குறைந்த பயனையே அது கொண்டிருக்கின்றது. இந்தச் செயல் முறை ஊர்ந்து செல்லுகின்ற மிருகங்களிடம் உறுதியாகவும் முக்கியமாகவும் இருக்கின்றது.

பறவைகளிடம் நடத்தப்பட்ட பரிசோதனைகள், மனிதர்கள் எத்தனை நிறங்களுக்குத் துலங்குகின்றார்களோ அத்தனை நிறங் களுக்குப் பறவைகளும் துலங்குகின்றன என்று காட்டுகின்றன. இந்த உண்மை குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மிருகங்களில் குறிப்பாகக் குரங்குகளுக்கும் வாலில்லாக் குரங்குகளுக்கும் பொருந்தும் என்று நம்புகின்றனர். பூமியில் வாழ்ந்து வருகின்ற பெரும்பாலான குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மிருகங்கள் நிறக் குருடுகளாக இருக்கின்றன. இதை எலி, முயல், பூனை, நாய், பசு முதலிய மிருகங்களிடம் செயல் விளக்கம் செய்து காட்டப்பட் டிருக்கின்றது. சண்டை போடும் மைதானத்தில் காளையைக் கிளர்ச்சியுறச் செய்வது மூளையின் அசைவே தவிர, நிறமன்று. எனவே, இந்த உண்மைகள் எல்லாம் காட்டுவது என்னவென்றால்,

குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மிருகங்களில் மரத்தில் வாழும் மிருகங்களைத் தவிர, மற்றவற்றிற்கு வாழ்க்கை நடவடிக்கைகளில் பார்வை இரண்டாந்தர முக்கியத்துவந்தான் பெற்றிருக்கின்றது என்பதாகும்.

இதுகாறும் நாம் கூறிவந்தவற்றைக்கொண்டு குறிப்பிடத் தக்க ஒரு பொது முடிவை எடுத்துக்காட்டலாம். மனிதன் எல்லா வகையிலும் உயர்ந்த மிருகமாக இல்லை. அவனுடைய மோப்பப் புலனுணர்ச்சி மற்ற மிருகங்களைவிட எந்த வகையிலும் உயர்ந்த தாக இல்லை; உதாரணமாக, நாய்க்கு இருப்பதைவிடத் தாழ் வாகத்தானிருக்கின்றது. அவனுடைய கேள்விப்புலன் சில மிருகங்களைவிடச் சிறப்பாக இருக்கலாம். ஆனால், இதிலும் அவன் நாய்க்குப் பின்னால்தான் நின்றுகொண்டிருக்கின்றான்.

மனிதனுடைய பார்வைப்புலன் மற்ற மிருகங்களைவிட நல்ல முறையில் வளர்ச்சியுற்றுதானிருக்கின்றது. ஆனால், இதிலும் அவன் சில பறவைகளுக்குப் பின்னால்தானிருக்கின்றான். எனவே, இந்தச் சான்றுகளின்படி, புலனுணர்ச்சிகளின் செயல்முறை களில் மனிதன் உயர்ந்த மிருகங்களின் வரிசையில் இருக்கத் தகுதி யற்றவனாக இருக்கின்றான் என்று தெரிகின்றது.

3. மிருக நடத்தையும் ஊக்கமூட்டியும்

உளவியலார், நடத்தைக்கும் ஊக்கத்திற்கும் உள்ள தொடர்பு களைப்பற்றி விரிவாகவே ஆராய்ந்திருக்கின்றனர். மனிதர்களின் நடத்தையில் மட்டுமன்றி மிருகங்களின் நடத்தையிலும் ஊக்கி மிகவும் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது. மிருக உளவியலார் ஊக்கியின் செல்வாக்கை மிருகங்களின் நடத்தையில் மிகவும் தீவிரமாக ஆராய்ந்திருக்கின்றனர்; பரிசோதனைகளை இயற்கைச் சூழ்நிலையிலும், கட்டுப்படுத்திய சூழ்நிலையிலும் நடத்தியிருக் கின்றனர்; ஒருவகை மிருகங்களிடம் செல்வாக்குப் பெற்ற ஊக்கி மற்றொரு வகை மிருகங்களிடம் எத்தகைய செல்வாக்கைப் பெற்றிருக்கின்றது என்றும் கண்டிருக்கின்றனர்; அந்த ஆராய்ச்சி முடிவுகளை மனிதர்களிடமும் காணுவதற்கு முயற்சி செய்திருக் கின்றனர்.

மிருகங்களின் உந்துகள்

மிருகங்கள் தன்னிச்சையாகச் செல்லுகின்ற உயிரினங் களாகும். மிருகங்களுக்கு மனிதர்களைப் போன்று செயற்கை வசதிகள் கிடையா. ஒரு மிருகம் தனக்கு வேண்டியதைத் தன் னிச்சையாகவே தேடிச் சென்று பெறுகின்றது. மிருகம் தனக் கென்று உள்ளார்ந்த அமைப்பைப் பெற்றிருக்கின்றது. அந்த அமைப்பு பரிணாம முறைப்படியும், மரபு நிலையாகவும் பெறப்பட்ட தாகும். மேலும், அஃது ஒரு சிறந்த நிலையான இன வடிவத்தைப் பின்பற்றிச் செல்லுகின்றது. ஒவ்வொரு மிருக இனமும் தனக் கென்று தனியான ஓர் இன வடிவத்தைப் பின்பற்றித்தான் செல்லுகின்றது.

உதாரணமாக, பூனை, நாய், பசு, யானை ஆகிய மிருகங்கள் இந்தக் கருத்துக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இவை ஒரே தூண்டலுக்கு வெவ்வேறு விதமாகத் துலங்குகின்றன.

தூண்டலின் அடிப்படையான செயல்முறை உள் இயந்திர நுட்பங்களின் பண்புகளைச் சரியாக எடுத்துக்காட்டுவதாக இருக்கின்றது. உள் இயந்திர நுட்பங்கள்தான் தொடர்ந்து ஏற்படுகின்ற நடவடிக்கையின் படிவத்தைப் பெரிதும் நிர்ணயிக்கின்றது. அவை நடவடிக்கையின் உள்ளே அமைந்துள்ள சுருள்வில் செயல் முறையின் பிரதிநிதிகளாக இருக்கின்றன. மேலும், அவை உள்ளார்ந்ததும் நிலைத்திருக்கின்றதுமான எல்லா நடத்தைகளுக்கும் மையமாக இருக்கின்றன. பெரும்பாலான நிகழ்ச்சிகளில் முக்கியமான உயிரியல் தேவைகளோடும் விருப்பங்களோடும் அவை உறுதியான தொடர்பு கொண்டிருக்கின்றன. நடத்தையின் இந்த இயக்கப் பகுதிப்பொருள் நெடுநாள்களாக இயல்பூக்கங்கள் என்று கூறப்பட்டு வந்தன. ஆனால், அவற்றிற்கு உளவியல் துறையில் இன்று இடப்பட்டுள்ள பெயர் உந்துகள் (drives) என்பதாகும்.

ஒவ்வோர் அடிப்படை உந்து வகையும் ஒரு பொருத்தமான இயக்கி அல்லது தூண்டுபொருளால் (incentive) சாதாரணமாக நிறைவு செய்யப்படலாம். இந்தத் துறை பற்றி நாம் செய்கின்ற பாகுபாட்டின் நோக்கம் உந்துகளின் வலிமையை அளவிடுவதாகும். உதாரணமாக, பசி, தாகம், பால் போன்ற உந்துகள் அவற்றிற்குப் பொருத்தமான தூண்டுபொருள்களை அவற்றின் வலிமைகளுக்கு ஏற்ப ஏற்கின்றன. உந்துகளின் வலிமை உயிரினத்தின் தேவையின்மீது அமைந்திருக்கின்றது.

உந்துகளின் தன்மை : மிருக ஊக்கமூட்டிகளின்மீது நடத்தப்பட்டிருக்கும் ஆராய்ச்சிகள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. அதே சமயத்தில் கற்றல், நுண்ணறிவு, ஆளுமை போன்ற உளவியல் துறைகளில் ஏராளமான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. எனவே, மிருக ஊக்கமூட்டிபற்றி நமக்குக் கிடைக்கின்ற செய்திப்பொருள்களும் ஓர் எல்லைக்குட்பட்டவையாகவே இருக்கின்றன. ஏனென்றால், மிக அண்மைக்காலம் வரையிலும் உந்துகளைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்துவதற்கு ஏற்ற முறைகள் உருவாக்கப்படவில்லை. உந்துகளைப் பாகுபாடு செய்தல் மிகவும் கடினமாகும். பல்வேறு உந்துகள் நெருக்கமாகத் தொடர்புகொண்டிருக்கலாம். அவற்றைப் பிரித்துப் பாகுபாடு செய்தல் கடினம். சிலவற்றைப் பிரிக்கவும் முடியாது. எனவே, அவற்றை அளவிடுவதும் இயலாது.

மேலும், ஊக்கமூட்டிபற்றிச் சரியான ஆராய்ச்சி நடத்த வேண்டுமானால், உள்ளார்ந்த நடத்தை வகைகளைப்பற்றி நல்ல

தோர் அறிவுப் பின்னணி இருந்தாக வேண்டும். அதன் காரண மாகத்தான் இத் துறையில் நடைபெற்றுள்ள ஆராய்ச்சி செல்லாம் எல்லை வரையறைகளுக்குள்பட்டவையாக இருக் கின்றன. வெள்ளைச் சுண்டெலிகளிடம் மட்டுமே விரிவான ஆராய்ச்சிகள் இத் துறையில் நடத்த முடிந்தது. அண்மைக் காலத்தில் வெளியிடப்பட்டுள்ள நூல்கள் ஊக்கமூட்டியைச் சோதிப்பதற்கான முறைகளை விளக்குகின்றன. கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட கொலம்பியாத் தடுப்பு முறை (Columbia Obstruction Method) மிகவும் பிரபலமான தாகும்.

உந்துகளை அளவிடும் முறை : கொலம்பியாத் தடுப்பு முறை ஊக்கமூட்டியை அளவிடும் முறைகளில் ஒன்றாகும். இஃது ஒரு பெட்டி போன்ற அமைப்பைக் கொண்டது. இதில் முக்கியமாக ஒரு நுழைவு அறை மின்சட்டங்களைக் கொண்டிருக்கின்றது. மேலும், அதில் ஓர் இயக்கி அறையும், அவ்வறையில் உண்மையான இயக்கி அல்லது தூண்டுபொருளைக் கொள்ளும் ஒரு சிறு பெட்டியும் இருக்கின்றன. தூண்டப்பட்ட மிருகம் நுழைவு அறையிலிருக்கும் பொழுது மின்சட்டம் மறுபக்கமுள்ள இயக்கி அறையிலுள்ள உணவை அடையமுடியாதவாறு தடுப்பதற்குப் பயன்படுகின்றது.

மின் அதிர்ச்சியின் படித்தரம் சோதிக்கப்படுகின்ற மிருகத்தின் பருமனுக்கு ஏற்பவும் வகைக்கு ஏற்பவும் அளவாக்கப்படுகின்றது. மிதமான அல்லது ஏற்கக்கூடிய அளவு அதிர்ச்சியை உபயோகப் படுத்துவதுதான் இம் முறைப்படி நன்மை பயக்கக்கூடியதாக இருக்கின்றது. இந்த அதிர்ச்சியின் அளவு சோதனை மிருகத்தைத் தயங்க வைக்க வேண்டுமே தவிர, தூண்டிச் செல்லுவதில் மறுப்பைக் காட்டக்கூடியதாகவோ இருக்கக் கூடாது. அளவிடப் படக்கூடியதும் ஒப்புமை செய்யக்கூடியதுமான ஒவ்வோர் உந்தக்கும் உபயோகப்படுத்தப்படுகின்ற அதிர்ச்சியின் படித்தரம் ஒன்றாகவே இருக்குமானால், மேலே கூறப்பட்ட நிகழ்ச்சிதான் இயல்பாக ஏற்படும். மனிதர்களின் நுண்ணறிவுச் சோதனையில் அடங்கியுள்ள அதே கொள்கை நெறிதான் இங்கும் பின்பற்றப் படுகின்றது. தனியாள்களும் உந்துகளும் ஒரே மாதிரியான நடவடிக்கையில் பெறுகின்ற செயல் நிறைவேற்றக் கெலிப்பு எண்கள் நேரடியாக ஒப்புமை செய்யப்படுகின்றன.

சோதிக்கும் முறை உந்துக்கு உந்து மாறாமல் அதுவாகவே இருந்தாலொழியச் சோதனைக்கருவியின் முக்கியத்துவம் குறைந்து போகின்றது. மேலும், கொடுக்கப்பட்ட உந்தைத் தனிமைப்

படுத்துவதற்கும், அளவிடப்படுவதற்கும், உயர்ந்த பட்ச வலிமையைத் தூண்டுவதற்கும் மிகப்பல கட்டுப்படுத்தல்கள் தேவைப்படுகின்றன. இந்த முறையைச் சரியாக விளக்கிக் கூறுதல் எளிதுதான் என்றாலும், இதை வெள்ளை எலிகளின்மீது நடத்தப்படு கின்ற விரிவான திட்டத்தோடு இணைத்துக் காட்டுவது மிகச் சிறந்த விளக்க முறையாகத் தெரிகின்றது. கொலம்பியாப் பல்கலைக்கழக ஆய்வுக்கூடத்தில் விரிவான திட்டம் வகுக்கப்பட்டு வெள்ளை எலிகள் பரிசோதிக்கப்பட்டன.

அந்தத் திட்டத்தின் விரிந்த நோக்கம் என்னவென்றால், வெள்ளை எலிகள் போன்ற கொறிக்கும் உயிரினத்தின் அடிப்படை உந்து சிக்கலைப் பாகுபாடு செய்வதாகும். அதன்பொருட்டுச் சில உந்துகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. பசி, தாகம், பால் என்ற இந்த மூன்று உந்துகளிலும் ஆண் பெண் இனத்தைச் சேர்ந்த எலிகளும், தாய்மை உந்துக்குப் பெண் எலிகளும், ஆய்ந்து தேடுதல் உந்துக்கு இரண்டு இனமும் உபயோகப்படுத்தப்பட்டன. இந்த ஐந்து உந்து களும் இயக்கச் செயல்முறைகளுள்ளவை; அதனால் உயிரினத்திற் குரிய அடிப்படைத் தேவைகளையும் விருப்பங்களையும் உண்டாக்கக் கூடியவை.

இத் திட்டத்தின் முதல் கட்டம் முதிர்ச்சியடைந்த மிருகங் களைத் தேடிப் பிடிப்பதாகும். அவை முயற்சி, வயது, கடந்த கால அனுபவம் ஆகியவற்றில் ஒன்றாகவே இருக்க வேண்டும். இரண் டாவது கட்டத்தில் இந்த மிருகங்களிடத்தில் ஒவ்வோர் உந்துவை யும் மிகத் தாழ்ந்த மட்டத்திலிருந்து மிக உயர்ந்த மட்டம் வரையில் உறுதியான படித்தரத்தைக் காட்டும்படித் தூண்டி விடும் வழியை வகுப்பதாகும். அதனால் ஒவ்வொரு மட்டத்தி லுள்ள மிருகத்தையும் அளவிட முடியும்.

தாழ்ந்த பசி மட்டத்திலுள்ள மிருகங்களின் குழு, அவை இருக்கின்ற கூண்டுகளில் தரப்படுகின்ற உணவை நிறுத்தாம லேயே பரிசோதிக்கப்பட்டது. மற்ற குழுக்கள், 2, 3, 4, 6, 8 நாள்கள் வரையில் உணவு தரப்படாமலேயே சோதிக்கப்பட்டன. எனவே, அதிகபட்ச மட்டத்திற்கு மேற்கொண்டே சோதனைகள் நடத்தப்பட்டன. இதே வழியில் தாகத்திற்கும் உயர்ந்தபட்சக் கெலிப்பு எண்கள் நிர்ணயிக்கப்பட்டன. ஆண் எலிகளின் பால் உந்துவும் இதே போன்று சோதிக்கப்பட்டது. பெண் எலிகளின் பால் உந்து பருவச் சுழற்சியைச் சார்ந்திருக்கின்றது. நான்கு நாள்களின் இடைவெளிக்குப் பிறகு மறுபடியும் அது நிகழுகின்றது. அஃது இனவிருத்தி உறுப்புகளில் உயிரணுக்களின் மாற்றத்தோடு தொடர்பு கொண்டிருக்கின்றது.

எலிகளின் தாய்மை உந்து தாய் எலி குட்டி போட்ட சிறிது நேரத்திற்குள் சோதிக்கப்பட்டது. துருவித் தேடும் உந்தும் எலிகளிடம் சோதிக்கப்பட்டது. சிறு கூண்டுகளில் எலிகளை அடைத்து, வெளியில் செல்லும் வழியை எவ்வாறு அது கண்டறிகின்றது என்று அளவிடப்பட்டது. இந்த நிலைமைகளில் பரிசோதனையைப் பொருத்தமாகச் செய்து முடிப்பதற்குச் சுமார் ஐநூறு எலிகள் உபயோகப்படுத்தப்பட்டன.

இந்தப் பரிசோதனைகளில் அனுசரிக்கப்பட்ட மற்றொரு முக்கிய கட்டம் உண்டு. அதாவது, ஓர் உந்து தூண்டப்பட்டுப் பரிசோதிக்கப்படும்பொழுது மற்ற நான்கு உந்துகளும் அமைதியான முறையில் வைக்கப்படக்கூடிய நிலைமைகள் வரையளவு செய்யப்பட்டன. பால் உந்து அளவிடப்பட்டபோது உபயோகப் படுத்தப்பட்ட கட்டுப்படுத்தல்களின் தொடர்ச்சி குறிக்கப்பட்டு வந்தது. சோதனை செய்யப்படுகின்ற நேரம் வரையிலும் பசியோடும் தாகத்தோடும் இருக்கும் மிருகங்களுக்கு உணவும் தண்ணீரும் கிடைக்கக்கூடிய வசதி கூண்டினுள் செய்யப்பட்டிருந்தது. தாய்மை உந்து, ஆண் எலிகளை உபயோகிப்பதன்மூலமும் கர்ப்பமடையாத பெண்எலிகளை உபயோகிப்பதன்மூலமும் விலக்கப் பட்டது. சோதிக்கப்படுகின்ற நேரம் வரையில் கூண்டிலிருந்த எலி சுறுசுறுப்பாக இருக்கும்படிச் செய்து, துருவித்தேடும் உந்து அளவிடப்பட்டது. ஒழுங்கு முறையான சோதனை தொடங்குவதற்கு முன்பு இயக்கியை நான்கு முறைகள் எலிகள் மின் அதிர்ச்சி இல்லாமல் தாண்டிச்செல்ல அனுமதிக்கப்பட்டன. ஐந்தாவது முறை அதிர்ச்சி தரப்பட்டது.

இந்த முறை எலியை இயக்கித் தூண்டுவதற்கு அனுமதித்து, அதிர்ச்சியின் இடத்தைக் கண்டறியச் செய்தது. சரியான சோதனை இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு உடனே தொடரப்பட்டது. சோதனை இருபது மணித்துளி நேரம் அனுமதிக்கப்பட்டது. இந்தக் காலத்திற்குள் மின் அதிர்ச்சி தருகின்ற விட்டத்தை எலி எத்தனை முறை கடக்க முடியுமோ அத்தனை முறை அனுமதிக்கப் பட்டது. பல உந்துகளுக்கும் உபயோகிக்கப்பட்ட தூண்டு பொருள் அல்லது இயக்கி பொருத்தமாகவே இருந்தது. அதிர்ச்சியின் படித்தரமும் சோதனையின் காலத்தொடர்ச்சியும் கடைசி வரையில் ஒன்றாகவே இருந்தன. இந்தச் சோதனையின் முடிவு என்னவென்றால், எவ்வளவு அதிகமான முறைகள் விட்டத்தைத் தாண்டிச் சென்றனவோ அவ்வளவுக்கு எலியின் உந்து வலிமையாக இருக்கின்றது என்பதாகும்.

பொது நடவடிக்கை முறை: மிருகங்களின் உடற்கூற்று இயந்திர நுட்பத்தைப் பாகுபாடு செய்வதற்கு வேண்டிய செய்திப்

பொருள்கள் மிருகங்களின் உந்துகளில் அடக்கியிருப்பதைப் பொது நடவடிக்கை முறையின்மூலம் வெளிப்படுத்தலாம். இந்த முறையின் அடிப்படை நோக்கம் என்னவென்றால், பல்வேறுபட்ட உந்து நிலைமைகளில் மிருகங்களின் தன்னியல்பான நடவடிக்கையை எண்ணுதியங்கும் பொறியமைப்பின்மூலம் பதிவு செய்வதாகும். பசி உந்து இவ்வாறு செயல்விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. வயிற்றின் உள் தசைநார்கள் சுருங்கி விரிவடைவதுதான் பசி உந்து என்று விளக்கப்பட்டது.

மிருகங்களைத் தூண்டி, செயல்பட வைக்கும் இந்தச் சுருங்குதல்கள் இனத்திற்கு இனம் வலிமையிலும் காலக்கூறிலும் பெரிதும் வேறுபடுகின்றன. சந்தேகமின்றி அவை இயற்கையாக உண்ணும் தேவைகளோடு தொடர்பு கொண்டிருக்கின்றன. அத்துடன் பால் உந்து பால் உள்சுரப்பி நீர்களால்தான் என்றும் செயல் விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. பால் சார்பான சேதம் ஏதும் இல்லாத காலத்தில் பெண் எலிகளின் நடவடிக்கை குறைகின்றது. தவிர, பால், உள்சுரப்பியை ஆண் பெண் எலிகளில் நீக்கிவிட்டபோது அவற்றின் நடவடிக்கை குறிப்பிடத்தக்க அளவு குறைந்துவிடுகின்றது. ஆகவே, பாகுபாட்டின் பொதுமுறை தாய்மை உந்துவிலுள்ள உடற்கூற்று இயந்திர நுட்பத்தைச் சரியாகப் புரிந்து உதவி புரியும் என்று நம்பலாம்.

மனிதனிடம் காணப்படும் மிருக உந்து : மிருக உளவியல் துறையில் வளர்ந்து வருகின்ற அறிவு மனிதனைப்பற்றித் தெரிந்து கொள்ளுவதற்கும் விரிவாக்கப்படலாம். அடிப்படை உந்துகள் மனிதனிடத்தில் ஆழமாக இடம் பெற்றிருக்கின்றன. அவை மனித நடந்தையின் இயக்கங்களில் முக்கிய பங்கேற்கின்றன. இந்த உந்துகள் பண்பாட்டுக் கூறுகளினால் நல்ல முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக வயது வந்த மனிதனிடம் இதைக் காணலாம். ஆனால், பண்பாடுகூட உயிரியல் தேவைகளின் மீதும் விருப்பங்களின்மீதுந்தான் அமைகின்றது. குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மிருகங்களின்மீது நடத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகள் சில மனிதர்களைப்பற்றி ஆராயும் துறைக்கும் உபயோகிக்கப்பட்டன. மனித இயல்பின் அடிப்படை உயிரியல்-சமூகச் சிக்கல் மனித உருவமுடைய குரங்கு மட்டத்திலிருந்துதான் மலர்ச்சியுற்றிருக்க வேண்டும் என்ற கருத்து உண்மையாக இருக்கலாம். எனவே, உயர்ந்த மிருகங்களிடத்திலும் மனிதர்களிடத்திலும் உள்ள அடிப்படை உந்துகள் இந்த அடிப்படை உயிரியல் மரபு நிலையோடு பண்பாடு கொண்டுள்ள தொடர்புறவைச் சரியாகப் புரிந்துகொள்ள உதவலாம்.

4. கற்றலும் நுண்ணறிவும்

மிருக உளவியலில் பரிசோதனைகளை உபயோகித்து ஆராய்ச்சிகளைத் தொடங்கிய காலத்திலேயே கற்றலும் நுண்ணறிவும் என்ற இந்தப் பொதுக் கருத்துகள் மிருக உளவியலாரின் தனிக் கவர்ச்சிகளாக இருந்து வந்திருக்கின்றன. ஆய்வுக்கூடங்களில் ஆராய்ச்சிகளை நடத்துவதற்குச் சோதனைகள் மிகவும் பயனுடையவையாக இருப்பதால், இந்தக் கருத்துகளின்மீதும் அம் முறைகள் உபயோகிக்கப்பட வேண்டும் என்ற போக்கு அதிகரித்து வருகின்றது. உண்மையில் கற்றலும் நுண்ணறிவும் இரு வேறு ஆராய்ச்சி வழிகளைக்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு துறையும் தனக்கென்று தனிப் பிரச்சினைகளைக்கொண்டிருக்கின்றது; அதே போன்று தனி முறைகளையும் தொழில் நுட்பங்களையும் உபயோகிக்கின்றது. ஆனால், இந்த இரண்டு துறைகளின் உண்மைகளையும் ஒப்புமைசெய்து காட்டுகின்றனர் சிலர். கருத்துகளைத் தெளிவுபடுத்தும்பொருட்டு இந்த இரண்டு துறைகளையும் தனித்தனியே நடத்திச் செல்லுதல் பொருந்தும்.

கற்றல் செயல்முறைகள்

மிருக உளவியலிலும், பொது உளவியலிலும், கல்வி உளவியலிலும் மிக அதிகமான ஆராய்ச்சிகளைக்கொண்ட சில தலைப்புகளில் கற்றலும் ஒன்றாகும். கற்றல் தனித் துறையாகவும் சிலரால் நடத்தப்பட்டு வருகின்றது. கற்றல் தலைப்பு இன்றிக் கல்வி உளவியலும் மிருக உளவியலும் இருக்க முடியாது. அந்த அளவுக்கு முக்கியத்துவம் பெற்ற துறையாகக் கற்றல் இருக்கின்றது. எனவே, கற்றல், நிலைநிறுத்தல் ஆகிய செயல்முறைகளின் இயல்பைப்பற்றி மிக விரிவான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. அவை இந்தப் பொது ஆராய்ச்சித் துறையில் அடங்குகின்றன.

இத் துறையில் மிக அதிகமான ஆராய்ச்சிகள் எலிகளின்மீதும் வெள்ளை எலிகளின்மீதும் நடத்தப்பட்டிருக்கின்றன. எளிய சிக்க

லறைகளும் பிரச்சினைப்பெட்டிகளும் அந்த ஆராய்ச்சிகளில் உபயோகிக்கப்பட்டன. இதனால் இந்த மிருக இன நடத்தையின் மீதுதான் மிருக உளவியலார் அடிப்படையாக அக்கறை கொண்டிருக்கின்றனர் என்று கருதத் தேவையில்லை. கற்றல் செயல் முறையைப் பாகுபாடு செய்வதற்கு மட்டுமே இந்த உயிரினம் பெரிதும் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கின்றன. உடற்கூற்று வல்லுநர்கள் தவளைகளின்மீது அதிகமான கவனத்தைச் செலுத்தி, அவற்றின் மறிவினைச் செயல்களை ஆராய்வது போன்று மிருக உளவியலாரும் எலிகளின்மீது மிகுந்த கவனத்தைச் செலுத்தி, அவற்றின் கற்றல் நடவடிக்கைகளை ஆராய்ச்சி செய்து வந்தனர். உண்மையில் மனிதர்களின் கற்றல் நடவடிக்கையில் உள்ள பிரச்சினைகளில் ஒன்றுகூட எலிகளின் கற்றல் நடவடிக்கையின்மீது நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளிலிருந்து தப்பி விடவில்லை. எல்லாப் பிரச்சினைகளுமே பரிசோதனை செய்யப்பட்டு விட்டன.

இத் துறையில் நடத்தப்பட்ட ஆராய்ச்சி முடிவுகளைக்கொண்டு கற்றல் நடவடிக்கையைப் பாகுபாடு செய்வோமானால், பயனுறுதியான கற்றலைச் செய்ய வல்ல நிலைமைகள் எலிகளுக்கும் மனிதர்களுக்கும் ஒன்றாகத்தானிருக்கின்றன. எனவே, இதிலிருந்து நாம் பெறுகின்ற உண்மை என்னவென்றால், கற்றலின் அடிப்படைக் கூறுகளை எல்லா உயிரினங்களுக்கும் பொது விதியாக்கலாம் என்ற கருத்தைப் பெறுவதாக இருக்கின்றது. எனவே, இத் துறையில் பரிசோதனைகள் நடத்துவதற்காகப் பொதுவாக உபயோகப்படுத்தப்பட்டு வரும் முறைகள் சிலவற்றை இங்குக் குறிப்பிடுவது சிறப்பைத் தரலாம்.

சிக்கலறையைக் கடத்தல் : சிக்கலறை என்பது ஒரு சோதனைக் கருவி என்றும், அஃது எலிகளின் நடத்தையை அறிவதற்கென்றே உருவாக்கப்பட்டதென்றும் முன்பே கண்டோம். அதனுடைய பயனுறுதித்திறம் அதை ஒரு முறையாகவே ஆக்கிவிட்டது. எனவே, எலிகளின் கற்றல் நடவடிக்கைகளை ஆராயும்போது சிக்கலறை முறையை முதன்மையாக எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

சிக்கலறை என்று கூறும்போது அஃது ஒரு குறிப்பிட்ட கருவியை மட்டும் குறிப்பிடவில்லை. பல வகையான சிக்கலறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றில் சில வகைகள் தான் அடிக்கடி உபயோகத்திலிருந்து வருகின்றன. சிக்கலறையைக் கடக்கும் பழக்கம் ஒரு நடத்தைப் படிவமாகும். இது சரியான வழியில் செல்லுவதையும், குறிக்கோளின் முடிவிலுள்ள உணவைச்

சென்றடைவதற்குக் குறுகிய வழியைக் கண்டறிவதையும் ஒத்திருக்கின்றது.

ஆனால், குறிக்கோளை நோக்கிச் செல்லுகின்ற பாதையில் பரிசோதனை மிருகம் முதலில் தப்பான வழியில் செல்லுகின்றது. ஆனால், அந்தப் பிழைபாடுகள் கற்றல் மேல்நோக்கிச் செல்லும் போது படிப்படியாகக் குறைக்கப்படுகின்றன. ஒரு முயற்சியில் எத்தனை பிழைபாடுகள் ஏற்படுகின்றன என்பதைக் கண்டறிவது தான் இச் சோதனையின் கெலிப்பு எண்ணாகும். இத்துடன் கடிகாரத்தின்மூலம் ஒரு முயற்சியை முடிப்பதற்கு ஒரு மிருகம் எவ்வளவு காலத்தை எடுத்துக்கொள்ளுகின்றது என்பதையும் கண்டறிய வேண்டும்.

பிழைபாடுகள் தவிர்க்கப்பட்டு வரும் வரிசையையும் நிர்ணயிக்க வேண்டும். பிறகு தனிப்பட்ட பிழைபாடுகளை முயற்சிக்கு முயற்சி சரிபார்க்க வேண்டும். சிக்கலறையைக் கடக்கும் பழக்கத்தில் ஏற்படும் முன்னேற்றத்தின் விகிதத்தைக் கற்றல் வளைவில் குறிப்பிட்டுக் காட்டலாம். முயற்சிகளில் ஏற்படு கின்ற பிழைகளையும் ஒவ்வொரு முயற்சிக்கும் மிருகம் எடுத்துக் கொள்ளும் காலத்தையும் கற்றல் வளைவில் குறிப்பிட்டு ஏற்பட்ட முன்னேற்றத்தைப் படமாகவும் காட்டலாம். மேலும், மிருகத் திடம் கற்றலில் ஏற்பட்ட நிலைபெற வைத்தல் அல்லது தங்குதல் எந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கின்றது என்பதையும் சோதித்துப் பார்க்கலாம். கற்றல் நடைபெற்றுச் சில வாரங்கள் அல்லது மாதங்கள் சென்ற பிறகு சிக்கலறையைக் கடக்கும் செயலை மறுபடியும் அந்த மிருகத்தினிடம் செலுத்தலாம். இந்த இடைப் பட்ட காலத்தில் மிருகத்திற்கு எந்த வகையான பயிற்சியும் அளிக்கக் கூடாது.

சிக்கலறையைக் கடக்கக் கற்றுக்கொள்ளுதல் பொதுவாக இயக்கப் பழக்கம் உருவாதல் என்று கருதப்படுகின்றது. மனிதர் களிடம் இயக்கப் பயிற்சித் திறமைகள் (motor skiils) உருவாதலையே பல வழிகளிலும் இஃது ஒத்திருக்கின்றது. பொது உளவியலில் பெரிதும் பேசப்படுகின்ற முயற்சியும் பிழைபாடும் (trail and error) என்ற கற்றல் முறை எலிகளுக்கும் பூனைகளுக்கும் உருவாக்கப்பட்ட தாகும். எனவே, எலிகளின்மீது நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளைப் பாகுபாடு செய்வோமானால், முயற்சியும் பிழைபாடும் கற்றல் செயல்முறையில் எந்த வகையான அறிவொளியை வீசியிருக் கின்றன என்பதை நாம் நன்கு காண முடியும்.

பிரச்சினைப்பெட்டி முறை: மிருக உளவியல் துறையில் பிரச்சினைப்பெட்டி முறையும் மிகவும் பொருத்தமான ஆராய்ச்சி முறையாகும். இந்தப் பிரச்சினைப்பெட்டி பல வகைகளில் உருவாக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வோர் ஆசிரியரும் ஒரு முறையில் பிரச்சினைப்பெட்டியை உருவாக்கியுள்ளனர். எல்லாப் பிரச்சினைப் பெட்டிகளிலும் பொதுவான ஒரு பொறியமைப்பு முறை உண்டு. பரிசோதிக்கப்படுகின்ற மிருகம் நெம்புகோல்களை இயக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வதன்மூலம் பசியோடு இருக்கும் மிருகம் உணவு பெற வழி ஏற்படுகின்றது. கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் மிருகம் வெளியில் தப்பிச் செல்ல வழி ஏற்படுகின்றது. இந்த இயக்கத்தைச் செய்வதற்கு அறிவும் திறமையும் தேவைப்படுகின்றன. மூக்கிலும், பாதத்திலும், மிருகத்திற்குக் கையாளும் திறமை வேண்டும்.

மேலே காட்டப்பட்ட சிக்கலறைக்கும் இந்தப் பிரச்சினைப் பெட்டிக்கும் வேறுபாடு உண்டு. இந்த வேறுபாடு அடிப்படையானதாகும். குறிக்கோளை நோக்கி மிருகம் வெறுமனே ஓடுவதற்குப் பதிலாக ஒரு புதிர்ப்பொறியை இயக்க வேண்டும். கெலிப்பு எண் செயல் நிறைவேற்றத்தின்மேல் அமைகின்றது. எடுத்துக்கொண்ட முயற்சிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு முயற்சிக்கும் எவ்வளவு நேரம் பிடித்தது, உபயோகமில்லாத இயக்கங்கள் ஆகியவை கெலிப்பு எண்களாகக் கணக்கிடப்பட்டன. காலத்தைக் கெலிப்பு எண்ணுகைக்கொண்டு கற்றல் வளைவில் மிருகத்தின் செயல் நிறைவேற்றத்தைப் படமாக்கிக் காட்டலாம். விரைந்து ஏற்படுகின்ற துலங்கல் உபயோகமற்ற முயற்சிகள் தவிர்க்கப்பட்டிருப்பதன் அறிகுறி என்று அறிய வேண்டும். பிரச்சினைப்பெட்டி முறையில் கற்ற அனுபவத்தைத் தங்க வைத்தலை அளவிடுதல் சிக்கலறையில் அளவிடப்படுவது போன்றே செய்யப்படுகின்றது.

மனிதனும் எலியும் கற்றல்: எலிகளின் கற்றல் நடவடிக்கைகளைப்பற்றி மிக விரிவாக மன் (Munn) என்ற அமெரிக்க உளவியலார் ஆராய்ந்திருக்கின்றார். இத் துறையிலுள்ள பெரும் பிரச்சினைகளின்மீது நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் உளவியலாரின் கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன. உளவியலார் மிருகங்களின் கற்றல் நடவடிக்கையில் கவனம் செலுத்துவதற்குக் காரணம் மிருகங்களையும் மனிதர்களையும் ஒத்திட்டுப் பார்க்க வேண்டுமென்பதுதான். தனியாள், வயது, முயற்சி ஆகியவற்றின் வேற்றுமைகள் கற்றல் ஆற்றலில் மனிதர்களைவிட மிருகங்களிடம் அதிகமாகக் காணப்படுகின்றன.

பரிசோதனைகளின் மற்ற உபயோகங்கள் : கற்றல் துறையில் ஏராளமான பரிசோதனைகள் மிருகங்களின்மீதும் மனிதர்களின் மீதும் நடைபெற்றிருக்கின்றன என்பதைக் கண்டோம். ஆனால், மிருக உளவியல் துறையில் நடைபெற்றுள்ள பரிசோதனைகள் மனித உளவியலார் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு வளர்ந்து சென்றுள்ளன. பிரச்சினைகள், இயக்கத்தொழில் நுட்பங்கள் ஆகியவற்றைப் பொருத்தமட்டில் இக் கருத்து மிகவும் உண்மையாக இருக்கின்றது. சில உதாரணங்களையும் இதற்குக் காட்டலாம்.

அவை, கற்றலில் புலன் செயல் முறைகளின் மதிப்பீடு, கற்றலில் மூளை, நரம்புச் செயல்முறைகளின் பாகுபாடு, கற்றல், மருந்துச் சரக்கு, களைப்பு ஆகியவற்றினால் தூண்டப்பட்ட உடற் கூற்று நிலைமைகளின்மீது ஆய்வுகள் என்பவை. இந்த மூன்று துறைகளிலும் விரிவான ஆராய்ச்சிகளை மனிதர்களின்மீது நடத்த முடியாது. ஆனால், மிருகங்களின்மீது ஒழுங்கு முறையான ஆராய்ச்சிகளை இத் துறைகளில் நடத்த முடியும். இத் துறையில் கிடைக்கப் பெற்ற முடிவுகளை மனிதர்களின்மீது நேரடியாகச் செயல்படுத்த முடியாது.

நுண்ணறிவு

நுண்ணறிவுத் துறையில் நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகள் மிருக உளவியல் துறையில் மட்டுமன்றி மனித உளவியல் துறையிலும் பல பிரச்சினைகளைத் தீர்த்திருக்கின்றன. மிருகங்களின் நுண்ணறிவை அளவிடும்பொருட்டுப் பல முறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு முறையும் தொடர்ச்சியான கடமைகளைக்கொண்டிருக்கின்றன. அச் சோதனைகள் கடினத்தில் படிப்படியாக உயர்ந்துகொண்டே செல்லும்படி உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதனால் சோதிக்கப்படுகின்ற மிருகத்தின் ஆற்றலுக்கு அப்பாலும் சோதனைகளின் கடினம் செல்லுகின்றது.

நுண்ணறிவுச் சோதனையை உபயோகிப்பதில் உள்ள அடிப்படை நோக்கம் பல்வேறுபட்ட மிருக இனங்களுக்குக் கொடுக்கப்பட்ட செயலில் மிருகங்களின் ஆற்றலின் எல்லையை நிர்ணயம் செய்வதாகும். அதன்மூலம் அம் மிருகங்களின் நுண்ணறிவு மட்டங்கள் நேரடியாக ஒப்பிடப்படுகின்றன. கற்றல் பரிசோதனைகளிடமிருந்து இது முற்றிலும் வேறுபட்டிருக்கின்றது.

மிருகங்களிடம் உபயோகப்படுத்துகின்ற சில சோதனைகள் மனிதர்களின்மீது நடத்துகின்ற நுண்ணறிவுச் சோதனைகளைப்

போன்றிருக்கின்றன. வேகம் மட்டும் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், அச் சோதனைகள் சிக்கல் நடத்தைச் செயல் முறைகளான பகுத்தறிதல், பின்பற்றல், குறியீடு, தொடர்புறவுத் துலங்கல்கள் ஆகியவற்றை அளவிடுவதற்கு வகுக்கப்பட்டன. அம் முறைகள் உயர்ந்த மிருகங்களைச் சோதிப்பதற்கென்று உருவாக்கப்பட்டவையாகும். நுண்ணறிவுத் துறையில் உபயோகிக்கப்பட்டு வரும் சில முறைகளைப்பற்றிக் காண்போம். பன்முகத்தட்டு முறை (Multiple plate method), காலம் தாழ்ந்த துலங்கல் சோதனை (Delayed expose test), பன்முக விருப்பேற்பு முறை (Multiple choice method), பின்பற்றல் சோதனை என்பவை அவற்றில் சிலவாகும்.

பன்முகத்தட்டு முறை ; இம் முறையின் முக்கிய பண்புக் கூறுகளைக் கவனிப்போம். இக் கருவி மூன்று பகுதிகளைக்கொண்டிருக்கின்றது. ஒரு நுழைவுள் பெட்டி வெளியிலுள்ள பெரும் எதிர்வினைக் கூட்டுக்குள் இட்டுச் செல்லுகின்றது. இரண்டாவது பகுதி, உணவுள்ள ஓர் உள் கூண்டு. மூன்றுவது பகுதி, மிருகத்தினால் அழுத்தப்பட வேண்டிய தட்டுகள் தரையிலிருக்கின்றன. உள் கூண்டின் கதவைத் திறந்து உணவைப் பெறும்பொருட்டு அவை இருக்கின்றன. ஒரு தட்டின்மீது அடிவைப்பதன் அடிப்படைத் துலங்கல் இங்கு உபயோகிக்கப்படுகின்றது. ஏனென்றால், அந்தப் பெரும் எண்ணிக்கையுள்ள இனத்திற்கு இது மிகவும் எளிதும் இயல்பானதுமான துவங்கலாக இருக்கின்றது.

தட்டுகள் மின் தொடர்பு கொடுக்கப்பட்டுள்ளவை. அதனால் வேண்டுமானால் மிதமான மின் அதிர்ச்சி கொடுத்து, மிருகம் தவறான தட்டைத் தாழ்த்திற்று என்று அறிகுறி காட்டலாம். வெளிக்கூடு பலமான கம்பி வலையால் ஆனது. ஒரு வழி ஒளித் திரையால் நிரப்பப்பட்டுள்ளது. அது பரிசோதனையாளரைச் சோதனைச் சூழ்நிலையிலிருந்து நீக்குகின்றது. இந்தக் கருவியை மிருகங்களின் அளவுக்கேற்ப, சிறியதாகவும் பெரியதாகவும் மாற்றியமைத்துக்கொள்ளலாம்.

இந்தக் கருவியைக்கொண்டு நடத்தும் பரிசோதனையில் முதல் கடமை என்னவென்றால், முதல் தட்டின்மீது அடி எடுத்து வைக்க மிருகம் கற்றுக்கொள்ளுவதாகும். இந்த முதல் கட்டத்தை மிருகம் நன்கு கற்றுக்கொண்ட பிறகு அடுத்தக் கட்டங்கள் சிக்கல் அதிகரித்துச் செல்லுபவையாக இருக்கின்றன. படிப்படியாக மிருகம் கற்றலில் முன்னேறும்போது ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு தட்டை அதிகரிக்கச் செய்யப்படுகின்றது. முன்னுலிருக்கும் கட்டத்தை

முற்றிலும் சரியாகக் கற்ற பிறகே அடுத்தக் கட்டத்திற்கு மிருகம் செலுத்தப்பட்டது. அடிப்படையாக உள்ள மூன்று தட்டுக் கட்டங்களையும் நன்கு கற்ற பிறகு மிருகம் அதனுடைய செல்லும் திசையைத் தட்டு ஒன்றிற்கும் மூன்றிற்கும் திருப்ப வேண்டும்.

உதாரணமாக, எட்டுப் படிவடிவத்தில் தட்டுகளின் முறை 1, 2, 3, 2, 1, 2, 3, 2 உணவுப்பெட்டிகளாக இருக்கின்றன. இந்தப் படிகளின் அமைப்பு கடினத் தன்மையில் தர வரிசையாக்கப் பட்டிருக்கின்றன. தொடங்குகின்ற முதல் படியிலும் திரும்புகின்ற நான்காவது படியிலும் பயிற்சி அதிகம் தேவைப்படுகின்றது. இந்த விதிவிலக்கு பெறுகின்ற முடிவுகளின் ஏற்புடைமையைக் குறைத்து விடுவதில்லை.

விரிவான இனங்களின் ஆற்றல் மட்டங்களை நிர்ணயிப்பதற்காக வகுக்கப்பட்ட முறைகளில் இம் முறை மிகவும் சிறந்ததென்று கருதப்படுகின்றது. ஒரு பரிசோதனையில் நான்கு இனங்களைச் சேர்ந்த மிருகங்கள் உபயோகிக்கப்பட்டன. ஒவ்வோர் இனத்திலும் ஒரு தனி மிருக இனங்கள் பெற்ற உயர்ந்த புள்ளிகள் இனத்திற்கு இனம் மாறுபடுகின்றன. இருபதிலிருந்து முப்பத்தைந்து மிருகங்கள் வரையிலுள்ள குழுக்கள் சோதிக்கப் பட்டன. கினியாப் பன்றிகளுக்கு ஒரு படியும், வெள்ளை எலிகளுக்கு இரண்டு படியும், பூனைகளுக்கு ஏழு படியும், குரங்குகளுக்கு இருபத்திரண்டு படியும் பரிசோதனையில் பெறப்பட்டது.

குமரப்பருவத்தை அடைவதற்கு முன் கட்டத்திலிருந்த மிருகங்கள்தான் பரிசோதனையில் உபயோகிக்கப்பட்டன. எனவே, ஒரே வயதுள்ள மிருகங்களாய் இருந்தன. மிருக இனங்களின் தேவைக்கேற்ப ஊக்கமூட்டி நிலைமைகள் அமைக்கப்பட்டன. அதனால் பரிசோதனையின் முடிவுகள் ஆற்றல் மட்டங்களில் இனங்களின் உண்மையான வேற்றுமைகளைப் பிரதிபலிக்கச் செய்கின்றன. சிக்கலான நடத்தையின் வரிசையமைப்பும் வெளிப் படுகின்றது. மேலே காட்டப்பட்ட புள்ளி விவரத்தில் கினியாப் பன்றிகளும், வெள்ளை எலிகளும் பூனைகளுக்கும் குரங்குகளுக்கும் பின்னால்தான் நிற்கின்றன. குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மிருகங்களிடம் இரண்டு முறையமைப்புகளிருப்பதை எடுத்துக் காட்டப் பரிசோதனைச் சான்றுகள் இருக்கின்றன. அவை இந்தப் பரிசோதனை முடிவுகளின் மதிப்பீட்டுக்கு ஆதரவு காட்டுகின்றன. மேலே காட்டப்பட்ட நான்கு வகை மிருகங்களில் குரங்குகள் தான் மிக உயர்ந்த மட்டத்தில் இருக்கின்றன.

இந்தச் சோதனை முறை, சிக்கலான நடத்தையில் உயர்ந்து செல்லும் ஆற்றல் மட்டத்தின் வரிசையை நிர்ணயிப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். அத்துடன் இச் சோதனையில் எளிய பகுத்தாய்வுகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களும் அளிக்கப்படுகின்றன. உயர்ந்த மிருகங்கள் இந்தச் சந்தர்ப்பங்களைப் பயன் படுத்துகின்றன.

காலம் தாழ்ந்த துலங்கல் சோதனை: இந்தச் சோதனையில் பொதுவாக உபயோகிக்கப்படுபவை வெள்ளை எலிகளாகும். காலம் தாழ்ந்த துலங்கல் சோதனை ஒரு கருவியாகவும், ஒரு முறையாகவும் இருக்கின்றது. இக் கருவியில் முக்கியமான பகுதி புகுவழிப் பெட்டியாகும். மேலும், அதில் ஒரு பெரிய எதிர்வினை அறையும், வேண்டும்போது வெளிச்சம் உண்டாக்கக்கூடிய சேர்ந்திருக்கின்ற மூன்று சிறு உணவுப்பெட்டிகளுமிருக்கின்றன. ஒவ்வோர் உணவுப்பெட்டிகளின் முன்னாலும் மின் அதிர்ச்சி கொடுக்கின்ற விட்டங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பிழை பாடுகளுக்குத் தண்டனை கொடுக்கும்பொருட்டு இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. வேறுபட்டபருமனுள்ள மிருகங் களுக்கு இக் கருவியை உபயோகப்படுத்தலாம். உணவுப்பெட்டி களின் எண்ணிக்கை இரண்டிலிருந்து நான்கு வரையில் செல்ல லாம். உணவுச் சூழ்நிலைகளுக்குத் துலங்கும் மிருகங்கள் நினைவுச் செய்திகளை உபயோகிப்பதில் ஆற்றலை எந்த அளவுக்குப் பயன் படுத்துகின்றன என்று ஆராயும்பொருட்டு இம் முறை உருவாக்கப் பட்டது. அந்த உணவுச் சூழ்நிலைகளுக்குத் துலங்கும்பொருட்டு மிருகங்களுக்கு ஏற்கெனவே பயிற்சி அளிக்கப்படுகின்றது.

முதலில் மிருகத்திற்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. பெட்டி களில் ஒன்றில் மின் விளக்கேற்றப்படும்போது, உணவைப் பெறும் பொருட்டு மிருகம் அப் பெட்டியை நோக்கிச் செல்லும்படி பயிற்சி அளிக்கப்படுகின்றது. பயிற்சி அளிக்கப்படும்போது முயற்சிக்கு முயற்சி ஒழுங்குமுறை மாறுகின்றது. பயிற்சியில் இந்தப் பழக்கம் நிலை நாட்டப்பட்டபோது பயிற்சி சில நிலைமை களுக்கேற்பத் தொடரப்படுகின்றது. அந்த நிலைமைகளாவன: 1. புதுவலிப்பெட்டியிலிருந்து மிருகம் வெளிவிட்டவுடன் மின் விளக்கு அணைக்கப்படுகின்றது. 2. காலம் தாழ்ந்த இடை வெளி கொடுக்கப்படுகின்றது. அதாவது, மின் விளக்கை அணைப் பதற்கும் மிருகத்தை வெளிவிடுவதற்கும் இடையில் முதலில் ஒரு நொடிப்பொழுது நேரம் இடைவெளி தரப்படுகின்றது. 3. காலம் தாழ்த்துவதன் இடைவெளியை நீட்டுவது உயர்ந்துகொண்டே செல்லுகின்றது. அதாவது, சரியான உணவுப்பெட்டியைக்

கண்டுபிடிப்பதில் மிருகம் உறுதியாகத் தவறுகின்ற நிலை ஏற்படு கின்ற வரையில் தாழ்த்துவதன் இடைவெளி நீட்டப்படுகின்றது. மிருகத்தின் துலங்கல் ஓர் உண்மையான நினைவுச் செய்தி புதுப் பிக்கப்பட்டதால்தான் என்பதைச் செயல் விளக்கம் செய்யும் பொருட்டுக் காலம்தாழ்ந்த இடைவெளியை ஏதேனும் ஒரு வழியில் மிருகத்தினிடம் பயிற்சியின் விளைவற்றுப் போகும்படிச் செய்வது அவசியமாகும். வெள்ளை எலிகள் உடல் பயிற்சியைப் பாது காக்கும் போக்குடையவையாக இருக்கின்றன என்ற உண்மையின் அடிப்படையின்மீதுதான் இந்த ஏற்பாடு செய்யப்படுகின்றது. பூனை, எலி, நாய் ஆகிய மிருகங்களிடமிருந்து சுவையான பரிசோதனை முடிவுகள் பெறப்பட்டிருக்கின்றன. இந்த மிருகங் களின்மீது இம் முறைப்படிப் பரிசோதனைகள் நடத்துப்பட்டு, அவற்றின் நினைவுச் செயல்முறைகள் கிளறிப் பார்க்கப்பட் டிருக்கின்றன.

அந்தப் பரிசோதனைகளின் முடிவுகள், பறவைகளும் குட்டி போட்டுப் பால் கொடுக்கும் மிருகங்களும் எளிய குறியீடுச் செயல் முறைகளைச் செய்கின்றன என்ற கருத்தை ஏற்பதாகக் காட்டு கின்றன. உயர்ந்த பட்சம் தாழ்ந்தும், காலக்கூறு பூனைகளுக்கும் நாய்களுக்கும் நீண்டிருக்கலாம் என்றும், எலிக்குக் குறுகியிருக்க வேண்டுமென்றும் நாம் ஊகிக்க இடம் ஏற்படுகின்றது. ஆனால், பரிசோதனை முடிவுகள் இந்த ஊகத்திற்கு ஆதரவு தருவதாகத் தெரியவில்லை. வெளிப்படையாகத் தெரிகின்ற உண்மை என்ன வென்றால், ஒவ்வொரு மிருகத்திற்கு உபயோகிக்கின்ற தொழில் நுட்பம் குறிப்பிடத் தகுந்த அளவில் வேறுபடுகின்றது என்ப தாகும். மூன்று பெட்டிகளைக்கொண்ட கருவி மூலம் பரிசோதனை நடத்திப் பார்த்தபோது வெள்ளை எலியின்மீது சுமார் நாற்பத் தெட்டு விநாடிப்பொழுது காலம் தாழ்த்தியிருப்பதாகப் பரிசோதனை காட்டுகின்றது. இஃது உடற்பயிற்சி நீக்கப்பட்ட பிறகு நடைபெற்ற நிகழ்ச்சியாகும். நாய்க்குப் பதினைந்து விநாடிப் பொழுது என்றும் கண்டனர். அதாவது, எலியும் நாயும் உடற் பயிற்சி நீக்கப்பட்ட பிறகு நாற்பத்தெட்டு விநாடிப்பொழுதும் பதினைந்து விநாடிப்பொழுதும் காலம் தாழ்த்தி மிருகத்தை வெளி விட்டபோதும் சரியாகத் துலங்கின என்பதாகும். இந்த உண்மையை அடிப்படையாகக்கொண்டு உயர்ந்த பட்சக் காலம் தாழ்த்தலுக்கும் நுண்ணறிவு மட்டத்திற்கும் இணைப்புப் பொருத்தப்பாடு உயர்ந்திருக்கும் என்று நம்பலாம். அதன் பொருட்டுப் பரிசோதனைகள் சீரான நிலைமைகளில் நடத்தப்பட வேண்டும்.

பன்முக விருப்பேற்பு முறை : மிருகங்களிடம் கருத்தியல்பான நடத்தை இருக்குமானல், அதை வெளிக்கொண்டு வரும்பொருட்டு எர்க்கிஸ் (Yerkes) என்பவர் இந்த முறையைக் கண்டுபிடித்தார். மிருகங்களின் பருமனுக்கேற்ப இந்த முறையில் உபயோகிக்கப் படும் கருவியை மாற்றியமைத்துக்கொள்ளலாம். அஃது இந்தக் கருவியின் பொதுத் திட்டமாகும். பிரச்சினைக்கு ஏற்ப இக் கருவியின் அறைகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ளலாம் அல்லது அதிகமாக்கிக்கொள்ளலாம்.

சரியான பெட்டி முயற்சிக்கு முயற்சி வேறுபடுவதால், ஒரு வகையான அறிவுக்கொத்த குறிப்பை மிருகம் உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. அஃது ஒரு குறிப்பிட்ட அறிவுக்கொத்த வடிவத்தோடு இசைவுள்ளதாக இருக்கவேண்டும். வரிசையாகக் கொடுக்கப்பட்ட அறைகளில் ஏதேனும் ஒரு மையப் பெட்டியைத் தேர்ந்தெடுப்பது பிரச்சினை என்று வைத்துக் கொள்வோம். முயற்சிக்கு முயற்சி சில பெட்டிகளின் முன் கதவுகளைத் தூக்கிக் காட்டுவதன்மூலம் அறைகளின் வரிசை சுட்டிக் காட்டப்படுகின்றது. மிருகம் அந்த அறைகளை நோக்கி எதிர்வினை செய்கின்றது என்று பாவித்துக்கொள்ள வேண்டும். பெட்டியின் வலப் பக்கத்தில் மூன்று பெட்டிகள் திறக்கப் பட்டால், சரியான பெட்டி இரண்டாவது பெட்டியாகும். பெட்டியின் இடப் பக்கத்தில் ஐந்து பெட்டிகள் திறக்கப்பட்டால், சரியான பெட்டி பத்தாவது பெட்டியாகும். அமைக்கப்பட்ட கருவியிலிருப்பவை மொத்தம் பன்னிரண்டு பெட்டிகளாகும். வலப்பக்க மூன்று பெட்டிகளில் மையப்பெட்டி இரண்டாவதாகும். இடப்பக்க ஐந்து பெட்டிகளில் மையப்பெட்டி பத்தாவது பெட்டி யாகும். உதாரணமாக, பெட்டிகள் 2, 3, 4, 5, 6, 7, 8 என்ற ஏழு பெட்டிகளும் திறந்திருந்தால், சரியான பெட்டி ஐந்தாவது பெட்டி யாகும். ஏனென்றல்; அதுதான் இந்த வரிசையில் மையத்திலிருக் கின்றது.

வரிசையான பெட்டிகளில் மையப்பெட்டியைக் கண்டறியும் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமானல், அறிவுக்கொத்த குறிப்பை மிருகம் உபயோகித்தாக வேண்டும். பல்வேறுபட்ட இனங்களின் ஆற்றலை அடிக்கடி சோதிக்க உபயோகப்படுத்தும் பிரச்சினைகள், வரிசையின் இடப்பக்க முடிவில் அல்லது வலப்பக்க முடிவில் பெட்டியிருத்தல், வலப்பக்க முடிவில் அல்லது இடப்பக்க முடிவிலிருந்து இரண்டாவது பெட்டி இருத்தல், மையப்பெட்டி இருத்தல், இடப்பக்க முடிவும் வலப்பக்க முடிவும் மாறி மாறி யிருத்தல். இந்த நான்கு பிரச்சினைகளிலும் மிருகம் தன்னுடைய

பகுத்தறியும் ஆற்றலை உபயோகப்படுத்தித்தான் ஒவ்வொரு பிரச்சினையையும் தீர்க்க முடியும்.

இந்த முறையை உபயோகிப்பதில் பொதுத் திட்டத்தின்படி முதல் பிரச்சினையைத்தான் தொடங்க வேண்டும். அதாவது, வலப்பக்க முடிவில் அல்லது இடப்பக்க முடிவில் பெட்டியிருத்தலை மிருகம் அறிந்துகொள்ள வேண்டியது. பிறகு படிப்படியாகக் கடினமான வேலைகளில் மிருகம் செல்லுமாறு செய்ய வேண்டும். ஒன்பது பெட்டிகளுள்ள கருவியில் பல்வேறுபட்ட உயிரினங்கள் சோதிக்கப்பட்டன. சில உயிரினங்களிடம் சில பிரச்சினைகள் வைக்கப்பட்டன. நான்கு பிரச்சினைகளில் புறாவினிடமும், காக்கையினிடமும் முதல் பிரச்சினையான இட வல இடங்களும், வெள்ளை எலியினிடம் முதல் பிரச்சினையும், பன்றியினிடமும் குரங்கினிடமும் ஒன்று, இரண்டு, நான்கு ஆகிய மூன்று பிரச்சினைகளும், வாலில்லாக் குரங்கினிடம் ஒன்று, நான்கு ஆகிய இரண்டு பிரச்சினைகளும் வைக்கப்பட்டன. இந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் பரிசோதிக்கப்பட்ட மிருகங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பிரச்சினைகளில் தவறிவிட்டன. இந்தச் சோதனைகளில் உபயோகிக்கப்பட்ட மிருகங்கள் மிகச் சிலவேயாதலால், முடிவுகளைப் பொதுவானவையாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

இந்தப் பரிசோதனைகளில் ஏற்பட்ட ஆச்சரியமான முடிவு ஒன்று என்னவென்றால், பன்றியும் குரங்குகளும் பன்முக விருப்பேற்புக் கடமையில் ஒரே வரிசையிலிருந்தன. ஆனால், பிறகு நடத்தப்பட்ட அதே சோதனையில் வாலில்லாக் குரங்குகள் மற்ற மிருகங்களைவிட அதிக முன்னேற்றத்தைக் காட்டின. பன்முக விருப்பேற்புப் பிரச்சினை சோதனையில் உபயோகப்படுத்தப்படும் அறிவுக் குறிப்பின் இயல்பு பற்றி எழுந்த பிரச்சினையின்மீது மிகுந்த கவனம் செலுத்தப்பட்டது. கருத்து வேறுபாடுகளும் எழுந்தன. குறியிடுச் செயல்முறைதான் இப் பரிசோதனையில் ஏற்படுகின்றது என்று சிலர் கூறினர். மற்றும் சிலர் இது புலன் காட்சியின் குணப் பண்பு என்று கூறினர். ஆனால், எவ்வாறிருப்பினும் உயர்ந்த இனத்தைச் சார்ந்த மிருகங்களின் சிக்கலான பகுத்தறியும் நடத்தையைப் பாகுபாடு செய்வதில் இந்த முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கின்றது என்று தெரிகின்றது.

பின்பற்றல் சோதனை முறை: மிருக உளவியல் துறையில் எழுப்பப்பட்ட ஒரு முக்கியமான வினா என்னவென்றால், உயர்ந்த இனத்தைச் சார்ந்த மிருகங்கள் பின்பற்றலின்மூலமும், முயற்சியும் பிழைபாடும் மூலமும் புதிய நடவடிக்கைகளைக்

கற்றுக்கொள்ள முடியுமா என்பதாகும். தொடக்ககால ஆராய்ச்சியாளர்கள் மிருகங்கள் பின்பற்றல்மூலம் கற்கின்றன என்று நம்பி வந்தார்கள். அவர்கள் காட்டிய காரணம், ஒரு மிருகத்தைப் போன்று மற்றொன்று செய்கின்றது என்பதாகும். இக் கருத்து உண்மையாக இருக்கலாம்; ஆனால், அவ்வளவு எளிதில் நிரூபிக்க முடியாது. பின்பற்றல்மூலம் மிருகங்கள் கற்கின்றன என்பதைச் செயல்விளக்கம் செய்ய வேண்டுமானால், அதற்கான பரிசோதனையைச் சில கட்டளை விதிகளுக்கு ஏற்ப உருவாக்க வேண்டும். முதலாவது விதி என்னவென்றால், பரிசோதனையின் செயல் போதுமான அளவுக்குப் புதுமையானதாகவும், அதில் உண்மையான கற்றல் தேவைப் பட்டிருக்கவும் வேண்டும். இரண்டாவதாக, சோதனைச் செயல் முயற்சியும் பிழைபாடுமான செயல்களுக்குச் சென்று விடாமல் பார்த்தவுடன் திருப்பிச் செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். பின்பற்றும் மிருகத்தின் துலங்கல் வடிவம் மூல நடத்தையை உடைய மிருகத்தை முற்றிலும் பின்பற்றிச் செல்லுவதாக இருக்க வேண்டும்.

இந்தக் கட்டளை விதிகளின் அடிப்படையில் கற்றல் உடனடியாக நடைபெறுமானால், பின்பற்றலைச் செய்யும் மிருகங்களின் திறமையைச் செயல்விளக்கம் செய்ய முடியும்: மிருகங்களின் பின்பற்றல் திறமையின் எல்லைகளையும் நிர்ணயிக்க முடியும். சோதனையில் கடினத்தன்மையைப் படிப்படியாக அதிகரிக்கச் செய்து இதைச் செய்ய முடியும். தாண்டைக் (Thorndike) என்பவர் உருவாக்கிய கூராய்வுக் கூண்டு முறை (Observation - cage method) நீண்ட நாள்களாக மிருகங்களின் பின்பற்றல் நடவடிக்கைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு உபயோகிக்கப்பட்டு வந்தது.

பின்பற்றலை ஆராய்ச்சி செய்யும்பொருட்டுத் தாண்டைக் கண்டுபிடித்த கருவியில் மூல வேலையில் ஈடுபடும் மிருகம் இருப்பதற்காக ஒரு வேலைக் கூண்டு (Work cage) உண்டு. இத்துடன் பின்பற்றலைச் செய்யும் மிருகம் இருப்பதற்கு ஒரு கூராய்வுக் கூண்டு இணைக்கப்பட்டிருக்கின்றது. பயிற்சி பெற்ற மிருகம் பிரச்சினையைத் தீர்க்கும் நடவடிக்கை நன்கு கவனிக்கும் சந்தர்ப்பம் பின்பற்றல் மிருகத்திற்குக் கொடுக்கப்பட்டது. அதன் பிறகு பின்பற்றல் மிருகம் பயிற்சிபெற்ற மிருகம் இருந்த வேலைக் கூண்டில் விடப்படுகின்றது. பயிற்சி பெற்ற மிருகம் செய்த வேலைகளையெல்லாம் பின்பற்றல் மிருகம் திருப்பிச் செய்கின்றதா என்று கவனிக்கப்படுகின்றது. பின்பற்றல் மிருகம் வேலைக்

குறிப்பு நூல் தொகுப்பு
(Bibliography)

அத்தியாயம் 1

1. Jennings, H. S., 'Behaviour of the Lower Organisims', New York: Columbia University Press, 1906.

2. Warden, C. J., 'A short outline of comparative Psychology', New York: W. W. Norton and Company, 1927.

3. Watson, J. B., 'Behaviourism: An Introduction to comparative Psychology', New York: Henry Holt and Company, 1914.

4. Broadhurst, P. L. and Jinks, J. L., 'Biometric Genetics and Behaviour: reanalysis of published data, Psychological Bulletin', 1961, 58, 337-362.

5. Warden, C. J., Jenkins, T. N. and Warner, L. H., 'The Development of Animal Psychology in United States during the past three decades, Psychological Review', 1927, 34, 196-205.

அத்தியாயம் 2

1. Razran, H. S., and Warden, C. J., 'The Sensory Capacities of the dog as studied by the conditioned-reflex method, Psychological Bulletin', 1929, 26, 202-222.

2. Warden, C. J., Jenkins, T. N., and Warner, L. H., 'Introduction to comparative Psychology', New York: The Ronald Press Company, 1934.

மிருகங்களின் நடத்தையில் மூன்று முக்கிய துறைகளான ஊக்க மூட்டி, கற்றல், நுண்ணறிவு ஆகியவற்றின்மீது அதிகக் கவனம் செலுத்தி வந்திருக்கின்றனர். இந்த மூன்று துறைகளிலும் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளும், கிடைக்கப்பெற்ற சிறந்த முடிவு களும் மிருக உளவியல் துறைக்கே உரிமையாக்கப்பட்டு விட வில்லை. அவை மனிதர்களின் நடத்தைகளை ஆராயும் பணி களிலும் பயன்படுத்தப்பட்டு ஒப்புமைகள் செய்யப்பட்டிருக் கின்றன.

இந்த வகையான ஒப்புமைகள் மனித உளவியல் துறையிலிருந்து வந்த பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் பயன்பட்டிருக்கின்றன. மனிதர்களின்மீது நேரடியாக நடத்திப் பார்க்க முடியாத பல சோதனைகள் மிருகங்களின்மீது நடத்தப்பட்டு, பிறகு அவை மனிதர்களிடம் நடத்தப்பட்டிருக்கின்றன. எனவே, மிருக உளவியல் துறையில் நடைபெற்ற ஆராய்ச்சிகள் பொதுவாக உளவியல் துறைகளின் அறிவெல்லை வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்திருக்கின்றன என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது என்று உறுதியாகக் கூறலாம்.

குறிப்பு நூல் தொகுப்பு

(Bibliography)

அத்தியாயம் 1

1. Jennings, H. S., 'Behaviour of the Lower Organisims', New York: Columbia University Press, 1906.

2. Warden, C. J., 'A short outline of comparative Psychology', New York: W. W. Norton and Company, 1927.

3. Watson, J. B., 'Behaviourism: An Introduction to comparative Psychology', New York: Henry Holt and Company, 1914.

4. Broadhurst, P. L. and Jinks, J. L., 'Biometric Genetics and Behaviour: reanalysis of published data, Psychological Bulletin', 1961, 58, 337-362.

5. Warden, C. J., Jenkins, T. N. and Warner, L. H., 'The Development of Animal Psychology in United States during the past three decades, Psychological Review', 1927, 34, 196-205.

அத்தியாயம் 2

1. Razran, H. S., and Warden, C. J., 'The Sensory Capacities of the dog as studied by the conditioned-reflex method, Psychological Bulletin', 1929, 26, 202-222.

2. Warden, C. J., Jenkins, T. N., and Warner, L. H., 'Introduction to comparative Psychology', New York: The Ronald Press Company, 1934.

அத்தியாயம் 3

1. Munn, N. L., 'An Introduction to Animal Psychology' Boston: 'Honghton Miffiin Company', 1933.

2. Warden, C. J., 'Animal Motivation: Experimental Studies on the Albino Rat', New York: Columbia University Press, 1934.

அத்தியாயம் 4

1. Warner, L. H., and Warden, C. J. 'The development of a standardized animal maze, Archive Psychology', 1927, No. 93.

2. Thorpe, W. H., 'Learning and Instinct In Animals', London: Methuen and Company Ltd., 1956.

3. Tolman, E. C., 'Purposive Behaviour in Animals and Men', New York: Century, 1932.

4 Royce, J. R., 'The factorial analysis of animal behaviour, Psychological Bulletin,' 1950, 47, 235-259.

7. வேற்றுமை உளவியல்

1. வேற்றுமை உளவியலின் நோக்கமும் எல்லையும்

ஒவ்வோர் உளவியல் துறையும் ஒரு குறிப்பிட்ட செய்திப் பொருள் தொகுதியைத் தேர்ந்தெடுத்து ஒழுங்கு முறையாக ஆராய்கின்றது. ஆனால், இங்கு நாம் விளக்கப்போகின்ற வேற்றுமை உளவியல் துறையானது தனிப்பட்ட செய்திப்பொருள் தொகுதியைப்பற்றி ஆராயாது செய்திப்பொருள் தொகுதிகளில் காணப்படும் பண்புகளை ஆராய்ந்து ஒப்பிட்டுப் பார்த்து விளக்கம் தருகின்றது. உளவியலின் செய்திப்பொருள் மனிதன்தான். அந்த மனிதர்கள் அனைவரும் ஒன்றுபோல இருப்பதில்லை. அவர்களிடையே எத்தனையோ மாறுபாடுகள். தனிப்பட்ட மனிதர்களிடமும் சரி, மனிதர்கள் சேர்ந்த குழுக்களிடமும் சரி, வேற்றுமைகள் அவர்களிடையே பல்வேறு பண்புகளிலும் இருந்துதான் வருகின்றன. அந்த வேற்றுமைகளை ஒழுங்கு முறையாக ஆராய்கின்ற துறையை வேற்றுமை உளவியல் என்று வகுத்துள்ளனர்.

வேற்றுமை உளவியல் தனியாள்களிடையிலும் குழுக்களிடையிலும் காணப்படும் வேற்றுமைகளை அவர்களுடைய பல்வேறு நடத்தைகளிலும் பண்புகளிலும் ஒழுங்கு முறையாகக் காண விரும்புகின்றது. ஆனால், வேற்றுமை உளவியலின் அடிப்படைக் குறிக்கோள் மற்ற உளவியல்களைப் போன்று நடத்தையை ஆராய்வதுதான். வேற்றுமை உளவியல் அதனுடைய பிரச்சினையை மாறுபடுகின்ற இயற்கையியல் நிலைமைகளிலும் உயிரியல் நிலைமைகளிலும் நடத்தையை ஒப்பீடு செய்து, பாகுபாடு செய்வதன்மூலம் அணுக முயலுகின்றது. நடத்தையில்

காணப்பட்ட வேற்றுமைகளை மற்ற தெரிந்த உடனிகழ்கின்ற நிகழ்ச்சியோடு தொடர்பு படுத்துவதன்மூலம் நடத்தை வளர்ச்சிக்குப் பல்வேறு கூறுகளும் என்ன உதவியளித்திருக்கின்றன என்று கண்டறிய முடியும். ஒரு மனிதன் மற்ற மனிதனிட மிருந்து ஏன் மாறுபாடான நடவடிக்கைகளை உடையவனாக இருக்கின்றான் என்று நாம் நிர்ணயிக்க முடிந்தால், மனிதர்களை அவ்வாறு என்ன செய்ய வைக்கின்றது என்று நாம் காண முடியும். வேற்றுமை உளவியல் மாறுபாடான நடவடிக்கைகளுக்கடியில் மறைந்திருக்கின்ற காரணக் கூறுகளின்மீது ஒளி வீசுவதற்கு முயற்சி செய்கின்றது.

உயிருள்ள ஜீவராசிகள் அனைத்திலும் தனியாள் வேறுபாடுகள் காணப்படுவது உலகியல் நிகழ்ச்சியாகும். மேலோட்டமாகவும் போதிய கவனமின்றியும் நடத்தப்படுகின்ற கூராய்வுகளெல்லாம் தவறான ஒரு கருத்தை அடிக்கடி உண்டாக்கி வருகின்றன. அதாவது வேற்றுமைகளைக் காணாது விட்டுவிட்டு, குழுக்களிடை யிலும், குழு உறுப்பினர்களிடையிலும் ஒன்றுபட்ட தோற்றமும் அடையாளமும் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஒரு குன்றின்மீது நின்றுகொண்டு அதன் அடிவாரத்தில் நிற்கும் ஆயிரக்கணக்கான மக்களை நோக்கும்பொழுது அனைவரும் ஒன்று போலத்தான் காணப்படுகின்றனர். ஆனால் அருகில் சென்று பார்க்கும்பொழுதுதான் ஒவ்வொருவரும் மற்றவரிடமிருந்து வேறுபட்டிருப்பது தெரிய வரும். அது போன்று ஒன்று போல நடத்தையில் காணப்படுகின்றவர்களை உளவியல் முறைப்படித் தேர்வாய்வு நடத்திப் பார்த்தால், தனியாள் வேறுபாடுகள் மிகவும் விரிவாகத் தெரிகின்றன. எந்த இருவரிடையே மிகுந்த ஒற்றுமைகள் இருப்பவையாகத் தோன்றுகின்றனவோ அவர் களுடைய நடத்தையில் மிகுந்த வேறுபாடுகள் இருக்கவும், எந்த வழியிலும் அவர்கள் இணைந்து செல்ல முடியாமையையும் காணலாம்.

மிகவும் தாழ்ந்த உயிரினத்திலிருந்து மனிதன் வரையில் உள்ள உயிரினத்தினிடம் ஒரே மாதிரியான புறவயச் சூழ்நிலையை அளிக் கும் பொழுது எந்த இரண்டு உயிரினமும் ஒரே மாதிரி எதிர்வினை செய்வதில்லை; வேறு வகையாகத்தான் துலங்குகின்றன. இது மனிதனுக்குமட்டுமே உரிய நடத்தையன்று. எல்லா மிருகங்களுமே மாறுபட்டுத்தான் துலங்குகின்றன. இதைப் பரிசோதனையின் மூலமும் விளக்கிக் காட்டியிருக்கின்றனர்.

ஆக்க நிலையிறுத்தல் பரிசோதனையில் ஆக்க நிலையிறுத்தல் எதிர்வினையை நிலைநாட்ட எடுத்துக்கொண்ட முயற்சிகள்

79லிருந்து 284 வரையில் சென்றன. இது 82 உயிரணுக்கள் கொண்ட குழுவில் நடத்திய பரிசோதனையின் முடிவாகும்; ஐம்பத்தொன்பது மீன்கள் கொண்ட குழுவில் 3லிருந்து 35 முயற்சிகள் வரையில் நடத்தப்பட்டது; பதின்மூன்று புறுக்கள் கொண்ட குழுவில் 30 முதல் 40 முயற்சிகள் வரையில் நடத்தப்பட்டது. பதினொரு வெள்ளாடுகள் கொண்ட குழு மூன்று முதல் 17 முயற்சிகள் எடுத்துக்கொண்டது. இதே போன்று விரிவான வேறுபாடுகள் கற்றல் நடவடிக்கையிலும் காணப்பட்டன. கற்றல் நடவடிக்கைக்குப் புதிர்ப்பெட்டி உபயோகிக்கப்பட்டது. தொடர்ச்சியாகக் கட்டங்கள் படிப்படியாகக் கடினமாகிக்கொண்டு சென்றன. இப் பரிசோதனையிலும் ஆக்க நிலையிறுத்தல் எதிர்வினை நிலைநாட்டப்பட்டது.

பல்வேறுபட்ட மிருகங்கள் பரிசோதனையில் பயன்படுத்தப்பட்டன. முதல் படியைக் கற்பதற்கு மிருகங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிகவும் விரிவான வேற்றுமைகளைக் கொண்டிருந்தன. பதினாறு கினியாப் பன்றிகள் கொண்ட குழுவின் முயற்சிகளின் வீச்சு 53லிருந்து 407 வரையில் சென்றது. இருபத்துநான்கு ஆல்பைனோ எலிகளின் முயற்சிகளின் வீச்சு 30லிருந்து 453 வரையில் சென்றது. அறுபத்திரண்டு பூனைகள் 9 லிருந்து 136 முயற்சிகள் வரையில் எடுத்துக்கொண்டன. பதினேழு ரிசுஸ் குரங்குகள் 19லிருந்து 310 முயற்சிகள் வரையில் எடுத்துக்கொண்டன. ஆறு சிபஸ் குரங்குகளின் முயற்சிகளின் வீச்சு 42லிருந்து 327 வரையில் சென்றது. தூண்டல்களுக்குத் துலங்குவதை ஆக்க நிலையிறுத்தம் செய்வதில் எவ்வாறு மிருக வகைகள் முயற்சிகளில் வேற்றுமைகளைக் காட்டுகின்றனவோ அது போலவே கற்றலிலும் அம் மிருகங்களின் முயற்சிகளில் வேற்றுமையின் வீச்சு விரிந்து காணப்படுகின்றது. மனிதர்களிடம் தனியாள் வேற்றுமைகள் நீண்ட நாள்களுக்கு முன்பே கண்டறியப்பட்டிருக்கின்றன.

பல்வேறு சமூக நிறுவனங்களும், தனியாள்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களிடமிருந்து வேறுபடுகின்றனர் என்பதை அறிந்திருக்கின்றன. சமூக வடிவங்கள் பல வேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டே அமைக்கப்பட்டிருக்கின்றன. மனிதர்கள் தங்களுடைய அன்றாட நடவடிக்கைகளில் அவர்களுடைய கூட்டாளிகளிடையேயுள்ள தனியாள் வேற்றுமைகளோடு நிலையான பொருத்தப்பாடுகளைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். வயது, பால், இனம் முதலிய சில அகன்ற வகைகளைக்கொண்ட

உயிரியல், பண்பாட்டுக் குழுக்களுங்கூடச் சமூகப் பரிமாற்றுச் செயல்களில் முக்கிய பங்கேற்கின்றன. அப்படிப்பட்ட குழு வேறுபாடுகள் அடிக்கடிச் சமூக நிறுவனங்கள், மனப்பான்மைகள் ஆகியவற்றின் மீதுதான் ஏற்படுத்தப்படுகின்றன. எனவே, சமூக அமைப்பிலுள்ள பல்வேறுபட்ட சிறு நிறுவனங்களும் சில பெரும் நிறுவனங்களும் வேற்றுமைகளை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன. வேற்றுமை உளவியலின் மற்றொரு நோக்கம் அந்த நடத்தை வேறுபாடுகளின் மூலத்தையும் இயல்பையும் அறிவதாகும்.

2. மரபுநிலையும் சூழ்நிலையும்

மனிதர்களின் நடத்தையிலும் மிருகங்களின் நடத்தையிலும் வேற்றுமைகள் காணப்படுகின்றன. அந்த வேற்றுமைகளுக்கடியில் பல காரணக் கூறுகள் புதைந்து கிடக்கின்றன. அந்தக் காரணக் கூறுகளை ஆராய்வதன்மூலம் வேற்றுமையுள்ள நடத்தைகளைப் பற்றித் தெளிவான விளக்கத்தைப் பெற முடியும். அந்த முயற்சிகளை வேற்றுமை உளவியல் அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. அந்த வேற்றுமைகளை இயக்குகின்ற காரணக் கூறுகள் பல. உளவியலாரிடையே அந்தக் கூறுகளைப்பற்றி ஒன்றுபட்ட கருத்துகள் தோன்றவில்லை என்றாலும், ஓரளவுக்கு இணைப்புத் தொடர்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

சமூகத்தில் மனிதர்களுடைய வாழ்க்கை முறைகள் ஒன்று போலக் காணப்பட்டாலும் அவர்கள் ஒரேமாதிரி செயல்படுவதில்லை; ஒன்றாகவும் தோன்றுவதில்லை. ஒரு பெற்றோருக்குப் பிறந்த பத்துக் குழந்தைகளும் ஒரு வழியில் பெற்றோரின் சாயலை ஒத்திருந்தாலும் பத்து வகைகளாகத் தோன்றுகின்றனர்; பத்து வழிகளில் செயல்படுகின்றனர்; பத்து வகைகளான குணப் பண்புகளையுடையவர்களாக இருக்கின்றனர். ஒரே வீட்டில் வளர்ந்த ஒரே வயதுடைய இரண்டு குழந்தைகள் இரு வேறு வகைகளாக நடந்துகொள்ளுகின்றார்கள். ஒரே பள்ளியில் ஒரே ஆசிரியரிடம் கல்வி பயின்ற இரண்டு பெண்கள் இரு வேறு வகைகளாகச் சிந்திக்கின்றார்கள்; செயல்படுகின்றார்கள்.

இந்த வேறுபாடுகளுக்கடியில் சில மூலக் காரணங்கள் புதைந்துள்ளன. அவற்றை உளநூல் வல்லுநர்கள் மரபுநிலைப் பண்புகள் என்றும், சூழ்நிலைப் பண்புகள் என்றும் கூறுகின்றார்கள். மரபுநிலையும் சூழ்நிலையுந்தான் மாறுபட்ட செயல்களுக்கும் சிந்தனைகளுக்கும் ஆதாரமாக அமைகின்றன. சில குணப் பண்புகளை

மனிதன் தன்னுடைய மரபுரிமையாகப் பிறக்கும்பொழுதே தன்னுடன் கொண்டு வருகின்றான். இந்த மரபுவழிப் பண்புகளை மனிதன் தன்னோடு எங்கிருந்து எவ்வாறு கொண்டு வருகின்றான்? மரபியல் இதற்கு விடை காண முயலுகின்றது. ஆனால், எல்லாப் பண்புகளும் நடவடிக்கைகளும் மரபுநிலையையோ சூழ்நிலையையோ தனித்து அடிப்படையாகக்கொண்டிருக்கவில்லை. பண்புகளையும் நடவடிக்கைகளையும் பண்புச் சார்பானவை என்றும், பெறப்பட்டவை என்றும் வகைப்படுத்துவதும் எளிதல்ல. எவ்வாறிருப்பினும், ஒரு குறிப்பிட்ட பண்பில் தனியாள் வேற்றுமைகளுக்கான மரபுநிலையின் பங்கையும் சூழ்நிலையின் பங்கையும் நாம் ஆராய்ச்சி செய்து பார்க்க முடியும்.

சில பண்புக் கூறுகளான தோலின் நிறம், கண்ணின் நிறம், தலைமயிரின் அமைப்பு ஆகிய தனியாள் வேறுபாடுகள் பெரிதும் மரபுநிலையால் நிர்ணயிக்கப்படுகின்றன. மற்றப் பண்புக் கூறுகளான பேசும் மொழி, உண்ணும் உணவு, உடுத்தும் உடை முதலிய வேறுபாடுகள் சூழ்நிலையால் பெரிதும் நிர்ணயிக்கப் படுகின்றன. எந்த ஒரு தனிப்பட்ட பண்புக் கூறின் வேறுபாடுக் கான மரபுநிலை, சூழ்நிலை ஆகியவற்றின் காரணக் கூறுகளினுடைய விகிதாச்சாரப் பங்கு நாம் தேர்ந்தெடுத்துத் தேர்வாராய்ச்சி செய்கின்ற மக்கள் தொகையைச் சார்ந்ததாக இருக்கின்றது. மரபுநிலை வேற்றுமைகள் குறைந்துள்ள மக்கள் கூட்டத்தில் தனியாள் நடத்தையிலுள்ள வேறுபாடுகளுக்குச் சூழ்நிலைக் கூறுகள் முக்கியமாக அமைகின்றன. சூழ்நிலையின் நிலைமைகள் உயர்ந்த அளவுக்கு ஒரே சீராக உள்ள மக்கள் தொகுதியில் தனியாள் வேற்றுமைகள் பெரிதும் மரபுநிலையால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால், எல்லா மக்கள் தொகுதியிலும் ஓர் உளவியல் பண்பில் தனியாள் வேற்றுமைகளுக்கு மரபு நிலையும், சூழ்நிலையும் எந்த அளவுக்குப் பங்கேற்றிருக்கின்றன என்று உறுதியாகக் கூற முடியாது. நடத்தை முதிர்ச்சியை நாம் பண்படுத்த வேண்டுமானால், மரபுநிலையும் சூழ்நிலையும் எவ்வாறு அந்த முதிர்ச்சியில் இணைந்து செயல் புரிகின்றன என்று காண வேண்டும்.

மரபுநிலையின் செயன்முறை

மனிதன் தோன்றுகின்ற காலத்திலேயே அசைந்து செயல் படுகின்றான் என்று உளவியலார் நம்புகின்றனர். உளநூல் முறைப்படிப் பார்ப்போமானால், மனிதனுடைய வாழ்க்கையும் செயலும் அவன் பிறப்பதற்கு முன்பே தொடங்கி விடுகின்றன.

எனவே, தாய் கருவுற்ற காலமே அவ்வுயிரின் தோற்றக்காலம் எனலாம். ஒவ்வொரு செடியும், மிருகமும் ஒரு தனி உயிரணுவில் தான் வாழ்க்கையைத் தொடங்குகின்றது. ஒரு மனிதனுடைய வாழ்க்கையும் ஓர் உயிரணுவிலிருந்துதான் தோன்றுகின்றது. தந்தையிடமும் தாயிடமும் பல உயிரணுக்கள் இருக்கின்றன. தந்தையிடமுள்ள உயிரணுவை விந்தணு என்றும், தாயிடமுள்ள விந்தணுவை அண்டவணு என்றும் கூறுகின்றனர். இவை உருவத்தில் மிகச் சிறியவை.

தந்தையின் உயிரணு ஒரு சிறு தவளைக்குஞ்சின் தோற்ற முள்ளது. தாயின் உயிரணு ஒரு சிறு முட்டை வடிவமானது. ஆண், பெண் புணர்ச்சி ஏற்படும்பொழுது இலட்சக்கணக்கான விந்தணுக்கள் கருப்பையில் உள்ள குழாய்களில் தள்ளப் படுகின்றன. தள்ளப்பட்ட விந்தணுக்கள் வாலை அடித்துக் கொண்டு குழாயின் சுவர்களின் வழியாக அண்டவணுவைச் சென் றடைகின்றன. விந்தணுக்கள் அண்டவணுவைச் சென்றடைய முடியாமல் கருப்பை வாயிலில் தங்கிவிடவும் நேரிடலாம். அவை சிறிது சிறிதாக நகர்ந்து சென்று அண்டவணுவை அடைய முடியும். கருப்பையின் வாயிலில் அவ்வாறு தங்கிய விந்தணுக்கள் இருபத்து நான்கு மணி நேரம் உயிர் வாழ்ந்து, பிறகு இறந்து போகின்றன. அண்டவணுவைச் சென்றடைந்த விந்தணு அதைத் துளைத்துக்கொண்டு உள்ளே செல்லுகின்றது. இந்தச் செயல் முறையைத்தான் கருத்தரித்தல் என்று கூறுகின்றனர். இதுதான் மனிதனுடைய தோற்றநிலை.

தாயின் கருப்பையில் ஒரு மாதத்திற்கு ஓர் அண்டவணுதான் தோன்றுகின்றது. அந்த அண்டவணுவும் தோன்றிய சில மணி நேரம் வரையில்தான் கருத்தரிக்கும் செயல்முறைக்குத் தயாராக இருக்கின்றது. அதற்குள் விந்தணு சென்று அதைக் கருத்தரிக்கச் செய்யவில்லையானால், கரு ஏற்படாமல் போக ஏதுவாகும். விந்தணுவின் சேர்க்கையினால் கருவுற்ற அண்டவணு தாயின் வயிற்றில் மிகவும் பாதுகாப்பாக வளர்ந்து வரத் தொடங்கு கின்றது.

கருப்பெற்ற உயிரணு முதலில் இரண்டாகப் பிரிகின்றது. பிறகு அந்த இரண்டும் நான்காகப் பிரிகின்றன; பிறகு எட்டாகவும், பதினாறாகவும், முப்பத்திரண்டாகவும் பெருகிக் கொண்டே செல்லுகின்றன. இறுதியில் அவை கோடிக் கணக்கில் பெருகிவிடுகின்றன. அவை எல்லாமே கருப்பெற்ற ஓர் உயிரணுவிலிருந்து பிரிந்து தனித்து வளர்ச்சியுறுகின்றன.

அவற்றில் சில தசை உயிரணுக்களாகவும், சில சுரப்பி உயிரணுக்களாகவும், சில நரம்பு உயிரணுக்களாகவும் வளரு கின்றன.

ஒவ்வோர் உயிரணுவிலும் ஓர் அணுமையம் இருக்கின்றது. அஃது உயிரணுவின் மற்றப் பகுதியினின்றும் உடலமைப்பிலும், இரசாயன அமைப்பிலும் மாறுபட்டிருக்கின்றது. உயிரணுவி லுள்ள மற்றப் பகுதிகள் அவ்வவற்றின் செயல்களில் ஈடுபட்டிருக் கும்போது இந்த அணுமையம் அவற்றிற்குச் சக்தியூட்டிப் பேணு கின்றது. கருவுற்ற அண்டவணு இரண்டாகவும், நான்காகவும் பிரிந்து பெருகிச் செல்லும்போது அதனுடைய அணுமையமும் அவ்வாறே பிரிந்து சென்று உயிரணுவப் பேணுகின்றது. இறுதி யில் பிரிந்து செல்லும் ஒவ்வோர் உயிரணுவிலும் ஓர் அணு மையமும் பிரிந்து சென்றுகொண்டே இருக்கின்றது. இந்தச் செயல்முறையை அடிப்படையாகக்கொண்டு கருப் பெற்ற அண்டவணுவின் அணுமையத்திலிருந்து பிரிந்த கோடிக்கணக் கான உயிரணுமையங்களில்தான் ஒரு மனிதனுடைய மரபுநிலை அடங்கியிருக்கின்றது என்று கூறலாம்.

ஒரு குழந்தையினுடைய மரபுநிலையை நிர்ணயிப்பதுபற்றிக் கவனிக்க வேண்டிய முக்கியமான கருத்துகள் உண்டு. ஒரு குழந்தை தன்னுடைய மரபியல் பண்புகளைத் தன்னுடைய பெற்றோர்களிடமிருந்து பெறுகின்றது. இஃது அக் குழந்தை கருவாக உருப் பெறும்போது வரையறுக்கப்படுகின்றது. கரு உருப்பெற்ற பிறகு மற்ற மரபியல் பண்புகள் அதில் நுழை வதற்குக் காரணமில்லை. தாயின் வயிற்றில் வளர்ந்தாலும் அக் கரு பெற்றுள்ள பண்புகளைத் தவிர வேறொன்றையும் பெற முடியாது. அக் குழந்தையினுடைய மரபியல் பண்பு அதனுடைய முழு உயிரியிலும் (Organism) கலந்து உறைகின்றது. ஒவ்வோர் உயிரணுவிலும் மரபியல் பண்பு உறைகின்றது.

உயிரணுக்கள்: மனிதனுடைய ஒவ்வோர் உயிரணுவிலும் 46 உயிரணுக்கள் (chromosomes) இருக்கின்றன. அவை மனிதனுடைய உடல், மரபுப் பண்பு ஆகியவற்றை நிர்ணயிக் கின்றன. அவை இணை இணையாகவே இருக்கின்றன. அதனால் அவற்றை 23 இணை உயிரணுக்கோல்கள் எனலாம். ஆண் களிடமும் பெண்களிடமும் அவற்றின் எண்ணிக்கை ஒன்றுதான். அதனால் கருத்தரிக்கும்போது ஓர் ஆணின் 23 இணை உயிரணுக் கோல்களும் பெண்ணிடமுள்ள 23 இணை உயிரணுக்கோல்களோடு சென்று இணைகின்றன. இதனால் ஒரு குழந்தை தந்தையிட

மிருந்து ஓர் உயிரணுக்கோலையும் தாயிடமிருந்து ஓர் உயிரணுக்கோலையும் பெறுகின்றது. உயிரணுக்கோல்கள் உருவத்தில் மிகச் சிறியவை. அவை பாசிகளைக் கோத்துக் கட்டியது போன்ற தோற்றத்தைக் கொடுக்கின்றன. அவற்றில் சில நீளமாகவும், சில குட்டையர்கவும், சில வளைந்தும் காணப்படுகின்றன. உயிரணுக்கோல்கள் ஒன்றுக்கொன்று குண வேறுபாடுகள் கொண்டிருக்கின்றன. இந்தக் குண வேறுபாடுகள் மரபு நிலைகளிலும் சென்று செல்வாக்குப் பெறுகின்றன.

உயிரணுக்கோல்கள் உருவத்தில் மிகச் சிறியவை. ஆனால், அச் சிறிய உயிரணுக்கோல்களிலும் மிக நுண்ணிய அணுத்திரள்கள் மூலக்கூறுகளாக இருக்கின்றன. அவற்றை சீன்கள் (Genes) என்று கூறுகின்றார்கள். மனிதனுடைய எல்லாவிதமான மரபியல் குணப் பண்புகளுக்கும் இந்த சீன்கள்தான் அடிப்படைக் காரணமாக அமைந்திருக்கின்றன. இவை ஒன்றோடொன்று இணைந்து ஒரு சிறு கயிறு போன்று தோற்றமளிக்கின்றன. சீன்கள் தங்களுடைய சொந்த உயிரணுக்கோல்களில் அடைபட்டிருப்பதில்லை. அவை ஓர் உயிரணுக்கோலிலிருந்து மற்றோர் உயிரணுக்கோலுக்கு மாறிச் செல்லுவதுண்டு; அவ்வாறு மாறிச் செல்லும்போது அதே குணங்களையே பெற்றுள்ள உயிரணுக்கோல்களை நாடிச் செல்லுகின்றன. ஒரு பரம்பரைக்கும் மற்றொரு பரம்பரைக்கும் உடல் மரபுத் தொடர்புகளை ஏற்படுத்துவது சீன்கள்தான். ஒவ்வோர் உயிரணுவின் இடையிலும் எண்ணற்ற சிறிய உயிர்ப்பொருள்களாக சீன்கள் விளங்குகின்றன. சாதாரணமாக ஓர் உயிரணுவில் 40,000 சீன்களிருப்பதாகக் கூறுகின்றார்கள். ஒருவனுடைய கண் நீல நிறமாக இருக்கலாம்; தலைமயிர் தடித்துச் சுருண்டு இருக்கலாம். அல்லது அவன் கலையார்வம் கொண்டவனாக இருக்கலாம். இவற்றிற்கெல்லாம் இந்த சீன்கள்தான் காரணங்களாக இருக்கின்றன.

ஒரே உயிரணுவிலிருந்து பிறக்கின்ற இரண்டு குழந்தைகளைத் தவிர, உலகத்தில் பிறக்கின்ற கோடிக்கணக்கான தனிக் குழந்தைகளில் எந்த இரண்டு குழந்தைகளும் ஒன்று போலத் தோன்றுவதில்லை; சிந்திப்பதில்லை; செயல்படுவதில்லை. ஆகவே, இந்தச் சான்றுகளைக்கொண்டு நோக்கும்போது மரபு என்றால், மற்றவர்களிடமிருந்து மாறுபட்டிருத்தலும் முன்னோர்களோடு ஒன்றி நிற்றலும் என்றும் கூறலாம். இரண்டு பெற்றோர்களும் பழுப்பு நிறக் கண்களையுடையவர்களாக இருந்தால், அவர்களுடைய பிள்ளைகள் நீல நிறக் கண்களைப் பெற மாட்டார்கள். ஏனென்றால், அப் பெற்றோர்களிடம் நீலநிறக் கண்களை உண்டாக்கத் தக்க

சீன்களில்லை. எனவே, குழந்தைகள் பழுப்பு நிறக் கண்களையே பெறுகின்றார்கள்.

சில ஆண் குழந்தைகள் தங்களுடைய தந்தையின் சாயலையும், சில பெண் குழந்தைகள் தங்களுடைய தாயின் சாயலையும் பெற்றிருக்கின்றார்கள். சில குழந்தைகள் தங்கள் பாட்டன் பாட்டிகளின் சாயல்களைக் குறைவாகவோ அதிகமாகவோ பெற்றிருக்கின்றார்கள். இந்த ஒன்றுபட்ட சாயல்களுக்கு சீன்களே காரணமாக இருக்கின்றன. ஒவ்வொரு தந்தையும் தாயும் தங்களுடைய சீன்களில் சரி பாதியைத் தங்கள் குழந்தைக்கு அனுப்புகின்றனர். அக் குழந்தை பிறகு தன்னுடைய குழந்தைக்குச் சரிபாதி சீன்களை அனுப்புகின்றது. இவ்வாறே பாரம்பரியம் சென்றுகொண்டிருக்கின்றது. அதனால் சில சமயங்களில் ஒரே சாயலையும் குணப் பண்புகளையும் உடைய சீன்கள் ஒரு குழந்தையினிடம் செல்லுகின்றன. அவ்வாறு ஏற்படுமாயின், குழந்தை தன் தந்தையையோ, தாயையோ சில வழிகளில் ஒத்திருக்கின்றது. ஆனால், சில சமயங்களில் பிறக்கின்ற இரட்டைக் குழந்தைகள் ஒன்று போலவே இருக்கக் காண்கின்றோம். இரட்டைக் குழந்தைகளிடம் ஒன்றுபட்ட சாயல் காணப்படுவதற்கு மரபுநிலையே காரணமாகும்.

இரட்டைக் குழந்தைகள் : இரட்டைக் குழந்தைகள் இரண்டு வகைகளில் பிறக்கின்றன. அவர்களை ஓரணு இரட்டையர்கள் என்றும், ஈரணு இரட்டையர்கள் என்றும் பிரிக்கலாம். ஓரணு இரட்டையர்கள் கருவுற்ற ஒரே அணுவிலிருந்து தோன்றி, வளர்ந்து, பிறந்தவர்கள். கருப் பெற்ற உயிரணு இரண்டாகப் பிரிகின்றது. அந்த இரண்டு பகுதிகளும் புதிதாகக் கருவுற்ற இரண்டு முழு உயிரணுக்களைப் போலவே வளருகின்றன. இது தற்செயலாகவே நடைபெறுகின்றது; மிகவும் அரிது. ஓரணு இரட்டையர்கள் பல உளவியல் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பரிசோதனைப் பொருளாக இருக்கின்றார்கள். ஓரணு இரட்டையர்கள் ஒரே அணுவிலிருந்து தோன்றியதால் முகத்தோற்றம், உடலமைப்பு ஆகியவற்றில் மிகவும் ஒத்திருக்கின்றார்கள். ஓரணு இரட்டையர்கள் ஒன்று பெண்ணாகவே இருப்பர் அல்லது ஆணாகவே இருப்பர். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஓரணு இரட்டையர்களில் இருக்க முடியாது.

ஈரணு இரட்டையர்களை எங்கும் சாதாரணமாகக் காணலாம். ஒரு குடும்பத்தில் ஈரணு இரட்டையர்கள் தொடர்ந்து பிறக்கலாம். அமெரிக்காவில் ஒவ்வொரு 86 குழந்தைகளுக்கு

ஓர் ஈரணு இரட்டைக் குழந்தை வீதம் பிறப்பதாகக் கூறுகின்றனர். இவ் வகையான பிறப்புகளில் பெற்றோர்களின் வயதும் கருப்பெறும் காலமும் முக்கிய காரணங்களாக அமைகின்றன. வயது முதிர்ந்த தந்தைக்குப் பிறக்கும் குழந்தைகள் ஈரணு இரட்டையர்களாக இருக்கின்றார்கள். பெரும்பாலான ஈரணு இரட்டையர்கள் 30 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப் பட்ட தாய்மார்களுக்குப் பிறந்தவர்களாக இருக்கின்றார்கள். ஈரணு இரட்டையர்கள் ஆணாகவுமிருக்கலாம்; பெண்ணாகவும் இருக்கலாம்; அல்லது ஓர் ஆணும் ஒரு பெண்ணுமாகவும் இருக்கலாம். ஏனென்றால், ஈரணு இரட்டையர்கள் இருவரும் இரண்டு உயிரணுக்கள் தனித்தனியே கருப்பெற்றதால் பிறந்தவர். இரண்டு உயிரணுக்கள் தனித்தனியே ஒரே சமயத்தில் கருப்பெறுபொழுது பால்வேறுபாடு ஏற்பட ஏதுவாகின்றது. ஈரணு இரட்டையர்களும் ஒரே விதமான சாயலும் உடலமைப்பும் பெற்றிருக்கலாம். ஆனால், எல்லா ஈரணு இரட்டையர்களிடமும் இந்த ஒற்றுமைகளைக் காண முடியாது. இரட்டையர்களை ஓரணு இரட்டையர்களா அல்லது ஈரணு இரட்டையர்களா என்று எளிதில் கண்டறியும் சான்று ஏதுமில்லை; பால்வேறுபாடு ஏற்பட்டால் ஒழிய கண்டறிவது கடினமாகும்.

சூழ்நிலை: மனிதர்களின் நடத்தையில் காணப்படும் மாறு பாட்டை அறிவதில் உளவியலார் கவனம் செலுத்துகின்றனர். மாறுபாட்டுக்கான மூலங்களை அறிவதற்கு மரபுநிலை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் சூழ்நிலையும் என்று அவர்கள் கருதுகின்றார்கள். எனவே, சூழ்நிலை மனிதர்களின் நடத்தையில் மாறுபாடுகளை ஏற்படுத்தும் ஒரு முக்கிய மூலக்கூறு என்ற கருத்தில் அதை இங்கு விவரிக்கலாம்.

சூழ்நிலை எது என்பது பற்றி உளவியலார் பொது அறிவு உலகத்திலிருந்து மாறுபடுகின்றனர். பொது அறிவு உலகத்தில் சூழ்நிலை என்று கருதப்படுவது பூபகுதியின் அமைப்பு அல்லது குடியிருப்புப் பகுதியாகும். ஒரு குழந்தை ஏழ்மையான சூழ்நிலையில் வளர்ந்து வருகின்றான். அவன் சேரிப் பகுதியில் வசித்து வருகின்றான் என்று பொருள்படுகின்றது. அல்லது அவன் கிராமச் சூழ்நிலையில் வளர்ந்து வருகின்றான் என்றால் மந்தமான சூழ்நிலையுடைய சிற்றூரில் வசித்து வருகின்றான் என்று பொருள் படுகின்றது. அல்லது அவன் நகரச் சூழ்நிலையில் வசித்து வருகின்றான் என்றால் சீராக்கப்பட்ட வீடுகளும் வீதியமைப்பு களுமுள்ள சுறுசுறுப்பான சூழ்நிலையில் வசித்து வருகின்றான் என்று பொருள்படுகின்றது.

ஆனால், சூழ்நிலையைப்பற்றிய இந்த வரையறைகளெல்லாம் ஓர் உளவியலாருக்குப் போதியதாக இல்லை. உளவியல்படி, சூழ்நிலை என்பது ஒரு தனியாள் கருவில் தோன்றிய நாளிலிருந்து இறந்து போகின்ற நாள் வரையிலும் பெறுகின்ற தூண்டலின் கூட்டு மொத்தம். பெறுகின்ற தூண்டல் எல்லாத் திசைகளிலிருந்தும் வந்து சேரலாம். ஒரு பொருளின் வெறும் உடலிருப்பு ஒரு தனியாளுக்குத் தூண்டலாக இருக்க முடியாது. அது தனியாளின் அனுபவத்தில் ஒரு தூண்டலாக இருக்க வேண்டும்; துலங்கலை உண்டாக்க வேண்டும். அப்படிப்பட்ட பொருள்கள் உள்ளடங்கியதுதான் சூழ்நிலை என்று உளவியலார் நம்புகின்றனர். இந்தச் சூழ்நிலையில் தூண்டலின் எல்லா வடிவங்களையும் உள்ளடக்கிக்கொண்டிருக்கின்றது. வாழ்நாள் முழுவதற்கு நீடிக்கப்படுகின்றது.

சூழ்நிலையானது நடத்தையில் இரண்டு வழிகளில் செல்வாக்குப் பெறுகின்றது. ஒன்று, சூழ்நிலை உடலுறுப்புகளில் விளைவுகளை உண்டாக்கி, அது மறுபடியும் நடத்தையில் விளைவை உண்டாக்குகின்றது; இரண்டு, உளவியல் சார்ந்த எதிர்வினைகளுக்கான தூண்டல்களைத் திரட்டிக் கொடுக்கின்றது. இந்த இரண்டு வகைகளான சூழ்நிலை சார்ந்த செல்வாக்குகள் உறுப்புக்குரியவை என்றும், அனுபவத்திற்குரியவை என்றும் குறிக்கப்படுகின்றன. வளர்ச்சிபெற்று வருகின்ற தனியாளுக்குக் குழந்தை வளர்ப்பு அனுபவங்களும், பள்ளிக்கூடம் செல்லுதலும் சூழ்நிலையில் பெறுகின்ற அனுபவத்தின் செல்வாக்குகளுக்கு நல்ல சான்றுகளாக இருக்கின்றன. சூழ்நிலையில் தொடங்குகின்ற உறுப்புச் சார்ந்த இயக்கத்திற்குச் சில உதாரணங்களைச் சொல்லலாம். நோய் தொற்றல், மூச்சுத் திணறல், ஊட்டச்சத்துக் குறைதல், பிறப்பதற்கு முன்னுள் நிலைமைகள் மூளைச் சிதைவை உண்டாக்கல், இதனால் ஏற்படுகின்ற குறை மனம் முதலியவை சூழ்நிலையால் ஏற்படுகின்ற உறுப்புச் சீர்கேடுகளாகும். இவை பிறகு நடத்தையில் செல்வாக்குப் பெற்று நடத்தைச் சீர்கேடுகளை உண்டாக்குகின்றன. இவ் வகையான மனக்குறைபாடுகள் மரபுநிலையைச் சார்ந்தவையல்ல; உறுப்புகளைச் சார்ந்த குறைபாடுகளாகும்; அனுபவம் சார்ந்தவை என்றும் கூற முடியாது. மரபுநிலைக் காரணத்திற்கும் சூழ்நிலைக் காரணத்திற்கும் எவ்வளவு மாறுபாடுகள் இருக்கின்றனவோ அவ்வளவு மாறுபாடு உறுப்புகளைச் சார்ந்த காரணத்திற்கும் அனுபவத்தைச் சார்ந்த காரணத்திற்கும் உண்டு என்று உளவியலார் நம்புகின்றனர்.

தேர்ந்தெடுத்த இனப்பெருக்கம்: உடற்கூற்றுப் பண்புகளின் மீது மரபுநிலை எத்தகைய செல்வாக்கைப் பெற்றிருக்கின்றது

என்று பிறப்பு மரபியல் வல்லுநர்கள் ஆராய்ச்சிகள் நடத்திப் பார்த்திருக்கின்றார்கள்; இந்தப் புனைக் கொள்கையைப் பரிசோதிப்பதற்காகப் பல்வேறு வகையான மிருகங்களைத் தேர்ந்தெடுத்து இனப்பெருக்கம் செய்து பார்த்திருக்கின்றார்கள். இவ் வகையான பரிசோதனைகள் மெண்டல் (Mendal) என்பவரால் தொடங்கப் பெற்றன.

இந்த வகையான தொழில் நுணுக்க முறையை நடத்தையைப் பற்றிய ஆராய்ச்சிகளிலும் உபயோகிக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. ஆனால், அஃது அண்மையில்தான் நடைபெற்றது. இத் துறையில் புது முயற்சியாளர் என்று கருதப்பட்டவர் டிரயன் (Tryon) என்பவராவார். தம்முடைய பரிசோதனையில் அவர் 142 எலிகளை உபயோகித்தார். சிக்கல் வழியைக் கடப்பதற்கு அவற்றிற்குப் பத்தொன்பது முயற்சிகள் தரப்பட்டன. தவறான வழிகளில் செல்லுகின்ற பிழைபாடுகளை ஒவ்வோர் எலிக்கும் பதிவு செய்யப்பட்டது. எலிகளின் பிழைபாடுகளின் வீச்சு 7லிருந்து 214வரையில் சென்றது. இந்தப் பிழைபாடுகளின் அடிப்படையில் எலிகள் அறிவுக்கூர்மையுள்ள எலிகள் என்றும், மந்தப் புத்தியுள்ள எலிகள் என்றும் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டன.

இனப்பெருக்கம் அந்தந்த வகையைச் சேர்ந்த எலிகளுக்குள்ளேயே நடைபெறுமாறு செய்யப்பட்டது. இந்த வழி அந்த எலி வகைகளிடையே இருபத்திரண்டு தலைமுறைகளுக்கு நடத்தப்பட்டு வந்தது. சிக்கல் வழியைக் கடப்பதை அடிப்படையாகக்கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மிகுந்த புத்திசாலி எலிகளைக்கொண்டே ஒவ்வொரு தலைமுறையிலும் இனப்பெருக்கம் செய்யப்பட்டது. அதே போன்று மிகவும் மந்தப் புத்தியுள்ள எலிகளை மந்தப்புத்தியுள்ள எலிகளோடு சேர்த்தே ஒவ்வொரு தலைமுறையிலும் இனப்பெருக்கத்திற்கு வழி வகுக்கப்பட்டது.

சிக்கல் வழியைக் கடக்கும் செயல் நிறைவேற்றத்தில் எலிகளை வகைப்படுத்தல் செய்யப்பட்டது ஏழாவது தலைமுறையாகும். ஏழாவது தலைமுறையில் தான் செயல் நிறைவேற்றம் இரண்டு வகைகளிலும் ஒன்றன்மீதொன்று படியாமல் நடைபெற்றது. இது படிப்படியாக நடைபெற்றுக்கொண்டு வந்தது. ஏழாவது தலைமுறைக்குப் பிறகு மேற்கொண்டு வேற்றுமை ஏதும் ஏற்படவில்லை. அதன் பிறகு புத்திக் கூர்மையுள்ள எலிகளையும் மந்தப் புத்தியுள்ள எலிகளையும் இணைத்துக் கலப்பு இனப் பெருக்கம் இரண்டு தலைமுறைகளுக்குச் செய்யப்பட்டது. சிக்கல் வழியைக் கடக்கும் செயல் நிறைவேற்றத்தைப் பரப்பி வழங்கியபோது

அஃது எல்லா எலிகளுக்கும் மூலமாக இருந்த முதல் பெற்ருேர்க் குழுவை ஒத்திருந்தது. பெரும்பாலான எலிகள் இடைநிலைக் கெலிப்பு எண்களைப் பெற்றன. சில மந்தப் புத்தியின் கோடியிலும் சில புத்திசாலித்தனத்தின் கோடியிலும் காணப்பட்டன. எனவே, இந்த ஆராய்ச்சி முடிவுகளின்படி, சிக்கல் வழியைக் கடக்கும் செயல் நிறைவேற்றத்தில் பெரும் எண்ணிக்கையுள்ள ஜீன்களின் செல்வாக்கு ஏற்பட்டிருக்கின்றது என்று நம்ப முடிகின்றது.

ஆனல், இந்த முடிவுகளைக்கொண்டு மரபுநிலைச் செல்வாக்குகளின் எந்தக் குறிப்பிட்ட இயந்திர நுட்பங்களின்மூலம் இயக்கம் நடைபெறுகின்றது என்று கூற முடியாது. டிரயனுக்குப் பிறகு வந்தவர்கள் டிரயனுடைய இரண்டு வகை எலிகளினுடைய உடற் கூற்று அளவுகளையும் உளவியல் அளவுகளையும் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்திப் பார்த்தார்கள். அவர்களில் ஃபுல்லர் என்பவரும், தாம்சன் என்பவரும் (Fuller and Thompson) முக்கியமானவர்கள்.

இத் துறையில் ஆராய்ச்சிகள் நடத்திய சியர்லி (Searle) என்பவர் இந்த இரண்டு வகை எலிகளும் பொதுக் கற்றல் ஆற்றலில் மாறுபாடுடையவையாயிருக்கின்றன என்று கூறமுடியாது என்று கருத்துத் தெரிவிக்கின்ருர். ஏனென்ருல், மற்றச் சில கற்றல் பிரச்சினைகளில் புதிர்ப்பெட்டியைக் கடப்பதில் புத்திசாலி எலிகள் என்று கருதப்பட்டவற்றைவிட மேம்பாடுடையவையாக இல்லை. அத்துடன் இந்த இரண்டு வகை எலிகளிடையே குறிப்பிடத் தகுந்த அளவில் மனவெழுச்சி சார்ந்ததும், ஊக்கமூட்டி சார்ந்ததுமான வேற்றுமைகள் காணப்பட்டன.

இவற்றுடன் வேறொரு கருத்தும் எழுப்பப்பட்டது. சில ஊக்கிகளின் வலிமையின்மூலமாக எல்லா உயிரினங்களிலும் நுண்ணறிவு சார்ந்த திறமைகளின் வளர்ச்சியில் மரபுநிலை செல்வாக்குப் பெறலாம் என்ற கருத்தை ஹெயிஸ் (Hayes) என்பவர் வெளியிட்டார். தேர்ந்தெடுத்து இனப் பெருக்கம் செய்து நடத்தையை ஆராய்ச்சி செய்யப்பட்ட இத்தகைய பரிசோதனைகளை மற்ற உயிரினங்களிலும் சிலர் நடத்திப் பார்த்தனர்.

பரிசோதனையில் சூழ்நிலையின் கட்டுப்பாடுகள்: மரபுநிலையும் சூழ்நிலையும் இயங்குவது சம்பந்தமாக ஒரு கருத்து பொதுவாக வழங்கப்பட்டு வருகின்றது. அது, சூழ்நிலையைக் கையாளுவதன் மூலம் மரபுநிலையின் கட்டுப்பாடுகளை மாற்றியமைக்க முடியாது

என்பதாகும். இதற்கு முரணான கருத்தும் ஒன்றுண்டு. அது சூழ்நிலையால் உண்டாக்கப்பட்ட எல்லாக் கட்டுப்பாடுகளையும் தாராளமாக மாற்றியமைக்க முடியும்என்பதாகும். இவ்விதமான முரண்பாடுள்ள கருத்துகள் தோன்றுவதற்குக் காரணம் உயிரினத்தினுடைய வளர்ச்சியில் மரபுநிலைக் கூறுகளும் சூழ்நிலைக் கூறுகளும் இணைந்து செயல்படுவதைப் புரிந்துகொள்ளத் தவறி விடுதலாகும். ஒரு குறைபாடுள்ள சீன் குறை மனத்தை உண்டாக்கி விடலாம். மேலும் அஃது உடல் சீர்கேடுக்கும் மனச் சீர்கேடுக்குங்கூட வழி வகுக்க முடியும். இந்த நிலையைச் சிறு குழவிப்பருவத்திலேயே சரியான உணவுக் கட்டுப்பாட்டின்மூலம் தடுத்துவிட முடியும். ஆனால், அதே சமயத்தில் பிறப்பதற்கு முன்னைய சூழ்நிலையில் இயல்பிறழ்ச்சியினால் ஏற்படுகின்ற கடுமையான மூளைச் சிதைவு குணப்படுத்த முடியாத மனச் சீர்கேட்டை ஏற்படுத்திவிட முடியும்.

ஒரு நிலைமை அடுத்து வருகின்ற சூழ்நிலையின் சிகிச்சைக்கு இணங்குகின்றதோ இல்லையோ என்பது அஃது இறுதியாக மரபு நிலையில் தோன்றுகின்றதா அல்லது சூழ்நிலையில் தோன்று கின்றதா என்பதைச் சார்ந்திருக்கவில்லை; சிதைவின் இயல்பையும் கடுமையையும் சார்ந்திருக்கின்றது. மேலும் அது, சிகிச்சை தொடங்கிய கட்டம் எதுவோ அதையும் நிகழ்ச்சியின் இயந்திர நுட்பத்தைப்பற்றிய அறிவெல்லையையும் சார்ந்திருக்கின்றது. மேலும், எந்த அளவுக்கு நடத்தையானது உறுப்புச் சார்ந்த கூறுகளை நம்பியிருக்கின்றது என்றும் கண்டறிய வேண்டும். அந்தக் கூறுகள் மரபுநிலையில் தோன்றியவையா அல்லது சூழ்நிலையில் தோன்றியவையா என்பதும், எந்த அளவுக்குச் செயல் சார்பான கூறுகளை நம்பியிருக்கின்றன என்பதும் முக்கிய மாகும். உளவியலாருக்கு இந்த அடிப்படைகள்தான் முக்கியமாக இருக்கின்றன.

மிருகங்களின் நடத்தையில் அடுத்து வருகின்ற நிகழ்ச்சிகளில் அவற்றின் முக்கிய அனுபவங்கள் என்ன விளைவுகளை ஏற்படுத்து கின்றன என்று கண்டறியப் பல பரிசோதனைகள் நடத்தப் பட்டிருக்கின்றன. பல்வேறு வகையான நடவடிக்கைகள் அப் பரிசோதனைகளில் கையாளப்பட்டன. தவளைக்குஞ்சின் நீந்தும் செயலிலிருந்து பால்நடத்தைக்காகப் பறவைகள் பாடும் நடவடிக்கை வரையில், குட்டிகளைப் பாதுகாக்கும் நடவடிக்கை வரையில் ஆய்வுகள் நடத்தப்பட்டன. பல பரிசோதனைகளில் புலன் சார்ந்த தூண்டலைக் குறைக்கச் செயற்கை முறைகளும் கையாளப்பட்டன. குறிப்பிட்ட இலக்கச் செயல் முறைகளைப்

பயன்படுத்தும் வாய்ப்புகள் நீக்கப்பட்டன. அதன் பிறகு பொருத்தமான அனுபவங்கள் மறைந்தபோது செயல்முறை எந்த அளவுக்கு விரிவடைகின்றது என்று கண்டுபிடிக்கப்பட்டது.

மற்றும் சிலர் இந்த முறைக்கு முற்றிலும் எதிரான வழியை உபயோகித்தனர்; பல்வேறுபட்ட நடவடிக்கைகளிலும் செறிவான பயிற்சியளித்துப் பரிசோதனையை நடத்தினர்; நடத்தையின் எல்லாப் பண்புக் கூறுகளிலும் எல்லா நடத்தைகளிலும் முந்திய அனுபவங்களின் விளைவுகள் குறிப்பிடத்தக்க அளவுக்குக் காணப்படுவதாக அறிக்கைகள் வெளியிட்டனர். புலன்காட்சி, இயக்கம், கற்றல், மனவெழுச்சி, சமூக எதிர்ச் செயல்கள் முதலியவற்றிலும் விளைவுகள் காணப்பட்டன. இவ் வகையான பரிசோதனைகளின் மூலம் பல நடவடிக்கைகள் முற்றிலும் கற்கப்படாதவை என்றும், இயல்பூக்கமானவை என்றும் கருதப்பட்டவை, மிருகங்களின் முந்திய அனுபவங்களைச் சார்ந்திருப்பவையாகக் கண்டுபிடிக்கப்பட்டன. ஒரு குறிப்பிட்ட செயலைப் பழக்கப்படுத்திக்கொள்ளுவதற்கு ஒரு மிருகத்திற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லையானாலுங்கூட அதனுடைய நடத்தை அந்தச் செயலோடு தொடர்புடைய செயலின் பயிற்சியினால் தூண்டப்படுகின்றது.

உதாரணமாக, பெண் எலிகள் முற்றிலும் தனிமைப் படுத்தப்பட்ட சூழ்நிலையில் வளர்க்கப்பட்டாலும் தங்களுடைய கூடுகளைக் கட்டுவதிலும் குட்டிகளைப் பேணுவதிலும் தங்களுடைய இனம் செய்கின்ற அந்தக் குறிப்பிட்ட முறையிலேயே நடந்துகொள்ளுகின்றன என்று சில ஆராய்ச்சியாளர் கண்டறிந்திருக்கின்றனர். பொருள்களைக் கையாளுவதிலும், உடலைச் சுத்தப்படுத்திக் கொள்ளுவதிலும் எலிகளின் முந்திய அனுபவங்கள் தோன்றுவதாக மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட தேர்வாய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. அடுத்து ஏற்படப் போகின்ற தாய்மை நடத்தைக்கு அந்த நடவடிக்கைகள் மிகவும் அவசியம் என்று குறிப்பிடுகின்றனர். ஆனால், பெண் எலிகள் ஒரு பொருளுமில்லாத கூடுகளில் வளர்க்கப்பட்டபோது வேண்டிய பொருள்கள் கிடைக்கும்படிச் செய்தும் கூடுகள் கட்டத் தவறுகின்றன. மேலும், தங்களுடைய குட்டிகளை மரபுநிலைப்படி ஓரிடத்தில் கூட்டமாக வைத்துக்கொள்ளுவதில்லை.

கற்றல் திறமையின்மீது முந்திய அனுபவத்தின் விளைவைச் செயல் விளக்கம் செய்யும்பொருட்டுக் குரங்குகளின்மீது நடத்தப்பட்ட பல பரிசோதனைகள் வேற்றுமை உளவியலின் கவனத்தை மிகவும் கவர்ந்திருக்கின்றன. கற்றல் அமைவு நிலையின் உருவத்தின்மூலமாக மிகவும் சிக்கலான பிரச்சினைகளுக்குத் தீர்வு

காணுவதற்கு மிருகங்கள் கற்றுக்கொள்ள முடிந்தது. எவ்வாறெனில், சிக்கலான பிரச்சினைகளைப் போன்ற தன்மையுள்ள எளிய பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்ட முந்திய அனுபவத்தைக் கொண்டு அம் மிருகங்கள் சிக்கலான பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடிந்தது. பிரச்சினைக்குத் தீர்வு காணும் இந்த அனுபவத்தின்மூலமாக அம் மிருகங்கள் எவ்வாறு கற்பது என்பதைக் கற்றுக்கொள்ளுகின்றன. எனவே, இந்தப் பரிசோதனைகளின் முடிவுகளைக்கொண்டு பார்க்கும்பொழுது முந்திய அனுபவங்கள் நடத்தை வளர்ச்சியில் நீடித்த விளைவுகளைக் கொண்டிருக்கின்றன என்று தெரிகின்றது.

சில ஆராய்ச்சியாளர்கள் மனிதச் சூழ்நிலையில் மிருகங்கள் எந்த அளவுக்கு மனித நடத்தையின் சிறப்புக் கூறுகளை வளர்த்துக்கொள்ளுகின்றன என்று காண விரும்பினார்கள். அதன் பொருட்டு மனிதக்குரங்குகளைச் சிறு குட்டிகளாக இருக்கும் போதே கொண்டுவந்து முற்றிலும் மனிதர்கள் வாழும் சூழ்நிலையில் வளர்த்து வந்தார்கள். ஹெயிஸ் (Hayes) என்பவரும், அவருடைய கூட்டாளிகளும் ஒரு பெண் மனிதக்குரங்கை அது பிறந்த நாளிலிருந்து வளர்ந்து வந்தார்கள். ஆறரை ஆண்டுகள் அஃது அவர்களுடன் வளர்ந்து வந்தது. பிறரைப் பின்பற்றல்மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அதே வயதுள்ள மனிதக்குழந்தைக்கு இணையாக அஃது இருந்து வந்தது; சோதனைக்கூடத்தில் வளர்க்கப்பட்ட மனிதக்குரங்கைவிடச் சிறந்ததாகவும் இருந்தது. பரிசோதனையாளர்களின் செயல்களை உடனே திருப்பிச் செய்யவும் அதனால் முடிந்தது; சில வீட்டு நடவடிக்கைகளை இயல்பாகவே பின்பற்றிச் செய்து வந்தது; உதாரணமாக, எழுதுகோலைத் தீட்டுதல், காணாமற்போன மூடியைத் தேடி எடுத்தல் போன்ற செயல்களைத் தானாகவே செய்தது; இயந்திரப் பொம்மைகளோடு விளையாடுவதிலும் கருவிகளைக் கையாளுவதிலும் அதனுடைய மனிதக் கூட்டாளிகளோடு இணையான திறமையைக் காட்டிற்று.

சில நுண்ணறிவுச் சோதனைகளில் அதனுடைய வயதையொத்த மனிதக்குழந்தையின் செயல் நிறைவேற்றத்திற்கு இணையாக முன்னேறி வந்தது; உருவப்பலகைகள், படப்புதிர்கள், கட்டைகள் முதலிய செயல் சோதனைகளில் முன்னேற்றத்தைக் காட்டிற்று. அந்த மனிதக்குரங்கிற்கு மொழிதான் ஒரு பெரும் தடையாக இருந்தது. மிகுந்த சிரமத்திற்கிடையே பரிசோதனையாளர் மூன்று சொற்களை அதற்குக் கற்பிக்க முடிந்தது; அவற்றைப் பொருத்தமான சூழ்நிலைகளில்

உபயோகிக்கவும் கற்றுக் கொடுத்தார். பெரும்பாலான சமூகச் செய்தித் தொடர்புக்குப் பழக்கங்களைக்கொண்டு அது துலங்கிற்று; சுட்டிக் காட்டல், பின்பற்றல், விரும்பிய பொருளிடம் ஆள்களை நடத்திச் செல்லுதல் முதலிய செயல்களின்மூலம் தொடர்பு கொண்டது. ஆனல், அம் மனிதக்குரங்கு ஒலிகளை உபயோகித்துப் பேசுவதற்குத்தான் கற்றுக்கொள்ள முடியவில்லை.

மிருகங்களிடம் செயல்விளக்கம் செய்யப்பட்ட சோதனைகளைப் போன்றே மனிதக் குழந்தைகளிடமும் செய்து காட்டலாம். ஆனல், இயல்பான வளர்ச்சி, தொடர்ச்சியில் கட்டுப்பாட்டைச் செய்தாக வேண்டும். அந்தக் கட்டுப்பாடு ஏற்றுக்கொள்ளப் பட்டதாகவும் குழந்தையை எந்த வகையிலும் குறைபாட்டுக் குள்ளாக்காததாகவுமிருக்க வேண்டும். இரட்டைக் குழந்தைகளிடையே கட்டுப்பாட்டைப் புகுத்தி முறையைச் செயல்படுத்த அணுகிப் பார்க்கலாம். அவ்வாறு நடத்தப்பட்ட ஒரு பரிசோதனையில் ஒரணு இரட்டையர்களாகவுள்ள குழந்தைகள் உபயோகப்படுத்தப்பட்டார்கள். ஒரு குழந்தைக்குச் சில நடவடிக்கைகளில் செறிவான பயிற்சியளிக்கப்பட்டது. மற்றொரு குழந்தை கட்டுப்பாட்டுக் குழந்தையாகக் கருதப்பட்டது. கெசல் என்பவரும், தாம்சன் என்பவரும் 46 வார வயதுள்ள ஒரணு இரட்டைக் குழந்தைகளைத் தங்களுடைய பரிசோதனைக்குத் தேர்ந்தெடுத்தனர். அவர்கள் இருவரும் பெண் குழந்தைகள். படிக்கட்டுகளில் தவழ்ந்து ஏறுதல், முப்பட்டைக் கட்டைகளை விளையாட்டுப் பொருளாக உபயோகித்தல் ஆகியவை அக் குழந்தைகளிடம் செலுத்தப்பட்ட செயல்களாகும்.

முதல் குழந்தை தினமும் இருபது மணித்துளி நேரம் இரண்டு நடவடிக்கைகளிலும் பயிற்சியளிக்கப்பட்டாள். பயிற்சி ஆறு வாரங்கள் அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சி முடிவடைந்த போது, முப்பட்டைக் கட்டைகளைக் கையாளும் நடவடிக்கையில் இரண்டாவது குழந்தை எந்த விதமான பயிற்சி பெறவில்லை என்றாலும் அந்த நடவடிக்கையில் முதல் குழந்தைக்கு இணையாக இருந்து வந்தாள். ஆனல், படிக்கட்டுகளில் ஏறும் நடவடிக்கையில் இருவரிடையிலும் மாறுபாடு காணப்பட்டது. பயிற்சிபெற்ற முதல் குழந்தை படிகட்டுகளில் ஏறுவதில் நன்கு திறமையாகச் செயல்பட்டாள். ஆனல், இரண்டாவது குழந்தை ஐந்தாவது படியின் உச்சிக்கு உதவியுடன்கூட ஏற முடியவில்லை. இரண்டு வாரங்களுக்குப் பிறகு பயிற்சி இல்லாமலேயே அந்த இரண்டாவது குழந்தை ஐந்தாவது படியின் உச்சியை உதவியின்றி அடைய முடிந்தது.

அக் குழந்தைகளுடைய வயது அப்பொழுது ஐம்பத்து மூன்று வாரம். இரண்டாவது குழந்தைக்கு இரண்டுவாரம் பயிற்சியளிக்கப் பட்டது. அந்தப் பயிற்சிக்குப் பிறகு இரண்டாவது குழந்தையும் முதல் குழந்தைக்குச் சமமாகப் படிக்கட்டுகளில் ஏறுவதில் திறமையைக் காட்டினள். இப் பரிசோதனை வேறோர் உண்மையையும் புலப்படுத்துகின்றது. தனியாள் உடல் சார்ந்த வகையில் இயலக்கூடியவராக இருந்தபோது பயிற்சியளிக்கப் பட்டால் ஏற்படுகின்ற முன்னேற்றம் முன்னமேயே பயிற்சி யளிக்கப்பட்டு ஏற்படுகின்ற முன்னேற்றத்தைவிட வேகமாக இருந்து வருகின்றது என்பதாகும்.

வளர்ச்சியும் அனுபவமும் நடத்தையில் பெறுகின்ற செல்வாக்கை ஆராய்வதற்கு மற்றொரு முறையிலும் அணுகப் பட்டது. இப் பரிசோதனைக்கான குழந்தைகள் பண்பாட்டின் பயனை அடைய முடியாமலும் உளவியல் கட்டுப்பாட்டைக் கொண்ட சூழ்நிலையிலும் வளர்க்கப்பட்டவர்கள். தனிப்பட்ட குழந்தைகள் இயல்பான மனிதத் தொடர்புகளிலிருந்து பிரிக்கப் பட்டுத் தனித்து வளர்க்கப்பட்டார்கள். மேலும், அவர்கள் வழிப் போக்கர் விடுதிகளிலும், படகு வீடுகளிலும் தூரத்திலுள்ள மலைச் சிற்றூர்களிலும் வளர்க்கப்பட்டார்கள். இந்தச் சூழ்நிலை களில் எல்லாம் குறிப்பிடத்தக்க அளவுக்கு அவர்கள் நுண்ணறிவில் பின் தங்கியிருப்பதாகக் காணப்பட்டார்கள். அது வயது ஏற ஏறக் கடுமையடைந்துகொண்டு வந்தது. அனாதைக் குழந்தைகளிடம் ஆராய்ச்சிகளை நடத்திப் பார்த்தபோதும் நுண்ணறிவில் அவர்கள் பின்தங்கியிருப்பதாகத் தெரிந்தது. அவ் வகையான நிலைமைகளுக்கு அவர்களை நடத்திச் சென்ற முக்கிய கூறு எல்லைக் குட்பட்ட அனுபவமும் போதிய அளவு வயது முதிர்ந்தோர் தொடர்பும் அளிக்கப்படாமையேயாகும்.

சற்றுப் பெரியவர்களாக வளர்ந்த குழந்தைகளிடமும், வயது வந்தவர்களிடமும் இவ் வகையான ஆய்வுகள் நடத்தப்பட்டன. அந்த ஆய்வுகளில் நுண்ணறிவு வளர்ச்சியின்மீது பள்ளிக்கூடம் எத்தகைய விளைவுகளைக்கொண்டிருக்கின்றது என்று காணப் பட்டது. அனாதைக் குழந்தைகளின் நுண்ணறிவுச் செயல் முறையில் பள்ளிக்கூடம் போவதற்கு முன்பு பெற்ற கல்வியின் விளைவுகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியதை சிலர் வெளிப்படுத்திக் காட்டினர். நுண்ணறிவில் மிகவும் உயர்ந்துள்ள குடும்பங்களிலிருந்து வருகின்ற குழந்தைகள் நர்சரிப்

பள்ளிக்குத் தொடர்ந்து சென்று வந்தாலும் அவர்களுடைய நுண்ணறிவுச் செயல் நிறைவேற்றத்தில் மிகக் குறைந்த விளைவே காணப்படுகின்றது.

குடும்ப ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்: உளவியல் பண்புகளில் குடும்ப ஒற்றுமைகள் காணப்படும்பொழுது அதை முற்றிலும் மரபுநிலை என்று குறிப்பிடுவது எங்கும் பொதுவாக இருந்து வருகின்ற நம்பிக்கையாகும். குடும்பத்தில் ஒன்றுபோலக் காணப்படும் தன்மையைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்துவது மரபியல் வல்லுநர்களின் விரும்பிய துறையாக இருந்து வருகின்றது. அவர்களுடைய செய்திப்பொருளுக்கு மூலாதாரமாக அஃது இருந்து வருகின்றது.

தேர்தெடுத்த இனப்பெருக்க முறைகளை உபயோகிப்பது மிகவும் கடினமான செயல் என்பதால் குடும்ப ஒற்றுமையின் நடத்தையை அறிவதற்கு மரபுநிலையின்மீதும் சூழ்நிலையின்மீதும் ஆராய்ச்சிகள் நடத்துவதற்குப் புள்ளி விவரவியலைப் பெரிதும் நம்பியிருக்க வேண்டியிருக்கின்றன. குடும்ப ஒற்றுமைகள் மரபுநிலையின் செல்வாக்கை அவையாகவே செயல்விளக்கம் செய்வதில்லை. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்கள் சூழ்நிலையில் பல பொதுச் சிறப்புக் கூறுகளை நாடிச் செல்லுகின்றார்கள்; குறிப்பாகச் சமூகப் பொருளாதார அளவிலும், பூகோளப் பண்பாட்டுச் சூழ்நிலைகளிலும், இன்னும் இவை போன்றவற்றிலும் ஒத்துச்செல்ல விரும்புகின்றார்கள். மரபுநிலைத் தொடர்புறவுகள் நெருக்கமாக இருக்குமானால் சூழ்நிலையின் நெருங்கிய தன்மையும் பெரிதாக இருக்கின்றது. எனவே, பெற்றோர்களும், குழந்தைகளும், சகோதரர்களும், சகோதரிகளும் வழக்கமாக ஒரே வீட்டில் வசிக்கின்றார்கள். தூரத்து உறவினர்கள் அத்தை, மாமன், சித்தப்பா, சின்னம்மா அவர்களுடைய குழந்தைகள் ஆகியோர் முந்தியவர்களைவிடக் குறைவான சூழ்நிலை நெருக்கத்தைக்கொண்ட பகுதிகளில் வசிக்கின்றனர்.

ஆனால், சில சமயங்களில் உறவினரல்லாத மனிதர்கள் தற்செயலாக நெருக்கமான சூழ்நிலையில் வசிக்கவேண்டிய நிலையும் ஏற்படுகின்றது. ஒரேவிதமான குடியிருப்புநிலைகளைக்கொண்டிருப்பதனால் உறவினர்களாயுள்ள மனிதர்கள் பொதுவான சூழ்நிலைத் தூண்டலுக்குத் தங்களை வெளிப்படுத்திக்கொள்ளுகின்றார்கள். ஆனால், அவர்கள் ஒவ்வொருவருடைய சூழ்நிலையிலும் பங்குகொள்ளுகின்றார்கள்; அதனால் அவர்களிடையே பரஸ்பரமாகப்

பறிமாற்றச் செயல்கள் நடந்து வருவதால் சில பண்புக் கூறுகளில் மிகவும் ஒத்திருக்கின்றார்கள்.

குடும்ப உறுப்பினர்கள் ஒத்த தன்மையோடிருப்பதற்கு முக்கிய காரணம் சமூக எதிர்பார்த்தல் என்பதுமாகும். குழந்தை எப்பொழுதும் தனித்திறமையைப்பற்றி நினைவூட்டப் படுகின்றான்; அல்லது அவனுடைய மூதாதையர்களின் குறை பாடுகளைப்பற்றி எச்சரிக்கை செய்யப்படுகின்றான். அவற்றில் ஏதேனும் ஒரு பண்புக் கூறு அவனிடம் காணப்படுமானால், அதை எடுத்துக்காட்டாகக் கொண்டு மிகைப்படுத்தப்படுகின்றது. அவன் தன்னுடைய தந்தையின் தொழிலை மரபுரிமையாக ஏற்க வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டான்; அல்லது அவனுடைய தாத்தாவின் கலையறிவு அவனிடம் செல்வாக்குப்பெற்றிருக்க வேண்டும். இவை மறுபடியும் அடுத்து நடைபெறுகின்ற வளர்ச்சியில் விளைவை ஏற்படுத்துவதாக இருக்கலாம். திறமை பெற்றக் குடும்பங்களைப்பற்றியும் குறைமனம் கொண்ட குடும்பங் களைப்பற்றியும் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் காட்டுவது என்ன வென்றால், சில பண்புக் கூறுகளுள்ள குடும்பங்களிடம் ஒரு வலிமையான மனப்போக்கு காட்டப்படுகின்றது என்பதாகும்.

அந்தக் குடும்பங்கள் நிலைநாட்டிய திறமைகளும் அல்லது குறைபாடுகளும் மரபுநிலையிலிருந்து வெளிப்பட்டவையா அல்லது சூழ்நிலையிலிருந்து வெளிப்பட்டவையா என்று குடும்பத்தின் வரலாறுகளை மட்டும் வைத்துக்கொண்டு கூற முடியாது. இரத் தத்தின் வகை அல்லது நிறக் குருடு அல்லது சுவைக் குருடு போன்ற மரபுநிலைப் பண்புகளைப்பற்றி ஆராய்ச்சி செய்வதில் கால்வழிப் பாகுபாட்டை உபயோகப்படுத்தும் வகைக்கு உளவியல் பண்புகளை உள்படுத்த முடியாது. ஒரு பண்புக் கூறு ஒரு சீன் வழியாக அனுப்பப்படும்போது ஒரு குடும்பத்தின் பல்வேறு தலைமுறை களிலும் அதனுடைய செல்வாக்கின் வடிவத்தைத் தணிக்கை செய்து பார்ப்பது ஒப்பீட்டு அடிப்படையில் எளிதாக இருக்கின்றது. எதிர்பார்த்த பல்வேறு மரபியல் இயந்திர நுட்பங்களான ஆதிக்கம் செலுத்தல், பின்வாங்கல், பால் இணைப்பு, புதுமைப்போக்கு முதலிய வடிவங்களைப் பரம்பரையாகத் தோன்றி வருகின்ற உறுப் பினர்களிடம் ஒத்திட்டுப்பார்த்துச் சரிபார்க்க முடியும்.

மனக் குறைபாட்டின் சில அரிய வடிவங்களின் மரபியலின் அடிப்படையைச் செயல்விளக்கம் செய்து காட்டுவதோடு சில உளவியல் நிலைமைகளையும் வெளிப்படுத்திக் காட்டலாம். ஆனால், இப்படிப்பட்ட பாடுபாடுகள் உளவியலில் மிகக் குறைந்த

பயனையே தருவதாக இருக்கின்றன. பெரும்பாலான நடத்தைச் செயல்முறைகளுக்கு மிக அதிகமான எண்ணிக்கையுள்ள மரபு நிலைப் பண்புகள் துணையுதவியளிப்பதால், செயற்படுத்தல்களில் இவை முக்கிய இடையூறுகளாக இருக்கின்றன. இதனுடைய முடிவு பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பண்பின் இயல்பான பரவல் பெறப்படுகின்றது. தெளிவாக வரையறுக்கப்பட்ட சில முடிவுகள் பெறப்படுவதில்லை.

உளவியல் பண்புக் கூறுகளில் குடும்பங்களிடைப்பட்ட ஒத்த தன்மையைத் தேர்வு ஆராய்ச்சி செய்யப்பட்டது. தொடர்புள்ள மனிதர்களின் பெரும் குழுக்களில் பெற்ற உளவியல் சோதனைகளின் கெலிப்பு எண்களை இணைப்புத் தொடர்பாடு செய்யப்பட்டது. நுண்ணறிவுச் சோதனைகளின் பொருத்தப்பாடு பெற்றோர்-குழந்தைகளிடையே சராசரியாகத்தான் (·5) காணப்பட்டது. வாய்ச்சொல் சார்ந்த சோதனைகள் உயர்ந்த பொருத்தப்பாடுள்ளவையாக இருந்தன. ஆளுமைச் சோதனைகளில் பொருத்தப்பாடுகள் பொதுவாக உடன்பாடாகவும் குறிப்பிடக்கூடியதாகவுமிருந்தன. பொதுவாகக் குடும்பப் பொருத்தப்பாடுகள் மனவெழுச்சிப் பண்புகளைவிடக் கவர்ச்சிகளிலும், மனப்பான்மைகளிலும் உயர்ந்து காணப்பட்டன. மேலும், பையன்களைவிடப் பெண்கள் பெற்றோர்களின் மனப்பான்மைகளோடும், அபிப்பிராயங்களோடும் அதிகமாக ஒத்திருப்பதாகக் காணப்பட்டார்கள். எனவே, எந்த ஒரு பண்பாட்டிலும் பையன்களைவிடப் பெண்களிடந்தான் குடும்பத்தின் செல்வாக்கு அதிகமான உளவியல் நிலைமைகளை வெளிப்படுத்துகின்றது என்று கூறலாம்.

நடத்தையில் மரபுநிலைப் பண்புகளும் சூழ்நிலைப் பண்புகளும் பெற்றிருந்த செல்வாக்கை ஆராயும் முயற்சியில் குறிப்பாக ஓரணு இரட்டைக் குழந்தைகளும் ஈரணு இரட்டைக் குழந்தைகளும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன. பல உளவியலார் இம் முயற்சியில் ஈடுபட்டனர். ஓரணு இரட்டைக் குழந்தைகளிடம் காணப்பட்ட ஒத்தமைவின் படித்தரத்தை ஈரணு இரட்டைக் குழந்தைகளிடம் காணப்பட்டதோடும் சகோதரர்களிடம் காணப்பட்டதோடும் ஒத்திட்டுப் பார்க்கப்பட்டது. நுண்ணறிவுச் சோதனைகளில் மட்டுமன்றிப் பல இயற்கையறிவுச் சோதனைகளிலும் ஆளுமைப் பண்புகளிலும் மூன்று வகைக் குழந்தைகளின் ஒத்தமைவுகள் ஒத்திட்டுப் பார்க்கப்பட்டன.

ஓரணு இரட்டைக் குழந்தைகள் ஒரே சீன்களைக் கொண்டிப்பதால், அவர்களிடையே காணப்பட்ட மாறுபாடுகள் சூழ்நிலை

யால்தான் என்று கருதப்பட்டது. ஈரணு இரட்டைக் குழந்தைகள் மரபுநிலையில் மற்றச் சகோதரச் சகோதரிகளைப் போன்றவர்களாகவே இருந்தார்கள். ஈரணு இரட்டையர்கள் ஒரே வயதுடையவர்களாக இருப்பதால், மற்றச் சகோதரச் சகோதரிகளைவிட அதிகமாக ஒத்த தன்மையுள்ள சூழ்நிலைகளைப் பெற்றிருந்தார்கள். ஓரணு இரட்டையர்களின் நுண்ணறிவுச் சோதனைக் கெலிப்பு எண்கள் இணைப்புப் பொருத்தப்பாடு செய்யப்பட்டன. அது (·9) மிகவும் உயர்ந்த எண்ணைக்கொண்டிருந்தது. ஆனால், அஃது ஈரணு இரட்டையர்களிடையே சற்றுக் குறைவாக (·7) இருந்த; துசகோதரர்களிடையே இதைவிடச் சற்று அதிகமாக இருந்தது. ஈரணு இரட்டையர்களைவிடச் சகோதரர்களிடம் காணப்பட்ட இணைப்புப் பொருத்தப்பாடு (·2) அதிகமாக இருப்பதற்குக் காரணம் சூழ்நிலையில் மிகுதியான ஒத்தமைவு இருந்ததாகும்.

ஆனால், ஓரணு இரட்டையர்களுக்கும் ஈரணு இரட்டையர்களுக்கும் இடையிலிருந்த இணைப்புப் பொருத்தப்பாட்டின் வித்தியாசம் (·2) எதனால் ஏற்பட்டது என்று உறுதியாகக் கூற முடியவில்லை. தேர்வாராய்ச்சிகளிலிருந்து கிடைக்கின்ற விவரங்களின்படி ஓரணு இரட்டையர்களின் மரபுநிலை ஒத்தமைவு அதிகமாக இருக்கின்றது என்றும், இது மேலும் நெருங்கிய தொடர்புகளின்மூலமும் அனுபவங்களில் பங்கு கொள்வதன் மூலமும் குறையாமல் பார்த்துக்கொள்ளப்படுகின்றது என்றும் தெரிகின்றது. ஆனால், கிடைத்துள்ள மாறுபாட்டுக்கு மரபுநிலையோ அல்லது சூழ்நிலையோ தனித்தும் ஒன்று சேர்ந்தும் காரணமாக அமைகின்றன என்று கருதலாம்.

ஓரணு இரட்டைக் குழந்தைகள் தனித்தனியே வளர்க்கப்பட்டபோது என்ன நடந்தது என்று நிகழ்ச்சி வரலாறுகளின் மூலம் பார்க்கலாம். நூறு ஓரணு இரட்டைக் குழந்தைகள் கண்டுபிடிக்கப்பட்டு ஆராய்ச்சியாளர்களால் பரிசோதிக்கப்பட்டார்கள். நியூமன் (Newman) என்பவரும், அவருடைய கூட்டாளிகளும் விரிவான தேர்வாராய்ச்சி நடத்தினார்கள். பத்தொன்பது இணைகளின் ஓரணு இரட்டைக் குழத்தைகளில் பெரும்பாலானவர்கள் ஒரு வயதுக்குள்ளாகவே பிரிக்கப்பட்டார்கள். அவர்கள் ஒன்றுக வளர்க்கப்பட்ட ஐம்பது ஓரணு இரட்டைக் குழந்தைகளோடும் ஐம்பது ஈரணு இரட்டைக்குழந்தைகளோடும் ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டார்கள். ஸ்டேன்ஃபோர்டு-பினெட் (Stanford-Binet) நுண்ணறிவுச் சோதனை அவர்களிடம் உபயோகிக்கப்பட்டது. பிரிக்கப்பட்ட ஓரணு இரட்டையர்களின்

கெலிப்பு எண்களின் இணைப்புப் பொருத்தப்பாடு ·77 ஆக இருந்தது. ஆனால், ஒன்றாக வளர்க்கப்பட்ட ஓரணு இரட்டையர்களின் கெலிப்பு எண்களின் பொருத்தப்பாடு ·88ஆக இருந்தது. அதே சமயத்தில் ஈரணு இரட்டையர்களின் கெலிப்பு எண்களின் பொருத்தப்பாடு ·63ஆக இருந்தது.

பிரிக்கப்பட்ட ஓரணு இரட்டையர்கள் ஒத்த தன்மையில்லாத சூழ்நிலையில் வளர்க்கப்பட்டவர்களிடம் நுண்ணறிவு ஈவில் மிகுந்த வேறுபாடுகளிருந்தன. ஆனால், பெரும்பாலான நிகழ்ச்சிகளில் ஒத்த தன்மையுள்ள சூழ்நிலைகளிருந்தமையால், நுண்ணறிவு ஈவு அவர்களிடையே அதிக வேறுபாடுகளைக் காட்டவில்லை. எவ்வளவுதான் இம் முறையில் சிரமப்பட்டு ஆராய்ச்சிகள் நடத்தினாலும் வளர்ப்புப் பிள்ளைகள் அவர்கள் என்று கருதப்பட்டு முரண்பாடான விளக்கங்கள் கூறும் நிலையும் ஏற்படுகின்றது.

குழந்தைகளின் பிறப்புச் சூழ்நிலையைப்பற்றி நாம் தெரிந்து கொண்டிருப்போமானால், அவர்கள் வளர்ப்புப் பிள்ளைகளாகச் செல்லுகின்ற சூழ்நிலை அதைவிடச் சிறந்ததாக இருக்குமானால், குழந்தைகளின் நுண்ணறிவு வளர்ப்புச் சூழ்நிலையில் அதிகரிக்கும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். மேலும், வளர்ப்புக் குடும்பத்தின் சூழ்நிலை சார்ந்த செல்வாக்கில் வளர்ப்புப் பெற்றோர்களை எந்த அளவுக்கு வளர்ப்புக் குழந்தைகள் ஒத்தமைவு கொள்கின்றார்கள் என்று கூறுவது மிகக் கடினமான செயலாகும். இரட்டைக் குழந்தைகளும், வளர்ப்புக் குழந்தைகளும் மரபு நிலையிலும் சூழ்நிலையிலும் பெறுகின்ற செல்வாக்கைப்பற்றிப் பாகுபாடுகள் செய்வதற்கு எவ்வளவுதான் வாய்ப்புகளை அளித்தாலும் அவற்றிலிருந்து பெறப்படுகின்ற முடிவுகள் உண்மைகளை நிலைநாட்டுவதற்குப் போதியவையாக இல்லை. ஏனென்றால், உண்மையான குடும்பச் சூழ்நிலையில் பல மாறுமியல்புகளின் சிக்கலான ஊடாட்டம் பரிசோதனையின் முடிவுகளுக்கு உறுதியானதொரு விளக்கமளிப்பதைத் தடுத்து நிறுத்துகின்றது. எனவே, பரிசோதனை முடிவுகளெல்லாம் கருத்துத் தெரிவிப்பனவாகவே இருக்கின்றன.

3. திறமையும் வயதும்

மனிதனுடைய பருவத்தில் பல கட்டங்களிருக்கின்றன. குழந்தைப் பருவம், குமரப் பருவம், வயது வந்த பருவம், முதுமைப் பருவம் என்று பெரும் பருவங்களில் மனிதனை அடக்கலாம். இவையன்றி ஏழு பருவங்களாகவும் பிரிக்கின்றனர். ஆனால், எத்தனைப் பருவங்களைக் காட்டினாலும் ஒரு வரை எல்லையை அடிப்படையாகக்கொண்டே அதைச் செய்கின்றனர். ஒவ்வொரு பருவத்திலும் வயது அதை வரையறுக்கின்றது. நடத்தையில் ஒவ்வொரு பருவமும் வேறுபாட்டைக் காட்டுகின்றது. எனவே, மனிதனின் பருவக்கட்டங்கள் நடத்தையிலும் வயதிலும் வேற்றுமைகளைக் காட்டுகின்றன.

குழந்தை உளவியலும் குமரப்பருவ உளவியலும் தனியாள் வளர வளர அவனிடம் காணப்படும் பல்வேறு வகையான மாற்றங்களைத்தான் முறையாகச் சொல்லிச் செல்லுகின்றன. இன்று மிக விரைவாக வளர்ந்து வருகின்ற முதிர்ச்சி பற்றிய ஆராய்ச்சியும் முதிர்ந்த வயதுபற்றிய ஆராய்ச்சியும் முழு வாழ்க்கையையும்பற்றிய அறிவெல்லையை முற்றுப்பெற வைக்கின்றது என்று நம்பலாம். வயது மாற்றங்களின் விளைவுகளை உளவியலார் விளக்கப்படங்கள்மூலம் காட்டியிருக்கின்றனர். இயக்கப் பயிற்சிகள், புலன்காட்சிச் செயல்முறைகள், நுண்ணறிவு ஆற்றல்கள், சமூக மனவெழுச்சிப் பண்புகள், கவர்ச்சிகள், மனப்பான்மைகள் ஆகியவை பல்வேறு வாழ்க்கைப் பருவங்களிலும் எத்தகைய மாற்றத்தையடைகின்றன என்றும் அவர்கள் கண்டறிந்து வருகின்றார்கள்.

பல்வேறு பருவங்களிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களை விளக்கிக் கூறுவதற்கு நுண்ணறிவுத் துறையில் நடத்தப்பட்ட சோதனைச் செயல் நிறைவேற்றத்தை எடுத்துக்கொள்ளலாம்.

ஏனென்றால், இத் துறைதான் மனிதனின் முழு வாழ்க்கையையும் துருவி ஆராய்ந்திருக்கின்றது. வளர்ச்சி என்ற சொல் முதிர்ச்சிக்கு முன்பு நடைபெறுகின்ற மாற்றங்களைச் சுட்டுவதற்கு உபயோகிக்கப் படுகின்றது. எனவே, வளர்ச்சி என்று நாம் நினைக்கும்போதே தனியாளினுடைய உடற்கூறுகளில் ஏற்படுகின்ற ஒழுங்கு முறையான வளர்ச்சித் தொடர்ச்சியைத்தான் நினைவு கொள்ளு கின்றோம். எனவே, ஒரு குழந்தையின் வயது ஏற ஏற அவனுடைய உயரம் அதிகரிக்கின்றது; அவனுடைய உடல் வீதம் சீராக்கப் படுகின்றது; மற்றும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன; உடலமைப்புகள் வயதோடு சீராக்கப்படுவதால், அவற்றின் செயல் முறைகளும் மாற்றமடைகின்றன என்று நாம் எதிர் பார்க்கலாம்.

வலிமையான தசைநார்களைப் பெற்ற குழந்தை நன்றாக நடக்கக் கற்றுக்கொள்ள முடியும்; படிக்கட்டுகளில் ஏற முடியும். அவன் இளம் குழந்தையாக இருந்தபொழுது செய்ய முடியாத பல்வேறுபட்ட கடமைகளைத் திறமையோடு செய்ய முடிகின்றது. செறிவான பயிற்சியும் மிகவும் இளம் வயதில் கவனத்தைக் கவர முடியாத மாற்றத்தைத்தான் உண்டாக்க முடியும். ஆனால், சற்று வயது வந்த குழந்தைக்குக் கொடுக்கப்படுகின்ற மிகக் குறைந்த அளவு பயிற்சிகூடச் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும். எளிய புலன் இயக்க வளர்ச்சியிலுங்கூடக் குழந்தையின் முன்னேற்றத்தில் அனுபவக் கூறுகள் செல்வாக்குப் பெற முடியும். பரிசோதனைகள் இதை வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றன.

பெரிய குழந்தையின் நடத்தை வளர்ச்சியில் கற்றல் பெரும் பங்கேற்று மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. வளர்ச்சி என்ற சொல்லை நாம் நடத்தை என்ற செயல்முறைக்கு உபயோகிக்கும் பொழுது கற்றலினால் விளைகின்ற தொடர்ச்சியான மாற்றங்களைத் தான் நாம் குறிப்பிடுகின்றோம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். எந்த நுண்ணறிவு சார்ந்த வீழ்ச்சியிலும் செயல் சார்ந்த கூறுகள் முக்கிய பங்கேற்றுள்ளன என்பதையும் பிந்திய வாழ்க்கையில் நிகழுகின்ற மற்ற உளவியல் மாற்றங்களையும் செயல் சார்ந்த கூறுகள் முக்கிய பங்கேற்கின்றன. முதுமைப் பருவத்தில் உடல் கூறுகளில் சீரழிவு ஏற்படுவதால்,அஃது உளவியல் செயல் முறைகளைப் பழுதடையச் செய்கின்றது. என்றாலும், பெரும்பாலான வீழ்ச்சி சாதாரணமாக வயது முதிர்ந்தவர்களின் அனுபவத்தின் அடிப்படையைக்கொண்டிருக்கின்றது. ஒரு மனித னுடைய வயது என்ன என்று தெரிந்துகொண்டால் மட்டும்

போதாது. அவன் அவனுடைய காலம் முழுவதும் என்ன செய்து கொண்டிருந்தான் என்றும் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

குறுக்குப் பகுப்பியல் வழி : அதே மனிதர்களை நீண்ட காலத்திற்குத் திருப்பித் திருப்பிச் சோதனைகள் செய்துகொண்டிருப்போமானால், பல செயல் சார்பான பிரச்சினைகளை அது எழுப்பலாம். எனவே, வயது மாற்றங்களை ஆராய்வதில் அடிக்கடி குறுக்குப் பகுப்பியல் முறைகளைப் பயன்படுத்துகின்றனர். உதாரணமாக, எட்டு வயதிலிருந்து பதினாறு வயதுவரையிலுள்ள குழந்தைகளை ஒரே சமயத்தில் பரிசோதிக்கலாம். ஒவ்வொரு வயதின் இடைகெலிப்பு எண்ணையும் (mean score) அந்த வயதுக்கு நேரே குறிப்பிடலாம். இதிலிருந்து ஊகிக்கக்கூடியது என்னவென்றால், இந்தப் பரிசோதனையில் எட்டு வயதுள்ள குழந்தைகள் பதினாறு வயதுக்குப் படிப்படியாக வளர்ந்து செல்லும்போது அந்தந்த வயதுக்கு நேரேயுள்ள இடைகெலிப்பு எண்ணைப் பெறுவர் என்பதாகும். ஆனால், இந்த ஊகம் சில குழுக்களில் ஐயப்பாடுகளை எழுப்பக் கூடியதாக இருக்கின்றது.

வயது, தேர்ந்தெடுத்த கூறுகளாக இருப்பதால், பல்வேறு வயதுக்குழுக்களை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. உதாரணமாக, உயர்நிலைப்பள்ளியிலுள்ள மேல்வகுப்பு மாணவர்கள் பெரும்பாலும் அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இந்த வகையான தேர்தல் முறையில் மந்தமாயுள்ள மாணவர்கள் பரிசோதனையில் சேர்த்துக்கொள்ளப்படுவதில்லை. எனவே, இந்த மாதிரியான நிலைமைகளில் மேல்வகுப்பு மாணவர்களின் உயர்ந்த இடை கெலிப்பு எண்கள் தேர்ந்தெடுப்பதிலிருந்து கிடைக்கின்றன. வயதுடன் அதிகமாகக் கிடைப்பது போன்று தோன்றுகின்ற கெலிப்பு எண் அதே மாணவர்களிடம் மறுசோதனை செய்யும்போது உயர்ந்து காணப்படுகின்றது.

குறுக்குப் பகுப்பியல் முறைகளுக்கு எழுப்பப்படுகின்ற மற்றொரு மறுப்பு பல்வேறு குழுக்களுக்கும் உள்ள அனுபவ அடிப்படைகள் ஒன்று போல இருப்பதில்லை என்பதாகும். ஒப்பிட்டுப் பார்க்கப்படுகின்ற குழுக்களின் வயது வித்தியாசம் மிகவும் விரிந்திருக்குமானால், இந்த உண்மை மிகவும் தெளிவாகக் காணப்படலாம். உதாரணமாக, இன்று முப்பது வயதுள்ள மனிதர்களையும் பதினைந்து வயதுள்ள இளைஞர்களையும் ஒப்பிட்டுப் பார்த்துக் காணப்படுகின்ற வேற்றுமைகளுக்கு வயதோடு தொடர்புடைய கூறுகளைக் காரணமாகக் காட்ட முடியாது. ஏனென்றால், இன்று முப்பது வயதுள்ளவர்கள் பதினைந்து வயதாக

இருந்தபோது கல்வியின் மட்டம் இப்பொழுதுள்ளது போன்றே இருந்திருக்காது. அது சமயம் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கையும் அல்லது சதவிகிதமும் மிகவும் குறைவாகவே இருந்திருக்கும். சில வகையான பள்ளிக்கூட நடவடிக்கைகளுக்கு அந்தச் சமயத்தில் வசதிகள் இல்லாமலுமிருந்திருக்கலாம். பல சமூகச் சூழ்நிலைகளும், மனப்பான்மைகளும், கவர்ச்சிகளும் பெரிதும் மாற்றம் பெற்றிருக்கலாம். எனவே, இவ் வகையான வயதுக் குழுக்களை ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் சிக்கலான செயலாகும்.

இன்றுள்ள சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட பதினைந்து வயது இளைஞர்களின் சமூகச் சிந்தனைகளும், சமூக நடவடிக்கைகளும், கல்வி மனப்போக்கும், வாழ்க்கைப்பற்றிக் கொண்டுள்ள கருத்தும் முப்பது வயது மனிதர்களிடமிருந்து முற்றிலும் வேறுபட்டிருக்கின்றன. குறுக்குப் பகுப்பியல் முறையிலுள்ள மற்றொரு குறைபாடு என்னவென்றால், இம் முறை சராசரி முடிவுகளையே தர முடியும். தனியாள் மாற்றங்களைப் பாகுபாடு செய்வது முடியாது.

குறுக்குப் பகுப்பியல் முறையிலுள்ள குறைபாடுகளைக் கவனித்தவர்கள் நீண்ட நாளுக்குரிய முறையை (longitudinal) உபயோகிப்பதற்கு முன்வரலாம். ஆனால், இந்த முறையும் ஒழுங்குமுறையான ஆராய்ச்சியிலுள்ள குறைபாடுகளிலிருந்து முற்றிலும் விலகியிருக்கவில்லை. இந்த முறையின்படி நடத்துகின்ற பின்தொடரும் ஆராய்ச்சிகள் பல ஆண்டுக் காலத்தை எடுத்துக்கொள்ளுகின்றது. நீண்ட காலத்தை இஃது எடுத்துக்கொள்ளுவதால் தொடக்கக் காலத்தில் இருந்த அதே எண்ணிக்கையுள்ள மாதிரிகள் தொடர்ந்து ஒவ்வொரு பின்தொடரும் ஆராய்ச்சியிலும் பல ஆண்டுகளுக்கு இருந்து வரும் என்று நம்ப முடியாது. மேலும், ஆராய்ச்சியில் சேர்க்கப்பட்ட தனியாள்கள் நிலையான குடியிருப்புக்களைக்கொண்டிருத்தல், தேர்வாராய்ச்சி நடத்துகின்றவரோடு ஒத்துழைத்தல் ஆகிய பண்புகளில் தேர்ந்தெடுக்கப்படலாம். இந்தப் பண்புக் கூறுகளின்மீது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடமிருந்து தொடர்புடைய பல பண்புக் கூறுகளான குடும்பத்தின் பண்பாட்டு அளவு, பெற்றோர் – குழந்தைகள் தொடர்புறவுகள், மனப்பான்மைகள், கவர்ச்சிகள் ஆகியவற்றில் கைவிடப்பட்டவர்கள் வேற்றுமையுள்ளவர்களாகக் காணப்படுகின்றார்கள்.

இந்தக் காரணங்களினால் நீண்ட நாளுக்குரிய முறையில் உபயோகிக்கப்பட்ட மாதிரிகள் பொதுமக்கள் தொகையிலிருந்து சற்று உயர்வானவர்களாகக் கருதப்படுகின்றார்கள். அனாதைக் குழந்தைகள் போன்ற நிறுவனத்திலிருந்து எடுக்கின்ற மாதிரிகள்

இதற்கு முரணானவையாக இருக்கின்றன. இந்த வகையான நிலைமையில் நல்ல பொருத்தப்பாட்டைக்கொண்ட குழந்தைகள் ஒத்தமைதலுக்காக அகற்றப்படலாம். மீதியுள்ள மாதிரிகள் தாழ்ந்த பகுதியைப் பிரதிபலிக்கின்றன என்று கொள்ளலாம். எவ்வாறிருப்பினும், நீண்ட நாளுக்குரிய முறையிலிருந்து மொத்த மக்கள் தொகைக்கும் பொதுக்கருத்தை உருவாக்குதல், தேர்ந் தெடுக்கப்பட்ட எந்தக் கூறும் இயக்கத்திலிருக்கின்ற தகுதியைப் பெற்றிருப்பதன் மூலமாக இருக்க வேண்டும். இதில் மிகவும் தீமையானது என்னவென்றால், அத்தகைய தேர்தல் பரிசோதனை முடிவுகளின் எல்லையைக் கட்டுப்படுத்தி விடுகின்றது. ஆனால், முடிவு எந்த மக்கள் தொகையைச் சேர்ந்தது என்று தெளிவாகச் சுட்டிக் காட்டப்படுமானால், அது மதிப்பீட்டில் தீங்கு பயப்பதில்லை.

இவற்றைப் போலவே மற்றொரு முறையும் ஒழுங்குமுறையாகப் பிரச்சினைகளை அணுகுகின்றது. அஃது ஆராய்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ளல். இது பரிசோதிக்கப்படுபவரின் வளர்ச்சியைச் சார்ந்திருக்கின்றது. சோதனையில் ஈடுபடுகின்ற பழக்கம், சோதனை நடத்துகின்றவரோடு திரும்பத் திரும்பப் பெறுகின்ற தொடர்புகள், ஒரு தனிக்குழுவோடு ஒன்றுதல் முதலியவையும் ஆராய்ச்சியோடு இணைக்கப்பட்ட இவற்றைப் போன்ற நிலைமைகளும், பரிசோதிக்கப்படுபவரின் சோதனைச் செயல் நிறைவேற்றம், மனப்பான்மைகள், மனவெழுச்சிப் பொருத்தப்பாடுகள் முதலியவற்றைப் பாதிக்கப்படலாம்.

எவ்வாறிருப்பினும், ஒட்டுமொத்தமாக நோக்கும்போது நீண்ட நாளுக்குரிய முறையின் குறைபாடு அவ்வளவு தெளிவானதன்று. மேலும், அது குறுக்குப் பகுப்பியல் முறையிலுள்ள குறைபாட்டைவிட எளிதில் திருந்தக்கூடியதாகவுமிருக்கின்றது. உளவியலாருக்கு அதிகமாக ஆராய்ச்சி வசதிகள் கிடைக்கக்கூடியதாக இருப்பதால், நீண்ட வீச்சுள்ள நீண்ட நாளுக்குரிய முறைகளை உபயோகப்படுத்தும் போக்கு அதிகரித்துக்கொண்டு வருகின்றது. நீண்ட நாளுக்குரிய மாபெரும் ஆராய்ச்சித் திட்டங்கள் ஏற்கெனவே பயனுடைய விவரங்களைக் கொடுத்துதவியிருக்கின்றன. எனவே, வேற்றுமை உளவியலில் பல சிக்கலான பிரச்சினைகளைக் கையாளுவதில் சில நயமான முறைகள் பழக்கத்திலிருந்து வருகின்றன.

அறிவாற்றலின் வளர்ச்சிப் போக்கு: வழக்கமாக உபயோகப் படுத்துகின்ற நுண்ணறிவுச் சோதனைகளை நீண்ட நாளுக்குரிய ஆராய்ச்சி முறையில் உபயோகித்து வயது மாற்றங்களில்

ஏற்படும் விளைவுகள் என்ன என்று காணப்பட்டது. சோதனை களின் முடிவுகள் காட்டியது என்னவென்றால், குழவிப் பருவத்தில் மெதுவாகக் கெலிப்பு எண்கள் உயர்ந்தன. குழந்தைப் பருவத்தி லிருந்து மிகவும் விரைவான முன்னேற்றம் தொடர்ந்து ஏற்பட்டது; இருபது வயதையடையும் தருணம் ஏற்படும்போது மெதுவாகக் குறைந்து வரத் தொடங்கியது. அறிவாற்றலின் வளர்ச்சிப்போக்கு எவ்வாறிருப்பினும் நுண்ணறிவுச் சோதனைகள் பல திறமைகள் ஒன்றாகச் சேர்ந்த ஓர் ஆக்கத்தை அளவிடுகின்றது என்பதை நாம் அறிய வேண்டும்.

குழவிப் பருவத்தில் நுண்ணறிவுச் சோதனை அளவிடுவது புலனியக்க வளர்ச்சியேயாகும். பிந்திய குழந்தைப் பருவத்தில் சொல் சார்ந்ததும் கருத்து நிலைச் செயல் முறைகளும் நுண்ணறிவுச் சோதனையில் முக்கிய பங்கேற்கின்றன. தவிர, செயல் நிறை வேற்றச் சோதனைகள் முக்கியமாக உபயோகிக்கப்படுகின்றன. தனியாள் ஆண்டுக்கு ஆண்டு ஒழுங்கு முறையாக முன்னேறி வந்தால், அவனுடைய நுண்ணறிவு ஈவு நிலையாக அவனுடைய குழுவில் இருக்க முடியும். நீண்ட நாளுக்குரிய ஆராய்ச்சிகள் பல நுண்ணறிவுச் சோதனைகளின் நுண்ணறிவு ஈவு நீண்ட நாள் நிலை பெற்றிருந்த செய்தியைத் திரட்டித் தருகின்றன.

பரிசோதனைக்கு ஆட்படுத்தப்பட்டவர்களை மறு சோதனை செய்யும்பொருட்டு ஸ்டேன்போர்ட் - பினெட் சோதனையின் மூலம் வரையளவு செய்யப்பட்ட மாதிரி மக்கள் தொகுதியில் குழந்தைகள் இரண்டு வயதிலிருந்து ஐந்தரை வயது வரையிலும் சோதனை செய்யப்பட்டார்கள். அவர்கள் பத்தாண்டுகளுக்குப் பிறகும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகும் அதே சோதனை களைக் கொண்டு மறு சோதனை செய்யப்பட்டார்கள். தொடக்கக் கால நுண்ணறிவு ஈவுகள் பத்து வயது ஈவுகளோடு இணைப்புத் தொடர்பாடு செய்யப்பட்டபோது கிடைத்த எண் ·65 ஆகும். இருபத்தைந்து வயது ஈவுகளோடு செய்தபோது அது ·59 ஆக இருந்தது. பத்தாண்டுகளுக்குப் பிறகு செய்யப்பட்ட மறு சோதனையின் ஈவுகளும் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு செய்யப்பட்ட மறுசோதனையின் ஈவுகளும் இணைப்புத் தொடர்பாடு செய்யப்பட்டபோது கிடைத்த எண் ·85ஆக இருந்தது.

நீண்ட நாள்களுக்குச் சோதனை நடத்தப்பட்டு நுண்ணறிவு ஈவுகளைக் கணித்துப் பார்க்கும்போது குழுவின் போக்கு மிகவும் உயர்வாக இருக்கின்றது. குறிப்பாகப் பள்ளிக்கூடக் குழந்தை களிடமிருந்து பெறப்பட்ட நுண்ணறிவு ஈவுகள் குறிப்பிடத்தக்க

அளவுக்கு உயர்வாகக் காணப்பட்டன. ஆனால், அதே சமயத்தில் தனியாள் நிகழ்ச்சி வரலாறுகளில் சில ஆண்டுகளின் இடைவெளிக்குப் பிறகு நுண்ணறிவு ஈவுகளில் மிகுந்த அளவுக்கு மேல்நோக்கிச் செல்லும் போக்கும் கீழ்நோக்கிச் செல்லும் போக்கும் காணப்பட்டது. விரிவாக நடத்தப்பட்ட ஒரு நீண்ட நாளுக்குரிய சோதனையொன்றில் தனியாளின் நுண்ணறிவு ஈவுகளின் மாற்றங்கள் ஐம்பது புள்ளிகள் வரையில் சென்றது.

உதாரணமாக, ஆறு வயதுக்கும் பதினெட்டு வயதுக்குமிடையில் மறு சோதனை நடத்தப்பட்டபோது பொருத்தப்பாடு பொதுவாக உயர்ந்து காணப்பட்டது. ஆனால், ஐம்பது சதவிகித நிகழ்ச்சி வரலாறுகளில் நுண்ணறிவு ஈவுகள் 15 புள்ளிகளுக்குமேல் மாற்றமுள்ளவையாகக் காணப்பட்டன. முப்பத்தேழு சதவிகித நிகழ்ச்சி வரலாறுகளில் 20 புள்ளிகளுக்குமேல் மாற்றமுள்ளதாகக் காணப்பட்டன. ஒன்பது சதவிகிதத்தினர் முப்பது புள்ளிகளுக்குமேல் மாற்றம் கொண்டிருந்தனர். இந்த மாற்றங்கள் தவறுகவோ தற்செயலாகவோ ஏற்பட்டவையல்ல. சில குழந்தைகள் மேல்நோக்கிச் செல்லுவதிலும், சில குழந்தைகள் கீழ்நோக்கிச் செல்லுவதிலும் சில முரண்படாத கெலிப்பு எண்களை வெளிப்படுத்தினார்கள். நுண்ணறிவு ஈவில் ஏற்பட்டிருந்த பெரும் மாற்றங்கள் பண்பாட்டுச் சூழ்நிலையோடும் மனவெழுச்சி நிலை தொடர்பு கொண்டிருந்தன. குறைவான உரிமைகளைப் பெற்றிருந்த சூழ்நிலையோடு தொடர்பு கொண்டிருந்த குழந்தைகளின் நுண்ணறிவு ஈவுகள் நாளுக்குநாள் குறைந்துகொண்டு சென்றன. செல்வாக்கான சூழ்நிலையோடு தொடர்பு கொண்டிருந்த குழந்தைகளின் நுண்ணறிவு ஈவுகள் வயதோடு உயர்ந்துகொண்டே சென்றன.

கொடிய நோய்கள், குடும்ப நிலைகளில் மாற்றம், மருத்துவத் திட்டங்கள், மற்றும் பெரும் சூழ்நிலைச் சார்பான மாறுமியல்புகள் முதலியவை குழந்தைப்பருவக் காலத்தில் குழந்தைகளின் வாழ்க்கையில் இயங்கி வந்திருக்குமானால், அவை நுண்ணறிவு ஈவுகளின் உயர்விலும் தாழ்விலும் செல்வாக்குப் பெற முடியும். குழந்தையினுடைய சில ஊக்கமூட்டி சார்ந்த குணப்பண்புகளும் மனப்பான்மை சார்ந்த குணப்பண்புகளுங்கூட நுண்ணறிவு ஈவு பெறுகின்ற பெரும் மாற்றங்களை விளக்குவதற்கு உதவி செய்கின்றன. உதாரணமாக, நீண்ட நாளுக்குரிய முறைப்படி நடத்தப்பட்ட விரிவான ஆராய்ச்சி ஒன்றில் நூற்று நாற்பது குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டன. மூன்று வயதுக்கும் பத்து வயதுக்குமிடை

யில் ஒவ்வோர் ஆண்டும் சோதிக்கப்பட்டன. நுண்ணறிவு ஈவுகளில் ஏற்பட்ட உயர்வு, உயர்ந்த சாதனை உந்து, போட்டி மனப்பாங்கு, அறிவார்வம் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டிருப்பதாகக் கண்டறியப்பட்டது.

வயது வந்தோரின் நுண்ணறிவில் வேற்றுமை : வயது வந்தோரிடையே குறுக்குப் பகுப்பியல் முறைப்படி நுண்ணறிவுச் சோதனை நடத்தப்பட்டது. பல்வேறு வயது வேறுபாடுகளுள்ளவர்களிடம் செயல்நிறைவேற்றச் சோதனை கொடுக்கப்பட்டது. இருபது வயது மட்டத்திலிருந்தவர்களுடைய சாதனை உச்சியிலிருந்தது. பிறகு படிப்படியாக வயது ஏற ஏறச் சாதனை அறுபது வயது வரையில் குறைந்துகொண்டே வந்து, அறுபதுக்குப் பிறகு திடீரென்று வீழ்ந்துவிட்டது. வயது வந்தோரிடையே நுண்ணறிவுச் சோதனையின் செயல்நிறைவேற்றத்திற்கும் வயதுக்கும் உள்ள வேற்றுமைகளை இச் சோதனை விளக்குகின்றது.

வயது வந்தவர்களுடைய வாழ்க்கைத்தொழில் அவர்களுடைய நுண்ணறிவுச் சோதனையின் செயல் நிறைவேற்றத்தோடு தொடர்பு கொண்டிருக்கின்றது. வார்ச்சொல் பயிற்சி, எண்களை உபயோகிப்பதில் பயிற்சி, கருத்துச் செயல்முறைகளில் பயிற்சி தேவைப்படாத வாழ்க்கைத் தொழில்களில் சாதனையின் இழப்பு அதிகரித்து வருகின்றன. பள்ளிக்கூடத்தை விட்டுச் சென்ற நாள்கள் அதிகமாகச் செல்லச்செல்லச் சாதனையின் அளவு குறைந்துகொண்டே செல்லுகின்றது. சராசரி வயது வந்தோர் கூடச் செயல்சார்ந்த செய்தி, தீர்ப்புச் செய்தல், சமூகப் புலன் காட்சி போன்ற சோதனைகளில் சாதனைகள் அதிகரிப்பதாகச் சான்றுகள் இருக்கின்றன. மேலும், மிகவும் வயது முதிர்ந்தவர்களிடையே சில சோதனைகளின் செயல்நிறைவேற்றம் தனியாளின் முந்திய வாழ்க்கைத் தொழில், விருப்பச் செயல்கள், பயிற்சித் திறமைகள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டிருக்கின்றது.

4. உடலமைப்பும் நடத்தையும்

உயிரினங்களின் உடலமைப்புக்கும் அவற்றின் நடத்தைக்கும் தொடர்பு இருப்பதாக உளவியலார் நம்புகின்றனர். மனிதர்களிலும் சரி, மற்ற உயிரினங்களிலும் சரி உடலமைப்புகள் ஒன்று போல இருப்பதில்லை. இதன் காரணமாக அவற்றின் நடத்தையும் மாறுபடுகின்றது. எந்த வகையான உடலமைப்பைக்கொண்டுள்ள மனிதர்கள் இயல்பாக நடந்துகொள்ளுகின்றனர் என்றும், எந்த வகையான உடலமைப்பைக் கொண்டுள்ளவர்கள் இயல்புக்கு வேறுபட்டு நடக்கின்றூர்கள் என்றும் உளவியலார் ஆராய்ச்சிகள் நடத்திப் பாகுபாடுகள் செய்திருக்கின்றனர். அவற்றைப்பற்றிச் சிறிது விரிவாகக் காண்போம்.

உடலமைப்பு என்ற கருத்துச் சொல் மொத்தமாக உறுப்புச் சார்ந்த எல்லாப் பண்புக் கூறுகளேயும் குறிக்கின்றது. தெளிவாகச் சொல்ல வேண்டுமானுல், உடலமைப்பு, உடற்கூற்றியல், உயிரியல் இயைபு ஆகிய மூன்று வகைகளான குணப் பண்புகளும் ஓர் உயிரியைச் சார்ந்திருப்பதால், இவை மூன்றுமே உடலமைப்பு என்று ஒட்டு மொத்தமாகக் கூறப்படுகின்றது. உடலமைப்புக்கும் நடத்தைக்கும் உள்ள தொடர்பை வேற்றுமை உளவியலார் இரண்டு நோக்கிலிருந்து காண விரும்புகின்றனர். ஒன்று கருத்துச் சார்பான நோக்கு; மற்றென்று செயல் சார்பான நோக்கு.

மனிதர்களின் இயற்கை விருப்பங்கள் விரிவடைதலின் மீது நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளும், ஆளுமை வளர்ச்சியின் மீது நடத்தப்பட்ட 'ஆராய்ச்சிகளும் நடத்தை வேற்றுமைகளேப் புரிந்துகொள்ளுவதற்கு நல்ல துணை செய்திருக்கின்றன. மரபு நிலேகளில் நடைபெற்ற ஆராய்ச்சிகளும் நடத்தை வேற்றுமைகளே அறிவதற்குத் துணே செய்திருக்கின்றன. மேலும், அந்த ஆராய்ச்சிகள் நடத்தை வேற்றுமைகள் உடல் அடிப்படையைக்

கொண்டிருக்கின்றன; அடையாளம் கண்டறிய உதவுகின்றன. இவ் வகையான வேற்றுமைகள் மனிதனுடைய சீனிலிருந்து நடத்தைவரையில் உள்ள நீண்ட சிக்கலான வழியின் மூலம் கண்டறிய முக்கிய படிகளாக இருக்கின்றன. செயல் சார்பான நோக்கிலிருந்து காணும்போது உடலமைப்புக்கும் நடத்தைக்குமிடையிலுள்ள தொடர்புறவு, உடல்சார்ந்த பண்புக் கூறுகளின் அடிப்படையில் மனிதர்களை மதிப்பிட்டு நடத்தையை முன்னறியக்கூடிய செயல்முறையிலிருந்து வெளிப்படுகின்றது.

மூன்று வகையான தொடர்புகள்

உடலமைவுக்கும் நடத்தைக்குமுள்ள தொடர்புறவுபற்றிய ஆராய்ச்சிகளின் முடிவுகளை மதிப்பீடு செய்வதில் காரணங்கள் காட்டப்படுவதாக நாம் கருத முடியாது. உடலமைவுக்கும் நடத்தைக்கும் குறிப்பிடத்தக்க தொடர்புநிலை நாட்டப்பட்ட போதும் உடல்நிலைமை குறிப்பிட்ட நடத்தையில் செல்வாக்குப் பெற்றிருக்கின்றது என்றோ, அந்தக் குறிப்பிட்ட நடத்தை உடல்நிலைமையில் செல்வாக்குப்பெற்றிருக்கின்றது என்றோ இரண்டும் ஒரு மூன்றாவது கூறிலிருந்து தனித்தனியாகச் செல்வாக்குப் பெறுகின்றன என்றோதான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், எந்த ஒரு குறிப்பிட்ட நிலைமையிலும் ஒன்றுக்கு மேற்பட்ட காரண இயந்திர நுட்பங்கள் இணைந்து இயங்கலாம். எனவே, உடலமைப்புக்கும் நடத்தைக்குமிடையிலுள்ள இந்த மூன்று வகையான தொடர்புறவுகளில் ஒரு சிலவற்றை உதாரணங்களுடன் காணுவோம்:

நடத்தையின்மீது உடலமைப்பின் செல்வாக்கு: உடற்கூறுகள் பல வழிகளில் நடத்தையில் செல்வாக்குப் பெறுகின்றன. அதைத் தொடர்பு அடிப்படையில் நேரடியானதும் உறுதியானதுமான கட்டுப்பாட்டிலிருந்து உயர்ந்த மறைமுகமானதும் மாறக்கூடியதுமான தொடர்புறவுகள் வரையில் ஒரு தொடர்ந்து செல்லும் துலங்கல்களின்மீது ஒழுங்குபடுத்தலாம். எனவே, அந்தத் துலங்கல்களின் தொடர்ச்சியில் இரண்டு கோடிகளிருக்கின்றன. முதல் கோடி, நேரடியானதும் உறுதியானதுமான கட்டுப்பாடு, நரம்பு சார்ந்ததும், சுரப்பிச் சார்ந்ததுமான சீர்கேடுகளும் உயிர்ப் பொருள் மாறுபாட்டின் சீர்கேடுகளும் உள்ளடங்கியதாக இருக்கின்றது. இவை கடுமையான நடத்தைச் சீர்கேடுகளுக்கு உயிரியை நடத்திச் செல்லுகின்றன. உடல் சார்ந்த இந்தச் சீர்க்கேடுகளெல்லாம் மரபுநிலையிலிருந்தும் தோன்றலாம்; சூழ்நிலையிலிருந்தும் தோன்றலாம். இயல்புக்கு முரணாக மிகச் சிறிய

மூளையுள்ள பிறவி முட்டாள், புரிசைச் சுரப்பி (thyroid), சரியாக இயங்கப் பெருத கிரிடின் (cretin). உயிர்ப்பொருள் மாறுபாட்டில் சீர்கேடுற்றவர் ஆகியவர் இதற்கு உதாரணமாவர். இந்த வகையான சீர்கேடுகளில் தனியாள் இயல்பான நடத்தை வளர்ச்சியுறுவதற்குக் குறைந்த அளவு தேவையான உடலமைப்பைக்கூடப் பெற்றிருக்கவில்லை. மிகச் சிறு வயதிலேயே வளர்ச்சியுறும் காலத்தில் உடல் நிலைமைகளில் திருத்தம் செய்யப்படவில்லையானல் நடத்தைக் குறைபாடுகள் ஏற்பட முடியும்.

ஆனல் எவ்வாறிருப்பினும், இவ் வகையான நோய் நிகழ்ச்சிகளைக் கொண்டு வேற்றுமையின் இயல்பான வீச்சுக்குள் தனியாள் வேற்றுமைகளை நேரடியாக நாம் விவாதிக்க முடியாது. உடல் நிலைமைகளில் மேற்கொண்டு வேற்றுமைகள், ஒருசில முக்கிய குறைந்த அளவுக்குமேல் தொடர்புடைய வேற்றுமைகளைத் தொடர்ந்து நடத்தையில் வருவதில்லை. பெரும்பாலான மனிதர்களின் துணைச் சாதனங்கள் நடத்தை வளர்ச்சியில் மிகவும் விரிந்த ஒரு பரப்பை அனுமதிக்கின்றன. இயல்பான வீச்சுக்குள் நடத்தைப் பண்புகளுக்கும் நரம்பு சார்ந்ததும், சுரப்பி சார்ந்ததும், உயிர்ப் பொருள் மாற்றம் சார்ந்ததுமான உடல் சார்ந்த கூறுகளுக்கு மிடையிலுள்ள தொடர்புறவுகளின்மீது நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் குறிப்பிடத்தக்க தொடர்பில் சாரமற்ற சான்றைத்தான் வெளிப்படுத்தியிருக்கின்றன. இந்தக் காரணத்தினல் உயிர் இயைபியல் (Biochemical) ஆராய்ச்சியில் கவனம் வளருவதாக இருக்கின்றது.

உயிர்ப்பொருள் மாறுபாட்டு வடிவங்களில் தனியாள்கள் மிகுந்த அளவுக்கு மாறுபடுகின்றனர்கள் என்பதைக் காட்டுவதற்குச் சிறந்த சான்றுகள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இஃது உமிழ்நீர், சிறுநீர் வேறுபாடுகள் உடலமைப்பின் வேற்றுமை வீதத்தைச் சார்ந்திருக்கின்றன என்று காட்டுகின்றன. உயிர் இயைபியல் தனித்தன்மைக்கும் நடத்தைப் பண்புகளுக்கும் இடையில் உள்ள தொடர்புறவுகள்பற்றி ஆழ்ந்த ஆராய்ச்சிகள் சாத்தியமானவையே என்றாலும் இதுநாள் வரையிலும் மிகக் குறைந்த டரிசோதனைச் சான்றுகளே கிடைத்திருக்கின்றன. இயல்பான நடத்தை வளர்ச்சிக்கு உயிர் இயைபியல் வேற்றுமைகளின் பங்கு என்ன என்பது பற்றிய முடிவுகளை நாம் பெறுவதற்குமுன்பு மிக அதிகமான ஆராய்ச்சிகளை நடத்தியாக வேண்டியிருக்கின்றது.

நடத்தை வளர்ச்சியில் பல உடல் சார்ந்த கூறுகளின் பங்கை வெளிப்படுத்துவதில் குழு அளவாய்வுகள் தவறிவிடக் கூடும்

ஏனென்றால், ஏற்படுகின்ற தொடர்பு மறைமுகமாகவும் மாறுமியல்புள்ளதாகவுமிருக்கின்றது. மேலும், அதே உடல் நிலைமை தனியாள் வேற்றுமைகளில் மிகவும் ஒரு தன்மையற்ற விளைவுகளுக்கு நடத்திச் செல்லலாம். ஏனென்றால், அந்த உடல் நிலைமை மற்றக் கூறுகளோடு பறிமாற்றச் செயல்களைக் கொண்டிருக்கலாம். இவ் வகையாகக் குருடு, செவிடு, பேச்சுக் குறைபாடுகள், நாள்பட்ட நோய் முதலியவை நுண்ணறிவு வளர்ச்சியின்மீதும் மனவெழுச்சி வளர்ச்சியின்மீதும் மாறுபட்ட விளைவுகளைக் கொண்டிருக்கலாம். இந்த நிலைமைகள் எல்லாம் தனியாளின் கல்வி சார்ந்த செயல்முறைகளில் தலையிடுவதன்மூலம் நுண்ணறிவு வளர்ச்சியைக் கடுமையான வகையில் தடை செய்கின்றன. ஆனால், தனிப்பட்ட கல்வி முறைகளின்மூலம் பின்தங்குதலைத் தடுக்க முடியும். அது போலவே உடற்கட்டும் மற்ற உடலமைப்பின் பண்புக்கூறுகளும், போட்டி விளையாட்டு, சமூக நடவடிக்கைகள், நுண்ணறிவு சார்ந்த நடவடிக்கைகள் ஆகியவற்றில் தனியாள் பங்கெடுத்துக்கொள்வதைக் கட்டுப்படுத்துவதன்மூலமோ பங்கு கொள்ள வாய்ப்புகளை உண்டாக்குவதன்மூலமோ நடத்தையில் செல்வாக்குப் பெற முடியும்.

சமூக ஒருபடி வார்ப்புகளின் இயந்திர நுட்பத்தின்மூலமாகவும் உடலமைப்பு நடத்தையில் செல்வாக்குப் பெற முடியும். தனியாளின் வெளியில் காண்பதற்குரிய உடல் சார்ந்த குணப் பண்புகள் சமூகத் தூண்டல்களாக இருந்து, அவனுடைய கூட்டாளிகளிடமிருந்து வேற்றுமையான துலங்கல்களை எழுப்புகின்றன. அவை அவன் சந்திக்கின்ற மனப்பான்மைகளில் தலையிடுகின்றன. அவன் பெறுகின்ற வாய்ப்புகள், தன்னுடைய சொந்தக் கருத்து உருவாதல் ஆகியவற்றிலும் தலையிடுகின்றன. இந்த வழிகளின் வாயிலாக அவனுடைய நடத்தை படிப்படியாக ஒருபடி வார்ப்புகளோடு கூட்டு சேர்ந்து கிட்டத்தட்ட ஒத்திருக்கின்றது. நடத்தையின்மீது உடலமைப்புக்கொள்ளுகின்ற இத்தகைய மறைமுகமான விளைவுகளின் முக்கியத்துவம் வளர்ந்து வருகின்றது. இச் செயல்முறைகளுக்கு பார்கரும் (Barker), அவருடைய கூட்டாளிகளும் 'உடலுளவியல் சார்ந்த விளைவுகள்' (Somatopsychological Effitcs) என்று பெயரிட்டிருக்கின்றார்கள். சமூக ஒருபடி வார்ப்புகளும் மற்ற உடலுளவியல் சார்ந்த விளைவுகளும் உடல்கட்டுக்கும் ஆளுமைப் பண்புகளுக்குமிடையில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க தொடர்பில் முக்கிய பங்கேற்கின்றன என்று கூறலாம். செல்டனின் (Sheldon) உடலமைப்பு வகைக் கோட்பாடுகளுக்கு ஆதரவு தரும் வகையில் எடுத்துக்காட்டுகளும் இருக்கின்றன.

உடலமைப்பின்மீது நடத்தையின் செல்வாக்கு : உடல் சார்ந்த கூறுகளுக்கும் நடத்தைக்கும் இடையில் உள்ள தொடர்புறவுகளை நிலைநாட்டும்பொருட்டு நடத்தப்பட்ட பரிசோதனைகள் எல்லாம் உடன்பாடான முடிவுகளைக் காட்டியிருக்கின்றன. உடலமைப்பின் மீது நடத்தை செல்வாக்குப் பெற்றிருக்கின்றது என்பதைப் பரிசோதனை முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. இந்தத் தொடர் புறவின்மீது பல வகையான இயந்திர நுட்பத்தின்மூலமாகச் செல்வாக்கு இயங்குகின்றது. நீந்துகின்றவரின் வலிமையான தோள் சதை நார்களும், கற்றறிவாளரின் சாய்வுகளும் வழக்க மான நடவடிக்கையின் விளைவுகளைப் பிரதிபலிக்கின்றன. மனிதர் களின் புன்சிரிப்புகளும், புருவ நெறிப்புகளும் அவர்களுடைய முகங்களில் அடையாளங்களாக அமைகின்றன.

வேற்று நாட்டில் குடியேறிய குழுக்களிடையே ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. உடலமைப்பு, மண்டையோட்டின் உருவம் ஆகியவை உணவுப் பழக்கங்களினாலும், குழந்தை வளர்ப்பு முறையினாலும், பண்பாட்டினால் நிர்ணயிக்கப்பட்ட தனியாளின் அனுபவங்களினாலும் செல்வாக்குப் பெறுகின்றன என்று செயல் விளக்கம் செய்யப்பட்டிருக்கின்றது. மனவெழுச்சி கிளர்ச்சி யுறுகின்றபோது பல உடற்கூற்று மாற்றங்கள் நிகழுகின்றன. மனவெழுச்சியினால் ஏற்படுன்ற உடற்கூற்று மாற்றங்கள் சிறிது நேரமே நிலைக்கக்கூடியவையாக இருந்தாலும் அவை அடிக்கடி தோன்றிக்கொண்டிருந்து போதுமான செறிவையும் பெற்றிருந் தால் நிலையான விளைவுகளை அவை ஏற்படுத்த முடியும். இந்த வகையில் குறிப்பாக நம் கவனத்தைக் கவரக்கூடியவை உளவழி உடல் கோளாறுகளாகும் (Psychosomatic disorders).

உளவழி உடல் கோளாறுகள் என்பவை உடல் சார்ந்த கோளாறுகளாகும். அவற்றின் வளர்ச்சியில் உளவியல் கூறுகள் முக்கிய பங்கேற்பதாக நம்பப்படுகின்றது. இரைப்பைப் புண், காச நோய், சில பொருந்தா உணர்ச்சிகள் முதலியவை மிகவும் அதிகமாகக் காணப்படும் உளவழி உடல் கோளாறுகளாகும். உளவியல் கூறுகள் எல்லா நோய்களிலும் காரணமாக இருக் கின்றன என்ற கருத்து இன்று உலவி வந்தாலும் இந் நோய்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்ட உளவழி உடல் கோளாறுகளாகும். பொதுவாகக் கவலை, மன இறுக்கம், மனவெழுச்சி அழுத்தம் ஆகியவை உளவியல் கூறுகளைப் பெரிதும் கொண்டு உளவழி உடல் கோளாறுகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன. இறுதியாக, இந்தக் கண்டுபிடிப்புகள் சந்தேகமின்றி மூளைக்கோளாறுகளின் காரணங்களை நாம் புரிந்துகொள்ளுவதற்கு உதவி புரிந்தாலும்,

சில வேற்றுமைகளாவது மூளைக்கோளாறு நடத்தையின் உடல் சார்ந்த விளைவுகளைக் குறிப்பிடலாம். மூளைக்கோளாறுள்ளவர்களுக்கும் இயல்பு நிலையிலுள்ளவர்களுக்குமிடையில் உள்ள உறுப்புக்குரிய வேற்றுமைகள் மனவெழுச்சி நெருக்கத்திலிருந்தும், நடவடிக்கையின் படித்தரத்திலிருந்தும், ஊட்ட நிலையிலிருந்தும், மற்றுமுள்ள மாறுமியல்புகள் உளப் பித்து நிலையோடு தொடர்புகளிலிருந்தும் வெளிப்படலாம்.

உடலமைப்பின்மீதும் நடத்தையின்மீதும் ஒரு பொதுக்கூறின் செல்வாக்கு : உடலமைப்புக்கும் நடத்தைக்குமிடையிலுள்ள மூன்றுவது தொடர்பு ஒரு பொதுக் கூறிலிருந்து ஏற்படுகின்றது. இதை விளக்குவதற்குத் தெளிவான உதாரணம் சமூகப் பொருளாதார அளவினுல் தரப்படுகின்றது. உயர்ந்த குடும்பச் சூழ்நிலையில் வளர்ந்த குழந்தை நுண்ணறிவு வளர்ச்சிக்குச் செழிப்பான வாய்ப்புகளையுடையவனுக இருக்கின்றுன். நல்ல உணவுப் பழக்கத்தையும், நல்வழியையும், மருத்துவ வசதிகளையும் ஏழ்மையான சூழ்நிலையிலும் சிற்றூர்ப் பகுதியிலும் வாழ்கின்ற குழந்தைகளைவிடச் சிறப்பாகப் பெற்றிருக்கின்றுன். ஆகையினுல், நுண்ணறிவுக்கும் சமூக முறைப்படியும் பொருளாதார முறைப்படியும் பல வகையாக உள்ள குழுக்களின் பல உடல் நிலைமைகளுக்கும் உடன்பாடான இணைப்புத் தொடர்பாடு காணப்படுகின்றது. சமூகப் பொருளாதார அளவு நிலையாக இருக்குமானுல், இணைப்புத் தொடர்பாடு மறைந்து போகலாம். சமூகப் பொருளாதாரக் கூறுகளின் செல்வாக்கு பல வகையான உடல் குறைபாடுகளுக்கும் நுண்ணறிவுக்கும் இடையிலுள்ள தொடர்பில் பெரும்பங்கு கொண்டிருப்பதாகக் கணக்கிடப்படுகின்றது. இது பள்ளிக்கூடக் குழந்தைகளிடையே அடிக்கடி நடைபெறும் பெரிய அளவு அளவாய்வுகளில் காணப்படுகின்றது.

அத்தகைய குறைபாடுகள், உள்நாக்குகள், அடிமூக்குச் சதை வளர்ச்சி, பெரிதாக்கப்பட்ட சுரப்பிகள், பல் சொத்தைகள், ஊட்டக் குறைவு, தோல் கோளாறுகள் முதலியவை மந்தமான குழந்தைகளிடையே மிக அதிகமாகத் தோன்றுகின்றன; புத்திசாலியான குழந்தைகளிடமும் அடிக்கடி தோன்றுகின்றன. இதே போன்ற முடிவுகள், குழந்தைகளை அவர்கள் பள்ளியில் ஈட்டிய சாதனைகளின் அடிப்படையில் வகுப்புகளாகப் பிரிப்பதா அல்லது அவர்களுடைய நுண்ணறிவு ஈவைக்கொண்டு வகுப்புகளாகப் பிரிப்பதா என்ற பிரச்சினையிலும் பெறப்பட்டன.

ஒரு குழந்தைக்குள்ள மொத்தக் குறைபாடுகள் மந்தக் குழந்தைகளுக்கு மிக உயர்ந்திருந்தன. புத்திசாலிக் குழந்தை-

களிடையே அவை குறைவாக இருந்தன. எந்தக் குறைபாடு மில்லாத குழந்தைகள் புத்திசாலிக் குழந்தைகளின் குழுவில்தான் அதிகமாக இருந்தார்கள். மந்தக் குழந்தைகளிடையே அவர்கள் மிகவும் குறைவாக இருந்தார்கள். சமூகப் பொருளாதார வேற்றுமைகள் போக்கப்பட்டபோது உடல் குறைபாடுகளுக்கும் நுண்ணறிவுக்கும் இடையிலுள்ள தொடர்பு மறைந்துவிட்டது. எனவே, சமூகப் பொருளாதார நிலைகள் குழந்தைகளில் பல்வேறு பட்ட வளர்ச்சிகளில் செல்வாக்குப் பெற்றிருந்ததைப் போலவே குறைபாடுகளை உண்டாக்குவதிலும் செல்வாக்குப் பெற்றிருந்தன.

5. நுண்ணறிவின் இயல்பும் பரவல் பட்டியும்

நுண்ணறிவின் இயல்பு

நுண்ணறிவு என்றால் என்ன என்று சரியான முறையில் விளக்கிக் கூறுவது கடினமான செயலாகும். உளவியலாரிடையே இதுபற்றிக் கருத்துப் போராட்டம் நடைபெற்று ஓய்ந்துபோய் விட்டது. ஆனால், அவர்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளார்கள். நுண்ணறிவைப்பற்றிச் சரியாக நாம் விளக்கிக் கூற முடியாது என்றாலும், அதை அளவிட முடியும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர்; அதனால் நுண்ணறிவை நுண்ணறிவு ஈவோடு ஒன்றிக் காட்டுகின்றனர். நுண்ணறிவின் உருவாக்கம், அதனுடைய அமைப்பு ஆகியவற்றைப்பற்றி அறுபது ஆண்டு களுக்கு மேலாக ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன.

ஒரு நுண்ணறிவுச் சோதனை உருவாக்குவதில் உளவியலார் நுண்ணறிவுபற்றித் தெளிவான கருத்துக் கொண்டிருக்க வேண்டும். எனவே, அவர்கள் தெளிவானதும் முரண்பாடில்லாத துமான தங்களுடைய கருத்தின் செல்வாக்கை நுண்ணறிவுச் சோதனைகளை உருவாக்குவதில் உபயோகித்திருக்கின்றனர்கள். எனவே, நுண்ணறிவுச் சோதனைகள் ஓரளவுக்காவது நடைமுறையி லுள்ள நுண்ணறிவுக் கருத்தைப் பிரதிபலிக்கலாம்.

ஒரு நுண்ணறிவுச் சோதனையை உருவாக்கி, வரையளவு படுத்துவதற்கு ஆண்டுகள் சில செல்லுகின்றன. அஃது ஒரு குறிப் பிட்ட நுண்ணறிவிலேயே உறைந்து, விதிகளை ஒழுங்குபடுத்துகின் றது. அதனால் அதில் மாற்றம் ஏற்படுவதில்லை. மேலும், நுண்ண றிவுச் சோதனைகள் எல்லாம் குறிப்பிட்ட அமைப்பிற்குள் செயல்

சார்பான தேவைகளை நிறைவு செய்வதற்காகத்தான் உருவாக்கப் படுகின்றன. ஆகையினால், அவை பயனுடைய சோதனைகளை நடத்துகின்ற தேவைகளுக்கும் நுண்ணறிவுக் கருத்துக்கும் இடையில் ஓர் ஒப்பந்தத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றன.

நுண்ணறிவுச் சோதனைகள் வழக்கமாக மாணவர்களுடைய இயற்கையாற்றலை அளவிடுவதற்குத்தான் பெரிதும் உபயோகிக் கப்படுகின்றன. அந்தத் திறமைகள் பள்ளிக்கூடத்தில் பெற வேண்டிய சாதனைகளுக்கு முக்கியம் என்று கருதப்படுகின்றன. நுண்ணறிவுச் சோதனைகள் வரலாற்றுச் சிறப்பு மிக்கவையாகும். அவை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஆல்பிரெட் பினெட் (Alfred Binet) என்ற பிரெஞ்சு உளவியலாரின் முயற்சிக் குப் பிறகுதான் உலகத்தினரின் கவனத்தைக் கவரத் தொடங்கின.

பாரிஸ் நகரத்திலிருந்த பள்ளிக்கூடங்களில் பயிலும் குழந்தைகள் அவர்களுடைய பள்ளி வேலைகளில் மிகவும் பிற் போக்காக இருந்தார்கள். அதனுடைய காரணங்களை ஆராயும் பொருட்டு பினெட் ஒரு தேர்வாய்வு நடத்தினார். அதன் பொருட்டு அவர் ஒரு நுண்ணறிவுச் சோதனையை உருவாக்கினார். அது கல்வித்துறையில் பல பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தது. மேலும், அது காலத்திற்குக் காலம் தேவைக்கேற்பப் பல திருத்தங் களைப் பெற்று வந்தது. இன்று பிரபலமாகப் பேசப்படுகின்ற ஸ்டேன் போர்டு-பினெட் சோதனையும் அந்த மூலத்திலிருந்து வந்ததுதான். பினெட்டின் சோதனைகள் தனியாள் சோதனை களாக இருந்தன. அதைப் பின்பற்றிக் குழுச் சோதனைகளும் உருவாக்கப்பட்டன. உருவாக்கப்பட்ட மற்றச் சோதனைகள் எல்லாம் பினெட் சோதனையோடு இணைப்புத் தொடர்பாடு ஏற்படுத்தப்பட்டு ஏற்புடைமையாக்கப்பட்டன. நுண்ணறிவுச் சோதனைகளுக்கு மற்றொரு கட்டளை விதியாக உபயோகிக்கப் பட்டது பள்ளிக்கூடச் சாதனைகளை அளக்கப்பட்டதாகும். பள்ளிக்கூடத்தில் குழந்தைகளின் சாதனைகள் அவர்களுடைய கெலிப்பு எண்களுடன் இணைப்புப் பொருத்தப்பாடு செய்யப் பட்டுச் சோதனைகள் ஏற்புடைமையாக்கப்பட்டன.

இவ் வகையாகப் புதிதாக உருவாக்கப்பட்ட நுண்ணறிவுச் சோதனைகளின் கெலிப்பு எண்கள் பள்ளிக்கூடத்தரங்களும், ஆசிரியர்கள் செய்கின்ற நுண்ணறிவுத் தர வீடுகளும், வகுப்பு உயர்வுகள், படி முறைகளின் செய்திகள், மற்றுமுள்ள கல்வி சார்ந்த சாதனைகள் ஆகியவற்றோடு இணைப்புப் பொருத்தப்

பாடு செய்யப்பட்டன. இந்தப் பொருத்தப்பாடுகள் உயர்வாக இருந்தால் நுண்ணறிவின் அளவு ஏற்றுக்கொள்ளக்கூடியதாகும். இந்த இணைப்புப் பொருத்தப்பாடுகள் தாழ்வாக இருக்குமானல், பள்ளிக்கூடச் செயல் நிறைவேற்றத்தை நல்ல முறையில் முன்னறிந்து கூறும் வகையில் சோதனை திருத்தியமைக்கப்படலாம். நுண்ணறிவுச் சோதனையில் அடங்கியுள்ள பொருள்கள் பெரும்பாலும் சொல் சார்ந்த இயற்கையாற்றல்கள், எண் கணக்குத் திறமைகள், எண் சார்ந்த அளவு, பல்வேறு வகைப் பொருள்களுக்கான நினைவு ஆகியவை ஆகும்.

பல்வேறு நுண்ணறிவுச் சோதனைகள் பல்வேறு திறமைகளை அடையாளம் காண முடியும். மொழி வேண்டாத சோதனைகளும் செயல் நிறைவேற்றச் சோதனைகளும் மிக அதிகமான தேவைகளை அடிக்கடி உண்டாக்குகின்றன. இடம் கண்டறிதல், புலன் காட்சி வேகம், புலன் காட்சியின் சரி நுட்பம், கருத்துநிலைச் சிந்தனை ஆகியவை சொல் சார்ந்த சோதனைகளில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. சில சொல் சார்ந்த சோதனைகள் மற்றச் சொல் சார்ந்த சோதனைகளைவிட அதிகமாகச் சொல் சார்பாக இருக்கின்றன. சில சோதனைகள் சொல், எண், இடம் ஆகிய பொருள்களை ஒரே சீராகக் கொண்டிருக்கின்றன. மேலும், நுண்ணறிவுச் சோதனைகளின் செயல் நிறைவேற்ற வேகம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை; ஒன்றுக்கொன்று மிக விரிவாக வேகத்தில் மாறுபடுகின்றது. நுண்ணறிவு ஈவு ஓர் உயிரினத்தின் பொருளன்று. அது சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட சோதனையின்மீது நடந்த செயல் நிறைவேற்றத்தைக் காட்டும் அறிகுறியாகும். அது வேறொரு சோதனையிலிருந்து பெறப்படும்போது வேறு பொருள் பெறுகின்றது.

நுண்ணறிவுச் சோதனைகள் வெளியிடப்பட்டுச் சிலகாலம் வரையிலுங்கூடச் சில இயற்கையாற்றல் பெரிதும் இச் சோதனைகளால் அளவிடப்படாமலிருந்தன. கல்விச் சார்பான அறிவுரை கூறுவதிலும் தொழிற்சாலைகளுக்கும் இராணுவத்திற்கும் ஆள்களைத் தேர்ந்தெடுப்பதிலும் உளவியலாரின் பங்கு அதிகரித்து வருகின்றது. இஃது இயற்கையாற்றல்களைச் சோதனை செய்ய வேண்டியதன் அவசியத்தை முக்கியமாகக் காட்டுகின்றது. இதன் விளைவாகத் தனி இயற்கையாற்றல் சோதனைகள் உருவாக்கப்பட்டன. இச் சோதனைகள் பொறித்துறை, இசைத்துறை, கலைத்துறை, மற்றுள்ள இயற்கையாற்றல் துறைகளில் பொது

நுண்ணறிவுச் சோதனைகளுக்குக் குறை நிரப்பும் சோதனைகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அதே சமயத்தில் உளநோய் நிவர்த்தி உளவியலார் தனியாள் நிகழ்ச்சி வரலாறுகளோடு விரிவான ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர். அவர்கள் ஒரு தனியாளிடமே ஒரு நுண்ணறிவுச் சோதனையும் மற்றொரு நுண்ணறிவுச் சோதனையும் வேறு வேறு விவரங்களைத் தருகின்றன என்று தெளிவாகக் கண்டறிந்திருக்கின்றார்கள்; அல்லது ஒரே சோதனையின் இரு பகுதிகள் ஒரே மாதிரியான செயல் நிறைவேற்றத்தை வெளியிடவில்லை என்று கண்டிருக்கின்றார்கள். ஆக, ஒரு மனிதன் ஒரு சோதனையில் நல்ல கெலிப்பு எண்களைப் பெற்றிருக்கலாம்; மற்றொன்றில் குறைந்த கெலிப்பு எண்களைப் பெற்றிருக்கலாம்; அல்லது அந்த மனிதன் சொல் சார்ந்த சோதனைகளை எண் சார்ந்த சோதனைகளில் முரண்பாடில்லாமல் செயல்பட்டிருக்கலாம்.

இவ்விதமான நிகழ்ச்சிகள், நுண்ணறிவுச் சோதனைகளே ஒரு சிறு எண்ணிக்கையுள்ள தன்னுரிமையான இயற்கையாற்றல்களை தன்னகத்தே கொண்டிருக்கின்றன என்றும், அவற்றில் அதே தனியாள் குறிப்பிடக்கூடிய அளவுக்கு வேறுபடக்கூடும் என்றும் தோன்றுகின்றது. இவ்விதமான போக்குகள் திறமைக் கூறுப் பாகுபாடு (factor analysis) என்று கூறப்படும் ஆராய்ச்சியில் இணைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆராய்ச்சி முறையில் ஒரே தனியாளிடம் பல்வேறுபட்ட சோதனைகள் மிக அதிக எண்ணிக்கையுடன் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு தனியாளின் எல்லாச் சோதனைகளின் கெலிப்பு எண்களும் ஒன்றுக்கொன்று இணைப்புப் பொருத்தப்பாடு செய்யப்படுகின்றன. இவற்றைக்கொண்டு மேலும் புள்ளி விவர முறைப்படிப் பாகுபாடு செய்யலாம். மேலும் எந்தெந்தச் சோதனைகள் கூட்டாகச் சேருகின்றன என்றும், எவை எவை பிரிந்து தனித்தனியே செல்லுகின்றன என்றும் இணைப்புப் பொருத்தப்பாடுகளைக் கொண்டு அறியலாம். இவ்விதமான ஆராய்ச்சிகளில் சில திறமைகள், கூறுகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, சொற்களைப் புரிந்துகொள்ளுதல், சொல் ஒழுக்கு, எண்ணிக் கணக்கிடும் திறமை, பருமஅளவு அறிவுத்திறமை, புலன் காட்சி வேகம், இடம் கண்டறியும் திறமை, பொறி நுட்பத்தைப் புரிந்துகொள்ளும் திறமை ஆகியவற்றைக் கூறலாம்.

திறமைக்கூறு பாகுபாட்டின்மூலம் எது நுண்ணறிவு என்று முன்பு கூறப்பட்டதோ அதுவே ஒப்பீட்டடிப்படையில் தன்

னுரிமையான திறமைகளாகக் கிளைப்பிரிவுகளாக்கப்படுகின்றன. இந்தத் திறமைகள் நுண்ணறிவைப்பற்றி மிகவும் விரிவான அறிவைப் பெறுவதற்குத் தனி இயற்கையாற்றல் சோதனைகள் சிலவற்றோடு ஒன்றுசேர்க்கப்படக்கூடும். நுண்ணறிவைச் சேர்த்து உருவாக்கும் இவ்விதமான ஆராய்ச்சிகளில் ஒன்று பன்முக இயற்கையாற்றல் சோதனைத் தொகுதிகளை விருத்தி செய்த லாகும்.

இந்த வகையான சோதனைகள் நுண்ணறிவுச் சோதனைகளும் தனி இயற்கையாற்றல் சோதனைகளும் சேர்ந்து செயல்படும் பெரும்பாலான செயல்முறைகளை நிறைவு செய்கின்றன. ஒரு தனி முழு கெலிப்பு எண்ணுகை, அதாவது நுண்ணறிவு ஈவாக அளிப்பதைவிட, பன்முக இயற்கையாற்றல் சோதனைத் தொகுதிகள் தனிச் சோதனைகளின் கெலிப்பு எண்களின் வடி வுருவத்தைத் தருகின்றன. பெரும்பாலான இச் சோதனைகள் திறமைக்கூறுப் பாகுபாட்டின்மூலம் அடையாளம் கண்ட பண்புகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன.

இன்றைய நிலையில் நுண்ணறிவின் கருத்து ஒவ்வொரு பண்பாட்டிலும் மேலும் பல மாற்றங்களைப் பெற்று வருவதாகத் தெரிகின்றது. இந்த மாற்றம் பெரும்பாலும் இரண்டு திசை களில் செல்லுகின்றது. முதலாவதாக, நுண்ணறிவின் எல்லைகள் சொல் சாராத இயற்கையாற்றல்களை அதிகமாகச் சேர்த்து விரிவாக்கப்படுகின்றன. இந்தப் போக்கு ஒரு பண்பாட்டின் இயந்திர நுட்பத்தை அதிகரிக்கச் செய்கின்றது. அதாவது, ‘நீயே செய்துகொள்’ என்ற இயக்கம். அறிவியல் வல்லுநர்களுக்கும், பொறியியலார்களுக்கும், மற்றவர்களுக்கும் அதிகரித்துவரும் தேவையைச் சரிக்கட்டுவதாகும்.

இரண்டாவது, படைப்புத் திறமையைப்பற்றியும், மூலமான சிந்தனையைப்பற்றியும் எல்லாத் துறைகளிலும் அனைவரும் சிந்திக் கத் தொடங்கியிருப்பதால், அவற்றைப்பற்றிய வலியுறுத்தல்கள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு செல்லுகின்றன. இந்தப் போக்கு முன்பு நுண்ணறிவில் வலியுறுத்தப்பட்ட புரிந்து கொள்ளுதல், தங்க வைத்தல் ஆகியவற்றிற்கு முரணாக இருக் கின்றது. இரண்டாவது போக்கு முக்கியத்துவம் பெற்று வரு வதன் காரணத்தைப் பல்வேறு துறைகளிலும் காணலாம். வயது வந்தவர்களுக்கும் சோதனைகள் அனுமதிக்கப்படுகின்றதிலிருந்தும் உயர்ந்த மட்டத்தின் திறமைத் தேவை அதிகரித்து வருவதி லிருந்தும் அந்த உண்மையைக் காணலாம். படைப்புத் திறமை

பற்றிப் பல புதிய ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு, புதிய துறைகள் துருவி ஆராயப்படுகின்றன. அதன்பொருட்டு நுண்ணறிவு மிக்கப் பல புதிய சோதனைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

இத் துறையில் வளர்ந்து வரும் போக்கைப் பார்த்தால் வரும் காலத்தில் நுண்ணறிவுச் சோதனைகள் சொல் சாராத பொருளடக்கத்தைக் கொண்டவையாகவும். படைப்புத் திறமையைச் சோதிப்பவையாகவும் அமையப்போகின்றன என்று தெரிகின்றது. நுண்ணறிவு நடத்தை என்று கூறும்போதே இந்த இரண்டு பண்புகளும் அதிகரித்திருக்கின்றனவா என்றுதான் எல்லாப் பண்பாடுகளும் சமூகங்களும் கவனமாக நோக்கப்போகின்றன என்பதன் அறிகுறிகள் தென்படுகின்றன.

நுண்ணறிவின் பரவல் பட்டி

பெரும்பாலான பண்புகளில் மனிதர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் பெரிதும் வேற்றுமை கொண்டே விளங்குகின்றார்கள். அந்த வேற்றுமைகள் பெரிதும் பருள அளவு (quantitation) உள்ளதாகவே இருக்கின்றன. பண்புத்தரமான வேற்றுமைகள் சரி நுட்பத்தைக் கொண்டிருப்பதில்லை. தனியாள்களின் வேற்றுமைகள் ஒரு தொடர்ந்து செல்லும் அளவுகோலின்மீது பரப்பி வழங்கப்பட்டிருக்கின்றன. உடல் சார்பான பண்புகளும் உளச்சார்பான பண்புகளும் பொதுவாக மணி உருவத்தில் சாதாரணமாக நிகழக்கூடிய வளைவை (normal probability curve) ஒத்திருக்கின்றன. அத்தகைய வளைவை நன்கு உற்றுநோக்கும்பொழுது பெரும்பாலான நிகழ்ச்சி வரலாறுகள் நடுவில்தான் கூட்டமாக விழுகின்றன. இரண்டு பக்கங்களிலுமுள்ள கோடிகளுக்குச் செல்லச் செல்ல நிகழ்ச்சி வரலாறுகள் குறைந்துகொண்டே சென்று கோடிகளில் மிகக் குறைவான நிகழ்ச்சிகள் பரவப்படுகின்றன.

ஓர் அளவாய்வில் நிகழக்கூடியதுபற்றி முதன்முதலில் கணிதவியலார் ஆராய்ச்சி நடத்தினர். அவர்கள் சாதாரணமாக நிகழக்கூடிய வளைவைப் பெற்றார்கள். இவ் வளைவு, அளவிடப்படும் மாறுமியல்பு பலவகை முடிவுகளைத் தரக்கூடியதாக இருந்து மிக அதிகமான தன்னியல்பானதும், சமமாகப் பளுவேற்றப்பட்டதுமான கூறுகளைக் கொண்டிருக்கும்போது பெறப்படுகின்றது. பொதுமக்கள் தொகையில் நுண்ணறிவு வளர்ச்சிக்கு மிக அதிகமான சீன்களும் சூழ்நிலைக்கூறுகளும் பங்களித்து உதவுகின்ற காரணத்தால் நுண்ணறிவு ஈவு இயல்பாக நிகழக்கூடிய வளைவையொட்டிப் பரப்பப்படுகின்றது என்று எதிர்பார்ப்பது அறிவுக்

கொத்ததாகவே இருக்கின்றது. உண்மையான நடைமுறையில் நுண்ணறிவின் பரவல் பட்டி இயல்பு நிலையிலிருந்து குறிப்பிடத் தக்க வகையில் விலகியிருக்குமானால், அதற்குக் காரணம் ஒன்று, மாதிரிப் பிரதிநிதித்துவம் வாய்ந்ததாக இருக்காது அல்லது உபயோகிக்கப்பட்ட சோதனை பொருத்தமுள்ளதாக இருந் திருக்காது.

உதாரணமாக, உபயோகப்படுத்தப்பட்ட சோதனை போது மான மேல்தளத்தைப் பெற்றிராவிடில் நுண்ணறிவு மிக்கவர்கள் ஒரு முழுமையான கெலிப்பு எண்ணின் அருகில் குவிகின்றார்கள். அதனால் பரவல்பட்டி செவ்வொழுங்கின்றி அமைகின்றது. அதே போன்று சோதனையின் அடிமட்டம் சோதிக்கப்பட்ட குழுவுக்கு மிகவும் உயரமாக இருந்தால் நுண்ணறிவு குறைந்தவர்கள் ஒரு பூஜ்ய கெலிப்பு எண்ணின் அருகில் குவிகின்றார்கள். நுண்ணறிவில் உயர்ந்துள்ளவர்கள் நுண்ணறிவுப் பரவல்பட்டியின் உயர்ந்த கோடியைக் காட்டுகின்றார்கள். மனவளர்ச்சி குறைந்தவர்கள் நுண்ணறிவுப் பரவல் பட்டியின் தாழ்ந்த கோடியைக் காட்டு கின்றார்கள். நுண்ணறிவுப் பரவல்பட்டி ஒரு தொடர்ச்சியான தாக இருப்பதால், இந்த இரண்டு குழுக்களுக்கும் இயல்புநிலைக் குழுவுக்கும் இடையில் சரி நுட்பமான பிரிவினை செய்ய முடியாம லிருக்கின்றது. இந்தக் குழுக்களுக்கிடையில் குறுக்குக்கோடு போட்டு வரையறை செய்வது ஒருதலைப்பட்சமான முடிவாகத் தானிருக்க முடியும்.

நுண்ணறிவுச் சோதனைகளின்மூலம் மனிதர்களை மூன்று வகைகளாக நுண்ணறிவின் அடிப்படையில் வகுக்கின்றனர். அவர்கள் நுண்ணறிவின் உயர்ந்த கோடியிலிருப்பவர்கள், நுண்ணறிவின் தாழ்ந்த கோடியிலிருப்பவர்கள், நடு மட்டத்தி லிருப்பவர்கள் எனப்படுகின்றவர்கள். நடுவிலுள்ளவர்கள் இயல்பு நிலையிலுள்ளவர்கள் என்றும், அவர்கள் மக்கள் தொகையின் பெரும்பகுதியைப் பிரதிபலிக்கின்றார்கள் என்றும் கண்டோம். மேலும், அவர் எந்த ஒரு தேர்வாய்விலும் பெரும்பகுதியினராக இருந்தாக வேண்டும். சாதாரணமாக நிகழக்கூடிய வளைவில் நடுவில் உயர்ந்து நிற்கும் பகுதியை இவர்கள் சார்ந்தவர்களா வார்கள். வளைவின் இரு கோடிகளும் தாழ்ந்து சென்று மக்கள் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுகின்றன. எந்த மக்கள் தொகையிலும் இந்த மூன்று குழுவினரும் இப்படித்தானிருந்தாக வேண்டும். நடுவிலுள்ள இயல்புநிலைக் குழுவைவிட இரு கோடிக் குழுக்கள்தான் உளவியலாரின் கவனத்தை மிகவும்

கவர்ந்து நிற்கின்றவர்கள். அவர்களைப்பற்றிச் சிறிது விரிவாக நோக்குவோம்.

உளக்குறைபாடு: உளவியல் சோதனைகளில் உளக்குறைபாட்டை உணர்த்துகின்றவை நுண்ணறிவுச் சோதனைகளாகும். நுண்ணறிவுச் சோதனைகளின் செயல் நிறைவேற்றத்தில் நுண்ணறிவு ஈவின் அளவு எழுபதும் அதற்குக் கீழும் செல்லுமானால், அந்த அளவையுடைய மக்கள் உளக் குறைபாடுள்ளவர்கள் என்று வழக்கமாகக் கூறுகின்றனர். கிட்டத்தட்ட இரண்டு முதல் மூன்று சதவிகிதத்தினர் எந்த மக்கள் தொகையிலும் உளக் குறைபாடுள்ளவர்களாக இருக்கின்றனர். இதைக் கொண்டு மேலும் பல துணைப்பிரிவுகள் செய்யலாம். வழக்கமாக அவர்களை மூன்று வகைகளில் அடக்குகின்றனர்.

அவை மென்மையான குறைமனம், மிதமான குறைமனம், கடுமையான குறைமனம் என்பவை. மென்மையான குறைமனத்தின் நுண்ணறிவு ஈவு 50லிருந்து 70வரையில் பரவி நிற்கின்றது. மிதமான குறைமனத்தின் நுண்ணறிவு ஈவு 20லிருந்து 50வரையில் பரவி நிற்கின்றது. கடுமையான குறைமனத்தின் நுண்ணறிவு ஈவு இருபதுக்கும் குறைந்து நிற்கின்றது.

இந்த வகையான வகைப்படுத்தல் மட்டுமன்றிச் செயல்முறை வகைப்படுத்தலும் வழக்கத்திலிருந்து வருகின்றது. இந்த வகைப் படுத்தல் மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. கவனித்துப் பேணப்பட வேண்டியவர்கள், தனியாளுக்குரிய முறைகளின்மூலம் பயிற்சி பெறக்கூடியவர்கள், தனி வகுப்புகளின்மூலம் கற்பிக்கப்பட வேண்டியவர்கள் என்று மூன்று வகைகளாகவும் பிரிக்கின்றார்கள். எல்லா மட்டத்திலும் உளக் குறைபாடுடையவர்களுக்கு மறுவாழ்வளிக்கும்பொருட்டு முயற்சிகள் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டு வருகின்றன. அப்படிப்பட்ட திட்டங்கள் நினைத்ததற்கு மேலாகவே வெற்றிகரமாகச் செயல் பட்டு வருகின்றன.

உளக்குறைபாடுள்ளவர்களை அடையாளம் காண்பதற்கு நுண்ணறிவுச் சோதனைகள் வெளிப்படுத்துகின்ற நுண்ணறிவு ஈவுகள் ஒரு பெரும் கட்டளை விதியாக இருக்கின்றன. மேலும் அவை, தனியாள் நிகழ்ச்சி வரலாற்றின் மன நிலையையும் சிகிச்சை முறையையும்பற்றியும், எவ்வாறு முடிவுகள் எடுப்பது என்பதைப் பற்றியும் வலியுறுத்துகின்றன. அத்தகைய முடிவுகள் தனியாளின் நுண்ணறிவுமட்டம், சமூகத் தகுதி, கல்விச் சார்பான வரலாறு

ஆகியவற்றின்மீதும் விரிவாக நடத்தப்படும் ஆராய்ச்சிகளின்மீதும் எடுக்கப்படுகின்றன.

குறிப்பாக, முடிவு எல்லைமட்டத்திற்குள் தாழ்ந்த நுண்ணறிவு ஈவுள்ள ஒரு மனிதன் உயர்ந்த நுண்ணறிவுள்ள மனிதனைவிட நல்ல முறையில் சுதந்தரமான சமூக வாழ்க்கைக்குத் தன்னைப் பொருத்தப்பாடு செய்துகொள்ளலாம். இதன்பொருட்டு அவனுக்கு அடுத்துவரும் சூழ்நிலைகள் நல்லாதரவானவையாக இருக்க வேண்டும். உளக் குறைபாட்டின் காரணத்தைக்கொண்டு ஒருமுகக் கூறு சார்ந்த உளக் குறைபாடு பன்முகக் கூறு சார்ந்த உளக்குறைபாடு என்று ஒரு பாகுபாடு செய்யலாம்.

ஒருமுகக் கூறுள்ள நிகழ்ச்சி வரலாறுகளெல்லாம் இறுதி முனையிலுள்ள உளக் குறைபாட்டினர். அவர்கள் உறுப்புச் சீர்கேட்டையும் நுண்ணறிவுக் குறைபாடுகளையும் வெளிப்படுத்துகின்றார்கள். அவை ஒரு தனிக் குறைபாடுள்ள சீன் காரணமாகவோ பெரும் சூழ்நிலைத் தொந்தரவு காரணமாகவோ இருக்க முடியும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. பன்முகக் கூறு சார்ந்த குறைபாடுகள் நுண்ணறிவின் இயல்பான பரவல் பட்டியில் தாழ்ந்த முடிவைப் பிரதிபலிக்கின்றன. அவை குறைபாட்டின் வேறுபாடான படித்தரங்களைக் காட்டுகின்றன. அவை ஒவ்வொரு தனியாள் நிகழ்ச்சி வரலாற்றிலும் உள்ள தீங்கான மரபுநிலைக் கூறுகளையும் சூழ்நிலைக் கூறுகளையும் ஒரு குறிப்பிட்ட வகையில் இணைப்பதைச் சார்ந்திருக்கின்றன.

ஒரு முகக் கூறுகளின் குறைபாடுகள் பன்முகக் கூறுகளின் குறைபாடுகளோடு சேர்க்கப்படுவதால், தாழ்ந்த நுண்ணறிவு ஈவின் அலையதிர்வெண், கணக்கியல் முறைப்படி பெற்ற சாதாரணமாக நிகழும் வளைவைவிட மிகுதியாக இருக்கின்றது. பெரும் அளவாய்வுகளின் நுண்ணறிவுப் பரவல் பட்டி பல மக்கள் தொகுதிகளில் அளவுகோலின் தாழ்ந்த முடிவுகளில் இப்படிப்பட்ட விலக்குதல்களையே வெளிப்படுத்துகின்றது. எனவே, உளக் குறைபாடுகள் நிகழுவதை முறையாகக் கண்டறிந்து ஓரளவு சரிநுட்பமாக அடையாளம் காண முடியும். அதைக்கொண்டு மேல் நோக்கிச் சென்று உளக் குறைபாடுள்ளவர்களை வகைப்படுத்தவும் முடியும்.

மேம்பட்ட நுண்ணறிவு : உயர்ந்த திறமையுள்ள மனிதர்களை விவரித்துக் கூறுவதில் பல்வேறு சொற்கள் ஓரளவு வேற்றுமைச் சிக்கல்களுடன் உபயோகிக்கப்படுகின்றன. நுண்ணறிவுத் திறமை

பெற்றவர்கள் பொதுவாக நுண்ணறிவுச் சோதனையின் மீதுள்ள உயர்ந்த நுண்ணறிவு ஈவுடன் ஒன்றாக வைத்து மதிக்கப் பெறுகின்றார்கள். நுண்ணறிவுச் சோதனைகளின் உயர்ந்த நுண்ணறிவு ஈவும் உயர்ந்த கல்வி சார்ந்த வெற்றிகளும் உயர்ந்த இணைப்புத் தொடர்பு கொண்டிருக்கின்றன. டெர்மன் (Terman) என்பவரும், அவருடைய கூட்டாளிகளும் ஆயிரம் குழந்தைகளின்மீது நுண்ணறிவுச் சோதனைகளை நடத்தி இக் கருத்துக்கு ஆதரவு திரட்டியுள்ளார்கள். டெர்மனின் ஆராய்ச்சி முடிவுகள் மிக விரிவான ஆராய்ச்சிகளால் சரிபார்க்கப்பட்டன. அந்த ஆராய்ச்சிகளில் எல்லாம் மேம்பட்ட நுண்ணறிவுள்ள குழந்தைகள் பள்ளிக்கூட வேலைகளில் மிகவும் வெற்றிகரமாகவே இருந்திருக்கின்றார்கள். மேலும், அவர்கள் நல்ல உடல் நலமுள்ளவர்களாகவும், மன வெழுச்சிப் பொருத்தப்பாடுள்ளவர்களாகவும், விரிவான கவர்ச்சிகளைக் கொண்டவர்களாகவும், அளவிடப்பட்ட ஒவ்வொரு பண்பிலும் சராசரி மாணவர்களை மிஞ்சக்கூடியவர்களாகவுமிருந்தார்கள்.

இதில் தனிப்பட்டவர்கள் விதிவிலக்காக இருந்தாலும், குழு ஒட்டுமொத்தமாக, நுண்ணறிவு மிக்கக் குழந்தையை வலிமையற்றவன் என்றும், நோயாளி என்றும், கூச்சமுள்ளவன் என்றும் குறுகிய நோக்கத்தோடு முன்காலத்தில் பொதுமக்களின் ஒரு படிவார்ப்பாக இருந்த கருத்தைத் தெளிவாகச் சிதறடித்துவிட்டது. டெர்மன் ஆராய்ச்சிக்குத் தேர்ந்தெடுத்த குழுவினர் முதிர்ந்தவர்களாக வளர்ந்தபோது குமரப் பருவத்து வாக்குறுதிகளை முதிர்ந்தவர்களுடைய ஒப்பற்ற வெற்றிகளாக்கிக் காட்டினர்.

உயர்ந்த நுண்ணறிவுள்ளவர்களைக் குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்படும் மற்றொரு சொல் திறமை பெற்றவர்கள் (talented) என்பதாகும். வழக்கமாக இச் சொல் தனித்திறமைப் பெற்ற ஒரு துறைக்குள்ளேயேயுள்ள மேம்பாட்டைக் குறிக்க உபயோகிக்கப்படுகின்றது. இது வழக்கமான நுண்ணறிவுச் சோதனையின் எல்லைக்குள் அடங்காத துறைகளுக்கு உபயோகிக்கப்படுவதாகும்; உதாரணமாக, இசைத்திறமை, கலைத்திறமை, பொறித்திறமை முதலியவற்றைக் குறிக்கும். உண்மையில் மேம்பாட்டின் எல்லா படித்தரங்களும் பொதுவாக நிகழக்கூடும் என்பதையும் நாம் அறிய வேண்டும். இக் கருத்து எவ்வாறு பெறப்படுகின்றது என்றால், பல்வேறு திறமைகளிடையே உள்ள இணைப்புப் பொருத்தப்பாடு உயர்ந்த அளவுக்கு உடன்பாடுடையதாகவுமில்லை; எதிர்மறையானதாகவுமில்லை. எனவே, திறமைகளெல்லாம் ஒன்றுக்கொன்று வேறுபட்டுத் தன்னிச்சையாகவே இயங்குகின்றன.

ஒருசில தனியாள்கள் பல பண்புகளில் மேம்பட்டு நிற்கலாம். சிலர் ஒருசில பண்புகளில்மட்டும் மேம்பட்டு நிற்கலாம். மற்றும் சிலர் ஒரு திறமையைமட்டுமே வெளிப்படுத்தலாம்; மற்ற திறமைகளில் மிகவும் தாழ்ந்து, சராசரிக்குக் கீழ் உள்ளவர்களாக இருக்கலாம். எனவே, திறமை பெற்றவர்கள் என்பது மூன்று வகையான மனிதர்களைத் தழுவி நிற்கின்றது.

நுண்ணறிவின் மேம்பாட்டைப்பற்றிப் பேசுகின்றபோது மேதை என்ற சொல்லையும் அடிக்கடி பயன்படுத்துகின்றனர். ஆனால், இது மிக உயர்ந்ததும் அரியதுமான நுண்ணறிவு மேம் பாட்டின் படித்தரத்தைக் குறிப்பதாகும். உதாரணமாக, நுண்ணறிவுச் செயல் நிறைவேற்றத்தில் குறைந்தது 180ஆவது நுண்ணறிவு ஈவு இருக்க வேண்டுமென்று ஹாலிங் வொர்த் (Holling Worth) என்ற ஆராய்ச்சியாளர் கருத்துத் தெரிவிக் கின்றார். இந்த மட்டத்தில் கெலிப்பு எண்களைப் பெறுகின்ற மனிதர்களிடையே சராசரி மட்டத்திலிருக்கின்ற மனிதர்களைவிட அதிகமாக ஆளுமைச் சிரமப்பாடுகள் நிகழக்கூடும் என்றும் கருதுகின்றனர். நுண்ணறிவு மட்டத்தில் உள்ள அகன்ற இடை வெளி தனியாள்களிடையே நிகழும் செய்தித் தொடர்பில் சிரமங்களை அதிகரிக்கச் செய்கின்றது.

மேலும், குழந்தைப் பருவத்தில் தனியாளின் உள வயது, அவனுடைய உடல் வளர்ச்சி, சமூக வளர்ச்சி ஆகியவற்றிலுள்ள மிகுந்த முரண்பாடுகள் சிரமத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. இந்த வகையான கோடி எல்லைக்கு விலகியவர் களிடமும் சரியான கல்விப் பயிற்சியின்மூலமும், பெற்றோர்களின் மனப்பான்மைமூலமும் பொருத்தக்கேடு ஏற்படாமல் தடுக்க முடியும்.

நுண்ணறிவில் மேம்பாட்டு நிலைக்கு விலகியவர்களிடையே தேர்வராய்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. படைப்புத் திறமை ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டபோது இந்த வகையைச் சார்ந்த மனிதர்கள் பெரிதும் அடங்கியிருந்தார்கள். ஒப்பற்ற நுண்ணறிவுச் சாதனை மேம்பாடான கல்வித்துறைச் செயல் நிறை வேற்றத்தைவிட உயர்வான திறமையுடையது என்பது எப்போதும் உள்ளடங்கியுள்ள உண்மையாகும். ஆனால்,படைப்புத் திறமைபற்றிய ஆராய்ச்சியே அண்மைக் காலத்தில்தான் வளர்ச்சியுற்று வருகின்றது என்பதால், இதைப்பற்றி அதிகமாக ஏதும் கூறுவதற்கில்லை.

படைப்புத் திறமை பெற்ற மனிதர்களின் சிறப்புக் கூறுகளை விரிவான முறையில் உளவியலார் பல்வேறு வகையான முறைகளைக் கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர். எல்லாத் துறைகளிலும் எல்லா மட்டத்திலும் படைப்புத் திறமைகளை விருத்தி செய்து அடையாளம் கண்டறியும் முறைகளைப் பற்றியும் விரிவான ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. படைப்புத் திறமையைப்பற்றி நடத்தப்பட்டுள்ள இன்றைய ஆராய்ச்சிகள் படைப்புத் திறமையைப்பற்றி நல்ல விவரங்களை அளித்தாலும் நுண்ணறிவுக்கும் படைப்புத் திறமைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை மிகைப்படுத்திக் காட்டப்படுவதை நாம் தடுத்தாக வேண்டும். இன்றைய நுண்ணறிவுச் சோதனைகளின்மூலம் பெறுகின்ற உயர்ந்த நுண்ணறிவு சுவோ உயர்ந்த கல்விச் சாதனையோ படைப்புத் திறமையோடு ஒன்றியதாக இல்லை.

இந்தத் திறமைகளெல்லாம் ஒரு மனிதர் ஒப்பற்ற சாதனையைச் செய்ய முடியும் என்று உறுதியாகக் கூற முடியாது. மாறாக, அவை படைப்புத் திறமையைத் தடுக்கவில்லை; தவிர, படைப்புத் திறமையோடு தொடர்பு கொள்ளாமலுமில்லை. வழக்கமான நுண்ணறிவுச் சோதனைகள் புரிந்துகொள்ளும் திறமையையும், தங்க வைக்கும் திறமையையும் வலியுறுத்தினாலும் குறிப்பிடத் தக்க அளவுக்குப் படைப்புத் திறமையோடு இணைப்புத் தொடர்பாடு கொண்டிருக்கின்றன. எனவே, நுண்ணறிவையும் படைப்புத் திறமையையும் வேற்றுமைப்படுத்திக் காட்டுவதைவிட நுண்ணறிவின் கருத்துச் சொல்லை மிகவும் விரிவாக்கிப் புதிதாகக் கண்டுபிடித்த படைப்புத் திறமையின் பண்புகளையும் அதில் சேர்த்துக் கொள்ளுவது சிறப்புடையதாகும்.

குறிப்பு நூல் தொகுப்பு

(Bibliography)

அத்தியாயம் 1

1. Anastasi, A., 'Differential Psychology', Erd. ed. New York: Macmillan, 1958.

2. Tyler, L. E., 'The Psychology of Human Differences,' New York: D. Appleton-Century Company Press, 1947.

அத்தியாயம் 2

1. Anastasi, A., 'Heredity, Environment and the Question, How?' Psychologlcal Review, 1958, 65, 197-208.

2. Dobzhasky, T., 'Manking Evolving: The Evolution of the Human Species', New Haven: Yab University Press, 1962.

3. Fuller, J. L., and Thompson, W. R. 'Behaviour Genetics', New York: Wiby, 1960.

4. Searle, L. V., 'The Organization of Hereditary Maze Brightness and Maze Dullness', Genetic Psychological mcnograph, 1949, 39, 279-325.

5. Hirsch, J., and Tryon, R. C., 'Mass Screening and Reliable Individual Measurement in the Experimental Behaviour Genetics of Lower Organisms', Psychological Bulletin, 1956, 53, 402-410.

6. Cattell, R. B., Stice, G. F, and Kristy, N. F., 'A first approximation to native nurture ratios for eleven primary Personality factors in objective tests, Journal of Abnormal and Social Psychology, 1957, 54, 143-159.

அத்தியாயம் 3

1. Anastasi, 'A Differential Psychology', 3nd. ed. New York: Macmillan, 1958.

2. Welford, A. T., 'Ageing and Human Skill', New York: Oxford University Press, 1958.

3. Bradway, K. P., Thompson, C. W. and Cravens, R. B., 'Preschool IQ's after twenty-five years', Journal of Educational Psychology, 1958, 49, 278-281.

அத்தியாயம் 4

1. Williams, R. J., 'Biochemical Individuality', New York: Wiby, 1956.

2. Sheldon, W. H., and Stevans, S. S., 'The Varieties of Temperament', New York: Harper and Row, 1942.

3. Anastasi, A., 'Differential Psychology', 3rd ed. New York: Macmillan, 1958.

அத்தியாயம் 5

1. Hutt, M. L,, and Gibby, R. G., 'The mentally Retarded', Unid 2nd ed. Boston: Allyn and Bacon, 1965.

2. Getzels, J. W., and Jackson, P. W., 'Creativity and Intelligence, Exploration with Gifted Students, New York: Wiby, 1962.

3. Guilford J. P., 'Pusmality, New York: Mcgraw-Hill Book Company, 1959.

8. சமூக உளவியல்

1. சமூக உளவியலின் நோக்கம், எல்லை, முறைகள்

சமூக உளவியல், உளவியல் துறைகளில் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகின்றது. உளவியலின் செய்திப்பொருள் மனிதனாகும். தனி மனிதனுடைய நடத்தையை ஓர் ஒழுங்கு முறையாக அறிகின்றபோது அஃது ஓர் அறிவியலாகின்றது. சமூக உளவியல் தனி மனிதனுடைய நடத்தையை அவனுடைய சமூகச் சூழ்நிலை ஓர் ஒழுங்கு முறையாக ஆராய்கின்றது. தனி மனிதன், தான் வாழ்கின்ற சமூகத்திலோ அல்லது அவன் மற்ற மனிதர்களோடு ஊடாடுகின்ற கும்பலிலோ தன்னை, தனக்கேயுரிய முறையில் வெளிப்படுத்துகின்றான். அவன், தன்னை எந்த வகையில் வெளிப்படுத்துகின்றான் என்பதை ஒழுங்கு முறையாக ஆராய்கின்ற அறிவியல், சமூக உளவியல். எனவே, சமூக உளவியல் தனி மனிதனுடைய நடத்தையைச் சமூகச் சூழ்நிலையில் அறிய விரும்புகின்றது.

தனி மனிதன் மற்ற மனிதர்களோடோ ஒரு கும்பலோடோ ஊடாடல் புரியும்போது அவன் எந்த வகையில் மற்ற மனிதர்களின் நடத்தையில் செல்வாக்குப் பெறுகின்றான் அல்லது அவர்கள் தனி மனிதனுடைய நடத்தையில் எந்த வகையில் செல்வாக்கை உண்டாக்குகின்றார்கள் என்பதும் சமூக உளவியலின் முக்கிய செய்திப் பொருளாகும். எனவே, சமூக உளவியல் தனி மனிதனுடைய நடத்தை, சமூகத்தின் நடத்தை ஆகிய இரண்டையும் இணைத்து, அதிலிருந்து வெளிப்படும் விளைவை முக்கியமாக அறிகின்றது.

நடத்தை என்று நாம் இங்கே குறிப்பிடுவது, தனியாள் என்ன அறிகின்றுன், நினைக்கின்றுன், உணருகின்றுன் என்பவை போன்ற மறைவான நடவடிக்கைகளையும், என்ன படிக்கின்றுன், என்ன எழுதுகின்றுன், எங்குப் போகின்றுன், யாரிடம் பேசுகின்றுன், யாருக்கு லாக்களிக்கின்றுன், யாரைத் திருமணம் செய்துகொள்ளுகின்றுன், என்ன பொருளைப் படைக்கின்றுன் என்பன போன்ற வெளிப்படையான நடவடிக்கைகளையும் உள்ளடக்கிக் கொண்டிருப்பது.

சமூக உளவியல் என்ற கருத்துச் சொல்லை நாம் உபயோகிக்கின்றபோதே அது நிறுவனங்களையும், நிலையங்களையும், குழுக்களையும் தனி மனிதர்களுடைய நடத்தையுடன் தொடர்புபடுத்துகின்றது என்ற பொருளுடையதாகத்தான் தோன்றுகின்றது. இந்தச் சமூக நிறுவனங்கள் எல்லாம் தனி மனிதர்களுடைய நடத்தையைக் கட்டுப்படுத்தி, வரை எல்லைக்குட்படுத்தி நடத்திச் செல்லுகின்றன என்பதையும் ஒரு கோணத்திலிருந்து நாம் காணலாம். மற்றொரு கோணத்திலிருந்து நிறுவனங்கள் செயல்படுவதைப் பார்த்தால் தனி மனிதர்கள் அவற்றின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்தி நடத்திச் செல்லுகின்றுர்கள் என்று தோன்றுவதைக் காணலாம்.

மனிதன் ஓர் உயிருள்ள பிராணி வகையைச் சேர்ந்தவன். அவனுடைய நடத்தையை உயிருள்ள பிராணிகளை அறிகின்ற முறையிலேயே அறியலாம் என்றுலும், சமூக உளவியலார் மனிதனை ஒரு சமூகப் பிராணியாக எடுத்துக்கொண்டு காண வேண்டும் என்று கருதுகின்றனர். மனிதன் மற்றப் பிராணி வகைகளிடமிருந்து நடத்தையில் எவ்வாறு மாறுபடுகின்றுன் என்பதைச் சரியாகக் குறிப்பிட்டுக் காட்டுவதற்குச் சமூக உளவியலார் விரும்புகின்றனர். எனவே, சமூக உளவியலார் மனிதனுடைய சமூக நடத்தையில் அதிகக் கவனம் செலுத்துகின்றனர். மேலும், அவர்கள் பண்பாட்டுச் சிறப்புக்கான நிலையங்கள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றைச் சார்ந்திருக்கும் மனித நடத்தையின் சிறப்புக் கூறுகளையும் அறிய விரும்புகின்றுர்கள். மனிதன் இயற்கையாகவே எவ்வாறு ஒரு சமூக மிருகமாகுன் என்பதை விளக்கிக் காட்டுவது சமூக உளவியலின் ஒரு முக்கிய பிரச்சினையாக இருக்கின்றது.

சமூக உளவியலில் ஒரு சுதந்தரமான ஒழுங்குமுறைப் பயிற்சி (discipline) என்று ஒரு சமயம் கருதப்பட்டது. மற்றொரு சமயம் அஃது உளவியல் ஒரு கூறு என்றும், சமூக இயலின் ஒரு கூறு என்றும்

கருதப்பட்டது. மேலும், அது பல்வேறு சமூக அறிவியல்களின் தனி நலன்கள் சந்திக்கின்ற ஓர் இடமாகவும் கருதப்பட்டது. உளவியல் உயிரினச் சார்புடையது என்பது ஒன்றைத் தவிர மற்ற எல்லாவகையிலும் உளவியலோடுதான் சமூக உளவியல் சேர்க்கப் படவேண்டும் என்று கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனல், சமூக உளவியல் சமூகவியலின் இருதயமாகும் என்று பிடிவாதம் செய்கின் றனர். ஆனல், எந்த ஒரு துறையுடன் இதை இணைத்து விடுவதும் விரும்பத்தக்கதன்று. சமூக உளவியலே ஒரு தனி ஒழுங்குமுறைப் பயிற்சி என்று கருதுவதே அதற்குத் தரும் சிறப்பாகும்.

ஆனல், புறநிலேயாக இந்த அறிவியலே நாம் காணும்பொழுது, தனிமனிதனுடைய நடத்தையில் அது கவனம் செலுத்தும் பொழுது உளவியலாகவும், சமூக நிறுவனங்களின்மீது கவனம் செலுத்தும்பொழுது சமூக இயலாகவும், பண்பாட்டுச் சிறப்பு களின்மீது கவனம் செலுத்தும்பொழுது மனித இன இயலாகவும் (anthropology) காணப்படுகின்றது. சமூக உளவியலின் இந்தச் சிறப்புக் குணத்தைக் கண்ணுற்ற லிண்டன் (Linton,) என்பவர், இன்னும் சில ஆண்டுகளில் உளவியல், சமூகவியல், மனித இன இயல் ஆகிய மூன்றை ஒன்ருக இணைக்கப்பட்ட ஒரு புதிய சமூக அறிவியல் தோன்றுவதை நாம் காண முடியும் என்று கூறு கின்ருர்.

சமூக உளவியலின் வரையறைக்கு விளக்கம் தரும் வகையில் சில உதாரணங்களேக் காட்டலாம். பொதுத் தேர்தலில் பல்லா யிரம் பேர் தம்முடைய வாக்குகளின்மூலம் ஒருவரைத் தேர்ந் தெடுத்தல், கால்பந்து போட்டி மைதானத்தில் விளேயாடுகின்ற வர்களும் கூடி நிற்பவர்களும், நன்ருக விளேயாடிய விளேயாட்டு வீரரை ஊக்குவிக்கும் பார்வையாளர்கள், மாணவர்கள் நிறைந்த வகுப்பறையில் உள்ள ஆசிரியர், வீட்டில் கணவன் மனேவி ஆகிய வர்களின் ஊடல், தந்தை, குற்றம் செய்த தன்னுடைய மகனேக் கண்டித்தல், வீதியில் அடுத்த வீட்டுப் பையனுடன் விளேயாடும் பக்கத்துவீட்டுப் பையன் ஆகியோரை எடுத்துக்கொள்ளலாம். இவர்கள் அனைவருமே தங்களேயல்லாது வேறு ஒருவரிடமோ ஒன்றுக்கு மேற்பட்ட பலரிடமோ ஒருவகையான தொடர் புடையவர்களாகவே இருக்கின்ருர்கள். இவர்கள் கொள்ளுகின்ற தொடர்பு நேரடித் தொடர்பாகும். ஆனல், மனிதர்கள் மறை முகமாகவும் தொடர்பு கொள்ளுகின்ருர்கள். அந்தத் தொடர்பு இதே விளேவைத்தான் ஏற்படுத்துகின்றது.

ஒரு மனிதன் வானொலியில் செய்திகளைக் கேட்கின்றான்; தினசரிப் பத்திரிகைகளில் செய்திகளைப் படிக்கின்றான். இவை யெல்லாம் நடக்கப் போகின்ற தேர்தல் ஒன்றைப்பற்றியதாக இருக்கலாம். எனவே, யாருக்கு வாக்களிப்பது என்ற பிரச்சினை அவனுக்கு ஏற்படுகின்றது. இந்த நிலைமையில் அவனுடைய நடத்தை மற்றவர்களுடைய நடத்தைக்கு எதிர்வினையாக அமைகின்றது. போட்டி போடுகின்ற இருவரில் யார் ஒழுக்கமுள்ளவர் சமூகச் சூழ்நிலைகளில் மதிக்கத்தக்க பணி புரிந்திருக்கின்றார், மக்களிடம் எவ்வாறு நடந்துகொள்ளுகின்றார், இந்த வகையில் சிந்தித்துப் பார்த்து அந்த நடத்தைகளுக்கு ஏற்ப எதிர்வினை புரிகின்றார். இந்த எதிர்வினை மற்றவர்களின் நடத்தைக்கு மறைமுகமாக நடைபெறுகின்றது. இவ்வாறு சமூக உளவியலின் செய்திப் பொருள் தனிமனிதன் சமூகத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ சந்தித்துச் செயல்படுகின்ற எதிர்வினைகளில் அடங்கியிருக்கின்றது.

ஒரே பொருளை ஆராய்கின்ற இரண்டு அறிவியல்கள் வெவ்வேறு வகைகளாக அதை நோக்குகின்றன. உதாரணமாக, குற்ற நடவடிக்கையை உளவியலும் சமூக இயலும் வெவ்வேறு கோணத்திலிருந்து நோக்குகின்றன. குற்ற நடவடிக்கையை வழக்கமாக உளவியல் தனி மனித நடத்தையாக எடுத்துக் கொண்டு அறிகின்றது. இதற்கான விளக்கம் உளவியல் எல்லைக் குள்ளிருந்தே தரப்படுகின்றது. தனி மனிதனின் எதிர்வினை வடிவங்கள், பழக்கங்கள், பண்புக் கூறுகள், நுண்ணறிவு நிலை, ஆளுமைக் கூறுகள் முதலியவற்றை அடிப்படையாக எடுத்துக் கொண்டு விளக்கம் தரப்படுகின்றது. ஆனால், சமூகவியல் இக் குற்ற நடவடிக்கையைப் பரந்த நோக்கத்திலிருந்து காணுகின்றது. குற்ற நடவடிக்கை ஒருவகையான சமூக நோய் என்றும், சமூகக் கூட்டுச் சிதைவுறுதலின் அறிகுறி என்றும் கூறுகின்றது. மேலும், குற்றம் புரிதல் நிறுவனத்தின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சி என்றும், சமூக வரையளவு செய்த விதிகளை மீறுவது என்றும், அதைச் சிலர் தம்முடைய வாழ்க்கை வழியாகக் கொள்ளுகின்றனர் என்றும் சமூகவியல் கருதுகின்றது. மேலும், குற்றச் செயல்கள் குழுவுக்குக் குழு மாறுகின்றது என்றும் சமூகவியல் கருதுகின்றது.

குற்றச் செயல்களில் தனி மனிதனுடைய பண்புக்கூறுகளை சமூகவியல் எடுத்துக்கொள்ளுவதில்லை. சமூக, பொருளாதார அமைப்புகளில் உள்ள வேறுபாடுகளையும், குறைபாடுகளையும் குடும்பம், வகுப்பு வேறுபாடுகள், ஏழ்மை மற்றுமுள்ள சமூக நிலைமைகளையும் சமூகவியல் குற்றச் செயல்களோடு ஒப்பிட்டு

ஆராய்கின்றது. இன்றைய சமூக உளவியலார் இரண்டுமே சரி என்றுதான் கருதுகின்றனர். ஆனால், இரண்டு விளக்கங்களும் தனித்தனியே முழுமை பெறவில்லை என்றும் அவர்கள் கருதுகின்றார்கள். சமூக உளவியலார் உளவியலுக்கும் சமூகவியலுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை அவ்வளவு முக்கியமாக எடுத்துக் கொள்ளுவதில்லை. தனி மனிதனிடம் காணப்படும் பண்புக் கூறுகளும் உளவியல் செயல்முறைகளும் நிறுவனங்களின் செயல் எல்லைகளினால் பாதிக்கப்படுவதால், தனி மனிதனுடைய நடத்தையை நிறுவனங்களின் செயல் எல்லையோடு தொடர்புபடுத்தித்தான் காண முடியும். எனவே, இந்த இரண்டு அறிவியல்களையும் சமூக உளவியல் ஒன்றாகக் கொண்டுவர முயலுகின்றது. இதற்கு உபயோகிக்கப்படும் கருவி சுற்றுச் சார்பிற்குரிய செல்வழி (situational approach) அல்லது அணுகும் முறை என்று கூறப்படுகின்றது. இந்த அணுகும் முறையில் உளவியல் செயல்முறைகளும், சமூகச் சூழ்நிலையும் பிரிக்க முடியாத ஒரு முழுமையின் பகுதிகள் என்று கருதப்படுகின்றன.

பெரும்பாலான சமூக உளவியலார் தம்முடைய நூல்களில் நற்பண்புத் திரட்சியையே காண விரும்புகின்றனர்; சமூக நடத்தையின் இயல்புபற்றி ஓர் உறுதியான நிலை கொண்டவர்களாக இல்லாமல் எல்லா வகையான கோட்பாடுகளிலிருந்தும் சிலவற்றைப் பொறுக்கிச் சேர்த்துக்கொள்ளுகின்றனர்; பல்வேறுபட்ட கோட்பாடுகளிலிருந்தும் கருத்துகளைத் தருகின்றனர், இந்த முறையில் தீமைகளுமிருக்கலாம்; நன்மைகளுமிருக்கலாம், எவ்வாறிருப்பினும், சமூக நடத்தையின் கோட்பாடுகளை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

சமூக நடத்தைக் கோட்பாடுகள்

மனிதனுடைய சமூக நடத்தை, சமூகவியலாரிடமும் உளவியலாரிடமும் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெற்றிருக்கின்றது என்பதை மேலே கண்டோம். இது புதியதாக ஏற்பட்ட தொரு நிகழ்ச்சியன்று. ஏறத்தாழ அரை நூற்றாண்டாகவே உளவியல், சமூகவியல் மாணவர்களுடைய கவனத்தைக் கவர்ந்து வந்திருக்கின்றது. மனிதனுடைய நடத்தையை அறிவதற்குப் பல வழிகளிருக்கின்றன. பல கோட்பாடுகள் அவற்றிலிருந்து உருவாகியிருக்கின்றன. அந்தக் கோட்பாடுகளின் குறிக்கோள்கள் நடத்தையை அவற்றின் வழியிலேயே விளக்கிக் கூறுவதாகும். அவற்றில் சிலவற்றைக் காண்போம்:

அடையாளக் குறி இடைவினைக் கொள்கை (Symbolic Interactionism): மனிதன் தன்னை ஒரு பண்பாட்டில் மூழ்கடித்துக்

கொண்டிருக்கின்றான். எனவே, அவனுடைய நடத்தையின் சிறப்புத் தன்மைகள் எல்லாம் அந்தப் பண்பாட்டிலிருந்தே அவனைச் சேருகின்றன. நுண்ணறிவு மிகுந்த அடையாளக்குறிகளை வெளிப் படுத்துவதிலும், அவற்றை உருவாக்குவதிலும், பேசுகின்ற மொழியிலும் அவன் சார்ந்துள்ள பண்பாடு செல்வாக்குப் பெற்றிருக்கின்றது. சமூகம் என்ற சொல்லுக்கு இணைப்பு வழி (communication) என்றும் பொருள் கூறலாம். பேசப்படுகின்ற ஒரு மொழி வாகனத்தைப் போன்றது. அதன்மூலமாக ஒரு பண்பாடு ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தத் தலைமுறைக்குப் பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்படுகின்றது. மேலும், அம் மொழி பண்பாட்டின் எல்லாப் பண்புக்கூறுகளையும் இணைத்து வைக்கும் கருவியாகவுமிருக்கின்றது.

மனிதனையும் ஒரு வாழும் மிருகமாக எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், அவனுடைய நடத்தையின் பண்புக்கூறுகள் மற்ற மிருகங்களிடமிருந்து அவனை வேறுபடுத்திக் காட்டுகின்றன. அந்தப் பண்புக்கூறுகளிலிருந்து நாம் காண்பது என்னவென்றால், மனிதன் அடையாளக்குறிகளைக் கையாளுகின்ற ஒரு மிருகம் என்பதாகும். அடையாளக்குறிகளுக்கு விளக்கம் தருகின்ற பிராணிதான் மனிதன் என்ற முடிவுக்கும் நாம் வரலாம். ஆனால், மொழி பரிணமிப்பதற்கு முன்பே சமூக அமைப்பின் சிக்கலான வடிவங்கள், நிறுவனங்கள், விதி முறைகள், நம்பிக்கைகள், வழக்கங்கள், மற்றும் எல்லா வகையான பண்பாட்டு முக்கிய நிகழ்ச்சிகள் எல்லாம் தோன்றிவிடுகின்றன. எனவே, மொழியை உபயோகப்படுத்துகின்ற நிலையிலுள்ள மனிதனின் நடத்தை அவன் உபயோகிக்கின்ற உரையாடலில் சுருக்கமாகக் காட்டப் படுகின்றது. மொழி சார்ந்த நடத்தையானது செயல் எதிர்ச் செயலின் ஒரு கற்ற வடிவமாகும். இது மனித மூளையின் இயல்பை அடிப்படையாகக்கொண்டிருக்கின்றது.

எனவே, இக் கோட்பாட்டின்படி மனிதன் அடையாளக் குறிகளுக்குப் பொருள் உள்ள விளக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்ற நடத்தையுள்ள பிராணியாகும். இந்த அடையாள அறிகுறிகள் எல்லாம் பரம்பரையாகப் பண்பாட்டில் தொடர்ந்து சென்றுகொண்டிருக்கின்றன. அவற்றை மனிதன் தன்னுடைய மூளையின் அமைப்புக்கேற்பக் கற்றுச் செயல்படுத்துகின்றான்.

உயிரியல் உறுதிப்பாட்டுக் கொள்கை (Biological Determinism) : இக் கொள்கையானது மேலே நாம் கண்ட அடையாளக்குறி இடைவினைக் கொள்கைக்கு முற்றும் முரணானது. மனித நடத்தை

யின் பல்வேறு வகையான விளக்கங்களையும் காட்டும் கொள்கை இது என்று நம்பப்படுகின்றது. மனித உடலின் இயல்பிலிருந்து தான் சமூக நடத்தை பெறப்படுகின்றது என்பது இக் கோட்பாட்டின் கருத்தாகும். எவ்வாறெனில், மனித உடல் குடி வழியாக உறுதியாக்கப்படுகின்றது. ஆகவே, குடிவழியின் செல்வாக்கு நடத்தையில் வலியுறுத்தப்படுகின்றது. இக் கருத்து பழைய புலன் தூண்டல் கோட்பாட்டை நினைவுபடுத்துகின்றது. பெரும்பாலான மனித நடத்தைகள் எல்லாம் புலன் தூண்டலால் உந்தப்பட்டவையாகக் கருதப்படுகின்றன. புலன் தூண்டல் உந்து சக்திகள் மரபுரிமையாகப் பெறப்பட்டவை என்றும், அவை உயிரினங்களுக்கும் பொது என்றும் அக் கோட்பாட்டின்படிக் கருதப்படுகின்றது.

உதாரணமாக, போர் அல்லது சண்டை போடும் போக்குக்குக் காரணம், மனிதனின் உள்ளார்ந்த சண்டையிடும் இயல்பின் புலன் தூண்டல் என்று கருதப்படுகின்றது. காதல், திருமணம் தொடர்புடைய எல்லா வகையான நடத்தைகளும் பால்புலன் தூண்டல், தாய்ப்புலன் தூண்டல் ஆகியவற்றால் ஏற்படுகின்றன என்று கூறப்படுகின்றது. இந்தப் புலன் தூண்டல் நடத்தையில் ஏற்படுகின்ற சிறிய மாறுதல்கள் எல்லாம் பண்பாட்டின் செல்வாக்கினுலும், கற்றல் செயல்முறைகளினுலும் ஏற்படுகின்றன. ஆனுல், புலன் தூண்டல்கள்தான் நடத்தையை நிர்ணயிக்கும் அடிப்படைச் சக்திகள் என்று இக் கோட்பாடு கருதுகின்றது.

இக் கோட்பாட்டின் மற்ருெரு நம்பிக்கையும் உண்டு. மனிதர்களுடைய நடத்தை பெரும்பாலும் உடல் சார்ந்த அமைப்பு அல்லது உடற்கூற்றியலமைப்பு எவ்வாறு அமைகின்றதோ அதைப் பொறுத்து இருக்கின்றது என்று நம்பப்படுகின்றது. செல்டன் (Sheldon) என்ற உளவியல் வல்லுநர் ஆண் இனத்தினரை மூன்று வகைகளாகப் பிரித்துள்ளார். அவர் ஏற்படுத்திய இந்த வகை உடலமைப்பின்மீது அமைந்ததாகும். ஒவ்வொரு வகையும் தனக்கே உரித்தான எதிர்வினைகளைக் கொண்டு இயங்குகின்றது. அவை வயிறு தள்ளிய உடலமைப்பு (Endomorphy), எலும்புத் தசை புடைத்த உடலமைப்பு (Mesomorphy), தொய்ந்த உடலமைப்பு (Ectomorphy) என்பவை. இத் துறையில் ஆராய்ச்சிகள் நடத்திய உளவியலார், குற்றவாளிகள் ஒருவகையான உடலமைப்பை யுடையவர்களாக இருக்கின்ருர்கள் என்று செயல் விளக்கம் செய்து காட்டியுள்ளார். கீழ்த்தரமான உடலமைப்பின் நேரடி விளைவுதான் குற்ற மனப்பான்மை என்று அவர் எடுத்துக் காட்டியுள்ளார். மேலும், சில கோட்பாட்டுக் கிளையினர், நடத்தை

பெரும்பாலும் சுரப்பி மண்டலத்தின் நடவடிக்கையால் நிர்ணயிக்கப்படுகின்றது என்று கூறுகின்றனர். உடல் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும்பொருட்டு உயிரினம் மேற்கொள்ளுகின்ற நடவடிக்கைதான் மனித நடத்தையாகும். இந்தத் தேவைகளை உருவாக்குவதில் வலிமையான உயிரியல் உறுதிப்பாட்டுக் கொள்கை கலந்திருக்கின்றது.

நடத்தைக் கோட்பாடும் மனப்பாங்குக் கோட்பாடும் (Behaviourism and Mentalism): நடத்தைக் கோட்பாட்டுக் கிளையினர் தெளிஉணர்நிலையை ஏற்றுக் கொள்ளுவதில்லை; அல்லது அதை வேறு வகையாக விளக்கிக் கூறுகின்றனர். மேலும் மனம், எண்ணம், உள்காட்சி, கற்பனை, பகுத்தறிவு முதலிய குறிப்பிடத்தக்க மனச் செயல்களை நடத்தைக் கோட்பாட்டுக் கிளையினர் வினைச் சொல்லாகக் கொள்ளுகின்றனர். இவையெல்லாம் நடவடிக்கைகளே தவிர, மனப்பெற்றி (faculty) அல்ல என்பது அவர்களுடைய கருத்து.

நடத்தைக் கோட்பாட்டுக் கிளையினர் பெரும்பாலும் உடல் அசைவுகளில்தான் தங்கள் கவனத்தைச் செலுத்துகின்றனர். மேலும், மிருகங்களின் நடவடிக்கைகள்தான் அவர்களுக்கு மிகவும் முக்கியமான செய்திப் பொருள்களாக இருக்கின்றன. அதனால் உயர்ந்த மிருகமான மனிதனின் மனச் செயல் முறைகளான மொழி நடவடிக்கைகளில் மிகக் குறைவான அக்கரையே காட்டியுள்ளனர்; மொழி சம்பந்தமான நடவடிக்கையான பேச்சை (speech) உறுப்புகளின் அசைவு என்றே கருதுகின்றனர். கற்பனையும் சிந்தனையுங்கூட அவ்வாறே விளக்கம் செய்யப்படுகின்றன. கற்பனையும் சிந்தனையும் மௌனமாக நடைபெறுகின்ற பேச்சு என்றும், கருவிகளைக் கொண்டு உறுப்புகளின் அசைவுகளைப் பதிவு செய்ய முடியும் என்றும் அவர்கள் நம்புகின்றார்கள்.

இக் கோட்பாட்டுக் கிளையினர் கருத்துப்படிச் சமூக உளவியலை விளக்க வேண்டுமானால், மனிதர்கள் என்ன செய்கின்றார்கள், ஏன் செய்கின்றார்கள் என்று அறிய வேண்டுமானால், அவர்கள் எவ்வாறு சிந்திக்கின்றார்கள் என்று அறிய வேண்டும். மனிதர்கள் எவ்வாறு சிந்திக்கின்றார்கள் என்று அறிவதற்கான செய்திப்பொருள் அவர்களுடைய பேச்சுதான். சிந்தனை பேச்சாக வெளிப்படுகின்றது. இக் கோட்பாட்டினர் வேறு சான்றுகளை ஏற்றுக்கொள்ளுவதில்லை. அறியும் பொருள் மனிதனாக இருந்தாலும் மிருகமாக இருந்தாலும் அவர்களிடமிருந்து அறியும்படியாக வெளிப்படும்

நடவடிக்கையைக்கொண்டுதான் அவ்வுயிரினத்தின் நடத்தையை அறிய முடியும் என்பது நடத்தைவாதிகளின் நம்பிக்கையாகும்.

குறைத்தல் கோட்பாடு (Reductionism): நடத்தைக் கோட்பாட்டுக் கிளையினர் சில சமயங்களில் உயிரியல் உறுதிப்பாட்டுக் கோட்பாட்டினராகவும் தோன்றுகின்றனர்; உயிரியல் இயந்திர நுட்பங்களை உள்ளடக்கி நடத்தைக்கு விளக்கம் தருகின்றனர்; சில நடவடிக்கைகளையும் சில வகையான நடத்தையையும் நரம்பு மண்டலத்திற்குரியவையென்று பொதுவாகக்கூறுகின்றனர். நரம்பு மண்டலத்தின் செயல்முறைகளை ஒழுங்கு முறையாக அறியாதவர்கள், நரம்புகள் துடிக்கின்றன என்றும், நரம்புகள் முறுக்கேறுகின்றன என்றும், நரம்புகள் சக்தியை இழந்துவிட்டன என்றும் பேசுவதைக் கேள்விப்பட்டிருக்கின்றோம். அவர்களுடைய இக் கூற்றுகளெல்லாம் நடத்தையைப்பற்றியதுதான்.

நரம்புப் பிணி மருத்துவர்களும் உடற்கூற்றியல் வல்லுநர்களும், சில சமயங்களில் நடத்தையை நரம்புச் சார்ந்த செயல்முறையாகவும் உடற்கூற்றியல் செயல்முறையாகவும் குறிப்பிடுகின்றார்கள். நடத்தையைப்பற்றிய இவ் வகையான விளக்கங்கள் எல்லாம் குறைத்தல் கோட்பாட்டுக்குரியவையாகும். ஏனென்றால், நடத்தைசார்பான பிரச்சினைகள் எல்லாம் உயிரியல் மட்டத்திற்குக் குறைக்கப்படுகின்றன. சிக்கலான சமூக நடத்தைகளும் குறைத்தல் கொள்கைப்படியே விளக்கமளிக்கப்படுகின்றன.

முறைகள்

சமூக உளவியலாரின் கடமை என்னவென்றால், சமூகச் சூழ்நிலையில் பங்கேற்கும் தனி மனிதரின் நடத்தையை விவரிப்பதாகும். இதை அவர்கள் செய்ய வேண்டுமானால் புதிய உண்மைகள், புதிய விவரங்கள் தேவைப்படுகின்றன. மற்ற அறிவியல் வல்லுநர்களைப் போலவே சமூக உளவியலாரும் ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கின்றனர். இந்த ஆராய்ச்சிக்கான அவர்களுடைய ஊக்கமூட்டி அறிவார்வத்திலிருந்து ஆழ்ந்த செயல் சார்பான நடவடிக்கை வரையில் தொடர்ந்து செல்லுகின்றது. அவர்கள் மனிதர்களிடமுள்ள பரிமாற்றத் தொடர்புறவுகளின் பொது விதிகளில் மிகுந்த அக்கறை காட்டலாம்; அல்லது ஏதேனும் குறிப்பிட்ட கூறுகளில் கவனம் செலுத்தலாம். எந்த நிகழ்ச்சியில் அவர்கள் கவனம் செலுத்தினாலும், தனி மனிதர்களிடையிலுள்ள தொடர்புறவுகளை நிர்ணயிக்கின்ற பெரும் மாறுமியல்புகளை அடையாளம் காணவே முயலு

கின்றார்கள். அவை வகுப்பறை, கல்லூரி, சமூக இயக்கம், திருமணம், பொதுத் தேர்தல் முதலியவையாக இருக்கலாம். இவற்றின்பொருட்டு என்ன ஆராய்ச்சி முறைகளை அவர்கள் உபயோகிக்கின்றார்கள் என்று காணலாம். தொடக்ககாலச் சமூக உளவியலார்களான டார்டி (Tarde), லெபோன் (Le Bon), ராஸ் (Ross), மெக்டுகல் (McDougel) ஆகியோர் ஆராய்ச்சி முறைகளைப்பற்றி அதிகக் கவனம் செலுத்தவில்லை.

மற்றெந்த அறிவியலாரும் உபயோகிப்பது போலவே ஆராய்ச்சி முறைகளை உளவியலாரும் உபயோகிக்கின்றனர். அந்த முறைகள் அறியப்படும் பொருள், கிடைக்கக்கூடிய விவரங்களின் வகைகள் ஆகியவற்றைப் பொறுத்திருக்கின்றன. தசைநார்களின் எதிர் வினைகள், கற்பனை, மனவெழுச்சி நெருக்கடிகளின் மூலங்கள் முதலியவற்றை அறிவதற்குப் பல்வேறு தொழில் நுட்பங்களை உளவியலார் உபயோகிக்கின்றனர். அதுபோலவே சமூகவிய லாரின் முறைகளும் வேறுபடுகின்றன. ஆளுமையின்மீது நகர்ப் புறம் காட்டும் விளைவுகள், குற்றங்களின் காரணங்கள், கடமைத் தவறுதலின் காரணங்கள், சமூகச் சீர்கேடுகளின் காரணங்கள் முதலியவற்றைப்பற்றித் தேர்வாராய்ச்சி நடத்துவார்களானால், அவர்கள் அவற்றிற்கெனத் தனி முறைகளைக் கொண்டிருக் கின்றார்கள்.

எனவே, ஆராய்ச்சி முறைகளைப் பலவாக வகைப்படுத் தலாம். அவை அகவயமான முறை, புறவயமான முறை, பரும அளவு முறை, பண்புத்தர முறை என்று வகைப்படுத்தப்படு கின்றன. இந்த முறைகள் மேலும் நிகழ்ச்சி வரலாற்று முறை, கள ஆய்வுப் பரிசோதனை முறை, புள்ளி விவர முறை என்று குறிப் பிடப்படுகின்றன. சில முக்கிய முறைகளைப்பற்றி இங்கு விவாதிக் கலாம்.

அகக் காட்சி (Introspection) : அகக்காட்சி என்பது, ஒருவர் தம்முள் நோக்குவதாகும். தம்முடைய கடந்த அனுபவங்களைப் பற்றியும், நடந்துகொண்டிருக்கின்ற அனுபவங்களைப்பற்றியும் தெரிவிப்பதாகும். இவ்வாறாகவே ஒருவர் தம்முடைய வலிகள், உணர்ச்சிகள், மனப்போக்குகள், ஒரு சில சமூகக் குழுக்களில் சேருவதன் காரணங்கள் முதலியவற்றைப்பற்றியும் உள்நோக்கிக் காணுகின்றார். ஒருவர் தம்முடைய அகச்சார்பான அனுபவங்களை வெளியிடும்போதெல்லாம் அவர் அகக் காட்சியில் ஈடுபடுகின்றார். தரவீடு அளவுகோல் விடுத்தொகுதிகள், பொதுக் கருத்துத்தேர்வு முதலியவை எல்லாம் அகக்காட்சிச் சார்பானவையே. இவற்றில்

எல்லாம் பரிசோதனைக்குரியவர் தம்முடைய சொந்தக் கருத்துகளை விளக்குகின்றார். அகக்காட்சி முறையில் சிலஅனுகூலங்களும் சில பிரதிகூலங்களும் இருக்கின்றன.

மற்ற முறைகளின்மூலம் அறியமுடியாத செய்திப்பொருள்களை இம் முறையின்மூலம் அறியலாம். தனியொருவரின் எண்ணங்கள், உணர்ச்சிகள், நம்பிக்கைகள், விருப்பங்கள், மனப்போக்குகள், மற்றும் மறைவாக வைக்கப்பட்டுள்ள விவரங்கள் ஆகியவற்றின் செய்திப்பொருள்கள் இம் முறையின்மூலம் அறியப்படுகின்றன. ஆனால், இம் முறையின்மூலம் பெறுகின்ற செய்திகள் முற்றிலும் நம்பிக்கையானவை என்று கருத முடியாது. செய்தி தருவோர் கவனக்குறைவாகவும் அறியாமையுள்ளவராகவும் இருப்பாரானால், செய்திகள் சரிநுட்பமாக இருக்க மாட்டா. அல்லது அவர் தம்முடைய இரகசிய எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் மறைக்க முயலுவாரானால், செய்திகள் பயன்பட மாட்டா. அறியப்படுகின்ற பொருள் மிகவும் சிக்கலானதாக இல்லாதிருக்கின்ற வரையில் செய்திகளைச் சேகரிப்பதில் சிரமமில்லாத வரையில் அகக்காட்சிமுறை ஒப்புக்கொள்ளத் தக்கதே. எந்த அரசியல் கட்சிக்கு நீங்கள் வாக்களிக்கின்றீர்கள் என்று ஒருவரைக் கேட்டால், வெளிப்படையாகவே அவர் பதிலளிக்கலாம். ஆனால், அவருடைய பால் சம்பந்தமான வாழ்க்கை இரகசியங்களைப்பற்றிக் கேட்கும் பொழுது அவர் வெளிப்படையான விடையளிப்பாரா என்பது சந்தேகம்.

அகக் காட்சி முறை சந்தேகத்திற்குரியது என்று உளவியலார் கருதுகின்றனர். ஆனாலும் சில முக்கிய ஆராய்ச்சிகளில் அம் முறையை அவர்கள் உபயோகித்துக்கொண்டு வருகின்றார்கள். பரிசோதனைக்கூடத்தில் நடைபெறுகின்ற ஆராய்ச்சிகளில் எல்லாம் பரிசோதனையாளன் பரிசோதிக்கப்படுபவரின் அகக் காட்சி விளக்கத்தைத்தான் நம்பியிருக்க வேண்டியிருக்கின்றது. பரிசோதிக்கப்படுபவர் என்ன கூறுகின்றாரோ அதையேதான் உண்மை என்று பரிசோதனையாளன் ஏற்றுக்கொள்ள வேண்டும். நடத்தைக் கோட்பாட்டுக் கிளையினரால் கடந்த ஐம்பது ஆண்டுகளாக இம் முறை கடுமையான தாக்குதலுக்கு இலக்காகி வந்திருக்கின்றது என்றாலும், உளவியல் ஆராய்ச்சி முறைகளிலிருந்து முற்றிலும் புறக்கணிக்கப்படவில்லை. இதற்கு வெளிப்படையான காரணம் என்னவென்றால், மனிதர்களில் ஒவ்வொருவருக்கும் உள் மனவாழ்க்கை என்று ஒன்று இருக்கின்றது. ஒவ்வொருவரும் அதைப்பற்றித் தெளி உணர்வு நிலை கொண்டவர்களாகவே இருக்கின்றனர்.

சமூகவியலாரில் கூலி (Cooly) போன்றவர்கள் அகக் காட்சி முறையின் அனுகூலங்களை உபயோகித்துக்கொள்ளலாம் என்று நம்பினார்கள்; அம் முறையிலுள்ள குறைபாடுகளைக் களைந்து விட்டால் போதும் என்றும் நம்பினார்கள். ஆனால், இம் முறையை உபயோகிக்கின்றவர் கவனமாகவும் சரிநுட்பமாகவும் பிரச்சினையை அணுகினாலொழிய இதை வெற்றிகரமாக உபயோகிக்க முடியாது.

கட்டுப்படுத்தப்படாத கூராய்வு முறை: உளவியலார் மட்டுமன்றி ஒவ்வொருவரும் மற்ற மனிதர்களைப்பற்றிக் கூராய்வு செய்கின்றனர். கூராய்வுக்கு அவர்கள் உபயோகிக்கின்ற வினாக்கள் உளவியல் வினாக்களாகவே இருக்கலாம். அவர்கள் மற்றவர்களுடைய நடத்தையைக் கவனமாகக் கூராய்வு செய்து, போதுமான விவரங்களில்லாமல் பொதுப்பட அமைத்தலை விலக்குவார்களானால், அவர்களுடைய முடிவுகள் எல்லாம் மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடியவையேயாகும். பிளேட்டோ, டெஸ்கரடிஸ், ஹாப்ஸ், லாக், ஷேக்ஸ்பியர், டிக்கன்ஸ் முதலியோர் மனிதர்களின் நடத்தையை மிகவும் கவனமாகக் கூராய்வு செய்திருக்கின்றனர். மனிதர்களின் நடத்தையைக் கவனமாக நோக்குவது இயற்கையாகவே ஒரு சிறந்த புறவய முறையாகும். ஆனால், அதிலுள்ள பெருங்குறை என்னவென்றால், அஃது ஒழுங்கு முறையற்றதாக இருக்கின்றது என்பதாகும்.

கவனிக்கப்பட்டு விவரம் தந்துதவிய மனிதர் பிரதிநிதித்துவக் குழுவைச் சேர்ந்தவராக இருக்க மாட்டார். தற்செயலான தொடர்புகளின்மீது அமைக்கப்பட்ட பொதுப்பட அமைக்கப்பட்ட கோட்பாடு பிழைபாடுகளுக்கு வழியாக அமைகின்றது. மேலும், அப்படிப்பட்ட விவரங்கள் அறைகுறையான நினைவுகளினாலும், விவரம் தருவோரின் ஒரு சார்பெண்ணத்தாலும் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. தவிர, நினைவுகள் காலத்தால் சரிநுட்பத்தை இழக்கின்றன. மேலும், செவிவழிச் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகவும் மாறுகின்றன.

ஆனாலும், கட்டுப்படுத்தப்படாத கூராய்வு முறை பயனில்லாமல் போய்விடவில்லை. வரலாற்று ஆராய்ச்சி இயல்பாகவே கட்டுப்பாட்டைத் தடுக்கக்கூடியதாக இருக்கின்றது. அறிவியல் முறைப்படிப் பிரச்சினையை அணுகும்பொழுதுதான் தேவையில்லாத பொதுப்பட அமைத்தலிலிருந்து விலகியிருக்க முடியும். இம் முறையில் அது நடைபெறுவதில்லை.

ஒழுங்கு முறையான கூராய்வு முறை: ஒழுங்கு முறையான கூராய்வு முறை என்பது கட்டுப்படுத்தப்பட்ட கூராய்வு (controlled observation) முறையாகும். கட்டுப்படுத்தப்படாத கூராய்வு முறைக்கும் ஒழுங்கு முறையான கூராய்வு முறைக்கும் உள்ள மாறுபாடு படித்தரந்தான். பொதுமக்கள் அபிப்பிராயத்தை ஆராய்கின்ற மாணவன் தற்செயல் நிகழ்ச்சி முடிவுகளை நம்பிக்கொண்டிருக்க முடியாது. ஒரு மக்கள் கூட்டத்தில் பிரதிநிதித்துவ மாதிரியை அவர் அளவாய்வு செய்கின்றார். குழந்தைகளின் சமூக நடத்தையை ஆராய்கின்றவர்கள் பல்வேறு சூழ்நிலைகளில் ஒழுங்குமுறையாகக் குழந்தைகளைக் கவனிக்கின்றார்கள். அடிக்கடி அவர்கள் கடைப்பிடிக்கின்ற முறை என்னவென்றால், மறைவாக இருந்து குழந்தைகளின் நடத்தையைக் கவனிப்பதாகும். அவர்கள் செய்கின்ற இந்த ஆராய்ச்சியைக் குழந்தைகள் அறியார்கள். இல்லையென்றால், குழந்தைகளின் இயல்பான நடத்தை பாதிக்கப்படுகின்றது.

ஆனால், நன்கு பயிற்சி பெற்ற ஆராய்ச்சியாளர் எவ்வாறு வேண்டுமானாலும் செய்திப் பொருள்களைத் திரட்டலாம். சமூக இயக்கங்களைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், குறிப்பாக ஒழுக்கத் திற்தரிய படைக்களம் தாங்குதல் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் நேரடியாகவே மக்களிடம் பேசி வேண்டிய செய்திகளைத் திரட்டுகின்றார்கள். அவர்கள் இத் துறையில் இன்னுங்கூடச் சற்று முன்னேறிச் செல்லுகின்றார்கள்; விடையளிக்கின்றவர்களின் அரசியல் விருப்பேற்புகள் அல்லது மனப்பாங்குகள் ஆகியவை மட்டுமன்றி அவர்களுடைய வயது, கல்வியறிவு, தொழில், வருமானம், சமயம், விருப்பச் செயல், அனுதினமும் படிக்கின்ற செய்தித்தாள் முதலிய விவரங்களையும் சேகரிக்கின்றார்கள்; மேலும், விடையளிப்போருக்கு விருப்பமான வானொலி நிகழ்ச்சிகளைப்பற்றியும், விரும்புகின்ற திரைப்படங்களைப்பற்றியும் செய்திகள் சேகரிக்கின்றார்கள்.

இவர்களைப் போன்றே நர்சரிப் பள்ளிக்கூடத்துக் குழந்தைகளின் நடத்தையை ஆராய்கின்றவர்கள், பள்ளிக்கூடத்தில் குழந்தைகளின் நடத்தைக்கும் பல்வேறு வகையான குடும்பச் சூழ்நிலையில் காணப்படும் அவர்களுடைய நடத்தைக்கும் இடையிலுள்ள தொடர்புறவுகளைக் கண்டறிகின்றார்கள்.

கள ஆய்வு, அடிப்படையாகக் கட்டுப்படுத்தப்பட்ட கூராய்வு வகையைச் சேர்ந்ததாகும். ஏனென்றால், கூராய்வு ஒரு குறிப்பிட்ட சமூகம் அல்லது சமூகச் சூழ்நிலையில் நடைபெறுகின்றது.

இம் முறையில் தேர்வாய்வு அல்லது வேறு சில தொழில் நுணுக்கங்களும் அடங்கியிருந்தாலும் அது கட்டுப்படுத்தப்பட்ட கூராய்வு முறை என்றே கருதப்படுகின்றது.

ஒழுங்கு முறையான கூராய்வு முறையின் முக்கிய அனுகூலம் என்னவென்ருல், செய்திகள் அல்லது விவரங்கள் சரிநுட்பமாகக் கிடைக்கின்றன. நாம் வேண்டியபடி மக்கள் கூட்டத்தை வகைப் படுத்திக்கொள்ளலாம். ஆராய்ச்சித் திட்டத்தில் காணப்பட்ட புனைக் கொள்கைகளைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கு வேண்டிய விவரங்கள் தெளிவாக இம் முறையின்மூலம் பெறப்படுகின்றன.

பரிசோதனை முறை: கடந்த அரை நூற்றுண்டுக் காலமாகச் சமூக உளவியலில் ஏராளமான பரிசோதனைகள் நடத்தப்பட்டிருக்கின்றன. இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் உளவியலார்கள்தான் நடத்தியிருக்கின்ருர்கள். பரிசோதனை முறையைப்பற்றி மிக ஆழமான கருத்து வேறுபாடுகள் சமூக உளவியலாரிடையே நடைபெற்றிருக்கின்றன. பரிசோதனை முறைக்கும் மேலே நாம் கண்ட கூராய்வு முறைக்கும் மிகுந்த மாறுபாடுகள் கிடையா; என்ருலும், இரண்டும் சரி நுட்பத்திலும் படித்தரத்திலும் மாறுபடுகின்றன.

ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பரிசோதனையில் பரிசோதனை மாறுமியல்புகள் ஏதேனும் ஒரு வழியில் கட்டுப்படுத்தப்படுகின்றன. இது கூராய்வு முறையில் சாத்தியமில்லை. எந்த ஒரு துறையிலும் பரிசோதனையின் சாரம் என்னவென்ருல், வேலை நடைபெறுவதற்கான வழித்துறையை அமைப்பதாகும். அவ்வாறு செய்வதன்மூலம் எந்த வகையான நிகழ்ச்சி நடைபெற்ருலும் அதைப் பொருள்பட விளக்கிக் கூற முடியும். ஆராய்ச்சிக்குரியதாகக் கருதப்படும் ஒன்றைத் தவிர, மற்றெல்லா மாறுபியல்புகளையும் நிலையாக வைத்துக்கொள்ள முடியும். ஒப்புக்கொள்ளத்தக்கதொரு பரிசோதனையைச் செயல் நிறைவேற்றம் செய்வது மிகக் கடினமாகும். உண்மையில் சமூக உளவியலின் பல பகுதிகளில் பரிசோதனையைச் செயல்படுத்துவது சாத்தியமில்லை. உதாரணமாக, கலவரம், பீதி போன்ற சமூகச் சூழ்நிலைகளைப் பரிசோதனை செய்வது எளிதல்ல. எவ்வாறிருப்பினும், மற்றப் பகுதிகளில் பரிசோதனைகளை நடத்திப் பார்க்கலாம். பரிசோதனைகள் சரியாக நடத்தப்பட்டால் பரிசோதனை முடிவுகள் சரி நுட்பமாகவும், பின் நடக்கவிருப்பதை முன்னமே கூறக்கூடியதாகவுமிருக்கின்றன.

ஒரு பரிசோதனை முறையை இங்கு விளக்கிக் காட்டலாம். இதில் கொள்கை பரப்புதலின்மூலம் அபிப்பிராயங்கள் எவ்வளவு தூரம் செல்வாக்குப் பெறுகின்றன அல்லது மாறுகின்றன என்பதைக் கணிக்கலாம். ஒரு நல்ல கணிசமான அளவுள்ள குழுவைச் சேர்ந்த மனிதர்களைப் பரிசோதனைக்காகத் தேர்ந்தெடுக்கலாம். அவர்கள் பள்ளி மாணவர்களாகவோ, கல்லூரி மாணவர்களாகவோ, ஒரு பொழுதுபோக்குக் கழகத்து அங்கத்தினர்களாகவோ, ஓர் அலுவலகத்தில் பணி புரிகின்றவர்களாகவோ இருக்கலாம். அவர்களிடம் வரையளவு செய்யப்பட்ட ஓர் அபிப்பிராய அளவுகோல் தரப்படுகின்றது. அந்த அபிப்பிராயம் அப்பொழுதுள்ள பிரச்சினையாகவோ, நடைபெறும் நிகழ்ச்சியாகவோ இருக்கலாம். அவர்களிடமிருந்து விடைகள் சேகரிக்கப்படுகின்றன.

சில நாள்களுக்குப் பிறகு, பரிசோதனை நடத்துபவர் அந்தக் குழுவை இரண்டாகப் பிரிக்கின்றார். அதன் காரணத்தை அவர் யாரிடமும் கூறுவதில்லை. ஒரு குழுவினரிடம் கொள்கை பரப்புதல் நடத்தப்படுகின்றது. இந்தக் கொள்கை பரப்புதல் வானொலிச் சொற்பொழிவு, திரைப்படம், செய்தித்தாள், பொதுச் சொற்பொழிவுகள் முதலிய வாயிற்பொருள்களின்மூலம் நடைபெறுகின்றது. ஆனால், மற்றொரு குழுவினரிடம் எந்த வகையான கொள்கை பரப்புதலும் செய்யப்படவில்லை.

சில நாள்களுக்குப் பிறகு இரண்டு குழுவினரும் ஒன்றாகச் சேர்க்கப்படுகின்றனர். முன்பு தரப்பட்ட அதே அபிப்பிராய அளவுகோல் அனைவரிடமும் தரப்படுகின்றது. விடைகள் சேகரிக்கப்படுகின்றன. கொள்கை பரப்புதலுக்கு ஆட்படுத்தப்பட்ட குழு பரிசோதனைக் குழுவாகும். கொள்கை பரப்புதலுக்கு ஆட்படுத்தப்படாத குழு கட்டுப்படுத்தப்பட்ட குழுவாகும். பரிசோதனைக் குழுவின் அபிப்பிராயம் கட்டுப்படுத்தப்பட்ட குழுவின் அபிப்பிராயத்திலிருந்து வேறுபட்டுக் காணப்படுமானால், கொள்கை பரப்புதலின் விளைவுகளை நாம் அளந்தாக வேண்டும். கட்டுப்படுத்தப்பட்ட குழுவின் நோக்கம் என்னவென்றால், கொள்கை பரப்புதலின்மூலமோ வேறெந்த செல்வாக்கின் மூலமோ பரிசோதனைக் குழுவில் ஏற்பட்டுள்ள அபிப்பிராய வேறுபாட்டைச் சுட்டிக் காட்டுவதாகும்.

ஆனால், பரிசோதனைக் குழுவில் ஏற்பட்டுள்ள அபிப்பிராய வேறுபாடு முற்றிலும் கொள்கை பரப்புதலினால்தான் ஏற்பட்டது என்று பரிசோதனையாளர் முடிவு கட்டவும் முடியாது. ஏனென்றால்,

பரிசோதனையாளர் தம்முடைய பரிசோதனைக்கு ஒரு சிலரையே மக்கள் கூட்டத்திலிருந்து தேர்ந்தெடுத்திருக்கின்றனர். அவர் இதே பரிசோதனையை மற்றக் குழுவினரிடமும் நடத்திப் பார்க்க வேண்டும். வயது, தொழில், வருமானம், நுண்ணறிவு, பால், சமூக நிலை முதலியவற்றில் மாறுபாடுள்ள குழுவினரிடம் அதே பரிசோதனை நடத்தப்பட வேண்டும். இந்த வகையான எல்லாக் குழுவினரிடையிலும் அதே முடிவு ஏற்படுமானால், அவருடைய சான்றுகள் ஏற்றுக்கொள்ளக்கூடியவைதான். ஒரு நாட்டினர், ஒரு பண்பாட்டினர், ஒரு சமூகத்தினர் ஆகிய எந்த வகையைச் சேர்ந்த குழுவினரிடையிலும் இப் பரிசோதனையை நடத்தி முடிவுகள் எடுக்கலாம்.

பரிசோதனை முறையைச் செயல்படுத்துவதில் பல சிரமங்கள் இருந்தாலும் இம் முறையில் பல அனுகூலங்களிருக்கின்றன. தேர்வாராய்வு நடத்துகின்றவரின் சொந்த விருப்பு வெறுப்புகள் இதில் தலையிடுவதில்லை. பரிசோதனை முறையின்மூலந்தான் ஒரு சமயத்தில் ஒரு மாறுமியல்பின் இயக்கத்தை அறிய முடியும். மேலும், இம் முறையின்மூலம் விவரங்களைப் பரும அளவுள்ளவையாக எளிதில் மாற்ற முடியும். பரும அளவு தொழில்நுட்பங்கள் அபிப்பிராயத்தின் திக்குகளையும் இருப்புகளையும் தெரிவிப்பதோடு, கொள்கை பரப்புதலின்மூலம் எந்த அளவுக்கு அபிப்பிராயங்கள் மாறியிருக்கின்றன என்பதையும் காண முடியும். அபிப்பிராயங்கள் தலைகீழாக மாறியிருந்தாலும், சிறிதளவே மாறியிருந்தாலும் அல்லது மாறாமலிருந்தாலும் அந்த விவரம் மிகவும் முக்கியமானதாகும்.

ஆனால், சில சமூக உளவியலார்களும் சமூகவியலார்களும் கருதுவது என்னவென்றால், பரிசோதனை முறை சில முக்கியமான கட்டுப்பாடுகளைக் கொண்டிருக்கின்றது என்பதாகும். அவர்களுடைய கருத்துப்படி, இம் முறை இயற்கையாக விவரங்களைச் சேகரிக்க உதவுவதில்லை; உண்மையான சமூக நடத்தையை வெளிக்கொண்டு வருவதில்லை என்பதாகும். ஆகையினால், ஏற்றுக்கொள்ளக்கூடிய முடிவுகளைப் பெற முடியாது என்றும் கருதுகின்றனர். ஆனாலும், இம் முறையின்மூலம் சமூக உளவியல் பெற்றுள்ள வளர்ச்சியை யாரும் ஒதுக்கிவிட முடியாது.

2. சமூக நடத்தையின் படிமுறை வளர்ச்சி

மனிதர்களின் இன்றைய நடத்தை திடீரென்று தோன்றி மலர்ந்ததன்று. அது நீண்டதொரு படிமுறை வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டதாகும். அந்தப் படிமுறை வளர்ச்சியை முறையாக அறிய வேண்டுமானல், மனிதனுடைய நடத்தை எவ்வாறு மற்ற மிருகங்களிடமிருந்து மாறுபட்டிருக்கின்றது என்றும், எவ்வாறு வளர்ச்சி பெற்றதென்றும் நாம் கண்டறிய வேண்டும். மனிதர்களுடைய நடத்தையும் மற்ற மிருகங்களுடைய நடத்தையும் ஓரளவுக்குச் சமூக நடத்தையுள்ளவையாகவே காணப்படுகின்றன. மிகக் கீழான நிலையிலுள்ள உயிரினங்களும் ஒன்றையொன்று தூண்டிவிட்டு ஏதோ ஒரு வகையான குழு வாழ்க்கையை நடத்தி வருகின்றன. ஆனால் மனிதர்களிடையே யுள்ள சமூகக் குழுக்கள் அமைப்பு, உளவியல் ஒற்றுமை, உழைப்புப் பங்கீடு, குழுவின் குறிக்கோளுக்காகக் குழு அங்கத்தினர்கள் ஒத்துழைத்தல் ஆகியவற்றை ஏதேனும் ஓர் அளவுக்கேனும் பெற்றுக வேண்டும். இஃது ஒரு வகையான மனிதர் குழுவாகும். மற்றொரு வகையான மனிதர் குழுவிலுள்ள மனிதர்கள் தங்களுக்கு என்று ஒரு குறிக்கோளைப் பெற்றிராதவர்களாவார்கள். ஆனல், ஒவ்வொருவரும் தனித்தனியே குறிக்கோளைக் கொண்டிருக்கின்றனர். உதாரணமாக, கும்பலுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்ற புகைவண்டிப் பிரயாணிகளைக் கூறலாம். புகைவண்டிக்காகக் காத்து நிற்கின்ற பிரயாணிகள் கூட்டமாகத்தான் சேருகின்றார்கள். ஆனல், அவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை நோக்கியும் இணைந்து செயல்படுவதில்லை; சமூகக்குழுக்களைப் போன்று எதிர்வினைத் தொடர்புறவுகள் கொள்ளுவதில்லை; ஒருவருடைய செயல் மற்றொருவரை எந்த வகையிலும் தாக்குவதில்லை. எனவே, தனியாள்களின் தொகுதி ஓர் உண்மையான

சமூகக் குழுவாகாது. ஏனென்றால், அத்தகைய தொகுதியில் சிறிதும் பயனில்லாத சமூகத் தொடர்புறவுகள்தான் ஏற்படு கின்றன. சமூகக் குழுக்களின் சிறப்புக் கூறுகள் அங்குக் காணப் படுவதில்லை.

கீழ்நிலை உயிரினங்களுடைய சமூகச் செயலெதிர்ச் செயல்

கீழ்நிலை உயிரினங்களை எடுத்துக்கொண்டு ஆராயும்போது அவற்றினுடைய எந்த வகையான உயிரினங்கள் சமூகத் தொடர் புடையவையாக இருக்கின்றன, எந்த வகையான உயிரினங் களிடையே சமூகத் தொடர்பு ஏற்படும் நிலைமையில்லை என்று பிரித் தறிவது கடினமாகும். ஜென்னிங்ஸ் (Jennings, H. S.) என்பவர் புரோடோசோன் (protozoan) என்ற ஓர் உயிரணு (one celled) மிருகத்தை ஆராய்ந்து பார்த்தார். இவ் வுயிரணுவுக்கு முக்கிய மான செயல்முறைகளுக்கு எந்தவித உதவியும் தேவைப்படவில்லை. அவற்றினிடம் காணப்பட்ட எதிர்வினைகள் சமூகத் தொடர் புறவுகள் உள்ளவையாகத் தெரிந்தன. மேலும், சில சமயங்களில் அவை ஒன்றாகவும் சேர்ந்திருந்தன. வெளிச்சத்தின் பிறப்பிடத்தை நோக்கி அவை கும்பலாகக் கூடுவதை உண்டாக்கிக் காட்ட முடியும். ஆனால், அவற்றினிடம் கூட்டுறவு நடவடிக்கைகளோ, உழைப்புப் பங்கீடோ கிடையாது.

கீழ்நிலை உயிரினங்களிடம் ஆராய்ச்சி நடத்திய அல்லி (Allee, W.) என்பவர், ஒரே வகையைச் சேர்ந்த உயிரினங்கள் சாதாரணமாக ஒன்றுகூடுவதே பயனுள்ள விளைவை ஏற்படுத்து கின்றன என்று கூறுகின்றார். அதனால் அவ் வுயிரினங்கள் விரைவில் பெருகி வருகின்றன; அதிகமாக உண்கின்றன; சாதக மற்றச் சூழ்நிலைகளிலுங்கூட உயிர் வாழ்வதற்கான நல்ல சந்தர்ப் பங்களைப் பெறுகின்றன. சில மிருகங்கள் மற்றவற்றின் முன்னால் விரைவில் கற்கின்றன. இந்த உயிரினங்களிடம் நடைபெறும் இவ் வகையான நடவடிக்கைகளை இயல்பாக நடைபெறும் பரஸ்பர இணைப்புச் சார்பு நடத்தை என்று அவர் கூறுகின்றார். எனவே, இந்த நடத்தையை எளிய கூட்டறவு நடத்தை என்று அவர் கூற விரும்பவில்லை. இதே இனத்தைச் சேர்ந்த வேறு வகை உயிரினங் களிடையே ஒத்து நிகழும் நடத்தையை அல்லியும், மற்றை யோரும் வெளிப்படுத்தியுள்ளனர். நெருக்கமாகக் கூடியுள்ள புழுவினத்தின் கும்பலில் செயல் தூண்டல் ஒரு தனிப் புழுவினிட மிருந்து மற்றொரு புழுவுக்குச் செல்லுகின்றது. ஒரு புழுவைத் தொட்ட மாத்திரத்தில் எல்லாப் புழுக்களும் உடனடியாக எதிர்வினை செய்கின்றன.

கீழ்நிலை உயிரினங்களிடம் குழு அமைப்புகள் பல்வேறு வடிவங்களில் இருக்கின்றன என்பது உண்மை என்றாலும், உயிரியல் வல்லுநர்கள் அவற்றை வகைப்படுத்துவதில் மிகவும் சிரமப்படு கின்றார்கள். ஏனென்றால், ஒரு வகை உயிரினங்களிடம் காணப் பட்டது போன்ற நடத்தையை அதே வகையைச் சேர்ந்த மற்றோர் இனத்தினிடம் காண முடிவதில்லை. குழு அமைப்பில் உண்மை யான மாறுபாடுகள் காணப்படுகின்றன என்று அல்லி உறுதியாக நம்புகின்றார்.

படிமுறை வளர்ச்சியில் (evolution) இரண்டு பண்புக்கூறுகள் இருக்கின்றன என்று உயிரியல் வல்லுநர்கள் கூறுகின்றார்கள். ஒன்று உயிரினங்களின் தொடர்ச்சி; மற்றொன்று புதிய உயிரினங் களின் தோற்றம். உயிரினங்களின் தொடர்ச்சியும் அவற்றி னிடம் காணப்படும் ஒரே மாதிரியான தன்மையும் புதிய உயிரினங்களின் தோற்றத்தைத்தான் வலியுறுத்துகின்றன. ஆனால், சில உயிரினங்களில் பல்வேறு படித்தளங்கள் இருக் கின்றன. சூழ்நிலைகளுக்கேற்ப ஒத்தமைத்துக்கொள்ள ஒரு மிருகத்திற்கும் அதனைச் சேர்ந்த இனத்திற்கும் என்ன வகையான செயல்முறைகளும் ஆற்றல்களும் கிடைக்கின்றன என்பதைப் பொறுத்துதான் படித்தளங்களில் மாறுபாடுகள் காணப்படு கின்றன. சில ஓர் உயிரணுப் பிராணிகளைவிட எறும்புகளும், தேனீக்களும் சரியாக அமைக்கப்பட்ட குடியிருப்புகளில் வாழ் கின்றன; அதிகமான ஆற்றல்களை வெளிப்படுத்தி இயங்கு கின்றன. உணவைச் சேகரிப்பதிலும் குடியிருப்புகளைக் கட்டிக் கொள்வதிலும் பல்வேறு மிருகக் கூட்டங்களும் அதே பொது முடிவுகளை அடைகின்றன. ஆனால், முடிவுகளை அடையும் செயல் முறைகள் ஒரே மாதிரி இல்லாமலிருக்கலாம். மிகவும் சிக்கலான குழு அமைப்பு முறையையும், மிகவும் குறைந்த ஆற்றலையும், இயக் கத்தையும், ஒருங்கே சில உயிரினங்களுக்கிடையே காணப்படுகின்ற சுவையான நிகழ்ச்சியையும் நாம் இங்குக் காணலாம். சில வகையான எறும்பு இனங்கள் சிக்கலானதும் வெற்றிகரமானது மான உணவு தேடும் பிரயாணங்களில் ஈடுபடுகின்றன.

பூச்சியினயியல் வல்லுநர்கள் (Entomologists) சில சமூகப் பூச்சி, புழு இனங்களைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கின்றார்கள். தேனீக்கள், குளவிகள், எறும்புகள் ஆகியவற்றையும் அவர்கள் ஆராய்ந்தார்கள். இந்த இனங்களைச் சேர்ந்த அங்கத்தினர்களும் மற்றச் சமூகத்தின் அங்கத்தினர்களைப் போலவேதான் பிறக்கவும், வாழவும், இறக்கவும் செய்கின்றார்கள். அதனால்தான் அவையும் சமூகப் பூச்சி, புழுக்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்தப்

பூச்சிகள் குழுக்களாவது மிகவும் சிக்கல் நிறைந்த செயல்முறையாகவும் உயர்ந்த அமைப்பைக் கொண்டவையாகவுமிருக்கின்றன. இதை அவற்றினிடம் காணப்படும் கூட்டுறவு முறையும் மிக அதிகமான எண்ணிக்கையுள்ள பூச்சிகளின் ஒழுங்கு முறையான முயற்சிகளும் விளக்குகின்றன.

எறும்புகளின் சமூகத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம். ஒவ்வொரு குழுவிலும் ஆயிரக்கணக்கான எறும்புகள் இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையான நடவடிக்கையில் திறமை பெற்றிருக்கக் காணலாம். சில வகையான எறும்புகள் இனப்பெருக்கத்திலும், சில குழந்தைகளைப் பராமரிப்பதிலும், சில உணவுப் பொருள்களைப் பங்கிடுவதிலும், சில சமூகநல நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றன. இந்த வகையான சமூக நடவடிக்கைகளை எறும்பு இனங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளுவதற்குக் காரணம் அவற்றினிடையே ஒன்றோடொன்று கூட்டுறவு கொள்ள முடிவதேயாகும். முட்டைகளைப் பாதுகாப்பதும், முட்டையிலிருந்து வெளிவந்த புழுக்களைக் கவனிப்பதும் எறும்புகளிடையே நடவடிக்கைகள் கூட்டுறவுடன் ஒருமுகப்படுவதைக் காட்டுகின்றன.

எல்லா வகையான புழு, பூச்சி இனங்களிலும் தனியாள் வேறுபாடுகள் உடலுறுப்புகளில் காணப்படுகின்றன. எறும்புகள் ஓரே இனத்தைச் சேர்ந்தவையாக இருந்தாலும், அவற்றினிடையே ஆண் எறும்புகளுக்கும் பெண் எறும்புகளுக்கும் உடல் வேறுபாடுகள் இருக்கின்றன. இந்த உடல் வேறுபாடுகள் வேறுபாடுள்ள செயல்முறைகளைக் குறிக்கின்றன. ஒரு வகையான நடவடிக்கைகளுக்கு ஏற்ற உடலமைப்புக்கொண்ட எறும்புகள் மற்றொரு வகையான நடவடிக்கைகளுக்கு முற்றிலும் ஏற்றவையல்ல. ஓர் இராணி எறும்பின் உடலமைப்பு ஒரு வேலைக்கார எறும்பின் உடலமைப்பிலிருந்து பெரிதும் வேறுபட்டிருக்கின்றது. இராணி எறும்பின் சமூக நடவடிக்கைகளும் தொடர்புகளும் குறிப்பிடத்தக்க வகையில் மாறுபடுகின்றன. சிப்பாய் எறும்புகள் இராணி எறும்பிலிருந்தும் வேலைக்கார எறும்பிலிருந்தும் உடலமைப்பில் வேறுபட்டிருக்கின்றன. அவை இன்னும் பல வேறுபட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இந்த மூன்று வகையான எறும்புகளும் ஓர் எறும்பினத்தில் காணப்படலாம். தேனீ இனங்களும், கரையான் இனங்களும் இதே போன்று உடல் சார்பான அமைப்புகளைக் கொண்டிருக்கின்றன.

எறும்பினமும் மற்றப் பூச்சியினங்களும் உடல் சார்பான அமைப்பை மரபுரிமையாகப் பெறுகின்றன. எறும்புகளைப்பற்றி

நெடுநாள்கள் ஆராய்ச்சிகள் நடத்திவந்த வீலர் (Wheeler) என்பவர், ஐந்து அல்லது ஆறு கோடி ஆண்டுகளாக எறும்புகளின் அமைப்பில் எந்த வகையான மாற்றமும் ஏற்படவில்லை என்று கூறுகின்றார். இன்று எறும்புகளின் நடவடிக்கை எவ்வாறிருக்கின்றதோ அதே போன்றுதான் பத்து இட்சம் ஆண்டுகளுக்கு முன்பும் இருந்திருக்கின்றது என்று அவர் கூறுகின்றார்.

பூச்சிகளின் உடலமைப்பு அவற்றின் நடத்தையைமட்டும் நிர்ணயிக்கவில்லை. எண்ணுதியங்கும் நடவடிக்கையில் முடிவதாகவுமிருக்கின்றது. பூச்சியினயியல் வல்லுநர்கள் பூச்சிகளின் நடத்தை மூன்று வகையான செயல்முறைகளைக் கொண்டிருக்கின்றது என்று கூறுகின்றார்கள். அவை மறிவினைகள் (reflexes), புலன் உணர்வுகள் (instincts), மாற்றியமைத்துக்கொள்ளக்கூடிய நடத்தை (modifiable behaviour) என்பவை. மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய நடத்தை கற்ற நடவடிக்கைகளைத்தான் குறிக்கின்றது. இஃது எண்ணுதியங்கும் நடத்தையன்று; சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொள்ளும் நடவடிக்கையாகும். பூச்சிகளின் நடத்தை பெரும்பாலும் அவற்றின் உடலமைவினாலும், தனியாள் பெற்றுள்ள அனுபவத்தினாலும் நிர்ணயிக்கப்படுகின்றது என்பது ஒரு முக்கிய கருத்தாக இருந்து வருகின்றது.

பூச்சிகளின் கற்றல் நடத்தை ஓர் எல்லைக்குட்பட்ட முக்கியத்துவத்தைதான் பெற்றிருக்கின்றது. கற்றதன்மூலம் பெற்ற அனுபவம் அந்தப் பூச்சி இறந்தவுடன் முடிவடைந்துவிடுகின்றது. கற்ற அனுபவம் அடுத்த பரம்பரைக்கு மாறிச் செல்லுவதன்று. ஒவ்வொரு பூச்சியும் தன்னுடைய உடலமைப்புக்கு ஏற்பவும் சூழ்நிலைக்கு ஏற்பவும் புதியதாகத்தான் எதையும் கற்றுக்கொள்ள வேண்டும். புதியதாகப் பிறந்து வந்த ஒரு பூச்சிக்குத் தொடக்கக் காலத்தில் நடைபெறுகின்ற பொருத்தப்பாட்டு நடத்தைக்கான கற்கும் ஆற்றல் இரண்டாந்தரமாகத்தான் கருதப்படுகின்றது. ஆனால், இதே ஆற்றல் மனித இனத்தில் முக்கியமானதும் முதல் தரமானதுமாக இருக்கின்றது. ஏனென்றால், மனிதர்கள் தொடர்பு கொள்ளும் நிறுவனங்கள் பெரும்பாலும் ஒழுங்கு முறைகள், விதிகள், வழக்கங்கள், பழக்க வழிகள், அடையாளக்குறி வழியாகப் புரிந்துகொள்ளுதல் முதலியவற்றால் திட்டமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கடைப்பிடித்து வந்த பெற்றோர்களுக்குப் பிறந்த குழந்தைகளும் இவற்றைப் பின்பற்ற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். ஆனால், பூச்சிகளின் சமூக வாழ்க்கையில் இத்தகைய அமைப்புகள் இல்லை. தொடக்கக் காலத்தில் பேணப்பட்டு நிலைநிறுத்தப்பட்டதன் மூலமாகப்

பூச்சியினத்தின் செயல்முறை பெரிதும் இரசாயனமுறையுடைய தாகும். ஒரு பூச்சி தன் இனத்தைச் சேர்ந்த மற்றொரு பூச்சியை அடையாளம் காணுவதற்குக் கற்றுக்கொள்ளுகின்றது. இந்த வகையான கற்கும் ஆற்றல் மிக இளமைக் காலத்திலேயே ஏற்பட்டு விடுவதால், அஃது எண்ணுதியங்கும் நடவடிக்கை என்று தோன்றுகின்றது. எனவே, பூச்சியினத்தின் சமூக வடிவங்கள் அவற்றின் உடற்கூறுகளின்மீது கட்டப்படுகின்றன. எனவே, பூச்சிகளின் சமூக நடத்தையை உடல் சார்ந்த சமூக வாழ்க்கை என்று கூறப்படுகின்றது.

பூச்சிகளின் செய்தி இணைப்பு இயல்பு

மனிதர்களைப் போன்று பூச்சிகள் பேசுவதற்கோ, கேட்பதற்கோ ஏற்ற உறுப்புகளைப் பெற்றிருக்கவில்லை. செய்தி இணைப்பு அவற்றி னிடையே புலனுறுப்புகளின் வழியாகவே நடைபெறுகின்றது. இதை அவ்வளவு நுணுக்கமான செய்தித் தொடர்பு என்று கூற முடியாது. ஒலிகள் பல வழிகளில் உண்டாக்கப்படுகின்றன. இறகுகளின் அலைகளாலும் சுவாசக்குழாய்களின் வழியாகவும், உடலின் ஓர் உறுப்பு மற்றோர் உறுப்புடன் உராய்வதன்மூலமும் ஒலிகள் உண்டாக்கப்படுகின்றன. மேலும், உடல் அசைவுகளின் மூலம் சைகைகள் உண்டாக்கப்படுகின்றன. பூச்சிகளின் உணர்ச்சிக் கொடுக்குகளும் மயிர்களுங்கூடத் துடிப்பு, கண்டுபிடித்தல் போன்ற மனவெழுச்சிகளை அனுப்பும் கருவிகளாகப் பயன்படு கின்றன. எறும்புகளிடையே இந்த நடவடிக்கையைக் காணலாம். ஓர் எறும்பு ஓர் உணவுத்துண்டைக் கண்டுபிடித்தவுடன், தன்னுடைய உடலுறுப்புகளை உராய்ந்து ஒலி உண்டாக்குகின்றது. அதைக் கேட்ட மற்ற எறும்புகள் மிக விரைவில் அங்கு ஒன்றுகக் கூடி விடுகின்றன. உணவுத்துண்டு இருப்பதை மோப்ப உணர்ச்சி யால் அறிந்தவுடன் தன் விருப்பமின்றியே ஒலி எழுப்பப்படுகின்றது. இவ் வகையான செய்தி இணைப்பு எல்லா வகையான பூச்சியினத் திற்கும் தேவையாக இருக்கின்றது. தனித்து வாழ்கின்ற பூச்சி வகைக்கும் இது தேவைப்படுகின்றது. தனிமையிலிருக்கும் பூச்சி மற்றொரு பூச்சியுடன் இணைய வேண்டியிருக்குமானல், அதை வெளிப்படுத்தும் அறிகுறி நடத்தையாக இது இருக்கின்றது.

பெண் பூச்சிக்கும் அதனுடைய குஞ்சுகளுக்குமிடையில் உள்ள குடும்பத் தொடர்புறவுகள் நடைபெறும்பொழுது சமிக்கைகளுக் கான கூருணர்ச்சி மிகவும் வெளிப்படையாகத் தெரிகின்றது. பூச்சிகளின் விரிவான செய்தி இணைப்புத் தொடர்பும் கூடு கட்டு தலும் பற்றிய முக்கியத்துவத்தை மிச்னர் (Michnher, C. D.) என்ற உயிரியல் வல்லுநர் விவரித்துள்ளார். உணவுகளைச்

சேகரிக்க வேண்டும். குடியிருப்பு அங்கத்தினர்கள் ஒருவரை யொருவர் தொடர்ந்து இழுத்துச் செல்ல வேண்டும். ஆபத்து அறிகுறிகளுக்கு உடனே துலங்குதல் வேண்டும். மற்றக் கூட்டுறவு நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். எறும்புகளிடமும் மற்றச் சமூகப் பூச்சிகளிடமும் காணப்படும் இவ் வகையான செய்தி இணைப்பு முறையை மனிதர்களிடம் காணப்படும் செய்தி இணைப்பு முறையுடன் எந்த வகையிலும் ஒப்பிட்டுக் காட்ட முடியாது. ஏனென்றால், மனிதர்களிடம் நடைபெறும் செய்தி இணைப்பு, அடையாளக் குறிகளை உபயோகித்தும், தெளிவாகப் பேசியும் ஏற்படுத்தப்படுகின்றது. மனிதர்கள் பேசுகின்ற மொழி யும் ஒலிகளின் மூலந்தான் செயல்படுகின்றது என்றாலும், அவர்கள் எழுப்புகின்ற ஒலிகள் ஒழுங்குமுறையாக வரையறுக் கப்பட்டுத் தெளிவாகத் தெரிந்துகொள்ளக்கூடிய முறைகளின்படி அமைகின்றன. அடையாளக்குறிகளையும், மரபொழுங்குகளையும் மனிதர்கள் தொகுத்து வகைப்படுத்தியுள்ளார்கள். தேனீக்கள், எறும்புகள், குளவிகள், இன்னும் மற்றப் பூச்சிகளின் நடத்தையை மிகவும் கவனமாக ஆராய்ந்து பார்த்ததில் அவற்றினிடையே அடையாளக் குறிச் செய்தி இணைப்பு இருப்பதற்கான எந்த வகை யான சான்றும் காணக் கிடைக்கவில்லை.

பூச்சிகளின் செய்தி இணைப்பு நுணுக்கங்களில் கற்றல் செயல் முறையை இளம்பூச்சிகள் தொடக்க காலத்தில் உபயோகிக் கின்றன என்றாலும், அந்தச் செயல்முறையை மனிதர்களின் குழந்தைகள் மொழியை உபயோகிப்பதற்குப் பெறுகின்ற சிக்கல் நிறைந்த கற்றல் செயல்முறையுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. பூச்சிகளின் செய்தி இணைப்பின் அடிப்படைக் குணப் பண்பு மனிதர்களின் அடையாளக்குறிச் செய்தி இணைப்பினின்றும் முற்றிலும் மாறுபட்டிருக்கின்றது.

பூச்சிகளினிடையே நடைபெறும் செய்தி இணைப்பு வழிகளை விளக்கும் வகையில் கொசுக்களை ஆராய்ந்து பார்த்தனர். மாக்சிம் (Maxim, H) என்பவருடைய குறிப்பிலிருந்து ஓர் உணவு விடுதியின் மின்னுக்கப் பொறியின் (dynamo) ஒலி மிக அதிகமான ஆண் கொசுக்களைக் கவர்ந்தது. ஆனால், அதனால் கவரப்பட்ட பெண் கொசுக்கள் மிகச் சிலவேயாகும் என்று தெரிகின்றது. கொசுக்கள் ஒலியின்மூலம் செய்தி இணைப்புக் கொள்ளுகின்றன என்பதைப் பரிசோதனைகள்மூலம் செயல் விளக்கம் செய்து காட்டப்பட்டது.

இரண்டு கூடுகள் வைக்கப்பட்டன. ஒன்றில் ஆண் கொசுக்கள் அடைக்கப்பட்டிருந்தன. மற்றொன்றில் பெண் கொசுக்கள் அடைக்கப்பட்டிருந்தன. அந்த இரண்டு கூடுகளுக்கும் இடையில்

சில அடி நீளம் இடைவெளி இருந்தது. ஆண் கொசுக்களெல்லாம் பெண் கொசுக்களிருந்த பக்கத்தில் கும்பலாகச் சேர்ந்தன. கூட்டின் அந்தப் பக்கந்தான் வைத்து மூடப்பட்டிருந்தது. அதனால் ஆண் கொசுக்கள் பெண் கொசுக்களைப் பார்க்க முடியாது. மேலும், எல்லா வகையான புலனுணர்ச்சிகளும் தடுக்கப்பட்டிருந்தன. என்றாலும், ஆண் கொசுக்கள் பெண் கொசுக்களிருந்த திசையில் அதிகமாகக் கூடியிருந்தன. மேலும், கூடுகளிலுள்ள கொசுக்களின் ஒலிகள் மின்சாரத் தொடர்பின் மூலம் ஒலிபெருக்கியில் ஐந்து இலட்சம் மடங்கு மிகைப்படுத்தப்பட்டன. அதனால் பல மைல்கள் தொலைவிலிருந்தும் கொசுக்கள் பறந்து வந்தன. பல்வேறு வகையான கொசுக்களும் குறிப்பிடத்தக்க இணை ஒலிகளை எழுப்புகின்றன. இந்த இணை ஒலிகளைப் பெண் கொசுக்கள் எழுப்புகின்றன. இரண்டு ஒலிகளில் ஒன்று காதல் அழைப்பு. இந்த ஒலி அதே வகையைச் சேர்ந்த ஆண் கொசுக்களைக் கேட்கக்கூடிய தூரத்திலிருந்து கவருகின்றது. மற்றொன்று காம அழைப்பு. இது குருதியின் பிறப்பிடத்தைக் கண்டுபிடித்துவிட்டதை மற்றப் பெண் கொசுக்களுக்கு அறிவிக்கும் ஒலியாகும். ஏனென்றால், பெண் கொசுக்கள்தான் மற்றப் பிராணிகளைக் கடித்தும், குருதியை உறிஞ்சியும், நோய்களைப் பரப்பியும் வருகின்றன. அதனால் குருதி இருக்குமிடம் அதற்கு முதலில் தெரிந்துவிடுகின்றது. மேலும், முட்டைகளை வளமுறச் செய்வதற்குக் குருதி வேண்டும். அதனால் பெண் கொசுக்களுக்குக் குருதி தேவைப்படுகின்றது. ஆனால், ஆண் கொசுக்கள் தூய சைவ உணவாளிகளாகும். அவை தேனையும் பழச் சாறையும் அருந்தி உயிர் வாழ்கின்றன. எனவே, கூட்டிலிருக்கின்ற பெண் கொசுக்களின் காதல் அழைப்பும், காம அழைப்பும் ஆண் கொசுக்களையும் பெண் கொசுக்களையும் கவர்ந்தன. சுற்று வட்டாரத்திலிருந்து ஏறக்குறைய தொண்ணூறு சதவிகிதக் கொசுக்கள் இந்த இரண்டு ஒலிகளாலும் கவரப்பட்டன. கொசுக்களின் உணர்ச்சிக் கொடுக்கு இந்த ஒலிகளை ஏற்கும் கருவிகளாக இருந்தன.

தேனீக்களின் செய்தி இணைப்பு மிகவும் சிக்கல் நிறைந்த செயல்முறையாக இருக்கின்றது. தேன் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்த ஒரு தேனீ கூட்டிலிருக்கும் மற்றத் தேனீக்களுக்குத் தெரிவிக்கும் முறை மற்றப் பூச்சிகளின் செயல்முறைகளிடமிருந்து மாறுபடுகின்றது. வான் ஃபிரிஷ் (Von Frisch, K) என்ற செர்மானியர் தேனீக்களைப்பற்றி விரிவாக ஆராய்ந்திருக்கின்றார். தேன் கூட்டிலிருந்து ஐம்பது அல்லது நூறு அடித்தூரத்தில் ஓர் இடத்தில் நல்ல உணவு இருப்பதை ஒரு தேனீ கண்டுபிடித்த

வுடன், அது மிகவும் கிளர்ச்சியுற்றுத் தனிச் சிறப்பான ஒரு வகை வாடையைத் தன்னிடமிருந்து கிளப்புகின்றது. ஒரு தேனீ தேனைச் சேகரித்துக்கொண்டு கூட்டுக்குத் திரும்பியவுடன் தான் கொண்டு வந்த தேனையோ அல்லது இனிப்பு நீரையோ மற்ெருரு தேனீ யிடம் கொடுக்கின்றது; பிறகு இடப் பக்கமும் வலப் பக்கமும் மாறி மாறிச் சுற்றி வந்து களிப்பாட்டம் போடுகின்றது. மற்றத் தேனீக்களும் கிளர்ச்சியடைந்து அருகில் சென்று களிப்பாட்டம் போடும் தேனீயை உணர்ச்சிக் கொடுக்குகளால் தொடுகின்றன. ஆட்டம் இடைவெளிகளின்போது அந்தத் தேனீ மற்றத் தேனீக் களுக்குத் தான் கொண்டு வந்த தேனைத் துளிகளாகக் கொடுக் கின்றது. பிறகு அந்தத் தேனீக்கள் ஒன்றன்பின் ஒன்ருக ஆட்டத்தைவிட்டு அந்தத் தேன் உள்ள இடத்தைத் தேடிச் செல்லுகின்றன. தேனீக்களிடம் காணப்படும் இந்த வகையான செய்தி இணைப்பு எறும்புகளிடம் காணப்படுவதைவிடச் சற்றுச் சிக்கலாக இருக்கின்றது.

தேனீக்கள் தேனையும் மகரந்தத்தையும் சுமார் இரண்டு மைல் தூரத்திலிருந்து சேகரித்துக்கொண்டு கூட்டுக்குக் கொண்டு வருகின்றன. அதனால் ஒரு தேனீ தருகின்ற அவ் வகையான செய்தி அந்தத் தூரத்திற்குப் போதுமானதாக இருப்பதில்லை. ஆகவே, உணவு இருக்குமிடம் இரண்டு மைலுக்கு அப்பாலிருக்கு மானல் தேன் கொண்டு வருகின்ற தேனீயின் களிப்பாட்டம் வேறு வகையாக இருக்கின்றது. ஆட்டம் நேரடியானதாகவும், சிறிது நேரமேயுள்ளதாகவுமிருக்கின்றது. அதனுடைய அடிவயிறு பக்கவாட்டில் அசைகின்றது. அதனுடைய ஆட்டத்தின் வேகம் உணவுள்ள இடத்திற்குப் பறந்து செல்லும் காலத்தை அளவிடு கின்றது. மெதுவான ஆட்டம் அதிக நேரம் பிடிக்கும் என்பதைக் குறிக்கின்றது. உணவு இருக்கும் இடம் சூரியன் இருக்கும் திக்கை வைத்துக் குறிப்பிடப்படுகின்றது. இந்தச் செய்திகளைக் கொண்டு உணவு இருக்குமிடம் தேடிச் செல்லும் தேனீக்கள் அந்த இடத்தைக் கண்டறிவதில் தவறு செய்துவிடுவதில்லை.

இந்த ஆராய்ச்சி முடிவுகளைப் பார்த்த பிறகு தேனீக்கள் தங்களுக்கென்று ஒரு மொழியைப் பெற்றிருக்கின்றன என்று கூறுகின்ற கருத்தை மறுத்துரைப்பது அவசியம் என்று தெரிய வில்லை. தேனீக்களிடையே நடைபெறுகின்ற செய்தி இணைப்பு நடத்தை பரம்பரையாகவே முற்றிலும் உயிரியல் செய்முறையாக இருந்து வருகின்றது. செய்தி இணைப்பு ஒழுங்குமுறை ஓர் உயிரினத்தில் உறுப்பினராக இருப்பதால் நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு மொழிச் சமுகத்திலோ ஒரு பண்பாட்டிலோ அங்கத்

தினராக இருக்கின்ற பண்புக்கூறினால் அது நிர்ணயிக்கப்படுவதில்லை. தேனீயின் களிப்பாட்டம் ஒருபடி வார்ப்பு, எண்ணுதியங்கும் அறிகுறி என்று மிச்சினர் கூறுகின்றார்.

வாலில்லாக் குரங்குகளின் நடத்தை

படிமுறை வளர்ச்சி ஏணியில் மனிதனுக்கு அடுத்தபடியாக நிற்கின்ற மிருகங்களில் வாலில்லாக் குரங்குகள்தான் மனிதனுக்கு மிக அருகில் நிற்கின்றன. எனவே, மனிதனோடு ஒத்திட்டுப் பார்ப்பதற்கு ஏற்ற மிருகம் என்று அது கருதப்படுகின்றது. காட்டு மிருகங்களிலும் வீட்டு மிருகங்களிலும் வாலில்லாக் குரங்கே மிகவும் நுண்ணறிவுள்ள பிராணி என்று கருதப்படுகின்றது. வாலில்லாக் குரங்கினத்தில் மிகவும் அதிகமாக ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட மிருகம் சிம்பான்சி (chimpanzee) ஆகும். அஃது ஒரு சமூக மிருகம் என்று கருதப்படுகின்றது. அதனிடம் காணப்படும் மனிதப் பண்புகள் என்ன என்று நாம் காண வேண்டும். பிறகு மிகவும் சிக்கலான மனித இனத்தோடு ஒத்திட்டுப் பார்க்கும்பொழுது அதனிடம் காணப்படும் குறைபாடுகள் என்ன என்றும் காண வேண்டும்.

வாலில்லாக் குரங்குகளின் சமூக நடத்தை: வாலில்லாக் குரங்குகளில் சிம்பான்சி பலரால் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கின்றது. சிலர், சிம்பான்சி தனிமையிலிருக்கும்பொழுது உண்மை சிம்பான்சியாக அஃது இருக்க முடியாது என்று கூறுகின்றனர். இது மிகையாகக் கூறப்பட்ட கருத்து என்பது என்னமோ உண்மைதான். ஆனால், ஒரு சிம்பான்சி மற்றச் சிம்பான்சிகளால் மிகவும் அதிகமான அளவுக்குத் தூண்டப்படுகின்றது. வன்முறையான முறையில் ஒரு சிம்பான்சி அதனுடைய கும்பலிலிருந்து விலக்கப்பட்டு, தூரமான இடத்திற்குக் கொண்டு செல்லப்படுமானால், அது பல வழிகளிலும் தன்னுடைய துன்ப உணர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. கத்துதல், இரைச்சலிடல், கோபித்தல், விடுபட்டுத் தன்னினத்தைச் சென்றடைய வேண்டிப் போராடல் முதலியவை அதனிடம் காணப்படும் நடத்தையாகும். இவ் வகையான நடத்தை மணிக்கணக்கில் அதனிடம் காணப்படுகின்றது. அதனுடைய உடல் செயல்முறைகள் பெரிதும் தடைபட்டுப் போகின்றன; உணவைத் தொடர்ந்து புறக்கணிக்கின்றது; மனவெழுச்சி கொண்டு வெறியாட்டம் போடுகின்றது; பிறகு உளச் சோர்வுடன் காணப்படுகின்றது. இவ் வகையான சூழ்நிலையில் ஒரு சிம்பான்சி தன்னுடைய இனத்தைச் சென்றடையும் முயற்சியில் உயிரைக்கூட விட்டு விடலாம். தனிமைப்படுத்தப்

பட்ட ஒரு சிம்பான்சி அதனுடைய இனத்தைச் சென்றடைந்ததும் மிகுந்த மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றது.

கூட்டில் ஒரு சிம்பான்சியைப் போட்டு அடைத்து விட்டால், கம்பிச் சந்துகளில் கைகளை நீட்டி மற்றக் குரங்குகளை அழைக்கின்றது; உள்ளே உள்ள பொருள்களையெல்லாம் வெளியே தள்ளுகின்றது. கூட்டுக்குள் அடைக்கப்பட்டுள்ள சிம்பான்சியின் அழுகை மற்றவற்றிற்குக் கேட்கக்கூடியதாகவும், அதனுடைய துன்பம் மற்றவையால் பார்க்கக்கூடியதாகவும் இருக்குமானால், கூட்டினருகில் அவை சென்று கம்பிகளுக்கிடையில் கையைவிட்டு அதைக் கட்டிப்பிடித்து ஆறுதல் காட்டுகின்றன; துன்பத்தால் வருந்திக்கொண்டிருக்கும் அம் மிருகத்திற்கு மனிதர்களைப் போன்று ஆறுதல் காட்டுகின்றன. ஆனால், கூட்டிலடைக்கப் பட்ட மிருகத்தை மற்றவை காண முடியாவிட்டாலோ, அதன் கூச்சலைக் கேட்க முடியாவிட்டாலோ அதனுடைய இல்லாமையை மற்ற மிருகங்கள் உணருவதில்லை. நோய் காரண மாகவோ, இறந்துவிட்டதன் காரணமாகவோ ஒரு மிருகம் அப்புறப்படுத்தப்பட்டால், அதனுடைய மறைவை மற்றவை உணர்ந்திருப்பதற்கான ஆதாரம் எதுவும் கிடைப்பதில்லை.

துன்பத்தின்போது சிம்பான்சி குறிப்பிடத்தக்க வகையில் அழுகையொலி கிளப்புகின்றது. இந்த அழுகையொலியை அம் மிருகத்தினிடம் எழுப்பியவர் ஒரு மனிதராக இருப்பாரானால், மற்ற மிருகங்கள் அவரைப் பயமுறுத்துகின்றன; சில சமயங் களில் அம் மனிதரைத் தாக்கவும் செய்கின்றன; சில சமயங்களில் இம் மிருகங்களைப் பழக்குவதுகூடக் கடினமான செயலாகிவிடு கின்றது. குறிப்பாக அம் மிருகம் வளர்ச்சியடைந்ததாகவும், மற்ற மிருகங்களின் மத்தியில் இருக்குமானால் அதற்குப் பயிற்சி யளிப்பதும் மிகக் கடினமாகும்.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சிம்பான்சி வகைக் குரங்குகளிடம் மிகுந்த கூட்டுறவு நடவடிக்கை காணப்படுவதாக ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றனர்கள். இரண்டு சிம்பான்சிகள் ஒரு கயிற் றைப் பிடித்திழுப்பதற்குத் தனித்தனியே பயிற்சியளிக்கப்பட்டது. அவை இரண்டும் ஒரு கூண்டில் அடைக்கப்பட்டன. ஒரு பெட்டி உணவு கூண்டிற்குச் சற்றுத் தூரத்தில் வைக்கப்பட்டது. அப் பெட்டியுடன் இரண்டு கயிறுகள் இணைக்கப்பட்டுச் சிம்பான்சியின் கையில் கிடைக்கக்கூடிய வகையில் கூண்டில் விடப்பட்டிருந்தன. ஒரு கயிற்றை ஒரு சிம்பான்சி பிடித்திழுத்தபொழுது உணவுப் பெட்டி நகரவில்லை. எனவே, அஃது அடுத்த சிம்பான்சியின்

உதவியை நாடிற்று. மற்றொரு கயிற்றை அதுவும் பிடித்திழுக்க, பெட்டி அருகில் நகர்ந்து வந்தது. அதைப் பற்றி இழுத்து உணவை இரண்டும் உட்கொண்டன.

இவ் வகையைச் சேர்ந்த குரங்குகளின் நடத்தையை ஆராய்ந்த கோலர் (Kohler) என்பவர் கூட்டுறவு வேடிக்கை என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றார். ஒரு கூண்டில் அடைக்கப்பட்டுள்ள சில சிம்பான்சிகள் ரொட்டி சாப்பிட்டுக்கொண்டிருந்தன; ஒரு நாள் அவ்வாறு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது கோழிக் குஞ்சுகளைத் தொந்தரவு செய்வதில் விருப்பம் கொண்டன. கோழிக் குஞ்சுகள் கூண்டினருகில் வரும்பொழுது சிம்பான்சிகள் ரொட்டித் துண்டுகளை வீசின. கோழிக்குஞ்சுகள் அவற்றைப் பொறுக்குகின்றபொழுது சிம்பான்சிகள் ரொட்டித்துண்டுகளை விரைவில் எடுத்துக்கொண்டு விட்டன. இதைப் பார்த்துக்கொண்டிருந்த பற்றற்ற ஒரு சிம்பான்சி தன்னிடமிருந்த ரொட்டித்துண்டைக் கோழிக்குஞ்சுகளுடன் பகிர்ந்துகொண்டது. இது நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது சில சமயங்களில் மற்றொரு சிம்பான்சி ஒரு குச்சியையோ, ஒரு கம்பியையோ எடுத்துக் கோழிக்குஞ்சுகளிடம் நீட்டிற்று. தற்செயலாக ஏற்பட்ட இந்த விளையாட்டை இரண்டு மிருகங்களும் தொடர்ந்து நடத்தி வந்தன. ஒரு மிருகம் ரொட்டியை நீட்டி ஆசை காட்டிக் கோழிக்குஞ்சுகளைக் கூண்டின் கம்பிகளுக்கருகில் கவர்ந்தது. மற்றொன்று குச்சியை நீட்டி ஆட்டிற்று. குச்சியை நீட்டும்பொழுது கோழிக்குஞ்சுகள் பயந்து பின் சென்றன.

பற்றுணர்ச்சியும் அணிகலன்களைப் பூணும் ஆசையும் சிம்பான்சிகளிடம் இருப்பதைக் கோலர் கண்டறிந்திருக்கின்றார். பிடித்து அடைக்கப்பட்டுள்ள சிம்பான்சிகளிடம் மனிதர்களிடம் காணப்படுகின்ற பற்றுணர்ச்சியும் அணிகலன்களைப் பூணும் விருப்பமும் குறிப்பிடத்தக்க அளவு காணப்படுவதாக அவர் கூறுகின்றார். கூண்டில் அடைக்கப்பட்டிருந்த சில சிம்பான்சிகள் கம்பிகளுக்கிடையிலுள்ள சந்தின் வழியாக வைக்கோல்களை வெளியில் நீட்டிப் பிடித்துக்கொண்டிருந்தன. அந்த வைக்கோல்களின்மீது வெளியில் தரையில் ஊர்ந்து சென்ற எறும்புகள் ஏறின. உடனே வைக்கோலை உள்ளே இழுத்து அதில் ஏறியிருந்த எறும்புகளைச் சிம்பான்சிகள் சாப்பிட்டன. மறுபடியும் அதே போன்று அவை செய்தன. மற்றச் சிம்பான்சிகளும் இதைப் பார்த்து ஒரு விளையாட்டாகக் கருதிச் செய்ய ஆரம்பித்தன. இதில் ஓய்வடைந்துபோன அவை சிறிது நேரத்திற்குப் பிறகு வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

தங்களை அழகு செய்துகொள்ளும்பொருட்டுச் சிம்பான்சிகள் அணிகலன்களாக உபயோகிப்பது கந்தைகள், துண்டுக்கயிறுகள், சில வகையான புல்கள், சிறு கற்றையான சுள்ளிகள் முதலியவை யாகும். நூல் கயிறுகளைக் காதிலும் முகத்தைச் சுற்றிலும் தொங்கவிட்டுக்கொள்ளுகின்றன. இந்த நடவடிக்கைகள் அன்றாட நிகழ்ச்சிகள் என்று கோலர் கூறுகின்றார். இந்த நடவடிக்கைகளின்மூலம் சிம்பான்சிகள் ஒரு வகையான மன நிறைவு கொள்ளுகின்றன. மேலும், அவை கலையில் ஆர்வம் காட்டுகின்றன என்றும் கோலர் கூறுகின்றார். வெள்ளை வண்ணப் பூச்சுப் போன்ற பொருளைக்கொண்டு கூண்டிலுள்ள பொருள்கள் மீதெல்லாம் கிறுக்குகின்றன. சில சமயங்களில் அவை, தங்கள் மீதே வெள்ளை வண்ணத்தைக் கிறுக்கிக் கொள்ளுகின்றன. எந்த வகையான முறையோடும் அவை இதைச் செய்யவில்லை; குழந்தைகள் எழுதுகோலைக்கொண்டு கோடுகள் கிழிப்பதைப் போன்று செய்து ஒரு வகையான மகிழ்ச்சி எய்துகின்றன.

தங்களுடைய முகத்தையும் தோற்றத்தையும் கண்ணாடியிலும், தெளிந்த நீரிலும் காணுவதில் சிம்பான்சிகள் மகிழ்ச்சி கொள்ளு கின்றன. ஒரு மிருகத்தினிடம் ஒரு முகக்கண்ணாடி கொடுக்கப் பட்டது. அதை மற்றெல்லா மிருகங்களும் தட்டிப்பறிக்க முயற்சி செய்தன. இறுதியில் ஒரு பெண் சிம்பான்சி அக் கண்ணாடியைப் பறித்துக்கொண்டது; பிறகு அதைப்பரிசோதிக்கத் தொடங்கிவிட்டது; தனக்கு இணையான ஒன்றைக் கண்ணாடியில் கண்டு அதைப் பிடிக்கவும் தொடவும் திரும்பத் திரும்ப முயற்சிகள் எடுத்தது. மேலும் சிம்பான்சிகள் பளிங்கு போன்ற பரப்பு களிலும், நீரிலும், உலோகத் தகடுகளிலும் தங்களுடைய தோற்றத்தைக் காணுவதில் கவனம் செலுத்தத் தொடங்கின என்றும் அவர் கண்டறிந்தார். நீர்நிலையங்களில் வெகுநேரம் நின்றுகொண்டு தங்களுடைய உருவங்களையும் முகச்சுளிகளையும் பார்த்துக்கொண்டு முன்னும் பின்னும் நகருகின்ற சிம்பான்சி களைக் கோலர் கண்டார்.

மனிதர்களிடம் நடந்துகொள்ளும் முறை: வாலில்லாக் குரங்குகள் வீட்டில் பழக்கப்பட்ட மிருகங்களைப் போன்று நடந்து கொள்ளுகின்றன. மனிதர்களிடம் அவை நெருங்குகின்ற முறை அரைகுறையான மனித நடத்தையைப் போன்றிருக்கின்றது. ஒரு சமயம் எந்த வகைக் கவனமுமின்றி ஒரு சிம்பைத் தன் விரல்களுக்கிடையில் வைத்துக்கொண்டிருந்தார். இஃது ஒரு சிம்பான்சியின் கவனத்தைக் கவர்ந்தது. உடனே அது அந்தச் சாயலை மேற்கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்படுத்

திற்று: வாலில்லாக் குரங்குகளிடையே ஒருவருக்கொருவர் பணி செய்துகொள்ளும் முறையை மேற்கொண்டு தோலைச் சரியாகப் பரிசோதித்தது; ஒரு காயத்தைக் கண்டறிந்தது. அந்தச் சிம்புக்கு இரண்டு பக்கங்களிலும் இரண்டு விரல் நகங்களை வைத்துத் திறமையுடன் வெளியில் நசுக்கி எடுத்தது; பிறகு விரலைக் கவனமாகப் பரிசோதித்தது; அந்த வேலையை வெற்றிகரமாகச் செய்து முடித்த மனநிறைவுடன் தன்னுடைய கையைக் கீழே தொங்கவிட்டது. ஒரு வைத்தியர் செய்கின்ற வேலையைச் செய்து முடித்துவிட்டதாக அது மகிழ்ச்சியடைந்தது.

கூண்டிலடைக்கப்பட்டுள்ள வாலில்லாக் குரங்குகள் பால் விருப்பத்தை நிறைவு செய்யும் நோக்கத்துடன் மனிதர்களை நோக்கி வருகின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்கள். நாய், இன்னும் மற்ற மிருகங்களிடமும் அதே போன்று நடந்து கொள்ளுகின்றனவாம். வாலில்லாக் குரங்குகளை அடிக்கடித் திட்டும்பொழுதும், தண்டனை அளிக்கப்படும்பொழுதும் அவை தங்களுடைய மனித எஜமானரிடம் மன்னிப்புக் கேட்கின்றன. தங்களுடைய கைகளினால் கழுத்தைப் பிடித்துக்கொண்டு தேம்புகின்ற முறையில் அவை நடந்துகொள்ளுகின்றன. மேலும், சிம்பான்சிகள் மனிதர்களையும் தங்களினத்தில் ஒருவராக ஏற்றுக் கொள்ளுவதில் விருப்பம் தெரிவிக்கின்றன என்பதையும் கோலர் கண்டறிந்திருக்கின்றனர். ஒரு மரத்தைச் சுற்றிச் சிம்பான்சிகள் மகிழ்ச்சியாக ஆடியபொழுது தானும் அவற்றுடன் சேர்ந்து ஆடியதாக அவர் கூறுகின்றனர். அதை அவை மகிழ்ச்சியாக வரவேற்றனவென்றும், தாம் அதிலிருந்து பின்வாங்கிக்கொண்டபொழுது அவை ஏமாற்றமடைந்தனவென்றும் கோலர் கூறுகின்றனர். பெண் சிம்பான்சிகள் மனிதக் குழந்தைகளிடம் தனி அன்பு காட்டுகின்றன.

ஆனால், சில வகையான மனிதத்துலங்கல்களை வாலில்லாக் குரங்குகளிடம் காண முடியவில்லை. அவை அழுவதில்லை. பல்வேறு வழிகளில் அவை தங்களுடைய மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாலும் அவை உண்மையில் சிரிப்பதில்லை. மனிதர்கள் சிரிப்பதைக் கண்டும் அவை துலங்குவதில்லை. அதற்கு அவை குழப்பமடைந்த துலங்கலையும் கோபத் துலங்கலையும் வெளிப்படுத்துகின்றன.

சிம்பான்சிகளிடம் பொதுவாகக் காணப்படும் ஒரு விளையாட்டு, அச்சுறுத்தலாகும். ஒரு மிருகம் மற்றொரு மிருகத்தை அணுகி, குச்சியை வீசப் பயமுறுத்தும் சைகைகளைச் செய்கின்றது. மற்ற மிருகம் அந்தச் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு அதேமாதிரி துலங்குகின்றது. இந்த வகையான விளையாட்டில் அம் மிருகங்கள்

கோபம் கொள்ளுமானால் தடிகளை எறிந்துவிட்டு நேரடியாகச் சண்டை போடுகின்றன; கைகளையும் கால்களையும், பல்லையும் உபயோகித்துச் சண்டை போடுகின்றன. அச்சுறுத்தும் வாலில்லாக் குரங்குகள் சில சமயங்களில் மனிதர்களையும் நெருங்கி அச்சுறுத்துகின்றன.

கருவிகளை உபயோகித்தல் : சிம்பான்சிகள் பல்வேறு வகையான பொருள்களையும் கருவிகளாகத் தங்களுடைய தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றன; ஆனாலும், அந்தக் கருவிகளைத் தங்களுடைய எதிர்காலத்திற்கு வேண்டுமென்று சேமித்து வைத்துக்கொள்ளுவதில்லை. அவை வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லுவதுமில்லை. உணவுகளையும் தங்கள் எதிர்காலத்திற்குச் சேமித்து வைக்கும் பழக்கம் சிம்பான்சிகளிடமில்லை. ஆனால், அதே சமயத்தில் சில பூச்சி வகைகள் உணவுப்பொருள்களை ஒழுங்கு முறையாகத் தங்களுடைய இருப்பிடங்களுக்கு எடுத்துச்சென்று சேமித்துப் பாதுகாக்கின்றன. இது கற்றுப்பெறக் கூடிய நடத்தையன்று; உயிரியலுக்குரிய நடத்தை என்று தெரிகின்றது. சிம்பான்சிகளிடம் உள்ளார்ந்த அழிவுசெய்யும் தூண்டல் இருப்பதாகத் தெரிகின்றது. எந்த ஒரு முழுப்பொருளையும் உடைத்தெறியும் நடத்தை அவற்றினிடம் காணப்படுவதால், இக் கருத்தை உறுதி செய்யலாம் என்று யர்க்கிஸ் (Yerkes) என்பவர் கூறுகின்றார். எந்த ஒரு பொருளையும் இழுத்துப் பிரித்து அல்லது உடைத்துப் பார்க்கக்கூடிய போக்கும், எங்கும் சென்று எட்டிப் பார்க்கக்கூடிய போக்கும் சிம்பான்சிகளிடம் உண்டு. மேலும், எந்த ஒரு பொருளையும் உடைத்துப் பார்க்கின்றவரையில் அவை அமைதி கொள்ளுவதில்லை. எனவே, இம் முறையில் பார்க்கும் போது அவை சிறு பையன்களைப் போன்று நடந்துகொள்ளுகின்றன. ஆனால், சிம்பான்சிகள் ஆக்கச் செயல்களிலும் ஈடுபடுகின்றன. உதாரணமாக, இரண்டு குட்டையான குச்சிகளை ஒன்றாக இணைத்து ஒரு நீண்ட குச்சியாகச் செய்யும்போது அதனுடைய நடவடிக்கை மிகவும் குறிப்பிடத் தக்கதாகும். இது முதலில் கூறப்பட்ட நடத்தையினின்று முற்றும் மாறுபட்டதாகும்.

வாலில்லாக் குரங்குகளுக்குத் தொடர்ந்து பயிற்சி அளித்து வந்தால்தான் அவை தங்களுடைய கற்ற நடத்தையை நிலை நிறுத்திக்கொள்ள முடியும்; இல்லை என்றால், அதிசீக்கிரம் கற்றதை மறந்து விடுகின்றன. சிம்பான்சிகள், பரிசோதனைக் கூடத்தில் கற்ற சில மனித நடவடிக்கைகளை எவ்வாறு மறுபடியும் கையாளுகின்றன என்று யர்க்கிஸ் என்பவர் பரிசோதித்துப் பார்த்தார். அவர் தம்முடைய பரிசோதனைக்கூடத்தில் ஒரு நீர்

ஊற்றை அமைத்தார். ஓர் அழுத்தும் பொத்தானை அழுத்திய வுடன் நீர் கொட்டிற்று. சில மிருகங்கள் மட்டுமே அதை அறிந்து கொள்ளும் வாய்ப்பு அளிக்கப்பட்டன. மற்றவை அந்தச் சில மிருகங்களைப் பார்த்துத் தெரிந்துகொள்ள அனுமதிக்கப்பட்டன. இம் மிருகங்களின் ஒவ்வொரு பரம்பரையும் எளிதில் பழக்கப்படக் கூடியது என்று அவர் கண்டறிந்தார். நீர் ஊற்று நடவடிக்கை மட்டுமன்றி, சாவிகளைக் கையாளுதல், சுத்திகளை உபயோகித்தல் முதலிய நடவடிக்கைகளிலும் எளிதில் அவை பழக்கப்பட்டன. ஒரு பரம்பரையினிடமிருந்து அடுத்துவரும் பரம்பரை கற்றுக் கொள்ளும் வழி மொழியின்மூலம் இம் மிருகங்களிடையே நடை பெறுவதில்லை. மனிதர்கள்தான் மொழியைக்கொண்டு பரம் பரையாக ஒன்றைத் தொடர்ந்து கற்று வருகின்றார்கள்.

3. சமூக ஊக்கிகள்

உளவியலில் பல வழிகளில் ஊக்கிகள் அடிப்படைப் பிரச்சினையாக இருந்து வருகின்றன. ஊக்கிகள் நடத்தையின் காரணங்களோடு சார்புடையவையாக இருக்கின்றன. ஒரு பொருளில் பார்க்கும்பொழுது ஊக்கிகளே நடத்தையின் காரணங்களாக இருக்கின்றன. ஊக்கி என்ற கருதுகோளைச் சமூக உளவியலார், சமூக நடத்தைச் சார்பான சில வினாக்களுக்கு விடை காணும் கருவியாக உபயோகிக்கின்றனர். 'மனிதன் ஏன் செயல்படுவதற்குத் தூண்டப்படுகின்றான்? அதனுடைய செயலின் வழியை நிர்ணயிப்பது எது?' போன்ற வினாக்கள் சமூக உளவியலாரின் அறிவார்வத்தைத் தூண்டுகின்றன. எனவே, ஒரு சமூகச் சூழ்நிலையில் செயல்படும் மனிதனுடைய நடத்தையை அறிய வேண்டுமானால், ஊக்கிகளைப்பற்றிச் சிறிது விளக்கமாக அறிந்தாக வேண்டும்.

ஊக்கி அல்லது ஊக்கமூட்டி (motivation) மனித நடத்தையில் ஒரு மாறுமியல்பாக இருக்கின்றது. அஃது உயிரினத்தின் சிறப்புக் கூறாக இருந்து வருகின்றது. அதை நேரடியாக நாம் அறிய முடியாது. எனவே, உயிரினத்தின் நடத்தையின்மூலமாக மறைமுகமாகவே உய்த்துணர்ந்துதான் அதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அது தனி மனிதனுடைய தூண்டல் உலகத்திற்கும் அவனுடைய நடத்தைக்குமிடையில் குறுக்கிடுகின்றது. தவிர, உள்ளே வருகின்ற தூண்டலோடும் உயிரினத்திற்குரிய மற்றச் சிறப்புக் கூறுகளோடும் பரிமாற்றச் செயலில் ஈடுபட்டு நடத்தையை நிர்ணயிக்கின்றது. ஊக்கிகள் எவ்வாறு விரிவடைகின்றன என்றும், எவ்வாறு செயல்படுகின்றன என்றும் அறிவதற்குப் பல்வேறு வகையான வழிமுறைகளிருக்கின்றன.

தனியாள்களின் சமூக நடத்தைச் சூழ்நிலையில் ஊக்கமூட்டியை விவாதிக்கும் நோக்கத்திற்காக, உயிரினத்திற்குள் சில

வழிகாட்டும் குறி தோன்றுகின்றபொழுது ஓர் ஊக்கி இயங்குகின்றதாக விவரித்துக் காட்டலாம். உதாரணமாக, பசி எடுக்கின்றபொழுது உயிரினம் உணவு தேடிச் செல்லுகின்றது. உணவு தேடிச் செல்லும் நடத்தையைப் பசிதான் இயக்குகின்றது. பசி அடங்கியவுடன் உயிரினம் அமைதி கொள்ளுகின்றது. அது போலவே ஒரு வேலையில் சலிப்புணர்ச்சியடைந்த பணியாளர்கள் மாற்றுப் பணியில் கவனம் செலுத்துகின்றார்கள்.

ஊக்கியின் பண்பாட்டுச் சார்பான அடிப்படை : ஒரு தனியாளின் சமூகச் சூழ்நிலை அவருடைய ஊக்கிகளின் தன்மையை நிர்ணயிக்கும் முக்கிய பங்கேற்கின்றது. ஊக்கிகளின் வளர்ச்சியிலும் எழுச்சியிலும் பண்பாட்டுக்கூறுகள் பல முனைகளில் தலையிடுகின்றன. அவை மனிதனுடைய பல நடத்தைகளை வரையறை செய்து, சூழ்நிலையில் எந்த நடவடிக்கைகள் அல்லது பொருள்கள் பரிசாகவும், எவை தண்டனையாகவும் அமைகின்றன என்று காட்டுகின்றன. உதாரணமாக, மேற்கு ஆப்பிரிக்க நாட்டிலுள்ள டகோமி (Dahomey) சமூகத்தில் ஒரு மனிதன் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளைக் கொண்டிருப்பது சமூகத்தில் மதிப்புமிக்க செயலாகக் கருதப்படுகின்றது. இந்திய நாட்டிலும் மொகலாய மன்னர்களும், சோழப் பேரரசர்களும் பல மனைவியரை வைத்துக்கொண்டிருந்தார்கள்; அஃது அவர்களுக்குப் பெருமை என்றும் கருதி வந்தார்கள். ஆனால், இன்றைய மேற்கிந்தியப் பண்பாடும், ஏன், கீழைநாட்டுப் பண்பாடுகளும் அது தண்டனைக்குரியது என்று கருதுகின்றன.

பண்பாட்டுக் கூறுகள், எந்த வகையான வழிகாட்டும் குறிகள் எந்த விதமான பரிசுகளைப் பெறச் செய்கின்றன என்பதை வரையறை செய்கின்றன. புட்டியின் மூலமாகப் பாலூட்டப்படாத குழந்தை பசியோடிருந்தாலும் புட்டியில் பாலிருப்பதைக் கண்டு எதிர்வினையாற்ற மாட்டான். வேறொரு குழந்தை தன்னுடைய பசியைத் தணித்துக்கொள்ளுவதைக் கண்டாலுங்கூடப் புட்டிப் பாலுக்குத் துலங்குவதில்லை என்று டென்னிஸ் (W. Dennis) என்பவர் கூறுகின்றார். புட்டியின் வழியாகப் பால் குடித்தறியாத குழந்தைக்குப் புட்டி உணவின் அறிகுறியாகப்படுவதில்லை.

எப்படிப்பட்ட நடவடிக்கைகளில் உயிரினம் ஈடுபட்டால் ஊதியத்தைப் பெற முடியும் என்றும், தண்டனையை விலக்க முடியும் என்றும் குறிப்பிடுவதில் பண்பாடு முக்கிய பங்கு கொண்டு செயல்படுகின்றது. இவ்வாறாகவே ஒரு சூழ்நிலையில் உள்ள

வழிகாட்டுக் குறிகள் ஒருவர் மற்றொருவரைத் தாக்கக் காத்திருக்கும் நிலைமையை எழுப்புவதாகக் காட்டுமானால், அதே பண்பாடு இந்தவிதமான துன்பம் தரும் நிகழ்ச்சி உள்ளார்ந்திருப்பதைப் போக்குவதற்கு எடுத்துக்கொள்ளும் நடவடிக்கையையும் மறுபகுதியில் காட்டுகின்றது. உதாரணமாக, அத்தகைய சூழ்நிலையிலிருந்து தப்புவதா, அவன் தன்னைத் தாக்குவதற்கு முன்பே அவனைத் தான் தாக்கி விடுவதா, அல்லது திருப்பிச் செய்ய முடியும் என்று அவனைப் பயமுறுத்துவதா? மூன்று வழிகளில் ஏதேனும் ஒன்றைச் செய்யலாம். இதற்கான வழிகாட்டும் குறிப்புகளை எல்லாப் பண்பாடுகளிலும் காணலாம். வழிகாட்டும் குறிகளின் செறிவை ஒழுங்குபடுத்த உதவுவதன்மூலம் சமூகக் கூறுகள் ஊக்கிகளின் வலிமையை நிர்ணயிக்க உதவி புரிகின்றன. பல்வேறுபட்ட நடத்தைகளோடு தொடர்பு படுத்தப்பட்ட தண்டனைகளும் அல்லது பரிசுகளும் அல்லது பெறக்கூடிய பரிகளும் தண்டனைகளும் பண்பாட்டுக் கூறுகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பண்பாடும், சமூகமும் அவற்றைச் சேர்ந்த அங்கத்தினர்களின் ஊக்கிகளை ஒழுங்குபடுத்துவதன்மூலம் அவர்களுடைய நடத்தையின்மீது கட்டுப்பாட்டை உபயோகிக்கின்றது.

ஊக்கிகள் விரிவடைதல்; சூழ்நிலையோடு உயிரினம் செயலெதிர்ச்செயல் புரிவதன்மூலம் ஊக்கிகள் விரிவடைகின்றன. இது குறிப்பாகச் சமூகச் சூழ்நிலையில்தான் நடைபெறுகின்றது. பசியால் ஏற்படுகின்ற நோய் குழந்தைகளை அழச் செய்கின்றது. அழுகையொலி பெற்றோர்களால் உணவு கொடுக்கப்பட வேண்டுமென்பதைத் தீர்ப்பளிக்கச் செய்கின்றது. அழுகையொலி கேட்கப்படுகின்றபொழுது முதலில் பெற்றோர்கள் உணவு ஊட்டல்தான் குழந்தைக்குப் பரிசு என்று எதிர்பார்க்கின்றார்கள். கற்பதன் மூலமும், முதிர்ச்சியடைந்து வருவதன் மூலமும் தான் வேண்டும் என்று எதிர்பார்ப்பவை மற்றவர்களால் அனுப்பப்படுகின்றன என்பதை உள்ளூர உணரத் தொடங்குகின்றான்; அதாவது அந்தக் குறிப்பிட்ட வழியில் நடத்தை இருக்குமானால், பரிசோ தண்டனையோ உண்டு என்பதை அறிகின்றான்; 'நீ நல்ல பையனாக இருந்தால் சமையல் அறைப்பக்கம் சென்றால் உனக்கு மிட்டாய் கிடைக்கும்' என்று உள்ளூர உணரத் தொடங்குகின்றான். இந்த நிகழ்ச்சியில் குழந்தையின் வெளியுலகம் தாயாராகும். தாயார் வழிகாட்டும் குறிகளைக் கட்டுப்படுத்துகின்றாள்; பரிசு கிடைக்கக் கூடிய நிலைமைகளை நிர்ணயம் செய்கின்றாள்; பரிசும் தருகின்றாள்.

நாள்கள் செல்லச் செல்ல வளர்ச்சிச் செயல்முறையில் குழந்தையே வழிகாட்டும் குறிகளைப் பிறப்பிக்கின்றான்; பரிசுக்

கான நிலைமைகளையும் நிர்ணயிக்கின்றான். இறுதியாக நிலைமையைப் புரிந்துகொள்ளுவதற்காக மட்டும் அவன் தன்னுடைய ஆற்றலை விருத்தி செய்துகொள்ளவில்லை. அல்லது அந்தச் சூழ்நிலைகளில் ஏற்ற முறையில் நடந்துகொள்ளுவதன்மூலம் தண்டனையையும் பரிசையும் உண்டாக்கிக்கொள்ள முடியும் என்பதையும் புரிந்து கொள்ளுவதோடன்றி, தனக்கே பரிசையும் தண்டனையையும் வழங்கிக்கொள்ளும் ஆற்றலையும் வளர்த்துக்கொள்ளுகின்றான்; தான் நன்றாகச் சாப்பிட்டால்தான் பெரிய பையனாக வளர முடியும் என்பதையும் உணர்ந்துகொள்ளுகின்றான். எனவே, ஊக்கிகள் விரிவடைதல் என்பது, ஊக்கமூட்டப்பட்ட நடத்தை யினடியிலுள்ள பல்வேறு நிலைமைகள் முன்னேற்றமடையும் உள் புற உணர்ச்சிகளால் தனிச் சிறப்பாகக் குறிக்கப்படுகின்றது.

மிக நெருக்கமாகவுள்ள சூழ்நிலையில் குழந்தை மற்றவர் களோடு இருக்கும்பொழுது பெறப்படுகின்ற அனுபவத்தால் இந்தச் செயல்முறை மிக அதிகமாக எழுச்சியுறுகின்றது. குழந்தை தன்னைச் சுற்றியுள்ள தனியாள்களிடமிருந்துதான் தண்டனைகளும், பரிசுகளும் உள்ளடங்கியுள்ள வழிகாட்டும் குறிகள் பலவற்றையும் கற்றுக்கொள்ளுகின்றான்; எந்தப் பொருள்களும் தொடர்புறவு களும் பரிசு பெறுவதற்கோ தண்டனை பெறுவதற்கோ எண்ணத் தக்கவை என்றும், பல்வேறு நிலைமைகளில் எந்தப் பொருத்தமான நடத்தைப் பரிசு ஈட்டவும் தண்டனையைப் புறக்கணிக்கவும் கூடியது என்றும் கற்றுக்கொள்ளுகின்றான்; பள்ளிக்கூடத்திலிருக் கின்ற காலத்திலேயே குழந்தை பல ஊக்கிகளை முற்றிலும் உள் புற உணர்ச்சிகளுக்கு உள்ளாக்கிக்கொள்ளுகின்றான்.

உதாரணமாக, ஒரு குழந்தை நடக்கவிருக்கின்ற ஒரு தேர்வை எதிர் நோக்குகின்றான் என்று வைத்துக்கொள்ளுவோம். தேர்வு ஒரு வழி காட்டும் குறியாகும். வருகின்ற இந்த நிகழ்ச்சி, நன்றாகத் தேர்வு எழுதி வெற்றி பெற்று மேல் வகுப்புக்குச் செல்ல வேண்டுமென்பதையும், தேர்வில் நன்றாகச் செய்யவில்லை என்றால் தோல்வியுற நேரிடும் என்பதையும் அவன் எதிர்ப்பார்க்க வேண்டு மென்பதைக் காட்டுகின்றது. அவனுடைய முதல் எதிர்பார்த்தல் பரிசளிப்பதாகவும், இரண்டாவது எதிர்பார்த்தல் தண்டனை தரக் கூடியதாகவும் அவனுக்குத் தெரிகின்றன.

எனவே, நிகழக்கூடியது என்னவென்றால், வெற்றி பெறு வதற்கான ஒரு முன் நிலைமை நன்றாகப் படிக்க வேண்டுமென்ப தாகும். அதை அக் குழந்தை கற்றுக்கொண்டுவிட்டான். அவன் நன்றாகப் படிப்பதற்கான ஊக்கியின் வலிமை பல்வேறு

கூறுகளால் செல்வாக்குப் பெறுகின்றது. தேர்வு எழுத வேண்டும் என்ற சாதசமான நிலைமை, நன்ருகப் படிப்பதற்குக் கிடைக்கின்ற பரிசு, தேர்வில் வெற்றி பெறுவது என்று குழந்தை திட்டமிடுவது, வெற்றி பெறுவதற்குத் தொடர்பாயுள்ள முக்கியத்துவம் ஆகியவை ஊக்கிக்கு வலிமையூட்டலாம். ஆனல், இதில் பெற்ரேர்களுடைய வேண்டுகோள்கள், ஆசிரியருடைய எதிர்பார்த்தல்கள், ஒத்த வயதினர் ஒட்பீடுகள் முதலிய சமூகக் கூறுகள் இந்த ஊக்க மூட்டியின் பல்வேறு பூலைகளில் நுழையலாம் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

ஊக்கமூட்டியும் மன முறிவும்: ஊக்கமூட்டப்பட்ட நடத்தைகள் எப்பொழுதுமே ஊதியங்கள் பெறுவதை நோக்கியும் பிரதிகூலங்களைத் தவிர்ப்பதை நோக்கியும் செலுத்தப்படுகின்றன. சில நிகழ்ச்சிகளில் உயிரினம் ஊதியத்தை நோக்கிச் செல்லும் பொழுதும், தண்டனையைத் தவிர்க்கும் பொருட்டு விலகிச் செல்லும்பொழுதும் வழிகள் அடைக்கப்பட்டிருக்கக் காணுகின்றது. இதனல் அவ் வுயிரினம் மன முறிவும் மனப் போராட்டமும் கொள்ளுகின்றது. ஊக்கிகள் பல்வேறு வழிகளில் தடைபடுத்தப் படுகின்றன.

ஒரு வழிகாட்டும் குறி பரிசு, தண்டனை ஆகிய இரண்டையும் எதிர்பார்க்கக்கூடிய எண்ணத்தை எழுப்பலாம்; ஆனல் பரிசு பெறுவதற்கான பொருத்தமான செயல் வசதியின்மையை உண்டாக்கலாம். உதாரணமாக, ஒரு பொழுதுபோக்குக் கழகத்தில் ஒருவர் சேர்த்துக்கொள்ளப்பட்டார் என்று வைத்துக் கொள்வோம். அக் கழகத்தால் அவர் ஏற்றுக்கொள்ளப்பட்டது ஒரு சமூக ஏற்பாடாகும். அஃது அவருக்குக் கிடைக்கும் சமூகப் பரிசாகின்றது. ஆனல், அக் கழகத்தில் அவருக்குப் பணச் செலவும் அதிகமாகலாம். இஃது அவருக்குக் கிடைத்துள்ள பிரதிகூலமாகும்.

தவிர, இரண்டு ஊக்கிகள் இரண்டு ஊதியங்களைப் பெற வேண்டும் என்று எதிர்பார்த்து இயங்கலாம். ஒன்றைப் பெறுவதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டபொழுது மற்ருென்றைப் பெறுவது தடைபட்டு விடலாம். உதாரணமாக, வாணிகம் செய்யும் ஒருவர் இரண்டு நிலைகளுக்கு உட்படலாம். அதிக வருமானமும், மதிப்பும் தருகின்ற ஒரு வேலையை ஏற்றுக் கொள்ளுவதா அல்லது தனது குடும்பத்தினருடன் அதிக நேரத்தைச் செலவு செய்ய அனுமதிக்கும் வேலையை ஏற்றுக்கொள்வதா என்று வலியுறுத்தப்படுகின்ருர். இந்த இரண்டில் எதை அவர் செயல்படுத்துவார்?

சம்பந்தப்பட்ட மனிதர், தம்முடைய முயற்சியில் பிரதிகூல மிருக்கின்றது என்று எதிர்பார்த்து, அத்துடன் இரண்டு ஊக்கி களையும் தொடர்பு படுத்தும்பொழுது மனப் போராட்டச் சூழ் நிலை அவருக்கு எழுகின்றது. எனவே, ஒன்றைத் தவிர்ப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுக்கின்றபொழுது மற்றொன்று உறுதியாக்கப்படுகின்றது. முதலில் கூறிய மாணவனுடைய விவகாரத்தில் ஒன்று, மாணவன், தான் தவறிப் போகின்ற தேர்வை எழுத வேண்டும் அல்லது நோய்வாய்ப்பட்டவன் போன்று பாசாங்கு செய்துத் தேர்வு எழுதாமலிருந்துவிட வேண்டும். இறுதியாக ஒன்று அல்லது பல ஊக்கிகள் இயக்கலாம். ஆனால், சமூகக் கட்டுப்பாடுகள், புறச் சார்பான உடல் சக்திகள் அல்லது சம்பந்தப்பட்ட மனிதரின் சொந்த வரையளவுகள் பொருத்தமான நடத்தையைத் தடுத்து விடலாம். எது சரி, எது தவறு என்பது பற்றி அவரே தமக்கென்று சொந்த வரை யளவுகள் தம்முள்ளேயே ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம். எனவே, ஒருவர் ஒரு குழுவில் சேருவதற்கு விரும்பினாலும், அந்தக் குழுவிலுள்ள அங்கத்தினர்கள் அவரைச் சேர்த்துக்கொள்ள மறுக்கலாம். அல்லது அவர் சமூக விரோத நடத்தையுள்ளவராக இருக்கலாம். ஒருவர் மன முறிவுக்கு எவ்வாறு துலங்குகின்றார் என்பதை மன முறிவின் அளவும் மூலமும் நிர்ணயிக்கின்றன. மேலும், சமூகச் சூழ்நிலையும், இயற்கைச் சூழ்நிலையும், தனியாளின் ஆளுமையும் உள்ளடங்கியுள்ள நடத்தை மாற்று வழிகளினாலும் மன முறிவின் துலங்கல் நிர்ணயிக்கப்படுகின்றது.

மன முறிவுக்குத் துலங்குகின்ற சிறப்புக் கூறான பல வழிகள் ஒரு மனிதரின் பரிமாற்றத் தொடர்புறவுக்கு இடைஞ்சலாக இருக்கின்றன. சில நிகழ்ச்சிகளில் உயிரினம் நடவடிக்கைகளின் மூலம் மன முறிவுக்குத் துலங்குகின்றது. அந்த நடவடிக்கை வெளிப்படையானதாகவும் இருக்கலாம், கற்பனை சார்ந்ததாகவும் இருக்கலாம். ஆனால், அந்த நடவடிக்கை அதனுடைய சூழ்நிலை யில் மற்றவர்களுக்குத் துன்பம் தரும்படியாகத்தான் திட்டமிடப் படுகின்றது. சில சமயங்களில் இப்படிப்பட்ட ஆக்கிரமிப்பு நடத்தை மனமுறிவுக்குக் காரணமானவர்களின்மீது செலுத்தப் படுகின்றது. சில சமயங்களில் ஆக்கிரமிப்பு நடத்தை மனமுறிவுக் குச் சம்பந்தமில்லாதவர்களின்மீது செலுத்தப்படுகின்றது இதில் ஆக்கிரமிப்பு காட்சி மாற்றம் பெறுகின்றது. ஆக்கிரமிப்பு காட்சி மாற்றம் பெறுவதை எந்த ஒரு பண்பாட்டிலும், குடும்பத்திலும் எளிதாகக் காணலாம். அலுவலகத்தில் பணிபுரியும் ஒருவரைப் பணித் தலைவர் குற்றம் கூறிக் கடிகின்றார். அவர் வீட்டுக்கு வந்த வுடன் மனைவியின்மீது சீறி விழுகின்றார். அவருடைய மனைவி

மகனைப் போட்டு அடிக்கின்றாள். அப் பையன் தன்னுடைய விளை யாட்டுப் பொம்மையைப் போட்டு உடைக்கின்றான். எனவே, மன முறிவினால் ஏற்படுகின்ற ஆக்கிரமிப்பு இவ்வாறு தொடர்ச்சி யான காட்சி மாற்றத்தை உண்டாக்கலாம்.

மன முறிவு, ஆக்கிரமிப்பு அல்லது தாக்கும் செயலாகவும் துலங்கலாம்; பின்வாங்கிக் கொள்ளும் செயலாகவும் துலங்க லாம். சம்பந்தப்பட்ட மனிதர் தமக்கு மனப் போராட்டத்தை யும் கவலையையும் தருகின்ற சூழ்நிலைகளிலிருந்து உடல் சார்ந்த முறையிலும் உள்ளம் சார்ந்த முறையிலும் விலகிக் கொண்டு விட லாம். மற்றொரு மனிதர் தம்முடைய மன முறிவுக்குக் காரண மானவராக இருந்தால், அவரைச் சந்திக்கவும் மறுத்துவிடலாம். ஆனால், மனமுறிவுக்கு ஆளானவர் காரணமானவரிடமிருந்து விலகிச் செல்லாமலிருக்க வற்புறுத்தப்படுவாரானால், அவருடன் தொடர்பு கொள்ளவும் அவர் கூறுவதைக் கேட்கவும் மறுத்துவிட லாம். இவ்வாறு பின்வாங்கிக் கொள்ளும் நடத்தையின் விளைவு களின்மீது வருங்காலத்தில் மற்றவர்களுடன் கொள்ளுகின்ற பரிமாற்றத் தொடர்புறவுகள் எவ்வாறு இருக்க முடியும் என்று நியூகோம் (Newcomb) என்ற அமெரிக்க உளவியலார் ஆராய்ச்சிகள் நடத்தியிருக்கின்றார். மனிதர்களிடையே நடைபெறும் பரிமாற்றத் தொடர்புறவில் பகைமை உணர்ச்சிகள் இருக்கின்றன என்றும், அவை குறைந்து மாற்றம் பெறுவதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுகின்றன என்றும் நியூகோம் கூறுகின்றார். செய்தித் தொடர்பு ஏற்படுமானால் பகைமை உணர்ச்சிகள் குறைந்து வருகின்றன. எனவே, செய்தித் தொடர்புகளைத் தடுப்பதன்மூலம் பகைமை உணர்ச்சிகள் நிலைநிறுத்தப்படு கின்றன. இவ்வாறாக பகைமையுணர்ச்சி செய்தித் தொடர்பைக் குறைப்பதன்மூலம் தன்னைப் பாதுகாத்துக்கொள்ளுகின்றது.

மன முறிவுக்கு மற்றொரு குறிப்பிடத்தக்க எதிர்வினை என்ன வென்றால், புறத்தெழும் அகக்காட்சியாகும் (projection). இது ஒரு வகையான மனச்செயல் முறையாகும். இதில் கவலையை உண்டாக்குகின்ற உணர்ச்சிகளும், சிறப்புக் கூறுகளும் மற்ற வர்கள்மீது ஏற்றப்படுகின்றன. தன்னுடைய உணர்ச்சிகளை மற்றவர்கள்மீது ஏற்றிக் காட்டுவதுதான் இதில் உள்ள முக்கிய செயல்முறையாகும். இந்த இயந்திரச் செயல்முறை பெரும் பான்மை–சிறுபான்மை குழுக்களிடையேயுள்ள தொடர்புறவு களில் முக்கிய பங்கு கொண்டு செயல்படுகின்றது. பெரும்பான் மைக் குழுவினர் தம்முடைய சொந்த விருப்பற்ற இயல்புகளின் புறத்தெழும் அகக்காட்சிக்குச் சிறுபான்மைக் குழுவினரை ஏற்றுக்

கொள்ளப்பட்ட இலக்காகக் கருதுகின்றனர். யூதர்களிடம் ஹிட்லர் கொண்டிருந்த மனப்போக்கு எவ்வாறு வளர்ச்சியுற்றது என்பதை ஆல்போர்ட் (Allport, G. W.) என்ற அமெரிக்க உளவியலார் சான்றுகள் காட்டி விளக்குகின்றார். ஹிட்லரின் தனி வாழ்க்கை மிகவும் துயரம் நிறைந்ததாக இருந்திருக்கின்றது. அவருடைய பால் வாழ்க்கையில் தகாப்புணர்ச்சிகள் பல நடைபெற்றிருக்கின்றன. அதனுல் அதை அவர் தம்முடைய நூலான மைன் கேம்பில் (Mein Kampb) கடுமையாகத் தாக்கியுள்ளார். தகாப்புணர்ச்சியின் காரணமாகக் குற்ற மனப்பாங்கு அவரிடம் வளர்ந்து வந்தது. தன்னிடமிருந்த தகாப்புணர்ச்சிச் செயலையும் குற்ற மனப்பாங்கையும் ஜெர்மனியில் சிறுபான்மையினர் என்று கருதப்பட்டு வந்த யூதர்களின்மீது ஏற்றிக் காட்டினர்; தம்முடைய கட்சியின் கொள்கைப் பரப்பலையும் அத் திக்கிலேயே முடுக்கி விட்டார்; இதன்மூலம் தம்முடைய பாலூக்கிச் சம்பந்தமான குற்ற மனப்பாங்கிற்கு இடம் கொடுத்து வந்த கவலையைத் தவிர்த்துக்கொண்டார்.

மன முறிவையும் மனப் போராட்டத்தையும் குறைப்பதற்கான மற்ெருரு முறை அறிவார்ந்த விளக்கமாகும். அறிவார்ந்த விளக்கம் ஒரு மனப்போராட்டச் சூழ்நிலையின் பண்புக்கூறுகளைக் காணக்கூடிய வகையில் மறு சீரமைத்தல் உள்ளடங்கியிருக்கச் செய்கின்றது. இது மனமுறிவின் அளவு குறையக்கூடிய வகையில் நடைபெறுகின்றது. மனப்போராட்டச் சூழ்நிலையின் செறிவு போட்டியிடுகின்ற பல துலங்கல்களின் ஒரு செயல்முறையாக இருக்கின்றது; துலங்கல்களுக்கிடையேயுள்ள முரண்பாடுகளின் படித்தரமாகவுமிருக்கின்றது; தண்டனையைத் தவிர்க்கவும் பரிசைப் பெறுவதற்குமான ஆர்வத்தின் முழு வலிமையாகவுமிருக்கின்றது.

இந்தப் பண்புக்கூறுகளில் ஏதேனும் ஒன்றை மாற்றுவதன் மூலம் மனப்போராட்டத்தைக் குறைத்து, மன முறிவைக் குறைக்க முடியும். அறிவார்ந்த விளக்கம், மன முறிவின் பண்புக்கூறுகளை மாற்றுவதற்கான காரணங்களை உருவாக்குவதை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. 'நான் அந்தக் குழுவில் சேர விரும்பவில்லை. ஏனென்றால், அவர்கள் தகாத வழியில் நடக்கின்றார்கள். நாங்கள் மிக நன்ருகத்தான் போட்டியில் விளையாடினோம். நடுவர் தவருகத் தீர்ப்புக் கூறிவிட்டார். அதனுல் தோற்றுப்போய்விட்டோம்.' இந்த விவர வாசகங்கள் அறிவார்ந்த விளக்கத்தைக் காட்டுகின்றன. ஊக்கிகள் முரண்படும்பொழுது ஏற்படுகின்ற மனமுறிவைக் குறைக்கும்பொருட்டு மனித இனம் துலங்குகின்ற வழிகள் இவை.

4. சமூகப் புலன் காட்சி

சிக்கல் நிறைந்த உளச் சார்பான நடவடிக்கைகளும், உளவியல் நடவடிக்கைகளும் மரபுரிமையாகப் பெறப்படுவதில்லை. அவை கற்றுப் பெறப்படுகின்றன. மொழியை உபயோகிப்பதைப் பொறுத்தே அவை அமைகின்றன. மனிதன்தான் மிகவும் சிக்கலான மனச் செயல்முறைகளைப் பெற்றவனாக இருக்கின்றான். மிருகங்களிடமிருந்து தன்னைப் பிரித்துக் காட்டுவதற்கு இவற்றைத் தான் பயன்படுத்துகின்றான். இந்தச் சிக்கலான செயல்முறைகள் மொழியை அவன் உபயோகிப்பதிலும், மொழியின் வடிவங்களிலும் வெளிப்படுகின்றன. மொழியை உபயோகிக்கின்ற மனிதக் குழுக்கள் தங்கள் மனம் போனபடி மொழியைப் படைப்பதில்லை. உண்மை உலகத்தோடு எதிர்த்து நின்று சமாளிப்பதற்கு மனிதர்களிடம் உருவான கூட்டுறவு முயற்சியாக வெளிப்படுவது மொழியேயாகும்.

தங்களுடைய புலனுறுப்புகளால் பொறுக்கி எடுத்த தூண்டல்களுக்கு உயிரினங்கள் துலங்குகின்ற வழிகளைக் குறிப்பது தான் புலன் காட்சி என்பதாகும். பொருள்களைப் புகைப்படமாக எடுப்பது, ஒலியைப் பதிவு செய்வது போன்றவற்றிலுள்ள இயந்திரச் செயல்முறைகளைப் போன்றதுதான் இதுவும் என்று நம்பப்பட்டது; இயந்திரச் செயல்முறைகளைப் போன்றதுதான் என்றாலும் முற்றிலும் அத்துடன் இணைத்துக் காட்ட முடியாது. ஏனென்றால் புலன் காட்சியானது கவர்ச்சிகள், தேவைகள், கடந்த கால அனுபவம் ஆகியவற்றின் செல்வாக்கைப் பெரிதும் பெற்றிருக்கின்றது.

சூழ்நிலையின் குறிப்புகளுக்குத் துவங்குவதுதான் உயிரினங்களுக்கு உண்மையான வழிகாட்டும் பயிற்சியாக அமைகின்றது. புலனுறுப்புகளும் புகுவாய் நரம்புகளும் வழங்கிய விவரங்கள், பொருள்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றின் தரம், அசைவு, அளவு,

இடம், இயல்பு முதலியவற்றின் அறிகுறிகள் என்று விளக்கம் செய்யப்படுகின்றன. ஆனால், உள் விளக்கத்தின் இயல்பும் படித்தரமும் உயிரினங்களிடத்தும் தனியாள்களிடத்தும் வேறுபடுகின்றது. இந்தப் பண்பு மனிதர்களிடம் உச்ச நிலையடைகின்றது. ஏனென்றால், அறிகுறிகள் மிகவும் மனிதர்களால் விரிவாக்கப்படுகின்றன. மேலும், அனுபவங்கள் குறியிடு வடிவத்தைப் பெறுகின்றன. உண்மையில் ஒரு மனிதன் தான் என்ன காண்கின்றான் என்பதை அவன் கூறுவதும், என்ன கேட்கின்றான் என்பதை அவன் கூறுவதும் உய்த்துணர்வதாகவும், விளக்கிக் கூறுவதாகவும், தீர்மானிக்கப்படுவதாகவும் இருக்கின்றது. அது நேரடிப் புலன் காட்சியையும் பருப் பொருள் சார்ந்த தூண்டலையும் பாகுபடுத்திக் காட்டுவதில்லை.

சில எளிய புலன் காட்சிகள் அவை காணப்படுவதைப் போன்று அவ்வளவு சிக்கல் நிறைந்தவையாக இல்லை என்பதை எளிதாக ஊகிக்கலாம். பிறவிக் குருடர்களாக இருந்தவர்கள் அறுவைச் சிகிச்சைமூலம் பார்வை பெறப்பட்டிருக்கின்றார்கள். அவர்களின் மீது நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் குறிப்பிடுவது என்னவென்றால், நிறம், எளிய நிலக் கணக்கியல் உருவங்கள் முதலியவற்றைப் பார்த்து வேறுபாடறிவதற்கு அவர்கள் குறிப்பிடத்தக்க அளவு பயிற்சி பெற வேண்டும் என்பதாகும். பார்வை வரப்பெற்ற பிறவிக் குருடர் ஒருவர் பதின்மூன்றுநாள்கள் பயிற்சியளிக்கப்பட்ட பிறகும் வேறுபட்ட வடிவங்களைக் கொண்ட உருவங்களின் தன்மைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் செண்டன் (Senden) என்பவர் கூறுகின்றார்.

சிம்பான்சிகளிடம் பரிசோதனை நடத்திய ரைசன் (Ricsen) என்பவரும் இப்படிப்பட்ட முடிவுகளை வெளியிடுகின்றார். அவர் நடத்திய பரிசோதனையில் காணப்பட்ட சிம்பான்சிகள் இருட்டறையில் வைக்கப்பட்டிருந்தன. எலிகளிடம் பரிசோதனைகள் நடத்திய ஹெப் (Hebb) என்பவரும் அதே போன்ற முடிவுகளை வெளியிடுகின்றார். இந்தப் பரிசோதனைகளின் விவரங்கள் எல்லாம் புலப்படுத்துகின்ற கருத்து என்னவென்றால், புலன்காட்சி பெறுவதற்காக நடைபெறுகின்ற கற்றலில் பருப்பொருள் சார்ந்த தூண்டல்களின் விளக்கம் உள்ளடங்கியிருக்கின்றது என்பதாகும். தூண்டல்களில் பொருள்கள் உள்ளார்ந்து காணப்படவில்லை; அனுபவத்திலிருந்துதான் பொருள்கள் அறியப்பட வேண்டும்.

பருப்பொருள் சார்ந்த நிகழ்ச்சிகள்தான் தூண்டல்கள் என்று கருதப்படுகின்றன. அவை சூழ்நிலையால் நமக்கு அளிக்கப்படு

கின்றன. அவற்றிற்குப் பெயர் கொடுப்பதன்மூலமோ, அவற்றை வகுப்பதன்மூலமோ அவை மாறி விடுவதில்லை; தூண்டல்கள் துவக்கம் பெறும்பொழுது அவை வழிகாட்டும் குறிப்புகளா கின்றன. ஒரு தனியாள் தம்முடைய நடவடிக்கைகளுக்கும் தனி நலன்களுக்கும் ஏற்றவையாக இருக்கின்ற தூண்டல்களைத் தேர்ந் தெடுத்துக்கொண்டு மற்றவற்றைப் புறக்கணித்து விடுகின்றார். ஒரு குழந்தை தூண்டலின் பருப்பொருள் சார்ந்த மொத்தப் பண்புக்கூறுகளின்மீதுதான் தன்னுடைய கவனத்தைச் செலுத்து கின்றான். அவனுடைய புலன் காட்சி மாறுபாடு கண்டறிய முடியாதது. புலன் காட்சி செயலற்ற ஒரு தனி நடவடிக்கை என்று சில சமயங்களில் தவறாகக் கருதப்படுகின்றது. ஓர் உரியினம் தன் னுடைய புலனுறுப்புகளை வெளிச் சூழ்நிலைகளின்மீது செலுத்தி, அவற்றினுடைய மதிப்புகளை ஏற்கின்றது போலக் காணப்படுவ தால்,அவ்வாறு கருத வழியுண்டாகின்றது. புலன் காட்சி பெறுதல் நடவடிக்கையின் ஒரு பெரும் அமைப்பின் பகுதியாக இருக்கின் றது என்று ஜான் டியூவி (John Dewey) என்பவர் கருதுகின்றார்.

புலன் காட்சி உலகமாகக் காணப்படுவது உறுதிதான். சிறிது நேரத்திற்கு முன்பு பெற்ற புலன் காட்சிப்படி அது சரி என்று தெரிகின்றது; ஆனால் வேறொரு கருத்துப் புலன் காட்சியில் உள்ளடங்கியிருப்பதாகத் தெரிகின்றது. உடனடியாகத் தோன்று கின்ற பொருள்களை உணர்ந்தறிதல்தான் புலன் காட்சி என்று உளவியல் புலன் காட்சியைப்பற்றி வரையறை செய்கின்றது. எனவே, புலன் காட்சிச் செயல்முறையில் கடந்த காலமும் நிகழ் காலமும் உள்ளடங்கியிருக்கின்றபொழுது புலன் காட்சியில் முக்கிய கால வழி காட்டும் பயிற்சியானது எதிர்காலத்தை நோக்கியதாக இருக்கின்றது. எனவே, புலன் காட்சியின் அடிப்படைச் செயல்முறை எதிர்காலத்தை முன்கூட்டிக் கணித்த லாகும். உண்மை நிகழ்ச்சிகளின்படிப் புலன் காட்சி என்பது தேர்ந்தெடுத்தலாக இருக்கின்றது. ஊக்கமூட்டியும் தேவைகளும் குறிப்பிட்ட தூண்டல்களிடம் ஒருவரைக் கூருணர்ச்சி கொள்ளச் செய்கின்றன. சில சமயங்களில் உருத் திரிந்த புலன் காட்சிக்கும் ஒருவர் நடத்திச் செல்லப்படலாம். அவ் வகையான தூண்டல்கள் அடிக்கடி தவறாக விளக்கம் செய்யப்படுகின்றன. அதனால் ஒரே சூழ்நிலையின் புலன் காட்சிகள் ஒவ்வொரு தனியாளுக்கும் வேறு வேறாக இருக்கின்றன. ஆனால், இந்த நிகழ்ச்சிச் செய்திகள் புலன் காட்சி உண்மைக்கு எல்லை வகுக்கின்றன என்று கருதி மேலும் பெறவிருக்கின்ற உண்மைச் செய்திகளைப் புறக்கணித்துவிடக் கூடாது. மக்களில் சிலர் கண்முன் இல்லாத பொருள்களைக் காண் கின்றனர்; இல்லாத குரல் ஒலிகளைக் கேட்கின்றனர். அவர்கள்

உண்மையில்லாத பொருள்களுடன் தொடர்பு கொண்டிருக்கின்றார்கள். எனவே, அவர்கள் பொய்த் தோற்றங்களைக் காணுகின்றார்கள். புலன் காட்சி தன்னிச்சையானதன்று; சூழ்நிலையில் உண்மையில் என்ன இருக்கின்றதோ அந்த எல்லைக்குள்பட்டதாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் எது ஏற்றதோ அதையே ஒவ்வொருவரும் கண்டு கொண்டிருப்பார்களானால், ஒருவரும் உண்மை உலகத்தில் வாழ முடியாது. புலன் காட்சி பெறுவதற்கான கற்றல் சூழ்நிலை சார்ந்த உண்மையைப் பொறுத்த அளவில் நடத்தையை எளிதில் வேறுபாடு கண்டறியத் தக்கதாகச் செய்கின்றது. அது நடத்தையை உண்மையினின்றும் விடுவித்து விடுவதில்லை. புலன் காட்சிச் செயல்முறைகளில் சிக்கல்கள் அதிகமிருக்குமானால், பிழைபாடுகளும் உருத்திரிபுகளும் அதிகரிக்கும் வாய்ப்புகள் ஏற்படலாம். குழந்தைகள் அல்லது மிருகங்களின் புலன் காட்சிகள் எல்லைக்குள்பட்டவையாக இருக்கின்றன. வயது வந்தவர்களுடைய புலன் காட்சிகளில் ஏற்படுவதைவிடக் குறைவான குறைபாடுகளே அவர்களுடைய புலன் காட்சிகளில் ஏற்படுகின்றன.

புலன் காட்சியின் தேர்ந்தெடுப்பு குறிப்பாகச் சமூகச் செயல் எதிர்ச் செயலாகக் குறிக்கப்படுகின்றது. இதில் தனி மனிதனுடைய சுயமரியாதை தியாகம் செய்யப்படுகின்றது. தங்களுடைய தன்முனைப்புப் பழுதுபடும்படியாக நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளையும் சம்பந்தப்பட்ட பொருள்களையும் புறக்கணிப்பதும் சரியாகப் பார்க்கத் தவறுவதும் மனிதர்களின் மனப்போக்காக இருக்கின்றது என்று உள மருத்துவர்களும் உள நோய் நிவர்த்தி உளவியலாரும் நெடுநாள்களுக்கு முன்பே கண்டறிந்து கூறியிருக்கின்றனர். சல்லிவன் (Sullivan, H. S.) என்ற உள மருத்துவர் ‘தேர்ந்தெடுக்கும் கவனமின்மை’ (Selective in Attention) என்ற சொல்லை உருவாக்கினார். இந்தச் செயல்முறையில் நாம் பார்க்கின்ற, கேட்கின்ற, நினைக்கின்ற, செய்கின்ற, சொல்லுகின்ற பொருள்களிலிருந்து வெளிப்படுகின்ற நல்ல பலவற்றை அறிந்துகொள்ளத் தவறி விடுகின்றோம். நாம் மற்றவர்களோடு கொண்டுள்ள செயல் எதிர்ச்செயல் எல்லையில் ஏதோ ஒரு பொருள் இருக்கின்றது என்பதன்று. உய்த்துணரும் பாகுபாட்டுச் செயல்முறை தன்முனைப்பு ஒழுங்கமைப்பால் எதிர்க்கப்படுகின்றது என்பதால் அவ்வாறு நடைபெறுகின்றது. புலன் காட்சி செய்பவருடைய தேவைகளினாலும் ஊக்கிகளினாலும் புலன் காட்சிகள் எவ்வாறு உருமாற்றம் பெறுகின்றன என்று அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகளைக் கொண்டு சில உளவியலார் விளக்கிக் காட்டியிருக்கின்றனர்.

புலன் காட்சியின் சமூக வடிவமைப்பு

சமூகச் செல்வாக்குகளால் புலன் காட்சி குறிப்பிடத் தக்க வழியில் பாதிக்கப்படுகின்றது என்பதை உளவியலார்களும், சமூக அறிவியலார்களும் கண்டறிந்திருக்கின்றார்கள். சாதாரணமாக, அனைவருமே இந்த நிகழ்ச்சியைக்கண்டிருக்கலாம். தொட்டு புலன் காட்சிமூலம் யானையை அறிந்த நான்கு குருடர்கள் நான்கு விதமான விளக்கங்கள் அளித்தார்கள். யானை தூணைப் போன்றது, பானையைப் போன்றது, துடைப்பத்தைப் போன்றது, மரத்தைப் போன்றது என்று ஒவ்வொருவரும் யானையின் ஓர் உறுப்பைத் தொட்டுப்பார்த்துக் கூறினர். நால்வரும் கண்டறிந்து கூறியது யானைதான். ஆனால், முழு யானையும் அந்த ஓர் உறுப்பிலேயே அடங்கிவிடவில்லை. புலன் காட்சியின் எல்லா நடவடிக்கையும் விளக்கத்தை உண்டாக்கியதாக இருக்கின்றது. ஒரு நிலப்பிரபு ஒரு குதிரையை நோக்குகின்ற முறையிலேயே ஓர் ஓவியனோ ஒரு சிறப்ப வேலைக்காரனோ நோக்குவதில்லை. ஒவ்வொருவரும் சில விவரங்களை நுட்பமாகக் கவனிக்கின்றனர். ஓர் இயற்கைக் காட்சியை ஓர் ஓவியன் காண்கின்றபொழுது சாதாரணமானவர்களுடைய பார்வைக்குத் தப்பிவிடுகின்ற நிறம், ஒளி, இடம் முதலிய இயற்கைக் காட்சியோடு தொடர்புடைய விவரங்களைப் புலன் காட்சியில் காணுகின்றான். புலன் காட்சியில் வலியுறுத்தப்பட்டதும், தேர்ந்தெடுத்ததும் புலன் காட்சியாளரின் நோக்குடன் இணைக்கப்படுகின்றன; தேவைகள், கவர்ச்சிகள், மதிப்பீடு ஆகியவற்றுடனும் இணைக்கப்படுகின்றன. புலன் காட்சியானது புலன் காட்சியாளரின் தொடர்பு கவர்ச்சிகள், அனுபவம் ஆகியவற்றை முக்கியமாகச் சார்ந்திருக்கின்றது. இந்தப் பண்புகள் மேலும் புலன் காட்சியாளரின் வாழ்க்கைத் தொழில், வயது முதலிய சமூக அடிப்படைகளுடன் தொடர்பு கொண்டிருக்கின்றன.

புலன் காட்சி வேறுபாடுகளின் மாறுமியல்பு: புலன் காட்சி வேறுபாடுகள் எல்லாக் குழுவிலும் மாறுமியல்புகளைக் கொண்டிருக்கின்றன. ஒரு குழுவின் புலன் காட்சி மற்றொரு குழுவில் பெறப்படுவதில்லை. குழுவுக்குக் குழு மாறுபாடடைகின்றது. உதாரணமாக, நடுத்தரச் சமூகப் பொருளாதார நிலையிலுள்ள மக்களிடையே வகுப்புப் புலன் காட்சி வேறுபாடுகளிருக்கலாம். அவர்களில் கணவனைவிட மனைவியிடம் வேறுபாடுகள் ஆழமாகவும், விரிவாகவும், சரிநுட்பமாகவுமிருக்கின்றன. நம் நாட்டிலுள்ள சாதி வேறுபாடுகளைப்பற்றிச் சற்று விரிவாக நாம் நோக்கும் பொழுது பெண்களிடம் அவை மிகவும் கடுமையாகவும் குறைப்

பதற்கு இடம் தராத வகையிலும் இருக்கக் காணலாம். சாதித் தப்பெண்ணம் (caste perjudice) வளருவதற்கும், கடுமையடைவதற்கும், விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கும் இன்றைய நம் சமூகத்தில் பெண்களே அடிப்படைக் காரணமானவர்களாக இருக்கின்றார்கள். அமெரிக்காவில் நிறத் தப்பெண்ணம் (colour perjudice) பெண்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளினால் தான் கடுமையடைகின்றது.

தனி நலன் வேறுபாடுகளும், அவற்றைப் பற்றிய கருத்துகளுங் கூட இன, சாதி வேறுபாடுகளுக்குக் காரணங்களாக அமைகின்றன. அமெரிக்காவில் குறிப்பாகத் தென் மாநிலங்களில் பெண்கள் இன உள்ளார்வ நிலையுடையவர்களாக இருக்கின்றார்கள்; அதனால் யார் உடலில் வெள்ளை இரத்தம் ஓடுகின்றது, யார் உடலில் கருப்பு இரத்தம் ஓடுகின்றது என்று எளிதில் கூறிவிடுகின்றார்கள். நம் நாட்டிலும் ஒரு சாதியைச் சேர்ந்த பெண்கள் மற்றொரு சாதியைச் சேர்ந்த பெண்களை, அவர்களிடம் சிறிதுகூடத் தோற்ற மாறுபாடு இல்லாமலிருந்தாலும், அவர்களுடைய சாதியைக் கண்டறிந்துவிடுகின்றார்கள். இவர்கள் சாதி உள்ளார்வ நிலை (caste complex) உடையவர்கள். ஆனால், அரேபியா போன்ற நாடுகளில் எல்லா நிறத்தவர்களும் காணப்படுகின்றார்கள். அங்கு இந்தஇனவேறுபாடுகளில்அவ்வளவாகப்பெண்கள்ஈடுபடுவதில்லை. இன வேறுபாடுகள் உலகத்தில் இருந்து வருகின்றன என்பதை அரேபியர்கள் அறிவார்கள். ஆனால், அவை அவர்களுக்குச் சமூக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருப்பதில்லை. அதனால் மற்றவர்கள் நோக்கிலிருந்து இன வேறுபாடுகளை அவர்கள் நோக்குவதில்லை. அதே போன்று நீகிரோக்களும் மனிதர்களை நிறத்தால் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. அவர்கள் மற்றவர்களுடைய மொழி, நடையுடை, பாவனை ஆகியவற்றை நோக்குகின்றனரே தவிர, வேறுபாட்டுணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில்லை.

புலன் காட்சி உய்த்துணர்வுகள் : கொடுக்கப்பட்ட ஒரு கருத்தில் முன்னமேயே கவனத்தைச் செலுத்தி விடுவோமானால் அல்லது நாம் நோக்கவிருக்கின்ற பொருளில் ஏற்கெனவே ஒரு முடிவை ஏற்படுத்திக் கொண்டிருப்போமானால், உண்மைப் புலன் காட்சி பெறுவதிலிருந்து நாம் தடுக்கப்பட்டு விடுகின்றோம்; ஒரு கருத்து அல்லது ஒரு பிரச்சினைக்குத் தொடர்பு கொள்ளும் உண்மைகளையும் காணத் தவறிவிடுகின்றோம். டார்வின் (Darwin) என்ற அறிவியல் வல்லுநர் இக்கருத்துப்பற்றிச் சுவையானநிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிடுகின்றார். தாம் இளைஞராக இருந்த காலத்தில் ஒரு நில உட்கூற்றியல் கோட்பாட்டை நிலைநிறுத்தும் சான்று

தேடி ஒரு நிலப்பரப்பில் நடந்து சென்றார்; சில ஆண்டுகளுக்குப் பிறகு முன்பு தேடிய அதே நிலப்பரப்பில் மறுபடியும் நடந்து சென்றார். எந்த வகையான கவனமுமின்றி நடந்து சென்ற அவருக்கு முதன்முறை சென்றபொழுது கிடைக்காத சில சான்றுகளும் கிடைத்தனவாம். முதன்முறையாக அந்த நிலப் பரப்பில் அவர் வேறு சில சான்றுகளைத் தேடிச் சென்றார். இரண்டாவது முறை அவர் அந்த நிலப்பரப்பில் சென்றபொழுது காணப்பட்ட பொருள்கள் எந்த வகையிலும் முதல் முறையில் காணப்பட்டதைவிட அதிகத் தெளிவுடன் காணப்படவில்லை. அறிவியல் ஆராய்ச்சிகளில் இவ்வகையான அனுபவங்கள் அடிக்கடி ஏற்படுகின்றன.

மற்றோர் அறிஞரான மார்க்கு டுவென் (Mark Twain) என்பவரும் தம்முடைய அனுபவத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்றார். அவர் ஒரு சமயம் அமெரிக்காவிலுள்ள மிஸிஸிபி ஆற்றில் படகு ஓட்டும் வேலையிலிருந்து வந்தார். அப்பொழுதெல்லாம் அவர் இயற்கையின் எழிலைக் கண்டதில்லையாம். ஆற்றின் ஆபத்தான மூலைகளையும், நீரோட்டத்தின் தன்மைகளையும், சாதகமான ஓட்டத்தையும், பாதகமான ஓட்டத்தையும், கரையின் தூரம் ஆகியவற்றைத்தான் அவர் அப்பொழுது அறிந்திருந்தாராம். ஆற்றங்கரைகளின் அழகுகளையெல்லாம் அவர் கண்டு இரசிக்க வில்லையாம்.

இதே கருத்துப் பற்றிய ஆராய்ச்சிகளும் நடைபெற்றிருக் கின்றன. ஜெர்மன் உளவியலாரான ஜில்லிக் (Zillig) என்பவர் கட்டழகுக் கலைப்பயிற்சிப் பாடங்களைக் கொண்டு ஓர் ஆராய்ச்சி நடத்தினார். இந்த ஆராய்ச்சிப் பரிசோதனையில் விருப்பமுள்ள மாணவர்களும் விருப்பமில்லாத மாணவர்களும் கலந்துகொண் டார்கள். விருப்பமுள்ள மாணவர்கள் கட்டழகுக் கலைப் பயிற்சிப் பாடத்தில் தவறுகள் செய்யும்படிக் கூறப்பட்டார்கள். விருப்ப மில்லாத மாணவர்கள் தவறுகள் ஏதும் செய்யாவண்ணம் பயிற்சி யளிக்கப்பட்டார்கள். இப் பரிசோதனை ஓர் அவையோர்முன் நடை பெற்றது. சோதனையின் இறுதியில் எந்தக் குழுவின்மீது பயிற்சிப் பாடம் சரியாக நடத்தப்பட்டது என்று அவையோர் கேட்கப் பட்டனர். விருப்பமுள்ள மாணவர் குழுவின் பக்கந்தான் அவையோரின் தீர்ப்பு இருந்தது. உரையாடலின்மூலம் மாணவர் களைச் சோதித்துப் பார்த்ததில், உண்மையாக அவையோர்என்ன வேறுபாடுகளைக் கண்டார்களோ அவைதான் வாக்கெடுப்பில் பிரதிபலித்தன.

காட்சி சாராத புலன் காட்சிகள் : செவியால் கேட்டல் போன்ற புலன் காட்சி வடிவங்களும் சமூகக் கூறுகளால் செல்வாக்குப் பெறுகின்றன. மாறுபாடுள்ள சமூகச் சூழ்நிலைகளையுடைய தனி மனிதர்களிடையிலும், குழுக்களிடையிலும் இசையைச் சுவைப் பதில் மாறுபாடுகளிருக்கின்றன. இசையிலுள்ள மிக நுண்மை யான தொனியின் வேறுபாடுகளைச் சில பண்பாட்டினர் உணர்ந் தறிவதில்லை. ஒரு பண்பாட்டிலும் சில தனியாள்கள் தொனியின் வேறுபாடுகளை உணர்ந்தறிவதில்லை. இது வரவேற்கக்கூடிய தன்று என்றாலும், இஃது உள்ளார்ந்த திறமையின்மை என்று கூற முடியாது. ஒருவர் காட்டுகின்ற தனி நலன்களும், ஊக்கமும், பயிற்சியும் நுண்மையான தொனியின் வேறுபாடுகளைக் கண்டறிய உதவி புரியலாம். இசைத்துறையில் முன்னேறியுள்ள பண்பாடுகள் செவிப் புலன் காட்சியைச் செம்மையாகப் பயன் படுத்தியுள்ளனர் என்று தெரிகின்றது.

இத் துறையில் நாம் அதிகத்தூரம் செல்ல வேண்டியதில்லை. இசைத்துறையில் சிறந்த புலவர்களின் இசை நிகழ்ச்சிகளுங்கூடக் கடுமையான குற்றங்களுக்கு இலக்காகியிருக்கின்றன. ஒரு சந்ததி யினரால் புறக்கணிக்கப்பட்ட இசை அடுத்து வந்த சந்ததியின ரால் பாராட்டப்பட்டிருக்கின்றது. இசைத்துறையில் உபயோகப் பட்டு வரும் பல்வேறு இராகம், தாளம் முதலியவை செவிப் புலன் காட்சியின் நுண்மையையே வெளிப்படுத்துகின்றன. உணவுச் சுவையின் வேறுபாடுகளும் காட்சி சாராத புலன் காட்சிகள் என்றே கருதப்படுகின்றன. அவையும் சமூகத் தால் நிர்ணயிக்கப்படும் புலன் காட்சிகளேயாகும். ஒரு பண்பாட்டிலுள்ள மக்கள் விரும்பிப் புசிக்கின்ற உணவு வகைகள் மற்றொரு பண்பாட்டில் வெறுத்து ஒதுக்கப்படுகின்றன. மேலும், உணவு வகைகளைச் சமைக்கும் முறைகளிலும் உபயோகிக்கின்ற பொருள்கள் ஒன்றாக இருந்தாலும் அவற்றைக் கொண்டு சமைத்த உணவு வகைகள் வெவ்வேறு சுவைகளைத் தருகின்றன. சில குழு மக்கள் காரத்தை அதிகமாக விரும்பு கின்றார்கள். சிலர் புளிப்பை அதிகமாக விரும்புகின்றனர். சிலர் இந்த இரண்டையுமே விரும்புவதில்லை. சில குழுக்களில் மிளகு, உப்பு, சர்க்கரை ஆகியவற்றைக்கொண்டே எல்லா வகையான உணவு வகைகளையும் சமைத்துக் கொள்ளுகின்றனர். எனவே, உணவுச் சுவையிலும் சமூகத்தின் செல்வாக்குப்பிரதிபலிக்கின்றது.

சிக்கலான சமூகப் புலன் காட்சிகள் : புலன் காட்சிகளில் பெயர் கூறல் உவமை, உய்த்துணர்தல் ஆகியவை உள்ளடங்கியிருக்கு மானால், அத்தகைய புலன் காட்சிகள் சிக்கலானவை என்று

கருதப்படுகின்றன. ஏனென்றால், அவற்றில் மொழி மிகச் சிக்கலான முறையில் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது. மொழியின் சிக்கலான ஓர் உபயோகத்தை உதாரணத்தின்மூலம் கூறலாம். தேர்வு ஒன்றில் ஒரு மாணவன் ஏமாற்றுகின்றான் என்பதைக் குறிப்பிடுகின்ற ஓர் ஆசிரியர், 'ஏமாற்றுகின்றான்' என்ற சொல்லில் என்ன பொருளை உள்ளடக்கிக் கூறுகின்றார்? மாணவன் ஏமாற்றுவதை ஆசிரியர் காண முடிந்ததா? நேரடியான முறையில் அது முடியாது. ஆசிரியர் காண முடிந்தது என்னவென்றால், அம் மாணவன் பக்கத்து மாணவனுடைய விடைத்தாளைப் பார்க்க முயற்சிக்கலாம்; அல்லது குறிப்பு எழுதி வைத்துள்ள தாளை வெளியில் எடுத்துப் பார்ப்பதற்கு முயற்சி செய்யலாம். மாணவனுடைய நடவடிக்கைகள் தேர்வுச் சூழ்நிலையில் திருட்டுத்தனமாகவும் குற்றமுள்ளதாகவும் ஆசிரியருக்குக் காணப்படுவதால், அவர் அவன்மீது அத்தகைய கருத்துக் கொள்ளவேண்டி ஏற்படுகின்றது. அவர் அந்த நோக்கங்களைக் காண முடியவில்லை. அத்தகைய நோக்கம் அங்கு இல்லை என்றால், ஏமாற்று வேலை ஏதும் நடைபெறவில்லை.

மேலும், ஒவ்வொரு பண்பாட்டிலும் காணப்படுகின்ற சில நடத்தைகள் சிக்கலான சமூகப் புலன் காட்சிகளாக இருக்கின்றன. ஆஸ்திரேலியாவின் பண்டைய மக்களினத்தவரில் மர்சின் (Murngin) என்ற இனத்தவருடைய நடத்தைகள் மற்றப் பண்பாட்டினருக்கு விசித்திரமாகக் காணப்படுகின்றன.

இந்த இனத்தைச் சேர்ந்த மனிதர்கள் தங்களுடைய மாமியாருக்கு மரியாதை காட்டுவது புறக்கணிப்பது மூலமாகும். கடுமையான புறக்கணிப்புதான் மாமியாருக்கு மருமகன் காட்டும் மரியாதையாக அவர்களிடையே இருந்து வருகின்றது. மருமகன் சென்றுகொண்டிருக்கின்ற வழியில் மாமியார் வந்துகொண்டிருந்தால், இருவரும் தங்களுடைய பார்வையைத் தவிர்த்துவிட்டு அப்பால் விலகிக்கொள்ள வேண்டும். இதன்மூலம் ஒரு மனிதன் அப் பெண் வகிக்கின்ற நிலைக்கு மரியாதை காட்டுகின்றான் என்று பொருளாகும். வளர்ச்சியடைந்த பண்பாட்டைச் சேர்ந்த ஒரு மனிதன் இக் காட்சியைக் காணும்பொழுது குறைந்தது மூன்று சிக்கல் வழிகளில் பொருள் கொள்ளலாம்.

முதலில் ஏற்படுவது என்னவென்றால், ஒரு மனிதனும் ஒரு நடுத்தர வயதுப் பெண்ணும் ஒருவரை நோக்கி ஒருவர் நடந்து வருகின்றனர்; பிறகு அப்பால் விலகிக் கொள்ளுகின்றனர். ஒருவர் செல்லும் திசையை ஒருவர் நோக்குவதில்லை. இரண்

டாவது கட்டத்தில், அப் பார்வையாளர் ஊகிப்பது என்ன வென்றால், அவர்கள் ஒருவரோடு ஒருவர் கொண்டுள்ள தொடர் புறவு, மாமியாராகவும் மருமகனாகவும் இருக்க முடியும் என்றும், இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளுவதிலிருந்து விலகிக் கொள்ளுகின்றனர் என்றும் பொருள் கொள்ளுதலாகும். ஆனால், ஒருவரையொருவர் விலகிச் செல்லுவது எந்த வகையான உணர்வை வெளிப்படுத்துகின்றது என்பது அவருக்குத் தெரியாது. அந்த உணர்வு வெட்கமா, குற்ற மனப்பாங்கா, வெறுப்பா, பரஸ்பரத் தண்டனையா, பயமா, கோபமா என்று அந்தப் பார்வை யாளருக்குத் தெரியாது. மூன்றாவது கட்டத்தில் மிகச் சிக்கலான பொருள் வெளிப்படுகின்றது. மார்சின் குடும்பத் தொடர்புறவு களைப்பற்றிய முழு அறிவெல்லையும் உள்ளடங்கியிருக்கின்றது. புறக்கணிப்பது மரியாதைக்காக என்பதும் உள்ளடங்கியிருக் கின்றது. எனவே, இந்த நிகழ்ச்சியில் மாமியாரை மருமகன் மரியாதையாகப் புறக்கணிப்பதன்மூலம் மாமியாருக்கு மரியாதை காட்டுகின்றார் என்பது புலனாகின்றது.

ஒவ்வொரு பண்பாட்டிலும் இப்படிப்பட்ட நடத்தைகள் ஒவ்வொரு துறையிலும் இருக்கக் காணலாம். அவற்றின் பொருள்களை மற்றப் பண்பாட்டினர் உடனே புரிந்துகொள்ள முடியாது என்பது என்னமோ உண்மைதான். ஆனால், அவர்கள் அந்தந்தப் பண்பாட்டு முறைகளைப் பற்றியறிகின்றபொழுது நடத்தைகளின் குறிப்புகளையும் அவை வெளிப்படுத்தும் பொருள் களையும் புரிந்துகொள்ள முடியும். காட்சி சார்பு அளவில் புரிந்து கொள்ளக்கூடியவையல்ல என்பதால், அவை சிக்கல் புலன் காட்சி களாகின்றன.

குழந்தைகளின் புலன் காட்சிகளின் எல்லைகள் : புலன் காட்சி களைப்பற்றி நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் எல்லாம் கூறுவது என்னவென்றால், புலன் காட்சிகள் எல்லாம் கற்கப்பட்டவைதான் என்பதாகும். அவை ஒரு வகையான துலங்கல்களாகும். இதில் சொல்வடிவின் பண்புக்கூறுகள் முக்கிய பங்கேற்கின்றன. வயது வந்தவர்கள் உபயோகிக்கின்ற அறிகுறிகளைக் குழந்தைகள் இன்னும் செறிமானம் செய்துகொள்ள முடியாததால், வயது வந்தவர்கள் காணுகின்ற முறையில் குழந்தைகள் உலகத்தைக் காண முடிவதில்லை. இத் துறையில் லூரியா (Luria) என்பவர் செய்த ஆராய்ச்சிகள் இக் கருத்தை நிலைநாட்டுகின்றன. எட்டு வயதுக் குழந்தைகளிடம் அவர் பரிசோதனை நடத்தினார். நீண்ட சதுரமாக நான்கு கட்டைகள் அவர்கள் முன் வைக்கப்பட்டன. அவை இரட்டைப்படியா அல்லது ஒற்றையா என்று கேட்ட

பொழுது, அக் குழந்தைகள் இரட்டை என்று விடையளித்தார்கள்: முழுமை பெருத நீண்ட சதுரத்தில் ஐந்து கட்டைகள் அவர்கள் முன் வைத்து, அதே கேள்வி கேட்கப்பட்ட பொழுது ஒற்றை என்று கூறினர்கள். ஆனல், ஒன்பது கட்டைகள் உள்ள முழுமையான ஒரு நீண்ட சதுரத்தைக் குழந்தைகள் முன் வைத்தால், அவர்கள் அதை இரட்டை என்று கூறுகின்ருர்கள். ஆனல், அத்துடன் பத்தாவது கட்டையைச் சேர்த்து நீண்ட சதுரம் முழுமையுருது செய்யப்படும்பொழுது அது ஒற்றை என்று அவர்கள் கூறுகின்ருர்கள். இவ் வகையான புலன் காட்சிகளில் குழந்தைகளின் புலன் காட்சி வயது வந்தவர்களுடைய புலன் காட்சி போன்றில்லை. ஏனென்ருல், அவர்களுடைய மொழி வேறுபாடுகள் மாறுகின்றன; மேலும், போதிய அளவு வளரவில்லை. குழந்தைகள் ஒற்றை, இரட்டை என்ற வேறுபாடுகளை ஒழுங்கான வடிவம், ஒழுங்கற்ற வடிவம் என்ற வகையில் காணுகின்ருர்களே தவிர, எண்ணிக்கை வகையில் காணுவதில்லை.

பொருள்கள் வேறுபடும் தன்மைகளைக் கற்கக் கற்கத்தான் குழந்தைகள் புலன் காட்சிகள் செம்மையுறுகின்றன. மேலும், மொழியிலுள்ள வேறுபாடுகளைக் காட்டும் சொற்களைக் கற்கக் கற்கத்தான் அவற்றைப் பொருள்களோடு இணைத்துப் பார்த்து உண்மையறிகின்ருர்கள்.

ஆளுமை அமைப்பும் புலன் காட்சியின் மாறுமியல்புகளும்

ஆளுமையின் மையத்தையே புலன் காட்சி பாதிக்கச் செய்கின்றது என்று அண்மைக்கால ஆராய்ச்சிகள் கூறுவதால், பாதிக்கச் செய்கின்ற வழிகளை அறிவதில் உளவியலார் கவனம் செலுத்தி வருகின்றனர். மேலும், தனி மனிதனுடைய புலன் காட்சிச் செயல் முறைகளில் அவருடைய ஆளுமை அமைப்பின் விளைவைக் கண்டறியும்பொருட்டும் உளவியலார் ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர்.

ஒருவர் தம்முடைய புலன் அனுபவங்களை விளக்கும்பொழுது அச் செயல்முறை புலன் காட்சியாகின்றது. இதன்மூலமாகத்தான் அவர் தம்முடைய அடையாளத்தையும், தற்பெருமையையும் நிலைநாட்டுகின்ருர். ஒருவருடைய தன்முனைப்பை (self) அடிக்கடி பயமுறுத்துகின்ற நிகழ்ச்சிகளிலிருந்தும், எண்ணங்களிலிருந்தும் அவர் தம்முடைய தன்முனைப்பைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதுதான் தற்காப்பு வழியமைப்புச் செயல் முறையாக இருக்கின்றது.

இத் துறையில் ஏற்பட்டுள்ள ஒரு வளர்ச்சி ஆளுமை இயக்கப் பண்புக்கூற்றில் மையமாக அமைந்திருக்கின்றது. அதைப் புலன் காட்சிக்குரிய தற்காப்பு என்று கூறுகின்றனர். இந்தப் பிரச்சினையின் ஒரு கட்டம் என்னவென்றால், தனியாள் சம்பந்தப்பட்ட மட்டில் புலன் காட்சிக்குரிய தெளிவைப் பெறுவதற்குப் போராடுவதாக இருக்கின்றது. குறிப்பாக நரம்புவழி நோயினால் வருந்துவோர் அனைவரும் தம்முடைய பாதுகாப்பின்மை உணர்ச்சிகளை மிகவும் நிலையான அமைப்பில் ஒருமைப்பாடு ஏற்படுத்த வேண்டிய அவசியமுள்ளவர்களாக இருக்கின்றனர். மற்ற உளவியல் செயல் முறைகளைப் போலவே உடல் சமநிலையைப் பேணுதல் புலன் காட்சிச் செயல்முறைகளில் செயல்விளக்கம் செய்யப்படுகின்றது. தோற்ற அளவில் ஒருவருடைய புலன் காட்சிகளைத் தெளிவு படுத்துவதற்கான தேவையைக் கவலை செறிவுள்ளதாக்குகின்றது. தெளிவில்லாத சூழ்நிலையில் தனியாள் தன்னுடைய மன இறுக்கத்தை மூடி வைப்பதன்மூலம் தீர்த்துக் கொள்ளுகின்றார்.

தனியாளின் வேலையிலிருந்தும், தன்னைத்தானே குறை கூறிக் கொள்வதிலிருந்தும் பல புறத்தெறிதல்களும் காட்சி மாற்றங்களும் ஏற்படுகின்றன. அவனுடைய தன்முனைப்பு உயர்வு வெளிக்குழு அங்கத்தினர்களைத் தாழ்ந்தவர்களாகக் காணுவதன் மூலம் உறுதியாக்கப்படுகின்றது. புலன் காட்சிகளின் நெகிழ்வுத் திறன் அல்லது மன அமைப்பை மாற்றிக்கொள்ளும் திறமை பொருத்தக் கேடுற்றவர்களிடம் கட்டுப்பாட்டுக்குள் அடங்கியதாக இருக்கின்றது. ஆனால், இயல்பான மனிதர்களிடம் இந்தக் கட்டுப்பாடில்லை. ஒருவர் மற்றவர்களிடம் கொள்ளுகின்ற தொடர்புறவுகள் அவருடைய புலன் காட்சி உருவ அமைப்பைப் பெரிதும் சார்ந்திருக்கின்றது. உதாரணமாக, ஆல்போர்ட்—வெர்னன் (Allpork—Vernon) என்பவர்களுடைய மதிப்பீட்டுச் சோதனையின் முடிவுகளைக் குறிப்பிடலாம். சோதனையிலுள்ள படத் தொகுதிகளில் தங்களுடைய மதிப்பு முறைகளை ஒட்டியிருந்தவற்றைத்தான் சோதனையில் ஈடுபட்டவர்கள் விரும்பினார்கள். மற்றவற்றை அவர்கள் புறக்கணித்தார்கள்.

5. சமூகக் கற்றல்

மனிதர்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் மூன்று அடிப்படைச் செயல்முறைகளில் மாறுபடுகின்றார்கள். அவை ஊக்கமூட்டி, புலன் காட்சி, கற்றல் என்பவை. ஆனாலும், இவற்றில் மனிதர்களை வேறுபடுத்திக் காட்டுவதில் முக்கியமான மாறுமியல்பு என்று உளவியலார் கருதுவது கற்றலாகும். தனி மனிதர்களிடையே கற்றலில் உள்ள வேறுபாடுகள் நிச்சயமாகச் சிறப்பு வாய்ந்தவை தான் என்பதில் ஐயமில்லை. தனி மனிதர்களிடம் காணப்படும் வேறுபாடுகள் எந்த வகையிலும் மனிதர்களுக்கும் மற்ற உயிரினங் களுக்கும் உள்ள வேறுபாட்டைவிடக் குறைவானவையல்ல. பல்வேறுபட்ட பண்பாடுகளும், கிளைப் பண்பாடுகளும் தனி மனிதர்களிடம் காணப்படும் விரிவான வேறுபாடுகளை எடுத்துக் காட்டுகின்றன. நடத்தை வடிவங்கள், பண்புக்கூறுகள், குறிக் கோள்கள், மதிப்பீடுகள் முதலியவை ஒரே பண்பாட்டிலுள்ளவர் களிடையிலும் வேறுபடுகின்றன.

கற்றல் கோட்பாடுகளும் செயல்முறைகளும்

கற்றல் பிரச்சினையை உளவியல் முறைப்படி அணுகும் பொழுது இரண்டு பொதுக் கோட்பாட்டின் வகைகளை நாம் சந்திக்க வேண்டியிருக்கின்றது. ஒரு கோட்பாட்டின் கருத்துக்கு டாண்டைக், வாட்சன், ஸ்கின்னர், ஹல் ஆகியோர் பிரதிநிதி களாக இருக்கின்றனர். அவர்கள் இயந்திர நுட்பக் கருத்துச் சொற்களை வலியுறுத்துகின்றார்கள்; ஆக்கத் துலங்கல் போன்ற தனித்தனியாகப் பிரிந்துள்ள நடத்தை அலகுகளோடு இயந்திர நுட்பக் கருத்துகளைச் சேர்க்கின்றார்கள். இவ்விதமான அணுக் கூறான முறையில் முயற்சியும் பிழைபாடும், பயிற்சி, தவறான துலங்கல்களை அகற்றுதல் ஆகியவை கற்றலின் முக்கிய வழிகளாக இருக்கின்றன. அண்மைக் காலத்தில் வேறு சில கருத்துச் சொற்களும் இவற்றுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அடிப்படை

யிலிருந்து நாக்கும்பொழுது, இந்த நடத்தைக்கோட்பாட்டு முறை, பழைமையானதாக இருந்தாலும், புதுமையானதாக இருந்தாலும் ஒரு கருத்தில் ஒற்றுமைபடுத்தப்படுகின்றது. கற்றல் செயல்முறையானது ஓர் இயந்திர வகையான பழக்க அமைப்பு என்ற அடிப்படையிலேயே கருதப்படுகின்றது.

மற்றொரு கோட்பாட்டினர் கற்றல் என்பது ஒரு நோக்கம் கொண்ட இயக்கச் செயல்முறை என்ற கருத்தை நிலை நாட்டுகின்றனர். இந்தக் கோட்பாட்டுக் கிளையில் கோலர், டாஸ்மென், லெவின் ஆகியோர் காணப்படுகின்றனர். அவர்கள் பெரும்பாலும் உபயோகிக்கின்ற கருத்துச்சொற்கள், முழு நிலக்காட்சி ஒப்பீட்டு வடிவம், அறிகுறிகள், உள்ளார்ந்த குறிக்கோள் காட்டும் பயிற்சி, உள் காட்சி, புலன் காட்சி முதலியவையாகும். இக் கோட்பாட்டுக் கிளையினர் கற்றலைப்பற்றிக் கொண்டுள்ள அடிப்படையான கருத்து என்னவென்றால், புரிந்துகொள்ளுதல் அல்லது அறிதலின் ஒரு படிவமேயன்றி ஓர் இயந்திர நுட்பம் வாய்ந்த நடத்தை வரிசையமைப்பன்று என்பதாகும். மேலும், கற்றல் என்பது கூட்டுத் தொகுதியே தவிர, தனித்தனிக் கூறுகளாகவோ, அணுத் திறனாகவோ இல்லை என்றும் அவர்கள் கருதுகின்றார்கள்.

விருப்பு வெறுப்பற்ற ஒரு நிலையிலிருந்து இந்த இரண்டு கோட்பாட்டுக் கருத்துகளையும் காணுகின்ற ஒருவர் இந்த இரண்டாவது கருத்து சமூகக் கற்றலைப் புரிந்துகொள்ளுவதற்குப் பெரிதும் துணைபுரியும் என்று கருத முடியும். என்றாலும், முந்திய நடத்தைக் கோட்பாட்டினர் சமூக உளவியலாருக்கு வழங்கியுள்ள கருத்து என்ன என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

கற்றல் ஓர் ஆக்க நிலையிறுத்தல்: தொடக்க கால நடத்தைக் கோட்பாட்டில் கற்றல் ஆக்க நிலையிறுத்தல் கருதுகோளைச் சுற்றித்தான் வழி காட்டப்பட்டு வந்திருக்கின்றது. கடந்த ஐம்பது ஆண்டுகளாகவே இந்த நிலை இருந்து வருகின்றது என்றே சொல்லலாம். ஆக்க நிலையிறுத்த மறிவினை என்ற கருத்தைக் கேட்கும்பொழுது 1906ஆம் ஆண்டு தொடங்கிப் பெவ்லோவ் (1. Pavlov) நடத்தி வந்த ஆராய்ச்சி நமது நினைவுக்கு வருகின்றது. எனவே, அவர் காலம் தொடங்கி வழக்கில் இருந்து வருகின்ற சில ஆக்க நிலையிறுத்த கருதுகோள்களைப்பற்றிச் சிறிது நோக்குவோம்:

மாய்ந்து போதல் (extinction) என்ற கருதுகோள் ஆக்க நிலையிறுத்தலில் அடிக்கடி பேசப்படும் சொல். ஒரு துலங்கல்

மறைந்து போவதன் மனநிலையை இது காட்டுகின்றது. மூலத் துலங்கல் தோன்றுதபொழுது அதற்கான துலங்கலும் நின்று போகின்றது. பெவ்லோவ் ஆராய்ச்சிக்காக உபயோகித்த நாயின் வாயில் உமிழ்நீர் சுரப்பது நின்று விடுகின்றது. ஏனென்றால், மூலத்தூண்டலான மாமிசத்துண்டு தொடர்ந்து தோன்றவில்லை. பரிசோதனைச்சாலையில் உள்ள நாயின் நிலையில் ஒரு மனிதனை வைத்து, ஓர் அலுவலகச் சூழ்நிலையில் எஜமானரிடம் துலங்கும் ஒரு வேலைக்காரனை உதாரணமாக எடுத்துக் கொண்டு பார்ப்போமானால், எஜமானன் உத்தியோகத்திலிருக்கின்ற காலம் வரையில் அவர் குடும்பத்தினர் அனைவருக்கும் வேலைக்காரன் வணக்கம் சொல்லுகின்றான். ஆனால், அவர் ஒய்வு பெற்றுவிடுவாரானால், வேலைக்காரன் யாருக்கும் வணக்கம் சொல்லுவதில்லை. மூலத்தூண்டல் அந்தச் சூழ்நிலையிலிருந்து மறைந்து விட்டது. எனவே, துலங்கலும் நின்றுபோய்விட்டது.

வலிமை பெருக்கப்பட்ட நிலை (reinforcement) ஊதியத்தோடு தொடர்புடையதாகும். நாயின் வாயில் ஊறுகின்ற உமிழ்நீர், அதனுடைய பசியைத் தணிப்பதைப் பொறுத்திருக்கின்றது. ஆக்க நிலையிறுத்தக் கோட்பாட்டில் வலிமை பெருக்கப்பட்ட நிலை மையக் கருதுகோளாகக் கருதப்படுகின்றது. பழைய கோட்பாட்டிலுள்ள கருதுகோளான விளைவு விதிக்கு இணையாகவும் அல்லது அதற்குப் பதிலாகவும் இக் கருதுகோள் உபயோகிக்கப்படுகின்றது. குறிக்கப்பட்ட ஒரு நடத்தை உறுதிப்பாட்டை இது குறிப்பிடுகின்றது. ஒரு குழந்தை பெற்றோரின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுவதற்கு இணங்கலாம். பெரிய மனிதர்களிடம் எவ்வாறு பேசிப் பழக வேண்டுமென்பதைப் பெற்றோர் ஒரு குழந்தைக்குக் கற்றுத் தருவதைக் குழந்தை ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பானானால், அவனிடம் ஒரு வகையான நடத்தை வந்தமைகின்றது. இதைக் கண்ட பெற்றோர் மிகவும் மகிழ்ந்து அவனுக்கு ஆக்க முறையான ஊதியம் அளிக்கலாம். அஃது ஓர் இனிமையான புன்முறுவல், அன்பின் அறிகுறி, இனிப்பு முதலியவற்றில் ஏதேனும் ஒன்றாகவுமிருக்கலாம்.

இயற்கையாக மீட்டல் (spontaneous recovery) என்பது ஒரு மனப்போக்காகும். இழந்து போனதாகக் காணப்பட்ட நடத்தையைத் திடீரென்று மறுபடியும் பெறுகின்ற மனப்போக்கு, குழந்தை வளர்ந்து பெரியவனான காலத்தில் எல்லா வகையான வெற்றிகளையும் பெற்று விளங்குகின்றபோது அவன் சிறுவனாக இருந்த காலத்தில் காட்டிய சண்டித்தனத்தைத் திடீரென்று பெற்றோர் நினைத்துப் பார்த்து வியக்கலாம்; அல்லது வருந்தலாம்.

காலம் நீண்டு விட்டாலும் அந்தப் பழைய, மறந்து போன தாகக் காணப்பட்ட அவனுடைய நடத்தையை இயற்கையாகவே பெற்றோர் மீட்டுகின்றனர்.

பொதுப்பட அமைத்தல் (generalization) என்ற கருதுகோள் ஆக்க நிலையிறுத்தல் கோட்பாட்டில் ஒரு மைய அச்சுப் போன்ற தாகும். தொடக்க கால ஆக்க நிலையிறுத்தல் கருத்துச் சொல்லுக்கு இணையாக இஃது உபயோகிக்கப்படுகின்றது. பொதுப்பட அமைத்தல் என்ற கருதுகோளைப் பாவ்லோவ் முதலில் நாயின் வாயில் உமிழ்நீர் சுரக்க வைக்கின்ற சூழ்நிலைக்கூறு முழுவதையும் குறிப்பிடுவதற்கு உபயோகித்தார். இச் செயல்முறையை மனிதர்களிடமும் உபயோகித்துப் பார்க்கலாம். இரண்டு மூன்று சமூகச் சூழ்நிலைகளில் ஒரு வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்லது ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் நேர்மை தவறி நடப்பதைக் கண்டு, அந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்லது நாட்டைச் சேர்ந்தவர்கள் அனைவரும் நேர்மையற்றவர்கள் என்று பொதுப்பட அமைக்கின்றனர். இவ்விதமான தவறான சிந்தனை நாம் மற்றவர்களைப் பற்றி ஒருபடி வார்ப்பான தீர்ப்பு கொள்ளுவதன் அடிப்படையில் அமைகின்றது.

பிரித்தறிதல் (discrimination) என்பது ஆக்க நிலையிறுத்தல் கோட்பாட்டில் நிகழ்ச்சிகளின் பொருள் வேறுபாட்டைக் கண்டறிவதைக் குறிக்கின்றது. பாவ்லோவின் பரிசோதனைச் சாலையில் உள்ள நாய் ஒலிகளின் வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு துலங்குகின்றது. ஒருவகை ஒலி உணவைச் சுட்டுகின்றது என்பதையும், மற்றொரு வகை ஒலி உணவு இல்லை என்பதைச் சுட்டுகின்றது என்பதையும் நாய் பிரித்தறிகின்றது.

சோதனை நரம்புப் பிணி (experimental neurosis) என்பது பிரித்தறிதல் செயல்முறையில் ஏற்படும் கோளாறினால் உண்டாவதாகும். தூண்டல்களுக்கிடையில் உள்ள பொருளைப் பிரித்தறிவதில் குழப்பம் ஏற்படுமானால், பரிசோதனை மிருகம் பல பொருத்தக்கேடு அறிகுறி அனுபவங்களைப் பெறுகின்றது. பொருத்தமில்லாத தூண்டல்களை மிருகங்கள் சந்திக்கும்படிச் செய்தால், அவை நரம்புப் பிணிகளால் தாக்குறுகின்றன என்று பாவ்லோவ் கூறுகின்றார். இந்தப் பரிசோதனை முடிவிலிருந்து எழுந்த கோட்பாடுதான் நரம்புப் பிணி உறுதியாக முரண்பாட்டுச் சூழ்நிலையில் உண்டாகின்றது என்பதாகும். செயலுக்கான இரண்டு செல்வழிகளுக்கிடையில் எது சிறந்ததென்று முடிவு எடுக்க இயலாமையின் விளைவாகும். 'கல்லூரிப் படிப்பு முடிந்து

வுடன் வேலைக்குச் செல்லுவதா? திருமணம் செய்துகொள்ளுவதா? இரண்டு வேலைகளில் எந்த வேலையை ஏற்றுக்கொள்ளுவது? இரண்டு பெண்களில் எந்தப் பெண்ணை முடிவு செய்வது?' போன்ற மனப் போராட்டங்கள் முடிவு எடுக்க விடுவதில்லை. சோர்வடைந்து துன்புறும் நிலைக்கு இவை இட்டுச் செல்லுகின்றன. இவை நரம்புப் பிணி வகை முரண்பாடுகளாகும்.

கற்றலில் ஊக்கிகளின் பங்கு: மனிதர்கள் சம்பந்தமாகக் கற்றல் கோட்பாட்டை நாம் உருவாக்கும்பொழுது ஒரு சிக்கலான சமூகச் சூழ்நிலையில் புரியாத மாறுமியல்புகளோடு நாம் தொடர்பு கொள்ளுகின்றோம் என்பதை ஏற்றுக்கொள்ளுகின்றோம். இதில் மிக முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு. ஊக்க மூட்டி இல்லாமல் கற்றல் ஒருக்காலும் ஏற்பட முடியாது. அந்த ஊக்கிகள் தெளி உணர்நிலையாக இருந்தாலும், புதை உணர்நிலை யாக இருந்தாலும், இரண்டும் கலந்ததாக இருந்தாலும் கற்றலில் முக்கிய பங்கேற்கின்றன.

கற்றல் உளவியல் தொடங்கிய காலத்திலேயே கற்றலில் ஊக்கியின் பங்கு பற்றி விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. தாண்டைக்கின் (Thorndike) கோட்பாட்டில் அது விளைவு விதி என்றும், ஹல்லின் (Hull) கோட்பாட்டில் அது தேவை நிறைவு என்றும் சில முலநிலக் காட்சி ஒப்பீட்டு வடிவக் கோட்பாட்டில் குறிக்கோள் சாய்வலகுகள் என்றும், ஸ்கின்னரின் (Skinner) கோட்பாட்டில் அது வலிமை பெருக்கப்பட்ட நிலை என்றும் கூறப் படுவதைக் காணலாம். ஆனல், இந்தக் கருதுகோள்கள் எல்லாம் மனிதர்களின் மட்டத்தில் ஊக்கமூட்டியும் கற்றலும் பற்றிய பிரச்சினைகளுக்குச் சரியான விடை அளிக்கவில்லை. ஊக்கிகள் எந்தக் கற்றல் சூழ்நிலையிலும் இயக்கங்களாகவும் இணைப்புள்ளவை யாகவுமிருக்கின்றன.

குழந்தைகள் எவ்வாறு பேசக் கற்றுக்கொள்ளுகின்றார்கள் என்பதைப் பொருள் சார்ந்த ஊதியத்தின்மூலம் விளக்கிக் கூற லாம். மொழியைக் கற்றுப் பெறுகின்ற முயற்சிகளின் விளைவாக உணவின் வகைகளை விருப்பம் போலப் பெறலாம். அல்லது குழந்தையின் முயற்சி, தன்னைச் சுற்றியுள்ள உலகத்தோடு கொள்ளும் எளிய விருப்பமாகவும் இருக்கலாம். தொடக்க கட்டத்தில் முயன்ற பேச்சு பெரும்பாலும் பின்பற்றலாக இருக் கின்றது. குறிப்பிட்ட ஊக்கமூட்டி ஏதும் காணப்படுவதில்லை. ஊக்கி எவ்வாறு கற்றலில் விளைவை உண்டாக்குகின்றது என்பதை ஓர் உதாரணத்தில் காணலாம். அறிவெல்லையைப் பெறுவதில்

படிப்பவரின் தனி நலன் பல்வேறு ஊக்கிகளின் விளைவைக் குறிப்பிடுகின்றது. குறிப்பிட்ட இந்த நேரத்தில் இந்தப் புத்தகத்தை ஏன் படிக்கின்றாய் என்று நாம் ஒருவரைக் கேட்போமானால், அவர் எத்தனையோ காரணங்களைக் கூறலாம். உள்ளார்ந்த கற்றலின் கருதுகோள் ஊக்கிகளின் சிறப்புக் கூறுகளை வலியுறுத்துவதற்குப் பயன்படுகின்றது. பாடத்திலும், எண்கள் பெறுவதிலும் எந்த விதமான கவர்ச்சியும் கொள்ளாமல் ஒரு மாணவன் ஒரு வகுப்பில் சேர்ந்துவிட்டான். பிறகு தன்னையறியாமலேயே அவன் அதில் கவர்ச்சியைக் காணுகின்றான். சோதனை நடத்திப் பார்த்ததில் கெலிப்பு எண்கள் காட்டிய விவரப்படி, கற்றல் நடைபெற்றிருக்கின்றது. வகுப்பறையில் அவனுடைய உடலிருக்கையும், விரிவுரைகளுக்கு அவன் தன்னை உட்படுத்திக்கொண்டதும் கற்றலை அவனிடம் விருத்தி செய்திருக்கின்றது. கல்வியில் அவனுக்குக் கவர்ச்சித் தெளி உணர்நிலையாக இல்லாதிருந்தும் கற்றல் நடைபெற்றது.

கற்றலில் பரிசும் தண்டனையும்: கற்றல் செயல்முறைக்குப் பரிசும் தண்டனையும் துணையளித்திருப்பதாகச் செய்தித்தாள்களிலும், ஆராய்ச்சிப் பத்திரிகைகளிலும் முடிவில்லாத கருத்துப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த இரண்டு கூறுகளின் இயக்கத்திலும் விளைவு விதி ஒரு பொது வாசகமாக இருந்து வருகின்றது. ஆக்க நிலையிறுத்தல் கோட்பாட்டினர்களுக்கும் அறிதல், உள்காட்சி ஆகியவற்றை வலியுறுத்துகின்றவர்களுக்கும் இடையில் ஓர் உடன்பாடு இருக்குமானால், அது கற்றலின் நிலை நிறுத்துதல் அல்லது ஈட்டுதல் என்பதாகும். இஃது ஓரளவு நிறைவு தருவதாகவே இருக்கின்றது. சிக்மன் பிராய்டுகூட, கற்றல் இன்பக் கொள்கையுடன் தொடர்புறவு கொண்டிருக்கின்றது என்ற கருத்தை ஏற்றுக்கொண்டிருக்கின்றார்.

அண்மைக்கால நூல்களில் நிறைவு செய்தல், வலிமை பெருக்கப்பட்ட நிலை ஆகியவற்றைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் வலிமை பெருக்கப்பட்ட நிலையில் இரண்டு வகைகள் இருப்பதாகக் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. ஒன்று, உட்புறமானது. இதில் ஒரு நிகழ்ச்சி தனக்கு மதிப்பீடுள்ளதாகத் தனி மனிதன் உணருகின்றான். மற்றொன்று வெளிப்புறமானது. சமூகம் அல்லது பண்பாட்டு வடிவம் அந்த உருப்படி மதிப்பீட்டுக்குரியது என்று முன்னறிந்து உறுதியளிக்கின்றபொழுது வெளிப்புறமான வலிமை பெருக்கப்பட்ட நிலை உணரப்படுகின்றது. முதலாவது வலிமை பெருக்கப்பட்ட நிலை சம்பந்தப்பட்ட மனிதனால் விளக்கிக் கூறப்படுகின்றது. இரண்டாவது புற

நிலையாக மதிப்பீடு செய்யப்பட்டுச் சோதனையாளரால் விளக்கிக் கூறப்படுகின்றது. இந்த இரண்டுக்கும் நெருக்கமான தொடர்பு உண்டு. உதாரணமாக, ஒரு சிறுவன் ஓவியத்தில் சிரத்தை காட்டலாம். தன்னுடைய மனநிறைவுக்காக ஓவியம் தீட்டி அதை அவன் இரசிக்கலாம். ஆனால், அவனுடைய பெற்றோர் அவனுடைய ஓவியத்தைப் பாராட்டிப் பரிசு வழங்குகின்ற வரையில் அவன் முழு மன நிறைவும் கொள்ள முடிவதில்லை.

இந்த வகையில் பரிசு, உள்ளூறுப்பானதாகவோ வெளியுறுப் பானதாகவோ இருக்கலாம். ஒரு சிறுவன் நடவடிக்கைக் காகவும், நிறைவுக்காகவும் ஒரு விளையாட்டை அனுபவித்தால் அதை உள்ளூறுப்பானது என்று கூறலாம். ஆனால், அவன் அதே விளையாட்டை வெள்ளிக்கோப்பைக்காகவும், பணத்திற் காகவும், பதக்கத்திற்காகவும் அனுபவித்தல் அதை வெளியுறுப் பானது என்று கூறலாம்.

வலிமை பெருக்கப்பட்ட நிலையும் பரிசும் பல்வேறு வடிவங் களில் காணப்படுகின்றன. கற்றல் கோட்பாடுகளும் அவை பரிசுக்குக் கொடுக்கின்ற முக்கியத்துவத்தைப் பொறுத்துப் பல வேறாகப் பெருகுகின்றன. பரிசின் சிறப்புக்கூறு கற்றல் சூழ்நிலை யின் பரிசோதனைத் திட்டத்தின் பரப்பைப் பொறுத்திருக்கின்றது. கருவி சார்ந்த ஆக்க நிலையிறுத்தல் பரிசோதனையில் பரிசை நேரடி யாகப் பெறுவதற்குத் துலங்கல் வழி செய்கின்றது. உதாரணமாக, பரிசோதனையில் மின்சார அதிர்ச்சிக்கு ஆட்படுத்தப்பட்ட மிருகம் மின்சார அதிர்ச்சியைத் தவிர்க்கும்பொருட்டுத் தனது வலக்காலைத் தூக்கும்பொழுது அது பரிசு பெறுகின்றது. பரிசு உணவாக இருக் கலாம். ஆனால், இதற்கு முரண்பாடாக, பாவ்லோவின் மூல ஆக்க நிலையிறுத்தல் பரிசோதனையில் உமிழ்நீர் சுரப்பது போன்ற இயற்கையான துலங்கல் அதிகம் ஏற்படுகின்றது. குடும்பம், பள்ளிக்கூடம் போன்ற சமூகச் சூழ்நிலைகளில் பெரும்பாலான துலங்கல்கள் கவலையை நிவர்த்தி செய்தலாக இருக்கின்றன; ஆகையினால், நேரடியாகவோ, மறைமுகமாகவோ பரிசாக இயங்குகின்றன.

சிக்கலறையைக் கடத்தலில் குறிக்கோள் சாய்வலகுகளின் சான்றுகள் காணப்படுகின்றன. சரியான திருப்பங்கள் குறிக் கோளுக்கருகிலிருக்கும்பொழுது எளிதாகக் கற்கப்படுகின்றன. கல்லூரி மாணவர்கள் தங்களுடைய கடினமான பாடங்களைக் கற்பதில் பெற்றுள்ள கற்கும் பழக்கங்களைவிட அதிகமான முயற்சி யில் அவர்கள் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

கற்பவர் கல்லூரி மாணவராக இருந்தாலும், எலியாக இருந்தாலும் கற்பதில் பெறுகின்ற இறுக்க நிவர்த்தியானது பரிசுக்குச் சமமாக இருக்கின்றது. சிக்கல் நிறைந்த நமது சமூகத்தில் கற்றலால் தூண்டப்பட்ட பரிசுகள் மிகப் பலவாக இருக்கின்றன என்பது குறிப்பிடத் தக்கதாகும். சமூக ஏற்பு, சமூக மதிப்பு, செல்வம், அதிகாரம், மற்றும் பல பரிசுகள் தூண்டப்பட்டவை தான். மனிதர்களிடம் எவ்வளவுதான் கலைத்திறமையும், ஆக்கச் சிந்தனையும் நிறைந்திருந்தாலும் தூண்டல் மூலமாகத்தான் அவை சமூகத்தில் ஒளிவிட முடியும்.

கற்பதற்கான பல புறப்பண்பான பரிசுகளும் மற்ற நடத்தைகளும் கைக்கூலிகள் இயல்புள்ளவையாகவே இருக்கின்றன. குற்ற மனப்பாங்கு பெருகி வரும் சமூகத்தில் பரிசுகள் வழங்குவது கூட ஒரு சார்பாகத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுகின்றது. மாணவன் கற்றுப் பெற்ற பரந்த அறிவெல்லையைத் தன்னுடைய வாழ்க்கை வெற்றியாகக் கருத வேண்டுமென்று ஆசிரியர் விரும்புகின்றார். ஒருவேளை, பணி முதல்வர்களும் தங்களுடைய பணியாளர்களைப் பற்றிய பழைய சிந்தனைகளில் ஈடுபடலாம். நிறுவனத்தின் கொள்கைகளைப்பற்றி அவர்கள் தொலைநோக்கு கொள்ளுவதில்லை. பணியாளர்கள் ஊதிய உயர்விலேயே கவனம் செலுத்துகின்றார்கள்; அது போலவே நிறுவனத்தின் பங்குதாரர்களும் விரும்புகின்றார்கள். எவ்வாறிருப்பினும், பெரும்பாலான சமூக இயல்புகள் தனியாள் பரிசுகளுக்குத்தான் முடுக்கிவிடப்பட்டுள்ளதாகக் காணப்படுகின்றன. ஆனால், இது கற்கும் சூழ்நிலையைப் புறக்கணித்து விட்டதாகக் கருத முடியாது.

கற்றல் செயல்முறையில் தண்டனையும் ஒரு கூறாகக் கருதப்படுகின்றது. இஃது ஊக்கியாகச் செயல்படுகின்றது என்று கருதப்பட்டாலும் பரிசைப் போன்று அவ்வளவு வலிவுள்ள ஊக்கியாக இல்லை. மிருகங்களிடையிலும் மனிதர்களிடையிலும் நடத்தப்பட்ட பரிசோதனைகளில் தண்டனையைப் புகுத்திப் பார்த்த பொழுது, தண்டனையைவிடப் பரிசுதான் அதிக வலுவுள்ள ஊக்கியாகக் காணப்படுகின்றது. சரியான துலங்கல்களுக்கு உயிரினம் பரிசளிக்கப்பட்டபொழுது மிகக் குறைவான பிழைபாடுகள்தான் காணப்பட்டன. பிழைபாடுகளுக்குத் தண்டனையளித்தபொழுது பிழைபாடுகளில் பெரும் மாறுதல் ஏதும் ஏற்படவில்லை. இந்தப் பரிசோதனைகள் மட்டுமன்றிக் குழந்தை உளவியல் துறையில் நடைபெற்றுள்ள ஆராய்ச்சி முடிவுகளும், அத்துறையில் வளர்ந்துள்ள பெரும் இலக்கியங்களும் கூறுவதும் இதுதான். குழந்தைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சியை நேர் நிலையான பரிசு தரும் வழியில்

அணுகிய பொழுது, அம் முறையானது எதிர் மறையான தண்டனை தரும் வழியில் அணுகிய முறையைவிட மிக உயர்ந்ததாகக் காணப் பட்டது. குழந்தைகள் தண்டனை முறையைவிடப் பரிசு தரும் முறையை ஏன் மிகவும் அதிகமாக விரும்பினுர்கள் என்பதற்கான காரணங்களையும் உளவியலார் கண்டறிந்தனர். தண்டனை மனவெழுச்சி முரண்பாட்டை உண்டாக்குகின்றது. கற்றல் சூழ் நிலையில் கற்போன் அச்சத்தையும் கவலையையும் பொருத்திக் கொள்ளுகின்றுன். தண்டனை பெறு சூழ்நிலையிலிருந்து தனியாள் தப்பித்துக்கொள்ளுவதற்கு முயன்று கொண்டிருக்கின்றுன். அதனுல் புதிய துலங்கல்கள் ஏதும் நடைபெறு வண்ணம் தடை ஏற்படுகின்றது.

மேலும், தண்டனையை வைத்து எதையும் முன்கூட்டிக் கூற முடியாது. பரிசைக் காட்டி ஏதேனும் முன் கூட்டிக் கூறலாம். கற்போன் பெற்றுள்ள கவலை அல்லது குழப்பம் தவருன துலங்கல் களை ஏற்கச் செய்து விடுகின்றது. பெற்றேர் என்ன விரும்புகின் றனரோ அதற்குப் புறம்பான முறையில் குழந்தைகளின் நடத்தைகள் இருக்கின்றன.

அவப்பேருன விளைவுகள் பலவற்றைக் கற்போன் வளர்த்துக் கொள்ள வேண்டிய நிலையும் பிறக்கின்றது. போதிய அளவு பாடத்தை மனப்பாடம் செய்யாத மாணவனை ஆசிரியர் தண்டிக் கின்றபொழுது மாணவன் பள்ளிக்கூடத்தையே வெறுக்கின்றுன்; தாழ்வு மனப்பாங்கை வளர்த்துக்கொள்ளுகின்றுன்; வெற்றி பெறுகின்ற மாணவர்களிடம் பகைமை உணர்ச்சியை வளர்த்துக் கொள்ளுகின்றுன். நேர்நிலையாகவும் நுண்ணறிவாகவும் தேர்ந் தெடுக்கப்பட்ட பரிசுகளைக்கொண்டு மாணவர்களை ஊக்குவிப் பதன்மூலம் விரும்பத்தக்க ஆளுமைக்கூறுகளை அவர்களிடம் வளரச் செய்து நல்ல கற்றல் செயல்முறையை ஆசிரியர் உண்டாக்கச் செய்யலாம்.

ஒரு சராசரி மாணவன் பெற்றேராலும் சமூகத்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளு கின்றுன்; தன்னுடைய நடத்தையைப் பெற்றேரும் சமூகமும் ஏற்கத் தவறுகின்றபொழுது அவன் அச்சம் கொள்ளுகின்றுன். அந்த அச்சம் உள்ளார்ந்த தண்டனையாக அமைகின்றது. எல்லாச் செயல்களிலும் தனியாள் மாறுபாடுகள் இருப்பதாலும் ஒரு சூழ் நிலையை ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் நோக்குவதாலும் ஒரு குறிப்பிட்ட தூண்டல் அல்லது துலங்கல்தான் ஏற்றுக் கொள்ளப்பட்டது என்றோ, புறக்கணிக்கப்பட்டது என்றோ

தெளிவாகக் கூற முடிவதில்லை. பெரும்பாலான பெற்றோர் முயற்சியும் பிழைபாடும் மூலந்தான் பரிசுக்கும் தண்டனைக்கும் இடையில் ஒரு சமநிலையை ஏற்படுத்துகின்றனர்.

சமூகச் சூழ்நிலையில் கற்றல் முறை

சமூக அறிவியலாரும் உளவியலாரும் கற்றலின் வெவ்வேறு பண்புக்கூறுகளை வலியுறுத்துகின்றனர். கற்றலில் உள்ளடங்கியுள்ள பொருளைவிடச் செயல்முறையைத்தான் உளவியலார் வலியுறுத்துகின்றனர். கற்போன் எவ்வாறு கற்கின்றான் என்பதுதான் உளவியலாருக்கு முக்கியமே தவிர, என்ன கற்கின்றான் என்பதன்று. எனவே, உளவியலார் முயற்சியும் பிழைபாடும், வலிமை பெருக்கப்பட்ட நிலை, வழியமைத்தல், பொதுப்பட அமைத்தல், ஆக்க நிலையிறுத்தல் முதலிய கருதுகோள்களை விவாதிக்கின்றனர். சமூகவியலாரும் இன மரபியலாரும் கற்றலின் பொருளடக்கத்திலும், விளைபொருளிலும் கவனம் செலுத்துகின்றனர். கற்றல் எவ்வாறு நடைபெறுகின்றது என்பதுபற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை. பொதுமக்கள் வழி, பழக்க வழக்கம், மரபு, வாழ்க்கைப் பங்குகள் முதலிய சமூக மரபியல்புகளையும், ஒவ்வொரு சமூகத்திலும் மனிதனுடைய நடத்தையை மாற்றுகின்ற சமூகக் கூறுகளையும் அவர்கள் வலியுறுத்துகின்றார்கள். ஆனால், சமூக உளவியலார் இந்த இரண்டு கருத்துகளையும் வலியுறுத்துகின்றனர்.

கற்றலைப் புரிந்துகொள்ளுவதற்கு இந்த இரண்டு அணுகும் முறைகளும் முக்கியமாகும். கருத்துச் சார்பான காரணங்களுக்காகவும், செயல் சார்பான காரணங்களுக்காகவும் சமூகக்கற்றல் எவ்வாறு நடைபெறுகின்றது, சமூகக்கற்றலில் என்ன கற்கப்படுகின்றது என்ற இரண்டையுமே நாம் புரிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். இத் துறையில் தீவிரமாக ஆராய்ச்சிகள் நடத்திய மார்க் மே (Mark May) என்பவருடைய கருத்து வரவேற்கத் தக்கதாகும். உளவியலாரும் சமூக உளவியலாரும் கற்றல் கோட்பாடுகளில் கவனம் செலுத்துகின்றனர். அவர்கள் மனிதக் கற்றலின் நிலைமைகளை அமைக்கின்ற சமூக ஒழுங்கைப் புரிந்துகொள்ளாமல் சமூக நடத்தைக்கான ஒரு கோட்பாட்டை உருவாக்க முடியாது என்று கருதுகின்றார்கள். அது போலவே சமூக அறிவியலின் தொழில் நுட்பத்தினர்கள் சமூக ஒழுங்கில் பங்கேற்கும் எந்தத் தனிமனிதரையும் தகுதி படுத்த வேண்டுமானால், நீண்ட நாள்கள் கற்ற அனுபவத்தைச் சார்ந்திருக்கின்ற கோட்பாடுகளில் உள்ள சில விவரங்களை ஏற்பதற்கு இணங்க வேண்டும், ஆக, உளவியலிலிருந்து கற்றலின் அடிப்படைக்

கோட்பாடுகள் வருவிக்கப்பட்டன. சமூக அறிவியலிலிருந்து கற்றலின் முக்கிய நிலைமைகள் பெறப்பட்டன. எப்பொழுதேனும் இந்த இரண்டும் சந்தித்தாக வேண்டும். அஃது உளவியல் வளர்ச்சிக்கும் சமூகவியல் வளர்ச்சிக்கும் துணை புரிய முடியும்.

கற்றல் கோட்பாடுகளைச் சிறிது முன்பே கண்டோம் என்றாலும், இத் துறையில் ஒழுங்கு முறையான ஆராய்ச்சிகள் நடத்திய இரு ஆசிரியர்களுடைய கருத்துகளை இங்குச் சிறிது சுருக்கமாகக் காண்பது பொருத்தமுடையதாகும். நீல் மில்லர் (Neal Miller) என்ற உளவியலாரும், ஜான் டால்லார்டு (John Dollard) என்ற சமூக மனித இன இயலாரும் பிந்திய நடத்தைக் கோட்பாட்டினரான ஹல் (Hull) என்பவரால் உயிர்ப்பூட்டப்பட்டவர்களாவார்கள். இந்த இரு ஆசிரியர்கள் சமூக உளவியலின் தேவைக்கேற்ப ஹல்லின் கற்றல் கருதுகோள்களைப் பொருத்தமுள்ளதாக்கினார்கள்; கற்றல் செயல்முறையை நான்கு அடிப்படைக் கூறுகளாக வகுத்தமைத்தார்கள். அவை, உந்து சக்தி (drive), வழி காட்டும் குறிப்பு (cue), துலங்கல், பரிசு என்பவை. ஓர் உயிரினத்திற்கு ஏதோ ஒன்று தேவைப்படுகின்றது. ஏதோ ஒன்றை அது பார்க்கின்றது, ஏதோ ஒன்றை அது செய்கின்றது. ஏதோ ஒன்றை அது பெறுகின்றது.

மேலே கூறப்பட்ட உளவியலார்களுக்கு உந்து சக்தி என்றால் ஒரு வலிமையான தூண்டல் செயலை நோக்கிச் செலுத்துகின்றது என்பதாகும். அஃது அடிப்படையானதாகவோ, உள்ளார்ந்ததாகவோ இருக்கலாம். உதாரணமாக, தாகம், பசி, வலி முதலியவையாகவுமிருக்கலாம். மேலும், அஃது இரண்டாம் நிலையைச் சார்ந்ததாகவுமிருக்கலாம். அல்லது பேராசை, சமூகம் தன்னை ஏற்றுக்கொள்வதற்கான விருப்பம், செல்வம் முதலியவற்றை ஈட்டப்படக் கூடியதாகவுமிருக்கலாம். எனவே, உந்துதல்கள் இல்லாமல் அடிப்படையான தேவைகளாக இருந்தாலும் சரி, ஈட்டப்படக்கூடிய தேவைகளாக இருந்தாலும் சரி உயிரினம் நடத்தையில் ஈடுபடாது. ஆகவே, கற்றல் நடைபெறுவதில்லை.

உந்துதல் ஒரு மனிதனைத் துலங்கும்படித் தூண்டினால் வழி காட்டும் குறி எப்பொழுது அவன் துலங்க வேண்டுமென்று நிர்ணயிக்கின்றது. எங்குத் துலங்க வேண்டும், எந்தத் துலங்கலைச் செய்ய வேண்டும் என்று அது முடிவு செய்கின்றது. வழி காட்டும் குறியைச் சமூகத் தூண்டல் என்றும் கூறலாம். இவை பருமளவிலும் பண்புத் தரத்திலும் மாறுபடுகின்றன. சில வழி காட்டும் குறிகள் வலிமையைச் சார்ந்திருக்கின்றன. சில தனிப்

பட்ட தன்மைகளைச் சார்ந்திருக்கின்றன. உந்துதல் இல்லாத பொழுது கற்றல் நடைபெறுவதில்லை; வழி காட்டும் குறிகள் இல்லாதபொழுதும் நடைபெறுவதில்லை. உண்மையான கற்றல் நடைபெறுவதற்கு முன்பு ஒரு துலங்கல் நடைபெற வேண்டுமென்று மில்லரும், டால்லாடும் கூறுகின்றனர்.

நாணமுடைய ஒரு பையனின் முதல் பாட்டுக் கச்சேரி உடனடி உந்துதலைச் சார்ந்திருக்கின்றது. வழி காட்டும் குறி, கடந்த கால அனுபவம், பங்கு கொள்ளுதல் முதலியவையும் சார்ந்திருக்கின்றது. மனம் போனபடி நடத்தை ஏற்படலாம். கற்போன் சொல்சார்ந்த அறிவுரைகளால் வழி காட்டப்படலாம். அல்லது மற்றவர்களுடைய துலங்கலைப் பின்பற்றிக் காட்டலாம். சரியான துலங்கல் நடைபெற்றது என்று ஊகித்துக்கொண்டு மறுபடியும் திருப்பித் துலங்காத நிலைமையும் ஒரு வேளை ஏற்படலாம். உண்மையில் கற்றல் நடைபெற்றிருக்கின்றது. ஆனால், வலிமை பெருக்கப்படாத வரையில், பரிசு பெறாத வரையில் கற்றல் முழுமை பெறவில்லை என்றாகின்றது. பரிசு என்பது தனியாளுக்கு ஏற்படுகின்ற இனிமையான அனுபவமாகும். எனவே, பரிசு கொண்டு வருகின்ற துலங்கல் ஒரு பழக்கமாக ஆகின்றது. பரிசு இல்லாமல், குறிப்பாகத் தண்டனையில் முடிகின்ற பொழுது செயல் மறைந்து போக ஏதுவாகின்றது. தண்டனை ஒருவரைக் கற்கச் செய்கின்றது. துலங்குவதற்கு அது தூண்டுவதில்லை: மில்லர், டால்லார்டு ஆகியவர்களுடைய கருத்துப் படி, இங்கு விவரிக்கப்பட்டவை கற்றலின் நான்கு அறுதியிட்ட பண்புக்கூறுகளாகும்.

ஆனாலும், தனி மனிதரின் ஊக்கிகளைக் காரணங்களாக எடுத்துக்கொள்ளாத வரையில் எந்தக் கற்றலையும் நாம் விளக்கிக் கூற முடியாது. மற்றும் தூண்டல் சூழ்நிலை, துலங்கல் எவ்வாறு செய்யப்பட்டது, எவ்வாறு வலிமை பெருக்கப்பட்டது ஆகியவற்றையும் காரணங்களாக எடுத்துக்கொண்டு கற்றலை நாம் அணுக வேண்டும்.

6. மனப்பான்மைகள்

மனிதர்களைச் சமூகப் பண்புள்ளவர்களாகச் செய்யும் செயல் முறையின் பெரும்பகுதி மனப்பான்மைகளின் வடிவத்தை மேற்கொள்ளுவதாகவே இருக்கின்றது. சமூக உளவியலார் இந்தச் செயல்முறையிலும் அதிகக் கவனம் செலுத்துகின்றனர். சமூக உளவியலில் எந்த ஒரு பகுதியும் மனப்பான்மைகள் போன்று முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை. ஏராளமான ஆராய்ச்சிக் கட்டுரைகளும், புத்தகங்களும் அவற்றைப்பற்றி வெளி வந்திருக்கின்றன. ஒரு தனித் துறையாக உளவியலில் உருவாகக்கூடிய அளவுக்குச் செய்திப் பொருள்கள் மனப் பான்மைகளைப்பற்றிக் கிடைக்கின்றன. ஒரு மனிதன் தன்னுடைய சமூகச் சூழ்நிலையைப்பற்றி என்ன நினைக்கின்றான் என்றும், என்ன உணருகின்றான் என்றும் சுட்டிக் காட்டுவது மனப்பான்மைகள் தான். சமூகச் சூழ்நிலையில் மனப்பான்மைகள் மிகவும் இயக்கத்தை உண்டாக்குகின்ற கூறுகளாக இருக்கின்றன. இவை முக்கிய செயல்முறைகளான ஊக்கிகள், கற்றல், புலன் காட்சி ஆகியவற்றோடு இணைந்திருக்கின்றன. எனவே, மனப்பான்மைகளின் பரப்பெல்லை மிகப் பரந்து செல்லுகின்றது. எனவே, மனிதர்களின் நடத்தை முழுவதையும் மனப்பான்மைகள் என்ற கருதுகோள் கொண்டே விளக்கிக் கூறிவிட முடியும் என்று சில உளவியலார் நம்புகின்றனர்.

மனப்பான்மை என்ற கருதுகோள் பல வழிகளில் உபயோகிக்கப்படுகின்றது. கருத்துச் சார்பான உபயோகங்களாக அவை இருக்கின்றன. ஆனால், அதனுடைய வரையறை எல்லா இடங்களிலும் மிகவும் பொருத்தமாகவே இருக்கின்றது. ஒரு மனப்பான்மை என்பது, உடன்பாடான அல்லது எதிர்மறையான ஓர் அமைப்பில் பொருளையோ, இடத்தையோ, உயிரினத்தையோ அல்லது தொடர்புறவையோ ஒரு மனிதன் முன் முடிவுபடுத்தி

விடுவதாகும். எனவே, மனப்பான்மை இரண்டு முக்கிய பகுதிப் பொருள்களைக் கொண்டிருக்கின்றது. ஒன்று அறியக்கூடியது. அதாவது, பொருளோடவோ கருத்துக்களோடவோ இணைக்கப்பட்ட அர்த்தத்தை அறியக்கூடிய பகுதிப்பொருள் பிரதிபலிக்கின்றது. மற்றொன்று உணர்ச்சி பெறக்கூடியது. இது பொருளைப் பற்றியோ கருதுகோள் பற்றியோ உயிரினத்தின் உடன்பாடான அல்லது எதிர்மறையான மதிப்பீட்டைப் பிரதிபலிக்கின்றது. டுட்ச் என்பவரும், காலின்ஸ் (Deutsch and Collins) என்பவரும் பரிமாற்று இனக்குடியிருப்புத் தேர்வாராய்ச்சி நடத்தினர். அதில் ஒரே பொருளை நோக்கி இரண்டு வேறுபட்ட மனப்பான்மைகள் இரண்டு வாசகங்களில் வெளிப்படுத்தப்பட்டன.

இந்தத் தேர்வாராய்ச்சியை முழுமைப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் போட்டியும் நடத்தப்பட்டது. பரிமாற்று இனக்குடியிருப்புப் பகுதியில் வசித்து வந்த ஒரு பெண், 'இங்கு நீங்கள் வசிப்பதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?' என்று கேட்கப்பட்டாள். அவள் அதற்குக் கூறிய விடை துயரமிக்கச் செய்தியாக இருக்கின்றது.

பரிமாற்று இனக்குடியிருப்புப் பகுதியில் குடியேறப் போவதாக அப் பெண்ணின் கணவன் அவளிடம் ஒருநாள் கூறினன். அவள் உடனே அழத் தொடங்கிவிட்டாள். மூன்று வாரங்கள் அவள் அழுதாள். அந்தப் பகுதிக்குக் குடி வரவே அவளுக்கு விருப்பமில்லை. ஏனென்றால், அங்குக் கருப்பு மனிதர் பலர் வசிக்கின்றனர். கருப்புக் குழந்தைகளுடன் அவள் தன்னுடைய குழந்தைகளை வளர்க்க விரும்பவில்லை. போவதற்கு வேறு இடமுமில்லை. அதனால் அங்குச் செல்ல வேண்டியிருந்தது. சில நாள்களுக்குப் பிறகு எல்லாம் மாறிவிட்டது. அவள் அங்கு வசிப்பதை விரும்பத் தொடங்கிவிட்டாள். கருப்பு மனிதர்களும் மற்றவர்களைப் போன்று மனிதர்கள்தான் என்று அவள் கூறத் தொடங்கினள். அவர்கள் நல்ல குடியிருப்புகளைக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வீடுகளையும் குழந்தைகளையும் சுத்தமாக வைத்திருக்கின்றார்கள். மேலும், அவர்கள் நண்பர்களாகிவிட்டார்கள். அவர்களைப் பெரிதும் அவள் விரும்புகின்றாள். ஒரு வெள்ளையர் குடும்பத்தினருக்கருகில் வசிப்பது போலவே ஒரு கருப்பர் குடும்பத்தினருக்கருகிலும் வசிக்க முடியும் என்றும், இதில் எந்த வகையான மாறுபாடும் கிடையாது என்றும் அவள் இறுதியில் கூறினாள்.

இந்த நிகழ்ச்சி வரவாற்றில் அறிதலும் உணருதலும் இருப்பதாகக் காணப்படுகின்றது. அந்தப் பெண் கருப்பர்களைப்பற்றித்

தவறான எண்ணம் கொண்டிருந்தாள். பரிமாற்று குடியிருப்புப் பகுதிக்குச் சென்ற பிறகு கருப்பர்களைப்பற்றி அவள் கொண்டிருந்த கருத்து மாறிவிட்டது. ஆனால், இனவாரியாக ஒதுக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் வாழ்கின்ற பெண்களின் எண்ணம் சிறிதுகூட மாறவில்லை. கருப்பர்களைப்பற்றி அவர்கள் கொண்டிருந்த தப்பெண்ணம் மாறுவதற்கான சந்தர்ப்பம் ஒதுக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் ஏற்பட முடியவில்லை. எனவே, இந்த இரண்டு பகுதிகளில் குடியிருக்கும் மக்களிடையே கருப்பர்களைப்பற்றி மிகுந்த முரண்பாடு இருந்தது.

மனப்பான்மைகளின் இரண்டு முக்கிய உறுப்புகளான அறிதல் (cognition), எழுச்சி (affect) ஆகியவற்றின் உள்பொருளும் அவற்றுக்கிடையேயுள்ள தொடர்புறவும் ஒரு மனிதன் ஒரு பொருளிடம் கொண்டுள்ள மனப்பான்மை செயல்பட வேண்டுமா அல்லது வேண்டாவா என்பதை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கேற்கின்றன. மனப்பான்மையின் இரண்டு உறுப்புகளிடையேயுள்ள உள்ளார்ந்த தொடர்புறவை காட்ஜ் என்பவரும், ஸ்டாட்லண்ட் (Katz and Stotland) என்பவரும் உதாரணத்தின்மூலம் விளக்கியுள்ளார்கள். ஒரு மனிதன் ஓர் அரசியல் கட்சியிடம் மிகுந்த உடன்பாடான உணர்ச்சி சார்ந்த பயிற்சி பெற்றுள்ளான் என்று வைத்துக்கொள்வோம்; எங்கு, எப்பொழுது வாக்களிப்பது என்பதையும் தெரிந்திருக்கின்றான்; தான் அளிக்கவிருக்கின்ற வாக்குத் தேர்தலின் முடிவில் விளைவை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை அவனுக்கு ஏற்பட்டால், அப்பொழுது அவன் வாக்களிக்கின்ற நடத்தையின்மூலம் தன்னுடைய மனப்பான்மையை வெளிப்படுத்துகின்றான்.

ஆனால், அவ்வாறின்றி ஒரு மனிதன் ஓர் அரசியல் கட்சியிடம் வலிமையில்லாத விருப்பம் கொண்டிருக்கின்றான் என்று கொள்வோம். அதனால் அவன் எங்கு எப்பொழுது வாக்களிப்பது என்பதை அறிந்துகொள்ளாமலிருக்கலாம். மேலும், தன்னுடைய வாக்கு அவ்வளவு முக்கியமானதன்று என்று நம்புவாருக்கும் தன்னுடைய வலிமையில்லாத அரசியல் மனப்பான்மையை வெளிப்படுத்தும்பொருட்டு வாக்களிக்கும் நடத்தையில் அவன் ஈடுபடாமலிருந்துவிடலாம். எனவே, இந்த இரண்டு வகையான நடத்தையிலும் மனப்பாங்கின் வலிமைதான் செயலுக்கு மனிதனை நடத்திச் செல்லுகின்றது என்பது தெரிகின்றது. மனப்பான்மையின் இரண்டு உறுப்புகளான அறிதல், எழுச்சி அல்லது உணர்ச்சி இரண்டு செறிவுக்கு ஏற்ப இந்த இரண்டு வகையான நடத்தைகளிலும் விளைவை உண்டாக்கியிருக்கின்றன.

மனப்பான்மை உருவாதல்: மற்ற உளவியல் செயல்முறைகளைப் போலவே மனப்பான்மை உருவாகும் செயல்முறையிலும் பண்பாடும், தனி மனிதன் சார்ந்துள்ள குழுவும் முக்கிய இயக்கங்களாக இருக்கின்றன. ஒரு மனிதன் என்ன உணவுப் பண்டங்களை உண்ண வேண்டுமென்பதையும், எவ்வாறு உடையுடுத்த வேண்டுமென்பதையும், நிகழ்ச்சிகளில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் அவனுடைய பண்பாடுதான் நிர்ணயிக்கின்றது. அது போலவே பண்பாட்டிலுள்ள மற்ற மனிதர்களிடமும், குழுவினிடமும் அவனுடைய மனப்பான்மை எவ்வாறு இருக்க வேண்டுமென்பதைக் குழுவினிடமிருந்து அவன் பெற்றுள்ள செல்வாக்கு நிர்ணயிக்கின்றது.

பண்பாடும் குழுவினுடைய செல்வாக்கும் தனிமனிதர்களுடைய மனப்பான்மையை எந்த அளவுக்கு நிர்ணயிக்கின்றன என்று பல ஆராய்ச்சிகள் கண்டறிந்திருக்கின்றன. அவற்றில் ஹாரோவிட்ஜ் (Horowitz) என்பவர் செய்த ஆராய்ச்சியும் ஒன்றாகும். அமெரிக்கக் குழந்தைகள் நீகிரோக்களைப்பற்றித் தங்களுடைய மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளுவதில் அவர்களுடைய பண்பாடும், குழுவும் எத்தகைய விளைவை ஏற்படுத்துகின்றன என்றும் கண்டறிய அவர் விரும்பினார்; அதன்பொருட்டு இளஞ்சிறுவர் பள்ளிக்கூடத்திலிருக்கும் மாணவர்களிலிருந்து எட்டாவது வகுப்பில் பயிலும் மாணவர்கள் வரையில் மாணவர்களைத் தேர்ந்தெடுத்தார்; அம் மாணவர்கள் அமெரிக்காவில் பல்வேறு நிலப்பகுதிகளிலிருந்தும், பல்வேறுபட்ட சமூக-பொருளாதார நிலைகளையுடைய குடும்பங்களிலிருந்தும் வந்திருந்தவர்களாவார்கள். நீகிரோக்களைப்பற்றி அவர்கள் கொண்டிருந்த மனப்பான்மையை அளக்கும்பொருட்டு உருவாக்கிய வினாத்தொகுதிகளை அவர்களுக்கு வழங்கினார்.

இப் பரிசோதனையில் அவர் கண்டறிந்தது என்னவென்றால், பள்ளிக்கூடத்தில் முதல் ஆண்டிலிருந்து தொடங்கி மேலே செல்லச் செல்லப் படிப்படியாக நீகிரோக்களை நோக்கியுள்ள அக் குழந்தைகளின் ஆதரவான மனப்பான்மை தொடர்ந்து குறைந்துகொண்டே செல்லுவதாக இருந்தது. இக் குழந்தைகள் எல்லாம் வெள்ளையர்களுக்கென உள்ள பள்ளிக்கூடங்களிலிருந்தும் இனக்கலப்புள்ள பள்ளிக்கூடங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். இவர்கள் அனைவருமே ஒரே மாதிரியான விடைகளையே அளித்தனர். இந்த ஆராய்ச்சியில் அவர் ஒரு முக்கிய நிகழ்ச்சியைக் கண்டார். ஒரு சிறு குழுவைச் சேர்ந்த குழந்தைகள் பொதுவுடைமைக் கொள்கைச் சார்புள்ள

பெற்றோர்களைக் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் மற்றக் குழந்தைகளைக்காட்டிலும் நீகிரோக்களைப்பற்றி மிகக் குறிப்பிடத்தக்க வகையில் குறைவான தப்பெண்ணத்தையே கொண்டிருந்தார்கள். குழந்தைகளிடம் தப்பெண்ணம் வளருவதில்லை என்ற கருத்து இந்த ஆராய்ச்சி முடிவுகளில் முரண்படுகின்றது. குழந்தைகளிடம் தப்பெண்ணம் வளருவதில் பண்பாடும், குழுவும் செல்வாக்குப் பெறுகின்றன. மற்றக் குழந்தைகள் பொது வரையளவுடன் ஒத்துச் செல்லுகின்றார்கள். ஆனால், பொதுவுடைமை வாதிகளின் குழந்தைகள் பொதுப் பண்பாட்டிலிருந்து பல வகைகளில் முரண்படுகின்றார்கள். குழுவின் செல்வாக்கு பண்பாட்டின் செல்வாக்கைவிடச் செறிவு மிகுந்திருக்கின்றது. மனப்பான்மை வளர்ச்சியை இன்னும் சற்று ஆழ்ந்து காண வேண்டுமானால், குறிப்பிட்ட சூழ்நிலை, கற்றல் அனுபவங்கள், ஊக்கிகள், ஆளுமை ஆகியவற்றைப்பற்றியும் சமூக உளவியலார் கவனிக்க வேண்டும்.

மனப்பான்மைகளும் ஆளுமையும் : மனப்பான்மைகளைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்திய உளவியலார் எந்த வகையில் மனப்பான்மை வளர்ச்சியில் ஆளுமை செல்வாக்குப் பெற்றிருக்கின்றது என்றும் காண விரும்பினர். ஆளுமையின் சில கூறுகள் சாதகமான மனப்பான்மையிலும், சில கூறுகள் பாதகமான மனப்பான்மையிலும் செல்வாக்குப் பெறுகின்றன என்பது கருத்தளவில் இருந்து வந்தது. இக் கருத்து பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

சில மக்களிடம் காட்டப்படுகின்ற சில மனப்பான்மைகள் அறிவுக்குப் பொருந்தாத உள்பொருளைக் கொண்டிருக்கின்றன என்று சிலர் குறிப்பிடுகின்றனர்; மேலும், அவை உண்மை உலகத்தோடு எந்த வகையிலும் பொருந்துவனவாக இல்லை என்றும், அதனால் மாற்றத்திற்குப் பெரும் எதிர்ப்பைக் காட்டுகின்றன என்றும் குறிப்பிடுகின்றனர். சிலரிடம் அப்படிப்பட்ட மனப்பான்மைகள் வளருகின்றன என்று உறுதியாக நம்பப்படுகின்றது. ஏனென்றால், அவை ஊக்கமூட்டிச் சார்பான மனப்போராட்டத்தை ஊக்குவிக்கின்ற மனமுறிவிலிருந்தும் கவலையிலிருந்தும் சம்பந்தப்பட்ட மனிதர்கள் தப்பித்துக் கொள்ளுவதற்குக் கருவிகளாக இருக்கின்றன. தனி மனிதர்களின் சுயமரியாதையைப் பாதுகாப்பதால் அத்தகைய மனப்பான்மைகள் அவர்களுக்கு உதவியாக இருக்கின்றன.

இன்னும் சிலர் சில குறிப்பிட்ட மனப்பான்மைகளைத் தழுவுவதாகத் தோன்றலாம். ஏனென்றால், அவர்கள் தங்களுடைய

சூழ்நிலையில் அதிகாரக் குழுவோடு தங்களை இணைத்துக்கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அப்படிப்பட்ட மனிதர்கள் சுதந்தரமாகத் தங்களுடைய அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொள்ள இயலாதவர்களாக இருப்பது போன்று அடிக்கடி நடந்துகொள்ளுகின்றார்கள். மற்றவர்கள் கொள்ளுகின்ற குறிப் பிடத்தக்க அபிப்பிராயத்தை அல்லது மனப்பான்மையைத் தாங்களும் கொண்டிருந்தால்தான் தங்களுக்குப் பாதுகாப்பு உண்டு என்றும் அவர்கள் உணருகின்றார்கள்.

மேலும், உள்பொருளைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் மற்றவர்களுடைய மனப்பான்மையை ஏற்றுக்கொள்ளுவதே சூழ்நிலையில் ஐயத்திற்குச் சிறிதும் இடமில்லாத நன்மை யாகின்றது. ஒருவன் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொழுது நல்ல தைச் செய்கின்றான்; நல்லவனாகவும் ஆகின்றான். ஆனாலும், மனப் பான்மைகளின் வளர்ச்சியும் அவற்றைப் பாதுகாத்தலும் உயிரினத்தின் செயலற்ற தன்மையையும் தன்வயமாக்கலையும் பிரதிபலிக்கின்றன என்று கூறிவிட முடியாது. மனிதர்களை நோக்கியும் பொருள்களை நோக்கியும் செலுத்தப்படுகின்ற அறிதலிலும் உணர்ச்சியிலும் முன் முடிபுகள் ஏற்படுத்தப்பட்டு விட்டன என்றும் கருத இடமில்லை. மனப்பான்மைகளைச் சுறுசுறுப் பாகத் தேர்ந்தெடுத்தலும் அவற்றைப் பாதுகாத்தலும் தனிமனி தரின் உளவியல் தேவைகளைப் பெறுவதற்கு உதவி செய்கின்றன. மனப்பான்மைக்கான பொருளோ மனிதரோ யாராக இருந் தாலும் ஏதாவது ஒரு காரணத்தினால் தேர்ந்தெடுத்துப் பாதுகாக்க வேண்டிய நிலை உருவாகின்றது. ஒரு சிறுவனுக்கு நான்கு மாமன்மார்கள் இருக்கின்றார்கள். ஒருவரிடம்மட்டும் சிறுவனுக்கு மிகுந்த விருப்பம் ஏற்படுகின்றது. ஏனென்றால், அவர் வரும்பொழுதெல்லாம் அவனுக்குப் பிரியமான பரிசுகள் வாங்கி வருகின்றார். ஒரு குறிப்பிட்ட பத்திரிகைக்குச் சந்தாக் கட்டி ஏன் ஒருவர் வரவழைக்கின்றார்? ஏனென்றால், அப் பத்தி ரிகை அவர் விரும்பும் செய்திகளைத் தாங்கி வருகின்றது. மற்ற வர்களும் அதைக் குறிப்பாக வாங்குகின்றார்கள். ஒரு குழுவைச் சார்ந்த மனிதர்கள் வெறுக்கப்படுகின்றார்கள். காரணம், ஒருவர் தம்முடைய பற்றுக்குறைகளை அவர்கள்மீது ஏற்றிக் கூறுவதற்குச் சமூகம் அனுமதியளிக்கின்றது.

மனப்பான்மையின் மாற்றம் : மனப்பான்மையைப் பற்றி நடைபெற்ற தொடக்க கால ஆராய்ச்சிகள் விரித்துரைக்கக் கூடிய தன்மையைத்தான் பெற்றிருந்தன. சரிநுட்பமான விவரங்களைக்கொண்டு உண்மைகளை நிலைநாட்ட முடியவில்லை.

ஏனென்றால், வெவ்வேறு விதமான முடிவுகள் கிடைத்துக் கொண்டிருந்தன. ஒவ்வொரு மக்கள் கூட்டத்திலும் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. மனப்பான்மை அளவுகோல்கள் அனைவரிடமும் வழங்கப்பட்டன. சூழ்நிலையிலுள்ள பல்வேறு வகையைச் சேர்ந்த மனிதர்கள், குழுக்கள், பொருள்கள் ஆகியவற்றினிடம் அவர்கள் கொண்டிருந்த சில மனப்பான்மைகள் விரித்துக் கூறப்பட்டன. பிறகு படிப்படியாக ஆராய்ச்சியின் முகப்பு விரித்துரைக்கக்கூடிய நிலையிலிருந்து மனப்பான்மைகளின் வளர்ச்சியை அளவிடுவதிலும், மனப்பான்மையில் மாற்றத்தை உண்டாக்கக்கூடிய சக்திகளை அளவிடுவதிலும் கவனம் செலுத்தப் பட்டது.

மனப்பான்மையின் மாற்றத்தில் அக்கறை காட்ட வேண்டிய அவசியம் இரண்டு பெரும் நிலைமைகளிலிருந்து வெளிப்பட்டது. ஒன்று, கருத்துச் சார்பான நிலைமை. மனப்பான்மைகளை எவ்வாறு மாற்றியமைக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்ளல். பிறகு அது மனப்பான்மை எவ்வாறு உருவாகின்றது என்பதற்குக் குறிப்பிடத்தக்க செய்தியை அளிக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளல். தனிமனிதரின் உளச்சார்பான ஒப்பனையில் மனப் பான்மைகளின் முக்கிய பங்கு என்ன என்பதையும், மனிதனின் சமூக நடத்தையில் மனப்பாங்குகளின் செல்வாக்கு என்ன என்பதையும் புரிந்துகொள்ளுவதும் கருத்துச் சார்பான நிலையாகும்.

இரண்டாவது, பொது வாழ்வுக்குரிய நிலையிலிருந்து வெளிப் பட்டதாகும். இன்றைய உலகத்தில் மனப்பான்மை மாற்றம், பெரும் பிரச்சினைகளில் ஒன்றாக இருக்கின்றது. மனநலம், போர், அமைதி, மனித உரிமைகள், மற்றும் பல பெரும் சமூகப் பிரச்சினைகளைக்கொண்டுள்ள பல்வேறு துறைகளிலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு மக்களின் மனப்பான்மைகள் மாற்றக் கூடியவையாகவும் புரிந்துகொள்ளக்கூடியவையாகவும் இருக்க வேண்டும்.

மனப்பான்மைகளை அறியத் தொடங்கிய தொடக்க காலத்திலும் மனப்பான்மைகளை மாற்ற முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் பட்டன. பிரச்சினையிலுள்ள பொருள்கள் சம்பந்தமான புதிய செய்திகளைத் தனியாள்களிடம் கொடுத்து அவர்களுக்கு உண்மைகள் புரியுமாறு செய்யப்பட்டது. ஆனால், இம் முறையின்மூலம் மனப்பான்மை மாற்றத்தை உண்டாக்குவது அரிது என்று உடனே அறிந்துகொண்டு விட்டனர். கொடுக்கப் பட்ட புதிய செய்திகள் தனியாள்களிடம் நிலவி வந்த மனப்பான்மைகளோடு முற்றும் பொருத்தமின்றியிருந்ததால்

செய்திகளை அவர்கள் புறக்கணிக்கவும், அமுக்கமும், உருவத்தைத் திரிக்கவும், மறுக்கவும், அலட்சியப்படுத்தவும் தயாராக இருந்தார்கள். இதன் விளைவாகச் சமூக உளவியல் கோட்பாட்டினர் உயிரினத்தின் முழுச் சமூக அமைப்பில் மனப்பான்மைகள் ஆற்றிய பங்கைப்பற்றிச் சிந்திக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்பட்டது. குறிப்பிட்ட ஒரு மனப்பான்மைக்கும் மற்ற உளவியல் செயல்முறைகளுக்கும் இடையில் உள்ள செயல்முறைத் தொடர்பைக் காரணமாக எடுத்துக் கொண்டு மனப்பான்மையை மாற்றும் முறைகளை வகுக்க வேண்டும் என்ற நிலைக்கு வரத் தொடங்கினர்.

மனப்பான்மைகளை மாற்றுவதற்கான வெற்றிகரமான முறைகள் உளவியல் செயல்முறைகளுக்குப் பொருத்தமாக இருக்கின்றதும், விளைவை உண்டாக்கக்கூடியதுமான வழிமுறைகளைச் சார்ந்திருக்கின்றன. அம் முறைகள் ஒரு குறிப்பிட்ட மனப்பான்மையில் விளைவை உண்டாக்கலாம். மனப்பான்மைகளை மாற்றக்கூடிய பல்வேறு தொழில் நுட்ப முறைகளை உபயோகித்துச் செயல்விளக்கம் செய்யப்பட்ட பல ஆராய்ச்சிகளின் முடிவுகள் வெளியாகியிருக்கின்றன. காரல்சன் (Carlson) என்பவர் மனப்பான்மை மாற்றத்தைச் செயல்விளக்கம் செய்து காட்டியுள்ளார். தனியாள்கள் கொண்டுள்ள மனப்பான்மைகள் குறிக்கோள்களோடும் மதிப்பீடுகளோடும் பொருத்தமாக இல்லை என்றும், உளவியல் முறைப்படி அவை தாழ்வான மதிப்பையே கொண்டிருக்கின்றன என்றும் செயல்விளக்கம் செய்து காட்டி மனப்பான்மைகளை மாற்ற முடியும். மனிதர்கள் கொண்டுள்ள மனப்பான்மைகளோடு நாம் அளிக்கின்ற புதிய செய்திகள் பொருத்தமாக இருக்குமானால், அந்தச் செய்திகளின்மூலம் பெற்ற அறிவு மனப்பான்மையை மாற்ற முடியும். அது தொடர்பாக மேற்கொண்டு செய்திகள் வழங்கப்படுமானால், மேலும் மனப்பான்மை மாறுகின்றது என்று சீட்ஸ்லி (Sheetsley) என்பவர் கூறுகின்றார். சீன நாட்டின் சிறைகளிலிருந்த அமெரிக்கக் கைதிகளில் பலரைச் சீனர்கள் மூளைச் சுத்தம் (brain washing) செய்தனர். இந்த மூளைச் சுத்தம் செய்யப்பட்டவர்களுடைய மனப்பான்மைகள் மாறுவதற்கான அறிகுறிகளைக் கொண்டிருந்தன. பெரும்பாலும் அவர்கள் தங்களுடைய தன்-கருதுகோள் (self-concept) பற்றிச் சிரத்தை காட்டவில்லை. தன்-கருதுகோள் மிக எளிதாகக் குறைத்து மதிப்பிடக்கூடியதாக இருந்தது. இப் பண்புகளைக்கொண்ட அமெரிக்கச் சிப்பாய்களையெல்லாம் சீனர்கள் மூளைச் சுத்தம் செய்தார்கள் என்று சிகல் (Segal) என்பவர் கூறுகின்றார். இதுவும் ஒரு வகையான மனப்பான்மை மாற்றமேயாகும்.

இவ்வாறு மனப்பான்மை மாற்றங்கள் பல்வேறு செல்வாக்குகளால் ஏற்படுகின்றன. இன்னும் சற்று விரிவாக நோக்குவோமானல், மனப்பான்மைகள் தனி மனிதரின் தன்-முனைப்பைப் பிரதிபலிக்கின்றது. எனவே, தற்காப்பு குறைவாக இருக்கின்ற பொழுது மாற்றம் நிகழக்கூடும். மிகவும் உறுதியான சமய, அரசியல் நம்பிக்கைகள் கொண்டுள்ள தனியாள்கள் தங்களுடைய மனப்பான்மைகளை மாற்றிக்கொள்ளுவதில்லை. மனிதர்களிடமுள்ள பெரும்பாலான மனப்பான்மைகள் போற்றிப் பாதுகாக்கப்பட்ட பொருளாதார, தன்மதிப்புக் குறிக்கோள்களை உள்ளடக்கியவையாக இருக்கின்றன. இப்படிப்பட்ட மனப்பான்மைகளை மாற்றுவது எளிதன்று. மேலும், தனிமனிதரிடம் ஆழப் பதிந்துள்ள ஊக்கிகளோடு முரண்பாடு கொள்ளத்தக்க வகையில் புதிய மனப்பான்மை இருக்குமானல், மனப்பான்மையை மாற்றுவது கடினமாகும்.

7. அறிகுறியும், மொழியும், சமூக நடத்தையும்

மனிதர்களுடைய நடத்தையிலும் மிருகங்களுடைய நடத்தையிலும் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளையும், மனிதர்களுடைய நடத்தை எவ்வாறு மிருகங்களுடைய நடத்தையிலிருந்து குறிப்பிடத்தக்க வகையில் மாறுபடுகின்றது என்பதையும் சென்ற அத்தியாயத்தில் கண்டோம். மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் இடையில் காணப்படும் மிகப் பெரிய மாறுபாடு, செய்தி இணைப்புச் செயல் முறையில் தானிருக்கின்றது. செய்தி இணைப்புக்கு மனிதர்கள் மொழியை உபயோகிக்கின்றார்கள். ஆனால், மிருகங்கள் மொழியை உபயோகிப்பதில்லை. ஏனென்றால், மிருகங்களுக்கு மொழியறிவில்லை. மனிதர்களுடைய நடத்தையைப் புரிந்து கொள்ளுவதற்கு மொழிதான் மையப் பொருளாக இருக்கின்றது என்றால், அது மிக முக்கியமாகக் கவனத்தில் கொள்ள வேண்டிய தொன்றாகும். மேலும், அது பல்வேறு கருத்துகளிலிருந்து காணப்பட வேண்டியதாகவுமிருக்கின்றது. இலக்கணப்புலவர்கள் மொழியின் இலக்கணத்தை ஆராய்கின்றார்கள். மொழி வாணர்கள் மொழியின் அமைப்பையும், அதனுடைய இயந்திர நுட்பங்களையும் ஆராய்கின்றார்கள். மனித இன இயல்வல்லுநர்கள் வெவ்வேறு பழக்க வழக்கங்கள் பரம்பரைகளிடையே மொழி பெறுகின்ற மாற்றங்களை ஆராய்கின்றார்கள். சமூகவியலாரும், வரலாற்று ஆசிரியர்களும் காலத்தால் ஏற்படும் மாற்றங்களை ஆராய்கின்றார்கள். உடலியல் வல்லுநர்கள் அதனுடைய உடலமைப்பு ஆதாரங்களைப்பற்றிக் குறிப்பெடுத்துக்கொள்ளுகின்றார்கள். மெய்ப் பொருளியலார் அதனுடைய தோற்றம், தொடக்க வளர்ச்சி ஆகியவற்றைப்பற்றிச் சிந்திக்கின்றனர். சமூக உளவியலார் மொழியை மனித நடத்தையின் ஓர் அமைப்பாகக் கொண்டு ஆராய்கின்றனர். மனிதர்களுடைய மற்ற நடத்தை

களில் மொழி கொண்டுள்ள தொடர்புகளைப்பற்றியும் சமூக உளவியலார் ஆராய்கின்றனர்.

மொழியைச் சமூக நடத்தையின் ஓர் அமைப்பாக எடுத்துக் கொண்டு ஆராயும் சமூக உளவியலார் அதனுடைய மூன்று கூறு களில் முக்கியமாகக் கவனம் செலுத்துகின்றனர். அவை மொழியின் சமூக அடிப்படைகள், மொழியின் இயல்பு, அடை யாளக்குறிச் சூழ்நிலைகள் என்பவை.

மொழியின் சமூக அடிப்படைகள்

மனித இன இயல் வல்லுநர்கள் மனிதர்கள் பேசுகின்ற மொழியின் தோற்றம், வளர்ச்சி, உபயோகம், மாற்றம் முதலிய கூறுகளை அறிவதில் துறை போனவர்கள் ஆவார்கள். அவர்களு டைய கருத்துப்படி எல்லா மக்களுமே தங்களுக்கென்று ஒரு மொழி யைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதாகும். அவர்கள் இக் கருத்தில் மிகவும் உறுதியாக இருக்கின்றார்கள். நாகரிகத்தின் முதற்படி யிலுள்ள மக்களாக இருந்தாலும், நல்ல முதிர்ச்சியுற்ற நாகரிகத் திலுள்ள மக்களாக இருந்தாலும் ஏதேனும் ஒரு வடிவத்தில் ஒரு மொழியுடையவர்களாக இருக்கின்றார்கள். எந்த நாட்டில் வாழ் கின்ற பழங்குடி மக்களாக இருந்தாலும், அவர்கள் கற்காதவர் களாக இருந்தாலும் பேச்சில் ஓர் ஒழுங்குமுறையுடையவர் களாகவே இருக்கின்றார்கள். பல்வேறு நாடுகளிலும் பேசப்படுகின்ற மொழிகளில் மாறுபாடுகள் இருப்பதை நாம் நன்கு காண முடி கின்றது. சில நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு வந்த ஒருவர் இதைப்பற்றி நன்கு விளக்கிக் கூற முடியும்.

ஒவ்வொரு மொழியும் மற்ற மொழிகளிலிருந்து மாறுபட்டு தான் காணப்படுகின்றது. ஆனாலும், ஒவ்வொரு மொழியும் தனக்கென்று சில பண்புக்கூறுகளைக்கொண்டிருக்கின்றது. அந்த வழியில் தோற்றத்திற்குப் புலப்படாத சில குணப் பண்புகளு மிருக்கலாம். எவ்வாறெனில், ஒவ்வொரு மனித சமூகமும் ஒரு மொழியையுடையதாக இருக்கின்றது. ஒவ்வொரு மொழிச் சமூகமும் சிக்கல் நிறைந்ததாகவும், புரிந்துகொள்ள முடியாத தாகவும், மிகுந்த அனுபவங்களையும் மனப்போக்குகளையும் கொண்டதாகவும் இருக்கலாம். ஒரு மொழியைச் சேர்ந்த சமூகத்தைப் புரிந்துகொள்ளுவதற்கு எவ்வளவு குறிப்பிடத்தக்க இயந்திர நுட்பம் தேவைப்படுகின்றதோ அதே அளவு நுட்பம் மற்றொரு மொழிச் சமூகத்தைப் புரிந்துகொள்ளவும் தேவைப் படுகின்றது என்று மொழி வல்லுநர் எட்வர்டு சபிர் (Edward Sepir) என்பவர் கூறுகின்றார்.

பழக்கத்திலிருக்கின்ற ஒவ்வொரு மொழியும் குறைந்தது ஐயாயிரம் சொற்களையாவது கொண்டிருக்க வேண்டும். பண்படாத மொழிகளும் சிக்கல்களைக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக, ஒரு தென் அமெரிக்கா, இந்தியர். இனத்துமொழி, உணர்ச்சிக் குறிப்பு, மூவிடம், காலம் ஆகியவற்றைக் குறிப்பதற்குச் சுமார் நானூறு முடிவுகளைக் கொண்டிருக்கின்றது. சில ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்களின் மொழிகளில் இரட்டை, மும்மடங்கு, நான்மடங்கு கொண்ட பெயர்ச்சொல் வடிவங்கள் வழக்கத்திலிருந்து வருகின்றன. எனவே, உலகம் முழுவதிலும் உள்ள மக்களிடையே பேச்சு வடிவம் விருத்தியடைந்துள்ளது என்பது தெளிவாகின்றது. அதனால்தான் மொழியை மனித இனத்தின் அடிப்படை நிறுவனம் என்று சிலர் கூறுகின்றனர்.

மொழியின் சமூக மரபுரிமைப் பண்பு: எந்த ஒரு சமூகமும் தனக்கே உரித்தான சமூக மரபுரிமைப்படித்தான் நடவடிக்கைகளிலும், நம்பிக்கைகளிலும், பேச்சிலும் ஈடுபடுகின்றது; ஒரு சமூக மரபுரிமைப்படித்தான் உண்பது, உடுப்பது, மற்றப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையும் மேற்கொள்ளுகின்றது. இந்த வகையான சமூக மரபுரிமையைப் பண்பாடு என்று குறிப்பிடுகின்றனர். இந்த வகையான சமூக மரபுரிமை உயிரியல் மரபுரிமையினின்றும் முற்றிலும் வேறுபட்டதாகும். உயிரியல் மரபுரிமை உயிரணுக்களின்மூலமாகப் பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்கு அனுப்பப்படுகின்றது. மனிதர்களின் தலைமுடியின் நிறம், கண்களின் நிறம், உடல் நிறம், மற்ற உடற் கூறுகள் ஆகியவற்றை உயிரணுக்கள்தான் நிர்ணயிக்கின்றன. சமூக மரபுரிமைக்கும் உயிரியல் மரபுரிமைக்கும் உள்ள அடிப்படை மாறுபாடு என்னவெனில், சமூக மரபுரிமை பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளுக்கு உயிரியல் கூறாக அனுப்பப்படுவதில்லை. ஒரு பண்பாட்டிலுள்ள குழந்தை சமூக மரபுரிமையைக் கற்றல் மூலமாகப் பெறுகின்றான்.

கற்றல் செயல்முறையின் மூலமாகப் பெறப்பட்ட சமூக மரபுரிமைக் கூறான மொழி ஒரே நாட்டில் வெவ்வேறு வகையாகப் பேசப்படுகின்றது. ஒவ்வொருவரும் தம்முடைய பழக்க வழக்கங்களுக்கு ஏற்பவும், நம்பிக்கை, சிந்தனை, வாழ்க்கை முறைகள் ஆகியவற்றிற்கு ஏற்பவும் மொழியைப் பேசுகின்றனர். சில சமூகங்களில் சாப்பாட்டை ஒரு முக்கிய நிகழ்ச்சியாகக் கொள்ளுகின்றனர். சில சமூகங்களில் அவ்வாறு கருதுவதில்லை. சில சமூகங்களில் திருமண நடவடிக்கையில் காதலுக்கு முக்கியத்துவம்

அளிப்பதில்லை. ஆனால், சில சமூகங்களில் காதலுக்குப் பிறகுதான் திருமணம் நிச்சயிக்கப்படுகின்றது.

குழந்தைகள் பேசக் கற்றுக்கொள்ளுகின்ற மொழியைப்பற்றி ஆராய்ந்து பார்ப்போமானால், அஃது அவர்கள் வாழுகின்ற சமூகத்தின் மொழியாகுமே தவிர, அவர்களுடைய சொந்த மொழியன்று என்றுதான் கூறத் தோன்றுகின்றது. ஒரு சமூகத்தின் மொழி, அதனுடைய எல்லா வழிகளிலும் சமூக மரபுரிமை யாகவே இருக்கின்றது. மற்ற எல்லாப் பண்புக்கூறுகளைப் போலவே மொழியும் பரம்பரையாக வழி வழியாகச் சென்று கொண்டிருக்கின்றது. புதியதாகப் பிறந்த குழந்தை பெற்றோரின் மொழியைப் பேச முடியாத நிலையிலிருக்கின்றான். பேசும் திறமையைப் பெறுவதற்கான உடல் முதிர்ச்சியை அவன் பெற்றிருக்கவில்லை; வளர்ச்சி பெற்று வரும்பொழுது மற்றப் பழக்க வழக்கங்களைக் கற்று வருவது போலவே மொழியையும் தேவைக்கேற்பக் கற்று வருகின்றான்; எந்தெந்தப் பொருள் களுடன் எந்தெந்தச் சொற்கள் சொல்ல வேண்டுமென்பதையும் அறிந்துகொள்ளுகின்றான். மேலும், அவன் சொற்களின் ஒழுங்கு முறையையும், நிறுத்தக்குறி முறைகளையும் கற்றுக்கொள்ளு கின்றான்; எழுதுவதற்குக் கற்கின்றபொழுது எழுத்துக் கூட்டலை யும் கற்கின்றான். குழந்தைகள் பின்பற்றக்கூடிய மொழி வரை யளவுகளை முதியோர்கள் வகுத்துள்ளார்கள்.

மொழியை உபயோகிப்பதில் உச்சரிப்பு, விளக்கம் கூறல், பொருள் கூறல், பேசுதல், எழுதுதல் ஆகியவற்றில் ஒவ்வொரு வரும் தங்களுடைய தனித்தன்மையைப் பதிக்கச் செய்யலாம். ஆனால், இவ் வகையான தனி மனிதர்களின் கையாளும் முறை களுக்கு ஒரு பொதுவழி இருந்து வருகின்றது. மொழி ஒரு குழுவி னுடைய செய்பொருள். மற்ற எல்லாச் சமூக மரபுரிமைகளைப் போலவே கற்றாக வேண்டும். குழந்தைகள் விளையாடும் பொழுதும், சாப்பிடும்பொழுதும், மிருகங்களைப் பார்க்கின்ற பொழுதும் புது சொற்களை உண்டாக்குகின்றார்கள். சமூகம் அந்தச் சொற்களையெல்லாம் ஏற்றுக்கொள்ளுவதில்லை. ஆனால், குழந்தைகள் உபயோகிக்கின்ற சொற்களைப் பெற்றோர் அறிந்துகொள்ளுகின்றனர். குழந்தைகளிடம் பேசும்பொழுது அவர்கள் உபயோகித்த சொல்லையே உபயோகித்துப் பேசுகின் றார்கள். உதாரணமாக, பூனையைப் பார்த்த குழந்தை அது எழுப்பு கின்ற ஒலியிலிருந்து அதை 'மியாவ்' என்று குறிப்பிடலாம். குழந்தை 'மியாவ்' என்று பூனையைக் குறிக்கின்றான் என்று உடனே பெற்றோர் அறிந்துகொண்டு அடுத்த முறை அதே

சொல்லை உபயோகிக்கின்றார்கள். பல குழந்தைகள் பல சூழ்நிலைகளில் பல சொற்களைக் கண்டுபிடிக்கின்றார்கள். ஆனால், அக் குழந்தையை மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமானாலும், குழந்தை வெளியுலகத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானாலும் அவன் சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள சொற்களைத்தான் உபயோகிக்க வேண்டும்.

மொழியைக் கையாளுவதில் தனியாள் வேறுபாடுகள் எங்கும் இருக்கலாம். ஆனால், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொழியிலிருந்து குறிப்பிடத்தக்க அளவு தனியாள் வேறுபாடு விலகியிருக்குமானால், சமூகம் அதைப் புறக்கணித்து விடுகின்றது. ஓரளவுக்குத் தனியாள் வேறுபாடுகள் பரந்த நோக்கத்துடன் அனுமதிக்கப்படுகின்றன. தனியாள் வேறுபாடுகளைச் சமூகம் குழந்தைகளிடம் அனுமதிக்கலாம்; வயது வந்தவர்களிடமும் சில சூழ்நிலைகளில் அனுமதிக்கலாம். வயது வந்தவர்கள் மொழியைச் சரியாக உபயோகிக்கத் தவறுவார்களானால், அவர்கள் தண்டிக்கப்படுகின்றார்கள். உதாரணமாக, தேர்வுகளில் மொழியை உபயோகித்து விடை எழுதும்பொழுது தவறில்லாமல் எழுத வேண்டும். தவறுகள் அவர்களைத் தேர்வில் தவறிவிடச் செய்து விடுகின்றன. வேலைக்கு ஆள்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது போட்டிகள் நடத்துகின்றனர். அங்குத் தவறு நேருமானால், அவர்கள் வேலைக்குத் தகுதியற்றவர்கள் என்று கருதப்படுகின்றார்கள். மற்றப் பழக்க வழக்கங்களை மீறுவதற்குச் சமூகம் காட்டுகின்ற எதிர்வினைகளைத்தான் மொழி விதிகளை மீறுகின்றவர்களிடமும் சமூகம் காட்டுகின்றது. சமூக மரபுரிமை ஒரு சமூகத்தில் ஒருமைப்பாட்டுக்குரிய பாகமாக மொழி இருந்து வருகின்றது. மொழி வழிகள் சமூகத்தின் பொதுச் சொத்தாகக் கருதப்படுகின்றன. எனவே, அதனுடைய வழிமுறைகளை முற்றிலும் யாரும் மீறிச் செல்ல முடியாது. மற்றச் சமூக மரபுரிமைகளைப் போலவே தனி மனிதர்களால் உபயோகிக்கப்பட்டுச் சொந்த முடிவுகளுக்குத் திருப்பிவிடப்படுகின்றது. தனித்தன்மை வாய்ந்த ஆளுமைகளின் வடிவங்களுக்கு ஏற்ப மாற்றியமைத்துக்கொள்ளப்படுகின்றது. ஆனால், தனி மனிதர்கள் அவர்களுக்கென்று அனுமதிக்கப்பட்டுள்ள வரைவெல்லைகளுக்குள்ளேயே இயங்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். மொழி ஒரு சமூகக் குழுவின் செய்பொருளாக இருப்பதால், அதிலிருந்து வெளிப்படும் அனுபவம் சமூகக் குழுக்களின் அங்கத்தினர்களுக்குப் பொதுவானதாக இருக்கின்றது.

தனிப்பட்ட மொழிகள் : மொழியின் சமூகக் குணவியல்பை மொழியியலார் தனிப்பட்ட அல்லது தனிச் சிறப்புக்குரிய

மொழிகள் என்று குறிப்பிட்டுக் காட்டுகின்றனர். தனிப்பட்ட மொழிகள் என்று அவர்கள் கூறுவது, தனிப்பட்ட சூழ்நிலைகளில் வைக்கப்பட்ட குழுக்களின் அங்கத்தினர்களால் பயன்படுத்தப் பட்ட மொழியையாகும். சட்டத்தின் மொழியை இதற்கு ஒரு நிகழ்ச்சிக் குறிப்பாகக் கூறலாம். சட்ட வல்லுநர்கள் தங்களுடைய தொழிலைச் செய்யும்பொழுது சாதாரண பேச்சு மொழியிலிருந்து வெகு தூரம் விலகிச் சென்றுவிடுகின்றார்கள். அவர்கள் உபயோகிக்கின்ற மொழி சட்டத்திற்குரிய ஒரு தனி மொழியாகும்.

சமயச் சார்பான மொழியையும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம். கடவுளைப்பற்றிப் பேசும்பொழுது தனி மொழியை அடிக்கடி உபயோகிக்கின்றனர். மேலும், எல்லா வகையான கொச்சை மொழிகளும் பழித்துரைமொழிகளும் தனிப்பட்ட மொழிகளாகவே கருதப்படுகின்றன. அவற்றில் ஒரு பொதுத் தன்மை காணப்படுகின்றது. தனிப்பட்ட மொழிகளின் அமைப்பை ஆராய்ந்து பார்ப்போமானால், ஒரு குறிப்பிட்ட குழுவின் செயல் முறைகளுக்கு மொழியை மாற்றியமைத்துக் கொள்ளும் ஒரு பொது மனப்பாங்கு வெளிப்படுவதைக் காணலாம். ஒவ்வொரு சமூகமும் தனக்கென்று ஒரு மொழியைப் பெற்றிருப்பது போலவே அந்தச் சமூகத்தின் ஒவ்வோர் உட்பிரிவும் ஒரு குழுக்குறியையோ, கொச்சை மொழியையோ தங்களுக்கேயுரிய தனிச்சிறப்பான சொற்களை உபயோகிப்பதையோ கொண்டிருக்கின்றது.

பொறியியல் மாணவர்கள் பொறியியில் சார்பான சொற்களையும் மொழியையும், மருத்துவ மாணவர்கள் மருத்துவத்திற்குரிய சொற்களையும் மொழியையும், இசைக்கல்லூரி மாணவர்கள் இசைக்குரிய சொற்களையும் மொழியையும் கற்கின்றார்கள். அது போலவே உளவியல் கற்போரும் தங்களுக்கென்று ஒரு சொல் துறையை (Terminology) அமைத்துக் கொண்டிருக்கின்றனர். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கற்கின்ற மாணவர்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் தங்களுக்கென்று ஒரு கொச்சை மொழியை அல்லது ஒரு குழுக்குறியை அமைத்துக்கொள்ளுகின்றார்கள். அடுத்துவரும் தலைமுறையினர் அந்த மொழியை உபயோகிப்பதில்லை; தங்களுக்கென்று வேறொன்றை உருவாக்கிக் கொள்ளுகின்றனர்.

தமிழ் பேசும் மக்களிடையேகூட இந்த வேறுபாடுகளைக் காணலாம். சென்னை வாசிகளின் பேச்சுமொழியும், தென்

ஆற்காட்டு மக்களின் பேச்சுமொழியும் ஒரேமாதிரி இருப்பதில்லை. கோயம்புத்தூர் மக்கள் பேசும் தமிழும், குமரிமாவட்ட மக்கள் பேசும் தமிழும் வேறுபடுகின்றது. இவ்வாறு மாவட்டத்திற்கு மாவட்டம் பேச்சுமொழி மாறுபடக் காணலாம். அது போலவே பள்ளி மாணவர்களும் இடத்திற்கு இடம் காலத்திற்குக் காலம் தங்களுடைய பேச்சுமொழியை மாற்றுகின்றார்கள். ஒரு சமூக மக்களில் உட்பிரிவினர் மொழியைத் தங்களுக்கே உரித்தான முறையில் பேசுகின்றார்கள். வேறோர் உட்பிரிவைச் சேர்ந்த ஒருவர் புதியதாக வந்து சேர்வாரானால், அவருடைய பேச்சிலிருந்து அவர் வேறு உட்கிளையைச் சேர்ந்தவர் என்று உடனே கண்டறிய முடியும். ஒவ்வோர் உட்பிரிவினரும் ஒரு தனிப்பட்ட மொழியைப் பேசுவதற்கு என்று அமைத்துக்கொண்டுள்ளனர். தனிப்பட்ட மொழியில் பல சொற்கள் சுருக்கெழுத்து வகையைச் சேர்ந்தவையாகும். அதனால் அம் மக்கள் காலத்தை மிச்சப் படுத்துகின்றார்கள். சாதாரண மொழியில் உபயோகிக்கப்படும் சொற்களைவிடத் தனிப்பட்ட மொழியில் உபயோகிக்கப்படும் சொற்கள் மிகவும் சுருக்கமான குறிப்புகளைக் கொண்டவையாக இருக்கின்றன. எனவே, தனிப்பட்ட மொழிகளை உபயோகிப் பதன்மூலம் அம் மக்கள் தங்களுடைய கருத்துகளைச் சீக்கிரம் வெளிப்படுத்தவும், பொருள்களை எளிதில் புரிந்துகொள்ளவும் முடிகின்றது.

மொழியும் குழு அனுபவங்களும்: மக்களுடைய வரலாறும், தனிநலன்களும் அவர்களுடைய மொழிகளில் ஆச்சரியப்படக் கூடிய அளவுக்குப் பிரதிபலிக்கின்றன என்பதை எந்தப் பண் பாட்டிலும் காண முடியும். எந்தக் குறிப்பிட்ட ஒரு மொழியையும் அதைப் பேசுகின்ற மக்களையும் எடுத்துக்கொண்டு நோக்குவோமானால், இந்த உண்மையை நன்கு புலப்படுத்தலாம். ஒவ்வொரு வாழ்க்கைத் துறையிலும் தங்களுடைய அனுபவங்களை வேறுபடுத்திக் காட்டுவதற்கான கருத்துச் சொற்கள் பலவற்றை மக்கள் உபயோகித்து வரலாம்.

கடற்பகுதிகளில் வாழ்கின்ற மக்களும், மலைப்பகுதிகளில் வாழ்கின்ற மக்களும், பனிப்பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களும், பாலைவனப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களும் தங்களுடைய வாழ்க்கைக்கு ஏற்பவும், சுற்றுச் சார்புகளுக்கு ஏற்பவும், உபயோகிக்கின்ற பொருள்களுக்கேற்பவும் கருத்துச் சொற்களை உருவாக்கிக் கொள்கின்றார்கள். ஒரு சமூகத்தினருடைய வாழ்க்கையில் பயன்தரும் முக்கியத்துவம் வாய்ந்ததும் வேறுபாடுகளைப் பேணக்கூடியதுமான சொற்களைத்தான் கருத்துச் சொற்கள் என்று கூறப்படுகின்றன.

கடலையொட்டி வாழ்கின்ற மக்கள் ஒரு சமூகமாகவே வாழ்ந்து வரலாம். அவர்கள் கடலில் ஏற்படும் மிகச் சிறு மாறுதல்களையும் தனித்தனிக் கருத்துச்சொல்லால் குறிப்பிடுகின்றார்கள். அச்சொற்களின் பொருள்களை மற்றவர்கள் புரிந்துகொள்ள இயலாது. அது போன்றே பனிநிலங்களில் வாழ்கின்ற எஸ்கிமோ இனத்தினர் பனியைப்பற்றியும் பனிவீழ்ச்சியைப்பற்றியும் மிக நுணுக்கமாக அறிந்து, அந்த மாற்றங்களைத் தனிச் சொற்களால் குறிப்பிடுகின்றனர். மலைப்பகுதிகளில் வாழ்கின்ற சமூகத்தினரிடையிலும் இத்தகைய பண்புகளைக் காணலாம்.

அரேபிய மக்கள் பெரும்பாலும் ஒட்டகங்களிடையே வாழ்கின்றவர்கள். அவர்களுடைய மொழியனுபவங்களைக் கிலென்பர்க் (Klineberg) என்பவர் ஆராய்ந்தார். ஒட்டகத்தைப்பற்றி அரேபியர்களிடையே சுமார் ஆறுயிரம் சொற்கள் பழக்கத்திலிருந்து வருகின்றனவாம். இவை ஒட்டகத்திலிருந்து பெறப்பட்டவையாகும். சில ஒட்டகத்தின் குணவியல்புகளைக் குறிக்க உபயோகிக்கப்பட்டவையாகும். இச் சொற்கள் பலவகை அனுபவங்களைக் குறிக்கின்றன. ஒட்டகங்களின் பெயர்கள், பயன்களுக்கேற்ப வகுக்கப்பட்ட ஒட்டகங்களின் வகைகள், மேன்மையான குடி மரபின் பல்வேறு படித்தரங்களின் பெயர்கள், குழுக்களில் ஒட்டகங்களின் பெயர்கள், மேயுமினம், பாதுகாப்புடன் பிரயாணம் செய்யுமினம், போர்மேல் செல்லுமினம் முதலிய பயன் முறையைப்பற்றிய குறிப்புகள் கொண்ட பெயர்கள் என்று பலப் பல வகையாகப் பெயர் வைத்திருந்தனர். கருத்தளித்த ஒட்டகத்தைக் குறிப்பிடுவதற்கே ஐம்பது கருத்துச் சொற்களை அரேபியர்கள் உபயோகிக்கின்றார்கள்.

எந்த ஒரு சமூகத்திலுங்கூடக் குறிப்பிட்ட வாழ்க்கை முறையைப்பற்றிப் பேசுகின்றபோது ஒருவர் உபயோகிக்கின்ற சொற்களைக் கேட்டவுடன் அவர் அந்தச் சமூகத்தில் எந்த உள் பிரிவைச் சேர்ந்தவர் என்று கண்டறிந்துகொள்ளலாம். இத் துறையில் ஆண்களை விடப் பெண்கள் அதிகமான கருத்துச் சொற்களை உபயோகிக்கின்றார்கள். உள் பிரிவினர் உபயோகிக்கின்ற தனிப்பட்ட மொழிகள் அவர்களுடைய தனி நலன்களையும் புலப்படுத்துகின்றன. சமூகவியலார்கள், மருத்துவர்கள், சிப்பாய்கள், பத்திரிகையாளர்கள், வங்கியாளர்கள், போட்டி விளையாட்டு வீரர்கள், பொறியியலார்கள், கல்லூரி மாணவர்கள் முதலியோரின் மொழி மரபுகளும், பேச்சு மொழிகளும் அவர்கள்

மிகவும் ஈடுபாடு கொண்டுள்ளவற்றைப் பிரதிபலிக்கின்ற கண்ணாடிகளாக இருக்கின்றன.

குழுவிலுள்ள அங்கத்தினர்கள் முக்கியம் என்று கருதுகின்ற சூழ்நிலையின் பண்புக்கூறுகளின் உருவாகவும், அவற்றை ஏற்றிச் செல்லும் வாகனமாகவும் மொழி இருந்து வருகின்றது. மக்கள் உபயோகிக்கின்ற சொற்கள் அவர்கள் உலகில் தேர்ந்தெடுத்த வாழ்க்கைக்கூறுகளைக் குறிப்பிடுகின்றன. சமூகக் குழுக்களுக்குப் பொதுவாக இருக்கின்ற சிறப்புக்கூறுகளைக் குறிப்பிட்டுக் காட்டு கின்றது மொழியேயாகும். சாலமன் தீவில் வசிக்கின்ற மக்கள் தென்னையின் வளர்ச்சிப் பருவங்களை ஒன்பது பெயர்களில் குறிப் பிடுகின்றார்கள். அவற்றில் ஒன்றுகூட இங்கு நாம் தென்னையைப் பற்றிக் குறிப்பிடுகின்ற பெயராக இல்லை. ஆனால், அதே மக்கள் சாப்பாட்டைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது ஒரே சொல்லைத் தான் உபயோகிக்கின்றார்கள்; நான்கு நேரங்களில் உட்கொள்ளு கின்ற நான்கு வகையான சாப்பாட்டைப்பற்றியும் அவர்கள் ஒரே சொல்லைத்தான் உபயோகிக்கின்றார்கள். இதிலிருந்து தென்னை வளர்ப்பில் அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் என்று தெரிகின்றது.

குழு நடவடிக்கையும் செய்தி இணைப்பும்: எல்லாக் குழு நட வடிக்கைகளும் செய்தி இணைப்பைச் சார்ந்திருக்கின்றன. மொழி யானது ஒரு குழுவின் செய்பொருள் மட்டுமன்று. அஃது அந்தக் குழுவின் தனி நலன்களின் உருவாகவுமிருக்கின்றது. அது மிகவும் தேவையான இயங்கு களமாகும். அதனுடைய உதவியின்றிப் பெரும்பாலான மனிதக் குழுக்கள் செயல்படவே முடியாது. ஒரு சிறு குடும்பம் போன்ற மனிதக் குழுக்கள் பேச்சின்றி வாழ முடியும். ஆனால், அத்தகைய குழுக்கள் வளர்ச்சியுற்றுப் பெருகுவதற்குப் பேச்சு என்ற வாயிற்பொருள் மிகவும் அவசியமாகும். ஒரு சமூகம், ஒரு நாடு, ஒரு சபை, ஒரு பள்ளிக்கூடம், ஒரு கல்லூரி, ஒரு விளையாட்டு அரங்கம், ஒரு தொழில் கலை, ஒரு பட்டாளம் முதலியவை அனைத்தும் மொழியின் துணைகொண்டு இயங்கு கின்றன. மொழியில்லை என்றால் இவை இயங்கா.

சமூகவியலாரின் முக்கிய செய்திப் பொருள் மனிதர் குழுக் களைப்பற்றி ஒழுங்குமுறையாக அறிவதாகும். அவர்கள் கூறுவது என்னவெனில், மனிதர்கள் ஒரு குழுவாக அமைக்கப்பட வேண்டு மானால், அவர்களிடையே ஒரு பொது நோக்கமிருக்க வேண்டும். குறிக்கோள் அவர்களுக்கு ஒன்றாகவும், மதிப்பீடுகளைப்பற்றி ஒன்றுபட்ட கருத்துமிருக்க வேண்டும் என்பதாகும். முழு அங்கத்

தினர்களிடையே ஒருமனப்பட்ட தன்மையிருக்க வேண்டும். குழு அங்கத்தினர்களிடையே இஃது இல்லை என்றால், அவர்களுடைய வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்க முடியாது. எனவே, எண்ணங்களையும் செய்திகளையும் இணைத்தாக வேண்டும். எண்ணங்களையும் செய்திகளையும் இணைப்பதற்கு ஒரு வாயிற்பொருள் வேண்டும். அந்த வாயிற்பொருள்தான் மொழியாக இருக்கின்றது. எனவே, மொழி என்ற செய்தி இணைப்பு இன்றி குழு அங்கத்தினர்களிடையே ஒருமனப்பட்ட தன்மை நிலவ முடியாது. பழக்க வழக்கங்களையும், பயிற்சித் திறமைகளையும், குறிக்கோள்களின் வகுப்பு முறைகளையும், தந்திர முறைகளையும், விதிகளையும், முன்னேற்றங்களையும் ஒரு பரம்பரையினரிடமிருந்து பெற்று அடுத்த பரம்பரையினருக்கு அனுப்புவதற்கு மொழியைத் தவிர வேறு கருவி மனிதர்களுக்குக் கிடையாது. மனிதக் குழுக்களின் அமைப்புகளுக்குக் காலத்தாலும் இடத்தாலும் தொடர்ச்சியளிப்பது மொழியேயாகும்.

மொழியின் இயல்பு

மனிதர்களின் செய்தி இணைப்பு முறைகளும் இயல்புகளும் மிருகங்களின் செய்தி இணைப்பு முறைகளிலிருந்தும் இயல்புகளிலிருந்தும் முற்றிலும் மாறுபட்டிருக்கின்றன. மிக முக்கியமான மாறுபாடு மொழியை உபயோகிப்பதுதான். மொழி மனிதர்களின் செய்தி இணைப்பின் வாயிற்பொருளாகும். அது மிகவும் சிக்கலான வாயிற்பொருளாகும். எனவே, அதைத் தெளிவாக விவாதிப்பது முறையாகும்.

சைகைகளும், அறிகுறிகளும், மொழியும்: சைகைகளையும் அறிகுறிகளையும் வகைப்படுத்திப் பாகுபாடு செய்தல் மிகவும் சிக்கலான செயலாகும். மேலும், அது வாத எதிர்வாதங்களுக்கும் வழி வகுக்கின்றது; பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துச் சொற்களும் நிலையாகப் பயன்படக்கூடிய சொற்தொகுதிகளும் பல மொழிகளில் இன்னும் அடையப் பெறவில்லை. முயற்சிகள் எவ்வளவுதான் மேற்கொண்டாலும் நிறைவு முற்றுப் பெறவில்லை. எனவே, சில செய்தி இணைப்புகளில் குழப்பம் ஏற்படுகின்றது. இஃது எவ்வளவு கடினமான பிரச்சினை என்பதையும் நாம் அறிய முடிகின்றது. எனவே, சில அடிப்படையான மாறுபாடுகளைப்பற்றி மட்டும் இங்கு நாம் காண விரும்புவது நலம் என்று தோன்றுகின்றது.

எல்லா உயிரினங்களும் தங்களுடைய சூழ்நிலையில் குறிப்பு களுக்குத் துலங்குவதற்குக் கற்றுக் கொள்ளுகின்றன. மணியின் ஓசைக்கும் சாப்பிடுவதற்கும் எந்த விதமான தொடர்புறவும் கிடையாது. ஆனால், மணியின் ஓசையைக் கேட்ட நாய் சாப்பாட்டை எதிர்பார்த்துத் துலங்குகின்றது. நாயினுடைய கடந்த அனுபவங்களில் சாப்பாடு அதற்குக் கிடைப்பதற்கு முன்பு மணியோசை ஒலித்திருக்க வேண்டும். எனவே, மணியோசையை நாய் சாப்பாட்டின் அறிகுறியாக எடுத்துக்கொள்ளுகின்றது. மேலும், நாய் கண்ணால் பார்க்கக்கூடிய குறிப்புகளுக்கும் துலங்கு கின்றது. அசைவுகள், மணம் ஆகியவையும் உணவுடன் தொடர்பு கொண்டிருக்குமானால், அவற்றிற்கும் நாய் துலங்கு கின்றது. இவ்வாறு அறிகுறிகளைக் கற்றுக்கொண்டு துலங்குவதை உளவியலார் ஆக்கநிலையிறுத்தல் என்று கூறுகின்றனர். உளவிய லார் தம்முடைய பரிசோதனைக்கூடங்களில் பல மிருகங்களை ஆக்க நிலையிறுத்தம் செய்து மாற்றுத் தூண்டல்களுக்குத் துலங்குமாறு செய்துள்ளனர். மனிதனாக இருந்தாலும் மற்ற மிருகங்களாக இருந்தாலும் உயிர் வாழ்கின்ற எல்லா இனங்களும் இப்படிப்பட்ட குறிப்புகளைக் கொண்டிருக்கின்றன. அவற்றின் நடத்தையும் இந்தக் குறிப்புகளுக்குத் துலங்குவதைக் கொண்டுதான் கணிக்கப் படுகின்றது. கற்கப்பட்ட குறிப்புகளை அறிகுறிகள் என்றும் கூறலாம்.

அறிகுறியைத் தூண்டல் என்று தொழில்துறை முறையாகக் கொள்ளலாம். அது ஒரு துலங்கலை உண்டாக்குகின்றது. இந்தத் துலங்கல் மற்றொரு தூண்டல் எழுப்பிய அதே துலங்கலைப் போன்றதாகும். அறிகுறி நடத்தையானது எளிதாக இருந்து மிகவும் சிக்கலானதாகச் சுதிவரிசை போன்று செல்லுகின்றது. மிகவும் அடிப்படை வடிவமான ஆக்க நிலையிறுத்தல் நிலையி லிருந்து அது மிகச் சிக்கலான சொல் சார்ந்த நடத்தை வரையில் பரவியிருக்கின்றது. இந்த இரண்டு கோடிகளுக்கிடையிலும் மிகவும் பரந்து விரிந்த அறிகுறி சூழ்நிலைகள் இருக்கின்றன.

ஓர் எளிய அறிகுறித் துலங்கலை ஒரு மிருகத்தினிடம் உண் டாக்க முடியும். மணியொலியை எழுப்பி ஒரு மிருகத் திற்கு உணவு தரப்படுமானால், மணியொலியைக் கேட்டவுடன் உணவு வருகின்றது என்று அம் மிருகம் துலங்குவதற்குக் கற்றுக் கொள்ளுகின்றது. இந்தச் சூழ்நிலையைப் பல்வேறு வழிகளிலும் மிகவும் சிக்கலாக்க முடியும். அம் மிருகம் எதிர்பார்க்கின்ற ஊதி யத்தைத் தாமதித்தல், தண்டனை முறையைப் புகுத்தல், பண் முகத் தேர்வுப் பிரச்சினையை உண்டாக்கல், ஒரே சமயத்தில்

இரண்டு அறிகுறிகளுக்குத் துலங்கச் செய்தல் போன்ற வழிகளில் சிக்கலாக்கலாம்.

சில வழிகளில் எல்லா உளவியல் நடத்தைகளுமே ஓர் அளவில் அறிகுறி நடத்தையேயாகும். எனவே, சில உளவியலார் கருதுவது போன்று உளவியல் நடத்தையை அறிகுறி நடத்தை என்று கூறுவதும் உண்மையில் சரியாகவே இருக்கின்றது. இக் கருத்தை விளக்கிக் கூறலாம். ஒரு பெட்டியின் புலன்காட்சி என்ற ஓர் எளிய உளவியல் நடவடிக்கையை எடுத்துக்கொண்டு ஆராய லாம். ஒரு பெட்டி புலன்காட்சி பெற்றபொழுது என்ன நிகழ் கின்றது என்று ஓர் உடற்கூற்று உளவியலாரைக் கேட்போமானால், அவர் என்ன கூறுவார்? பெட்டியிலிருந்து பிரதிபலித்த ஒளி கண்களை அடைகின்றது என்றுதான் குறிப்பிடுவதற்கு அவர் தொடங்குவார்; பிறகு, ஒளி எவ்வாறு கண்ணின் விழித்திரையில் விழுகின்றது என்று விளக்கம் தருகின்றார்; அடுத்து, விழித்திரை எவ்வாறு மைய நரம்பு மண்டலத்துடன் இணைக்கப்பட்டிருக் கின்றது என்றும், நரம்புகளின் வழியாக எவ்வாறு துடிப்புகள் செல்லுகின்றன என்றும் கூறுகிறார். நாம் கண்களால் பார்க் கின்ற நடவடிக்கை முற்றிலும் நம்முள் நடைபெறுகின்றதாக விளக்கப்படுகின்றது. சுருக்கமாகக் கூறுவோமானால், பார்க் கின்ற செயல்முறை அறிகுறிச் செயல்முறையாகும். அச் செயல் முறையில் நம்முள் நடைபெறுவது உண்மையான பெட்டியின் அறிகுறியைத் தெரிவிப்பதாகும். இந்த விளக்கம் முடிவுற்றதும், 'ஒரு பெட்டியை நமக்கு வெளியில் ஏன் பெட்டியாகக் காண் கின்றோம்? விழித்திரையின் ஒரு பிம்பமாக ஏன் காணுவதில்லை?' என்ற வினாக்களுக்கு விளக்கம் கிடைப்பதில்லை. ஏனென்றால், வெளி யிலுள்ள பொருள்களை நாம் அனுபவத்திலிருந்து கற்றுத் தெரிந்து கொள்ளுகின்ற வரையில் புலன் சார்ந்த தூண்டல் வெளியிலுள்ள பொருள்களைக் குறிப்பிடுவதில்லை. வெளியிலுள்ள பொருள் பெட்டி என்று ஏற்கெனவே அனுபவத்தின்மூலம் நாம் தெரிந் திருப்பதால், அதைப் பெட்டியாகக் காண்கின்றோம்.

மனிதர்களின் அறிகுறி நடத்தை வியப்பைத் தருகின்ற அளவுக்கு விரிந்து பரந்து காணப்படுகின்றது. அது குறைமனங் கொண்ட கற்றறிய முடியாதவனுடைய எளிய சிந்தனைச் செயல் முறையிலிருந்து சிறந்த நுண்ணறிவு மிக்கவருடைய சிக்கல் நிறைந்த சிந்தனை வரையில் விரிந்துள்ளது. பெரும்பாலும் எந்த ஒரு பொருளும், செயலும், நிகழ்ச்சியும், பண்பும் ஏதாவது ஒன்றின் அறிகுறியாகச் செயல்படலாம். ஓர் இரும்புத்துண்டு பழுப்பு ஏறியதாகக் காணப்படுமானால், அது மிகவும் சூடாக

இருக்கின்றது என்று பொருள். உடலுறுப்புகளில் காணப்படும் சில மாற்றங்கள் ஒரு மனிதன் கோபம் கொண்டிருக்கின்றான் என்பதையும், வேறு சில மாற்றங்கள் அவன் பயங்கொண்டிருக்கின்றான் என்பதையும் காட்டுகின்றன. கண்ணீர் விடுதல் துன்பம் அல்லது வருத்தத்தின் அறிகுறி என்றும், சிரித்தல் மகிழ்ச்சியின் அறிகுறி என்றும் எளிதில் நாம் அறியலாம். பச்சைக்கொடி காட்டினால் புகைவண்டி புறப்படுகின்றது; சிகப்புக்கொடி காட்டினால் நிற்கின்றது. காற்று அழுத்தமானியில் இறக்கம் காணப்பட்டால் வானிலையில் மாற்றம் ஏற்படுகின்றது என்று நாம் அறிகின்றோம். எனவே, அறிகுறிகள் பொருள்களையும், நிகழ்ச்சிகளையும், மற்றவற்றையும் புரிந்துகொள்ள உதவுகின்றன.

இந்த அறிகுறிகளைவிடச் சொற்கள்தான் முழு நிறைவான அறிகுறிகளாகும். சொற்களின் துணைகொண்டு எந்தப் பொருள் பற்றியும் நாம் விரிவாகக் கூற முடியும். ஒரு நிகழ்ச்சி நடந்து முடிந்ததாக இருந்தாலும், நடந்துகொண்டிருந்தாலும், நடக்கப் போவதாக இருந்தாலும் அதை நாம் சிறப்பாகக் கூற முடியும். எதை நாம் சிந்திக்கின்றோமோ அதையும் பிறருக்குத் தெளிவாகத் தெரிவிக்க முடியும். மேலே நாம் கண்ட விளக்கங்களிலிருந்து அறிகுறிகள் எவ்வாறு பல்வேறு வழிகளிலும் பொருள்களைக் குறிப்பிடுவதில் தொடர்புறவு கொண்டிருக்கின்றன என்று தெளிவாகின்றது.

குறிப்பிடப்படுகின்ற பொருள் அதனுடைய தன்மையில் பல்வேறு பண்புகளைக் கொண்டிருக்கலாம். அந்தப் பண்புகளையெல்லாம் அறிகுறிகள் காட்ட முடியாமலிருக்கலாம். அறிகுறிகள், எல்லா வகையான உண்மைச் செயல்களையும், நிகழ்ச்சிகளையும், பொருள்களையும் குறிப்பிடுவதோடல்லாமல் இல்லாதவற்றையுங்கூடக் குறிப்பிடலாம். அவற்றைக் கற்பனை செய்து தான் பார்த்துக்கொள்ள முடியும். அறிகுறிகள் மற்ற அறிகுறிகளையும் குறிப்பிடலாம். அறிகுறிளோடு நடைபெறக்கூடிய இயக்கங்களையும் அறிகுறிகள் சுட்டிக் காட்டலாம். உதாரணமாக 'க'வுக்கும் 'ச'வுக்குமிடையில் ஒரு பெருக்கல் குறியைப் (க×ச) போடுவதன்மூலம் குறியின் இயக்கம் இரண்டு பொருள்களுக்கிடையில் என்ன என்பது புலனாகின்றது. குறி நடத்தை எப்பொழுதுமே குறைந்தது ஒரு மும்மையான (triedic) தொடர்புறவை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. அவை, ஒரு நோக்குவோன் அல்லது ஒரு விளக்கிக் கூறுவோன், ஓர் அறிகுறி, என்ன குறிப்பிடப்படுகின்றது என்பவை. இக் கருத்துப்படி, ஓர் அறிகுறிக்கு விளக்கம் தரப்படவில்லை என்றால் அது செயல்படவில்லை என்று ஆகின்றது; மேலும், மற்றப்

பொருளின் அறிகுறியைக் குறிப்பிட்ட பொருளோடு குழப்பிக் கொள்ளுவதைத் தடுக்கவும் உதவி புரிகின்றது.

அறிகுறிகள், மரபொழுங்கானவை, இயற்கையானவை என்று வகைப்படுத்தி, சிக்கல்களை மேலும் கூட்டுகின்றனர். இயற்கை யான அறிகுறிகள், ஓர் அசைவு, ஒளி, மணம், சைகை முதலியவை யாகும். மேலும், எந்த ஒரு பொருளோடும் இணைக்கப்பட்டு வழக்கமாக முன் செல்லுகின்ற ஒரு தூண்டல் காணப்படுமானால், அதுவும் இயற்கையான அறிகுறியாகும். இயற்கை அறிகுறியும் அது குறிப்பிடுகின்ற பொருளும் ஒரே கால இட எல்லையில் ஒன்றாகவே தோன்றுகின்றன. இரண்டும் ஒரு பருப்பொருளான சூழ்நிலையின் பகுதிகளாக இருக்கின்றன. உதாரணமாக, முயலைத் தொடர்ந்து ஓடுகின்ற வேட்டைநாய் முயலின் மோப்பத்தை உண்மையான முயலின் மணத்துடன் இணைக்கின்றது. ஏனென்றால், முயலும் அந்த மணமும் ஒன்றாகச் செல்ல முடியும் என்று நாய் அறிந்திருக்கின்றது.

மரபொழுங்கான அறிகுறி இதற்கு முற்றிலும் மாறாக இருக் கின்றது. சமூக மன ஒற்றுமையிலிருந்து இது பெறப்படு கின்றது. மேலும், இது நகரக் கூடியது; ஒருதலையானது; பல மொழிகளில் பல அறிகுறிகள் ஒரே பொருளைக் குறிப்பதாக இருக்கலாம். ஒரு பொருள் இல்லாத சூழ்நிலையிலும் இந்த அறிகுறி ஒரு பொருளைக் குறிக்கலாம். மரபொழுங்கான அறிகுறிகள் சமூகக் குழுக்களுக்குத் தொடர்புடையவையாகும். ஓர் அறிகுறிக்கு ஒரே பொருளைப் பலரும் உபயோகிக்கின்றனர். எனவே, குழப்பம் ஏற்படுவதில்லை.

இயற்கை அறிகுறிகள் இயற்கையாக நிகழுகின்றன என்ற பொருளில் அப் பெயர் பெறவில்லை. அவற்றில் மனிதர்களின் கைத்திறமைகளும் கலந்திருக்கலாம். உதாரணமாக, நாய் உணவுக்குத் துலங்குகின்றது. உணவு இயற்கை அறிகுறி. ஆனால், அதே நாய் மணியோசைக்கும் துலங்குகின்றது. மணியோசை மனிதனால் இயக்கப்பட்டு நாயின் துலங்கலைப் பெறுகின்றது. மரபொழுங்கான அறிகுறிகளைக் குறியீடுகள் (Symbols) என்ற சொல்லால் குறிப்பிடுகின்றனர். மனிதர்களின் குறியீடு நட வடிக்கைகளின் சிறப்புக்கூறின் வடிவங்கள் மொழியுடனும் அல்லது அதனிடமிருந்து பெறப்பட்டவையுடனும் தொடர்பு கொண்டவை; மொழிக் குறியீடுகளின் மூன்று சிறப்புக் கூறுகளை மற்ற அறிகுறிகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. அந்த மூன்று சிறப்புக் கூறுகளையும் இங்குக் குறிப்பிடுவது நலம்.

மொழிக் குறியீடுகள் ஒழுங்கமைப்புகள் கொண்டவை. அதனால் எந்த ஒரு குறியீடும் தனித்துப் புரிந்துகொள்ளக்கூடியதன்று. அஃது அதனுடைய ஒழுங்கமைப்புக்குள்தான் புரிந்து கொள்ளப்படுகின்றது. உதாரணமாக, குழந்தை என்ற சொல்லைக் குடும்பம், பெற்றோர், கணவன், மனைவி, திருமணம் என்ற விரிந்த தொடர் அறிகுறிகளுக்குள்தான் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

மொழிக் குறியீடுகள் குணத்திலும் பொருளிலும் இயற்கையாகவே சமூகச் சார்பானவையாகும். அவற்றை உபயோகிக்கின்ற மனிதர்களிடம் எந்த வகையான துலங்கலை அவை உண்டாக்குகின்றனவோ, அதே மாதிரியான துலங்கலை அவற்றைப் பெறுகின்றவர்களிடமும் உண்டாக்குகின்றன. செய்தி இணைப்பு தவருக இருக்குமானல் அல்லது பேசுகின்றவர் கேட்கின்றவரைக் கடந்து சென்ற பிறகு பேசுவாரானல் அப்பொழுது சொற்கள் அறிகுறிகளாகச் செயல்படுவதில்லை.

மொழி குறியீடுகள் தன்னிச்சையாக உண்டாக்கப்படலாம். அவை குறிப்பிடுகின்ற பொருள்களோ, நிகழ்ச்சிகளோ வெளியுலகத்தில் இல்லாதபொழுதும் மொழிக் குறியீடுகள் உபயோகிக்கப் படலாம். மனிதர்கள் மொழிக் குறியீடு ஒழுங்கமைப்புகளைத் தங்களுடனேயே கொண்டு செல்லுகின்ருர்கள். அதனல் ஒருவர் ஒரு பொருளைப்பற்றிய உரிமையை வற்புறுத்துவாரானல், அந்தப் பொருள் அங்கு இருக்கின்றது என்று மெய்யாகக் காட்ட வேண்டியதில்லை; அல்லது அஃது இருக்க வேண்டும் என்பதுமில்லை.

இந்தக் கருத்துகளைக்கொண்டு மொழி என்பது சொற்களின் ஒழுங்குமுறை என்ருே அகராதியின் பொருளடக்கம் என்ருே தவருக நினைத்துவிடக் கூடாது. மொழிமனிதர்களின் நடத்தையின் வடிவமாக இருக்கின்றது. அஃது அறிகுறிகளின் ஓர் ஒழுங்குமுறை மட்டுமன்று; அறிகுறிகளை உபயோகித்து, விளக்கம் கூறுகின்ற நடவடிக்கையாக இருக்கின்றது. மொழி நடத்தையின் பழைமையான வடிவம் பேச்சு என்று அடிக்கடி கூறப்படுகின்றது. ஆனல், மொழியின் பொருளைப் புரிந்துகொள்ளாத ஒருவனிடம் பேச்சு எந்த வகையான பயனையும் உண்டாக்க முடியாது. எனவே, உரையாடல்தான் மொழியின் உயிர்நிலையான மூலம் என்று நாம் கூறலாம். ஏனென்ருல், கூட்டுறவான சமூக நடத்தையில்தான் மொழி நடத்தை பிறக்கின்றது. இதன் காரணமாகத்தான் கிளிகள் சில சொற்களைப் பேசினலும் அவற்றினுடைய பேச்சை மொழி நடத்தை என்று நாம் கூறுவதில்லை. இந்த வழியில்

மொழியைப்பற்றிச் சிந்திப்போமானல், மொழி மிகவும் குறிப்பிடத் தக்கதாகவும், மிகவும் சிக்கல் நிறைந்ததாகவும் ஆகின்றது.

ஒருவர் ஒரு மொழியைப் பேசுவதைக் கவனிக்கின்ற நடவடிக்கையும் அதைப் புரிந்துகொள்ளுகின்ற நடவடிக்கையும் அம் மொழியைப் பேசுகின்ற நடவடிக்கையை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன என்று கருத முடியாது. மற்றவர்களுடைய சொற்தொகுதிகளுக்கு ஏற்ற முறையில் சொற்களைக்கொண்டே துலங்குவதுதான் மொழியைப் பேசுகின்ற நடவடிக்கையாகும். மற்றவர்கள் பேசுகின்ற சொற்களுக்கான துலங்கல் உடல் சார்ந்த ஒரு நடவடிக்கையாகவுமிருக்கலாம்; மறைவானதும் உள் சார்பான நடவடிக்கையாகவுமிருக்கலாம். துலங்கல் ஒரு வேளை எதிரிடையான வாழ்க்கைப் பங்காகவுமிருந்து கவனிப்போரைப் பேச்சாளராகவும், பேசுவோரைக் கவனிப்பவராகவுங்கூட இருக்கலாம்.

மரபொழுங்கான அறிகுறிகள் மொழிச் சார்பானவையாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. உதாரணமாக, பண்பாட்டுப்பொருள் இனங்களான உடைகள், உணவு வகைகள், இசை, இசைக்கருவிகள், கலை, கலைப்பொருள்கள், ஆபரணங்கள், நினைவுச்சின்னங்கள் முதலியவை அதைத் தெளிவுபடுத்தலாம். இவற்றைப் போன்ற மொழிச் சார்பில்லாத அறிகுறிகளும், மற்றும் ஆச்சாரம், சடங்கு முறைகளும் முழுமன வேற்றுமைமீது அமைந்திருக்கும் பொருளுள்ள அறிகுறிகளாகும், எனவேதான், அவை மரபொழுங்கான அறிகுறிகளின் பொது வகையாகக் கருதப்படுகின்றன. மரபொழுங்கான அறிகுறிகளில் இருப்பதாகக் காணப்படும் சிறப்புக்கூறு என்னவென்றல், ஒரு குழுவோ அல்லது ஒரு சமூகமோ கொடுக்கப்படும் அறிகுறிகளைக் கவனிப்போராக இருந்து அனைவரும் அவற்றிற்கு ஒரே மாதிரியான கவனத்தைச் செலுத்தி, ஒரே பொருளைக் கொடுக்கின்றனர். இதனுல்தான் மரபொழுங்கான அறிகுறிகள் செய்தி இணைப்பு சம்பந்தப்பட்ட வகையில் எப்பொழுதும் குழுவை உள்ளடக்கிக்கொண்டிருக்கின்றது. ஆனுல் இயற்கை அறிகுறிகள் அவ்வாறில்லை.

இதனுல் மனிதர்கள் முற்றிலும் மொழிச் சார்பான அறிகுறிகளின்மீதே இயங்குகின்றுர்கள் என்று நாம் ஊகித்துக்கொள்ள வேண்டியதில்லை. மனிதர்களுடைய நடத்தையின் தனிச் சிறப்புக்குரிய பழக்கத்தை மொழிதான் கொண்டிருக்கின்றது. மொழி, அறிகுறி நடத்தைதான் ஒன்றுக இணைந்த, தனித்த செயல் முறையாக இருக்கின்றது. அது பல வகைகளில் அடங்கி, பலப்

படித்தரங்களைக் கொண்டு, மிக எளிய அமைப்பிலிருந்து மிகச் சிக்கலான அமைப்பு வரையில் பரவியிருக்கின்றது. உதாரணமாக, பெயர்ச்சொற்களைக் குறிக்கின்றவை மிக எளிய குறியிடுச் செயல் முறையாகும். ஒரு மனிதருடைய பெயர் ஒரு குறிப்பிட்ட பொருளையே குறிப்பதால், அப் பொருளைக் குறிப்பிட்டு, ஏற்ற முறையில் சிறப்பாக அதை வரையறை செய்ய முடியும். ஆனால், இனம் அல்லது வகுப்பைக் குறிக்கின்ற பெயர் மிகவும் சிக்கலானது. உதாரணமாக, மனிதர் என்ற பெயர், மனிதர் மனிதரல்லாதவர் என்று இனம் பிரிக்கத் தொடங்குகின்றது. மனிதர்களிலேயே பல இனத்தினர், வகுப்பார், குழுவினர் என்று செல்லுகின்றது. மேலும், கூறியது கூறல் குற்றம், முரண்பாடு, உண்மை, வாய்மை, பொதுப்பட அமைத்தல் சொற்கள் இன்னும் சிக்கல் வாய்ந்தவை யாகும்.

பங்கு பெறும் நடத்தையும் அறிகுறி நடத்தையும்: ஒரு மனிதக் குழுவிலுள்ளவர்கள் ஓர் அறிகுறிக்குத் துலங்குகின்றபொழுது எல்லோரும் அந்த அறிகுறியை ஒரே வழியில் புரிந்துகொள்ளு கின்றனரா, இல்லை வேறு வேறு வழிகளில் புரிந்து கொள்ளு கின்றனரா? இவ் வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் ஒரு பரிசோதனை நடத்திக் காட்டலாம்; அல்லது அத்தகைய சூழ்நிலையை மனிதர்களோடு இணைத்துப் பார்க்கலாம். பத்து நாய்களைத் தேர்ந்தெடுத்து ஒரு பரிசோதனைக்கூடத்தில் தனித் தனியே ஆக்கநிலையிறுத்தல் பயிற்சி அவற்றிற்கு அளிக்கப் படுகின்றது. மணியடிக்கின்ற பொழுதெல்லாம் அந்தப் பத்து நாய்களும் வாயில் உமிழ்நீரைச் சுரக்க விடுகின்றன. தனக்கு உணவு வரவில்லை என்றால் வேறொன்றுக்கு உணவு கிடைக்கின்றது என்ற வகையில் அந்த நாய் நடந்து கொள்ளுகின்றது. ஆனால், இந்தப் பத்து நாய்களையும் ஒரே அறையில் அடைத்துவிட்டு மணி யோசையை எழுப்பினால், அந்த மணியோசைக்கு எல்லா நாய் களும் ஒரே மாதிரி துலங்குகின்றன என்பதைக் காணலாம்.

மனிதர்களிடம் இக் கருத்தைப் பரிசோதனை செய்து பார்க்க லாம். எஸ்கிமோ மக்களின் குடியேற்றப்பகுதியில் உணவுப் பங்கீடு பற்றாக்குறையாகின்றதொரு சூழ்நிலையை எடுத்துக் கொள்வோம். இந்த உணவுப் பற்றாக்குறையை நிரப்பும் பொருட்டு ஒரு வேட்டைக் குழு கடல்நாய்களை வேட்டையாடு வதற்குப் புறப்படுகின்றது. வேட்டைக்குழுவிலுள்ள ஒவ்வொரு வரும் தங்களுடைய தூண்டலுக்கு மேலே குறிப்பிட்ட நாய்கள் துலங்கிய முறையிலேயே துலங்கியிருப்பார்களா? துலங்கல் ஏற் பட்டிருக்கலாம். அதனால் இந்த இரண்டு வகையான நடவடிக்கை

களும் ஒன்று என்று கூறிவிட முடியுமா? இதற்கு விடை காண வேண்டுமானல், சூழ்நிலைகளை விவாதித்தாக வேண்டும்.

இந்த இரண்டு வகையான சூழ்நிலைகளுக்கிடையிலும் அடிப் படை மாறுபாடிருக்கின்றது என்பதை நாம் முதலில் காண வேண்டும். பரிமாற்றச் செய்தி இணைப்பு மூலமாக எஸ்கி மோக்கள் ஒரு குழுவாகத் துலங்குகின்றனர்கள்; தனித்தனியாகச் செயல்படாமல், கூட்டாகச் செயல்படுகின்றனர்கள். வேட்டை யாடும் நடத்தையில் அனைவரும் பங்கு கொள்ளுகின்றனர். ஆனல், நாய்களின் நடத்தை அவ்வாறில்லை. எஸ்கிமோக் குழுவி லுள்ள ஒவ்வோர் அங்கத்தினரும் பொது நோக்கத்தைப் புரிந்துகொள்ளுகின்றனர். ஒவ்வொருவரும் மற்றவரை இந்தப் பொது நோக்கத்திலிருந்து புரிந்துகொண்டு, ஒரே மாதிரித் துலங் காமல், தங்களுடைய பொதுக் குறிக்கோள் அடையப்பெறும் விதமாகத் துலங்குகின்றனர். எஸ்கிமோக்களில் சிலர் குடியேற்றப் பகுதியிலேயே தங்கியிருந்து, வேட்டையாடிய பொருள்களைக் கவனித்துக்கொள்ளுவதற்குத் தங்களைத் தயார் செய்து கொள்ளு கின்றனர். வேட்டைக்குழுவில் சேர்ந்துள்ள பலரும் வெவ்வேறு கடமைகளைச் செய்தாலும், அவர்களுடைய கடமைகளெல்லாம் ஓரினப்படுத்தப்படுகின்றன.

வெளிப்படுத்தக்கூடிய வாய்ச்சொல் நடத்தை : மொழி அறிகுறி கள்தான் பொருளைக் குறிக்கும் சொல்முறையுடையவையென்றும், பொருள்களை வெளிப்படுத்துகின்றன என்றும் கண்டோம். இன்று தட்பவெப்பநிலை நன்றாக இருக்கின்றது என்று ஒருவர் கூறுகின்றர் என்று வைத்துக்கொள்வோம். இது ஒருவர் மற்றொருவரிடம் கூறுகின்ற செய்தி. அதனுடைய பொருள், இன்று சூரியன் அவ்வளவு கடுமையாகக் காயவில்லை. வெளியில் செல்லுவது இனிமையாக இருக்கின்றது என்பதாகும். ஆனல், இந்த விவர வாசகம் வெளிப்படுத்தும் பொருள் முற்றிலும் வேருகும். இந்த விவர வாசகத்தைக் கூறியவர் ஒரு சமூகச் சூழ்நிலையிலிருக்கலாம். அவர் எதையேனும் பேச விரும்பு கின்றரோ இல்லையோ, அவர் பேசியாக வேண்டும். அங்குக் கூடியுள்ள மனிதர்கள் அனைவருமே அன்றைய தட்பவெப்ப நிலையைப்பற்றி அறிந்திருப்பார்களானதால், அதைப்பற்றி ஏதேனும் பேசுவது அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. எனினும், ஏதேனும் உரையாடலிருக்குமானல் அவர்கள் அனைவரும் மிகவும் ஓய்வுதரும் ஓர் உணர்ச்சியைப் பெறுவதாக உணர முடியும். எனவே, இங்குள்ள நோக்கம் அவர்களுக்குத் தெரியாததொன்றைப் பேசுவதன்று. ஏதேனும் பேசி நல்லெண்

ணத்தையும் சமூக ஒத்துணர்வையும் நிலை நாட்டுவதாகும். இந்த வகையான உரையாடலை ஹில்லர் (Hiller) என்பவர் சமூகச் சடங்கு (socicl ritual) என்று கூறுகின்றார். அதன்பொருட்டு உபயோகிக்கப்படுகின்ற மொழியை வெளிப்படுத்தக்கூடிய மொழி என்றும் குறிப்பிடுகின்றனர்.

சமூக நல்லெண்ணத்தையும் சமூகச் சடங்கையும் வெளிப் படுத்தக்கூடிய சொற்களை அகராதியில் தேடிக் கண்டுபிடித்துப் புரிந்துகொள்ள முடியாது. சில உணர்ச்சிகளை வெளிப்படுத்து வதற்கு வகை செய்யும் மரபொழுங்கான வழிகளாகத்தான் அவற்றைப் புரிந்துகொள்ள முடியும். எல்லா மனிதர்களுமே சில சூழ்நிலைகளில் வெளிப்படுத்தக்கூடிய வாய்ச்சொல் நடத்தையை நாடுகின்றார்கள் என்பதில் ஐயமில்லை. ஆனால், அவற்றைப் பேசு கின்ற குரல்கள் சமூகத்திற்குச் சமூகம் மிகவும் வேறுபடுகின்றன; அந்தந்தச் சமூகம் வரையறுத்த முறையில் உபயோகிக்கப்படு கின்றன.

அடையாளக் குறிச் சூழ்நிலைகள்

மொழி அறிகுறிகள் மனப்பாங்கை வெளிப்படுத்துகின்றன என்பது தொக்கி நிற்கின்றது. குறிகளின் மூலமாக மனிதர்களை நோக்கியும் பொருள்களை நோக்கியும் நாம் நம்முடைய நடத் தையை அமைத்துக் கொள்ளுகின்றோம். அந்த அறிகுறிகள் ஒரு செயல் திட்டத்தை வெளிப்படுத்துகின்றது. ஓர் இனம் என்பது எண்ணத்தின் ஒரு குறிப்பாக இருக்கலாம்; ஒரு நிகழ்ச்சி யாக இருக்கலாம்; ஒரு தலைப்பாக இருக்கலாம்; ஒரு பட்டியலாக இருக்கலாம், அல்லது ஓர் ஒழுங்கமைப்பாகவுமிருக்கலாம். உதாரணமாக, 'முயல், முயல்' என்று ஒரு வேட்டைக்காரன் கூச்சலிட்டால், அருகிலிருக்கும் மற்றொரு வேட்டைக்காரன் அதைச் சுடுவதற்குத் தன்னுடைய துப்பாக்கியைச் சரி செய்து கொள்ளுகின்றான். ஆனால், முதல் வேட்டைக்காரன் 'கொக்கு, கொக்கு' என்று கூச்சலிட்டால், இரண்டாவது வேட்டைக் காரனின் துலங்கல் வேறு வகையாக இருக்கின்றது. மொழி அறிகுறிகள் பொருள்களைக் குறிப்பிடுவதற்கு மட்டும் உபயோகப் படுவதில்லை. அவை மனித நடத்தைக்கான உட்கருத்துப் பொருள்களையும் சுட்டிக் காட்டுகின்றன. குறிப்பிடப்பட்ட பொருள்களை நோக்கி நடத்தையை அவை அமைக்கின்றன. உலகத்தை நோக்கியுள்ள ஒரு பொது மனப்பாங்கு மொழி உபயோகத்தில் தொக்கி நிற்கின்றது என்று சில ஆசிரியர்கள் கருதுகின்றார்கள். இந்தப் பொது மனப்பாங்கை உறுதியான மனப்பாங்கு என்று அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

மூன்று கருத்துகளை உள்ளடக்கி அதை எளிய சொற்களில் விளக்கிக் கூறலாம். ஒன்று, பொருள்களுக்குப் பெயர் வைத்து அவற்றைப்பற்றிப் பேச முடியும் என்பதை உணர்ந்தறிவது. இரண்டாவது, நிகழ்ச்சிகளும் பொருள்களும் இனமாக வகுக்க முடியும் என்பதை உணர்ந்தறிவது. மூன்றாவது, நம்முடைய சூழ்நிலைகளின் சிறப்புக்கூறுகள், புதிய நடத்தையின் முறைகள், சூழ்நிலைகளைப் புதியதாக நிகழக்கூடிய வழிகளில் கையாளுதல் ஆகியவற்றிற்குப் பெயரிட்டு, இனமாக்க முடியும் என்பதை உணர்ந்தறிவது.

ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு பெயர் உண்டு என்று ஒரு குழந்தை அறிகின்றபொழுது இந்த மனப்போக்கைப் பெற்றுள்ளான் என்று தெரிந்துகொள்ளலாம். அதன்பிறகு அவன் தன்னுடைய பெற்றோரின் உணர்ச்சியைத் தூண்டிவிடுகின்றான்; அவர்களுக்குக் கோபமூட்டுகின்ற முறையில்கூடக் கேள்விகளைக் கேட்கின்றான்; 'இஃது என்ன? அஃது என்ன?' என்பன போன்ற எண்ணற்ற வினாக்களை எழுப்புகின்றான். முதலில் அவன் காணுகின்ற எல்லாப் பொருள்களுக்கும் பெயர் என்ன என்று கேட்கின்றான்; பொருள்களின் பெயர் தெரிந்ததும் மனநிறைவு கொள்ளுகின்றான்; தெரிந்துகொண்ட பெயர்களைப் பொருள்களோடு இணைத்துப் பார்க்கின்றான்; அடுத்தக் கட்டத்தில் ஏன்? என்ற வினாவை எழுப்புகின்றான். இது சற்று முதிர்ச்சியுற்றதும் உறுதியான மனப்போக்கும் கொண்ட நிலையாகும்.

உதாரணமாக, ஒருவன் தன்னுடைய இளமைப்பருவம் முழுவதையும் நாட்டுப்புறத்தில் தனித்துக் கழித்துவிட்டான் என்று வைத்துக்கொள்ளுவோம். அவன் திடீரென்று ஒரு பெரிய பட்டணம் ஒன்றுக்குக் குடிவருவானானால், அவனுக்கு எல்லாமே குழப்பமாகக் காணப்படும். மக்கள் கூட்டமாக இங்குமங்கும் வேகமாகப் போய்க்கொண்டிருப்பதும், எல்லா இடங்களிலும் கேட்கின்ற பேரிரைச்சல்களும், பெரிய பெரிய கட்டடங்களும், அவற்றிற்குள் மக்கள் சாரிசாரியாகப் போவதும் வருவதும், தொடர்ச்சியாக இடைவிடாமல் செய்துகொண்டிருக்கின்ற வாகனங்களும், கடைவீதிகளும், அவற்றில் காணப்படுகின்ற பொருள்களும் ஒன்றுமே புரியாத நிலைமை அவனுக்கு உண்டாக்கலாம். என்ன செய்வதென்றும், எங்குப் போவதென்றும், எவ்வாறு போவதென்றும் புரிவதில்லை. அந்தப் பட்டணம் அவனுக்கு ஒரு குழப்பமான சூழ்நிலையாக இருக்கின்றது. ஆனால், பட்டண வாழ்க்கையில் நாள் செல்லச்செல்ல அவன் எல்லாப் பொருள்களையும் வகுப்பதிலும் இனமாக்கிக்கொள்வதிலும்

பழக்கப்பட்டு விடுகின்றான்; அவனுடைய காதைத் துளைக்கின்ற ஒலிகளையும் தேவையற்றவை என்று ஒதுக்கிவிடுகின்றான்; வரிசையாகச் சென்றுகொண்டிருக்கின்ற எண்ணற்ற வாகனங்களைப் புறக்கணித்துவிட்டு, தான் செல்லவேண்டிய வாகனத்தில் மட்டும் கவனத்தைச் செலுத்துகின்றான்.

பட்டணத்திற்குப் புதியதாகச் சென்ற காலத்தில் வான் முட்டும் ஓங்கி நிற்கின்ற கட்டடங்கள் அவனுக்கு வியப்பை அளிக்கின்றன. ஆனால், நாள்கள் செல்லச்செல்ல அவற்றை மிக அரிதாகவே நோக்குகின்றான். மொழி அறிகுறிகளை உபயோகித்து ஒரு மனிதன் பொதுவாக உலகத்தை நோக்கி அடையப்பெறுகின்ற மனப்போக்கை ஒரு பட்டணத்து வாசியின் மனப்போக்கோடு ஒத்திட்டுப் பார்க்கலாம். ஒருவருடைய நடத்தையின் உள்பொருளுக்கேற்ப, பொருள்கள் எல்லாம் ஒழுங்கு முறையாகவும் இனமாகவும் அமைக்கப்படுகின்றன; குழப்பங்கள் அகற்றப்படுகின்றன. மொழி அறிகுறிகளின்றி இந்தச் செயல்முறை வெற்றிகரமாக நடைபெற முடியாது.

கருதுகோள்களும் இனங்களும் : கருதுகோள்களும் இனங்களும் வெவ்வேறு பொருள்களைக் குறிப்பிட்டாலும் அவை இரண்டும் பெரும்பாலும் ஒரே பொருளைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றன. கருதுகோள் பரந்த பொருளைக்கொண்டது. இனங்களையும் ஒரு தனி வகையான கருதுகோளாகக் கொண்டிருக்கின்றது. ஏதாவது ஒரு பொருளைப்பற்றிக் கருதுகோள் கொள்ளுவதால், அப் பொருளைப்பற்றி விளக்கம் தர முடியும். ஒரு பொருளைப்பற்றிச் சிந்திக்கின்ற ஒரு வழிதான் கருதுகோள் என்பதாகும். எனவே, அதுவே அதைப்பற்றிப் பேசுகின்ற ஒரு வழியாகவுமிருக்கின்றது. கருதுகோள் சிந்தனைச் செய்தியை இணைக்கக்கூடிய சிந்தனையாகும். கருதுகோளின் வகைகளை இனங்கள் என்று கூறலாம். இந்த வகைப்படுத்தலின் இனங்களைக் கொண்டுதான் உலகத்திலுள்ள பொருள்களின் வேறுபாடுகளைக் கண்டறிந்து, உலகமே ஓர் ஒழுங்குமுறையாக இருக்கின்றது என்று அறிகின்றோம். பொருள்களை இனங்களாக வகுக்கப்படுதல் இன்றிப் பண்பட்ட மனித அறிவில் எதையும் சிந்திக்க முடியாது. பொருள் சார்ந்த உலகத்தைப்பற்றி மனிதனின் அடிப்படையான சிந்தனையாக இருப்பவை பொருள், அசைவு, இடம் அல்லது பரந்த வெளி ஆகிய அடிப்படைக் கருதுகோள்களாகும். இதை இனங்களைப்பற்றிய சிந்தனை என்று கூறுகின்றார்கள்.

இன மனப்போக்குதான் பொருள்களை வகைப்படுத்துவதற்கு மனிதர்களைத் தூண்டுகின்றது. நம்முடைய அனுபவங்களைக்

கருதுகோளாக்குவதன்மூலம் நாம் அவற்றைப் பாகுபடுத்தவும் நமக்குத் தேவையான அனுபவங்களைத் துலங்கவும், மற்றவற்றைப் புறக்கணிக்கவும் முடிகின்றது. கருதுகோள்களையும் இனங்களையும் உபயோகிப்பதால்தான் உலகத்தைப்பற்றிச் சரியான விளக்கத்தை நாம் கொடுக்க முடிகின்றது. கருதுகோள்களுக்கும் மொழி மனப்போக்குக்கும் உள்ள தொடர்பை ஓர் உதாரணத்தின் மூலம் குறிப்பிடலாம். மிருகம் என்ற கருத்துச்சொல் எல்லா மிருகங்களையும் குறிக்கின்றது. குதிரை மிருகங்களில் ஓர் இனத்தைச் சேர்ந்தது. குதிரை என்ற சொல் உலகத்திலுள்ள எல்லாக் குதிரைகளையும் குறிப்பிடுகின்றது. ஆனால், எந்த இரண்டு குதிரைகளும் ஒரே மாதிரி இருப்பதில்லை; ஏதேனும் ஒரு வகையில் வேறுபடக் காணலாம். உயரம், பருமன், நிறம், உபயோகம், உடல் உறுப்புகளின் அமைப்பு ஆகியவற்றில் அவை மாறுபட்டிருக்கலாம். என்றாலும், குதிரை என்ற ஒரு சொல்லில் எல்லா வகையான குதிரைகளும் அடங்கிவிடுகின்றன.

இக் கருதுகோள் சற்றுச் சிக்கலாகவும் காணப்பெறலாம். குதிரையை முழுமையான ஓர் உயிரினமாகவும் நோக்கலாம். வெவ்வேறு வகையாகவும் நோக்கலாம். குதிரைப்பந்தயத்தில் ஈடுபடுகின்றவர்கள், வேட்டைக்காகக் குதிரையை உபயோகிக்கின்றவர்கள், வண்டியில் குதிரையைப் பூட்டுகின்றவர்கள், மூட்டை சுமப்பதற்கு அதை உபயோகிக்கின்றவர்கள், சர்க்கஸில் வித்தை காட்டுகின்றவர்கள் ஆகியவர்கள் குதிரைகளை வெவ்வேறு வகைகளில் நோக்குகின்றார்கள். எனவே, தங்கள் சூழ்நிலையிலுள்ள எல்லாப் பொருள்களையும் கருதுகோள்களாகவும் இனங்களாகவும் மனிதர்கள் கொண்டிருக்கின்றார்கள். அதனால் அவற்றை அவர்கள் வகைப்படுத்தவும், சிறு வகைப்படுத்தவும், குறுக்கு வகைப்படுத்தவும் செய்ய முடிகின்றது. எனவே, பாகுபாட்டு முறைகளுக்குக் கருதுகோள்களும் இனங்களும் மிகவும் இன்றியமையாத கருவிகளாக உதவுகின்றன. வேறுபாடு செய்தல், தேர்ந்தெடுத்தல், இணங்குதல், நுண்ணறிவு ஆகிய திக்குகளில் கருதுகோள்கள் நம்முடைய நடத்தையைத் திருத்தம் செய்கின்றது என்பதை ஊகித்துத் தெரிந்து கொள்ளலாம்.

பொருளும் பொதுக்கருத்து உருவாக்குதலும்: மனித நடத்தையைப்பற்றி ஆராய்கின்ற சிலர் பொருள் என்ற சொல்லை உபயோகிப்பதில்லை. ஏனென்றால், அவர்கள் அச் சொல்லிலுள்ள சிக்கலைப்பற்றித் தடை எழுப்புகின்றார்கள். பொருள் பெரும்பாலும் புலன் கடந்த உள்ளுறைத் தன்மையுடையது என்று கருதப்படுகின்றது. மனித மூளையிலும், அறிகுறிகளிலும், மற்றப்

பொருள்களிலும் இருக்கின்ற புலன்களுக்கு எட்டாத கருத்தை அது குறிக்கின்றது என்பது சிலருடைய கருத்தாகும். ஆனல், நடத்தை சார்ந்த சொற்பொருளாக அதை உபயோகிக்கும் பொழுது சிக்கலுக்கு இடமில்லை என்று சிலர் கருதுகின்றனர். புலன்களால் அறியப்படுகின்ற பொருளை நோக்கியோ, ஒரு சொல்லை நோக்கியோ ஏற்படுகின்ற துலங்கலால் பொருள் நிர்ணயிக்கப்படுகின்றது. எனவே, பொருள் (அர்த்தம்) என்ற சொல் தொடர்புறவைக் குறிக்கின்றதே தவிர, உள்ளுறைத் தன்மையையன்று.

கருதுகோள் செயலின் ஒரு முழு நிறவான முறையைக் குறிப்பிடுகின்றது. அதனுல்தான் பல்வேறு வகையான பொருள்களை நோக்கி ஒரே வழியில் செயல்புரியும்படி மனிதர்களைச் செய்கின்றது. உதாரணமாக, உணவு வகைகள் பல இருக்கலாம். ஆனல், உணவு என்று பொருள் பலவாக இருப்பினும், அஃது உணவு என்று அறியப்படுமானல், அதை நோக்கி ஒரு பொது நடத்தை நிலை நாட்டப்படுகின்றது. இவ்வாறு ஒவ்வொரு வகைக் கருதுகோளும் ஒரு பொதுக் கருத்து உருவாக்குவதாகவுமிருக்கின்றது. ஏனென்றால், ஒவ்வொரு கருதுகோளும் அதனுடைய எல்லைக்குள் அடங்கிய ஒவ்வொரு பொருளையும் நோக்கியுள்ள நடத்தையைப் பொதுவாக்குகின்றது. பொதுக் கருத்து உருவாக்குதல்களின் கண்டுபிடிப்புக்கு எல்லையில்லை. எவ்வாறெனில், குழு நடவடிக்கைகள் தொடருகின்ற வரையில் புது அனுபவங்கள் ஏற்படச் செய்கின்றன; புதுப்பொருள்கள் கண்டுபிடிக்கப் படுகின்றன. அவை குழு அங்கத்தினர்களுக்கு அனுப்பப்படுகின்றன; புது அனுபவங்களோ, பொருள்களோ ஏதேனும் ஒரு பொதுப்பட அமைக்கப்பட்ட நடத்தையில் அடங்குகின்றன.

அறிகுறிகளும் மரபொழுங்கு குறிகளும் பொருள் உள்ளவையாக இருக்கின்றன. அவை கையாளக்கூடிய இயல்பைப் பெற்றுள்ளன. குறிகள் வேறு குறிகளின்மீது இயங்குகின்றன. உதாரணமாக, குறிக்கணக்கியல் (Algebra), கணிதம், தருக்கம் ஆகியவற்றில் குறிகளின்மீது குறிகள் இயங்குகின்றன. எனவே, கருதுகோள்கள் புதிய கருதுகோள்களை உண்டாக்குகின்றன. குழு நடத்தையில் அபிப்பிராய வேற்றுமைகள், நிலைமை வேறுபாடுகள் ஆகியவை உரையாடலிலும், விவாதத்திலும் வெளிப்படுகையில் புதிய வாய்ப்புகளும் புதிய பொருள்களும் உண்டாகின்றன. எனவே, அடையாளக் குறியுடைமை (symbolism) இல்லையென்றால், மனிதனுடைய வாழ்க்கையின் தேவைகளும் தனி நலன்களும் நிறைவேற்றப்படுவதில் கட்டுப்படுத்தப்பட்டு விடுகின்றன.

கலை, மெய்ப்பொருளியல், சமயம், அறிவியல் துறைகளிலிருந்து பெற்ற அறிவைக்கொண்டு ஓர் இலட்சிய உலகத்தை உருவாக்க ஒரு வாய்ப்பை மனிதன் இழந்துவிடுகின்றான்.

புனைக்கதைகள் : பொருள்களையும் நிகழ்ச்சிகளையும் குறிப்பிடு வதற்கு மொழி அறிகுறிகள் அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றன. அவற்றின் உளதாம் தன்மையில் நம்பிக்கையுள்ளவர்களுக்கு அவை உண்மையாக இருக்கின்றன. ஆனால், அவை அவற்றின் உளதாம் தன்மையை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளுவதில்லை. உதாரணமாக, கிறிஸ்துமஸ் தாத்தா உயிருடனிருப்பதாகவும், அவர் நல்ல பணிகளைச் செய்கின்றார் என்றும் குழந்தைகள் நம்புகின்றார்கள். அசுரர்கள் இருந்தார்கள் என்றும், அவர்கள் மனிதர்களோடு போரிட்டார்கள் என்றும், மனிதர்களைச் சாப்பிட்டார்கள் என்றும் புராணக் கதைகள் கூறுகின்றன. அவற்றை இன்றும் வயது வந்த மக்கள் நம்புகின்றார்கள்.

காலம் செல்லச் செல்ல ஒரு காலத்தில் உண்மை என்று நம்பப்பட்ட பொருள்களும் நிகழ்ச்சிகளும் அடுத்தத் தலைமுறையில் புனைக்கதைகளாகி விடுகின்றன. கடவுள்கள், பேய்கள், பிசாசுகள், மந்திரங்கள் முதலியவை எல்லாம் உண்மை என்று ஒரு தலைமுறையில் நம்பி வந்தனர். இந்தத் தலைமுறையில் வாழ்கின்ற மக்கள் இவற்றின் உளதாம் தன்மையில் சந்தேகம் கொண்டு அவை எல்லாம் புனைக்கதைகள் என்று கூறுகின்றார்கள். ஆனால், இந்தக் கருதுகோள்கள் எவ்வளவுதான் பொய் என்று அடுத்தத் தலைமுறையினர் கூறினாலும், சந்தேகக்கண் கொண்டு நோக்கினாலும் இவற்றை உபயோகப்படுத்தும் மக்களுடைய நடத்தையில் இவை பெரும் மாறுதல்களை உண்டாக்குகின்றன.

இனத்தைக் (Race) குறிப்பிடுகின்ற கருதுகோள்கள் பெரும்பாலும் உண்மையல்லாதவைதான். உயிருக்குரிய சிறப்புக் கூறுகளைக் கொண்டு மனிதர்களை வகைப்படுத்துவது தவறுடையதாக அமைகின்றது என்று அறிவியல் வல்லுநர்கள் எவ்வளவுதான் கூறினாலும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த இனப் பாகுபாடு இருக்கத்தான் செய்கின்றது. பொருள்களை எவ்வாறு வகைப் படுத்தி அந்த வகைகளுக்கேற்ப மனிதர்கள் துலங்குகின்றார் களோ அது போலவே மனிதர்களையும் இனங்களாக வகைப் படுத்தி, தனிமனிதர்களிடம் இன அடிப்படையில் மனிதர்கள் துலங்குகின்றார்கள். ஓர் அங்கத்தினர் மற்றோர் அங்கத்தினரை அவருடைய சமூக மரபுரிமையைத் தெரிந்துகொண்டு அதற்கேற்ப அவரிடம் நடந்து கொள்ளுகின்றார். எனவே, பொருள்களை

இனவாரியாக வகைப்படுத்துவது போன்றே மனிதன் சமூகத்தி லுள்ள மக்களும் சமூகத்திற்குச் சமூகம் இனவாரியாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றார்கள். ஒரே மனிதர் வேறு வேறு சமூகக் குழுக்களில் வேறு வேறு இனத்தைச் சேர்ந்தவராகவும் கருதப்படலாம்.

உதாரணமாக, அமெரிக்காவில் ஒரு மனிதனின் உடம்பில் ஒரு சொட்டு நீகிரோ இரத்தம் கலந்திருந்தாலும் அவன் நீகிரோ என்றே கருதப்படுகின்றான். தென் மாநில உணவு விடுதிகளில் அவன் மற்ற வெள்ளையர்களுடன் அமர்ந்து உணவருந்த முடியாது. அவன் அந்த மரியாதையை இழந்து விடுகின்றான். ஆனால், பிரேசில் நாட்டில் அதே மனிதன் வெள்ளையராகக் கருதப்படு கின்றான்; நீகிரோவாக நடத்தப்படுவதில்லை. அவனுடைய மரபுரிமையைத் தெரிந்திருந்தாலும் அவன் மரியாதைக் குறை வாக நடத்தப்படுவதில்லை.

நீண்ட காலமாக ஏசுதலுக்கு இலக்காகி வந்த யூதர்களின் நிலைமை இதற்கு நல்ல எடுத்துக்காட்டாகும். வரலாற்று முறைப் படியும் மனித இன இயல்புபடியும் யூதர்கள் உண்மையான தனி உயிரியல் இனத்தைச் சார்ந்தவர்களல்ல. கிடைத்துள்ள வரலாற் றுச் சான்று, தொடக்க கால யூதர்கள் இன்றைய அரேபியரைப் போன்றதோர் இனத்தவர் என்று காட்டுகின்றது. இடைக் காலத்தில் ஏற்பட்ட குடியேற்றம், கலப்பு மணம், இனக்கலப்பு, சமய மாற்றம் ஆகியவற்றின் காரணமாக யூதர்களின் மூல மரபு மற்றெல்லா இனங்களுடனும் கலந்து போய்விட்டது. எனவே, ஒரு போலந்து நாட்டிலுள்ள யூதர் போலந்து நாட்டினரைப் போலவே இருக்கின்றார். ஓர் அமெரிக்க யூதர் மூல அமெரிக்க ரைப் போலவே இருக்கின்றார். சீன யூதர் சீனரைப் போலவே இருக்கின்றார். உண்மைகள் இவ்வாறு இருந்தும் யூதர்களே மற்ற இனத்தவர்கள் ஓர் உயிரியல் தனி இனம் என்று கருதுகின்ற காலம் வரையில் கற்பனையாக உருவாக்கப்பட்ட இந்த இன வேறு பாட்டினால் மனித நடத்தை பாதிக்கப்படுவது என்னமோ உண்மைதான்.

இன உறவுகள் என்பது இருப்பது போலத் தோன்றும் ஒரு பரப்பளவைப் போன்றது. மனிதர்கள் பெரும்பாலும் தாங் களும் மற்றவர்களும் கலப்பில்லாத இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகின்றார்கள். நீகிரோவின் இரத்தம் ஒருவர் உடலில் ஒரு சொட்டு இருந்தாலும் அவர் நீகிரோ என்று கருதும் எண்ணம் அமெரிக்கரிடையில் இருந்து வருகின்றது. சில நீகிரோக்களுடைய உடம்பில் வெள்ளையரின் இரத்தம் இருப்ப

தாகவும் அமெரிக்கர்கள் கருதுகின்றூர்கள். இரண்டாவது உலகப் போரின்போது வெள்ளையரின் இரத்தமும் நீகிரோக்களின் இரத்தமும் தனித்தனி இரத்தம் சேமிப்புக்கிடங்குகளில் வைக்கப்பட்டிருந்தன. ஒரு வெள்ளையரின் உடம்பில் நீகிரோவின் இரத்தம் செலுத்தப்படுமானல், அவருடைய தோலின் நிறம் மாறிவிடும் என்ற நம்பிக்கை அமெரிக்கரிடையே இருந்து வருகின்றது. இஃது அவருடைய பாம்பரையைப் பாதிக்கச் செய்யும் என்றும் நம்புகின்றனர். ஆனல் ஓர் அறிவியல் வல்லுநருக்கு இதெல்லாம் பொருளற்ற கருத்தாகத் தோன்றுகின்றது. ஒரு கருப்பருடைய இரத்தத்திற்கும் வெள்ளையர் இரத்தத்திற்கும் எந்த விதமான மாறுபாடும் கிடையாது. எல்லா வகையான இரத்தங்களும் இரண்டு நிற மனிதர்களிடமுமிருக்கின்றன. இரத்தக் கலப்பினல் வருங்காலப் பரம்பரையினரின் உடல் சம்பந்தமான கூறுகளோ உள்ளக்கூறுகளோ பாதிக்கப்படுவதில்லை.

இனங்கள், இரத்தம், மரபுரிமை ஆகியவற்றின் இயல்புகளைப் பற்றிப் பொதுமக்களின் கருத்துகள் தவறான அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சொட்டு கருப்பு இரத்தம் ஒரு வெள்ளையரை நீகிரோவாக்கி விடுகின்றது என்று நம்பப்படுகின்றது. அமெரிக்கர்கள்கொண்டுள்ள இந்த வகையான நம்பிக்கைகளுக்கு எந்த விதமான அறிவியல் சான்றும் கிடையாது. எல்லா வகையான மனிதர்களிடையிலும் உயிரியல் சார்பான ஒற்றுமை நிலவுகின்றது.

மொழியைச் சிறப்பாக ஆராய்கின்றவர்கள் புனைக்கதைகள் மொழியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென்று வாதாடுகின்றூர்கள். ஏனென்றல், புனைக்கதைகள் உண்மைகளுக்கு முற்றிலும் புறம்பாக இருக்கின்றன என்று அவர்கள் கருதுகின்றூர்கள். இது வரவேற்கக் கூடிய கருத்தாக இல்லை. மொழியிலுள்ள புனைக்கதைச் சொற்களை நீக்கிவிட்டால் மொழி மிகவும் ஏழ்மையடைந்துவிடும். பெரும்பாலான இலக்கியங்களெல்லாம் புனைக்கதை என்ற பெயரில் நீக்கப்படவேண்டி ஏற்பட்டுவிடும். மொழியமைப்பு, உண்மைப் பொருள்களைக் குறிக்கின்றதோ கற்பனைப் பொருளைக் குறிக்கின்றதோ, எவ்வாறிருப்பினும் வெளியுலக நடத்தையை விவரிக்கப் பயன்படுகின்றது.

ஒரு படியமைப்புகள் அல்லது ஒருபடி வார்ப்புகள் (Sterotypes): சமூகவியலார் ஒருபடி வார்ப்புகள்பற்றி நீண்ட நாள்களாகக் குறிப்பிட்டு வருகின்றனர். மக்கள் மற்றவர்களைப்பற்றி வழக்கமாகக் கொண்டுள்ள தவறான கருத்துகளையும், எளியதும் நிரந்தர

மாக்கப்பட்டதுமான அபிப்பிராயங்களைக் குறிப்பவைதான் ஒரு படி வார்ப்புகள். ஏற்கெனவே வகுக்கப்பட்டு நிலைநிறுத்தப் பட்டவற்றிலிருந்து மக்கள் உண்மைகளை நோக்குகின்றார்கள். அதனால் ஒருபுறம் சாயாத வகையில் உண்மைகளைக் காண முடிவதில்லை. பெரும்பாலும் நாம் எதையும் பார்த்த பிறகு வரையறை செய்வதில்லை. வரையறை செய்துகொண்ட பிறகுதான் எல்லாவற்றையும் காணுகின்றோம். அதனால் ஒரு படியாக வார்க்கப் பட்ட கற்பனை இனங்கள், தேசிய இனங்கள், தேசிய குழுக்கள், வாழ்க்கைத் தொழில் குழுக்கள், சமூக வகுப்புகள், பால்கள் முதலியவற்றைக் காண்கின்றோம். ஒருபடி வார்ப்புப்பற்றி ஆய்வுகள் நடைபெறும்பொழுதெல்லாம் இனங்களைப்பற்றிய துறைதான் மிக அதிகமாகக் குறிப்பிடப்படுகின்றது.

உதாரணமாக, அமெரிக்கத் தொழில் துறைகள் மக்களின் பணிகளைப்பற்றிய செய்திகளை வானொலி நிகழ்ச்சிகள், திரைப் படம், பொதுமக்கள் இலக்கியம் ஆகியவற்றின்மூலமாக வெளியிடுகின்றன. அவற்றில் நீகிரோக்களின் வாழ்க்கைப் பங்குகளைப்பற்றி வெளியிடும்பொழுதெல்லாம் அவர்களைப் பணியாள்களாகவும், கோமாளிகளாகவும், கீழ்த்தர மனிதர்களாகவும் வெளியிடுகின்றனரே தவிர, சிறப்பான வாழ்க்கைப் பங்குகளில் அவர்களைக் காட்டுவதேயில்லை. பொதுவாக நடைபெறுகின்ற பேச்சுகளில் எல்லாம் கருப்பர்கள் சோம்பேறிகள், முயற்சியில்லாதவர்கள், இறுமாப்புள்ளவர்கள், நேர்மையற்றவர்கள் என்று கீழான சொற்களைக் கொண்டே குறிப்பிடப்படுகின்றார்கள். இவ்விதமான இனக்கற்பனைகளைக் கொண்டு வேடிக்கைப் பேச்சுகளும் கதைகளும் உண்டாக்கப்படுகின்றன.

பெரும்பாலான அமெரிக்கர்கள் மற்றத் தேசிய இனத்தினரைச் சந்திப்பதற்கோ, பார்ப்பதற்கோ சந்தர்ப்பமில்லாதவர்களாக இருந்தும் கல்லூரிகளில் மாணவர்களிடையே நடத்தப்படுகின்ற தேர்வாராய்ச்சிகளில் முப்பது ஆண்டுகளாக ஒரே பத்திரிகையைப் பல தேசிய இனத்தினர் பெற்று வருகின்றனர். ஒரு தேர்வாராய்ச்சியில் ஏற்பட்டுள்ள படிவரிசையை இங்குக் காட்டுவது சிறப்பாக இருக்கும். 1. அமெரிக்கர்கள், கன்னடியர்கள், ஆங்கிலேயர்கள்; 2. பிரெஞ்சுக்காரர்கள், நார்வேயர்கள், ஜெர்மனியர்கள், சுவீடன் நாட்டினர், மற்ற வட ஐரோப்பிய மக்கள்; 3. தென் ஐரோப்பிய மக்கள்; 4. யூதர்கள்; 5. நீகிரோக்கள், துருக்கியர்கள், சீனர்கள், இந்துக்கள். இவற்றிலிருந்து அமெரிக்க மாணவர்கள் அமெரிக்கர்களையும், கன்னடியர்களையும், ஆங்கிலேயர்களையும்

முதல்தரமாக விரும்புகின்றார்கள். கடைசிப்படியில் அவர்கள் வைப்பது இந்துக்களையாகும். ஆனால், பெரும்பாலான மாண வர்கள் இந்துக்களைப் பார்த்திருக்கவில்லை. என்றாலும், அவர்கள் அவ்வாறு கற்பிக்கப்பட்டிருக்கின்றார்கள். புரட்சிகரமாக அரசியல் வாதிகளாகவுள்ள மாணவர்கள் மற்றவர்களைவிடக் குறைவான ஒரு சார்பெண்ணம் (prejudice) கொண்டவர்களாக இருக் கின்றார்கள். அவர்களுடைய அரசியல் தத்துவம் என்ன வென்றால், மனித இனத்தைச் சேர்ந்த எல்லாக் குழுவினரும் சமமானவர்களே என்பதாகும்.

ஒருபடி வார்ப்பு ஒரு முறை, அமைந்து விடுமானால், முரண் பாடான அனுபவங்களும் சான்றுகளும் காணப்பட்டாலும் பொருள்படுத்துவதில்லை. ஒரு வெள்ளை அமெரிக்கர் மிகவும் சுத்தமான, நுண்ணறிவுள்ள, கற்ற, செம்மையான, நேர்மையான, கடின உழைப்புள்ள ஒரு நீகிரோவரைச் சந்தித்தாலும் அவற்றை யெல்லாம் புறக்கணித்துவிட்டு மிகவும் குறைபாடுள்ள குணப் பண்புகளையே நீகிரோக்களின்மீது திணிக்கின்றார். இன்னும் சொல்லப்போனால் வெள்ளை அமெரிக்கர்களைவிட நீகிரோக்கள் சுத்தமாகவும், புத்திசாலியாகவும், நேர்மையாகவுமிருந்தாலும் அவற்றையெல்லாம் அமெரிக்கர்கள் ஏற்றுக்கொள்ளுவதில்லை.

பரிமாற்றக்குழு பகைமையுணர்ச்சியைப்பற்றித் தேர்வாராய்ச் சிகள் நடத்துவதற்கு ஒருபடி வார்ப்புக் கருத்து சமூக உளவிய லாருக்கு மிகவும் உபயோகமாக இருக்கின்றது. ஒரு குழுவைச் சார்ந்த மக்கள் மற்றொரு குழுவினரைப்பற்றித் தவறாகக் கொண்டுள்ள மனப்போக்கு எவ்வாறு ஆராய்ந்து பார்க்காம லேயே அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பதற்கு ஒருபடி வார்ப்பு நடத்தை ஓர் எடுத்துக்காட்டாகும்.

குறியிடுச் சூழ்நிலைகள் : மனிதனுடைய அறிகுறிகள், வெளியி லுள்ள சூழ்நிலையின் பகுதிகளாக இருக்கின்றன. ஆகையினால், மனிதன் குறியிடுச் சூழ்நிலையில் வசிக்கின்றான் என்று கூறலாம். மனிதன் அறிகுறிகளுக்கு நேரிடையாகத் துலங்குகின்றான். வெளியுலகத்தோடு அவன் கொண்டுள்ள தொடர்புறவுகள் அறிகுறிகளின் மூலமாகவே உண்டாகின்றன. குறியிடுச் சூழ்நிலை ஒரு மாற்றுச் சூழ்நிலை என்றும் கருதப்படலாம். ஆனால், இந்தச் சூழ்நிலை வெளியுலகத்தின் பிரதிபிம்பம் என்று கொள்ளக் கூடாது. மனித நடத்யையின் தேவையின் அடிப்படையில் உலகத்தின் ஒரு மறு சீரமைப்பு என்று கருதப்படுகின்றது. மனிதன் குறியிடு அமைப்புகளைக் கண்டுபிடிக்க முடியும். அவற்றால் அவன் பாதிக்கப்படுகின்றான். நடத்தையில் ஒரு புதிய கோளம்

இதனால் உருவாகின்றது. இரண்டு மனிதர்களுக்கிடையிலும், ஒரு மனிதனுக்கும் வெளியுலகத்திற்கிடையிலும், தனிமனிதனுக்குள்ளேயும் உள்ள தொடர்புறவின் செயலெதிர்ச்செயலின் தளம் புதிய அமைப்புப் பெறுகின்றது. முழுச் சூழ்நிலையில் இரண்டு வகையான தொடர்புறவுகள் காணப்படுகின்றன. ஒன்று நேரடியானது; மற்றொன்று மறைமுகமானது.

இந்த இரண்டு வகையான சூழ்நிலைகளையும் நாகரிகமடையாத மனிதர்களிடையிலும் நாகரிகமடைந்த மனிதர்களிடையிலும் நுண்ணுயிர் பெற்றுள்ள முக்கியத்துவத்தைக்கொண்டு விளக்கலாம். நாகரிகமடையாத மனிதன் நுண்ணுயிர் (microbes) இருப்பதையே அறியான். எனவே, அவற்றைக் குறிப்பிடவும், விளக்கவும், புரிந்துகொள்ளவும் உதவும் அறிகுறிகள் அவனுக்கில்லை. எனவே, நுண்ணுயிர், குறியிடு இல்லாத சூழ்நிலையின் பகுதிகளாக அவனுக்கு இருந்து வருகின்றது. அவனுடைய குறியிடுச் சூழ்நிலையில் அவை தோன்றவில்லை. ஆனால், நாகரிகமடைந்த மனிதன் நுண்ணுயிர்களிருப்பதை அறிந்திருக்கின்றான்; அவற்றைப்பற்றி விளக்கமான அறிவு பெற்றிருக்கின்றான். அவை நாகரிகமடைந்துள்ள இன்றைய மனிதனின் சூழ்நிலையின் ஒரு பகுதியாக இருக்கின்றன. நுண்ணுயிர்களைப்பற்றிய அறிகுறி இருப்பது அவற்றைப்பற்றித் தெரிந்துகொள்ள முடிகின்றது என்பதன் அறிகுறியாகும்.

மேலும், மனிதன் தன்மீதே மொழியை உபயோகிக்கின்றான். தன்னுடைய உடலின் பகுதிகளைப்பற்றிக் கூறுவதற்கான கருதுகோள்களைக் கண்டுபிடிக்கின்றான். எனவே, மனிதன் தன்னைப் பற்றித் தெரிந்துகொள்ளுவதற்குத் தானே செய்திப் பொருளாகவுமிருக்கின்றான்; உடல் சம்பந்தமான உலகத்தை மட்டுமன்றிப் பேச்சு சார்ந்த கருத்துரைகளையும் உருவாக்குகின்றான். அவனைப் பொறுத்தவரையில் இவையும் சூழ்நிலையின் பகுதிகளாகக் கருதப்படுகின்றன.

எனவே, மனிதனுடைய சூழ்நிலை இயற்கையானதும், வெளி நிகழ்ச்சிகளுமான செயல்முறைகள் மட்டுமன்று. அறிகுறிகளும் சூழ்நிலை என்றே மனிதன் கருதுகின்றான். இவற்றைக்கொண்டு மனிதன் உலகிலுள்ள பொருள்களையெல்லாம் பெயரிட்டு, வகுத்து, மதிப்பீடுகள் செய்கின்றான்; அவற்றிற்கு ஏற்றாற்போல் துலங்குகின்றான். அறிகுறிகள் குழு நடத்தையின் விளைபொருள்களாகும்; சமூக மரபுரிமையின் பகுதிகளாக அமைந்து, மனிதச் சூழ்நிலையின் மிகவும் குறிப்பிடத்தக்க பண்புக்கூறுகளாக இருக்கின்றன.

8. சமூக இடைவினைச் செயல்முறைகள்

சமூகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் மற்ற மனிதர்களோடு ஏதேனும் ஒரு வழியில் தொடர்பு கொண்டு ஒழுக வேண்டியவனுகவே இருக்கின்ருன். அவன் கொள்ளுகின்ற அந்தத் தொடர்பு இடைவினைச் செயலைக் கொண்டிருக்கின்றது. இதைச் சமூகத் தொடர்பு என்றும் கூறலாம். இந்தத் தொடர்பு முறை நெருக்கமாகவுமிருக்கலாம்; நெருக்கமில்லாமலும் இருக்கலாம்; முரண்பாடாகவுமிருக்கலாம். பார்த்துப் பழகுவதும், ஒன்ருக வாழ்வதும், பார்க்காமல் ஏதேனும் ஒரு வழியில் தொடர்பு கொண்டு வாழ்வதும் உறவுதான். எனவே, சமூக உறவு என்பது எந்த ஒரு சமூகத்திலும் குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியாகும். தனிமனிதர்கள் மற்றவர்களோடு ஏதேனும் ஒரு நிகழ்ச்சியில் பங்கு எடுத்துக்கொள்ளும் செயலும் சமூக உறவு என்றே கூறலாம். இதை ஒரு சமூக நடத்தை என்றும் கூறலாம். அந்தச் சமூக நடத்தை உடல் சார்ந்த சமூகச் சூழ்நிலையில்தான் தோன்றுகின்றது.

குட்டிபோட்டுப் பால் கொடுக்கும் உயிரினங்களின் உடலமைப்பு தாய்க்கும் குட்டிகளுக்கும் இடையிலுள்ள தொடர்பை அதிகப்படுத்துகின்றது. குட்டிக்ள் உயிர் வாழ வேண்டுமாஞல், அவற்றிற்கிடையிலுள்ள தொடர்பு அதிக நாள்களுக்குத் தொடர்ந்து இருந்தாக வேண்டும். குட்டிகள் தாயோடு தொடர்பு கொண்டு வாழ்ந்து வருவது ஒரு வகையான சமூக உறவுதான். உயர்ந்த மிருக இனங்களில் மனிதன் உள்படக் குட்டிகள் தாயைச் சார்ந்திருக்க வேண்டிய காலம் நீண்டு செல்லுகின்றது. ஏனென்ருல், குட்டிகளோ குழந்தைகளோ பிறந்தவுடன் தனித்து வாழ்ந்து தங்களுக்கு வேண்டியவற்றை உலகத்தில் தேடிக்கொள்ள முடியாது.

இக் கருத்தை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மனிதன்தான் அதிக நாள்களுக்குப் பெற்றோரைச் சார்ந்திருக்க வேண்டியவனாக இருக்கின்றான்.

இடைவினைச் செயல்முறையின் கூறுகள்

உயிரினங்களில் எதுவுமே பிறந்தவுடன் தன்னியல்பாகச் செயல்படக் கூடியது இல்லை என்றே கூறலாம். சில உயிரினங்கள் அத்தகைய பண்புகளைப் பெற்றிருக்கின்றன என்றாலும், முற்றிலும் பெற்றிருக்கின்றன என்று கூற முடியாது. கோழிக்குஞ்சு முட்டையிலிருந்து வெளிவந்த ஓரிரு நாள்களிலேயே சிறு தானியங்களைக் கொத்துவதற்குக் கற்றுக்கொள்ளுகின்றது. ஆடு, மாடு, பூனை, நாய் முதலிய மிருகங்களும் பிறந்து சில தினங்களானதும் துள்ளிக் குதித்து ஓடுகின்றன. மனிதக் குரங்கு பிறந்தவுடன் எழுந்து நடந்து செல்லுகின்றது. ஆனால், மனிதன் அவ்வாறில்லை. முழுக்க முழுக்கப் பெற்றோரின் பாதுகாப்பிலேயே பல ஆண்டுகள் இருக்க வேண்டியவனாக இருக்கின்றான். அவன் எந்த வயதில் தனித்துச் சென்று தனக்கு வேண்டியவற்றைத் தேடிக்கொள்வான் என்று சொல்ல முடியாது.

மேலும், மனிதன் தன்னுடைய வாழ்க்கை இன்பங்களை நிறைவு செய்து கொள்ளுவதற்கும் இனவிருத்தி செய்வதற்கும் பெண்ணினத்தின் உறவு அவனுக்குத் தேவைப்படுகின்றது. மற்றும் தட்பவெப்பம், நில அமைப்பு, சூழ்நிலைகள் ஆகியவற்றின் செல்வாக்கும் சமூக உறவுகளில் இருக்கக் காணலாம்.

மனிதன் உலகத்தில் வாழ வேண்டுமானால், அவனுக்கு உணவு, நீர், இருப்பிடம் முதலியவை சரிவரக் கிடைக்க வேண்டும். அவை சரிவரக் கிடைக்காவிட்டால் போராடித்தான் அவன் பெற்றாக வேண்டும். சூழ்நிலையில்தான் அவன் அந்தப் போராட்டத்தை நடத்த வேண்டியவனாக இருக்கின்றான். எனவே, உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான உணவு, உடை, இருப்பிடம் முதலியவற்றைக் குறைவறப் பெற வேண்டுமானால், பல்வேறுபட்ட சமூக உறவு முறைகளைக்கொண்ட சமூக வாழ்க்கை அவனுக்குத் தேவைப்படுகின்றது.

தவிர, மனிதன் பல்லாயிரம் ஆண்டுகளாக உலகத்தில் வாழ்ந்ததன் பயனாகப் பண்பாடு என்ற வாழ்க்கை முறைகளையும் கண்டான். நெருப்பை உண்டாக்குவதிலும், உணவைச் சமைப்பதிலும், உண்பதிலும், கருவிகளைச் செய்வதிலும், உடைகளை நெய்வதிலும், உடுப்பதிலும், சண்டை போடுவதிலும், பேச்சிலும்,

விருந்தினர்களை உபசரிப்பதிலும், மற்றக் குடும்பச் சமூக நிகழ்ச்சி களிலும், அன்றாட வாழ்க்கை முறைகளிலும், மற்றும் நம்பிக்கை, மனப்போக்கு, மதிப்பீடுகள், தனி நலன்கள், சமூக நடத்தை முதலியவற்றில் ஒரு மனிதனுடைய பண்பாடு காணப்படுகின்றது.

ஒரு பண்பாட்டில் பிறந்து வளர்ந்த குழந்தை அந்தப் பண் பாட்டுக்கேற்ப உண்ணவும் உடுக்கவும் கற்றுக்கொள்ளுவதை நாம் பார்க்கின்றோம். அது போலவே அப் பண்பாட்டுக்குரிய நம்பிக்கை, பழக்க வழக்கம் ஆகியவற்றையும் கற்றுக்கொள்ளு கின்றான். உலகம் முழுவதிலும் உள்ள மனிதர்கள் உடலமைப்பில் ஒன்று போலவே இருக்கின்றார்கள். எனவே, இரண்டு மனிதர் களிடையேயுள்ள வேறுபாடுகளை அறிய அவர்களுடைய பண் பாட்டு அறிவுதான் நமக்குத் துணை புரிகின்றது.

ஆனால், ஒரே பண்பாட்டைக்கொண்ட மக்களிடையிலும் வேறுபாடுகளை நாம் காண முடியும். அந்த வேறுபாடுகள் ஆளுமைப் பண்புக்குரிய வேறுபாடுகளாகவும், நுண்ணறிவுக்குரிய வேறுபாடுகளாகவுமிருக்கின்றன. எனவே, ஒரே பண்பாட்டைக் கொண்ட மக்களிடையே நாம் அவர்களுடைய சமூக உறவு அமைப்புகளை மட்டுமன்றி அவர்களுடைய நட்புறவு, இரக்கம் ஆகிய குணப்பண்புகளையும், முரட்டுத்தனம், பயம், சமூகத்திற்குப் புறம்பான செயல் முதலியவற்றையும் சமூக வாழ்க்கையில் காணலாம். இந்த வகையான சமூக உறவுகள் மனிதர்களிடையே எந்த முறைகளில் நிலவுகின்றன? அவற்றைப் பல்வேறு வகை களில் காணலாம்.

அவை கணவன் மனைவியரிடையே நிகழும் இரக்கம், ஒத்துழைப்பு, அன்பு, காதல் ஆகியவற்றில் ஆரம்பித்து ஊடல், முரண்பாடு, சண்டை, கொலை முதலியவை வரையிலும் நீண்டு செல்லலாம். சமூக உறவுகள் ஏற்படும் செயல்முறைகளை மூன்று வகைகளில் அடக்குகின்றனர். அவை: 1. செய்திப் போக்கு வரத்துத் தொடர்பு, 2. சமூக இயல்பினணுக்குதல், 3. படிமுறை யாக்கல் என்பவை.

முதலாவது முறையில் ஒரு மனிதன் மற்றவர்களுக்குத் தன்னு டைய எண்ணங்களையும், விருப்பங்களையும் தெரிவிப்பதும், மற்ற வர்கள் வெளிப்படுத்தும் குறிப்புகளைப் புரிந்துகொண்டு துலங்கு வதும் அடங்குகின்றன. இச் செயல்முறை பெரும்பாலும் பேச்சு, எழுத்து, சைகை, குறிப்பு, நிற்கும் நிலை முதலியவற்றின்மூலமாக நடைபெறுகின்றது.

இரண்டாவது முறையில் ஒரு மனிதன் பிறந்து வளர்ந்து பெரியவனாக முதிர்ச்சி பெறுகின்ற காலத்தில் அவன் தான் வாழும் சமூகத்திற்கேற்ப எவ்வாறு நடந்து கொள்ளுவது என்பதைக் கற்றுக்கொள்ளுவது அடங்கி இருக்கின்றது. அதாவது, இஃது ஒரு மனிதன் தன்னை மனிதப்பண்புள்ளவனாக ஆக்கிக் கொள்ளுகின்ற முறையாகும். மற்றவர்களோடு கூடயிருந்து கற்று ஒருவன் சமூகப்பண்புள்ளவனாகின்றான்.

மூன்றாவது முறையில் மனிதன் தன்னுடைய தகுதி, கல்வி, ஆற்றல், செயல் ஆகியவற்றிற்கு ஏற்பச் சமூகத்தில் ஓர் இடத்தைப் பெறுகின்றான். ஒவ்வொரு மனிதனுக்கும் சமூகத்தில் ஒரு பங்கும் இடமும் உண்டு. அந்தப் பங்கையும் இடத்தையும் அவனுடைய திறமையும் குணப்பண்புகளுமே நிர்ணயிக்கின்றன.

ஒரு சமூகம் பெரியதாக இருந்தாலும் சிறியதாக இருந்தாலும் இந்த விதமான செயல்முறைகளால் சமூக உறவு நடப்பதைக் காணலாம். துன்பம் வரும்பொழுதோ, நெருக்கடி ஏற்படும் பொழுதோ குடும்ப அங்கத்தினர்களிடையேயும், அண்டை வீட்டுக்காரர்களிடையேயும், அந்த வீதி மக்களிடையேயும், ஊர் மக்களிடையேயும் பரஸ்பர உதவியும் ஒத்துழைப்பும் ஏற்படுவதை நாம் காண்கின்றோம்.

ஆனால், ஒரு குடும்பத்திலுள்ள குழந்தைகளிடையேயும், ஒரு வகுப்பிலுள்ள சிறுவர்களிடையேயும், பள்ளித் தோழர்களிடையேயும், பந்தயக் குழுக்களிடையேயும் அடிக்கடி போட்டியும் முரண்பாடும் சில சமயங்களில் ஏற்படுவதையும் நாம் காண்கின்றோம். போட்டியும் முரண்பாடும் சமூக உறவைத் துண்டிக்கும் நடத்தைகளல்ல.

மனிதர்களிடையேயுள்ள தொடர்புகளைத் துண்டிப்பதோ, புறக்கணிப்பதோ நிச்சயமாகச் சமூக உறவாக இருக்க முடியாது. இவை இல்லாமல் செய்வதுதான் சமூக உறவின் அமைப்பாகும். ஏனென்றால், மக்களுடைய தேவைகள் எல்லாம் அவர்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளுவதால்தான் நிறைவு செய்யப்படுகின்றன. மனிதர்கள் அனைவரும் ஒரு சமூகச் சூழ்நிலையில் கொண்டுவரப்பட்டுச் சமூகப்பண்புகளையும் சேர்ந்து வாழும் குணங்களையும் பெறுமாறு செய்யப்படுகின்றனர்.

மனிதர்களிடமிருந்து துண்டிக்கப்பட்டு, மிருகங்களால் வளர்க்கப்பட்ட மனிதர்களின் கதைகளை நாம் கேட்டிருக்கின்றோம்.

அவர்கள் மற்ற மனிதர்களைக் கண்டால் பயப்படுகின்றார்கள்; மற்றவர்களைப் பார்க்கவும் விரும்புவதில்லை. ஏனென்றால், அவர்கள் சமூகச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்டுச் சமூக உறவுகளைப் பெறவில்லை. துறவிகளும், யோகிகளும் மக்களிடமிருந்து முற்றிலும் விலகி நிற்கின்றார்கள். அவர்கள் சமூக உறவு முறைகளை வளர்த்துக்கொள்ளவில்லை. ஆனால், அப்படிப்பட்டவர்கள் சமூகத்தில் மிகக் குறைவாகவே இருக்கின்றார்கள்.

சமூகத்திலிருந்து ஒருவன் தன்னைத் துண்டித்துக்கொண்டு தனியே வாழ்ந்து வந்தால் அவன் மிகவும் சுயநல வாதியாகவே இருந்து வருகின்றான். சமூகத்திலிருந்து ஒருவன் தன்னைத் துண்டித்துக்கொள்வதற்கான காரணங்கள் பல இருக்கலாம். சமூக உறவு முறைகளை அமைக்கின்ற செயல் முறைகளை உளவியலார் வகுத்துள்ளனர். அவற்றில் சிலவற்றைக் காண்போம்:

கவர்ச்சி-விலக்கு: சமூக உறவு முறைகளின் செயல்முறையில் இந்தக் கவர்ச்சி-விலக்கு மிக முக்கிய காரணப்பொருளாக இருக்கின்றது. இரு மனிதர்களிடையே கவர்ச்சிப் பரிமாற்றம் ஏற்படுமானால், அது பல்வேறுபட்ட தொடர்புகளை அந்த இரு மனிதர்களிடையே ஏற்படுத்துகின்றது. ஆனால், இருவரிடையே பரிமாற்ற வெறுப்பு ஏற்படுமானால், அது சமூக உறவுகளைப் பாதிக்கின்றது. சமூக வாழ்க்கையிலுள்ள உறவு முறைகளைப்பற்றி ஆராயும் உளவியலார்களுக்கும் சமூக இயலார்களுக்கும் இந்தக் கவர்ச்சி-விலக்கு செயல்முறைதான் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

ஆக்கிரமிப்பு-பணிதல்: சமூக உறவில் காணப்படும் மற்றொரு முக்கிய செயல்முறை ஆக்கிரமிப்பு-பணிதல் என்பதாகும். ஒருவர் மற்றவர்மீது ஆதிக்கம் வகிப்பதும், ஒருவர் மற்றவருக்குப் பணிதலும் சமூகத்தில் எங்கும் காணப்படுகின்ற செயல்முறைகளாகும். இச் செயல்முறைகள் எல்லாச் சமூகங்களிலும் காண முடியும். ஒருவர் மற்றவர்களின்மீது அதிகாரம் வகிப்பதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். சமூகத்தில் செல்வாக்கும் பண வசதியும் உள்ளவராக இருக்கலாம். அல்லது உயர்ந்த அதிகாரியாக இருக்கலாம். மிகுந்த பலசாலியாகவோ புத்திசாலியாகவோ இருக்கலாம். வயதில் மூத்தவராகவுமிருக்கலாம். இந்த வகையான குணப்பண்புகளைப் பெறாதவர்கள் பெற்றிருப்பவர்களிடம் பணிந்து செல்லுகின்றார்கள்.

பரஸ்பரச் சமூக இடைவினைச் செயல்முறைகள்

சமூக உறவுமுறைகளில் மிக முக்கியமானது என்று கருதப் படுவது பரஸ்பரச் சமூக உறவு முறைகளாகும். அவற்றைப்பற்றிச் சிறிது பார்ப்போம். பெரும்பாலான உறவுமுறைகளைப் பரஸ்பர உறவு முறைகளில் அடக்கலாம். ஒருவர் மற்றொருவரோடு நட்புறவோ, முரண்பாடோ, வேறு ஏதேனும் ஒரு தொடர்போ கொண்டொழுகலாம். அத்தகைய தொடர்புக்குப் பரஸ்பர உறவு முறை என்று உளவியலார் கூறுகின்றனர்.

பெரும்பாலான பரஸ்பரச் சமூக உறவுகள் எல்லாம் குறிக்கோள்களை நோக்கிச் செலுத்தப்பட்டதாகவே இருக்கின்றன. ஏதேனும் ஒரு குறிக்கோளைப் பெறுவதில் இருவர் முயற்சி செய்யலாம். அக் குறிக்கோள்களை இருவரும் சேர்ந்து பெற்றுப் பகிர்ந்து கொள்வதாகவுமிருக்கலாம். அல்லது ஒருவருக்காக மற்றவர் தமது முயற்சியைக் கொடுத்துதவலாம். அல்லது ஒருவர் விரும்புவதையே மற்றவரும் விரும்பலாம். குறிக்கோள் பகிர்ந்துகொள்ள முடியாததாகவுமிருக்கலாம். அல்லது எடுத்துக்கொள்ளுகின்ற முயற்சிகளுக்கேற்ப உறவுகள் அமையலாம்.

குறிக்கோள்களின் தன்மைகளும் எடுத்துக்கொள்ளப்படுகின்ற முயற்சிகளும், சூழ்நிலைகளும் பரஸ்பர உறவை நட்பாகவே கொண்டு செல்லும் என்று கூற முடியாது. எனவே, பரஸ்பரச் சமூக உறவுமுறை மூன்று வகைகளாக அமைய முடியும் என்று உளவியலார் கருதுகின்றனர். அவை போட்டி, ஒத்துழைத்தல், முரண்பாடு என்பவை.

போட்டி : இரு மனிதர்களிடையிலும் அல்லது பலரிடையிலும் பரஸ்பரமாக நடைபெறுகின்ற ஒரு வகையான போராட்டத்தைப் போட்டி என்று கூறுகின்றனர். போட்டி என்பது உள்ளத்தினுள்ளே கொண்டுள்ள அமைதியான ஒரு விரோத உணர்ச்சியாகும். இது பெரும்பாலும் வரையறுக்கப்படாத குறிக்கோளை அடைவதற்கு நடைபெறும் செயலாக இருக்கின்றது. மேலும், இஃது உடல் சம்பந்தப்பட்ட அல்லது சமூகம் சம்பந்தப்பட்ட தேவைகளை நிறைவு செய்யும் செயல்முறையாகும். ஆனால், கற்றல், அறிவு ஆகியவை போட்டியிலுள்ள போராட்டத்தைக் குறைக்கச் செய்கின்றது. சிறந்த அறிவுடையவர்கள் கடுமையான போட்டிகளில் ஈடுபடுவதில்லை. ஆனால், பெரும்பாலான சமூகங்களில் போட்டி அனுமதிக்கப்பட்ட சமூக நடத்தையாகவே இருந்து வருகின்றது.

மேலைநாட்டுச் சமூகங்களிடையிலும், சில புராதன மக்களிடையிலும் போட்டி ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக நடத்தையாகவும், இலட்சியமாக்கப்பட்ட சமூக நடத்தையாகவும் இருந்து வருகின்றது. ஆனால், இக் காலத்தில் போட்டி எல்லாச் சமூகத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமூக நடத்தையாகவே கருதப் படுகின்றது. பள்ளி மாணவர்களிடமும் வீதியில் விளையாடும் சிறுவர்களிடமும் போட்டி மிகச் சாதாரணமாகக் காணப் படுகின்றது. வீட்டிலுள்ள சகோதரர்களும், தொழில்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும், வியாபாரிகளும், விளையாட்டு வீரர்களும், முன்னேறி வரும் நாடுகளும் போட்டி உடையவர் களாகவே இருக்கக் காண்கின்றோம்.

போட்டியைப் பரிசோதனைகள்மூலம் ஆராய்ந்து பார்த்தபோது மொத்தத்தில் அஃது உற்பத்தியைப் பெருக்கியிருக்கின்றது; தரத்தைக் குறைத்திருக்கின்றது. பகைமை உணர்ச்சி வளரும் பொழுது போட்டி வலுப்பெறுகின்றது. எந்த ஒரு தொழிலும், செயலும் பெருகி முன்னேற வேண்டுமானால், போட்டி இருந்து தான் தீரவேண்டும். எனவே, போட்டி சமூகத்தில் ஒரு முக்கிய உறவு முறையாக இருந்து வருகின்றது. ஆனால், இன்றைய அறிவியல் உலகத்தில் போட்டி ஒரு பெரும் பிரச்சினையாகிக் கொண்டு வருகின்றது. தீமைகள் பெருகி வருகின்றன. மனிதன் தன்னுடைய மனவளத்தை இழந்து வருகின்றான் என்கிறார் கெரன் ஹார்னி. தீமைகள் குறைய வேண்டுமானால், போட்டிகள் குறைய வேண்டும். அதற்கு ஒரு வழி என்னவென்றால், போட்டியைப் பிறரிடம் காட்டாமல் தன்னிடமே காட்டிக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

ஒத்துழைத்தல்: இந்தப் பரஸ்பரச் சமூக உறவைக் கூட்டுறவு என்றும் கூறலாம். போட்டியிலிருந்து இது முற்றும் மாறுபட்ட தாகும். ஒத்துழைத்தல் என்பது ஓரினப்படுத்தப்பட்ட பலருடைய முயற்சி பலரும் பங்குகொள்ளும் வகையாக ஒரு குறிக் கோளை நோக்கிச் செலுத்தப்பட்டதாகும். ஒரு மனிதனுடைய முயற்சிகளால் ஒரு குறிக்கோளை அடைய முடியாத நிலை ஏற்படும் பொழுது இச் சமூக உறவு உருவாகின்றது.

ஒத்துழைத்தல் என்ற சமூக உறவைப் பறவைகளிடமும் மிருகங்களிடமும் நாம் காணலாம். வேட்டையாடுதல், குட்டிகளைப் பாதுகாத்தல், ஆபத்துகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளல், ஓரிடத்தில் சேர்ந்து வசித்தல், கூடுகளைக் கட்டுதல், விரோதிகளைத் தாக்குதல் முதலிய செயல்களில் பறவைகளிடமும்

மிருகங்களிடமும் ஒத்துழைத்தல் உறவு முறையைக் காணலாம். வாலில்லாக் குரங்கினிடம் இச் செயல்முறையைச் செயல்விளக்கம் செய்து காட்டப்படுகிறது.

மூன்று வயதுக் குழந்தையின் நடத்தையிலும் ஒத்துழைத்தல் இருப்பதைக் காணலாம். ஆரம்பப்பள்ளிகளில் ஒத்துழைப்பினால் ஏற்படும் நன்மைகளைப்பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுக்குக் கூறுகின்றார்கள்; அச் செயலை அவர்களிடம் காணும்பொழுது பாராட்டியும் பரிசுகள் கொடுத்தும் ஊக்குவிக்கின்றார்கள். குழந்தைகளும், மாணவர்களும், தொழிலாளர்களும், வியாபாரிகளும், பொதுமக்களும் ஒத்துழைத்தல்மூலம் பல செயல்களை வெற்றிகரமாகச் செய்து காட்டுகின்றார்கள். ஒத்துழைத்தல் இல்லாத போது பல செயல்களை அவர்கள் வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியாததையும் காண்கின்றோம்.

இன்றைய வாழ்க்கையில் பல செயல்களை நாம் ஒத்துழைத்தல் மூலமே செய்து வருகின்றோம். கூட்டுறவு முறைகளின்மூலம் நடைபெறும் நிறுவனங்கள் எல்லாம் ஒத்துழைப்பின் வெற்றிகளைக் காட்டுகின்றன. ஒத்துழைப்பின்மூலம் சாதகமாகச் சூழ்நிலைகளை உண்டாக்கிக் காட்டலாம். அதன்மூலம் உடன்பாடான சமூக உறவுகள் பெருகுகின்றன; மகிழ்ச்சிகரமான வாழ்வும் தோன்ற வழியுண்டு.

முரண்பாடு: இரண்டு மனிதர்களிடையே அல்லது குழுக்களிடையே ஏற்படுகின்ற பரிமாற்றமான எதிர்ப்பைக் குறிப்பது முரண்பாடு. தனி மனிதனுள் ஏற்படுகின்ற மனப்போராட்டமன்று இது. இருவர் பகிர்ந்துகொள்ள முடியாத குறிக்கோள் சம்பந்தமாக அவர்களிடையே எழுகின்ற ஒரு வகையான ஆக்கிரமிப்பு அல்லது எதிர்ப்பு உணர்ச்சியாகும் இது. பதவி, மரியாதை, வெற்றி, இன்பமனுபவித்தல் முதலியவற்றைப் பெறுவதில் இருவரிடையே போட்டி ஏற்பட்டு, முரண்பாடாக அது வளரக் கூடும். ஒருவன் விரும்பியதை மற்றொருவனும் விரும்பி அதை அடைய முயற்சி செய்யும்பொழுது முரண்பாடு எழுகின்றது. சில உளவியலார் முரண்பாடு, போட்டியிலிருந்துதான் தோன்றுகின்றது என்று கருதுகின்றனர்.

ஒரு குறிக்கோளை அடையும் முயற்சியில் ஒருவனுடைய நோக்கம் வலிமை மிக்கதாக இருந்து, அதே குறிக்கோளுக்காக மற்றொருவனும் போட்டியிட்டால் அது முரண்பாட்டில் முடிகின்றது. முரண்பாடு என்ற சமூகத் தொடர்பு ஆக்கிரமிப்பு,

மனமுறிவு, கோபம் ஆகியவற்றால் தோன்றுகின்றது. சம்பந்தப் பட்ட இருவர், அவர்களுடைய கோபத்தைக் கொஞ்சமும் குறைக்காது வெளிப்படுத்துகின்றனர் என்று இருவரும் அறிந்தால் அவர்கள் ஒருவரையொருவர் அழிக்க முற்படுகின்றார்கள்.

எல்லாச் சமூகத்திலும் தனிமனித முரண்பாடு ஒழுங்குபடுத் தப்பட்டு ஆதரிக்கப்படுகின்றது. இருவரிடையே நடைபெறு கின்ற சண்டையில் முஷ்டியை உபயோகிக்கச் சமூகம் அனுமதி யளிக்கின்றது. ஆனால், கல்லால் அடித்துக்கொள்ளவோ, கத்தி யால் குத்திக்கொள்ளவோ, உதைக்கவோ, கடிக்கவோ எந்தச் சமூகமும் அனுமதி தருவதில்லை.

குத்துச்சண்டையைப் பார்க்கின்றோம். இது சமூகத்தால் அனுமதிக்கப்பட்ட சண்டையாகும். ஆனால், குத்துச்சண்டை போடுகின்றவர்கள் கைகளில் உறைகள் மாட்டிக்கொண்டு முகத் திலும், நெஞ்சிலும், முதுகிலும் அடித்துக்கொள்ளுகின்றார்கள். சில உடற்பகுதிகளில் அடிக்கக் கூடாது என்பது விதி. இரு நாடு களிடையே நடைபெறுகின்ற போரில்கூட என்னென்ன ஆயுதங் களை உபயோகிக்கக் கூடாது, என்னென்ன ஆயுதங்களை உபயோ கிக்க வேண்டும் என்று சர்வதேசக் கட்டுபாடு இருக்கின்றது. எனவே, தனிமனித முரண்பாடுகளையும் சமூக முரண்பாடுகளையும் சமூகம் அனுமதிக்கின்றது. முரண்பாடுகளைக் குறைக்கும் பொருட்டுச் சமூகம் குறைவான முயற்சிகளையே எடுத்துக் கொள்ளுகின்றது.

எஸ்கிமோ மக்களிடையே தனிச் சண்டை ஏற்பட்டால், அவர்கள் ஒருவரையொருவர் கேலி செய்து பாட்டுப்பாட வேண்டும். அதை வேடிக்கை பார்க்க ஏராளமான மக்கள் கூடு வார்கள். கூடியுள்ள மக்கள்தான் யார் வெற்றி பெற்றவர் என்று தீர்ப்புக் கூற வேண்டும்.

கவாகியூடின் என்ற செவ்விந்தியர் சமூகத்தில் இருவரி டையே முரண்பாடு ஏற்பட்டால் அவ்விருவரும் தங்கள் சொத் துகளை அள்ளிப் பிறருக்கு வழங்க வேண்டும். யார் அதிகமான சொத்துகளை அள்ளி வழங்குகின்றாரோ அவர்தான் வெற்றி பெற்றவராவார்.

உடல் சார்ந்த குணங்கள்தான் முரண்பாடுகளுக்குக் காரணம் என்று சிலர் கருதுகின்றனர். ஆக்கிரமிப்புக் குணமும் சண்டை யுணர்ச்சியும் மனிதனிடம் இயல்பாகவே அமைந்துள்ளன என்று

சிலர் கருதுகின்றனர். இந்த இரண்டு குணங்களும் முரண் பாட்டுக்கு வித்திடுகின்றன. ஆனால், மனித இன இயல் வல்லு நர்கள் இக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஒரு மனிதன் தன்னுடைய முயற்சிகளில் தோல்வியடையும் போது மன முறிவு கொள்ளுகிறான். அதனால் அவன் கோபமும் பயமும் கொள்ளும் நிலை பிறக்கின்றது. இஃது உடல் சம்பந்தப் பட்ட குண் வெளிப்பாடு என்பது உளவியலாரின் கருத்து. ஆனால், இக் குணங்கள் மனிதர்கள் பெறுகின்ற கல்வியறிவாலும் அனுப வத்தாலும் மாறுபாடடைகின்றன. சில சமூகக் கூறுகளும் மனமுறிவுகளை உண்டாக்கி முரண்பாட்டுக்கு வித்திடுகின்றன. துரிதமாக மாறிவரும் இன்றைய சமூகத்தில் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையில் தப்பெண்ணங்களும் முரண்பாடுகளும் தவிர்க்க முடியாதவையாக இருந்து வருகின்றன.

வல்லார் (Wallar) என்ற சமூக இயல் வல்லுநர், திருமணம் கணவன் மனைவியரிடையே இன்பம் தரும் இணக்கங்களை ஏற் படுத்துகின்றது என்றும், இச் செயல்முறையில் பிணக்கும், மறுப் பும், முரண்பாடும் உண்டாகியே தீரும் என்றும் கூறுகின்றார்.

ஒரு வழிச் சார்பான சமூக இடைவினைச் செயல்முறைகள்

இதுவரையில் பரஸ்பரச் சமூகப் பரிமாற்றச் செயல்முறை களைப்பற்றி ஆராய்ந்தோம். கொண்டு கொடுத்து நடைபெறுகின்ற செயல்முறைகளில் நட்பு, முரண்பாடு ஆகிய இரண்டும் இருப் பதைக் கண்டோம். இனிச் சமூகப் பரிமாற்றச் செயல்முறைகளில் ஒருவழிச் சார்பான தொடர்புகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்று காண்போம். ஒருவழிச் சார்பான தொடர்புகளில் செயல் எதிர்ச்செயல் இணையாக இருப்பதில்லை. சம்பந்தப்பட்ட இருவர் ஒன்று போலவே நடந்துகொள்ளுவதில்லை. உதாரணமாக, இரு வரில் ஒருவர் சண்டை போடுகின்றார் என்று வைத்துக்கொள்வோம். மற்றவர் சண்டை போடாமலிருக்கலாம். இந்தச் சூழ்நிலை முரண்பாடான சூழ்நிலை என்று கருத முடியாது. இருவருடைய செயல்களும் ஒன்று போலில்லை. இது போன்று சம்பந்தப்பட்ட இருவருடைய நடத்தையும் மாறுபட்டிருக்குமானால், அதை ஒரு வழிச்சார்பான சமூகத் தொடர்பு என்று கூறுகின்றோம். அவை வலுக்கட்டாயமும், சுரண்டலும், பின்பற்றல், கருத்தூண்டல் அல்லது எண்ணமெழுப்புகை என்பவை.

வலுக்கட்டாயமும் சுரண்டலும்: ஒருவருடைய நடத்தையில் பலதரப்பட்ட எதிர்வினைகளைக் காணலாம். சில எதிர்வினைகள்

ஏற்றுக்கொள்ளக்கூடியவையாகவும், சில ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவுமிருக்கலாம். ஏற்றுக்கொள்ள முடியாதபோது அவை வலிந்து திணிக்கப்படலாம். ஒருவர் தம்முடைய விருப்பங்களை மற்றவர்கள்மீது வலிந்து திணிப்பது அல்லது ஏற்க வைப்பது வலுக்கட்டாயமாகும். திணிக்கப்படுகின்றவர்கள் பணியாளர்களாக இருக்க வேண்டும் அல்லது சலனமற்றவர்களாக இருக்க வேண்டும்.

ஆனால், சுரண்டும் செயல்முறையில் ஒருவரோ பலரோ தாங்கள் விரும்பிய குறிக்கோள்களை அடைய மற்றவர்களுடைய உழைப்பை உபயோகித்துக் கொள்ளுவதாகும். பின்பற்றலில் ஒருவர் மற்றவரைப் பார்த்து அவர் நடக்கின்றபடியே நடந்து கொள்வதாகும். பின்பற்றுகின்றவர் கீழ்ப்படிதலான ஒரு பாகத்தை ஏற்கின்றார். இதுவேதான் எண்ணமெழுப்புகைச் செயலிலும் நடைபெறுகின்றது. ஒருவர் மற்றவருடைய கருத்தை ஏற்றுச் சிந்திக்காமலேயே செயல் புரிகின்றார். இந்த வகையான ஒருவழிச் சார்பான தொடர்புகளெல்லாம் பரஸ்பரத் தொடர்புகளைப் போன்று நேரடியாகக் கவனிக்கக் கூடியவையாக இல்லை. இவை மறைமுகமாகவே பல வழிகளில் பரிசோதிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, நிலமானிய முறைகள்பற்றியும், இன்றைய சர்வாதிகாரங்கள்பற்றியும் வெளிப்படுகின்ற சரித்திர ஆராய்ச்சிகளெல்லாம் வலுக்கட்டாய அரசாங்கம், சுரண்டல் அரசாங்கம் ஆகியவற்றின் நடத்தைகளைப்பற்றியவையாகத்தான் இருக்கின்றன. பொருளாதாரத் துறையிலுள்ள சுரண்டல்கள் பற்றியும் சில ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

அமெரிக்கர்-நீகிரோ உறவுகள், நீகிரோக்களின் ஆளுமை ஆகியவற்றின்மீது வலுக்கட்டாயமும் சுரண்டலும் எத்தகை விளைவுகளை உண்டாக்கியிருக்கின்றன என்பதுபற்றி அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஆதிக்கத்தலைமை பற்றியும் ஜனநாயகத் தலைமைபற்றியும் குர்ட்லேவினும் (Kurt Lewin), அவருடைய நண்பர்களும் அமெரிக்காவில் நடத்திய ஆராய்ச்சிகள் வலுக்கட்டாயம், இணக்கம் ஆகிய சமூக நடத்தைகளைப்பற்றி நன்கு தெரிந்துகொள்ளுவதற்கு வழி செய்திருக்கின்றன.

வலுக்கட்டாயத்திற்கும் சுரண்டலுக்கும் பலியானவர்கள் மனமுறிவுகளையும் நெருக்கடி நிலைகளையும் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். இஃது உடனடியாகவோ சில நாள்கள் கழித்தோ அம் மக்களைப் பகைமை உணர்ச்சிக்கும் ஆக்கிரமிப்பு

நடத்தைக்கும் வழி காட்டிச் செல்லுகின்றது. எனவே, வலுக் கட்டாயமும் சுரண்டலும் மனிதர்களுக்கு இடையில் முரண் பாட்டை உண்டாக்குகின்றன. பொதுவாகக் கூறுவோமானல், வலுக்கட்டாயத்தின்மீதும் ஆதிக்கச் செயலின்மீதும் கட்டப் படுகின்ற சமூகத் தொடர்புகள் நிலையாக இருக்க முடியாது. மன நெருக்கங்கள் ஏற்பட்டு, முரண்பாடுகளை உண்டாக்கி விடுகின்றன. பிறகு அது சமூக மாற்றமாக உருவெடுத்து இறுதி யாக ஜனநாயகம், ஒத்துழைப்பு என்ற ஏற்பாடுகளில் அவை ஒடுங்குகின்றன. இச் செயல்முறைகள் சிறு அளவில் நடைபெற்ரு லும் சரி, பெருமளவில் நடைபெற்ருலும் சரி, விளைவு ஒன்றுதான்.

பெற்ரோர் தம் குழந்தைகளை ஒழுங்குணர்வுடன் வளர்க்க வேண்டுமென்று கருதிச் சில வேலைகளைச் செய்யச் சொல்லிக் கேட்கலாம். பெரும்பாலும் குழந்தைகள் அதற்கு இணங்குவ தில்லை. எனவே, வலுக்கட்டாயத்தின்மீதும் ஆதிக்கத்தின் மீதும் அக் குழந்தைகள் அவற்றைச் செய்யுமாறு செய்கின் றனர். ஆனல், அஃது அந்த நேரத்தோடு முடிந்து போகின்றது. தொடர்ந்து அந்த வேலைகளை அவர்கள் செய்வதில்லை. அனுதின மும் பெற்ரோர்கள் தங்கள் குழந்தைகளிடம் கண்டிப்புடன் நடந்து கொள்ள முடிவதில்லை. இறுதியில் அக் குழந்தைகளின் விருப்பத் திற்கேஅவற்றை விட்டுவிடுகின்றனர். அவ்வாறில்லை என்ருல், இந்த நிலைமைக்கு ஆளான பையன் மன நெருக்கம் அடைந்து வீட்டைவிட்டே ஓடிவிடுகின்ருன். வீட்டை விட்டு ஓடி விட்ட பையனைத் தேடிப் பிடிக்க முயலாத பெற்ரோர் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதையும், அவற்றில் அவனுடைய விருப்பத்திற்கே எல்லாவற்றையும் விட்டு விடுவதாகவும், உடனே வந்து சேர்ந்தால் போதும் என்ற வாசகம் காணப்படுவதையும் நாம் அனுதினமும் கண்டு வருகின்ருேம்.

குடும்பத்தில் இந்தச் சமூகத் தொடர்பு இந்த நிலைக்குச் செல்லுமானல், மற்றத் துறைகளிலும் அவ்வாறே விரிந்து அது செல்ல முடியும் என்று நம்பலாம். மக்கள் தொகை பெருகியுள்ள ஒரு நாட்டை ஆளும் அரசும் இத்தகைய ஓர் அனுபவத்தை ஏதாவது ஒரு சமயம் பெற்றிருக்க முடியும். வலியவர்கள் எளிய வர்களை வலுக்கட்டாயம் செய்து தங்களுடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ளுவதையும், ஒரு கும்பல் மற்ருெரு கும்பலை இத்தகைய தொடர்பின்மூலம் சுரண்டி வாழ்வதையும், ஒரு சாதி யார் மற்ருெரு சாதியினரை வலுக்கட்டாயமாகப் பணியவைத்து ஆதிக்கம் புரிவதையும், செல்வந்தர்கள் வறுமையுற்ருேர்மீது வலுக்

கட்டாயம் என்ற கருவியை ஏவி அவர்களைச் சுரண்டி வாழ்வதையும் நம் நாட்டில் தாராளமாகக் காணலாம்.

ஆனால், பல்லாண்டுக் காலமாகப் பல தலைமுறைகளாக வலுக்கட்டாயத்திற்கும் சுரண்டலுக்கும் பலியான மக்கள் இஃது இறைவன் விட்ட வழி என்றும், தலைவிதி அவ்வாறு ஏற்பட்டு விட்டது என்றும் கூறி வாளா இருந்து விடுவதையும் நாம் இங்குக் காணலாம். ஆனால், அவர்கள் உண்மைகளை அறியும்பொழுது முரண்பாடு கொண்டு சமூக மாற்றத்தை எதிர் நோக்குகின்றார்கள்; அதைச் செய்வதாக யாரேனும் உறுதி கூறுவார்களானால், அவரைத் தலைவராக ஏற்று வலுக்கட்டாயத்தையும் சுரண்டலையும் எதிர்த்துப் போர் புரிகின்றார்கள். அரசியல் புரட்சிகளும், உள் நாட்டுப்போர்களும் இவ்வாது ஏற்பட்டவைதான்.

பின்பற்றல் : சமூக நடத்தையில் பின்பற்றல் என்ற செயல்முறை மிக எளிதானதொன்றாக இருக்கின்றது. ஆனால், அது மிகைப்படுத்தப்பட்டிருக்கின்றது. பின்பற்றல் செயல்முறையை ஓர் இயற்கையறிவு என்று பல சமூகக் கோட்பாடுகள் கூறுகின்றன. ஒரே மாதிரியான எத்தகைய நடத்தையைப் பின்பற்றல் வெளிப்படுத்தினாலும், அஃது இயற்கையறிவுதான் என்று கூறுகின்றனர். ஆனால், உளவியல் வல்லுநர்கள், நடத்தையில் பல ஒரே மாதிரியானவையாக இருக்கின்றன, அவை பொது அமைப்பு கூறுகளாலும் ஒரே மாதிரியான கற்றல் செயல் முறைகளினாலும் ஏற்படுகின்றன என்று கருதுகின்றனர்.

உதாரணமாக, இரு மனிதர்கள் ஓர் இடத்தில் நின்றுகொண்டிருக்கும்பொழுது அருகிலுள்ள மாதா கோவிலில் மணியடிக்கின்றது என்று வைத்துக்கொள்ளுவோம். அந்த இருவரில் ஒருவர் கிறித்துவ சமயத்தவராக இருப்பாரானால், அவருடைய துலங்கல் அந்த மணியோசைக்கு ஒரு மாதிரியாகவும், கூட இருந்தவர் இந்து சமயத்தவராக இருப்பாரானால் அவருடைய துலங்கல் ஒரு மாதிரியாகவுமிருப்பதைக் காணலாம். அந்த மணியோசை இந்த இருவரையும் ஒரே மாதிரி துலங்கச் செய்திருக்க முடியாது. எனவே, இருவரும் ஒரே மாதிரி நடந்துகொள்ளவில்லை. மேலும், ஒருவரையொருவர் பின்பற்றவில்லை. ஒரே சூழ்நிலையிலுள்ள இருவர் ஒருவரையொருவர் பின்பற்றி நடக்கமுடியாத செயல்கள் பலவற்றிக்கு உதாரணம் காட்டலாம். ஆனால், ஒருவருடைய நடத்தையை மற்றொருவர் மாதிரியாக ஏற்று, தன்னறிவுடனேயே அதைத் திருப்பிச் செய்வாரானால், அந்த நடத்தையைப் பின்பற்றல் என்று கூறலாம். இந்த நடத்தை ஒரு குழந்தை

சமூக நடத்தையைப் பெருக்கிக்கொள்ளுவதைப் பொறுத்து அதிகரித்துச் செல்லுகின்றது.

தந்தையை மகன் சில செயல்களில் பின்பற்றுகின்றான். தாயை மகள் சில செயல்களில் பின்பற்றுகின்றாள். மாணவன் ஆசிரியரைச் சில செயல்களில் பின்பற்றுகின்றான். அரசியல் தலைவர்களைத் தொண்டர்கள் பின்பற்றுகின்றார்கள். ஆனால், பின்பற்றுகின்றவர்கள் தங்களுக்கு விருப்பமான அல்லது சிறந்த தென்று தோன்றுகின்ற ஒன்றைத்தான் பின்பற்றுகின்றார்கள். நற்செயல்களையும் பின்பற்றலாம். தீச்செயல்களையும் பின்பற்றலாம். சிறந்த சொற்பொழிவாளரைச் சிலர் பின்பற்றி அவரைப் போலவே பேசலாம். தந்தை புகைபிடிப்பதைப் பார்த்து மகனும் அவருக்குத் தெரியாமல் புகைபிடிக்கலாம். எனவே, பின்பற்றல் என்ற சமூகத் தொடர்பு நல்ல செயலாகவே இருக்கும் என்று கூற முடியாது.

கருத்தூண்டல் அல்லது எண்ணமெழுப்புகை: ஒருவர் கூறுவதையோ, செய்வதையோ, குறிப்பிட்டுக் காட்டுவதையோ அவ்வாறே மற்றொருவர் ஏற்றுக்கொள்ளுவதற்குப் பெயர் கருத்தூண்டல் அல்லது எண்ணமெழுப்புகை என்பதாம். பிறரிடம் ஒருவர் தம்முடைய கருத்தையே தோற்றுவித்தல் என்பது இச் செயல்முறை. பிறருடைய கருத்தை ஏற்றுக்கொள்பவர் எந்த வகையான எதிர்ப்பும் காட்டாமல் ஏற்றுக் கொள்ளுகின்றார். இந்தச் சமூகத் தொடர்பை விரும்புகின்றவர்கள் இஃது ஒரு வழி சார்ந்த தொடர்பாகவே இருக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கின்றார்கள்; தாங்கள் கூறுவதையோ, செய்வதையோ அவ்வாறே கடைபிடிக்கப்பட வேண்டும் என்று நம்புகின்றார்கள்; மறுப்புக் கூறக் கூடாது; மறுத்தால் தங்கள் திட்டம் பாழ்பட்டுவிடும் என்று நினைக்கின்றார்கள்.

ஒரு வழியில் பார்க்கும்பொழுது கருத்தூண்டலும் இருவழிச் சமூகத் தொடர்பாகத் தெரிகின்றது. ஒருவர் கருத்தைப் படைக்கின்றார். மற்றவர் அதை ஏற்றுக்கொண்டு அக் கருத்தின்படி நடக்கின்றார். ஆனால், கருத்தை ஏற்று நடக்கின்றவர் சலனமற்று, செயலுக்கு ஆளானவராகவும், எவ் வகை எதிர்ப்புமின்றியும் நடந்துகொள்ளுவதால் இச் செயல்முறையை நாம் ஒருவழிசார்ந்த சமூகத் தொடர்பு வகையில் சேர்க்கின்றோம். ஒருவரிடம் தோன்றுகின்ற கருத்து மற்றவரிடம் செயலாகின்றது. எனவே, கருத்து ஒருவரிடமும், செயல் மற்றொருவரிடமும் காணப்படுகின்றது.

ஆனால், இச் செயல் முறையில் தனி மனித வேறுபாடுகள் இருக்கின்றன. கருத்தேற்றத்திற்கு ஒருவர் எளிதில் வளைந்து கொடுக்கலாம். மற்றொருவர் கருத்தை மறுக்கலாம். இந்த இரண்டு கோடி நிலைகளுக்கிடையில் மற்றவர்கள் காணப்படலாம். மெசர்சிமட் (Messerschmidt) என்பவர் இதைப்பற்றிப் பரிசோதனைகள் நடத்தினர். அப் பரிசோதனைகளில் குழந்தைகள் ஏழு முதல் எட்டு வயதுவரையிலுள்ளவர்கள் எளிதில் கருத்தேற்றத்திற்கு ஆளாகின்றார்கள் என்று தெரிய வந்தது. பெண்களிடம் இது சற்று அதிக அளவுக்கு இருப்பதாக அவர் கண்டார். ஒரு சமயத்தில் பெரும்பாலான மக்கள் கருத்தேற்றத்திற்கு இலக்கானவர்களாகவே இருந்தார்கள். அதனால் இஃது ஆளுமைப் பண்புகளில் ஒன்றாக இருக்குமா என்று உளவியலார் கருதுகின்றனர். ஆனால், இச் செயல் நடைபெறும் சூழ்நிலைகளைக் கவனித்தால், இஃது ஆளுமைப் பண்புகளில் ஒன்றாக இருக்க முடியாது என்று கருதுகின்றனர்.

தற்காலிகமான சூழ்நிலையிலும், சந்தர்ப்பச் சூழ்நிலையிலும் ஒவ்வொருவரும் கருத்தேற்றத்திற்கு இலக்காகின்றனர். மற்றச் சமயங்களில் அவர்கள் இலக்காவதில்லை. மனிதர்களில் சமூக நடத்தையில் கருத்தேற்றச் செயல்முறையை நன்கு அறிவது கடினமான செயலாக இருக்கின்றது. ஆனால், அது முக்கியமானதாக இருந்து வருகின்றது. குழந்தைகளைச் சமாளிப்பதில் அதிகாரத்தை விடவும், மிரட்டலை விடவும் திறமையான கருத்தேற்றம் மிகுந்த பலனையளிக்கின்றது என்பதைப் பெற்றோர் அறிவர். கருத்தேற்றம் சமூகத்தை வசப்படுத்துவதற்கு மிகவும் வலிமை வாய்ந்த கருவியாகும். விளம்பரங்களைப் போன்றும், கொள்கை பரப்புதலைப் போன்றும் இது பலனளிக்கின்றது.

கருத்தேற்றமும் பின்பற்றலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் உளவியலாரின் கவனத்தைக் கவர்ந்தன. பதினெட்டாம் நூற்றாண்டில் மெஸ்பர் என்பவர் முதன்முதலில் மிருகக் கவர்ச்சியைக் கண்டுபிடித்தார். கருத்தேற்றம் பற்றிய முடிவான விளக்கத்தை லெபோன் (Lebon) என்பவர்தான் தம்முடைய கும்பலின் உள்ளம் (Crowd Mind) என்ற நூலில் தெளிவுபடுத்தினர். அவர் பிரெஞ்சுப் புரட்சியின்போது பாரிஸ் நகர மக்களின் வரம்பு கடந்த செயல்களினால் கவரப்பட்டார். கும்பலின் உள்ளம் ஓர் உயிர்ப்பொருளில் ஆன ஒற்றுமை என்றும், கூட்டு நரம்பு மண்டலத்தின் இணைப்பில் அமைந்தது என்றும், இவை கருத்தேற்றம் என்ற செயல்முறையிலிருந்தான் தோன்றுகின்றன என்றும் கண்டார்.

ஆனால், சில உளவியல் வல்லுநர்கள் லெபோன் கூறியது மிகை என்று கருதினார்கள். ஆனாலும். கருத்தேற்றம் அப்பொழுது பெற்றிருந்த முக்கியத்துவத்தையே இன்றும் பெற்றிருக்கின்றது. கருத்தேற்றம் என்ற செயல்முறை ஒரு சமூகத்தில் சரியாகச் செயல்படவில்லை என்றால், பல குழப்பங்கள் ஏற்படுவதாக அமையலாம். எந்தத் துறையிலும் பணிகள் ஒழுங்காக நடைபெற மாட்டா. ஒழுக்கம், பணிதல், கட்டளையிடுதல், கட்டளை ஏற்றல், கட்டுப்பாடு முதலியவையும், அன்பு, உறவு, இணக்கம், ஒற்றுமை முதலியவையும் தரம் குறைந்து போய்விடும். போட்டி, பொறாமை, முரண்பாடு, ஒழுக்கமின்மை, கட்டுப்பாடின்மை, வெறுப்பு, விரோதம் முதலியவை எளிதில் எங்கும் தோன்ற முடியும். இணக்கமுள்ள சமூக வாழ்வு மலர முடியாது. ஒருவர் கருத்தை மற்றொருவர் ஏற்றால்தான் ஒரு சமூகம் திறமையாக இயங்க முடியும். எல்லோரும் தலைவர்களாக இருந்துகொண்டு பிறர் கருத்தை ஏற்க மறுத்தால் குழப்பந்தான் ஏற்படும். எனவே, கருத்தேற்றம் என்ற செயல்முறை இணக்கமுள்ள ஒரு சமுதாயத்தைத் தோற்றுவிக்கவும், மகிழ்ச்சிகரமான வாழ்வுக்கு வித்திடவும் வல்ல ஒரு சமூக உறவுமுறையாக இருந்து வருகின்றது.

மாறிவரும் சமூக இடைவினைச் செயல்முறைகள்

இம் முறை நாம் மேலே கண்ட சமூக உறவு முறைகளிலிருந்து சற்று மாறுபட்டதாகும்; சம்பந்தப்பட்ட மனிதர்களிடையே மாறிவரும் உறவு முறைகளைக் காட்டுவதாகும். ஒரு வகையான சமூகத் தொடர்பு ஏற்கெனவே நிலவி வந்திருந்து அது மாறி வேறொன்றாக உருவெடுப்பது மாறிவரும் சமூக உறவு முறையாகும். அவை இணங்கிப்போதல், தன்மயமாக்கல், தொடர்பறுத்தல் என்பவை.

இணங்கிப்போதல் : சமூகத் தொடர்பைப் பரஸ்பரமாக மாற்றியமைத்துக்கொள்ளுதலே அல்லது இணக்கத்தைப் பெருகச் செய்யும் ஒரு செயல்முறையைக் குறிப்பதாகும். முரண்பாடு கொண்டுள்ள இரண்டு மனிதர்களையோ இரண்டு குழுக்களையோ செயல்புரியும்படியான உறவுமுறை கொள்ளச் செய்கின்ற வழியாகும். முரண்பாட்டைப் போக்கி ஒரு வகையான உடன்பாட்டை உண்டாக்கும் செயல்முறை இணங்கிப் போதலாகும்.

இணங்கிப்போதல் செயல்படுமானால், அது பரஸ்பர இணக்கத்தையோ தன்மயமாக்கலையோ முழுமையுறச் செய்து மேம்பாடு அடையச் செய்யும். இதை விளக்கிக் கூறும் வகையில் திருமணத்தை ஓர் உதாரணமாகச் சொல்லலாம். திருமணத்தின்

பயன் இடங்கொடுத்தல் அல்லது இணங்கிப் போதல்தான். சாதாரணமாக, புதுமணத் தம்பதிகளின் தேனிலவு நாள்கள் முடிவுற்றதும் நடப்பது என்ன? முரண்பாடுகளும், தப்பெண்ணங் களுந்தான். அவை மாறுபட்ட பழக்கங்களையும், நோக்கங்களையும், விருப்பங்களையும், மதிப்புகளையும் அவர்கள் கொண்டிருப்பதை வெளிப்படுத்துகின்றன.

சில முறைகள் நடைபெற்று முடிந்த விவாதங்களுக்குப் பிறகு அந்த மாதிரியான பொருள்களைப்பற்றியெல்லாம் இனிமேல் இருவரும் விவாதிக்கக் கூடாது என்ற முடிவுக்கு இருவரும் வரலாம். இது போன்ற இணங்கிப்போதல் செயல்முறையானது பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலும், நிருவாகத் தினருக்கும் பணியாளர்களுக்கும் இடையிலும், நண்பர்களிடை யினும் நடைபெறுவதற்குச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

மிகப் பெரிய அளவில் இணங்கிப் போதல் பற்றிப் பேசுவோ மானால், அது வேறுபட்ட மனித இனங்களின் உறவுமுறைகளைப் பற்றியும் தொழிற்சாலைகளில் நிருவாகத்தினருக்கும் தொழிலாளர் களுக்குமிடையிலுள்ள உறவுமுறைகளைப்பற்றியுந்தான் இருக்க முடியும். வேலை நிறுத்தம், கதவடைப்பு, தொழிற்சாலைகளில் ஏற்படும் இதர முரண்பாடுகள் ஆகியவற்றைத் தீர்ப்பதில் சாதாரணமாக இணங்கிப்போதலைத்தான் இறுதியில் அனைவரும் விரும்பி ஏற்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றனர். எனவே, தீர்ப்புகள் பெரும்பாலும் விட்டுக்கொடுத்து ஒப்பந்தம் செய்தல், நடுத்தீர்ப்புச் செய்தல், நட்பாக்குதல் முதலியவையாகவே இருக் கின்றன. இவையெல்லாம் இணங்கிப்போதலின் செயல்முறைகள் தான். இணங்கிப்போதல் என்ற செயல்முறை முரண்பாட்டிலிருந்து பரஸ்பர இணக்கத்திற்குக் கொண்டுச் செல்லுகின்றது.

தன்மயமாக்கல்: சமூக உறவுச் செயல்முறைகளில் தன்மய மாக்கல்தான் இறுதியாக நடைபெறுகின்றது என்று சில உளவிய லார் கருதுகின்றனர். தன்மயமாக்கல் என்ற செயல்முறையின் மூலம் பல்வேறுபட்ட எண்ணங்களையும், பற்றுகளையும், நோக்கங் களையும் கொண்டிருக்கின்ற மக்கள் ஒரு பண்பாட்டு வாழ்க்கை யில் இணைக்கப்படுகின்றார்கள். வாழ்க்கை முறைகளில் வேறு பாடற்ற ஒரு நிலையை மக்களிடையே உண்டாக்கும் செயல் முறை இதுவாகும். ஒரு நாட்டிலிருந்து சில மக்கள் மற்றொரு நாட்டிற்குக் குடிப் போகின்றார்கள். அவர்கள் அங்குச் செல்லும் போது தங்களுடன் தங்களுடைய வாழ்க்கை முறைகளையும், பழக்க வழக்கங்களையும், விருப்பு வெறுப்புகளையும் கொண்டு செல்லு

கின்றார்கள். ஆனால், அந்த நாட்டில் இவையெல்லாம் வேற்று வடிவங்களாக இருந்தால் இந்த இரண்டு வாழ்க்கை முறைகளும் முரண்படுகின்றன. இவற்றிலுள்ள முரண்பாடுகளைக் குறைக்க அல்லது போக்க வேண்டுமானால், முதலில் இணங்கிப்போதல் என்ற செயல்முறை நடைபெற வேண்டும். இஃது இரண்டு மாறுபட்ட பண்பாடுகள் ஒன்றுதலின் முதல் கட்டமாகும்.

பிறகு ஆண்டுகள் செல்லச் செல்ல வேற்று நாட்டில் குடியேறியவருடைய சிந்தனை வழிகளும் உணர்ச்சிகளும் புது இடத்திற்கேற்ப இசைவிணக்கம் பெறுகின்ற வகையில் மாறி வரத் தொடங்குகின்றன. வேற்று நாட்டில் குடியேறுகின்ற மக்களில் வயது முதிர்ந்த பலர் நல்லிணக்கம் பெற முடியாதவர்களாக இருக்கின்றனர். ஆனால், இளைஞர்கள் குறிப்பிடத்தக்க முறையில் வெகு சீக்கிரம் முழு இணக்கத்தையும் பெற்றுவிடுகின்றார்கள். ஒரு வாலிபனுடைய பிரச்சினை இணக்கத்தைப்பற்றியதாக இருப்பதில்லை. அவனுடைய பெற்றோர்களுடைய வாழ்க்கை வழிகளைப் புதிய இடத்திலுள்ள மக்களின் வாழ்க்கை வழிகளோடு பொருந்த வைப்பதில் காணப்படும் முரண்பாடுகள்தான் அவனுடைய பிரச்சினைகளாக இருக்கின்றன. தன்மயமாக்கல் செயல்முறைக்கு ஒரு முக்கிய உதாரணம் திருமணமாகும். இரு வேறு பண்பாடுகளைச் சேர்ந்த இருவர் திருமணம் செய்துகொண்டு கணவனும் மனைவியுமாகப் பல ஆண்டுகள் வாழ்ந்த பிறகு ஒருவருடைய எண்ணங்களையும், நோக்கங்களையும், விருப்பங்களையும், தேவைகளையும் குறிப்பிடத்தக்க அளவுக்கு மற்றவர் புரிந்துகொண்டிருக்கலாம். இருவரும் ஒத்த அல்லது மாறுபாடில்லாத வாழ்க்கை முறைகளையும் வழிகளையும் அடைந்திருக்கலாம். ஆனால், இந்த வகையான இணக்கம் நடைபெற்று முடிவதற்குள் அவர்களிடையே எத்தனையோ முரண்பாடுகளும், தப்பெண்ணங்களும், பிணக்குகளும் ஏற்பட்டிருக்கலாம்.

தொடர்பறுத்தல்: மாறி வரும் சமூக உறவுமுறைகளுக்கு இணக்கமும் தன்வயமாக்கலும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். அவை மட்டுமன்றி வேறு சில செயல்முறைகளுமிருக்கின்றன. தொடர்பறுத்தல் என்பது இணங்கிப்போதலின் மறுபக்கமுள்ள செயல்முறையாகும். இஃது இணங்கிப்போதலுக்கு முற்றும் எதிரான செயலாகும். இச் செயலால் தனியாள்கள் ஒருவரிடமிருந்து ஒருவர் விலகிச் செல்லுகின்றார்கள். அவர்களுடைய உறவுகளில் இசைவிணக்கம் சிறிதுமில்லாமல் போய்விடுகின்றது.

ஒரு பண்பாட்டைச் சார்ந்த மக்கள் மற்ருெரு பண்பாட்டில் சென்று குடியேறியபொழுது அந்தப் பண்பாட்டோடு தங்களைப் பொருத்திக் கொள்ள முடியாமல் தடுமாறுபவர்களாக இருக்கலாம். எந்தச் சூழ்நிலை ஏற்படினும், அவர்கள் தங்களுடைய வாழ்க்கை வழிகளிலிருந்து சிறிதும் மாறிச் செல்ல முடியாதவர்களாக இருக்கலாம். இதனுல் அவர்கள் புதிய பண்பாட்டில் தங்களுடைய இணங்கங்களை இழக்கின்ருர்கள்; தாங்கள் தனித்தே வாழ வேண்டியவர்களாக இருக்கின்ருர்கள். அதனுல் அவர்கள் மனமுறிவடைந்து மனநலத்தையும் இழக்கின்ற நிலையை அடையலாம்.

மாறுபட்ட பண்பாடுகளைச் சேர்ந்த கணவனும் மனைவியும் தங்களுடைய உறவுமுறைகளில் அதிசீக்கிரம் நல்ல முன்னேற்றத்தைப் பெற்ருக வேண்டும். அவ்வாறு அவர்கள் காண முடியாதவர்களாகி வருவார்களானுல், நாளுக்கு நாள் அவர்களிடையே தப்பெண்ணங்கள்தான் பெருகி வரும். அடிக்கடி ஒருவரையொருவர் குறை கூற வேண்டிய நிலையும், தங்களுடைய சொந்தப் பண்பாட்டின் பெருமைகளைப் பேச வேண்டிய நிலையும் ஏற்படலாம். இவை மேலும் அவர்களிடையே அவ் விணக்கத்தைத்தான் பெருக்கி வர முடியும். இறுதியில் அவர்கள் பிரிய வேண்டி நேர்கின்ற நிகழ்ச்சிகள்தான் ஏற்படுகின்றன. இது தொடர்பறுத்தல் செயல்முறையாகும்.

9. சமூகக் குழுக்களின் அமைப்பும் உடைமைகளும்

மனிதர்கள் தங்களுடைய கூட்டாளிகளோடு கொள்ளுகின்ற தொடர்புகளைப்பற்றி நாம் அறிய முயற்சிக்கின்றபொழுது மனித நட்புறவுகளின் வகைகளையும் இயல்புகளையும் பற்றி முதலில் நாம் தேர்வாராய்ச்சி நடத்திப் பார்க்க வேண்டும். மனிதர்களிடையே பல மாறுபாடுகளைக்கொண்ட வகைகளையுடைய குழுக்கள் இருக்கின்றன. ஒரு தனியாள் ஒரு தோழமைக் குழுவைச் சேர்ந்தவராக இருக்கலாம். அவர் ஒரு தந்நல உட்குழுவோடு தொடர்பு கொண்டிருக்கலாம். ஊரின் கோடியிலுள்ள ஒரு பகுதியிலிருந்து அவர் வரலாம். ஒரு குறிப்பிட்ட சமயத்தைச் சேர்ந்தவராகவும், குறிப்பிட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்தவராகவும் அவர் இருக்கலாம். மேலும், ஒரு விளையாட்டுக்குழுவிலும், பணியாளர்க் குழுவிலும் அவர் உறுப்பினராகவுமிருக்கலாம். எனவே, இந்தக் குழுக்களின் இயல்புகளை நாம் பாகுபாடு செய்வோமானால், சமூகத் தொடர்புறவின் பல்வேறுபட்ட உண்மைகளில் நாம் குழப்பமடைய வேண்டிய நிலை பிறக்காது.

சமூகக் குழுக்களின் இயல்பு

சமூக உளவியலை மனப்பான்மைகளின் அறிவியல் என்றும் சில உளவியலார் கூறுகின்றனர். இதைப் பெரும்பாலான சமூக உளவியலார் ஏற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால், இது மறுத்துரைக்கப்படுமானால், ஒரு வேளை வேறொரு பகுதியின் சார்பாக அது இருக்கலாம் என்று நம்பலாம்; முக்கியமாகச் சிறிய குழுவின் சார்பாக இருக்கலாம். ஏனெனில், சமூக உளவியலார்களுக்கு அஃது ஒரு தீர்மானமான ஆராய்ச்சி எல்லையாக ஆகிவிட்டது. நாளுக்கு நாள் சமூக உளவியலார்களுக்கும் தொழிற்சாலை உளவியலார்களுக்

கும் சிறிய குழுக்களின்மீது நடத்துகின்ற ஆராய்ச்சிதான் தங்க ளுடைய அறிவியலின் மையப்பகுதி என்று கண்டு வருகின்றனர்.

சிறிய குழுக்களில் எழுகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண் போமானல், பிறகு பெரிய சமூகங்களிலிருந்து தோன்றுகின்ற பெரும் சமூக உளவியல் பிரச்சினைகள் பெரும் பளுவாகத் தோன்ற மாட்டா. ஒரு தொழிற்சாலையிலுள்ள பணியாளர்களின் ஒழுங் குணர்வில் அடங்கியுள்ள நடத்தையையும், ஒரு பண்படாக்குழு வினரின் ஒன்றுக இணையும் தன்மையையும், கடமை தவறும் கும்பலின் ஊக்கிகளையும், ஒரு மாநாட்டில் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளுவதன் செயல்முறைகளையும் பாகுபாடு செய்து விவரிக்க நம்மால் முடியுமானல், பிறகு நம்மிடையேயுள்ள பெரும் அளவி லுள்ள அமைப்புகளில் தற்செயலாக நடைபெறும் தொடர்பு களைப் புரிந்துகொள்ளுவதில் எந்த வகையான சிரமமுமிருக்க முடியாது, எனவே, சமூகக் குழுக்களின் முக்கியத்துவம் சமூக உளவியலில் மிகத் தெளிவாக இருக்கின்றது.

குழுக்களைப்பற்றிய வரையறை : குழுக்களைப்பற்றி நாம் அறிவ தெல்லாம் மற்றவர்களோடு இருக்கின்றபொழுது தனியாளின் நடத்தை எவ்வாறு மாறுகின்றது என்பதுதான். குழுக்களை வரையறை செய்வதில் ஒன்றுபட்ட கருத்து எழுவதில்லை என்பது உண்மை என்றாலும், அதில் பரிமாற்றுச் செயல் நடைபெறு கின்றது என்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

ஒரு குழு என்பது ஒரு சமூக அலகு. அதில் பல தனியாள்கள் அடங்கியிருக்கின்றார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் மதிப்பு நிலையிலும் வாழ்க்கைப் பங்கிலும் உறுதியான தொடர்புறவுகள் கொண்டிருக்கின்றார்கள். மேலும், அது தனக்கென்று தொகுதி யான மதிப்பீடுகளையும் தகுதிகளையும் பெற்று, குழுவின் நலம் சம்பந்தப்பட்ட பொருள்களில் உறுப்பினர்களின் நடத்தையைத் தன்னுடைய வழியில் ஒழுங்குபடுத்துகின்றது. செரீவ் என்பவர் தந்த இந்தக் குழுவின் வரையறை சற்று நீண்டதுதான் என்றாலும் குழுவின் எல்லா இயல்புகளையும் இதில் உள்ளடக்கியுள்ளார். பர்கெஸ் (Burgess) என்பவர் மிகவும் சுருக்கமாகக் கூறுகின்றார். குழு என்பது, பரிமாற்றச் செயல்புரிகின்ற ஆளுமைகளின் ஒற்றுமையாகும் என்று அவர் கூறுகின்றார்.

குழு பற்றிய வரையறையில் குழப்பம் ஏதும் ஏற்படக் கூடாது என்பதற்காகக் குழு என்ற சொல்லைக் குறைந்தது நான்கு வழிகளிலாவது உபயோகப்படுத்துகின்ற பழக்கம் வழக்

கத்தில் இருந்து வருகின்றது. மக்கள் சேர்ந்து குழுவாக்கப்படுவது (1) நிலப்பரப்பு, வருமானம் முதலிய பொது புறவயமான நிலைமைகள், (2) தாராளமனம் அல்லது பழைமைப்பற்று முதலிய ஒரு பொது மதிப்பீடுகள், மனப்பான்மைகள் ஆகியவற்றின் தொகுதி, (3) ஒரு தொழிற்சாலையில் பணி புரிவது போன்ற ஒரே வகையான நடத்தைகள், (4) தங்களுடைய குழுக்களின் அடையாளத்தைத் தெளி உணர்நிலையாக அறியும் ஒரு பொது உடைமை உணர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையாகும்.

ஆனால், பல மக்களிடையே சில புறநிலையான உண்மைகள் குழு உருவாக்கும் கூறுகளாக இருந்தாலும், அவற்றைச் சில சமூக அறிவியல் குறிப்புகள் ஏற்றுக்கொள்ளுவதில்லை. ஒரு பரப்பெல்லையில் வாழுகின்ற மக்கள் எல்லாம் சேர்ந்து ஒரு குழுவாகின்றனர், உதாரணமாக, வட அமெரிக்கர், தென் அமெரிக்கர், தென் ஆப்பிரிக்கர், மேற்கு ஜெர்மானியர், கிழக்கு ஜெர்மானியர், வட இந்தியர், தென் இந்தியர் என்று இவ்வாறு ஒரு வகையான குழுவை உண்டாக்கலாம். மற்றும் பொது புறவயமான கூறுகள் என்று கருதப்படுபவை, மனிதர்களின் நிறம், வயது, வருமானம் முதலியவை மக்களை இந்த வகையில் குழுக்களாக ஆக்குவதில் எந்த வகையான மறுப்பும் பெரும்பாலும் இருப்பதில்லை.

எவ்வாறிருப்பினும், இந்த வகையான குழுக்கள் உளவியல் முறையானவை என்று அடிக்கடி சோதனை செய்யப்படுகின்றது. ஏனென்றால், அவர்கள் பொது எண்ணங்கள், பொதுவான சிந்தனை வழிகள், இன்னும் தாங்கள் இந்த வகையைத்தான் சேர்ந்தவர்கள் என்ற உணர்ச்சி ஆகியவற்றைக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், இந்த வகையாக மக்களை வகைப்படுத்தல் செய்வதில் சரியான சான்றுகள் இல்லை என்றால், அஃது உளவியல் முறையன்று என்று நம்பப்படுகின்றது.

ஆனால், அகச்சார்பான வரையறைக்குச் செல்லுவோமானால், எந்த அளவுக்கு அகச்சார்பான பொதுமை நிலவுகின்றது என்று நிர்ணயிக்க வேண்டும். அதன்பொருட்டுக் குழுவின் இணக்க மனப்பான்மையை நேரடியாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

உளச் சார்பான கோணத்திலிருந்து நோக்கும்பொழுது, ஒரே மாதிரியான நம்பிக்கைகளையும் மனப்பான்மைகளையும் கொண்டுள்ள மக்கள் தனித்தனிக் குழுக்களாக்கப்படுகின்றார்கள் என்று நம்பப்படுகின்றது. உண்மையான உளச் சார்பான வழியில் மக்களைக் குழுக்களாக்க வேண்டுமானால், மேலே நான்காவதாகக்

குறிப்பிட்ட வழிதான் ஏற்றது என்று தெரிகின்றது. அதாவது, தங்களுடைய குழுக்களின் அடையாளத்தைத் தெளி உணர் நிலையாக அறியும் ஒரு பொது உடைமையுணர்ச்சி வழிதான் உண்மையான உளவியல் வழியாகும். ஒரு தனியாள் தன்னுடைய தன்மைகளை மற்றவர்களிடம் கண்டறிதலும் இதில் உள்ளடங்கி யிருக்கின்றது.

பகுதியாகவும் மொத்தமாகவும் அடங்கும் தொடர்புகள் : குழுக் களை வேறொரு கோணத்திலிருந்தும் சிலர் பாகுபாடு செய்திருக் கின்றனர். அமெரிக்க உளவியல் வல்லுநர் ஆல்போர்ட் (Allport) என்பவர் குழுக்களைப் பகுதியாக அடங்கும் தொடர்புகள் என்றும், மொத்தமாக அடங்கும் தொடர்புகள் என்றும் வேறுபடுத்தி யுள்ளனர். சில குழுக்கள் தனியாளினுடைய எல்லா ஆளுமை யையும் செயல்சார்பாகச் சேர்த்துக்கொள்ளுகின்றன. சில குழுக்கள் தனியாளின் ஒரு பகுதியைத்தான் தங்கள் குழுக்களில் சேர்த்துக் கொள்ளலாம்.

உதாரணமாக, ஒரு மரப்பந்து (Cricket) ஆட்டக்காரர், மரப் பந்து ஆட்டத்தைத் தம்முடைய வாழ்க்கைத்தொழில் ஆட்ட மாகக்கொண்டு ஆடிக்கொண்டிருக்கலாம். அவருடைய செயல் ஒவ்வொன்றிலும் மரப்பந்து ஆட்டமே வெளிப்பட்டுக்கொண்டி ருக்கலாம். மரப்பந்து ஆட்டக் குழுவில் அவர் ஒரு புகழ் பெற்ற விளையாட்டு வீரர் என்று கருதப்பட்டு அவருக்கென்று அங்கு ஒரு தனிச் செல்வாக்கும் இருக்கலாம்.

ஆனல், அவருக்கு மற்ற விளையாட்டுகளிலும் ஓரளவுக்கு விருப்பம் இருக்க முடியும். மற்ற விளையாட்டுகளில் அவர் கொண்டுள்ள விருப்பமும் அவருடைய திறமையும் சில்லறை யானவை. அவர் ஒரு மரப்பந்து ஆட்டக்காரர் என்று குறிப் பிடப்படும்பொழுது அவருடைய ஆளுமையைப்பற்றி நாம் ஒரு வருணனை கொடுக்க முடியும். அவருடைய விருப்பத்தில் ஒரு சிறு பகுதி வரிப்பந்து (Tennis) விளையாட்டுக்கும், ஒரு சிறு பகுதி கூடைப்பந்து (Basket) விளையாட்டுக்கும், ஒரு சிறு பகுதி நீந்து வதற்கும், ஒரு சிறு பகுதி அரசியலுக்கும் காட்டப்படுகின்றது. ஆனல், அவருடைய சிறு விருப்பம் செலவளிக்கப்படுகின்ற இந்தத் துறைகளில் எல்லாம் அவர் மரப்பந்து விளையாட்டில் பெற்றுள்ள செல்வாக்கைப் பெற முடியாது. அவருடைய ஆட்டத்திறமையின் ஒரு சிறு பகுதிதான் சேர்க்கப்படுகின்றது. இந்தத் துறைகளில் எல்லாம் அவரை மற்றவர்கள் பாராட்டிப் புகழ மாட்டார்கள். அவருடைய ஆளுமையின் ஒரு சிறு கூறுதான் புலப்படுகின்றது.

எனவே, மரப்பந்து விளையாட்டுக் குழுவில் அவருடைய ஆளுமை மொத்தமாகத் தொடர்பு கொண்டிருக்கின்றது. மற்ற விளையாட்டுத்துறைகளில் அவருடைய ஆளுமை, பகுதியாகத் தொடர்பு கொண்டிருக்கின்றது. அல்லது முதல் குழுவில் அவர் மொத்தமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளார். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது குழுக்களில் அவர் பகுதியாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார்.

முதல் நிலைக் குழுக்களும் இரண்டாம் நிலைக் குழுக்களும்: குழுக்களைப்பற்றி விவரிப்பதில் மற்றோர் உருவளவு உண்டு. அது, குழுக்களை முதல் நிலை என்றும், இரண்டாம் நிலை என்றும் பாகுபாடு செய்வதாகும். கூலி (Cooly) என்ற சமூக உளவியலார் குழுக்களிலுள்ள இரண்டு முக்கிய வேறுபாடுகளை வலியுறுத்துகின்றார். ஒரு குழுவின் எல்லா உறுப்பினர்களும் உடலோடு உடனிருத்தல். அனைவரும் உடனிருப்பதால் ஒருவருக்கொருவர் நேரடியாகத் தூண்டப்பட்டுத் துலங்குகின்றனர். மற்றொரு வகையில் உறுப்பினர்கள் உடலோடு உடனிருப்பதில்லை.

இந்த இரண்டு வகைகளில் குடும்பம் முதல் வகையைச் சேர்ந்த குழுவாகும். அரசியல் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் உடலால் ஒன்று திரண்டு இருப்பதில்லை. அவர்கள் ஒருவரோடு ஒருவர் நேரடியாகத் தொடர்பு கொள்ளாததால் அவர்கள் இரண்டாம் நிலைக்குழுவைச் சேர்ந்தவர்களாவார்கள். குழந்தை முதலில் முதல் நிலைக்குழுவில் தன்னை இணக்கம் செய்துகொள்ளக் கற்றுக் கொள்ளுகின்றான். இரண்டாம் நிலைக் குழுக்கள் அவனுடைய வாழ்க்கையில் பிறகு செல்வாக்கைச் செலுத்துகின்றன. ஏனென்றால், சமூகத்தோடு ஒத்தொழுகுதல், சமூகக்கட்டுப்பாடு ஆகியவை நேரடியான சமூகச் சூழ்நிலைகளில்தான் வளருகின்றன. முதல் நிலைக் குழுவில் உறுப்பினர்களின் உடல் நெருக்கம் இருப்பதுடன் உறுப்பினர்களிடையே மனவெழிச்சிக் குணமும் நிறைந்திருக்கின்றது.

இன்றைய மாநகர்ப்புறப்பண்பாடு மிக வேகமான தொடர்பைக்கொண்டிருக்கின்றது. மனிதன் தன்னுடைய வரையளவுக்கும், ஊக்கமூட்டிக்கும், தொடர்புடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ளுவதற்கும் இரண்டாம் நிலைக்குழுக்களையே அதிகம் நம்பியிருக்க வேண்டியவனாக இருக்கின்றான். ஆனால், இரண்டாம் நிலைக் குழுக்கள் பரந்த எல்லைகளைக் கொண்டிருப்பதால் தொடர்புறவுகள் அடிக்கடித் தனிமனிதனை நீண்டகால நட்புறவு கொள்ள முடியாதபடித் தடுத்து விடுகின்றன. எனவே, இன்றைய

நகர்ப்புறப் பண்பாட்டில் மனிதன் தனக்கென்று ஒரு விசையளவு கொள்ள முடியாதவனாக இருக்கின்றான்; ஒரு வகையான தனிமை யுணர்ச்சி கொண்டவனாக இருக்கின்றான். அவனுடைய இரண்டாம் நிலைக் குழுவிலுள்ள தொடர்பு தெளிவில்லாமலிருக்கின்றது. அது மற்றவர்களைப்பற்றிப் பயனில்லாத வகுப்புமுறை ஏற்படுத்திக் கொள்ளுமாறு அவன் கட்டாயப்படுத்தப்படுகின்றான். இவ் வாறான நிலைமைகள்தான் ஒருபடி வார்ப்பு (Stereo type), தப்பெண்ணம் ஆகியவற்றை வளர்க்கும் முக்கிய கூறுகளா கின்றன.

குழு வரையளவின் படித்தரம் : குழுவில் உள்ள உறுப்பினர் களுடைய செயல்களும் மனப்பான்மைகளும் அவர்கள் பெறுகின்ற பங்குகளுக்கேற்ப வரையளவாக்கப்படுகின்றன. எந்த ஒரு சமூக அமைப்பிலும் உறுப்பினர்களின் ஆளுமை வெளிப்பாட்டின் சுதந்தரம் அவர்களுடைய மதிப்பு நிலைகளாலும் பங்குகளாலும் கட்டுப்படுத்தப்படுகின்றது. உதாரணமாக, மிகவும் வரையள வாக்கப்பட்ட நடத்தையின் வடிவங்களை இராணுவத்தில் காண லாம். குழு நடத்தையின் வரையளவுப்படித்தரத்தை ஏற்றுக் கொள்ளப்பட்ட வடிவத்திற்கு ஒத்துப் போதலின் அளவுகோல் கொண்டு அடிக்கடி அளக்க முடியும். அந்த அளவில் முடிவு J வளைவு வடிவத்தைக் கொள்ளுவதாக இருக்கின்றது.

வளைவினுடைய சரிவு செங்குத்தாகச் செல்லுமானால், நடத் தையின் வரையளவு மிகுந்திருக்கின்றது என்று கொள்ளலாம். ஆல்போர்ட்டும், அவருடைய மாணவர்களும் குழு உறுப்பினர் களின் அரசியல், சமயம், பொருளாதாரம் ஆகிய நிறுவனங்களைச் சார்ந்த ஒத்துச் செல்லும் நடத்தையின் அளவுகள் எந்த அளவுக்கு ஒரே சீரான நடத்தையின் உயர்ந்த படித்தரத்தை வெளிப் படுத்துகின்றன என்று செயல் விளக்கம் செய்து பார்த்தார்கள்.

சர்வாதிகார நாடுகளில் மக்களுடைய எண்ணங்களையும் செயல்களையும் வகுக்கப்பட்ட ஒரே வழியில் செலுத்துவதற்கு முயலுகின்றார்கள். அரசியல் குழப்பவாதிகள் எந்த வகையான கட்டுப்பாடும், வரையளவும் இல்லாத முற்றிலும் சுதந்தரமான ஒரு சமூகத்தைப்பற்றிக் கனவு காண்கின்றார்கள். ஆனால், இன்றுள்ள முக்கிய பிரச்சினைகளில் ஒன்று, ஒவ்வொருவரின்மீதும் உள்ள சமூக வரையளவுகளின் எல்லைகளை நிர்ணயிப்பதாகும். அவற்றில் ஆளுமையை வெளிப்படுத்தலில் பரந்த நோக்கம் இருக்க வேண்டுமென்று விரும்புகின்றோம்.

குழுத் தொடர்புறவுகள் : குழுவினுள் அமைப்புத் தொடர் புறவு எவ்வாறிருக்கின்றது என்பது ஒரு முக்கிய கூறுகத் தோன்று கின்றது. ஆல்போர்ட் என்பவர் கூட்டுச்செயல் குழுவுக்கும் பரிமாற்றச் செயல் குழுவுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைக் காட்டியுள்ளார். கூட்டுச் செயல் குழுவில் உறுப்பினர்கள் இணையான பங்குகளை ஏற்றுச் செயல் புரிகின்றார்கள்; ஒரு பொதுத் தூண்டல் மூலத்திற்கு அடிப்படையாகத் துலங்குகின்றார்கள். ஆனால், பரிமாற்றச் செயல் குழுவில் அடிப்படையாக ஏற்படுகின்ற துலங்கல்கள், ஒருவருக்கொருவர் செய்து கொள்ளுபவையாகும், குழுக்கள் உறுப்பினர் எண்ணிக்கையிலும், பரிமாற்றப் பக்குவங் களிலும், தலைவர்களின் கூட்டுறவு வடிவத்திலும், ஆதிக்க வடிவத் திலும் வேறுபடலாம்.

ஒரு குழுவின் நிலையான தன்மை : ஒரு குழுவிலுள்ள உறுப் பினர்களுக்கிடையில் உள்ள தொடர்புறவுகள் எவ்வளவு காலத் திற்கு நீடித்து நிற்கும்? ஒரு கும்பல் தற்காலிகமான குழு வாக இருக்கின்றது. கும்பலில் சேர்ந்துள்ள மக்களைச் சில மணி நேரத்திற்குத்தான் காண முடியும். அதன் பிறகு அவர்களைக் காண முடியாது. ஒரு நாடு இரண்டாம் நிலைக்குழுவாக இருந்தாலும் நிரந்தரமானது. எந்த ஒரு குழுவுக்கும் ஓர் அளவுக்காவது நிரந்தர மான தன்மை தேவைப்படுகின்றது. எந்த அளவுக்கு ஒரு குழு நிரந்தரமானதாக இருக்கின்றதோ அந்த அளவுக்குக் குழு என்ற சொல்லைச் சமூக உளவியலில் உபயோகிப்பதில் நாம் நேர்மையாக இருக்கின்றோம் என்று கூறலாம். ஏனென்றால், நிரந்தரத் தன்மை பெற்றிராத ஒரு கருத்துச் சொல்லை வைத்துக்கொண்டு சமூக உளவியலார் தம்முடைய துறையை வளர்க்க முடியாது. ஆனால், குழுக்களில் தனியாள்கள் நிரந்தரமானவர்களல்லர். மேலும், தனியாள்கள் ஒரு குழுவை விட்டு மற்றொரு குழுவுக்கும் சென்று விடலாம். எனவே, குழுவை ஒரு முழுநிறைக் கூறு என்று கூற முடியாது என்றாலும், அதனுடைய நிலைத்திருக்கும் தன்மையை நாம் கவனித்து வர வேண்டும்.

சமூகக் குழுக்களாதல்

சமூகக் குழுக்களின் பல வகையான இயல்புகளை மேலே கண்டோம். அந்த இயல்புகளின் அடிப்படையில் மக்கள் எவ்வாறு மூன்று முக்கியமான குழுக்களில் அங்கம் வகிக்கின்றார்கள் என்று கண்டறிவதும் தேவையாகின்றது. சமுதாயம், பொதுமக்கள், சமூக வகுப்புகள் என்ற வகையில் மக்கள் குழுக்களாகின்றனர்.

சமுதாயம்: சில பொதுத் தனி நலன்களைக் கொண்டுள்ள எந்தக் குழுவையும் சமுதாயம் என்றுதான் கூறுகின்றார்கள். வேறுபாடுகளை அறியாதவர்கள் உளவியல் கருத்துச் சொற்களைத் தாறுமாறாக உபயோகிக்கின்றார்கள். சமூக அறிவியல்களில் சமுதாயம் என்பது வரையறுக்கப்பட்ட மனித இயைபின் வகையைக் குறிப்பிடுகின்றது. ஒரு சிறிய வட்டத்திற்குள் சேர்ந்து வசித்து வருகின்ற பல மனிதர்களைக் குறிப்பிடுவது சமுதாயம். அவர்களுடைய உளவியல் தேவைகள் எல்லாம் பெரும்பகுதி அந்தக் குழுவினுள்ளேயே நிறைவு செய்யப்பட்டு விடுகின்றன. ஒரு சிறு கிராமத்தைச் சமுதாயத்திற்கு ஒரு நல்ல உதாரணமாகக் கூறலாம்.

வளர்ந்து வருகின்ற அறிவியலின் சாதனங்களும் சமுதாயச் சூழ்நிலைகளும் சமுதாயத்தைப் பல கூறுகளாக்கி வருகின்றன. எனவே, சமுதாயம் என்று உண்மையான பொருளில் எந்தக் குழுவையும் குறிப்பிட்டுக் காட்ட முடியாத நிலை ஏற்பட்டு வருகின்றது. பல பொதுத் தனி நலன்களைக்கொண்டு, அவற்றை அந்தக் குழுக்களுக்குள்ளேயே நிறைவு செய்து கொள்ளுகின்றதுமான குழுக்கள் பல வகைகள் இருக்கின்றன. ஒரு பெரும் நிறுவனத்தில் பணி புரியும் பல அதிகாரிகள் ஒரு பகுதியில் கூட்டாக வசித்து வரலாம். கல்வித்துறையைச் சேர்ந்த ஆசிரியர்கள் கூட்டமாக ஒரு பகுதியில் வசித்து வரலாம். தொழிற்சாலைப் பணியாளர்கள் சேர்ந்து கூட்டாக ஒரு பகுதியில் வசித்து வரலாம். இவை எல்லாம் சமுதாய வகையில் குழுக்களாகின்றன. வாழ்க்கைத் தேவைகளும், முறைகளும் இந்தக் குழுக்களில் ஒரே மாதிரியாக இருக்கலாம். ஆசிரியர் சமுதாயம், தொழிலாளர் சமுதாயம் என்று அக் குழுக்கள் அழைக்கப்படலாம்.

சமூகக் குழுக்களின் இயல்புகளை வைத்து நோக்கும்பொழுது சமுதாயம் ஒரு முதல்நிலைக் குழுவாகின்றது. ஒரு சமுதாயத்திலுள்ள மனிதர்கள் எல்லாம் முகத்திற்கு முகம் நேரடித் தொடர்பு கொள்ளும் வாய்ப்பை அனைவரும் ஒரே சமுதாயத்தில் பெற்றில்லாமலிருக்கலாம். ஆனால், அவர்கள் அந்த வாய்ப்பைப் பெறும் சூழ்நிலையைப் பெற்றிருக்கின்றார்கள். எல்லா உறுப்பினர்களும் ஒருவருக்கொருவர் தாமாகத் தெரிந்தவர்களாக இருக்கின்றார்கள். மேலும், ஒரு சமுதாயம் மொத்தமாக உள்ளடங்கிய குழுவாகவுமிருக்கின்றது. ஒரு சமுதாயத்தின் உறுப்பினர்கள் அதன் எல்லைக்குள்ளேயே தங்களுடைய ஆளுமைகளை வெளிப்படுத்திக்கொள்ளவும், தேவைகளை நிறைவு செய்துகொள்ளவும் முடிகின்றது.

சமுதாயத்தின் சமூக வாழ்க்கையில் மனிதர்கள் தங்களுடைய பங்குகளை ஏற்கின்றார்கள். அவை வரையளவு செய்யப்பட்ட பண்புக் கூறுகளாகவுருக்கின்றன. உதாரணமாக, ஒரு சிற்றூரி லுள்ள மக்கள் பணியாளர், சிற்றூர்ப் போக்கிரி, சிற்றூர் வம்பு வளர்ப்பவர் என்ற முறையிலும் பங்குகள் இருக்கலாம். எனவே, சமுதாயத்திற்குள்ளிருக்கும் தொடர்புகள் பல வகைகளாகவு மிருக்கின்றன.

சமுதாயத்திற்குள்ளிருக்கும் தொடர்புகள் தனியாள்களின் ஆளுமைகளுக்கேற்பவும் இயைபின் வடிவங்களுக்கேற்பவும் வேறு படுகின்றன. நட்பு, பகைமை, சகிப்புத்தன்மை, ஏளனம், கூட்டுறவு, பிறர் விவகாரத்தில் தலையிடாமை ஆகியவை மாறுபாடான மனிதர்களிடம் தோன்றுகின்றன. சில சமயங்களில் இவை அதே குழுவைச் சேர்ந்த மக்களிடமும் தோன்றுகின்றன. எவ்வாறிருப் பினும், வெளிக்குழுவைச்சேர்ந்தவர்களிடம் நம்பிக்கையின்மையும் இலேசான பகைமையும் எல்லாவற்றையும் கட்டுப்படுத்தியுள்ள ஓர் உணர்ச்சியாக இருக்கின்றது. இந்தப் பொது மனப்பான்மை ஒவ்வொரு செயலையும் தழுவியிருக்கவில்லை. ஏனென்றால், ஒரு சமுதாயத்தில் புதிதாக ஒருவர் வந்து காண்பவராக இருப்பா ரானால், அவர் விருந்தினராக நடத்தப்படுகின்றார். ஆனால், அதே மனிதர் ஏதேனும் பகைமை சார்ந்த முறையில் வந்திருப்பா ரானால், அந்தச் சமுதாயம் ஓர் உள் குழுவாக அவருக்கு எதிராகத் திரண்டு எழுகின்றது.

சமுதாயம் ஒரு நிரந்தரமான குழுவாக்கமாகும். அதனுடைய உறுப்பினர்களிடையே உடனிருக்கின்ற தொடர்புகள் நிகழு வதால் அவர்களிடையே இணைந்து வாழும் மனப்பாங்கு வலிமை யாக இருக்கின்றது. ஆனால், நாளுக்கு நாள் சமுதாயங்கள் உள் கட்டுப்பாட்டை இழந்து வருகின்றன. வேறு வகையான குழுக் களில் அவர்கள் நாட்டம் செலுத்துகின்றார்கள்.

பொதுமக்கள் : ஒரு குழுவிலுள்ள மக்களைக் குறிப்பதுதான் பொதுமக்கள் என்பது. அந்த மக்கள் சில தனி நலனையும், சில மனப்பான்மையும், சில மனவெழுச்சியையும் பொதுவாகக் கொண்டிருக்கின்றார்கள். அனுபவ நோக்கிலிருந்து கூறுவோ மானால், பொதுமக்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்கா. மனிதர்கள் எத்தனைத் தனி நலன்களையும் எத்தனை மனப்பான்மை களையும் கொண்டிருக்கின்றார்களோ அத்தனை பொதுமக்கள் இருக் கின்றார்கள் என்று சுருக்கமாகக் கூறலாம்.

பொதுவாக, பொதுமக்கள் வழிநிலை அல்லது இரண்டாம் நிலை குழுவைச் சேர்ந்ததாகும். இது நேரடியான உடல் சார்ந்த தூண்டல்களின் இட எல்லைகளைக் கடந்து நிற்கின்றது. உதாரணமாக, பொதுமக்கள் குழுவில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் அரசியல் பொதுமக்கள் என்று எடுத்துக்கொள்ளுவோமானால், ஒரே அரசியல் கட்சியைச் சேர்ந்த இருவர் சென்னையிலும் டெல்லியிலும் இருந்தாலும் இருவரும் ஒரு பிரச்சினையில் ஒரேவிதமான மனப்பான்மைகொள்ள முடியும். தனியாளின் ஆளுண்மையின் படித்தரந்தான் பொதுமக்களின் குழுவை விவரிக்கும் கட்டளை விதியாக உபயோகிக்கப்படுகின்றது. பொதுமக்கள் குழு எப்பொழுதும் பகுதியாக அமைகின்ற குழுவாகும். ஒரு மனிதன் ஒரு பொதுமக்கள் குழுவில் சேருகின்றபொழுது அவனுடைய ஆளுமையின் ஒரு பகுதியோடுதான் சேருகின்றான். அதனால் அவன் பல பொதுமக்கள் குழுவில் உறுப்பினனாக இருக்கலாம். ஆனால் அவன் ஒரு சமுதாயத்தைத்தான் சேர்ந்தவனாக இருக்கின்றான்.

ஒரு மனிதன் எத்தனைப் பொதுமக்கள் குழுவில் உறுப்பினனாக இருக்கின்றானோ அத்தனை வகையான தனி நலன்களை அவன் கொண்டிருக்கின்றான் என்று தெரிகின்றது. மேலும், அஃது அவனுடைய ஆளுமையின் ஒருமைப்பாட்டைக் காட்டுகின்றது. அதிகமான பொதுமக்கள் குழுவில் அங்கம் வகிப்பது ஆளுமையின் ஒருமைப்பாடு மிகச் சிறப்பாக இருக்கின்றது என்றும், குறைவான பொதுமக்கள் குழுவில் அங்கம் வகிப்பது ஆளுமையின் ஒமைப்பாடு சிறுத்திருக்கின்றது என்றும் காட்டுகின்றது. ஒரு பொதுமக்கள் குழுவின் தொடர்புறவு இரு கோடிகளில் காணப்படுகின்றது. ஒரு பொதுத் தூண்டல் மூலத்திற்கு உட்படுகின்ற மனப்பான்மையிலும் அல்லது அந்தப் பொதுத்தூண்டலை ஏற்றுக்கொள்ளுகின்ற மனப்பான்மையிலும் இரு கோடிகளில் ஏதேனும் ஒன்றில் தொடர்புறவு நிற்கின்றது. ஒரு பொதுத் தூண்டல்மூலம் ஒரு தலைவராக இருக்கலாம், போட்டிப் பந்தயத்தில் வெற்றிபெறுவதாக இருக்கலாம் அல்லது விரும்பிய பொருள்களாக இருக்கலாம். ஆனால், பொதுமக்கள் குழுவிலுள்ள உறுப்பினர்களிடையே பரிமாற்றச் செயல்முறை குறைவாக இருக்கின்றது.

ஒப்பீட்டடிப்படையிலிருந்து பார்க்கும்பொழுது பொதுமக்கள் குழு ஒரு நிரந்தரமில்லாத குழுவாகும். சமயத்தில் ஒரு பொதுமக்கள் குழு அதே போன்ற மற்றப் பொதுமக்கள் குழுக்களுடன் போட்டியிட வேண்டியிருப்பதால், ஏதேனும் ஒரு பொதுமக்கள் திடுக்கிடச் செய்கின்ற வகையில் விரைவில் மறைந்து போய்விடலாம். சில பொதுமக்கள் குழு நீடித்து நிலை

பெறலாம். ஆனால், பெரும்பாலான சராசரிப் பொதுமக்கள் நீண்ட நாள்களுக்கு நிலைத்து நிற்பதில்லை.

பொதுமக்களைப் பொதுவாக இரண்டு வகைகளில் வேறுபடுத்திக் காட்டுகின்றனர். தனி நலங்கொண்ட பொதுமக்கள் என்றும், ஒன்றிப் போகின்ற (identification) பொதுமக்கள் என்றும் கூறுகின்றனர். தனிநலன் கொண்ட பொதுமக்கள் ஒரு பொதுப் பொருளாதார ஊக்கியோடுள்ள ஒரு மக்கள் குழுவாகும். உதாரணமாக, சில்லறை வியாபாரிகளின் கழகம் ஒரு தனிநலன் பொதுமக்களாக இருக்கின்றது. அதே போன்று உற்பத்தியாளர்க் கழகமும் நுகர்வோர்க் கழகமும் தனிநலன் பொதுமக்களாகும். ஆனால், ஒன்றிப்போகின்ற பொதுமக்கள் என்பது தனியாள்களின் ஒரு குழுவாக இருக்கின்றார்கள். அந்தக் குழுவிலுள்ள உறுப்பினர்களே தங்களுக்கென்று ஒரு தலைவரையோ அல்லது அடையாளத்தையோ வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பெறமுடியாத ஒரு வெற்றியைப் பெற்றுவிட்டதாக மகிழ்ச்சியடைகின்றார்கள். உதாரணமாக, போட்டி விளையாட்டுகளைக் கண்டு மகிழ்ச்சியடைகின்ற பொதுமக்கள் ஒரு குறிப்பிட்ட விளையாட்டு வீரர்களையோ விளையாட்டுக் குழுவையோ தொடர்ந்து விரும்புகின்றார்கள்; அவர்களுக்கு வெற்றி கிட்ட வேண்டும் என்றும் விரும்புகின்றார்கள்; இவ்வாறு அவர்களோடு தங்களை ஒன்றுதல் செய்து கொள்ளுகின்றார்கள். அந்த விளையாட்டு வீரர்கள் வெற்றி பெற்றுப் பரிசுகளைப் பெறுகின்றபொழுது தாங்களே வெற்றி பெற்றுப் பரிசுகளைப் பெற்றது போன்று மகிழ்ச்சியடைகின்றார்கள்.

இவ்வாறு காணப்படுகின்ற ஒன்றுகின்ற பொதுமக்கள் ஒரு காலத்தில்தான் பகட்டாரவாரம் செய்ய முடியும். தாங்கள் வாழ விரும்புகின்ற வாழ்க்கை வகையில் பலர் குறுக்கிடுகின்றபொழுதுதான் இப்படிப்பட்ட பொதுமக்களாக அவர்கள் தோன்றுகின்றார்கள். ஒன்றுதல் மூலம் ஒருவர் இடத்தில் நின்று பெறுகின்ற மகிழ்ச்சியான வாழ்க்கையில் பெறுகின்ற நேரடியான மனநிறைவின் இடத்தையே பெறுகின்றது. இத்தகைய பொதுமக்கள் ஒவ்வொரு வாழ்க்கைத்துறையிலும் காணப்படுகின்றார்கள். அரசியல், சமயம், விளையாட்டு, திரையுலகம் போன்ற வாழ்க்கைத் துறைகளில் ஒன்றிப்போகின்ற பொதுமக்களைக் காணலாம்.

பொதுமக்களைச் சரியான முறையில் பாகுபாடு செய்வதன் மூலம் சமூகப்போக்கின் வெளிப்பாட்டை முன்கூட்டியே நாம்

அறிந்துகொள்ள முடியும். உதாரணமாக, நாட்டில் நடைபெறுகின்ற பொதுத் தேர்தலின்போது வெற்றி வாய்ப்புள்ள அரசியல் கட்சியையோ வெற்றிபெறக்கூடிய போட்டியாளரையோ முன் கூட்டியே கணிக்க முடியும். ஒரு பொதுமக்கள் குழுவைப் பாகுபாடு செய்கின்றபொழுது அவர்கள் ஈடுபாடு கொண்டுள்ள மற்றப் பொதுமக்கள் குழுக்களில் அவர்களுக்குள்ள பற்றின் வலிமையையும் அளந்து காண வேண்டிய அவசியமும் ஏற்படுகின்றது. இல்லை என்றால் முதலில் நாம் செய்த பாகுபாடு பயனற்றுப் போய்விடும்.

சமூக வகுப்புகள் : மனிதர்களிடையேயுள்ள சமூக வகுப்புகள் முதல்நிலைக் குழுக்களாகவுமிருக்கின்றன; வழிநிலை அல்லது இரண்டாம் நிலைக் குழுக்களாகவுமிருக்கின்றன. சமூக வகுப்பு என்பது சமுதாயம் என்ற குழுவுக்கும் பொதுமக்கள் என்ற குழுவுக்குமிடைபட்ட குழுவாக இருக்கின்றது. உதாரணமாக, குடியானவர்கள் உள்ளூரிலுள்ள குழுவோடு நெருங்கித் தொடர்பு கொண்டிருக்கின்றார்கள்; அதே சமயத்தில் நாடு முழுவதும் பரவியுள்ள குடியானவர்களோடும் தொடர்பு கொண்டிருக்கின்றார்கள். குழுவின் இந்த முதல் நிலை பண்புக்கூறு ஒரு பொது வாழ்க்கை வழியின்மூலமாக ஒரே தனிநலனையும் ஒன்றுகின்ற மனப்பான்மையையும் ஒவ்வொருவருக்கும் கொண்டு வருகின்றது. இந்தப் பண்புக்கூற்றைக்கொண்டு நோக்கும்பொழுது சமூக வகுப்புக்குழு பொதுமக்கள் குழுவைவிடச் சமுதாயக் குழுவோடு சற்று நெருக்கமாக இருக்கின்றது.

இன்றைய சமூகத்தில் ஒரு சமூக வகுப்பின் உறுப்பினர்கள் மற்றக் குழுக்களிலும் உறுப்பினர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, சமூக வகுப்பு எதுவும் முற்றும் அமைந்த குழுவாக இல்லை. என்றாலும், தனியாளின் ஆளுமையில் உள்ளடங்கியுள்ள செறிவை அலகாகக் கொண்டு பார்க்கும்பொழுது சமூக வகுப்புக் குழுவைப் பொதுமக்கள் குழுவோடு ஒத்திட்டுப் பார்க்கக் கூடாது. சமூக வகுப்பைச் சோதனை செய்து பார்க்கின்றபொழுது அஃது ஆளுமையின் மைய அடிப்படை மனப்பான்மையைக் கொண்டிருக்கின்றதா என்று கண்டறிய வேண்டும். ஒருவர் ஒரு சமூக வகுப்பைச் சார்ந்தவராக இருந்து மற்றக் குழுக்களிலும் உறுப்பினராக இருப்பாரானால், முரண்படுகின்ற நிலையை அவர் பெறலாம். இந்த முரண்பாட்டு நிலை அவரை மற்றக் குழுக்களின் உறுப்பினர் தன்மையை விட்டுவிடச் செய்கின்றது.

சமூக வகுப்புகள் சில நாடுகளில் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. சில நாடுகளில் அவை முக்கியத்துவம் பெறுவ

தில்லை. ஒரு சமூக வகுப்பிற்குள் உள்ள தொடர்புகள் சமமான நிலைகளாகும். ஒரு சமூக வகுப்பிற்கும் மற்றச் சமூக வகுப்புகளுக்குமிடையிலுள்ள தொடர்பு உயர்ந்த நிலையா தாழ்ந்த நிலையா என்பதாகும். உயர்ந்த வகுப்பினர் தாழ்ந்த வகுப்பினரிடம் மாறுபாட்டை எதிர்பார்க்கின்றனர். ஆனால், ஒரே வகுப்பிற்குள் ஒரு மனிதன் மற்றவர்களிடம் காட்டுகின்ற உயர்வு மனப்பான்மை கெட்ட நடத்தையின் அறிகுறி என்று கருதப்படுகின்றது.

ஜனநாயக அரசியலில் சமநிலையை அனைவரிடத்தும் வலியுறுத்துகின்றபொழுது சமூக வகுப்புகளை அனுமதிப்பதும் ஏற்றுக்கொள்ளுவதும் சமூக முரணான போக்காகக் காணப்படுகின்றது. சமூக வகுப்புகளைப்பற்றிய விவாதங்கள் எல்லாம் குழுக்களின் புறநிலையான அடிப்படைகளையும் அக நிலையான அடிப்படைகளையும் சரியாகப் புரிந்துகொள்ளத் தவறியதால்தான் ஏற்பட்டிருக்கின்றன. வகுப்புகளைப்பற்றிய பழைய கருத்து, வருமானத்திலுள்ள வேறுபாடுகளாகவும் உற்பத்தியைப் பெருக்குவதில் புறநிலையாக ஒருவர் ஏற்கின்ற பங்குபற்றியதாகவுமிருந்தது.

குழுவிலுள்ள உறுப்பினர்களின் உளவியல் பண்புக்கூறுகள் அல்லது அகவயமான நிலைமைகள் புறக்கணிக்கப்பட்டிருந்தன. குழுவின் தெளி உணர்நிலையும் ஒரு பொது உளவியலும் புறநிலையான வேறுபாட்டுடன் சேர்ந்து செல்ல வேண்டியது அவசியம் என்று ஊகிக்கப்பட்டு வந்தது. ஆனால், சில ஆசிரியர்கள் தெளி உணர்நிலையாக வகுப்பு அடையாளத்தைக் காண முடியாமையால் புறநிலையான பொருளாதார மதிப்பு நிலையிலுள்ள வேறுபாடுகளைப் புறக்கணித்தார்கள்.

இத் துறையில் இதுவரையில் நடைபெற்றுள்ள ஆராய்ச்சி முடிவுகளெல்லாம் சமூக-பொருளாதாரக் குழுக்களைப்பற்றிய தவறான உண்மைகளைப் போக்குபவையாகவே இருக்கின்றன. சமூக-பொருளாதார மதிப்பு நிலைகளின் வேறுபாடுகள் சமூக வகுப்போடு எங்கும் பரந்து ஒன்றிப்போகின்ற ஒரு நிலையை அடையவில்லை. வருமானத்திலுள்ள வேறுபாடுகள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் குழு மட்டத்தில் தெளிவாகத் தெரிகின்ற ஒருபடித்தரத்தை நிலைக்கச் செய்திருக்கின்றன. மேலும், இந்த வேறுபாடுகள் நடத்தையிலும், மனப்போக்குகளிலும், மதிப்பீடுகளிலும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளோடு சேர்ந்து செல்லுகின்றன.

குழு உறுப்பினர்களிடையே வருமானம் பரவியுள்ள தன்மையைவிட வருமானம் பெறுகின்ற இந்தக் குழுக்களின் நிலைத்திருக்கின்ற தன்மைதான் மிக முக்கியமாக இருக்கின்றது. பொருளாதார அளவுகோலில் மக்கள் மேலுங்கீழும் தாராளமாக அசைந்து செல்லுவார்களானால், இந்தப் பொருளாதார வேறுபாடுகள் நிரந்தரமான உளவியல் குழு வேறுபாடுகளைத் தோற்றுவிக்க மாட்டா.

மேலும், சமூக-பொருளாதார மதிப்புநிலை ஒரு பெரும் பரப்பெல்லையை அடைத்துக்கொண்டிருக்கின்றது. இது வகுப்பின் எல்லையைமட்டும் கடந்து சென்றுகொண்டிருக்கவில்லை. கல்வி, பயிற்சித் திறமையற்ற வேலை, பயிற்சித் திறமையான வேலை, தாழ்ந்த வகுப்பு, சமூக மதிப்பு நிலை, குறைந்த வருமானம், ஏழ்மையான குடியிருப்புப் பகுதி ஆகியவற்றையும் கடந்து சென்றுகொண்டிருக்கின்றது. உயர்ந்த சமூக-பொருளாதார மதிப்புநிலை அதற்கு எல்லாவகையிலும் முற்றும் மாறுபட்ட வடிவத்தையும் குறிப்பீடுகின்றது. எனவே, வருமானத்தை அடிப்படையாகக்கொண்டு மக்களைப் பல்வேறு குழுக்களாகப் பிரிக்கும் செயல்முறைக்குப் பெயர்தான் சமூக வகுப்புகள் என்பது. இந்த வகுப்புமுறை மாறிச் செல்லுகின்ற ஒரு நிலையே தவிர, என்றும் நிலைத்து நிற்கக் கூடியதன்று. மேலும், பொதுவுடைமை நாடுகளில் இத்தகைய சமூக வகுப்புகள் அழிக்கப்பட்டுவிட்டன. எனவே, மக்களின் வருமானத்தையோ சமூக மதிப்பு நிலையையோ கட்டளைவிதியாகக் கொண்டு மக்களிடையே எந்த விதமான வேறுபாடுகளையும் அங்குத் தோற்றுவிக்க முடியாது.

முடியரசு நாடுகள், ஜனநாயக நாடுகள், சர்வாதிகார நாடுகள் போன்ற நாடுகளிலுள்ள மக்களிடந்தான் சமூக வகுப்புகளும், வகுப்பு வேறுபாடுகளும் ஏதாவது ஒருவகையில் இருந்து வருவதற்கு வாய்ப்புகளிருக்கின்றன. ஆனால், அதிகார மதிப்பு நிலையும் (power status) வகுப்பு வேறுபாடு போன்று ஒரு நிகழ்ச்சியைத் தோற்றுவிக்கலாம்.

10. சமூக நடத்தையில் குழுவின் செல்வாக்கு

சமூக உளவியல், தனி மனிதர்களின் நடத்தைகளையும் சமூகச் சிறப்புக் கூறுகளையும் நிர்ணயிக்கும் பல்வேறு கூறுகளைப்பற்றி ஆராய்கின்றது. எனவே, சமூக உளவியல் குழுக்களின் நடத்தைகளிலும் மிகுந்த கவனம் செலுத்தியாக வேண்டும். இல்லை என்றால், சமூகச் சிறப்புக்கூறுகளையும் தனி மனிதர்களின் சமூக நடத்தைகளையும் அறிய முடியாது. சமூக உளவியலார் கூறும் குழு என்பது பலர் சேர்ந்து ஏதேனும் ஒரு வழியில் இயங்குவார்களானால், அதில் சம்பந்தப்பட்ட மனிதர்களைக் குறிக்கின்றது. அவர்கள் கூறுகின்ற குழு சில பண்புக்கூறுகளைக் கொண்டிருக்கின்றது. எந்த ஒரு மனிதர் கூட்டமும் அந்தப் பண்புக்கூறுகளைக் கொண்டிருக்குமானால், அது குழுவாகின்றது. அந்தப் பண்புக் கூறுகள் யாவை? முதலாவதாக, ஒரு குழு இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட தனியாள்களைக் கொண்ட தொகுதியாக இருக்க வேண்டும். இந்தக் குழு மற்றக் குழுக்களிடமிருந்த புறநிலையாக வேறுபட்டிருக்க வேண்டும். இரண்டுக்கு மேற்பட்ட தனியாள்களைக் கொண்ட தொகுதி என்பது, குழுவிலுள்ள அங்கத்தினர்களிடம் பொதுத் தனிநலன் உண்டு என்பதைக் குறிக்கின்றது. உதாரணமாக, ஒரு குடும்பத்தில் அங்கத்தினர்களாகவுள்ள மனிதர்கள், ஒரு குடும்பத்திலுள்ள பல அங்கத்தினர்கள் பல தனி நலன்களில் பங்கேற்கின்றார்கள். அது போலவே, ஒரு வகுப்பிலுள்ள மாணவர்கள், ஒரு தொழிற்சாலையில் பணிபுரியும் பணியாளர்கள், ஓர் அரசியல் கட்சியில் பணி புரிகின்றவர்கள் ஆகிய இவர்கள் எல்லாம் புறநிலையாக மற்றக் குழுக்களிடமிருந்து வேறுபட்டிருக்கின்றார்கள்.

இரண்டாவதாக, குழுவிலுள்ள அங்கத்தினர்கள் ஒருவரோடு ஒருவர் செயல் எதிர்ச்செயல் புரிகின்றனர்; அல்லது பரிமாற்றச்

செயல்களில் ஈடுபடுகின்றனர். உதாரணமாக, கடையில் ஒருவர் ஒரு பொருளை வாங்கும்பொழுது பேரம் பேசுகின்றார். ஒரு மாணவன் ஆசிரியரிடம் ஐயப்பாடுகளைத் தெரிவித்து விளக்கம் பெறுகின்றான். மகன் தந்தையிடம் தனக்கு அனுப்பும் பணம் போதவில்லை என்று வாதிடுகின்றான். வகுப்பிலுள்ள ஒரு மாண வனிடமிருந்து மற்றொரு மாணவன் பாடக் குறிப்புரைகளைப் பெற்றுச் செல்லுகின்றான். இவை பரிமாற்றச் செயல்களைக் குறிக்கின்றன.

மூன்றாவதாக, குழுவிலுள்ள அங்கத்தினர்கள் பொதுக் குறிக் கோள்களைப் பெறுவதற்கு முயற்சி செய்கின்றார்கள்; பொதுவான தீமைகளில் பங்கு கொள்ளுகின்றார்கள்; தாங்கள் மற்றக் குழு வினரிடமிருந்து வேறுபட்டவர்கள் என்று அறிகின்றார்கள்; ஒரு குடும்பத்திலுள்ள அங்கத்தினர்கள் மற்றொரு குடும்பத்திலுள்ள அங்கத்தினர்களிடமிருந்து வேறுபட்டவர்கள் என்பதை அறிந் திருக்கின்றார்கள். அது போலவே, ஒரு விளையாட்டுக் குழு மற்றொரு விளையாட்டுக் குழுவினிடமிருந்து வேறுபட்டிருக்கின்றது என்று அவற்றிலுள்ள அங்கத்தினர்கள் அறிந்திருக்கின்றார்கள். அது போலவே, தொழிற்சாலையில் பணி புரிபவர்கள், அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், சமய வழிபாட்டினர், உடன்பிறப்புக் குழுவினர் முதலியோர் தங்களுக்கென்று பொது நன்மைத் தீமை களைக் கொண்டிருக்கின்றனர்.

எனவே, குழுவுக்குக் கொடுக்கப்பட்ட இந்த வரையறையைக் கொண்டு சமூக நடத்தையை நாம் நோக்கும்பொழுது மனிதர் களிடையே ஒரு பரிமாற்ற நிகழ்ச்சி நடைபெறுவதற்குத் தொகுதியை நிலைநாட்டுதல் முன்கூட்டியே நடைபெறுகின்றது என்பதை நாம் அறிய வேண்டும். தொகுதியை அமைத்தலும் பரிமாற்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடுதலும் ஒரு குழுவின் வெளிப் பாட்டுக்கு முன்பே நிகழுகின்றன. ஆனாலும், இந்த வரையறையே இறுதியானது என்று கொண்டுவிட முடியாது. சமூக உளவியல் துறையில் குழுவின் வரையறை பற்றிய விவாதங்கள் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

சமூக உளவியலில் அண்மைக்காலம் வரையில் நடைபெற்ற ஆராய்ச்சிகளைக்கொண்டு உண்மைகளைக் காண வேண்டும். சமூகக் குழுக்களைப்பற்றி நடைபெற்ற தேர்வாராய்ச்சிகள் மூன்று வழிகாட்டும் குறிப்புகளைக் காட்டுகின்றன. முதலாவதாகக் கவனிக்கப்பட வேண்டியது தனியாள். தனியாள்தான் அடிப் படைச் செய்வினைஞனுகும். மாறுமியல்பும், அடிப்படை அலகும்

தனியாள்தான். இந்தத் தனியாள் என்ற மாறுமியல்பைக் கொண்டுதான் ஒரு தொகுதியிலுள்ள அங்கத்தினர்களிடையே நிகழும் ஒரு பரிமாற்ற நிகழ்ச்சியாலோ தனியாள் நடத்தையில் சூழுகொண்டுள்ள செல்வாக்கினுலோ ஏற்படுகின்ற விளைவுகளையும் ஆராய்வதற்குத் தனியாள் பயன்படுகின்ருர்.

இரண்டாவது வழிகாட்டும் குறிப்பாகக்கொள்ளப்படுவது, தொடர்புறவாகும். இந்தத் தொடர்புறவு இரண்டு அல்லது இரண்டுக்குமேற்பட்ட மனிதர்களிடையே நடைபெறும் பரிமாற்ற நிகழ்ச்சியைக் குறிக்கின்றது. இந்தச் செயல்முறை மனிதர்களிடையே நடைபெறும் பரிமாற்ற நிகழ்ச்சிகளை அடிப்படைச் செய்வினைஞன் அலகுகளாகக் கொள்ளுகின்றது. தனி மனிதர்களிடையே நிகழுகின்ற பரிமாற்றச் சார்பும், பரிமாற்றச் செயலின் வடிவங்களும் எந்த நிலைமைகளால் செல்வாக்குப் பெறுகின்றது என்று இஃது ஆராய்கின்றது.

மூன்ருவது மாறுமியல்பு என்று கருதப்படுவது குழுவாகும். குழுவை ஒரு செய்வினைஞன் அலகாக உபயோகிக்கப்படுகின்றது. குழுவினுடைய பண்புக்கூறுகளிலும் சூழ்நிலையின் மாறுபாடுகளிலும் செயல் நிறைவேற்றத்தை நிர்ணயிப்பதற்கு எவ்வாறு பரிமாற்றச்செயல் நடைபெறுகின்றது என்று காணும்பொருட்டு இஃது உபயோகிக்கப்படுகின்றது.

தனியாளின்மீது குழுவின் செல்வாக்குகள்

ஒரு சமூகக் குழு தனிமனிதனுடைய நடத்தையில் எவ்வாறு விளைவை உண்டாக்குகின்றது என்பது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது. சமூக அறிவியலின் பல்வேறு துறைகளான சமூக உளவியல், சமூகவியல், பொருளாதாரவியல், அரசியல் தத்துவம், மனித இன இயல் ஆகியவை இந்த நிகழ்ச்சியை மிகவும் ஆழ்ந்து கவனிக்கின்றன. வாழ்க்கையில் நாம் சந்திக்கின்ற பல்வேறு பிரச்சினைகளான அரசியல் நடத்தை, பண்பாட்டைப் பெற்று வழங்கல், குழந்தையைச் சமூகப் பண்புக்குள்ளாக்கல், பொருள் வாங்குவோரின் தேவைகள், தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தங்கள், குற்றங்கள் பெருகுதல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுவதற்கு முன்பு அவற்றிற்கான தீர்வுகளையும் முன்கூட்டியே கண்டறிய வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. ஒரு தொகுதியிலோ ஒரு குறிப்பிட்ட குழுவிலோ அங்கத்தினராக இருக்கத் தகுதிபெற்ற மனிதர்கள் மற்றக் குழுக்களிலுள்ள அங்கத்தினர்களைவிட மிக அதிகமான அளவுக்கு ஒரே மாதிரியான நடத்தையை வெளிப்

படுத்துகின்றூர்கள் என்ற உண்மையைப் பொதுவாக எங்கும் காணலாம். மேலும், ஒரு குழுவின் நடத்தைகளோ மனப் போக்குகளோ மாறும்பொழுது அங்கத்தினர்களும் மாறுகின்றூர்கள் என்பதையும் நாம் அடிக்கடி காண முடிகின்றது. குழுவினுடைய செல்வாக்கை ஆராயும் பெரும்பகுதி நடத்தையில் இந்த ஒற்றுமைகளை உண்டாக்கவும் இயக்கவும் வல்ல சக்திகளைக் கண்டுபிடிப்பதைத்தான் மையமாகக் கொண்டிருக்கின்றது.

சமூகக் குழுவின் செல்வாக்குக் கூறுகளைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்தியவர்கள் பலர். அவர்களில் கார்ட்ரைட்டும் சாண்டரும் (Cartwright and Zander) முக்கியமானவர்களாவார்கள். குறிப்பிட்ட ஒரு குழு அங்கத்தினர்களிடையே நோக்கப்பட்ட நடத்தையிலும் மனப்பான்மைகளிலும் உள்ள பொதுத் தன்மையைக் கணிக்க மூன்று சாத்தியமான கூறுகள் இருப்பதாக அவர்கள் கூறுகின்றூர்கள். முதலாவதாக, ஒரு குழுவில் அங்கத்தினர்களாக இல்லாதவர்களைவிட அங்கத்தினர்களாக இருப்பவர்கள் ஒரு தூண்டல் சூழ்நிலையை ஏற்கின்றூர்கள். இரண்டாவதாக, அங்கத்தினர்கள் தங்கள் குழுவிலுள்ள மற்ற மனிதர்களுடைய நடத்தைகளையும் மனப்பான்மைகளையும் ஒரு வரையளவாக உபயோகித்து, தங்களுடைய சொந்த நடவடிக்கைகளையும், புலன்காட்சிகளையும் பொருத்தமாகவும் சரிநுட்பமாகவும் ஆக்கிக் கொள்ளுகின்றூர்கள். மூன்றுவதாக, குழுவின் மற்ற அங்கத்தினர்கள் பரிசுகளையும் தண்டனைகளையும் கையாண்டு அங்கத்தினர்களைத் தங்களுடைய நடத்தையோடு ஏற்புடைய நடத்தை வடிவத்திற்குள்ளிருக்கும்படிக் கட்டாயப்படுத்துகின்றூர்கள்.

தூண்டல் சூழ்நிலையின் பொதுமை: ஒரு குறிப்பிட்ட குழுவில் அங்கத்தினர்களாக உள்ள மனிதர்களின் தூண்டல் சூழ்நிலையில் மிகுந்த அளவுக்குப் பொதுமை (Commonality) நிலவுகின்றது என்பதில் சிறிதும் ஐயமில்லை. இந்தப் பொதுமை மற்றக் குழுவின் பொதுமையிலிருந்து சிறிதாவது மாறுபட்டிருக்கின்றது. இந்த வகையான ஒரு தன்மையுள்ள பண்புகள் அவர்களுடைய நடத்தையிலும் மனப்பான்மையிலும் ஒரே சீரான நிலைமைகளை உண்டாக்குகின்றன. எனவே, இரண்டு சமூகங்களுக்கிடையிலுள்ள தூண்டலிலுள்ள ஒரே தன்மைகளைவிட ஒரே சமூகத்தில் மிகுந்த அளவுக்கு இருக்கக் காணலாம்.

உதாரணத்திற்குச் சொல்லுவோமானுல், ஒரு தொழிற்சாலையிலுள்ள செயலாட்சிக் குழுவினர்களுக்கான தூண்டலுக்கும்

தொழிற்சாலையின் பணியாளர்களுக்கான தூண்டலுக்கும் வேறுபாடுகளிருக்கலாம். ஆனால், செயலாட்சிக்குழு அங்கத்தினர்களுக்கான தூண்டலில் மிகுந்த ஒருமைப்பாடு காணப்படுகின்றது. அது போலவே பணியாளர்களுக்கான தூண்டலில் மிகுந்த ஒருமைப்பாடு காணப்படலாம். அதன் காரணமாகத்தான் செயலாட்சிக்குழு அங்கத்தினர்களும் பணியாளர்களும் தொழிற்சாலையின் நன்மைதீமைகளில் ஒரே மாதிரியான பங்குகொள்ள முடிவதில்லை. ஆனால், தொழிலாளர்களிடையே நடத்தையிலும் புலன்காட்சியிலும் மிகுந்த அளவுக்கு ஒரு தன்மை நிலவுகின்றது.

ஒரு குழுவைச் சேர்ந்த அங்கத்தினர்கள் ஒரு தூண்டல் சூழ்நிலையில் ஒரே மாதிரியான நடத்தைகளையும் மனப்பான்மைகளையும் வெளிப்படுத்துகின்றார்கள் என்ற உண்மை ஒப்புக்கொள்ளப்பட்டதனால்தான் சமூக உளவியலில் அளவாய்வு ஆராய்ச்சி முறை மிகுந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகின்ற நிலை ஏற்பட்டது. கேம்பல் (Campbell) என்பவர் அளவாய்வு முறையை உபயோகித்து மனம்போனபடி (random) தனியாள்களின் மாதிரிகளைச் சேகரித்தார். வெள்ளையர்களிடமிருந்தும் யூதர்களல்லாத அமெரிக்கர்களிடமிருந்தும் அவர் விவரங்களைத் திரட்டினார். யூதர்களை நோக்கியுள்ள மனப்பான்மையோடு தொடர்புடைய கூறுகளைக் கண்டறிய அவர் விரும்பினார். இந்த ஆராய்ச்சியில் மொத்தத்தில் 11 சத விகிதத்தினர் யூதர்களிடம் சாதகமான மனப்பான்மை இருப்பதாகக் கூறினர். இருபத்தொரு சத விகிதத்தினர் யூதர்களை இலேசாக வெறுக்கும் மனப்பான்மையையும், 13 சத விகிதத்தினர் வெறுப்பதாகவும், ஐந்து சத விகிதத்தினர் கடுமையான பகைமையுணர்ச்சி கொண்டிருப்பதாகவும் வெளிப்படுத்தினர்.

பிறகு விடையளித்தவர்களுடைய மனப்பான்மைகளுக்கும் அவர்களுடைய பல்வேறு சமூகப் பொருளாதாரப் பண்புக் கூறுகளுக்கும் இடையிலுள்ள தொடர்புறவு ஆராயப்பட்டது. வயது, பால், வருமானம் ஆகியவை இனவேற்றுமையோடு தொடர்புடையவையாக இல்லை. அமெரிக்காவிலேயே பிறந்தவர்களைவிட வேற்று நாடுகளில் பிறந்தவர்கள் யூதர்களிடம் சாதகமான மனப்பான்மைகள் கொண்டிருந்தார்கள். மேலும், அதிகமாகப் படித்தக் குழுவினரிடம் இனவேற்றுமை சற்றுக் குறைவாக இருந்தது. அரசியலிலும் பொருளாதாரத்திலும் முழு நிறைவு பெற்றிருந்தவர்களுக்கும் நிறைவு பெறாதவர்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள்தான் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகக் காணப்பட்டன. பொருளாதாரத்திலும் அரசியலிலும் நிறைவு பெறாத

மக்கள் மிகுந்த இனவேற்றுமையைக் காட்டினுர்கள்; கடுமையான வெறுப்புணர்ச்சியை யூதர்களுக்கெதிராக வெளிப்படுத்தினுர்கள். இவ்வகையான ஆராய்ச்சி பொருத்தப்பாட்டுக்குரியதே தவிர, தற்செயலானது என்று கருதி உண்மைகளைத் தள்ளிவிடுவதற்கில்லை. சில குழுக்களில் அங்கத்தினர்களாக உள்ளவர்களோடு குறிப்பிட்ட நடத்தைகளோ மனப்பான்மைகளோ இணைந்திருக்கின்றனவா என்று அடையாளம் காணுவதற்கு இப்படிப்பட்ட அளவாய்வுகள் பயன்படுகின்றன.

மேலும், இப்படிப்பட்ட ஆராய்ச்சிகள், ஒரு குறிப்பிட்ட அரசியல் வேட்பாளருக்கு ஒரு குறிட்பிட்ட மக்கள் கூட்டம் எவ்வாறு வாக்களிக்க விரும்புகின்றது என்பதை முன்னறிந்து கூறவும் உபயோகப்படுத்தப்படுகின்றது.

தனியாள் நடத்தையும் மற்றவர்களுடைய நடத்தைகளும் மனப்பான்மைகளும்: ஒருவருடைய சூழ்நிலையில் நிகழ்ச்சிகளைத் தீர்மானிப்பதற்கான ஒரு முக்கியமான செய்தி மூலாதாரம் மற்றவர்களுடைய நடத்தையை மதிப்பிடுவதாகும். தன்னுடைய நடத்தைகளையும் மனப்பான்மைகளையும் ஒருமுறை பரிசோதித்துப் பார்க்க வேண்டுமென்று ஒவ்வொருவரும் விருப்பம் கொள்ளுகின்றனர். சிறுவர்களுக்கு இந்த விருப்பம் அதிக அளவில் இருக்கக் காணலாம். ஒரு சிறுவன் தன்னுடைய நடத்தையின் நேர்மையையும் எண்ணங்களின் ஒற்றுமையையும் தன்னுடைய பெற்ருேர்களோடும் ஆசிரியர்களோடும் ஒத்திட்டுப் பார்த்து அளக்க விரும்புகின்ருன். ஒருவர் தம்முடைய சூழ்நிலையை மதிப்பீடு செய்வதற்கு மற்றவர்களைக் கட்டளை விதியாகக் கொண்டு ஒத்திட்டுப் பார்த்து, மற்றவர்களுடைய மனப்பான்மைக்கேற்பத் தம்முடைய மதிப்பீடுகளை மாற்றியமைத்துக்கொள்ளும் மனச்சார்புகளை ஒழுங்குமுறையாக ஆராய்ச்சி செய்திருக்கின்ருர்கள். ஆஷ் (Asch) என்பவரும், அவருடைய கூட்டாளிகளும் பல திறமையான ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கின்ருர்கள்.

ஒரு மேசையைச் சுற்றிலும் ஒன்பது மாணவர்களை உட்கார வைத்து, ஆஷ் தம்முடைய பரிசோதனையை நடத்தினர். கோடுகளின் நீளத்திலுள்ள வேறுபாடுகளை அறிதல்தான் பரிசோதனையின் நோக்கம். கோடுகளின் வேறுபாடுகளை அறிவதில் மாணவர்களில் ஒருவரைத் தவிர, மற்றவர்கள் எல்லாம் கூட்டு இணைப்பாக அப் பணியைச் செய்ய அனுமதிக்கப்பட்டார்கள். இதில் தனியாள்கள் தங்கள் மதிப்பீடுகளைக் கைவிட்டு, கூட்டத்தினரின்

மதிப்பீடுகளை ஏற்றுக்கொண்டார்கள்; அஃது உண்மையோடு ஒத்திருக்கவில்லை என்றாலும் அதையே ஏற்றுக்கொண்டார்கள்.

ஆஷ் என்பவரும், அவருடைய கூட்டாளிகளும் நடத்திய பரிசோதனைகளைப் போலவே செரீஃவ் (Sherif) என்பவரும் ஒரு சோதனை நடத்தியிருக்கின்றார். மிகவும் தெளிவில்லாத ஒரு தூண்டலைக் கொண்டு அப் பரிசோதனையை அவர் தொடங்கினார். இதில் மற்றவர்களுடைய மதிப்பீடுகள் தனியாளின் மதிப்பீட்டில் எத்தகைய விளைவை உண்டாக்குகின்றன என்று பரிசோதிக்கப் பட்டது. தன்னுள் இயங்கும் (autokinetic) விளைவையுண்டாக்கும் துலங்கல் உபயோகப்படுத்தப்பட்டது.

ஓர் இருட்டறையில் ஒரு சிறு புள்ளியாக ஒளி வீசப்பட்டது. அது நிலையாக வைக்கப்பட்டுத் தனியாளை அதன்மீது கவனத்தைப் பதிக்கச் செய்யப்பட்டது. அது நகருவது போன்று காணப் பட்டது. தனியாள்களின் மதிப்பீடுகளைத் தனித்தனியாகச் சேகரித்தார் செரீஃவ்; அப் புள்ளி நகருவதாகக் காணப்படுவதன் தூரத்தையும் மதிப்பீடு செய்யச் சொல்லி விவரம் சேகரித்தார்; பிறகு தனியாள்கள் இருவர்களாகவும், மூவர்களாகவும் அறையில் இருக்கச் செய்து அவர்களுடைய கூட்டு மதிப்பீடுகளைச் சேகரித் தார். தனியாள்களின் மதிப்பீடுகளும் கூட்டாகச் செய்த மதிப்பீடுகளும் வேறு வேருக இருந்தன. தனியாகச் செய்த மதிப்பீடு கூட்டாகச் செய்யும்பொழுது மாறிவிட்டது. கூட்டாக இருக்கும் நிலைமையில் தனியாள்கள் உரையாடல் புரிய அனு மதிக்கப்பட்டார்கள். அதனால் மற்றவர்களுடைய செல்வாக்கு தனியாளின் மதிப்பீட்டில் இடம் பெற ஏதுவாகின்றது. எனவே, தனியாள்கள், தங்கள் மதிப்பீடுகளை மற்றவர்களுடைய மதிப்பீடு களோடு ஒன்றியிருக்க வேண்டுமென்றே விரும்புகின்றார்கள் என்று இப் பரிசோதனைகளின்மூலம் தெளிவாகின்றது.

குழுவின் நெருக்கம்: மனிதர்கள் மற்றவர்களோடு பரி மாற்றமாகச் செயல்படுகின்ற வரையில் அவர்கள் பரிமாற்ற நிகழ்ச்சிகளில் தங்களைச் சிக்க வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனாலும் அவர்கள் ஒரு குழுவில் பங்கேற்றுக்கொண்டிருந் தார்கள் என்று கருத்துத் தெரிவிப்பதற்கு எந்த வகையான சான்றும் காணப்பெறவில்லை. அவர்கள் மற்றவர்களோடு ஒரு பொதுக் குறிக்கோளில் பங்கேற்றார்கள் என்றோ, ஒரு பொதுத் தீமைக்கு இலக்காகிவிட்டார்கள் என்றோ கூற முடியாது. மேலும், அவர்களிடம் குழு அடையாளத்தினுடைய ஓர் உணர்ச்சி இருந்தது என்றோ கூற முடியாது. டுட்ஜ் என்பவரும், செராடு

என்பவரும் (Deutsch and Gerard) இத் துறையில் கவனம் செலுத்தியிருக்கின்றனர்.

மதிப்பீடுகள் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக அங்கத்தினர்களின்மீது குழுக்களினால் செலுத்தப்பட்ட நெருக்கங்களின் வலிமையானது ஒரு பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளும் தனியாள்களின்மீது செலுத்தப்பட்டதைவிடப் பெரியதாக இருக்க முடியுமா என்று அவர்கள் பரிசோதனை நடத்தினார்கள்; இதன்பொருட்டுப் பரிசோதிக்கப்படுகின்றவர்களுக்குப் பல வகையான சூழ்நிலைகளை உண்டாக்கினார்கள். அவற்றில் இரண்டு முக்கியமாகக் கருதப்படுகின்றன. முதலாவதாகப் பரிசோதிக்கப்படுகின்றவர்கள் ஒருவருக்கொருவர் பெயர் மறைவாகவே இருந்தார்கள். பார்வையிலும், கேள்வியிலும் அவர்கள் தனித் தனியாகவே இருந்தார்கள். இரண்டாவதாக, அவர்கள் ஒரே சூழ்நிலையில் இருந்தார்கள். பரிசோதனையில் வகுக்கப்பட்டிருந்த பணி மதிப்பீடு செய்வதாகும். பெயர் தெரியாத தொகுதியில் தனித்தனியாகவும், ஒரே சூழ்நிலையில் கூட்டாகவும் மதிப்பீடுகள் செய்யப்பட்டன. குழுக்களில் அங்கத்தினர்களாக இருந்து செய்த மதிப்பீடுகள் குழுவின் மதிப்பீடுகளை ஒத்திருந்தன. எனவே, பரிசோதனைகளின் முடிவுகளில் எல்லாம் பரிசோதிக்கப்படுகின்றவர்கள் குழு அங்கத்தினர்களாக இருந்தால், குழுவின் கட்டுப்பாடுகளை அடிக்கடி எதிரொலிக்கும் நடத்தையில்தான் ஈடுபடுகின்றார்கள்.

குழு அங்கத்தினர்களின் நடத்தையும் மனப்பான்மையும் ஏன் இவ்வாறு உள்ளன என்றும் கேட்கலாம். அதற்குப் பல காரணங்களை விடைகளாகக் கூறுகின்றனர். பொதுவாக, மனிதர்கள் தங்களுடைய மனப்பான்மையில் பங்குகொள்ளும் குழுவில் சேர்ந்து அங்கம் வகிக்க விரும்புகின்றார்கள். பெரும்பாலும் மாணவர் விடுதிகளில் குழுக்கள் உருவாகின்றன. மாணவர்கள் தங்கள் கூட்டாளிகளைத் தேர்ந்தெடுப்பதில் ஒரே மாதிரியான மனப்பான்மைகள் யாரிடம் காணப்படுகின்றனவோ அவர்களைத் தான் குழுக்களில் சேர்த்துக்கொள்ளுகின்றார்கள். சில மனப்பான்மைகளோடும் நடத்தையோடும் உள்ள மனிதர்களுக்கு ஒருவர் தம்மைத் திறந்து காட்டுவதன்மூலம் குழுவின் அங்கத்தினரின் தொகை அதிகரிக்கின்றது; குழுவின் செறிவும் அதிகரிக்கின்றது. ஒரு தனியாள் ஒரு குழுவில் அங்கத்தினராவதற்குக் காரணம் அந்தக் குழுவின் அங்கத்தினர்கள் மிகவும் கவர்ச்சிகரமாக இருப்பதாகும். மேலும், அவரால் பாராட்டப்படுகின்றவரின் மனப்பான்மைகளையும் நடத்தைகளையும் அவர் பின்பற்றி

நடக்கக்கூடும். தவிர, குழுவே அதனுடைய அங்கத்தினர்களின் மீது நெருக்கம் காட்டவும் செய்யலாம். குழுவின் குறிக் கோள்களை ஈட்டுவதற்கு வசதி செய்யும்பொருட்டு அங்கத்தினர் களிடம் ஒரே சீரான நடத்தைகளையும் மனப்பான்மைகளையும் குழு வலியுறுத்தச் செய்யலாம்.

மேலும், ஒரு குழு அதனுடைய அங்கத்தினருக்கு எவ்வளவு கவர்ச்சிகரமாக இருக்கின்றதோ அவ்வளவுக்கு அந்தக் குழு ஒன்றுக இணையும் தன்மையைப் பெறுகின்றது என்று பேக் (Back) என்பவர் கூறுகின்ருர். ஒரு குழு ஒன்றுக இணையும் தன்மையை அதிகமாகப் பெற்றிருக்குமாஞல், அங்கத்தினர்களிடம் ஒரே தன்மையை உண்டாக்கும்பொருட்டுப் பெரும் செல்வாக்கை உபயோகிக்கின்றது.

மூன்று வகையான கவர்ச்சி மூலங்களைக்கொண்டு அதிக மாகவோ, குறைவாகவோ ஒன்றுக இணையும் தன்மையுள்ள மூன்று குழுக்களைப் பரிசோதனை முறைப்படி உருவாக்கினுர், பேக். மற்ற அங்கத்தினர்களை விரும்புதல், மதிப்புரிமை கொடுத்தல், பரிசுகள் பெறுதல் ஆகிய மூன்று கவர்ச்சி மூலங்கள் பரிசோதனை யில் உபயோகப்படுத்தப்பட்டன. தம்முடைய பரிசோதனையில் பேக் கண்ட உண்மை என்னவென்ருல், ஒன்றுக இணையும் தன்மையை மிகுதியாகப் பெற்றிருந்த குழுக்கள் குறைவாகப் பெற்றிருந்த குழுக்களைவிட மிகவும் செல்வாக்கான முயற்சிகளை யுடையவையாக இருந்தவை என்பதாகும். பேக் தம்முடைய பரிசோதனையில் கண்ட அதே முடிவுகளைச் சாச்சிடர் (Schachter) என்பவரும் கண்டார். இவர் கலந்தாய்வு (dicussion) முறையை உபயோகித்தார்.

ஐந்திலிருந்து ஏழு வரை அங்கத்தினர்களைக்கொண்ட பொழுதுபோக்கு மன்றங்களைப் பரிசோதனையாக உருவாக்கினுர்; இத்துடன் மூன்று கூட்டிணைப்பு உறுப்பினர்களையும் சேர்த்தார். மன்றத்தின் அங்கத்தினர்களுக்கு இடப்பட்ட பணி, ஓர் இளம் குற்றவாளிக்குக் கொடுக்கப்பட்ட மிகுந்த அல்லது குறைந்த ஏழு தண்டனை நடவடிக்கைகளில் ஒரு முடிந்த தீர்மானத்தை அவர்கள் தர வேண்டும் என்பதாகும். அவர்களிடையே நடந்த கலந்தாய்வின் தொடக்கத்தில் இரண்டு கூட்டிணைப்பு உறுப் பினர்கள் மிகவும்முரண்பாடான முடிவுகளை எடுத்தார்கள்; மற்றவர்களிடமிருந்து மிகவும் மாறுபட்டார்கள். மூன்ருவது கூட்டிணைப்பு உறுப்பினர் பெரும்பான்மையரின் முடிவை ஏற்ருர்.

கலந்தாய்வு நடைபெறும் காலத்தில் ஒரு கூட்டிணைப்பு உறுப்பினர் தம்முடைய எல்லை முடிவை நிலை நாட்டினார். இரண்டாவது உறுப்பினர் பெரும்பான்மையரின் முடிவுக்குத் தம்முடையதை மாற்றிக்கொண்டார். மூன்றாவது உறுப்பினர் எப்பொழுதும் குழுவின் வழக்கமான தீர்ப்பிலேயே தம்மை ஆட்படுத்திக் கொண்டிருந்தார்.

சாச்சிடர் பிறகு குழு அங்கத்தினரின் நடத்தையைக் கூட்டிணைப்பு உறுப்பினரின் நடத்தையோடு ஒப்பிட்டுப் பார்த்தார். பெரும்பான்மையானவர்களுடைய தீர்ப்பிலிருந்து விலகி நிற்பவர்கள் குழு அங்கத்தினர்களிடமிருந்து மிகவும் அதிகமான செய்திப் போக்குவரத்துகளைப் பெற்று வந்தார்கள். தீர்மானத்தை மாற்றிக்கொண்டவர்கள் அவ்வளவு அதிகமாகச் செய்திகளைப் பெறவில்லை; குழுவின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளும்பொருட்டு, பெரும்பான்மையான முடிவினின்றும் விலகியிருப்பவர்கள் குழுவினால் மிக அதிகமாக வலியுறுத்தப் பட்டார்கள். அதன்பொருட்டுக் குழு மிகுந்த ஆற்றலையும் செலவு செய்தது. இத் துறையில் ஆராய்ச்சி நடத்தியதைத் தைபவுட் (Thibaut) என்பவரும் இதே முடிவுகளையே தம்முடைய ஆராய்ச்சியிலும் கண்டார். எனவே, விலகி நிற்கும் தனிமனிதர்களின்மீது குழு தன்னுடைய செல்வாக்கை உபயோகித்துக் குழுவின் முடிவை ஏற்கச் செய்கின்றது.

குறிப்பு நூல் தொகுப்பு
(Bibliography)

அத்தியாயம் 1

1. Rose, E. A., 'Social Psychology', New York: The Macmillan Company, 1908.

2. Brown, J. F., 'Psychology and the Socinl Order', New York: Mcgraw-Hill Book Company, 1936.

3. Dashiell, J. F., 'An Experimental Analysis of Some Group Effect', Journal of Abnormal and Social Psychology, 1930, 25, 190-199.

4. Allport, F. H., 'Social Psychology,' Cambridge: Honghton Mufflin Company, 1924.

5. Sergent S. S. and Withamson, R. C., 'Social Psychology,' New York: The Ronald Press Company, 1958.

அத்தியாயம் 2

1. Allee, W., 'Animals Aggregations: A Study in General Sociology,' Chicago: University of Chicago Press, 1931.

2. Morgan, L., 'Introduction to Comparative Psychology', London: W. Scott, 1906.

3. Wheeler, W. M., 'Ants, Columbia', Columbia University Press, 1910.

4. Kohler, W., 'The Mentality of Apes', New York: Harcoust Brace, 1926.

5. Yerkes, R. M., 'Chimpanzees: A Laboratory Colony', Yale: Yale University Press, 1943.

6. White, L. A., 'On the use of Tools in Primates', Journal of Comparative Psychology, 1943, 34, 369-374.

அத்தியாயம் 3

1. Dennis, W., 'Does culture appreciably affect patterns in infant behaviour?' Journal of Social Psychology, 1940, 12, 305-317.

2. Allport, G. W., 'The Nature of Prejudice', Boston: Beacon, 1954.

3. Newcomb, T., 'Autistlc Hostility and Social Reality', Human Relations, 1947, 1, 69-80.

4. Berlyne, D. F., 'Uncertainity and Conflict: A Point of Contact between Information Theory and Behaviour Theory Concepts', Psychological Review, 1957, 14, 329-339.

5. May, R., 'The Meaning of Anxeity', New York: The Ronald Press Company, 1954.

6. Newcomb, T. M., 'Social Psychology', New York: The Dryden Press, 1950.

அத்தியாயம் 4

1. Lewin, K., 'Dynamic Theory of Personality', New York: Mcgraw-Hill Book Company, 1935.

2. Bruner, J. S., 'Personality Dynamics and the process of Perceiving', Blake, R. R. and Ramsey, G. V., 'Perception, an Approach to Personality', New York: The Ronald Press Company, 1951.

3. Allport, H. W. and Kramer, B. M., 'Some Roots of Prejudice', Journal of Psychology, 1946, 22, 9-39.

4. Klienberg, O., 'Social Psychology', New York: Henry Holt, 1954.

5. Blake, R. R. and Ramsey, G. V., 'Perception, an Approach to Personality', New York: The Ronald Prees Company, 1951.

அத்தியாயம் 5

1. Hilgard, E. R., 'Theories of Learning', 2nd. ed. New York: Appleton-century Crofts, 1956.

2. Rotter, J. B., 'Social Learning and Clinical Psychology', Englewood Cliffs: Prentice-Hall, 1954.

3. Dollard, J. and Miller, N. E., 'Personality and Psychotherapy, An Analysis in Learning, Thinking and Culture', New York: Mcgraw-Hill Book Company, 1950.

4. Milller, N. E. and Dollard, J.,'Social Learning and Imitation', New Haven, Conn: Yale University Press, 1941.

5; Mowrer, O. H., 'Learning Theory and Personality Dynamics', New York: The Ronald Press Company, 1950.

6. Skinner, B. F., 'Science and Human Behaviour', New York: The Macmillan Company, 1953.

அத்தியாயம் 6

1. Asch, S., 'Forming Impressions of Personality', Journal of Abnormal and Social Psychology, 1946, 41, 250-290.

2. Carlson, E.. 'Attitude Change through Modification of Attitude Structure', Journal of Abnormal and Social Psychology, 1956, 52, 256-261.

3. Segal, J., 'Correlets of Colloboration and Resistance Behaviour among U. S.', Prisoners of War of the Chinese, Journal of Social Issues, 1957, 13, 31-40.

அத்தியாயம் 7

1. Hiller, E. T., 'Principles of Sociology', New York: Hanpre and Brothers, 1933.

2. Judd, C. H., 'The Psychology of Social Institutions', 'New York: Macmillan Company, 1926.

3. Klienberg, O., 'Social Psychology (Rev. Ed.)', New York: Henry Holt, 1954.

4. Cassirer, E., 'An Essay on Man', Yale: Yale University Press, 1944.

5. Lippmann, W., 'Public Opinion', Harcount Brace, 1922.

6. Meed, G. H., 'Mind, Self and Society', Chicago: University of Chicago Press, 1934.

அத்தியாயம் 8

1. Mead, M. (ed), 'Competition and Co-operation among Primitive People', New York: Mcgraw-Hill Book Company, 1937.

2. Maller, J. B., 'Co-operation and Competition', New York: Teachers College, Columbia University Press, 1929.

3. Horney, K., 'The Neurotic Personality of Our Time', New York: W. W. Norton and Company, 1937.

4. Waller, W. N. and Hill, R., 'The Family', New York; The Dryden Press, 1951.

5. Miller, N.E. and Dollar, J., 'Social Learning and Imitation', New Haven, Conn: Yale University Press, 1941.

அத்தியாயம் 9

1. Allport, F. H.' 'Institutional Behaviour,' Capel Hill: University of North Carolina Press, 1933.

2. Sherif, M., 'An Outline of Social Psychology', New York: Harper and Brothers, 1948.

3. Corley, C. H., 'Social Organisation', New York: Charles Scribner's Sons, 1909.

4. Cantril, H., 'Identification with Social and Economic Class', Journal of Abnormal and Social Psychology, 1943, 38, 74-80.

5. Mecomb, T.M., 'Social Psychology', New York: The Dryden Press, 1950.

அத்தியாயம் 10

1. Cartwright, D. and Zander, 'A Group Dynamics, 2nd ed.', Evanston, Illinois: Row, Peterson, 1960.

2. Back, D. W., 'Influence through Social Communication', Journal of Abnormal and Social Psychology, 1951, 46, 9-23.

3. Campbell, A. A. 'Factors associated with attitudes towards Jews, in T. M.', New Comb and Hartley, E. L. eds, 'Readings in Social Psychology,' New York: Holt, 1947.

4. Dentsch, M. and Gerard, H., 'A Study of Normative and Informational Social Influences upon Individual Judgments,' Journal of Abnormal and Social Psychology, 1955, 51, 629-636.

5. Schachter, S., 'Deviation Rejection and Communication,' Journal of Abnormal and Social Psychology, 1951, 46, 190-207.

6. Asch, S. E., 'Social Psychology', New York: Prentice-Hall, 1952.

7. Sherif, M., 'A. Study of Some Social Factors in Perception', Archieve Psychology, 1935, 27, No. 187.

9. பிறழ்வு உளவியல்

1. பிறழ்வு உளவியலின் நோக்கமும் எல்லையும்

அறிவியல் முன்னேற்றங்களை எவ்வளவுதான் பயன்படுத்தி மக்கள் வாழ்க்கை முறைகளைச் சீராக நடத்திச் சென்றாலும் மக்களுடைய வாழ்க்கை முறைகள் எந்த அளவிலும் ஒரே சீராக இருப்பதில்லை; ஏதேனும் ஒரு வழியில் மாறுபட்டுதான் காணப் படுகின்றது. இந்த மாற்றம் சாதாரணமாக யாருடைய கவனத் தையும் கவருவதில்லை. ஏனென்றால், அந்த வகையான மாற்றங் களில் வியப்பைத் தருகின்ற பண்புக்கூறுகளில்லை. ஆனால், ஒரு மனிதனுடைய நடத்தையில் ஏற்பட்டுள்ள மாற்றம் வழக்கத்திற்கு மாறானதாகவோ இயல்பிறழ்ந்த நடத்தையாகவோ இருக்கு மானால், அஃது உறுதியாகப் பொதுமக்களின் கவனத்தைத் தூண்டு கின்றது. அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும் நிகழ்ச்சியாக அஃது அமைகின்றது.

ஒரு வீதியிலுள்ள ஒரு காலி வீட்டிற்குப் புதிதாக ஒருவர் குடும்பத்துடன் குடி வந்திருப்பாரானால், அண்டைவீட்டுக்காரர்கள் எல்லாம் அவரைப்பற்றியும் குடும்பத்தினரைப்பற்றியும் மதிப்பீடு செய்கின்றார்கள். புதிதாகக் குடிவந்த அவர் தம்முடைய வீடு, குடும்பம், வாழ்க்கை என்று இருந்து விடுவாரானால், அவரைப் பற்றி அண்டை வீட்டுக்காரர்கள் அதிகமாகக் கவனம் செலுத்து வதில்லை. ஆனால், புதிதாகக் குடிவந்த அந்த மனிதர், தாம் அங்குக் குடிவந்தது அண்டை வீட்டுக்காரர்களுக்குப் பிடிக்கவில்லை என்றும், அந்த வீதியிலுள்ளவர்கள் எல்லாம் தமக்கு எதிராகச் சதித் திட்டம் போட்டுத் தம்மை ஒழிக்கப் பார்க்கின்றார்கள் என்றும்

கூப்பாடு போடுவாரானால், அவரைப்பற்றி அனைவரும் சந்தேகம் கொள்ளவும், பேசவும் சந்தர்ப்பம் ஏற்படுகின்றது. அவர் அந்த வீதியிலுள்ளவர்களுடைய கவனத்தை மிகவும் அதிகமாகக் கவரு கின்றார். 'அவர் ஒரு வேளை பைத்தியமாக இருப்பாரோ?' என்ற வினாவை எழுப்பி விடை காணுவதில் ஒவ்வொருவரும் ஆர்வம் கொள்ளுகின்றனர்; அதன் பிறகு அவருடைய செயல் ஒவ்வொன் றையும்பற்றி விமரிசனம் செய்யத் தொடங்குகின்றனர். பிறழ்வு உளவியல் இப்படிப்பட்ட முறையீடுகளில் பங்கெடுத்துக்கொள்ளு கின்றது. ஏனென்றால், சாதாரணப் பொது அறிவின் துணை கொண்டு புரிந்துகொள்ள முடியாத மனித நடத்தைகளையும் எண்ணங்களையும் விளக்கிக் கூறுவதற்குப் பிறழ்வு உளவியல் முயற்சி செய்கின்றது. சில சமயங்களில் அவசரப்பட்டுத் தவறாகச் செய்யப் பட்ட முடிவுகள் இயல்பு நிலையிலுள்ள மனிதனையும் துன்பத்திற் குள்ளாக்கி விடலாம். பிறழ்வு உளவியல் இவ்வாறான பிரச்சினை களையும் முறையாக ஆராய்ந்து அறிய முயலுகின்றது.

பிறழ்வு உளவியலின் செய்திப்பொருள்கள் மக்களுடைய அன்றாட வாழ்க்கையில் அதிகமாக எதிர்ப்பட்டாலும், அவற்றைப் பற்றி மக்கள் மிகக் குறைவாகவே தெரிந்திருக்கின்றார்கள். அவ்வாறு அவர்கள் தெரிந்து வைத்துள்ள குறைவான செய்திப் பொருள்களும் தவறாகவே இருக்கின்றன. தவிர, அதைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவது தவறாக நம் நாட்டில் கருதப்படு கின்றது. ஏனென்றால், பைத்தியக்காரப்பட்டம் சூட்டப்பட்ட ஒருவரை நாம் பார்க்கவோ, அவரோடு பேசவோ விரும்பு வதில்லை. அஃது ஒரு பெரும்துரதிர்ஷ்டமான நிலை என்றும், குடும் பத்தில் ஏற்பட்டுள்ள அவமானகரமான நிகழ்ச்சி என்றும் கருதும் நிலை நம் நாட்டில் இருந்து வருகின்றது. குணப்படுத்த முடியாத நோய் எதுவாக இருந்தாலும் சமூகம் அதை அவ்வளவாகப் பொருள்படுத்துவதில்லை; சகித்துக்கொள்ளவும் தயாராக இருக் கின்றது. ஆனால், ஒருவர் மனக்கோளாறு காரணமாகத் துன்பப் படுகின்றார் என்றால் சமூகம் அவரிடம் அக்கரை காட்டுவதில்லை; அலட்சியமாக இருந்து விடுகின்றது; தவிர, அவரைச் சமூகத்தி லிருந்து விலக்கப்பட்டவரைப் போல நடத்துகின்றது. ஆனால், உண்மையைச் சரியாக நோக்கும்போது அவருக்கு இந்த நிலை ஏற்பட வேண்டியதில்லை. மற்ற நோயாளிகளை நடத்துவது போன்றே அவரையும் நடத்தலாம். எனவே, மனிதனின் பிறழ்வு நிலையைப்பற்றியோ மனக்கோளாறு பற்றியோ சரியான அறிவு விளக்கத்தைத் தருவதன்மூலம் அத்தகைய நிலை மாற முடியும் என்று நம்பலாம்.

நோக்கம்

பிறழ்வு உளவியல் என்பது, மனிதர்களிடம் காணப்படும் நடத்தை இயல் பிறழ்ந்ததாக இருக்குமானால், அந்த நடத்தையை ஒழுங்குமுறை ஆராய்கின்ற ஓர் உளவியல் துறையாகும். மனிதர்களுடைய இயல் பிறழ்ந்த நடத்தையை அறியும்பொருட்டு உளவியலை அறிவியல் முறைப்படி உபயோகிக்கும் ஒரு துறைக்குப் பெயர்தான் பிறழ்வு உளவியல் என்று பெயர்.

பிறழ்வு என்ற சொல்லின் அடிப்படைப் பொருளைக் காண்போமானால், ஒரு வரையளவு நிலை அல்லது ஒரு சராசரி நிலையிலிருந்து விலகிச் செல்லுவது என்று கருதப்படுகின்றது. எனவே, பிறழ்வு நடத்தை என்பது பெரும்பாலான மக்களுடைய நடத்தையிலிருந்து மாறுபட்டுக் காணப்படும் ஒரு நடத்தை என்று கூறலாம். மனிதர்களின் எல்லாக் குணப்பண்புகளும் பல வகையான படித்தரங்களைக் கொண்டிருக்கின்றன. சாதாரணமாக, மனிதர்கள் தங்களுடைய உயரம், எடை, கண்பார்வைக் கூர்மை, நல்வாழ்வு (health) முதலிய பண்புக்கூறுகளிலும், மற்ற உடல்சார்பான பண்புக்கூறுகளிலும், உளச்சார்பான பண்புக்கூறுகளிலும் மாறுபட்டே காணப்படுகின்றார்கள்.

ஆனால், ஒரு சமூகத்தில் பிறந்து வாழுகின்ற மக்கள் மாறுபாடுகளுடன் வாழ வேண்டுமென்றோ ஒரு குடும்பத்திலுள்ளவர்கள் மாறுபாடுள்ள நடத்தையைக் கொண்டிருக்க வேண்டுமென்றோ எந்த ஒரு சமூகமும் விரும்புவதில்லை. மிகுந்த மாறுபாடுகளின்றி வாழ்ந்தால்தான் வாழ்க்கையில் குழப்பங்கள், மன முரண்பாடுகள், போராட்டங்கள் ஆகியவை ஏற்படாமலிருக்க முடியும். தனி மனிதனும் சமூகமும் இந்த வகையான ஒரு குறிக்கோள் நிலையை முன்னிறுத்திப் பார்க்க வேண்டும்; தனி மனிதனோ, சமூகமோ அவ்வாறான ஒரு குறிக்கோளை முன்னிறுத்திப் பார்க்கவில்லை என்று யாரும் கருத வேண்டுவதில்லை. அறிவியல் நாகரிகத்தில் வாழ்ந்து வருகின்ற எந்த ஒரு சமூகமும் தனக்கென்று ஒரு குறிக்கோளை வகுத்துக்கொண்டிருப்பதை நாம் புறக்கணித்து விடவில்லை. இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் சமூகம் வெற்றியடைய முடிவதில்லை.

ஏனென்றால், மனிதர்கள் அனைவரும் ஒன்று போலவே பிறந்து ஒரே மாதிரி வளர்ந்து பெரியவர்களானாலும் அவர்கள் ஒரே மாதிரி நடத்தையுடையவர்களாக இருப்பதில்லை. சிறிதுகூட மாறுபடாத வளர்ப்பு முறையுடையவர்களுடைய நடவடிக்கைகளிலும் பல்வேறு விதமான மாறுபாடுகள் காணப்படுகின்றன.

மனிதர்களின் விருப்பங்கள், எண்ணங்கள், குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் கடைபிடிக்கும் முறைகள், கற்பனைகள், திறமைகள், வெற்றிகள், ஆளுமைப் பண்புகள் முதலியவை மாறுபட்டுதான் காணப்படுகின்றன. இந்த மாறுபாடுகளெல்லாம் தனி மனித மாறுபாடுகள் என்று உளவியலார் கூறுகின்றனர். மேலும், இவற்றில் காணப்படுகின்ற மாறுபாடுகளெல்லாம் மரபு நிலை (heredity) காரணமாகவும், சூழ்நிலை (environment) காரணமாகவும் ஏற்படுகின்றன என்று உளவியலார் கூறுகின்றனர்; மேலும், இவ் வகையான மாறுபாடுகளுக்கும் சமூக இயல்பினருக்கும் செயல்முறைகளும் காரணப் பொருள்களாக இருக்கின்றன என்றும் கருதுகின்றனர். இந்த வகையான தனி மனித மாறுபாடுகள் இயல்பு நிலையிலுள்ள மனிதர்களிடம் காணப்படுகின்றன.

இயல்பு நிலையிலுள்ள மனிதர்கள் தங்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் நடவடிக்கைகளையும் ஒரு சமூக வரையளவுக்கு (social standard) உட்படுத்திக்கொண்டு வாழ்கின்றனர்கள். அவர்களுடைய சிந்தனையும், கற்பனையும், நோக்கமும், ஊக்கமும், நடத்தையும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லை வரையறைக்குள்ளேயே இருக்கின்றன. அவர்கள் அந்த எல்லைகளைக் கடந்து செல்ல விரும்புவதில்லை. ஆனால், சமூகத்தில் வாழ்ந்து வரும் எல்லா மனிதர்களும் விதிகளுக்குள் அடங்கி வருவதில்லை. சமூகத்திலுள்ள ஒரு பகுதியினர் சமூக வரையளவுகளைக் கடந்து சென்று, இயல்பு நிலையிலுள்ள மனிதர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்டுகின்றனர். இயல்பு நிலையினின்றும் கடந்து சென்று தங்களை வேறுபடுத்திக் காட்டும் மனிதர்களின் நிலையில் பல வகையான படித்தரங்கள் இருக்கக் காணலாம். அஃது எந்த வகையான படித்தரமாக இருந்தாலும், அந்த நிலையையுடையவர்கள் இயல்பு கடந்த நிலைக்குச் சென்று விட்டவர்களாவார்கள். இவர்களை இயல் பிறழ்ந்தவர்கள் என்று கூறுகின்றனர்.

இயல்பு கடந்தமை அல்லது இயல் பிறழ்ந்தமை (abnormality) என்ற சொல் எதிர்மறையானதாகும். இயல் பிறழ்ந்தமை என்ற சொல்லையும் நோய் அல்லது பிணி (disease) என்ற சொல்லையும் ஒரே பொருள்படக் கொண்டு மனப்பிறழ்வு (mental abnormality) என்றும், மனநோய் (mental disease) என்றும் கூறுவதுகூட வழக்கத்திலிருந்து வருவதைக் காண்கின்றோம். ஆனால், சிலர் இந்த இரண்டு எதிர்மறையான சொற்களுக்கும் வெவ்வேறு பொருள்கள் கூறுகின்றனர். சொற்களை நேர்ப் பொருள்களாகப் பார்க்கும் போது, இயல்பு கடந்தமை அல்லது இயல் பிறழ்ந்தமை என்பது

ஒருதர நிலையிலிருந்து அல்லது ஒரு வரையளவிலிருந்து (norm or standard) விலகிச் செல்லும் நிலையைக் (deviation) குறிக்கின்றது. அதே சமயத்தில் நோய் அல்லது பிணி (disease) என்பது உயிராதார மான இயல் நலத்தின் குறைபாட்டைக் குறிக்கின்றது. எனவே, இந்த இரண்டு எதிர்மறையான கருத்துச் சொற்களும் இயல் பமைவு அல்லது இயல்பு நிலை என்ற சொல்லையும், ஆரோக்கியம் அல்லது நோயற்ற நிலை (normality, health) என்ற சொல்லையும் உடன்பாடாக முன்னூகிக்கச் செய்கின்றன. அந்தச் சொற் களைக்கொண்டே அவர்கள் நிலைகளை விளக்கிக் கூறுகின்றூர்கள்.

இயல் பிறழ்ந்தமை விலகிச் செல்லுவதைக் குறிப்பிடுகின்றது என்று கொண்டால், எதிலிருந்து விலகிச் செல்லுதல் என்ற வினு எழுகின்றது. இயல் பிறழ்ந்தமையை ஆரோக்கியத்தின் புறக்கணிப்பு என்று கூறுவோமாஞல், ஆரோக்கியத்தின் எதிரான சொற்களைக் கொண்டுதான் இதை விளக்க வேண்டும். எனவே, இயல்பு நிலை என்பது ஒத்திசைவு (harmony) அல்லது சமநிலை என்றும், நோய்க் குணவியல் என்பது ஒத்திசைவின்மையும் சமநிலைக் குறைபாடும் என்றும் விவரிக்கப்படுகின்றன.

ஆனுல், நடத்தை அறிவியல் வல்லுநர்களில் சிலர் நோய், நோய்க் குணவியல் போன்ற சொற்களைப் பிறழ்வு உளவியல் துறையிலிருந்து நீக்கிவிட விரும்புகின்றனர். அவர்கள் கூறுகின்ற காரணங்களில் ஒன்று என்னவென்றுல், இந்தச் சொற்கள் எல்லா வகையான கருத்துச் சார்பான முன்னூகங்களையும் கொண்டிருக்கின்றன. அவற்றினுடைய குறிப்புகள் உடல்சார்ந்த மருத்துவத்தில் காணப்படுகின்றன. எனவே, இச் சொற்கள் மனவெழுச்சிக் கோளாற்றுத் துறையில் உபயோகிக்கப்படும்போது பொருத்தமாகக் காணப்படவில்லை; மேலும், தவறுகவும் நடத்திச் செல்லுகின்றன.

எனவே, நோய் என்ற சொல் மருத்துவத் துறையினரின் மனதில் நோய் உளதாம் தன்மை, நோய்ச் செயல்முறை ஆகிய வற்றின் கருத்தை வலியுறுத்துவதற்கு ஏற்றதாக இருக்கின்றது. பெரும்பாலும் உடல்சார்பான தன்மையுள்ள நோய்க் குணங் களுக்கு இச் சொல் முற்றிலும் ஏற்றதாகும். ஆனுல், எல்லா இடங்களிலும் இந்த நோய் என்ற சொல்லை நாம் தள்ளிவிட முடியாது; அல்லது மருத்துவத்துறைக்கே உரிமையாக்கிவிட முடியாது. உதாரணமாக, மனவெழுச்சி நோய் (emotional illness) பற்றிப் பேசும்போதும், உளநோயின் (mental disease) காரணங்களையும் இயல்புகளையும்பற்றி ஆராய்கின்றபோதும் இச்

சொல்லை உபயோகிக்க வேண்டியிருக்கின்றது. என்றாலும், அது மருத்துவத் துறையினர் உபயோகிக்கின்ற உடல் சார்ந்த பொருளில் உபயோகிக்கப்படவில்லை, மனவெழுச்சி நோயைக் குறிப்பிடுவதற்கு நோய் என்ற சொல்லை உபயோகிப்பதாலேயே மனவெழுச்சிச் சீர்கேடுகளுக்கு மருத்துவத் துறையைச் சேர்ந்த ஒருவர்தான் சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற பொருளும் இதில் இல்லை.

மனவெழுச்சி நோய் என்ற கருத்துச் சொல்லை உளவியலில் உபயோகிப்பதற்குப் பொருத்தமான காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, எந்த ஒரு பண்பாட்டிலும் அல்லலுக்காளான ஒரு மனிதன் ஒரு நிலைமையின் பிடிப்பிலிருப்பதாகக் காணப்படுகின்றான். அந்த நிலைமையைக் குறிப்பிடுவதற்கு நன்னெறி வகையைச் சார்ந்த பழிவினை (sin), தண்டனை ஆகிய சொற்கள் நேரடியாக ஏற்றவையாக இல்லை என்பது புலப்படுகின்றது. இரண்டாவதாக, நோய் என்ற சொல் நோய்க்கூறுள்ள ஒரு சமூக நிறுவனத்தில் கடமையுணர்ச்சிகளுடனும் தனியுரிமைகளுடனும் நன்கு வரையறுக்கப்பட்ட ஒரு சமூக மனப்போக்கு என்று உறுதியாக நம்பப்பட்டு வருகின்றது. எனவே, இந்த இரண்டு கருத்துகளும் மனவெழுச்சிக் கோளாறுபற்றி இன்றைய அறிவு வளர்ச்சிக்கு நேரடியாகப் பொருத்தமாக இருக்கின்றன.

மேலும், வரையளவாக்கப்பட்ட இயல்புநிலையை இரண்டு வழிகளில் நிலைநிறுத்துகின்றனர். முதலாவது, புள்ளி விவரவியல் (Statistical) வழி. வழக்கமானதாக அல்லது சராசரியாக இருக்கின்ற ஒரு நிலைதான் இயல்பு நிலை என்று இந்த வழி வரையறை செய்கின்றது. இரண்டாவது, முறையியல் (Normative) வழி. இம்முறை சில பண்பியல் வரையளவுகளை அமைக்க முயலுகின்றது. பெரும்பாலும் நல்லிணக்கம் (adjustment), ஒருமைப்பாடு ஆகிய செயல்முறைகளில் பண்பியல் வரையளவுகளைக் கொண்டுள்ளது இவ் வழி. இந்த வரையளவுகள் செயல் சார்பான கூர்ந்தாய்வுகளின்மீது அமைக்கப்படுகின்றன.

புள்ளி விவரவியல் நோக்கு

பிறழ்வு உளவியலும் செய்திகளை எண்ணளவில் சேகரிக்க முடியும். அதன்பொருட்டுப் புள்ளி விவரவியல் முறைப்படி இயல்பு நிலையை அணுகுவது இன்றைய மருத்துவத் துறையினருக்கும் நடத்தை அறிவியலாருக்கும் மிகவும் கவர்ச்சிகரமாகத் தோன்றுகின்றது. ஏனென்றால், மனப்போக்காகத் தேர்ந்தெடுக்கக்கூடிய மதிப்பைக் குறைவாகவே இது கொண்டிருக்கின்றது. ஒரு

குறிப்பிட்ட பண்பு வழக்கமாக இருக்கின்றதா என்று நிலைநிறுத்த வேண்டுமானால், உருப்படிகளை எண்ணிக் கூறுகின்ற எளிமையை இம் முறை கொண்டிருக்கின்றது. மனித உடலின் இயல்பு நிலை வெப்பம் என்ன என்பதை நிலைநாட்ட முடியும். அதை நிலை நாட்டிய பிறகு ஒரு மனிதனின் உடல் வெப்பம் 101° (டிகிரி) சிறு அளவுக்கூறு இருக்குமானால், அஃது இயல்பு நிலையைக் கடந்தது என்று எளிதில் காணலாம். எனவே, இம் முறையின்மூலம் மிக எளிதில் இயல்புநிலை உடல் வெப்பத்திற்கும் காய்ச்சல் நிலைக்கு மிடையே ஓர் எல்லைக்கோடு போட முடியும். ஆனால், இதே முறையை எல்லாப் பண்புகளுக்கும் உபயோகிக்க முடியாது. உதா ரணமாக, உடல் நலத்திற்கு ஒரே புள்ளி விவரச் சராசரி நிலையை நாம் நிறுவ முடியாது. புள்ளி விவர முறைப்படி ஒரு சராசரி உடல் நலத்தை நாம் நிறுவினாலும், புள்ளி விவரப்படி நோய்க்கூறுவியலைச் சரியாக வரையறை செய்ய முடியாது.

இவ் வகையான முயற்சியில் ஒரு சில கூறுகள் முட்டுக்கட்டை களாக இருக்கின்றன. நோய்க்கூறு நிலையே சிறிதுமில்லாத புள்ளி விவர இயல் பிறழ்ந்த நிலைகளுமிருக்கின்றன. இயல்பு நிலைக்கு அப்பாற்பட்ட உடல் வலிமை, மிக நீண்ட வாழ்வு நாள் ஆகியவை இயல்பு நிலைக்கு அப்பாற்பட்ட மிகச் சிறந்த உடல் நலத்தைக் குறிக்கின்றன. எனவே, புள்ளி விவரவியல் முறைப்படி எந்த இயல்பு கடந்த நிலை உடல்நலத்தைக் குறிக்கின்றது, எந்த இயல்பு கடந்த நிலை நோய்க்குணத்தைக் காட்டுகின்றது என்று முடிவு செய்வது சிரமமான பிரச்சினையாக இருக்கின்றது. அதே சமயத்தில் நீர்க்கோப்பு அல்லது சளி மக்களிடம் மிக அதிகமாகக் காணப்படுகின்றது. இஃது எந்த அளவில் மனிதர்களைத் தாக்கி னாலும் நோய்க்குணத்தைத்தான் காட்டுகின்றது என்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை. எனவே, ஒரு நிகழ்ச்சியில் முடிவை நிலை நிறுத்து கின்ற புள்ளி விவரவியல் மற்றொரு நிகழ்ச்சியில் முடிவை நிலை நிறுத்த முடியவில்லை.

புள்ளி விவரவியல் வல்லுநர்கள் நடத்திய ஆராய்ச்சிகள் குறிப்பிடத்தக்க முடிவுகளை நல்கியிருக்கின்றன. உளவியல் வரை யளவுக்கும் புள்ளி விவரவியல் இயல்பு நிலைக்கும் இடையில் எதிர் பாராத ஒருங்கொத்தல் நிலை ஏற்பட்டிருப்பதாகக் கொயட்லெட் (Quetelet) என்ற பெல்ஜியன் வானநூல் வல்லுநர் கூறுகின்றார். இவருடைய கூராய்வுப்படிச் சராசரி மனிதன் குறிக்கோள் நிலை (Ideal) மனிதனுடன் தொடர்பு கொண்டிருப்பதாகக் கூறப்படு கின்றது. எனவே, இவருடைய கருத்துப்படிச் சராசரி மனிதனும் குறிக்கோள் நிலை மனிதனும் எல்லாப் பண்புகளிலும் முழுதொத்துக்

காணப்படுகின்றனர் என்று தெரிகின்றது. ஆனால், கான்கில்கிம் (Canguilhem) என்ற ஜெர்மானிய அறிஞர் கருத்துப்படி, சராசரி மனிதன் முழுமையான குறிக்கோள் நிலை மனிதனுடன் எல்லாப் பண்புகளிலும் முழுதொத்திருக்க வில்லை என்பதாகும். கொயட் லெட்டின் முயற்சியானது குறிக்கோள் நிலை வரையளவைச் சராசரி மனிதனோடு தொடர்புபடுத்தி, அதைப் புள்ளி விவரவியல் துறைக்குள் கொண்டுவருகின்றது. அம் முயற்சி உளவியல் துறை மட்டத்தில் பயனுடையதாக இருக்கலாம். ஆனால், அது சமூகப் பிரச்சினைகளிலும் உளவியல் பிரச்சினைகளிலும் பயனளிக்கத் தவறி விடுகின்றது. உதாரணத்திற்குக் கூறுவோமானால், ஒரு குறிப்பிட்ட குழுவில் மிகவும் விரும்பத்தக்க அளவு நல்லிணக்கம் கொண்ட அங்கத்தினர்கள் எப்பொழுதும் சிறுபான்மையினராகவே இருக் கின்றனர்; பெரும்பான்மையினராக இருப்பதில்லை. இதனால் புள்ளி விவரவியல் வரையளவுக்கும் குறிக்கோள் நிலை வரையள வுக்கும் இடையில் உள்ள இயைபு உயிரியலில் மிக நெருக்கமாக இருக்கின்றது என்றும், உளவியலிலும் சமூக உளவியலிலும் இயல்பு குறைவாக இருக்கின்றது என்றும் தோன்றுகின்றது.

சமூகத்தில் காணப்படும் சளி, பல் சொத்தை ஆகியவை புள்ளி விவரவியல்படி இயல்நிலைதான் என்றாலும், இவை நோய்க் குணத்தைத்தான் காட்டுகின்றன. எனவே, நல்வாழ்வு பற்றியும் நோய் பற்றியும் நாம் கொள்ளுகின்ற தீர்ப்புகள் எல்லாம் பண் பாய்வு வரையளவுகளினால்தான் நடத்திச் செல்லப்படுகின்றன என்பது முற்றிலும் தெளிவாகத் தெரிகின்றது. உதாரணமாக, ஒருமைப்பாடு, உடல் சமநிலையைப் பேணுதல் (homeostasis) ஆகி யவை பண்பு நிலைகள்தான் என்றாலும் பரிசோதனைக்குரியவை யாவும் மாறுகின்றன. ஆகையினால் நல்வாழ்வு, பிணி என்ற கருத் துச் சொற்களைப் புள்ளி விவரவியல், முறையியல் பண்புக்கூறுகளி லிருந்து பிரித்தறிவது சிரமமான செயலாக இருக்கின்றது.

நல்வாழ்வு, நோய்க் கூறுவியல் ஆகிய கருத்துச் சொற்களை வரையறை செய்வதிலுள்ள சிரமங்களை நாம் இங்கு விளக்கமாகக் கண்டோம். ஆனால், இந்த முயற்சி தேவைதானா என்றும் சிலர் கேட்கலாம். உண்மையில் உடல்சார்ந்த மருத்துவத்தில் இது மிகவும் தெளிவாக இருந்தாக வேண்டும். அங்கு அது தெளிவாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் பழுதடைந்த உடலுறுப்புக்கு முன்னால் நின்றுகொண்டிருக்கின்ற ஒரு மருத்துவர் இப்படிப்பட்ட தத்துவ ஆராய்ச்சி முயற்சிகளின்மீது அதிக நேரத்தைச் செலவு செய்துகொண்டிருக்க முடியாது. ஆனால், அப்படிப்பட்ட சூழ் நிலையில் அகப்பட்டுக்கொண்ட மருத்துவர்கள் நோயை அடை

யாளம் கண்டுபிடித்து விடுகின்றனர்கள்; ஆனால், நோயைச் சரியான முறையில் விளக்கிக் கூற முடியாதவர்களாக இருக்கின்றனர்கள். உளவியல் வல்லுநர்களும் உள மருத்துவர்களும் நோயைப்பற்றிச் சரியான விளக்கம் அல்லது வரையறையில்லாமல் ஒன்றும் செய்ய முடியாதவர்களாக இருக்கின்றனர்கள். இஃது அவர்களிடமுள்ள உள்ளார்ந்த அல்லது ஈட்டிய ஒரு சாய்வு நிலையன்று. இயல்பு நிலைக்கும் இயல் பிறழ்ந்த நிலைக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைக் கண்டறிவது மிகவும் சிரமமாகும். தவிர, தினசரிப் பயன்பாட்டுக்குரிய ஏற்புடைமைகளுக்கும் வேறுபாடு கண்டறிந்தாக வேண்டும்.

இந்த வேறுபாடுகளை நாம் சரியாக வரையறுத்துக் காட்டாவிட்டால், உளவியல் பயிலுகின்ற மாணவன் அவற்றைப் புரிந்து கொள்ளுவதில் பல சிரமங்களைக் காண்கின்றான். அவன் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறுவதற்கு என்ன காரணம் என்று ஆராயும்போது நாம் ஆச்சரியப்படும்படியான முடிவுகளுக்கும் செல்ல நேரிடுகின்றது. அவன் கல்வித்துறையில் வெற்றி காண முடியாமல் போனதற்கு அவனுடைய புதை உணர்வு நிலையில் முரண்பாடுகள் இருக்கின்றனவா? அவை அவனுடைய நோய்க் கூறுகளை வெளிப்படுத்துகின்றனவா? அல்லது அவன் தெரி உணர் நிலையான ஊக்கமூட்டியில் குறைபாடுள்ளவனாக இருக்கின்றானா? அல்லது ஒழுக்கக் குணத்தில் குறைபாடு ஏதேனும் அவனிடம் இருக்கின்றதா? இவ்வாறெல்லாம் சிந்திக்க இடம் தருகின்றது.

மேலும், மாணவனுடைய பிற்போக்கைக் கண்டு அவனுக்கு உளமருத்துவம் தரப்படலாம். அவன் அதைக் கண்டு அதிர்ச்சியும் அடையலாம். எனவே, இந்த வகையான மூலமறியும் முறையைப் பற்றி முடிவு எடுத்தல் அந்த மாணவனின் எதிர்காலத்தைச் சிதைக்கவும் செய்யலாம். இவ்வாறு ஓர் இடத்தில் ஒரு தவறு செய்யப்படுமானால், அது தொடர்ந்து சென்று வாழ்க்கையைப் பாதிக்கின்ற நிலைக்குச் செல்லலாம்.

வாழ்ந்துகொண்டிருக்கின்ற உயிரினத்தின் அடிப்படை இயல்புகளில் மிக முக்கியமானதொன்று ஒருமைப்பாடாகும். படிமரபு முறையும் அமைப்பு உறுப்புகளின் செயல் சம்பந்தப்பட்ட இணைச் சார்பும் ஒவ்வோர் உயிரினத்திற்கும் அடிப்படையாக உள்ளன. ஒருமைப்பாடு என்பது, எஃது ஓர் உறுப்பைப் பாதிக்கின்றதோ அது மற்றோர் உறுப்பையும் பாதிக்கின்றது என்ற கருத்தையுடையது. ஒருமைப்பாடு என்ற கருத்துச் சொல்லை நரம்புப் பிணி மருத்துவர்கள் பெரிதும் உபயோகிக்கின்றனர்கள். அவர்களுடைய

முக்கிய செய்திப்பொருள் நரம்பு மண்டலத்தை நன்கு அறிவதாகும். உயிரினத்தின் ஒருமைப்பாட்டு அமைப்பை ஏற்படுத்துவது நரம்பு மண்டலந்தான். முழு நரம்பு மண்டலமும் ஒரு கடுமையான படிமரபு முறைப்படி அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால், நரம்புப் பிணியியலில் இந்தப் படிமரபு முறை ஓரளவு தகர்ந்து போய்விட்டதாக நாம் காண்கின்றோம். உயிரினத்தின் கிளை மண்டலங்கள் தன்னாட்சி பெறும் நிலைமைதான் ஒருமைப்பாடு சிதறுதல் என்பதாகும். இந்த நிலை நோய்க் கூறு ஏற்படும்பொழுது நிகழுகின்றது.

உளப்பிணியியலில் ஒருமைப்பாடு என்கின்ற இந்தக் கருத்து இணையாகவே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. ஆளுமையின் அமைப்பு பல்வேறு கிளை ஒழுங்கமைப்புகளால் ஒரு முழுமையானதாக இணைக்கப்பட்டதேயாகும் என்று பெரும்பாலான உளவியல் வல்லுநர்கள் கருதுகின்றார்கள். இந்தக் கிளை ஒழுங்கமைப்புகளெல்லாம் 'தான்' என்ற தன்முனைப்பின் (Ego) ஒருமைப்பாட்டு நடவடிக்கையினால் கட்டுப்படுத்தப்படுகின்றன. மன இறுக்கநிலை ஏற்படுகின்றபோது இந்தப் படிமரபு முறையின் அமைப்பு உண்டாக்கப்படுகின்றது. கிளை ஒழுங்கமைப்புகள் மைய அதிகாரக்குழுவிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளுகின்றன. இந்த நிலையடையும்பொழுது ஆளுமை பல கூறுகளாகச் சிதறுண்டு போகின்றது. உச்சக்கட்டம் விளையுமானால், பன்முக ஆளுமைகள் உருவாக வழி பிறக்கும். ஆளுமையின் பல கோட்பாடுகளில் ஒன்று என்று கருதப்படுவது குர்ட் கோல்டுஸ்டைன் (Kurt Goldstein) என்பவருடைது.

அவர் தம்முடைய ஆளுமைக்கோட்பாட்டை மனநோய் இயலிலிருந்து உருவாக்கினார். அஃது, ஒருமைப்பாடு தோல்வியுறும் செயல்முறை என்ன விளைவை உண்டாக்குகின்றது என்பதை நன்கு விளக்குகின்றது. மொத்த உயிரினத்தையும் (organism) கோல்டுஸ்டையின் ஓர் உருவமாகக் காண்கின்றார். அந்த உருவம் ஓர் அமைப்பையும் ஒரு முடிவு நிலையையும் தனக்கெனக் கொண்டிருக்கின்றது. மனநோய் இயல் என்றால் இந்த முடிநிலையும் அமைப்பு நிலையும் உயிரினத்தில் இல்லாமல் போதல் அல்லது அவற்றின் நெறி தவறுதல் என்று பொருள்படுகின்றது. எனவே, செயல் இழந்து கோளாறுள்ள நடத்தைக்கு உயிரினம் நடத்திச் செல்லப்படுகின்றது.

நோயுற்ற உயிரினம் தனக்கென்று ஒரு வடிவத்தை அல்லது அமைப்பைப் புதியதாக எய்தப்பெறுவதற்கு முயலுகின்றது.

ஆனால் நோய், ஒரு மறு ஒருமைப்பாடு ஏற்படும் முயற்சியை எப்பொழுதும் தடுத்துக்கொண்டிருக்கின்றது. சிறிய அளவிலோ குறைந்த நிறைவுடனோ அச் செயல் நடைபெறலாம்; ஆனால், எவ்வளவு முயன்றாலும் முற்றும் நடைபெறுவதில்லை. சிறு அளவில் என்பது அறைகுறையான மீட்சியாகக் கொள்ளலாம். இதுவும் குறிப்பாகப் பாதுகாக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கும் வலுக்குறைந்த நடவடிக்கைகளுக்குமிடையில் அமைந்துள்ள ஒரு தொடர்புறவின்மீது சுழன்றுகொண்டிருக்கின்றது. இந்தப் புதிய தொடர்புறவு ஒரு புதிய தனிமனிதனை வரையளவாகக்கொண்ட வழியில் இயங்குகின்றது. மூலமனிதனின் ஆளுமை முழுவதும் இதில் உள்ளடங்கியிருக்கின்றது என்று சொல்ல முடியாது.

உளநோய் நிவர்த்தி நோக்கில் நோய் இயலும் நல இயலும்

உளநோய் நிவர்த்தி இயல் உளநோய்களை அணுகும் முறை மற்ற முறைகளிடமிருந்து சிறிது மாறுபட்டிருக்கின்றது. இயல் பிறழ்ந்தமைக்கு நேரடியாகத் தோன்றுகின்ற ஒரு கட்டளை விதியை உளநோய் நிவர்த்தியியல் தர முயலுகின்றது. அறிகுறிகள் தோன்றும் நிலையை நோய் நிலை என்றும், அறிகுறிகள் தோன்றாத நிலையை நல்ல நிலை என்றும் இந்தத் துறை வரையறை செய்கின்றது. அறிகுறிகள் செயல் சீர்கேட்டின் வெளிப்பாடுகளாகும். விளைவுகளுக்கு ஆளான மனிதன் வருத்தம் தெரிவிக்கும்படியான நிலையடைகின்றான். உதாரணமாக, உடல் சீர்கேடுகளான வலி, காய்ச்சல், செறிமானமின்மை முதலியவற்றால் தாக்குண்ட மனிதன் தன் நிலையைப்பற்றிக் கூறுகின்றான். அறிகுறி எதுவும் தோன்றாமலிருக்கின்ற வரையில் ஒரு மனிதன் நலமுடன்தானிருக்கின்றான். மருத்துவர்களும் இக் கருத்தைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால், எந்த வகையான அறிகுறிகளும் வெளிப்படாத நிலையிலும் ஒரு மனிதன் நோயுற்றிருக்கலாம். உதாரணமாக, வயிற்றுப் புற்றுநோய் இந்தக் குணத்தைக் கொண்டிருக்கின்றது. எனவே, நோய் நிவர்த்தியியல் கூறுகின்ற வரையறையை எடுத்துக்கொண்டு எல்லா நோய்களுக்கும் பயன்படுத்த முடியாது.

நோய் நிவர்த்தியியல் கூறுகின்ற அறிகுறிகளின் தோற்ற முறையும், இன்மை முறையும் உடல் சார்பான மருத்துவத்திற்குப் பொருந்தக் கூடியவையாக இருக்கலாம். ஆனால், அது பிறழ்வு உளவியலில் பயன்படுத்தப்படும்பொழுது மிகவும் சிக்கலான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. அறிகுறி என்றால், நோய்க்கூறு சுட்டப்படல் என்பதாகும். இக் கருத்தைச் சற்று விளக்குவோமானால், ஒரு நிகழ்ச்சி அல்லது தோற்றம், நோய்க்

கூறு உளதாம் தன்மையுடன் பரிசோதனைக்குரிய முறையில் இணைப்புத் தொடர்பாடு கொண்டிருக்கின்றது என்பதாகும். ஒரு மனிதன் தொடர்ந்து ஏற்படுகின்ற கொடிய கனவுகளினால் வருந்துவானானால், உடனே நாம் நினைப்பது என்னவென்றால், அவன் மனவெழுச்சிக் கோளாறுபற்றிக் குறிப்பிடத்தக்க அறிகுறியை வெளிப்படுத்துகின்றான் என்பதாகும். அது போன்று, பொய்த் தோற்றங்களை ஒருவன் உண்மைப் புலன்காட்சிகள் என்று கூறுவானானால், அவன் மனக்கோளாறுகளுக்கு ஆட்பட்டிருக்கின்றான் என்று தெரிகின்றது. இயல்பு நிலையிலுள்ள மனிதர்களுக்கும் பொய்த் தோற்றங்கள் ஏற்படுவதுண்டு. ஆனால், அவர்கள் அவை பொய் என்று பிறகு தெரிந்துகொள்ளுகின்றார்கள்.

மேலும், ஒரு மனிதன் உளவியல் அறிகுறிகளிலிருந்து விலகியிருக்கலாம். இயல்புக்குப் புறம்பான கவலை, குற்ற மனப்பாங்கு, வருத்தம், பகுத்தறிவுக்கு ஒவ்வாத எண்ணங்கள் ஆகியவை அவனிடம் இல்லாமலிருக்கலாம். என்றாலும் நோய்வாய்ப்பட்டிருப்பதாக உறுதியாகக் கூறலாம். பிறழ்வு உளவியல் அறிகுறிகளில்லாத நரம்புப் பிணிகளைப்பற்றியும் கூறுகின்றது. அப்படிப்பட்ட நோய்களில் ஒரு முழுக் குணவியல்பின் அமைப்பும் அல்லது வாழ்க்கைப்பாணியும் சீர்குலைந்திருக்கின்றது. எனவே, புள்ளி விவரவியல், முறையியல் ஆகியவற்றின் நோக்கில் காணப்படும் குறைபாடுகளைப் போலவே உளநேர்ய் நிவர்த்தியியல் முறையில் உளப்பிணியை அணுகும்போதும் அதே குறைபாடுகளைக் காண முடியும். ஒவ்வொரு நோக்கும் நிறைகளைக் கொண்டிருப்பது போலவே சில குறைகளையும் கொண்டிருக்கின்றன.

உளப்பாகுபாட்டு நோக்கில் நோய் இயல்

உளப்பிணியால் பீடிக்கப்பட்டிருந்தவர்களைப் பிரித்துக் காட்டுவது சிக்மண் ஃபிராய்டின் (Sigmund Freud) காலத்திற்கு முன்பு மிக எளிதாக இருந்து வந்தது. உளவியல் நிலையிலிருந்து மிகுந்த அளவுக்கு விலகிச் சென்று விடுகின்ற நிலையைத்தான் நோய் நிலை என்று நம்பி வந்தனர். இந்த நம்பிக்கையைக் குலைத்த தனிமனிதர் ஃபிராய்டு ஒருவரைத் தவிர வேறு யாராகவுமிருக்க முடியாது. இயல்பு நிலைக்கும் இயல் பிறழ்ந்த நிலைக்கும் இடையில் போடப்பட்டிருந்த வலிமையான எல்லைக்கோட்டை ஃபிராய்டு உடைத்தெறிந்தார்.

சாதாரண நிலையிலுள்ள மனிதர்களுடைய அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளே அறிகுறிகள் நிரம்பியவையாகவும், கனவுகள்

நிரம்பியவையாகவும், மனநோய்க் கூற்றைச் சுட்டிக் காட்டுவன வாகவும் இருந்து வருகின்றன. அவையெல்லாம் நரம்புப் பிணி யின் அறிகுறிகளைப் போலவே இருக்கின்றன. மேலும், ஃபிராய்டு இயல்பு நிலையிலுள்ள மனப்பிணி வாழ்க்கைக்கும் இயல்பிறழ்ந்த நிலையிலுள்ள மனப்பிணி வாழ்க்கைக்கும் இடையில் எவ்வாறு தொடர்ச்சி இருக்கின்றது என்பதையும் எடுத்துக் காட்டினர்; குறிப்பாக இயல்பு நிலையிலுள்ள மனிதர்களின் கனவுகளும் நரம்புப் பிணியாளர்களின் கனவுகளும் ஒன்றுபோலவே இருப் பதை விளக்கிக் காட்டினர். எனவே, அது சமயம் வழக்கத்தி லிருந்து வந்த வரையறைகளை ஃபிராய்டும் அவருடைய கூட்டாளி களும் ஏற்றுக் கொள்ளாது, உளப் பாகுபாட்டு நிலையிலிருந்து தங்கள் வரையறைகளைக் கொடுத்தார்கள். ஆனாலும், சில காலத் திற்குப் பிறகு ஃபிராய்டும் அவருடைய கூட்டாளிகளும் இயல்பு நிலைக்கும் இயல்பிறழ்ந்த நிலைக்கும் மறுவிளக்கம் தந்தார்கள். அதைச் சிறிது விளக்கமாக நோக்குவோம்.

ஊக்கமூட்டியின் தெளி உணர்வு : உளப் பாகுபாட்டுக் கிளை யினரில் குபி (Kubie) என்பவர் கருத்து என்னவெனில் ஊக்க மூட்டியின் தெளி உணர்வுதான் உள நலத்தின் உரைகல் என்ப தாகும். ஏனென்றால், உளப்பாகுபாடு தெளி உணர்வைப் பகுத் தறிவோடு இணையாக்கிக் காட்டுகின்றது. தெளி உணர்வு எவ்வளவு அதிகமாக இருக்கின்றதோ அவ்வளவுக்குப் பகுத்தறிவு இயக்கம் இருக்கின்றது; அவ்வளவுக்கு நல்ல நலமும் உண்டு. ஆனால், எவ்வளவுக்கு எவ்வளவு புதையுணர்வு இருக்கின்றதோ அவ்வளவுக்கு மிகுந்த மயக்க நிலை நிலவுகின்றது; தெளிந்த அறிவில்லை; அதிகமான நோய்க்கூறு இருக்கின்றது. ஒருவரு டைய நடத்தைப் புதையுணர்வு நிலையால் தூண்டப்பட்டது என்று நாம் கூறுவது எந்தப் பண்புக் கூற்றைக் குறிக்கின்றது? அது வளையாதது, ஒரு படியாக வார்க்கப்பட்டது, திருப்பிச் செய்யப்படுவது, மன நிறைவடையாதது ஆகியவையாக இருக் கின்றன. புதை உணர்வு நோக்கத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட செயல் வடிவங்கள் தெளி உணர்வு அனுபவங்களினால் மாற்றி யமைக்கப்படுபவையல்ல; எளிதாக மாற்றியமைக்கத் தகுந்தவாறு இல்லாத இயல்பான நடத்தை அனுபவத்தினாலும் கற்றலினாலும் மாற்றியமைக்கப்படுகின்றன.

மேல் எழுந்த வாரியாக இயல்பான நடத்தை என்றும், நரம்புப்பிணி என்றும் கூறப்படுவது, ஊக்கமூட்டியின் சக்திகள் காட்டுகின்ற அடையாளத்தைப் பொறுத்திருக்கின்றது. இதை விளக்கும்பொருட்டுச் சாப்பிடுகின்ற இரண்டு குழந்தைகளைக் குபி

உதாரணமாகக் காட்டுகின்றார். உடல் நலத்துடனிருக்கின்ற குழந்தை தன்னுடைய பசி தணியும் வரையில் சாப்பிட்டுவிட்டு, பிறகு வேறு எதையாவது செய்கின்றான். ஆனால், ஒரு நரம்புப் பிணியுள்ள குழந்தை வாந்தி வருகின்ற வரையில் உணவு கொள்ளுகின்றான்; வாந்தி எடுத்தவுடன் மறுபடியும் தொடங்குகின்றான். நோயாளியின் நிலையிலிருந்து இதைக் காணும்பொழுது, சுதந்தரமாக இருக்க முடியாத உணர்ச்சியின் பண்புக்கூறு, இது என்று தெரிகின்றது. அதிகமான வலிமையைத் தருவதற்கு உணர்ச்சி பலவந்தப்படுத்தப்பட்டிருக்கின்றது. நிறைவு பெற முடியாத உள் துடிப்பு உணரப்பட்டிருக்கின்றது. இவை புதையுணர்வு நிலையில் ஊக்கமூட்டப்பட்ட நடத்தையின் குணவியல்பாகும்.

உளப்பாகுபாட்டில் இந்த இடத்தில்தான் 'தடையில்லா' என்ற பண்புக்கூறு கொண்டுவரப்படுகின்றது; 'கட்டுப்பாடு இல்லா' என்றும் கூறலாம். தடையில்லாமலிருப்பது, உளப் பாகுபாட்டினருக்கு உள்சார்பான கட்டாய உணர்ச்சியிலிருந்தும் கவலையிலிருந்தும் விலகியிருப்பது என்பது பொருளாகும். அதாவது, அகவயமாகவே ஒருவர் பல வழிகளில் ஒன்றை வேண்டுமென்றே விரும்பி எடுத்துக்கொள்ளுகின்ற தம்முடைய உணர்ச்சியை உணருகின்றார். இந்த விருப்பத் தேர்வு ஆளுமையின் தெளி உணர்வுப் பகுதியால் செய்யப்படுகின்றது. அல்லது தெளிஉணர்வால் வடிகட்டப்படுகின்றது. இந்தச் சுதந்தரமான உணர்ச்சியை ஃபிராய்டு ஓர் உளவியல் உண்மை என்று ஏற்றுக்கொண்டிருக்கின்றார். எனவே, ஊக்கமூட்டியின் புதை உணர்வு ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் நோய்க்கூற்றியலின் கட்டளை விதியாக இருக்கின்றது. ஆனால், இது தவறான ஒரு விளக்கத்திற்கும் இடம் தருகின்றது.

உளப்பாகுபாட்டினரின் இக் கருத்துக்கு ஆதரவு இருந்தாலும் சிலர் அவ்வளவாக இதை வரவேற்கவில்லை. புதை உணர்நிலையின் ஆக்கச் சார்பான உள்ளார்ந்த ஆற்றலைக் குறைவாக மதிப்பிடுகின்றனர் என்றும், தெளி உணர்வு நிலையையும் பகுத்தறிவுத் தன்மையையும் அளவுக்கு மீறி அதிகமாக மதிப்பிடுகின்றனர் என்றும் கூறுகின்றனர். ஃபிராய்டின் இந்த விளக்கம் ஒரு சார்புடையதாக இருக்கின்றது என்றும் சூங் (C.G. Jung) போன்றவர்கள் கருதுகின்றார்கள். கலையாற்றலை உயிர்ப்பூட்டலிலும், சமயச்சார்பான பெருமகிழ்ச்சியிலும் தெளி உணர்வுநிலை அமிழ்ந்து போய்விடுகின்றது என்றும், அந்த நேரத்தில் புதை உணர்வுநிலை தன்னுடைய செழிப்பான விளைபொருளைக் கொண்டு அந்த இடத்தை நிறைவு செய்கின்றது என்றும், இந்த நிலையை

நோய்க்கூறு நிலை என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும் என்று ஒரு சாரார் கேட்கின்றனர்.

உளவழிப் பால்நிலைப் பருவ நிறைவு: உளப்பாகுபாட்டுக் கிளையைத் தோற்றுவித்த ஃபிராய்டு நிலைநாட்டிய பல கொள்கை களில் முக்கியமானது உளவழிப் பால்நிலையின் வளர்ச்சி, இளமைக் காலத்திலேயே ஏற்படுகின்றது என்பதையும், அதன் கால அட்டவணையையும் உத்தேசமாக நிர்ணயித்ததாகும். இந்தக் கொள்கையின் மதிப்பு, உளநோய்க்கூறு இயலுக்கான மனிதனின் வளர்ச்சிக்குரிய உருவ அளவின் முக்கியத்துவத்தை வெளிப் படுத்துவதிலிருக்கின்றது என்று நம்புகின்றனர். பிறப்பு மரபியல் நோக்கிலிருந்தும் இத் திட்டம் ஆராயப்பட்டது. அதன்படி மனிதன் ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்ட மாபெரும் முட்டுக் கட்டையைக் கடந்தாக வேண்டும். இதில் உள்ள குறிப்பிடத்தக்க முக்கியச் செய்தி பழக்கமில்லாததும், மிகவும் முதிர்ந்ததுமான செயல் வழக்கங்களை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அதன் பொருட்டுப் பழக்கப்பட்டதும் மகிழ்ச்சி தருவதுமான செயல் வழக்கங்களைத் துறக்க வேண்டும். இந்தப் புதிய கட்ட நிலை மாறுபாடு எளிதாக அடிக்கடி செய்யக் கூடியதன்று. ஏனென்றால், அதன் வாயிற்படியில் வேலையின் பேய் உருவம் பதுங்கிக் கொண் டிருக்கின்றது. ஒரு மனிதன் தாங்கிக்கொள்ளக்கூடியதைவிட அதிகமாக அந்தக் கவலை இருக்குமானால், அதை எதிர்த்து நிற்பதற்கு மனிதன் மறுத்துவிடுகின்றான்; கடந்த காலத்தில் தனக்கு வகுக்கப்பட்டுள்ள பாதுகாப்பான வாழ்க்கையிலேயே தங்கிவிடுகின்றான். இதற்காக அவன் தருகின்ற விலை உள நலத்தையும் உடல் நலத்தையும் இழப்பதாகும்.

பிறப்பு மரபியல் நோக்கை ஒருவர் உபயோகிப்பாரானால், வளர்ச்சியின் குறிக்கோள் திட்டத்திற்கெதிராக ஆளுமையின் முதிர்ச்சி அளக்கப்படுகின்றது. இந்த அளவீட்டில் பிற்போக்கு நிலை ஏதேனும் காணப்படுமானால், சம்பந்தப்பட்ட மனிதன் நோயுற்றிருக்கின்றான் என்று தீர்மானிக்கப்படுகின்றான். பிற் போக்கு காணப்படுமானால், அந்த உயிரினம் ஏதேனும் ஒரு வளர்ச்சிக் கட்டத்தில் தடைப்பட்டு விட்டது என்று பொருள் கொள்ளலாம். அந்த உயிரினம் தன்னுடைய முந்திய கட்டத்தி லேயே விழுந்துவிட்டது. அதனுடைய இடங்களை அஃது இழந்து விட்டது. எனவே, பின்னோக்கிப் பார்த்தல் நிலை ஏற்படுகின்றது. மனிதன் தன்னுடைய வளர்ச்சிக்கட்டத்தில் எதிர்நோக்குகின்ற தீர்மானமான வாழ்க்கைக் கடமைகளை உளப்பாகுபாட்டினர் உள உயிரியல் வளர்ச்சியாகவே எதிர்நோக்குகின்றனர். அதில்

புலனைத் தூண்டும் சக்தி பல்வேறு உடல் பகுதிகளான வாய், குதம், பிறப்புறுப்புகள் ஆகியவற்றைப் படிப்படியாக முதலீடு செய்கின்றது; மேலும், அவற்றைப் பால்கவர்ச்சியின் மைய இடங்களாகச் செய்கின்றது. அவை இன்பத்தின் தேவைகளை உண்டுபண்ணிக் கொடுக்கும் முக்கிய உறுப்புகளாக அமைகின்றன. இந்த வகையான மாற்றங்கள் வாழ்க்கையின் முதல் ஆண்டிலேயே ஏற்படுகின்றன. ஆனால், அவை புதை உணர்வு நிலையால் மறைக்கப்படுகின்றன. என்றாலும், அஃது இவற்றை முக்கியமானதாக ஆக்குகின்றது. குழவிப் பருவத்திலுள்ள ஒருவன் வாயின் கட்டத்திலேயே நிறுத்திக்கொள்ள விரும்புவதில்லை; அல்லது குதம் நிலைக்குச் செல்ல விரும்புவதுமில்லை. ஆனாலும், இந்தப் புதை உணர்வு நிலையிலுள்ள தீர்மானங்கள் அவனுடைய மற்ற முழு வாழ்க்கையின் செல்வழியையும் நிர்ணயிக்கின்றன. எனவே, குழந்தைப் பருவத்துப் பால்கவர்ச்சிப் புதை உணர்வு நிலையிலிருந்துகொண்டு ஒருவனுடைய வருங்காலத்து எல்லா வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் திட்டங்களையும் நிர்ணயம் செய்யும் மையப் பொருளாக இருந்துவருகின்றது.

உளப்பிணியின் சமூகப் பண்பாட்டுக் காரணங்கள்

உளப்பிணியியல் பல்வேறு நோக்கங்களிலிருந்து ஆராயப் பட்டது. ஆனால், உளப்பிணிக்கு ஆளாகின்ற மனிதன் ஒரு சமூகப் பிராணியாவான். ஒரு சமூகத்தில்தான் அவன் தன் தேவைகளை நிறைவு செய்துகொள்ள முடியும்; வெற்றிகளை எய்த முடியும்; பால் விருப்பங்களை நிறைவு செய்துகொள்ள முடியும். எனவே, சமூகத்தையும் பண்பாட்டையும் புறக்கணித்துவிட்டு உளப்பிணியியலை நாம் புரிந்துகொள்ள முயலுவது நிறைவுபெறும் முயற்சியாக இருக்காது. பரந்த அளவில் பார்க்கும்பொழுது சமூகந்தான் உளப்பிணியைச் சரியாக வரையறை செய்ய முடியும்.

ஆனால், சமூகம் சில சீர்கேடான நிலைகளைப் பிணி என்று ஏற்றுக்கொள்ள மறுக்கலாம். ஒரு மனிதன் இறந்து போகின்ற நிலையிலுங்கூட அவன் அடைந்துள்ள சீர்கேடான நிலை நோய் நிலைதான் என்று சமூகம் ஏற்றுக்கொள்ளுவதற்குத் தயங்கலாம். இப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்படுமானால், நாம் ஆராயும் நோய்க் கூறு இயலில் சமூகத் தொடர்புடைய அறிவியல்களான சமூக உளவியல், சமூக இயல், பண்பாடு, மனித இன இயல் ஆகியவை உரிய இடத்தைப் பெற்றாக வேண்டும். இவ்வாறு நாம் ஆராயும் எல்லையை விரிவுபடுத்துவதன்மூலம் நம்முடைய அனுபவத்தின் எல்லை விரிவடைவதோடன்றி உளப்பிணி நிவர்த்தித்துறை

குறுகிய மனப்பான்மை கொண்டிருக்கின்றது என்ற குற்றச் சாட்டிலிருந்தும் விடுதலை பெற முடியும்.

பண்பாட்டை உளப்பிணிகளுடன் இணைத்து ஆராயும் பொழுது கவனிக்கவேண்டிய முக்கிய செய்தி, இயல்புநிலையிலுள்ள மனிதன் ஒரு பண்பாட்டுடன் கொண்டுள்ள தொடர்புடைமை என்ன என்பதாகும். சமூக உளவியலார் மாதிரி ஆளுமையைப்பற்றி அல்லது தேசிய ஒழுக்கத்தைப்பற்றி மிகவும் வலியுறுத்துகின்றனர். இந்த ஆளுமை அல்லது ஒழுக்கம் சமூகப் பண்பாட்டு அமைப்பில் கொண்டுள்ள தொடர்புறவுகளையும் அவர்கள் முக்கியமாகக் கருதுகின்றார்கள். சில மாதிரி ஆளுமையின் வெளித் தோற்றங் களைப் பல்வேறு பண்பாடுகளில் நாம் எதிர்நோக்கும்பொழுது, ஒருவர் பாகுபாட்டின் பரந்த அலகுகளை உபயோகித்துப் பார்ப்பா ராஞல், அவை ஒன்றுக்கொன்று குறைவதாக இருக்கலாம். இயல்பு நிலைகளின் வரையளவுகள் சமூக ஒழுங்கு முறைகளுக்கிடையே வேறுபட்டுக் காணப்படலாம். ஒரு பண்பாட்டில் காணப்பட்ட வரையளவுள்ள ஆளுமைக் கூறு மற்றொரு பண்பாட்டில் குறை வாகவோ அதிகமாகவோ காணப்படலாம்.

சமூக இயலாரும் மனித இன இயலாரும் வெளிப்படுத்திய இந்த உண்மைகள் நம்மைப் பண்பாட்டுக்குரிய தொடர்புறவின் பிடியில் சிக்க வைக்கின்றன. பண்பாட்டுக்குரிய தொடர்புறவு நல்வாழ்வின் எல்லாக் கூறுகளையும் உள்ளடக்கிக் கொண்டுள்ள கட்டளை விதிகளை மறுக்கின்றது. எல்லாப் பண்புகளையும் உள்ளடக்கி ஏற்படுத்தப்பட்ட கட்டளை விதிகள் (creteria) இருக்க முடியாது. நாம் அதை நிலைநிறுத்துவதற்கு அல்லது உண்டாக்கு வதற்கு முயலுவோமானால், இயல்புநிலையின் ஒரு புதிய மாற்று பண்பாட்டு வரையளவை அனைவரும் ஒப்புக்கொள்ளச் செய்ய வேண்டும். அந்த வரையளவை ஒருவனுடையவை திறமையை அடிப் படையாகக் கொண்டுதான் உருவாக்க முடியும். அதாவது, ஒருவன் ஒரு பண்பாட்டிலிருந்து மற்றொரு பண்பாட்டிற்கு வெற்றிகரமாக இடமாற்றுச் செய்துகொள்ளும் திறமையைப் பெற்றிருந்து, அந்தப் புதிய பண்பாட்டில் தனித்து வாழக்கூடிய பொருத்தப்பாட்டைச் செய்துகொள்ள வேண்டும்; எந்த ஒரு புதிய சமூக மதிப்பீடுகளைக் காணும்போதும் தான் அதற்குப் புறம்பானவன் என்ற உணர்ச்சி எழுவதற்கான சந்தர்ப்பம் தராமல் தன்னோடு இணைத்துக்கொள்ள வேண்டும்.

பண்பாட்டு இன இயலாரும் உயிரியலைவிடப் பண்பாடுதான் இயல்புநிலையில் ஒரு வரையளவை நிலைநாட்ட முடியும் என்ற

உண்மையை ஒப்புக்கொள்ளுகின்றனர். பண்பாடு ஒரு தீர்மானிக்கும் சக்தியாக இருந்து ஓர் உயிரினத்தின் பல்வேறு உள்ளார்ந்த திறமைகளை வளர்க்க முற்படுகின்றது. சூழ்நிலையால் தானே வளரக்கூடிய பண்படாத மனித இயல்பில் நம்பிக்கை வைக்கவில்லை. ஆனால், ஒரு பண்பாட்டில் செய்யப்பட்டுள்ள இயல்பு நிலை பற்றிய வரையளவு ஐயப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதன்று. புதை உணர்வு, நிலையாக அந்த வரையளவு நரம்புப் பிணியாளரிடமிருந்தும், உளப்பிணியாளரிடமிருந்துங்கூட மலர்ச்சியுற்றிருக்கலாம். ஏனென்றால், சில சமயங்களில் உளப்பிணியாளர்களிடையேயும் இயல்பு நிலை தோன்றுகின்றது. எடுக்கின்ற தேர்வாராய்ச்சியில் அவர்களில் சிலரும் சேர்க்கப்பட்டிருக்க முடியும். எனவே, எல்லாப் பண்பாடுகளுக்குமாகச் சேர்த்து இயல்புநிலை வரையளவை அமைப்பது கடினமேயாகும்.

எனவே, மனித இன இயல் கொண்டாடும் உரிமை அனுமதிக்கப்படுமானால், பண்பாட்டுக்கூறுகள் உளப்பிணியியலின் வடிவம், விளக்கம், வரையறை பெரிதும் பாதிக்கப்படலாம். நம்முடைய தேர்வாராய்ச்சிகளை இன்னும் ஒருபடி முன் செலுத்தி, ஒரு பண்பாட்டின் கிளைப்பண்பாடுகளையும் நாம் ஆராய வேண்டும். ஆகவே, சமூக நிலைமைக்கும் உளப்பிணியியலின் பல்வேறு வடிவங்களுக்குமிடையில் உள்ள உடன்பாடான இணைப்புத் தொடர்பாடு என்ன என்பதுபற்றித்தான் நாம் குறிப்பாகக் கவனம் செலுத்த வேண்டும். மேலும், மனவெழுச்சி நோய்கள் சமூக ஒழுங்கு முறைக்குள் காணப்படும் நலிவுகள், இறுக்கங்கள் ஆகியவற்றின் அறிகுறிகளாக வெளிப்படுகின்றன என்று சமூகவியலார் கருதுகின்றனர்.

சமூக மதிப்பு நிலையும் மனக்கோளாறுகளும்

எந்த ஒரு பண்பாட்டிலும் அல்லது சமூகத்திலும் வாழ்ந்து வரும் மக்கள் தங்களுக்கென்று ஒரு சமூக நிலையையுடையவர்களாக இருக்கின்றார்கள். இந்தச் சமூக மதிப்பு நிலை (social status) அந்த மக்களின் மனக்கோளாறுகளுக்குக் காரணமாக இருக்கின்றது என்பது பல ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்ற கருத்தாகும். குறிப்பாக, மனக்கோளாறுகளில் உளப்பிணியை எடுத்துக்கொள்ளுவோமானால், சமூக மதிப்பு நிலைக்கும் உளப்பிணிகளுக்கும் தலைகீழான தொடர்புறவுகள்தான் இருக்கின்றன என்று பல தேர்வாராய்ச்சியாளர்கள் கருதுகின்றார்கள். உளப்பிணிகளின் விகிதம் உயரும்போது ஒருவருடைய சமூக மதிப்பு நிலையின் அளவுகோல் கீழிறங்குகின்றது. உளப்பிணிகளில் கிளர்ச்சி–சோர்வு மனப்பிணிகள் உயர்ந்த சமூக நிலையினரிடையிலும், சிஸ்சபிரேனியாவின் (உணர்ச்சி விண்ட நிலை) அறிகுறிகள் தாழ்ந்த சமூக நிலை

யினரிடையிலும் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. மன வெழுச்சிக் கோளாறுகளின் மென்மையான வடிவங்கள், நரம்புப் பிணிகள் ஆகியவற்றின் நிகழ்ச்சிகள் மேல் நடுநிலைச் சமூக வகுப் பினிடையே மிகவும் உயர்ந்து காணப்படுகின்றன. உளவழி உடல் சார்பான நிலைமைகள் தாழ்ந்த நடுநிலை சமூக வகுப்பாரிடையில் அதிகமாகக் காணப்படுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள் மிகுந்த அளவுக்கு அடக்கு முறை யுள்ள கிளைப் பண்பாட்டுடன் தங்களைப் பொருத்திக்கொண்டிருக் கின்றார்கள். அதனால் அவர்கள் தங்களுடைய கோபத்தை யும் புரட்சியையும் நேரடியாக வெளிப்படுத்த முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அதனால் அவர்கள் தெளிவில்லாத உடல் அறிகுறிகளைக் கட்டாயமாக வெளிப்படுத்த வேண்டியவர் களாக இருக்கின்றார்கள். இந்த அறிகுறிகள் மனக்கோளாறுகளின் விளைவேயாகும். மேலும், பண்பாட்டுக்குரிய மரபு வழியின் பளுவால் மேல் சமூக வகுப்பைச் சார்ந்த குடும்பங்கள் கிளர்ச்சி-சோர்வு மனப்பிணிகளுக்கு ஆளாகின்றன. ஏனென்றால், பண் பாட்டின் மரபு மனச்சான்றை அவர்களிடையே உருவாக்க முயலு கின்றது. அஃது அவர்களைத் தவிர்க்க முடியாத குற்ற உணர்ச்சி களுக்கும், சோர்வு உணர்ச்சிகளுக்கும் நடத்திச் செல்லுகின்றது.

2. இயல் பிறழ்ந்தமையின் இரண்டு வகையான விளக்கங்கள்

உளப் பிறழ்வுகளைப்பற்றி இரண்டு வகையான விளக்கங்கள் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. உளப் பிறழ்வுகளைப்பற்றி நமக்குத் தெளிவான அறிவு விளக்கம் தேவையென்றால், இந்த இரண்டு விளக்கங்களைப்பற்றியும் நாம் ஆராய்ந்தாக வேண்டும். இந்த விளக்கங்களில் காணப்படும் குறிப்புகளை விளக்கும் வகையில் ஓர் உதாரணம் கொடுக்கலாம். இரண்டு மனிதர்களை நோக்கி ஒவ்வொருவரிடமும் 'உன்னுடைய கையை உயர்த்து' என்று கூறுகின்றோம் என்று வைத்துக்கொள்ளுவோம். இந்த வேண்டுகோளுக்கு ஒருவரும் செவி சாய்க்கவில்லை என்று வைத்துக் கொள்ளுவோம். நம்முடைய வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க அவர்கள் தவறியதன் காரணங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். இருவரையும் ஆராய்ந்து பார்த்ததில், ஒருவர் முழுச் செவிடர் என்று தெரிகின்றது. சில ஆண்டுகளுக்கு முன்பு அவரை ஒரு தொற்று நோய் பற்றியது. அஃது அவருடைய உள் செவியைத் தாக்கி அதனுடைய செயல்முறையை முற்றிலும் பழுதடையச் செய்துவிட்டது. மற்றொருவர் செவிடரல்லர். வேறு எந்த வகையான உடல் சார்பான பழுதும் அவரிடம் காணப்பட வில்லை. ஆனால், அவர் வடநாட்டுக்காரர். தமிழை அவர் கற்றுக் கொள்ளவில்லை. அதனால் தமிழில் விடுத்த கோரிக்கையைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்த இருவரும் நாம் விடுத்த கோரிக்கைக்குச் செயல்பட வில்லை. ஒருவரின் நடத்தை அவருடைய உறுப்பு அமைப்பில் உள்ள கோளாறு காரணமாகப் பாதிக்கப்பட்டது. அல்லது இயல்பான அமைப்பில் ஏற்பட்டுள்ள செயல்முறைக் குறைபாடு காரணமாக அவர் செயல்படவில்லை. அல்லது அவர் சாதகமாக

நடந்துகொள்ளவில்லை. பெரும்பாலும் செயல்முறை சார்ந்த மாறுபாடுகள் எல்லாம் ஒருவர் என்ன கற்றுள்ளார், என்ன கற்றுக் கொள்ளவில்லை என்பவையால் ஏற்படுகின்றன.

இரண்டு வகை விளக்கங்களாவன: முதலாவது, நரம்புடல் சார்பான விளக்கம் (Neurophysiological Interpretation); இரண்டாவது உளச்சார்பான விளக்கம் (Psychological Interpretation).

நரம்புடல் சார்பான விளக்கம் : நரம்பியலும் உடலியலும் தனிமனிதனை ஒரு சிக்கலான இயந்திரமாகக் கொள்ளுகின்றன. முழு நிறைவான முறையில் இந்த இயந்திரம் செயல்படத் தவறும் பொழுது அதற்கு நாம் தருகின்ற விளக்கம் என்னவென்றால், ஏதோ ஓர் உறுப்பு ஒழுங்குமுறையிலிருந்து சென்றுவிட்டதால் இயந்திரச் செயல்முறையில் பழுது ஏற்பட்டுள்ளது என்பதாகும். ஏதேனும் ஒரு நோய்க்குணத்தினாலோ எதிர்பாராத விதமாக அடிபட்டதன் காரணமாகவோ நரம்பு மண்டலத்தின் ஒரு பகுதி பழுதுபட்டிருக்கலாம். அதனால் இயக்கச் செயல்முறையில் கோளாறு ஏற்பட்டிருக்கக்கூடும். இந்த விளக்கம் நரம்பியல் வல்லுநரின் எல்லைக்கோட்டிற்குள் அடங்குவதாக இருக்கின்றது. நரம்பியல் வல்லுநரின் தனித்தன்மை என்னவென்றால், நரம்பு செல்லும் வழிகளின் அமைப்பைப்பற்றி விளக்கமான அறிவு பெறுவதாகும்.

மேலும், நரம்பு மண்டலம் சரியான முறையில் செயல்பட முடியாமல் தடுக்கப்பட்டிருக்கலாம். வெளியிலிருந்து பெறப்பட்ட சாராயச் சத்துப் பொருளின் நஞ்சினாலோ உடலினுள்ளேயே சுரக்கின்ற நச்சுப் பொருளினாலோ சரியானபடி இயக்கம் ஏற்படாமல் போகலாம். உடலியல் துறையின் ஒரு பகுதி இவ் வகையான நிலைமைகளைக் காண முயலுகின்றது.

மனக்கோளாறுகள் பற்றி விரிவான அறிவெல்லையைப் பெற முயலும் எந்த உளவியலாரும் நரம்புடல் சார்பான விளக்கத்தைப் புறக்கணித்து விடமுடியாது. இந்த விளக்கங்களில் அடங்குகின்ற காரணங்கள் உளவியல் துறையின் எல்லைக்குள் வரவில்லை என்றாலும், இவற்றின் முடிவுகள் உளவியல் சார்பானவையே என்பதில் சிறிதும் ஐயமில்லை. நரம்புடல் சார்பான கோளாறுகளின் விளைவாக ஒருவருடைய நடந்தையில் குழப்பங்கள் காணப்படலாம். உதாரணமாக, அவருக்கு நினைவாற்றலில்லாமலிருக்கலாம்; சிந்திக்க முடியாமலிருக்கலாம்; அல்லது எதையும் தீர்மானிக்க முடியாமலிருக்கலாம். அப்போது இவ் வகைக்காரணங்களில்

உளவியலார் அக்கறை காட்டி, அவற்றைப் பிறழ்வு உளவியல் ஆராய்ச்சி ஏதேனும் ஒன்றில் சேர்த்துகொண்டு விடலாம்.

உளவியல் சார்பான விளக்கம் : தனிமனிதனை உளவியல் ஒரு போட்டியிடும் உயிரியாகக் கருதுகின்றது. அவன் வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையில் அவனுடைய தேவைகளைத் தொடர்ந்து நிறைவு செய்துகொள்ளுவதற்கு அவன் முயன்றுகொண்டிருக்கின்றான். எனவே, உளவியலின் முக்கிய கருத்துச்சொற்கள் ஒரு மனிதனுடைய ஊக்கிகள், மனமுறிவுகள், முரண்பாடுகள், நல்இணக்கங்கள் முதலியவையாக இருக்கின்றன பிறழ்வு உளவியலின் அடிப்படைக் கொள்கைகள் இயல்புநிலைப் பரிசோதனை உளவியலிடமிருந்துதான் வருகின்றன. தனிமனிதர்கள் தங்களுடைய நல்லிணக்கங்களைக் கற்றுக்கொள்ளும் வழிகள் அடிப்படையில் ஒன்றாகவே தானிருக்கின்றன. பள்ளிக்கூடத்திலும் சரி, வாழ்க்கைப்பிரச்சினையிலும் சரி, சரியான விடைகளையும் தவறான விடைகளையும் கற்பதிலுங்கூட இயல்பான நடத்தையிலும் இயல்பிறழ்ந்த நடத்தையிலும் ஒரே விதமான செயல்முறைதான் காணப்படுகின்றது. ஒரு மனிதனுடைய தேவைகளுக்கும் அவன் வாழ்ந்து வருகின்ற சூழ்நிலையின் தேவைக்குமிடையில் ஏற்படுகின்ற ஒரு முரண்பாட்டிடம் அவன் தன்னைப் போதுமான அளவுக்குப் பொருத்தப்பாடு செய்துகொள்ள இயலாமலிருக்கின்ற ஒரு நிலையைத்தான் இயல்பிறழ்ந்த நடத்தை என்று உளவியல் கருதுகின்றது. இது, கற்றல் செயல்முறையின் விளைவாகவே கருதப்படுகின்றது.

இதை ஓர் உதாரணத்தின்மூலம் விளக்கிக் கூறலாம். தொடக்கப் பள்ளியில் பயிலுகின்ற ஓர் ஐந்து வயதுச் சிறுவன் பேசுவதேயில்லை; மற்றக் குழந்தைகள் ஈடுபடுகின்ற எந்த நடவடிக்கைகளிலும் கலந்து கொள்ளுவதில்லை; ஆசிரியர் அவனிடம் பேசுகின்றபோது கெஞ்சுகின்றான்; பின்வாங்கிக் கொள்ளுகின்றான்; அவனுடைய இந்த வகையான நடத்தைக்குக் காரணம் அவன் முழுச் செவிடனாக இருக்க வேண்டும்; அல்லது அவன் குறை மனமுடையவனாக இருக்க வேண்டும். அவ்வாறு இருக்குமானால், உடலியல் சார்பான புனைக்கொள்கை பயனளிக்கக்கூடும். எனவே, அவ் வகையான பரிசோதனைகள் நடத்திப் பார்க்கப்பட்டன. ஆனால், அச் சிறுவன் செவிடனுமன்று, குறை மனமுடையவனுமன்று என்று தெரிய வந்தது. இதன் தொடர்பாக அவனுடைய வீட்டுச் சூழ்நிலை ஆராய்ந்து பார்க்கப்பட்டது. வீட்டில் அவனுடைய பெற்றோர் மிகக் கடுமையாகச் சண்டை போட்டுக் கொள்வதுண்டு. அவனுடைய தந்தை அவனிடம்

அதிகக் கவனம் செலுத்துவதில்லை. அவன் தவறு செய்யும்போது அவனைத் தண்டிப்பதுதான் அவனுடைய தந்தை செலுத்தும் கவனமாக இருந்தது. அவனுடைய தாயார், அவனுடைய தந்தையைப் போலவே அவளும் கெட்ட பையன் என்று கருதி, தன்னுடைய அடுத்த பெண் குழந்தையிடம் அன்பு காட்டி வந்தாள். எனவே, அப் பையன் தன்னைப் பின் வாங்கிக்கொண்டு அச்சத்துடன் மௌனமாக இருந்து வந்தான். இதுதான் அவன் கற்ற பொருத்தப்பாடாகும்.

இந்த உதாரணத்திலிருந்து உளவியல் நோக்கினுடைய முக்கிய கருத்துச்சொற்களை வெளிப்படுத்த முடியும். அக் குழந்தைக்கு நடவடிக்கைக்கும் புலப்படுத்துவதற்கும் சில தேவைகள் இருக்கின்றன. அன்பையும் பாதுகாப்பையும் அவன் மிக அதிகமாக விரும்பினான். ஆனால், அவனுடைய சூழ்நிலையானது இவற்றிற்கிடையில் முரண்பாட்டை உருவாக்கியது. எவ்வாறெனில், அவன் ஏதாவது செய்யும்பொழுதெல்லாம் அவன் வசைமாரியையும் தண்டனையையும் பரிசாகப் பெற்றான். இந்த முரண்பாட்டை அவன், தன்னைப் பின் வாங்கிக்கொள்வதன்மூலம் தீர்த்துக்கொண்டான். பெற்றோரின் அன்பை இழந்து விட்டதனால், அவனுக்கு ஏற்பட்ட அச்சத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும்பொருட்டு அவன் அவ்வாறு நடந்துகொண்டான். இதே வகையான செயல்முறைகள் குழந்தைகளிடமும் நடைபெறலாம்; வயது வந்தவர்களிடமும் நடைபெறலாம். முரண்பாடுகளை நல்லிணக்கம் செய்துகொள்ளுவதில் குறைவான தீர்வுகள் காணப்படுவதன் காரணமாக மக்களில் சிலர் மிகுந்த ஆக்கிரமிப்பு உணர்ச்சியுள்ளவர்களாகின்றனர்; சிலர் பொய்யான நம்பிக்கைகளை வளர்த்துக்கொள்ளுகின்றனர்; சிலர் அளவுக்கு மீறிய பயத்தை வெளிப்படுத்துகின்றனர்; சிலர் இயல் பிறழ்ந்தமைகளை வெளிப்படுத்துகின்றனர்.

இயல் பிறழ்ந்த நடத்தையை உளவியல் நோக்குகின்ற முறை உடலியல் சார்பான விளக்கத்திற்கு முற்றிலும் விரோதமான தன்று. ஒரு மனிதன் ஒரு சூழ்நிலையில் இணங்கிச் செல்லுகின்ற போதும், கற்கின்ற போதும் அவனுடைய நரம்பு மண்டலத்தில் உடலியல் சார்பான மாற்றங்கள் ஏற்படுகின்றன. பழுதடையாத நரம்பு மண்டலத்தில் நற்பேரற்ற சமூக இயக்கம் நடைபெறுவதால்தான் மனக்கோளாறு ஏற்படுகின்றது என்று உளவியல் புனைக் கொள்கை கூறுகின்றது. நரம்பு மண்டலத்தில் ஏற்படுகின்ற தீங்கு அல்லது நோய் ஆகியவற்றைக்கொண்டு மனக்கோளாறின் காரணத்தை உளவியல் விளக்க முயலுவதில்லை.

ஆனால், இந்த இரண்டு வகையான விளக்கங்களையும் காணு கின்றவர்கள் சில மனக்கோளாறுகளுக்கு உடலியல் அடிப்படை யாக இருக்கின்றது என்றும், சில மனக்கோளாறுகளுக்கு உளச் சார்பான அடிப்படை உண்டு என்றும் முடிவு கட்டிவிட முடியாது. உண்மையாக நோக்குவோமானால், எல்லா வகையான மனக் கோளாறுகளும் இரண்டு வகையான காரணங்களும் கலந்த வகை யில்தான் ஏற்படுகின்றன. ஆனால், நரம்புடலியல் வழியிலும் உளவியல் வழியிலும் மனக்கோளாறுகளை அணுகுவதில் பல்வேறு பட்ட படித்தரங்களிருக்கலாம். சில மனக்கோளாறுகள் மிகுந்த உடலியல் சார்பானவையாக இருக்கலாம். சில மிகுந்த அளவுக்கு உளவியல் சார்பானவையாக இருக்கலாம். ஆனாலும், இரண்டு காரணக் கூறுகளும் ஓரளவுக்கு எல்லாக் கோளாறுகளிலும் நுழையச் செய்கின்றன.

உடலமைப்புக் குறைபாடுகளும் இயல் பிறழ்ந்த நடத்தையும்

நரம்புடலியல் முறைப்படி சில வகையான மனக்கோளாறு களை விளக்கிக் கூறுவது சிறப்பாகத் தெரிகின்றது. இந்த வழியில் மனக்கோளாறுகளை அணுகுவது மிகவும் சிக்கலான செயலாகும். ஏனென்றால், நரம்பு மண்டலத்தின் அமைப்பு எளிதில் புரிந்து கொள்ள முடியாததாக இருக்கின்றது. அதனால் அதில் ஏற்படு கின்ற கோளாறுகளையும், ஏற்படுகின்ற பழுதுகளையும் புரிந்து கொள்ளுவது இன்னும் சிரமமான செயலாக இருக்கின்றது. நரம்புடலியல் முறைப்படி எல்லா மனக்கோளாறுகளையும் அணுகு வது கடினமே என்றாலும் சிலவற்றையாவது விவாதிப்பது பொருத்தமாகும்.

புலன் வலுக் குறைபாடு (An Ataxia): தெருவில் நடந்து செல்லுகின்றவர்களில் சிலர் விசித்திரமான பாணியில் நடந்து செல்லுவதைக் காணலாம். அவர்கள் ஒரு பிரம்பின் துணை கொண்டு வியப்பான பாணியில் நடந்து செல்லுகின்றார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவனுடைய கால்களை நீங்கள் நோக்கி னால் ஓர் உண்மை புலப்படும். அவனுடைய கால்களின் இடைவெளி மிக அதிகமாக இருக்கின்றது. அவன் தன்னு டைய கால்களை முன்னால் எடுத்து வைக்கும்போது மிகைப் படுத்தப்பட்ட அசைவுடன் எடுத்து வைக்கின்றான். அதனால் அவனுடைய பாதங்கள் மிகவும் அழுத்தமான ஊன்றுதலுடன் தரையில் படிகின்றன. அதனால் இரண்டு கால்களும் இதே போன்று பாதிக்கப்பட்டிருக்கலாம். இப்படிப்பட்ட அறிகுறியுள்ள காட்சி ஒரு மனிதனிடம் காணப்படுமானால், அதற்குப் பெயர்

புலன் வலுக் குறைபாடு என்று கூறுகின்றார்கள். இதிலுள்ள முக்கியமான குறைபாடு என்னவென்றால், இயக்க ஒருமுகப்பாடு இல்லாமையாகும். மருத்துவப் பரிசோதனை செய்து பார்த்து, புலன் வலுக்குறைபாட்டின் எந்தக் குறிப்பிட்ட வகையை இது சார்ந்தது என்று கண்டறியலாம். மேலும், நரம்பு மண்டலத்தின் எப் பகுதியில் பழுது ஏற்பட்டு இக் குறைபாட்டை விளைவிக்கின்றது என்பதையும் காணலாம்.

புலன் வலுக் குறைபாடுள்ள ஒரு மனிதன் தன்னுடைய கண்கள் திறந்திருக்கும்போது நேராக நிற்க முடியும் என்று வைத்துக்கொள்ளுவோம். அவன் தன்னுடைய சுற்றுப்புறத்தைக் கண்டு பார்க்க முடிகின்றது. ஆனால், அவன் தன்னுடைய கண்களை மூடிக்கொண்டு நிற்க முயன்றான்; இங்குமங்கும் சாய்கின்றான் அல்லது கீழே விழுகின்றான். அவனுடைய முழங்கால் குலுக்கல் எதிர்ச்செயல் (knee jerk reflex) ஒன்று குறைந்து போயிருக்க வேண்டும் அல்லது இல்லாமலிருக்க வேண்டும். அவன் தன்னுடைய கண்மணியின் எதிர்ச்செயலில் குறிப்பிடத்தக்க இயல்பிறழ்ந்தமையை வெளிப்படுத்துவான். தூரப் பார்வையைப் பொருந்தச் செய்யும்போது கண்மணி இயல்பாகச் சுருங்குகின்றது. ஆனால், அவனுடைய கண்ணில் மிகுந்த ஒளி படும்போது கண்மணி சுருங்குவதில்லை. கண்களை மூடிக்கொண்டு அவனுடைய மூக்கின்மீது அவனுடைய விரலை வைக்கச் சொன்னால், அவனுடைய தொடுபுலன் குறி மிகவும் தவறுடையதாக இருக்கின்றது. வேறு பல சோதனைகள் அவனிடம் நடத்திப் பார்ப்போமானால், அவனுடைய உடல் பகுதிகளின் நிலைமையும் இயக்கமும் சதைப் புலனுணர்ச்சியை இழந்திருக்கக் காணலாம்.

அவன் நடந்து செல்லும்போது சிறிதுகூட வலிமையுடன் செயல்பட முடிவதில்லை. ஏனென்றால், அவனுடைய பாதங்கள் எங்கு வைக்கப்படுகின்றன என்பது அவனுக்குத் தெரியாது. கண்ணால் பார்க்கும்போதுதான் தன்னுடைய பாதங்கள் எந்த இடத்தில் வைக்கப்படுகின்றன என்பதை அவன் காண முடியும். இந்தச் செய்திகளை வைத்துக்கொண்டு அந்த மனிதன் இடப் பெயர்ப்புப் புலன் வலுக் குறைபாடு (locomotor ataxia) என்கின்ற முதுகுக்குரிய உடலுருக்கி நோயால் வருந்துகின்றான் என்று ஒரு நரம்பியல் வல்லுநர் காண முடியும். இந்த நோய் வேறு சில அறிகுறிகளையும் வெளிப்படுத்தலாம். கால்களில் கடுமையான வலி, வயிறு போன்ற உள் உறுப்புகளில் கடுமையான வலி, தோல் புலன்களின் முறையற்ற குறைபாடு முதலியவையும் வெளிப்படலாம்.

இந்த வகையான நோய்களில் ஒன்றை அது முதுகுக்குரிய உடலுருக்கி நோய் என்று ஒரு நரம்பியல் வல்லுநர் உறுதி செய்து கொள்வாரானால், அதற்கான நரம்புக் குறைபாடு எங்குள்ளது என்பதை அவரால் கண்டறிய முடியும். முதுகுத்தண்டின் (spinal cord) பின்பகுதி சீர்கேடுற்றதால் ஏற்பட்ட விளைவு என்றும் அறிய முடியும். முதுகுத்தண்டினுடைய பின் பகுதியிலுள்ள நரம்பு வரிசைகளின்மூலமாகத்தான் தசைப்புலனுணர்ச்சித் துடிப்புகள் உடல் சார்ந்த நரம்புகளிலிருந்து மூளைக்குச் செல்லுகின்றன. முதுகுக்குரிய உடலுருக்கி நோய் மேகநோய் தொற்றுவதால்தான் எப்பொழுதும் ஏற்படுகின்றது. தொடக்கத்திலேயே மேக நோய்க்குத் தகுந்த சிகிச்சையளிக்கக்கூடிய முறைகள் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டதால், இத்தகைய சீர்கேடுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. பல்வேறுபட்ட குறைபாடுகளினால் வேறு சில புலன் வலுக்குறைபாடுகளும் இருப்பதாகக் கண்டிருக்கின்றார்கள். சிறுமூளையில் ஏற்படுகின்ற குறைபாடுகளினாலும் இந்த நோய் ஏற்படக்கூடும்.

சொற்பொருள் நினைவிழத்தல் (An Aphasia) : மூளையில் ஏற்படுகின்ற கட்டிகளாலும், மூளையில் ஏற்பட்ட அடியாலும் வருந்துகின்ற நோயாளிகளை மருத்துவப் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டது. அவர்களுடைய மூளையின் இழைபொருள்கள் (tissues) பழுதுபட்டிருந்தன. அந்த நோயாளிகளில் சிலர் மூளை பழுதுபட்டதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட நினைவாற்றலை இழந்திருந்தனர். பிறர் பேசுவது அவர்களுக்குப் புரிந்தாலும் அவர்கள் பேச முடிவதில்லை. அவர்களில் ஒருவன் சைகைமூலமும் அறிகுறிகளின்மூலமுமே மற்றவர்களுடன் தொடர்பு கொள்ள முடிந்தது. அவன் பேசுவதற்கு முயன்றபோது பொருளற்ற ஒலிகளே வெளிப்பட்டன. இப்படிப்பட்ட நிகழ்ச்சி சொற்பொருள் நினைவிழத்தல் (Aphasia) என்று பரந்த பொருளில் கூறுகின்றனர். சொற்களின்மூலமாகத் தொடர்பு கொள்ளும் திறமையில் உள்ளடங்கியுள்ள கோளாறு என்பதாகும். சொற்பொருள் நினைவிழத்தல் என்னும் நோய் மொழி செயல்படுவதைக் கட்டுப்படுத்தும் மூளையின் பரப்பில் பழுது ஏதேனும் ஏற்படுமானல் உண்டாகிறது. பெருமூளையின் முதன்மையான பகுதியில் இஃது உண்டாகின்றது என்று கண்டிருக்கின்றனர். இது பெரும்பாலானவர்களுக்கு இடப்பகுதியில் காணப்படுகின்றது. வலக்கையை உபயோகிக்கின்றவர்களுக்கு இடப்பகுதி மிகவும் முக்கியமாக இருக்கின்றது. ஆனல், மூளையின் நான்கு பகுதிகளும் (lobes) தொடர்புடையவையாகவே இருக்கின்றன.

ஒன்றேடொன்று செயல்முறையில் இணைப்புத் தொடர்பாடு கொண்டிருக்கின்றன.

சொற்பொருள் நினைவிழத்தல் என்னும் நோய்பற்றி வெளி வந்துள்ள கருத்துப்படி, இரண்டு முக்கிய வகைகள் இதில் அடங்கி யிருப்பதாகத் தெரிகின்றது. ஒன்று இயக்கச் சொற்பொருள் நினைவிழத்தல் (motor aphasia), மற்றொன்று புலன் சொற் பொருள் நினைவிழத்தல் (sensory aphasia). புலன் சொற் பொருள் நினைவிழத்தலைக் கேட்டலுக்குரிய சொற்பொருள் நினை விழத்தல் (auditory aphasia) என்றும், பார்த்தலுக்குரிய சொற் பொருள் நினைவிழத்தல் (visual aphasia) என்றும் பிரித்தறியலாம். கேட்டலுக்குரிய நினைவிழத்தல் நிலையில் நோயாளி, பிறர் பேசிய மொழியைப் புரிந்துகொள்ளும் திறமையற்றவனாக இருக்கின்றான். பார்த்தலுக்குரிய நினைவிழத்தல் நிலையில் நோயாளி, வாசிக்கும் திறமையற்றவனாக இருக்கின்றான்.

ஆனால், பெரும்பாலான நிகழ்ச்சிகளில் சொற்பொருள் நினைவிழத்தல் நோயை இந்த வகைகளில் எதிலும் உறுதியாகச் சேர்க்க முடியாது. ஏனென்றால், மூளை பழுதுபடுமானால், அது பெரும்பாலும் மற்றப் பகுதிகளிலும் சென்று பாதிக்கச் செய்யும். பெரும்பாலான சொற்பொருள் நினைவிழத்தல் நோய்கள் எல்லாம் மறு கல்வி முறைகளின்மூலம் படிப்படியாகக் குணப்படுத்தப் பட்டிருக்கின்றன. பத்து நாள்களாக ஒரு சொல்கூடப் பேச முடியாமலிருந்த ஓர் இளைஞன் எளிய சொற்களைத் தூண்டு பொருளாக உபயோகித்தபோது படிப்படியாக நன்றாகப் பேசக் கூடிய நிலையை எய்தினான். ஆனால், மூளையில் ஏற்பட்டுள்ள பழுது மிகவும் கடுமையானதாக இருக்குமானால், மறு கல்வி அல்லது மறு பயிற்சி ஓரளவே பயனளிக்க முடியும்.

பொதுவான நரம்பு நோய் தொற்றல் : ஒரு மனிதன் உள நோய் மருத்துவச்சாலையில் பல்வேறுபட்ட அறிகுறிகளை வெளிப்படுத்தக் கூடும். அவற்றில் மூன்று அறிகுறிகள் முக்கியமாக நம் கவனத்தை ஈர்க்கக்கூடும். முதலில் அவன் குறிப்பிடத்தக்க அளவுக்குப் புலன் வலுக் குறைபாட்டை வெளிப்படுத்தலாம். நடந்து செல்லும் போது ஒரு பொது ஒருமுகப்பாடு இல்லாமையைக் காணலாம். இரண்டாவதாக, குறிப்பிடத்தக்க நுண்ணறிவுக் குறைபாடு வெளிப்படலாம். அவனுக்கருகிலிருப்பவர்கள் யார் என்பது அவனுக்குத் தெரியாது. ஒரு சிறு கூட்டல் கணக்குக்கூட அவனால் போட முடியாது. அன்றைக்கு என்ன தேதி என்றுகூடத் தெரியாது. இப்படிப்பட்ட அறிகுறிகள் காணப்படுமானால், அந்த நோயைப்

பொதுவான நரம்புநோய் (general paresis) என்று நரம்பியல் வல்லுநர்கள் கூறுகின்றார்கள். இதைப்பற்றி விளக்கிக்கூறும்போது, மூளை முழுவதும் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று நரம்பியல் வல்லுநர்கள் கூறுகின்றார்கள்.

ஆனால், நோயாளியிடம் காணப்படும் மூன்றாவது அறிகுறியானது மிகவும் உளவியல் தன்மை பெற்றதாகும். நோயாளியிடம் மிகுந்த அளவுக்கு அதிகாரம், செல்வம் ஆகியவற்றின் திரிபுணர்வு (delusion) காணப்படும். தன்னிடம் கோடி கோடியாகப் பணம் இருக்கின்றது என்றும், ஏராளமான மனைவிகளும் குழந்தைகளும் தனக்கு இருக்கின்றார்கள் என்றும் கூறிக்கொண்டிருப்பான்; தான் அந் நாட்டுக்குத் தலைவன் என்றும் கூறிக்கொள்வான். இந்த நோயாளி மருத்துவச்சாலையிலிருக்கும்போது, அதை ஒரு தனிநாடு என்றும், அதற்குத் தான்தான் அரசன் என்றும், மற்றநோயாளிகள் எல்லாம் தன்னுடையவேலையாள்கள் என்றும் கூறுவதையும் காணலாம்.

திரிபுணர்வுகள் எவ்வாறு நரம்பியல் வல்லுநர்களால் விளக்கம் செய்யப்படுகின்றன? திரிபுணர்வுகளால் வருந்துகின்றவர்களின் முழு மூளையும் பாதிக்கப்பட்டிருப்பது உண்மைதான். ஆனால், போதுமான ஆள் குறிப்பாக எந்த இடத்தில் என்று கூற முடியாது என்றுதான் கூறுகின்றனர். திரிபுணர்வுகளின் பிறப்பிடம் எது என்று நரம்பியல் சரியாகக் கூற முடியவில்லை. எனவே, இந்த இடத்தில் நரம்பியல் கோட்பாட்டை விட்டுவிட்டு, உளவியல் கோட்பாட்டு முறைப்படி அந் நோயை அணுகுவது தான் சிறப்பாகும். நம்பிக்கையான ஒரு புனைக்கொள்கை என்னவென்றால், நோயாளியின் கடந்த கால வாழ்க்கையை நோக்குவதாகும். அவன் தன்னுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சந்திக்கும்போது எந்த வகையான துலங்கல்களைச் செய்வதற்குக் கற்றுக்கொண்டான் என்பதைக் கண்டறிய வேண்டும். அந்த நடத்தைக்கும் இந்த நோய்க்கும் ஏதேனும் தொடர்புண்டா என்றும் காண வேண்டும்.

உளவியல் போராட்டங்களும் நடத்தைக் கோளாறுகளும்

மனிதர்களின் இயல்பிறழ்ந்த நடத்தையை உளவியல் முறைப்படி விளக்குகின்றபோது சில கருத்துச்சொற்களை அடிப்படையாகக்கொண்டே அஃது அமைகின்றது. தேவை, போராட்டம், நல்லிணக்கம் முதலியவை அடிக்கடி பயன்படுத்தப்படும் கருத்துச்சொற்களாகும். ஆனால், இதே கருத்துச்சொற்களை இயல்பு நிலையிலுள்ள மனிதர்களுடைய நடத்தையை விளக்குவதற்கும் உபயோகிக்கின்றனர். எல்லா மனிதர்களுமே மற்றவர்

களோடு நல்லிணக்கத்தோடு நடந்துகொள்ளுவதற்குக் கற்றுக் கொள்ள வேண்டியவர்களேயாவர். இயல் பிறழ்ந்த மனிதர்கள் தங்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளு வதில் குறைந்த மன நிறைவுள்ளவர்களாக இருக்கின்றார்கள்.

நல்லிணக்கச் செயல்முறை : மனிதர்களின் வாழ்க்கை முறையே தொடர்ந்து செல்லுகின்ற நல்லிணக்கமாகத்தான் கருதப்படுகின்றது. இந்தச் செயல்முறையில் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய சூழ்நிலையில் தனக்கு ஏற்பட்டுள்ள தேவையை நிறைவு செய்துகொள்ளும்பொருட்டு நடந்துகொள்ளுகின்றான். ஒரு மனிதனுக்கு ஒரு தேவை ஏற்படும்போது அவனிடம் ஒரு நல்லிணக்க நடவடிக்கை தோன்றுகின்றது. அந்தத் தேவை நிறைவு செய்யப்பட்டவுடன் அல்லது குறைந்தவுடன் நடவடிக்கை முடிவடைகின்றது.

உதாரணத்திற்கு ஒன்று கூறுவோமானால், ஒவ்வொருவருக்கும் ஒரு நாளில் பல முறை பசி எடுக்கின்றது. அவர்கள் உணவைத் தேடிச் செல்லுகின்றார்கள்; உண்டு பசியடங்குகின்றார்கள். மிகுந்த பசி இருக்கும்போது அவர்களிடம் ஒருவித அமைதியின்மை காணப்படுகின்றது. உணவுண்டு பசியை நிறைவு செய்தவுடன் அவர்களிடம் அமைதி காணப்படுகின்றது. இத்தகைய நல் லிணக்கம் தவிர்க்க முடியாததும் தேவையானதுமாகும். அதே போல எளிதில் அஞ்சுகின்ற ஒரு குழந்தை சற்றுக் கடுமையான விளையாட்டு விளையாடுகின்ற இளைஞர்களை நெருங்குமானால், மிகவும் பயங்கொண்டு தன்னுடைய தாயாரை நோக்கி ஓடுகின்றான். பயங்கொண்டு தாயாரை நோக்கி ஓடுகின்ற நடத்தை குழந்தை யின் பிற்கால வாழ்க்கைக்கு ஏற்றதன்று. என்றாலும், அந்த நடத்தை அக் குழந்தையின் நல்லிணக்கத்தை வெளிப்படுத்து கின்றது. எவ்வாறெனில், அந்தச் சமயத்தில் மேல் நிலையடைந் துள்ள குழந்தையின் ஊக்கியை நிறைவு செய்கின்றது. மிகுந்த பயம் கொண்டு ஓடுகின்ற குழந்தை தன்னுடைய தாயாரை அடைந்தவுடன் அவனுடைய பயம் குறைந்துபோய் விடுகின்றது.

மனிதர்களிடமும் விலங்குகளிடமும் நடைபெறுகின்ற நல் லிணக்கச் செயல்முறைகளைப் பரிசோதனைக்கூடங்களில் ஆராய்ந் திருக்கின்றனர்; தினசரி வாழ்க்கையைக் கூராய்வு செய்தும் ஆராய்ந்திருக்கின்றனர். பழக்கத்திலுள்ள பிரச்சினைப் பெட்டியும் புதிர்ப் பரிசோதனைகளும் இந்தச் செயல்முறையைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

முதலில் பரிசோதனைக்குரிய விலங்கு பசியால் ஊக்குவிக்கப் படுகின்றது. அதற்கு உடனடித் தேவை உணவு. இந்தத் தேவையை நிறைவு செய்துகொள்ளும் நடத்தை பரிசோதனை

நிலைமைகளினால் தடுக்கப்படுகின்றது. ஏனென்றால், அவ் விலங்கு ஒரு சிறு கூண்டுக்குள்ளிருக்கின்றது. அதனால் வழக்கமான முறையில் அஃது உணவு பெற முடியவில்லை.

அடுத்த நிலையில் அவ் விலங்கு உணவைத் தேடிப் பெறுவதற்குப் பல வழிகளிலும் முயலுகின்றது; பல வழிகளிலும் முயன்ற பிறகு வெளிப்படுகின்ற ஒரு துலங்கல் தற்செயலான ஒரு நிகழ்ச்சியாகும். அக் கூண்டினுள் நீட்டிக்கொண்டிருக்கும் ஒரு சிறு நெம்புகோலை அழுத்தும் செயல் அந் நிகழ்ச்சியாகும். நெம்புகோலை அழுத்தும்போது அங்குள்ள தட்டில் உணவுத் துண்டுகள் விழும்படியாக ஒரு வழி வகை செய்யப்பட்டிருக்கின்றது. எனவே, நெம்புகோலை அழுத்தும்போதெல்லாம் உணவுத் துண்டுகள் தட்டில் விழுகின்றன. அவ் விலங்கு உணவை உட்கொள்ளுகின்றது. இவ்வாறாக நல்லிணக்கச் செயல்முறையின் ஒரு கட்டத்தை அவ் விலங்கு நிறைவு செய்கின்றது. உண்மை வாழ்க்கையை நோக்கும்போதும், பரிசோதனையின் முடிவுகளை நோக்கும்போதும் நல்லிணக்கச் செயல்முறையை நாம் காணும் வகையை நான்கு கருத்துச் சொற்களைக்கொண்டு விவரிக்கமுடியும். முதலாவது ஊக்கி (motive), இரண்டாவது குலைத்தல் (thwarting), மூன்றாவது பல்வேறுபட்ட துலங்கல்கள், நான்காவது விடை காணல்.

மனிதர்களின் சிக்கலான சமூக நல்லிணக்கங்களிலும் இதே வரிசை முறையை நாம் காண முடியும். ஒரு மனிதன் தன்னுடைய வேலையை இழந்துவிடுவானானால், அவனுடைய வாழ்க்கையில் பொருளாதார முட்டுக்கட்டை ஏற்படுகின்றது. அத்துடன் தன்னுடைய சுயமரியாதையைப் பாதுகாத்துக் கொள்ளுவதிலும், நண்பர்களிடையே சமுதாய மரியாதையைப் பேணுவதிலும், தன்னுடைய குடும்பத்தின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் அவன் பல முட்டுக்கட்டைகளைச் சந்திக்கின்றான். இந்த முட்டுக்கட்டைகளின் விளைவாக அந்த மனிதன் அவற்றைச் சமாளிக்கும்பொருட்டு ஒரு வேலை கிடைக்கின்ற வரையில் பல்வேறு வகையான துலங்கல்களைச் செய்து வருகின்றான். எல்லா நல்லிணக்கச் செயல்முறைகளுமே வெற்றிகரமாக முடிவதில்லை. அவன் தனக்கென்று ஒரு வேலையைப் பெற முடியாமல் போவானானால், தன்னுடைய துன்பங்களுக்காக அவன் மற்றவர்களையெல்லாம் குறை கூறுகின்றான்; மற்றவர்கள் தன்னைத் துன்பப்படுத்துகின்றார்கள் என்று கூறும் அளவுக்குக்கூடச் சென்றுவிடுகின்றான்.

ஆனால், அதே மனிதன் மற்றொரு நிலைக்கும் சென்றுவிடலாம்; தான் மிகவும் வலிமை குறைந்தவன் என்றும், நோயாளி என்றும், அதனால் வேலை செய்து சம்பாதிக்க முடியவில்லை என்றும், மற்ற

வர்கள்தான் தன்னைப் பாதுகாக்க வேண்டுமென்றும் குறைபட்டுக் கொள்ளலாம். ஆனால், இந்த வகையான ஆக்கமிழந்த தீர்வுகள் வேலையில்லாத பிரச்சினைக்கு முடிவு கட்ட முடியாது. ஆனாலும், அந்தச் செயல்முறைகளையும் நல்லிணக்கம் என்றே கூறப்படு கின்றது. ஏனென்றால், அவை அந்த மனிதனுடைய துன்பங்களைப் போக்கி, தான் இவற்றிற்கெல்லாம் காரணமில்லை என்று உணரச் செய்கின்றன. இந்த வகையான தேவைக்குக் குறைவான மாற்றுத் தீர்வுகள்தான் நடத்தைச் சீர்கேடுகளை அறிந்துகொள்ளு வதற்குத் திறவுகோலாக இருக்கின்றன.

ஊக்கிகள் : நல்லிணக்க நடத்தையைத் தூண்டுகின்ற ஊக்கி களை உடற்கூற்றியல் தேவைகளாக வகுத்துள்ளனர். அவை பசி, தாகம் முதலியனவை. சமூகத்திற்காக ஈட்டப்பட்ட ஊக்கிகள் சமூக ஊக்கிகள் என்று கருதப்படுகின்றன. அவை சமூகத்தில் வெற்றிகளை ஈட்ட விரும்பல், சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்ற விருப்பம் முதலியவை. உடற்கூற்றியல் தேவைகள் பெரும்பாலும் நிறைவு செய்யப்பட்டபொழுது சமூக ஊக்கிகள் மனித நல்லிணக்கங்களுக்குக் குறிப்பிடத்தக்க அடிப் படைகளாக இருக்கின்றன. சமூக ஊக்கிகள் மிகவும் சிக்க லானவை. எனவே, அவற்றைத் தேவையான அளவுக்குப் பெயர்ப் பட்டியலில் அடைக்க முடியாது.

சமூக ஊக்கிகள் பெரும்பாலும் குழந்தைப் பருவத்திலும் குழவிப் பருவத்திலும் ஈட்டப்பட்டவையாகும். மனிதர்களோடு கொள்ளுகின்ற தொடர்புறவுகளில் நடைபெறுகின்ற கற்றல் செயல்முறையினால் ஈட்டப்படுபவை சமூக ஊக்கிகள். உதாரண மாக, ஒரு குழந்தை அல்லது சிறு பையன் மற்றவர்கள் முன்னிலை யில் எல்லா வகையான வசதிகளையும்உணவு நிறைவுகளையும் குறை வறப் பெறுகின்றான். ஆகையினால், மற்றவர்கள் மத்தியில் அவன் இருந்துகொண்டிருப்பதே அவனுக்கு நிறைவு தருவதாக இருக் கின்றது. இதன் காரணமாக நாம் அனைவரும் கூட்டமாகவே வாழ்கின்றவர்களாக இருக்கின்றோம். தனித்து இருக்கும்படியாக வைக்கப்படுவோமானால், அது தாங்க முடியாத வேதனை தருகின்ற தண்டனையாக இருக்கின்றது. எதிர்மறையான நிகழ்ச்சிகள்கூடச் சமூக ஊக்கிகளின் கற்று ஈட்டிய தன்மையைத்தான் வலியுறுத்து கின்றன.

ஒரு மனிதன் மற்றவர்களுடைய தொடர்புறவை விரும் பாமல் வெறுத்து ஒதுக்கக்கூடியவனாக இருக்கலாம். அப்படிப்பட்ட மனிதனின் வாழ்க்கையைப்பரிசோதனை செய்து பார்ப்போமானால்,

அவன் தனித்து வாழ்ந்து வருவதற்குக் காரணம் அவன் மற்றவர்களோடு கூட்டமாக இருந்து வாழக் கற்றுக்கொள்ளவில்லை என்று தெரியும். அல்லது அவனுடைய கடந்த கால வாழ்க்கை அனுபவங்கள் மற்றவர்களுடைய மத்தியில் மகிழ்ச்சிதருவதற்குப்பதிலாக மிகுந்த துன்பம் நிறைந்ததாக இருந்திருக்கலாம். பெரும்பாலான மனிதர்கள் பாதுகாப்பாக இருப்பதற்கும், தங்களை யார் என்று மற்றவர்களுக்குப் புலப்படுத்திக்கொள்ளுவதற்கும், வெற்றி பெறுவதற்கும், விரோதிகளை வீழ்த்துவதற்கும், தடைகளைத் தாண்டிச் செல்வதற்கும், இவை போன்று இன்னும் பிறவற்றிற்கும் வலிமை மிக்க ஊக்கிகளைக் கற்றுப் பெற்றிருக்கின்றனர்கள் என்று நாம் காட்ட முடியும். அத்தகைய சமூக ஊக்கிகள் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபட்டுக் காணப்படுகின்றன. ஏனென்றால், வேறுபட்ட சூழ்நிலைகள் வேறுபட்ட வலிமை பெருக்கப்பட்ட நிலைகளைக் கற்றலுக்கு அளிக்கின்றன. எனவே, முயற்சிகளும் வேறுபடுகின்றன.

மனமுறிவும் போராட்டமும் : ஓர் ஊக்கியினால் ஏற்படும் மன நிறைவைத் தடுக்கின்ற எந்த ஒரு சூழ்நிலையையும் குலைத்தல் (thwarting) என்று கூறலாம். குலைத்தலை இரண்டு பெரும் வகைகளில் அடக்குவது ஏற்றதாகும். அவை மன முறிவு, போராட்டம் என்பவை.

மனமுறிவு என்பது ஒரு சூழ்நிலையைச் சார்ந்த குலைத்தல் வகையாகும். அந்தச் சூழ்நிலையில் ஊக்கி நிறைவு பெறுவது வெளித்தடைகளால் தடுக்கப்படுகின்றது; அல்லது மற்றவர்களுடைய நடவடிக்கைகளால் தடுக்கப்படுகின்றது. தான் விரும்பிய ஒரு பொருள் தன்னுடைய கைக்குக் கிடைக்காத காரணத்தால் ஒரு குழந்தை மனமுறிவடைகின்றான். அப் பொருள் அவனுடைய கைக்குக் கிடைக்காமல் போனதற்குக் காரணம் அவனுடைய தந்தையோ ஆசிரியரோ தடுத்திருக்கலாம். பரிசோதனைச் சான்றுகளைக் கொண்டும், உள நோயுக்குரிய கூராய்வுகளைக்கொண்டும் ஆராய்ந்து பார்த்தபோது எளிய மன முறிவுகள் மிக அரிகமாகவே நல்லிணக்கச் செயல்முறையில் கடுந்துன்பங்களுக்கு இட்டுச் செல்லுகின்றன. மனமுறிவு ஏற்பட்டபோது ஒருவன் மிகவும் கடுமையாக முயற்சி செய்கின்றான். ஒரு தீர்வு காணும் வரையில் முயற்சி தொடருகின்றது. அல்லது குறிக்கோளைப் பெற முடியாது என்று தெரிந்தால் குறிக்கோளையே கைவிட்டு விடுகின்றான். சில சமயங்களில் மனமுறிவு தாக்கும் மனப்பான்மைக்கு இட்டுச் செல்லுகின்றது. முயற்சிக்குத்

தடையாக இருக்கும் பொருளேயோ, மனிதனேயோ கோபம் கொண்டு தாக்கும் உணர்ச்சி மனமுறிவிலிருந்துதான் தோன்று கின்றது.

போராட்டம் என்பது ஒரே சூழ்நிலையில் அல்லது நிலைமையில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊக்கிகள் ஒன்றோடு ஒன்று முரண்படுமானால் ஏற்படுகின்ற மனநிலையாகும். ஒரு குழந்தை தன்னுடைய தாயாரைச் சார்ந்திருக்கின்றான்; அவள்மீது அன்பு கொண்டிருக்கின்றான். அதே சமயத்தில் அளவுக்கு மீறி அவனுக்கு அவள் மனமுறிவு ஏற்படச் செய்வாளானால், தாக்கும் அளவுக்கு அவள்மீது பகைமை உணர்ச்சி கொள்ளுகின்றான். அன்பு ஒரு புறம், பகைமை ஒரு புறம். இரண்டு உணர்ச்சிகளும் மோது கின்றன. இவ் வகையான போராட்டத்தின்போது அக் குழந்தை தன்னுடைய பகைமை உணர்ச்சித் துடிப்பைப்பற்றிக் கவலை கொண்டு விடுகின்றான்; மேலும், அது குற்றம் என்றும் கருது கின்றான். முரண்பாடுகள் படித்தரத்தில் வேறுபடுகின்றன. எல்லா முரண்பாடுகளும் கடுந்துன்பங்களுக்கு இட்டுச் செல் லுவதில்லை. மனிதர்களில் ஒவ்வொருவரும்ஏதேனும் ஒரு போராட் டத்தையுடையவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் தங்கள் போராட்டங்களை ஒத்துக்கொள்ளத்தக்க வகையில் வெற்றிகர மாகத் தீர்த்துக்கொள்ளுகின்றார்கள். ஆனால், கடுமையானதும் நீடித்ததுமான போராட்டங்கள் நடத்தைச் சீர்கேடுகளுக்கடியில் காரணக் கூறுகளாக இருக்கின்றன.

போராட்டத்தின்மீது ஒரு பரிசோதனை : போராட்டத்தைப் பரிசோதனைகள்மூலம் வெளிப்படுத்திக் காட்ட முடியும். பெரும் பாலும் விலங்குகளின்மீது நடத்தப்பட்ட பரிசோதனைகள் குறிப் பிடத்தக்க வகையாக அமைந்திருக்கின்றன. மாஸ்சர்மன் (Masserman) என்பவர் பூனைகளின்மீது நடத்திய பரிசோதனைகள் நல்ல விளக்கங்களை அளித்திருக்கின்றன. அவர் ஒலிக்கருவியை யும் ஒளியையும் சைகைகளாக உபயோகித்து,பெட்டியைத் திறந்து அதிலுள்ள உணவை உட்கொள்ளுமாறு பூனைகளுக்குப் பயிற்சி யளித்தார்; இந்தப் பயிற்சி நல்ல முறையில் நிலைநிறுத்தப்பட்ட பிறகு பூனைகள் போராட்டத்தைச் சந்திக்கச் செய்தார். உண வுக்கான சைகைகள் தோன்றும்பொழுது பூனைகள் துலங்குகின் றன. அது சமயம் பூனைகளுக்கு மின்சார அதிர்ச்சி உண்டாகு மாறு அமுக்கிவைக்கப்பட்ட காற்றுக்குழாயைத் திறந்துவிட்டுக் கடுங்காற்று வீசுமாறும் பரிசோதனையை அமைத்திருந்தார். இதனால் பூனைகள் எளிதில் உணவுப்பெட்டியைத் திறந்து உண்ண முடியவில்லை.

பூனைகளுக்கு ஏற்பட்ட போராட்டம் என்னவென்ருல், எந்தச் சைகைகள் உணவைப் பெறுவதற்குப் பயன்பட்டனவோ அதே சைகைகள் வருந்தச் செய்யும் தண்டனையையும் கொடுத்தன. எனவே, அந்தச் சைகைகளைக் கண்டவுடன் பூனைகள் பயத்தால் ஓடின. பூனைகள் குறிப்பிடத்தக்க நடத்தைக் கோளாறுகளை வெளிப்படுத்தின. சைகைகளைப்பூனைகள் பார்த்தவுடனும், கேட்டவுடனும் நடுநடுங்கின; கத்தின. மேலும், அவற்றின் இருதயத் துடிப்பிலும், சுவாசத்திலும் குழப்பங்கள் ஏற்பட்டன. இவ் வகையான துலங்கலின் பொதுத்தன்மை காணக்கூடியதாக இருந்தது. எனவே, பூனைகள் உணவுப்பெட்டியைத் தவிர்த்து வந்தன. சில பூனைகள் அவை வசிக்கும் கூட்டினுள் வைக்கப்பட்ட உணவைக் கூட உண்ண மறுத்தன. அப் பூனைகள் அளவுக்கு மீறிய நடவடிக்கைகளை வெளிப்படுத்தின; மற்ற விலங்குகளுக்கு எதிராகத் தாக்கும் நடவடிக்கையையும் வெளிப்படுத்தின. அவற்றில் சில தங்களுடைய தோலின்மீதுள்ள உரோமத்தை மிக அதிகமாக நக்கிக்கொண்டிருந்தன. அப்படிப்பட்ட துலங்கல் அவை கொண்டிருந்த பயத்திற்கு ஆறுதலளிப்பது போலிருந்தது.

மேலும், இப் பரிசோதனையில் காணப்பட்ட உண்மை என்னவென்ருல், இவ் வகையான நடத்தைச் சீர்கேடுகள் சில மாதங்களுக்கு அவற்றினிடம் காணப்பட்டன. அந்தக் கருவிகளில் எந்த வகையான தூண்டல் இல்லாவிட்டாலும், விலங்குகளிடம் காணப்பட்ட இத் துலங்கல் சீக்கிரம் மறையவில்லை. போராட்டத்தின் குறிப்பிடத்தக்க விளைவுகள் மனமுறிவுகளின் விளைவுகளிடமிருந்து முற்றிலும் வேறுபட்டிருந்தன. பூனைகள் உணவை அடையும் முயற்சியைத் தடுக்கும்போது அவை மனமுறிவு கொள்ளுகின்றன. சிறிது நேரம் முயன்று பார்த்துவிட்டு முயற்சியை அவை விட்டுவிடுகின்றன; உணவுக்காகக் காட்டப்படும் சைகைகளுக்குத் துலங்குவதில்லை. அவற்றில் எதுவும் நரம்புவழி நோயினல் வருந்தவில்லை.

மனிதப் போராட்டங்களின் பிறப்பிடம் : குழந்தைப் பருவத்தில் காணப்படுகின்ற பல கடுமையான போராட்டங்கள் எல்லாம் குழந்தைகள் தங்களுடைய பெற்ருேர்களிடம் கொள்ளுகின்ற தொடர்புறவுகளிலிருந்தே தோன்றுகின்றன. குழந்தைகள் எப்பொழுதும் பெற்ருேர்களைச் சார்ந்து வாழவேண்டியவர்களாகவே இருக்கின்ருர்கள். மேலும், பெற்ருேர்கள் குழந்தைகளின் பாதுகாப்பாளர்களாகவும், அவர்களிடம் அன்பு காட்டுகின்றவர்களாகவும், அவர்களுடைய செய்கைகளை ஏற்க வேண்டியவர்களாகவுமிருக்கின்ருர்கள். பெற்ருேர்கள் குழந்தைகளின் தூண்டுதல்

களுக்குத் துலங்காமலிருந்து, குழந்தைகளுக்குப் பயிற்சியளிப்பதற்குத் தண்டனையை ஒரு கருவியாக உபயோகிப்பார்களானுல், குழந்தைகள் பயப்படுவதற்கும் கற்றுக்கொள்ளுகின்றுர்கள். எனவே, ஒரு குழந்தை தன்னுடைய பெற்றேரிடம் அன்பும் காட்டுகின்றுன்; அவர்களுடைய அன்பு தன்னிடம் எங்குக் குறைந்துவிடுமோ என்று பயமும் கொள்ளுகின்றுன். குழந்தையின் இத்தகைய போக்கை அடிப்படைப் பாதுகாப்பின்மை என்று அடிக்கடி கூறுகின்றனர்.

எல்லா மனிதர்களுமே இந்த வகையான போராட்டத்தை ஓரளவு சந்திக்கவே செய்கின்றுர்கள். ஆனுல், இந்தப்போராட்டம் கடுமையாகுமானுல், வயது முதிர்ந்த பருவத்திற்கும் தொடர்ந்து செல்லுகின்றது. போராட்டத்தோடு வளர்ந்து வந்த ஒரு குழந்தை எப்பொழுதும் மிகுந்த அளவுக்கு அன்புக்காகக் கெஞ்சிக்கொண்டிருக்கலாம்; அஃது எங்குப் பின்வாங்கிக்கொள்ளப்படுமோ என்று பயமும் கொண்டிருக்கலாம். இப்படிப்பட்ட போராட்டம் மற்றவர்களோடு குழந்தை கொண்டுள்ள தொடர்புறவுகளையும் பாதிக்கச் செய்கின்றது.

அண்மையில் வெளிவந்த சில ஆராய்ச்சி முடிவுகள் குழந்தைப் பருவத்தினரிடையிலும் குமரப்பருவத்தினரிடையிலும் ஒரே வயதைச் சார்ந்தவர்களிடம் அவர்கள் கொள்ளுகின்ற தொடர்புறவுகளைத்தான் அவர்களுடைய போராட்டங்களுக்குப் பிறப்பிடங்களாக இருக்கின்றன என்று காட்டுகின்றன. போட்டி விளையாட்டுகளில் தோற்றுப் போய்விடுவோம் என்றே காயமடைந்து விடுவோமோ என்றே பயங்கொள்ளுகின்ற ஒரு பையன் மற்றப் பையன்களோடு விளையாட முயலுகின்றபோது போராட்ட அனுபவத்தைப் பெறுகின்றுன். விளையாட வேண்டுமென்று அவன் விரும்புகின்றுன்; ஆனுல், அதனுடைய முடிவைப்பற்றிப் பயப்படுகின்றுன். இதுதான் போராட்டத்தின் சாரமாகும். மனிதர்களுடைய வளர்ச்சியின் எல்லாக் கட்டத்திலும் மற்றப் போராட்டங்கள் தோன்றுகின்றன. முதிர்ந்தோர்களின் வாழ்க்கையிலுங்கூட அவை தோன்றுகின்றன. எந்த ஒரு பண்பாட்டில் மனிதர்கள் வாழ்ந்து வந்தாலும் அஃது ஒவ்வொரு மனிதனையும் மற்றவர்களை வெற்றி கொண்டு அவர்களுக்கு முன்னுல் செல்லுவதற்கான ஒரு வலிமை மிக்க உந்து சக்தியை ஈட்ட வேண்டுமென்று தூண்டுகின்றது. ஆனுல், மற்றவர்களிடம் தாராளமாக நடந்துகொண்டு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற எதிர்மாறுன ஊக்கிகளையும்மனிதர்கள் கற்கின்றுர்கள் மற்றவர்கள் அவர்களை விரும்ப வேண்டுமென்பதற்கான தூண்டுதல்களையும்

செய்கின்றார்கள். இதன் விளைவாக மற்றவர்களுக்கு முன்னால் செல்ல வேண்டுமென்று முயலுகின்றவர்கள் தங்களுடைய சொந்த ஆக்கிரமிப்பு உணர்ச்சியை ஒரு குற்ற உணர்ச்சியாகவே கருதுகின்றார்கள். இஃது அவர்களுடைய மனப் போராட்டத்திற்குத் தோற்றமாக அமைகின்றது.

பற்றாக்குறையான நல்லிணக்கங்கள்: மனமுறிவுற்ற ஒரு மனிதனும் சரி அல்லது மனப்போராட்டத்தில் உள்ள ஒரு மனிதனும் சரி, ஒரு கலக்கமடைந்த இறுக்கமான நிலைமையிலிருக்கின்றான். அவனுடைய மூல ஊக்கியின் தூண்டல் நிலை சிறிதும் குறையாமலிருக்கின்றது. மேலும், அவனுடைய மன இறுக்கம் போராட்டத்திலிருந்துஎழுந்த மனவெழுச்சித் துலங்கலினால் வலிமையூட்டப்பட்டிருக்கின்றது. இந்த நிலை கவலை அல்லது தவிப்பு (anxiety) என்று கூறப்படுகின்றது.

கவலை என்பது பயத்தின் வகையைச் சேர்ந்தது; எதிர் பார்க்கப்பட்ட பெருங்கேட்டின் துலங்கலாகும். உயர்ந்த வகையில் தூண்டப்பட்ட சூழ்நிலையில் ஒரு மனிதன் ஆக்கச் சார்பான தீர்வைப் பெற முடியாதவனாக இருக்கின்ற போதுதான் ஓர் ஆதரவும் இல்லாதவன் என்ற உணர்வைப் பெறுகின்றான்.

இயல்பாக அமைகின்ற நல்லிணக்கத்தில் ஒரு மனிதன் தன்னுடைய ஊக்கிகளின் நிறைவைத் தேடுகின்றான். முடிவுகள் தரத்தில் குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்டுமிருக்கலாம். ஒரு மனிதனுடையதேவை முதன்மைபெறுதல் அல்லதுஈடெடுப்புஅற்றிருத்தல் என்றிருக்குமானால், அவன் தன்னுடைய வேலையில் பெறுகின்ற உண்மையான வெற்றியின்மூலம் மன நிறைவைப் பெறலாம்; அல்லது விருப்பத் தொழில்கள், போட்டி விளையாட்டுகள், குழுவில் பங்கு பெறுதல் முதலியவற்றில் பங்கு கொண்டு அவற்றில் தான் முக்கியமானவன் என்று கருதக்கூடிய நிலையை உருவாக்கி,மாற்று வெற்றியாக்கி நிறைவுபெறுகின்றான். இவையும் விரும்பத்தக்க தீர்வுகள்தான்; ஆனால், முதன்மையானவையல்ல.

வெற்றிகரமான வாய்ப்புக் குறைவாயுள்ள நிலைமைகளில் ஒரு மனிதன் குறைவாகவே ஊக்குவிக்கப்படுகின்றான். அவனுடைய ஊக்கிகள் அவனைத் தெளிவான மன நிறைவுக்கு இட்டுச் செல்லுவதைவிட அவனுடைய கவலையைக் குறைக்கும் வழிக்குத்தான் இட்டுச் செல்லுகின்றன. உண்மையான வெற்றிக்குத் தேவையான முயற்சிகள் தன்னிடம் இருக்கின்றனவா என்று அவன் பயப்

படுகின்றான்; ஆனால், இந்தக் குறைந்த வாய்ப்பை அகற்றிக் கொள்ளும்பொருட்டு ஒரு வகையான உடன்படிக்கை நல்லிணக்கத்தைக்கொண்டு வருகின்றான்.

ஆனால், அவன் வெற்றியை மட்டும் விரும்பி ஏற்றுக்கொண்டு போட்டியைக் கண்டு பயப்படுவானானால், தன்னுடைய குறைபாடுகளுக்குச் சாக்குப்போக்குக் கூறித்தன்னுடைய போராட்டத்திற்குத் தீர்வு காணுகின்றான். அவன் அதற்குக் கண்டுபிடிக்கின்ற வழிகள், தன்னுடைய இயலாமையை மிகைப்படுத்திக் காட்டல், உயர்ந்த நிலைமைகளைப் பற்றிப் பகற்கனவு காணுதல், அல்லது மற்றவர்கள் தன்னைத் துன்பப்படுத்துகின்றார்கள் என்ற ஒரு நம்பிக்கையை வளர்த்தல் முதலியனவையாகும். இந்த வழிகள் எல்லாம் ஓரளவு மன இறுக்கத்தைக் குறைக்கின்றன. எவ்வாறெனில், உண்மையான பல பண்புகள் தடுக்கப்படும்பொழுது இவை கவலையைப் போக்க உதவுகின்றன.

இந்த விளக்கங்கள் எல்லாம் நடத்தைக் கோளாறுகளுக்கான உளவியல் விளக்கத்தின் மையப்பகுதிக்கு இட்டுச் செல்லுகின்றன. இவ் வகையான இயல் பிறழ்ந்த நடத்தையானது தனி மனிதனுடைய போராட்டத்தின் விளைவான கவலையைக் குறைக்கச் செய்கின்றது. எந்தக் கவலையை இந்த நடத்தை குறைக்கின்றது? ஒரு மனிதன் தன்னுடைய இயல் பிறழ்ந்தமையினால் பெறப்படுவது என்ன? இந்த வகையான வினாக்களுக்கு நாம் விடை காணும்போது தான் இயல் பிறழ்ந்தமையின் காரணங்களை நாம் கண்டறிகின்றோம்.

ஒரு மனிதனின் ஒரு நல்லிணக்க நடத்தையின் தரத்தை நாம் நன்கு அறிய முடியும். எவ்வாறெனில், அந் நடத்தை அந்த மனிதனின் மற்ற நல்லிணக்கங்களின் மீது எத்தகைய விளைவை உண்டாக்குகின்றது என்று காண்போமானால், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் உண்டாகும் விளைவுகள் நன்கு புலப்படும். ஒரு நல்ல இணக்கம் என்பது எல்லாப் பண்புகளும் நல்ல முறையில் ஒருமையாக்கப்பட்ட நிலையைக் குறிக்கின்றது. அஃது ஒரு முழுமையைக் குறிப்பிடுகின்றது. ஏனென்றால், அஃது ஒரு மனிதனுக்கு மற்ற வாழ்க்கைக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு உதவி புரிகின்றது. உண்மையான வெற்றிகள் ஒரு மனிதனின் நிகழ்கால ஊக்கமூட்டிகளை நிறைவு செய்கின்றன; மேலும், வருங்காலத்துக் குறிக்கோள்களை வெற்றியடையச் செய்வதற்கும் உதவி புரிகின்றன.

ஆனால், பயன் தராத இணக்க நடவடிக்கைகள் மேலே கூறிய வற்றிற்கு முற்றிலும் எதிர்மறையானவை. அத்தகைய நடவடிக் கைகள் ஒருமையாக்கப்படாதவையாகும். ஏனென்றால், அவை மற்றத் தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கான முயற்சிகளுக்குக் குறுக்கே நிற்கின்றன. ஓர் இளைஞன் மற்றவர்களின் கருத்தைத் தனக்குச் சாதகமாக்கிக்கொள்ளுவதற்கு மிகுந்த விருப்பம் கொண்டிருக்கலாம். ஆனால், அவன் மற்றவர்களோடு கொள்ளு கின்ற சமூகத் தொடர்புகளைக் கண்டு பயப்படலாம். ஏனென் றால், அவன் அடிக்கடி மற்றவர்களால் ஏளனம் செய்யப்பட்டிருக் கின்றான். இந்தப் போராட்டத்திற்குத் துலங்கும் முகத்தான் அவன் மற்றவர்களோடு கொள்ளுகின்ற தொடர்பைப் பின் வாங்கிக் கொள்ளலாம். அல்லது மற்றவர்களால் புறக்கணிக்கப் படுகின்ற அளவுக்கு ஆக்கிரமிப்பு உணர்ச்சியுடன் நடந்துகொள்ள லாம். ஒருமைப்பாடில்லாத அவனுடைய இணக்கங்கள் அவ னுடைய கவலையை அவனைவிட்டுப் போகும்படிச் செய்கின்றன. ஆனால், அவை அவனுடைய உண்மையான நோக்கங்களைத் தோல்வியடையச் செய்கின்றன. எனவே, நடத்தைக் கோளாறு களின் உளவியல் என்பது ஒருமைப்பாடில்லாத இணக்கங்களின் உளவியல் என்றே விளக்கம் பெறுகின்றது. இந்த ஒருமைப் பாடில்லாத இணக்கம் சிறிய அளவிலுமிருக்கலாம்; பெரிய அள விலுமிருக்கலாம்.

நல்லிணக்கத்தில் தெளி உணர்நிலை : எந்த ஒரு மனிதனும் தன்னுடைய நல்லிணக்கங்களை வேண்டுமென்றே ஒருமைப்பாடில் லாதவையாகத் தேர்ந்தெடுப்பதில்லை. நல்ல இயல்பு நிலை யிலுள்ள மனிதர்கள் தங்களுடைய எல்லா ஊக்கமூட்டிகளைப் பற்றியும் தெளிவான அறிவு பெற்றவர்களாக இருப்பதில்லை. அல்லது அவை எவ்வாறு நிறைவு செய்யப்படுகின்றன என்பதையும் அறிந்திருப்பதில்லை.

பெரும்பாலான ஊக்கமூட்டிகளும் நல்லிணக்கங்களும் பெரும் அளவுக்குப் புதை உணர்நிலையில் (unconscious) இருக்கின்றன என்ற கருத்து உளவியல் கோட்பாட்டில் மிக முக்கியமானதாக இருந்து வருகின்றது. ஆனால், இது அடிக்கடித் தவறாகப் புரிந்துகொள் ளப்படுகின்றது. மனித உள்ளத்தின் எந்தப் பகுதியும் புதை உணர் நிலை என்று அழைக்கப்படவில்லை. புதை உணர்நிலையில் புறக் கணிக்கப்பட்ட உணர்ச்சித் துடிப்புகளும் துன்பகரமான போராட்டங்களும் தள்ளப்படுகின்றன என்பது செயல்சார்பான கருத்து என்று கொள்ள வேண்டுமே தவிர, அப்படிப்பட்ட ஒரு பொருளும் ஓர் இடமும் இருப்பதாகக் கொள்ளக் கூடாது. பல

ஊக்கிகளும் போராட்டங்களும் தெளி உணர்நிலையில் (concious) இல்லை. ஏனென்றால், அவை வாழ்க்கையின் தொடக்க காலத்திலேயே வந்தேறியவையாகும். மற்றப் போராட்டங்கள் எல்லாம் நல்லிணக்கத்தின் காரணமாகப் புதை உணர்நிலை அடைகின்றன. கவலையைக் கட்டுப்படுத்தும் ஒரு வழி என்னவென்றால், துன்பம் தருகின்ற ஒரு தலைப்பைப்பற்றிச் சிந்திக்காமலிருப்பது தான். எனவேதான், இது நல்லிணக்க நடத்தையைப் பெறுவதற்கு ஒரு பொது அமைப்பாக இருக்கின்றது.

நல்லிணக்கத்தை இழந்தவனும் நரம்புவழி நோயுற்றவனும் ஒருமைப்பாடுறாத இணக்கத் தீர்வுகளில் தடுமாறுகின்றனர். ஏனென்றால், அவர்கள் தங்களுடைய கவலையைக் குறைக்கின்றார்கள். ஏதேனும் ஒரு நடவடிக்கையில் ஈடுபடுவதாலோ ஏதேனும் ஒன்றைப்பற்றிச் சிந்திப்பதாலோ இப்படிப்பட்ட மனிதன் தெளிவற்ற வகையில் நன்றாக இருப்பதாக உணருகின்றான். ஆனால், அவன் அதற்குக் காரணத்தைச் சொல்ல முடியாதவனாக இருக்கின்றான். எந்த ஒரு மனிதனும் தான் ஏமாற்றமடைய வேண்டுமென்று விரும்புவதில்லை. ஆனால், திரிபுணர்வுகள் (delusions) கொண்ட மனிதன் படிப்படியாக உருத்திரிந்த வழிகளின் சிந்தனையைப் பெறுகின்றான். ஏனென்றால், அந்த வழிகளின் சிந்தனை அவனுடைய சொந்தத் தேவைகளில் சிலவற்றைத் தணிப்பதற்கு உதவுகின்றன.

ஆளுமை: உடல் சார்பான குறிப்பிட்ட காரணங்கள் ஏதும் இருந்தாலொழிய, நடத்தைக் கோளாறுகள் மிக அரிதாகவே திடீரென்று தோன்றுகின்றன. இல்லை என்றால், அவை நீண்ட நாள்களுக்குச் சிறிது சிறிதாக வளர்ச்சியுற்றுச் செல்லுகின்றன. ஒருமைப்பாடுறாத இணக்கத்தையுடைய ஒரு மனிதனின் வாழ்க்கை வரலாற்றை ஆராய்வோமானால், அவனுடைய பிற்கால வாழ்க்கையின்மீது தூவப்பட்டுள்ள பண்புக்கூறுகளின் வளர்ச்சியைக் காண முடியும். திரிபுணர்ச்சி கொண்ட மனிதன் எப்பொழுதும் மற்றவர்களைச் சந்தேகக் கண்கொண்டே நோக்குகின்றான் என்று நாம் அவனை விவரிக்கலாம். அவனுடைய திறமைகளைப்பற்றி இறுமாப்புக் கொண்டுள்ளான் என்றும் கூறலாம். இப்படிப்பட்ட கூறாய்வுகளிலிருந்து ஒரு தனி மனிதனுடைய ஆளுமைதான் நடத்தைக்கோளாறுக்கு அடிப்படைக் காரணமாக இருக்கின்றது என்ற கோட்பாடு உருவாக்கப்பட்டது. ஆளுமை என்ற கருத்துச் சொல் மிகவும் மதிப்பு மிக்கதுதான். ஆனால், அது கடுமையான தப்பான விளக்கங்களுக்கு இலக்காகின்றது.

ஒரு மனிதன் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமோ அவ்வாறு அவன் நடந்துகொள்ளுவதில்லை என்று கூறுகின்றோம். அப்படிப்பட்டவர்களையும் நாம் சமூகத்தில் ஏராளமாகக் காண லாம். ஏனென்றால், அவன் ஏதோ ஓர் ஆளுமை வகையைச் சேர்ந்தவன். உண்மையில் ஆளுமை என்று கூறப்படுவது என்ன வெனில், வலிமையூட்டப்பட்டதன் விளைவாக ஒரு மனிதன் பெற்றுள்ள இணக்கத்திற்குரிய துலங்கல் வகைகளின் சான்று என்பதாகும். குறிப்பிட்ட ஒரு வகையான துலங்கல்கள் ஒரு மனிதனிடம் நிலைத்து நிற்கின்றன. இஃது அவன் பெற்றுள்ள பல நிகழ்ச்சி அனுபவங்களின் விளைவாகும். குறிப்பிட்ட சூழ்நிலை யில் அவன் திரும்பத் திரும்ப அதே நிகழ்ச்சியைச் சந்தித்து அதே அனுபவத்தைத்தான் பெறுகின்றான். ஆனால், உள்ளார்ந்த ஆளுமைக் கோட்பாடு இக் கருத்திற்கு முரணாகச் செல்லுகின்றது. அக் கருத்துப்படி, ஒரு மனிதன் ஏன் தன்னைப் பின்வாங்கிக் கொள்ளுகின்றான் என்றால், அவன் பின்வாங்கிக் கொள்ளுகின்ற ஓர் ஆளுமையுடையவனாக இருக்கின்றான் என்பதாகும். இக் கருத்து ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை.

அந்த மனிதனுடைய இக் கால நடத்தை காட்டுவது என்ன வென்றால், அவனுடைய பின்வாங்கும் நடத்தையின் துலங்கல்கள் அடிக்கடி மிக வலிமையாக அவனுடைய கடந்தகால வாழ்க்கையில் வலிமையூட்டப்பட்டிருக்கின்றன என்பதாகும். பெரும்பாலும் அவனுடைய கவலையைக் குறைப்பதுதான் முக்கியமாக இருக் கின்றது. மற்றொரு மனிதன் வேறு வகையான துலங்கல்களை உபயோகிக்கின்றான். ஏனென்றால், வேறுபட்ட சூழ்நிலைகள் அவனுடைய கற்றல் செயலைப் பாதித்திருக்கின்றன. பயம் கொள்ளுதல், சுயநலம் கொள்ளுதல், சமாதானம் கூறல், அளவுக்கு மீறி மிகைப்படுத்தல் அல்லது குற்றங்கூறல் ஆளுமைகள் ஆகியவை இணக்கத்திற்குரிய கற்றல் செயல்முறையின் கடைசி முடிவுகளாக இருக்கின்றன. சூழ்நிலை மறுபடியும் நிகழ்கின்ற போது மிக அதிகமாக வலிமையூட்டப்பட்ட வகையின் ஒரு துலங்கல் மறுபடியும் இயங்கச் செய்யப்படுகின்றது. எனவே, ஆளுமை என்பது சில வகையான நல்லிணக்கங்களைச் செய்வதற்கு ஒரு தனி மனிதனிடம் வந்தேறி நிலைத்திருக்கின்ற மனப் பாங்காகும்.

3. அன்றாட வாழ்க்கையில் பொருத்தக்கேடுகள் (அல்லிணக்கங்கள்)

கடுமையான நடத்தைக் கோளாறுகளுக்கு ஆளானவர்களுடைய வாழ்க்கையை முறையாக ஆராய்வதுதான் பிறழ்வு உளவியலின் முக்கிய செய்திட்பொருள் என்று முன்பே கண்டோம். ஆனால், சில கட்டங்களில் பிறழ்வு உளவியல் இயல்பு நிலையிலுள்ள மனிதர்களின் பல குணப்பண்புகளையுங்கூட ஆராய்கின்றது. பெரும்பாலான மனிதர்கள் இயல்பு நிலையில்தானிருக்கின்றார்கள். இதன் பொருள் என்னவென்றால், பெரும்பாலானவர்களின் எதிர்வினைகள் பொதுவாகவும், வழக்கமாகவும், வாழ்க்கைக் குறிக்கோள்களை விட்டு வெகுதூரம் அகன்று சென்று விடாமலுமிருக்கின்றன என்பதாகும். ஆனால், உலகத்தில் வாழ்கின்ற மனிதர்களில் யாரும் நூற்றுக்கு நூறு முழு மன நிறைவுடன் இருப்பதாகக் கூற முடியாது. ஒவ்வொரு மனிதனும் குறைந்தது ஏதேனும் ஒரு சிறு அளவிலேனும் பற்றாக்குறை அறிகுறிகளையுடையவனாகவே இருக்கின்றான். எனவே, இயல்பு நிலையிலுள்ள மனிதர்களின் நடத்தையைப்பற்றி அறிவதற்கும் பிறழ்வு உளவியல் துணை புரிகின்றது. மேலும், இது மனிதர்களின் கடுமையான மனக்கோளாறுகளைப்பற்றி அறிவதற்கு ஒரு தொடக்கமாகவும் அமைகின்றது.

மனிதர்களின் இயல் பிறழ்ந்த நிலைகளில் ஒன்றான திரிபுணர்வைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமானால், ஈடு செய்தல் (compensation), அறிவார்ந்த விளக்கம் (rationalization) ஆகிய கருத்துச் சொற்களின் விளக்கங்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். கடுமையான மனக் கோளாறுகளுக்கு முன்பு தோன்றுகின்ற சில ஏலா நிலையை உண்டாக்குகின்ற இயல்பிறழ்ந்தமைகளைப் (abnormalities) பற்றியும் நாம் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

பொருத்தப்பாட்டின் (நல்லிணக்கத்தின்) இயந்திர நுட்பங்கள்

போராட்டமும் மனமுறிவும் ஊக்கிகளை நிறைவு செய்யாம லிருந்து விடுமானால், அது மேலும் அதிகமாக்கப்பட்ட ஊக்கியான கவலையைத் தோற்றுவிக்கின்றது. கலங்கிய நிலையிலுள்ள ஒரு மனிதன், தன்னுடைய கவலை குறைகின்ற வரையிலும் அல்லது தன்னுடைய தேவை நிறைவு பெறுகின்ற வரையிலும் பல்வேறு பட்ட நடத்தைகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும்படியாகத் தூண்டப்படுகின்றான். வெற்றிகரமான துலங்கல் வலுவூட்டப் படுகின்றது. எனவே, அது போன்ற சூழ்நிலை மறுபடியும் ஏற்படும் போது அதே துலங்கல் அம் மனிதனிடம் மறுபடியும் நிகழக்கூடும் என்பதற்கான வாய்ப்புகள் அதிகமிருக்கின்றன. மன இறுக்கத் தைக் குறைக்கின்ற இவ் வகையை மனச் செயல்முறையைத் தகுந்த கருத்துச் சொல்லால் குறிப்பிடுவதற்கு உளவியல் பல காலமாக முயன்று உருவாக்கிய சொல் இயந்திர நுட்பங்கள் (mechanisms) என்பதாகும். பொருத்தப்பாட்டிற்கான இயந்திர நுட்பம் கற்ற ஒரு துலங்கலாகும்; அல்லது ஓர் உந்துதலைக் (drive) குறைக்கின்ற துலங்கல்களின் ஒரு வடிவம் என்றும் கூறலாம். மனிதர்கள் தங்கள் ஊக்கிகளை நிறைவு செய்துகொள்ளுகின்ற பழக்கங்களையும் இயந்திர நுட்பங்கள் என்று கூறலாம்.

தனி மனிதப் பொருத்தப்பாடுகளுக்காக மனிதர்கள் உபயோ கிக்கின்ற இயந்திர நுட்பங்கள் எண்ணிக்கையில் ஏராளமாக இருக்கின்றன. ஆகையினால், சில பெயர்களை உபயோகித்துப் பொது இயந்திர நுட்பங்களை உருவாக்கி, அவற்றின் பொருத்தப் பாட்டுச் செயல்முறை வழியிலேயே விளக்கிக் கூற முடியும். உதா ரணமாக, ஒரு மனிதன் சமூகத்தில் மதிப்பைப் பெறுவதில் தவறி விடுவதால், அவன் மனமுறிவடைந்து விடுகின்றான் என்று வைத் துக்கொள்ளுவோம். அந்தத் தேவையை நிறைவு செய்துகொள் ளும்பொருட்டு மற்றவர்களுடைய வேலைகளில் குறுக்கிடுகின்றான்; உரக்கக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்கின்றான். இவ்வாறான எதிர்ச் செயல்கள் அவனுடைய மனமுறிவின் தேவையை நிறைவேற்றிக் கொள்ளுவதற்காகும். இந்தத் துலங்கல்கள் பொருத்தப்பாட் டிற்கான இயந்திர நுட்பத்தின் ஒரு வகையை வரையறுக்கின்றன. இவற்றைக் கவன ஈர்ப்பு இயந்திர நுட்பங்கள் (attention-getting-mechanisms) என்று கூறுகிறார்கள். இந்த வரையறை துலங்கல் களின் இயல்பையும் உபயோகத்தையும் விளக்குகின்றது.

ஆனால், கவன ஈர்ப்பு இயந்திர நுட்பங்களில் அடங்குகின்ற துலங்கல்கள் ஒவ்வொருவரிடமும் மாறுபாடுள்ளவையாக இருக் கின்றன. மேலும், அவை காலத்திற்குக் காலம் அந்த மனிதனின்

வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கு ஏற்றாற்போல் மாறுகின்றன. எனவே, ஒரு குறிப்பிட்ட இயந்திர நுட்பம் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு உள்பட்டதாகவும், குறிப்பிட்ட எதிர்வினையுடையதாகவும் குறிப்பிடப்படவில்லை. அது, துலங்கல்களின் விரிந்த வடிவத்தைக் கொண்டு சில உயிர்நிலையான உருவமைப்புள்ளதாக இருக்கின்றது.

ஒவ்வொரு மனிதனும் இணக்கம் கொள்ள வேண்டியவனாக இருப்பதால், ஒருவருடைய நடத்தையும் எல்லாப் பண்புகளிலும் முழு ஒருமைப்பாடுள்ளதாக இருப்பதில்லை. பொருத்தப்பாடு இயந்திர நுட்பங்கள் மிகச் சிறந்த இயல்பு நிலையிலிருந்து மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நிலை வரையிலும் எல்லா மனிதர்களிடமும் காணப்படுகின்றன. எனவே, மிகச் சிறந்த ஓர் உளவியல் கண்டுபிடிப்பு என்னவென்றால், இதே இயந்திர நுட்பங்களை அன்றாட வாழ்க்கையில் சாதாரண மக்களும் உபயோகிக்கின்றார்கள்; மருத்துவ விடுதிகளில் மனக்கோளாறுள்ள நோயாளிகளும் உபயோகிக்கின்றார்கள். பெரும்பாலும் எல்லா மனிதர்களுமே தங்களுடைய தோல்விகளுக்குச் சாக்குப்போக்குக் கூறியோ மற்றவர்களைக் குறை கூறியோ தங்களுடைய தோல்வி உணர்ச்சியினால் ஏற்பட்ட கவலையைப் போக்கிக்கொள்ளுகின்றார்கள்.

ஒரு மிகப் பொதுவான இயந்திர நுட்பம் என்னவென்றால், அறிவார்ந்த விளக்கம் (rationalization) அல்லது அறிவுக்கொத்ததாக்குதலாகும். ஏமாற்றமடைந்த ஒரு நோயாளி தான் ஒரு சதித்திட்டத்திற்குப் பலியாகிவிட்டதாக நம்புகின்றான். ஏனென்றால், அவனுடைய பெருமை மதிப்புரிமை பெறுவதை அந்தச் சதித்திட்டம் தடுத்துவிட்டதாக நினைக்கின்றான். இஃது அறிவார்ந்த விளக்கத்தின் அமைப்பாகும். எவ்வாறெனில், இஃது அவனுடைய தோல்வி உணர்ச்சியை விளக்கிக் கூறுவதற்கு உதவுகின்றது. ஒருவருடைய நடத்தையிலுள்ள இயந்திர நுட்பங்களை ஆராய்வதே ஒரு மதிப்பீடாகும். அஃது இயல்புநிலை நடத்தையிலிருந்து இயல் பிறழ்ந்த நடத்தைக்கு ஓர் இணைப்புத்தொடரை ஏற்படுத்துகின்றது. இது போலவே திரிபுணர்வின் தன்மையை நாம் தெரிந்துகொள்ள வேண்டுமானால், ஈடு செய்தல் (compensation), அறிவார்ந்த விளக்கம், புறத்தெழும் அகக்காட்சி (projection) போன்ற இயந்திர நுட்பங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

தற்காப்பு வழியமைப்புகள் (Defense Mechanisms)

இணக்கத்திற்குரிய நடத்தையின் சில பொது வடிவங்களைத் தான் தற்காப்பு வழியமைப்புகள் என்று வகைப்படுத்தியிருக்கின்றார்கள்; இதைத் தப்பியோடும் (escape) வழியமைப்பு என்றும்

கூறுகின்றார்கள். நடத்தைக் கோளாறுகளைப்பற்றிச் சிந்திப்பதற்கு இந்தக் கருத்துச் சொற்கள் மிகவும் பயனுள்ளவையாக இருக்கின்றன. ஆனால், அவை ஒன்றுக்கொன்று தனியுரிமையுடையவையல்ல. எனவே, இயந்திர நுட்பங்களைத் துருவி நோக்கி, அவற்றைத் தற்காப்பு என்றோ தப்பியோடல் என்றோ வகைப்படுத்த முடியாது.

தற்காப்பு நடத்தையில் தனி மனிதக் குறைபாடுகளையும் போராட்டங்களையும் மறைப்பதற்கும் சரி செய்வதற்கும் இயங்குகின்ற துலங்கல்கள் உள்ளடங்கியிருக்கின்றன. தற்காப்பு வழியமைப்புகள் அல்லது தற்காப்பு நடத்தை என்று ஏன் ஏற்பட்டது என்றால், அவை ஒரு மனிதன், தன்னைக் குற்றவாளியாக நினைத்துக் கொண்டு தன்னைத்தானே குற்றங்கூறிக் கொள்வதிலிருந்தும் வெட்கம் கொள்வதிலிருந்தும், குறைபாடுள்ளவன் என்று கருதிக் கொண்டிருப்பதிலிருந்தும் பாதுகாப்பதாகத் தோன்றுகின்ற காரணத்தால் என்று கூறுகின்றனர். தற்காப்பு வழியமைப்புகள் உண்மையான குறைபாடுகளிலிருந்தோ, இயலாமைகளிலிருந்தோ தோன்றுவதில்லை. அவை அகவயமான கூறுகளிலிருந்து தோன்றுகின்றன. குறிப்பாகத் தனி மனிதனுடைய ஆளுமைப் பண்புகள் என்று கூறலாம். தன்னுடைய ஊக்கிகளை நிறைவு செய்து கொள்ள இயலாமலிருப்பதற்கான காரணங்கள் தன்னுடைய குறைந்த வலிமை, பயிற்சித் திறம், தோற்றம், நுண்ணறிவு, சமூக நிலை ஆகியவற்றில்தானிருக்கின்றன என்று ஒரு மனிதன் நம்புவானானால், அவன் தற்காப்பு நடத்தையுள்ளவனாக இருக்க முடியும். சில திறமையுள்ள மனிதர்கள் தங்களைப்பற்றித் தாழ்வாக நம்பிக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், உண்மையாகவே குறைபாடுள்ள மனிதர்களும் தகுதியில்லாதவர்களும் அப்படிப்பட்ட சிந்தனையே அற்றவர்களாக இருக்கின்றார்கள். எனவே, தற்காப்பு வழியமைப்புகள் அகவயமானவை என்ற கருத்து மேலோங்குகின்றது.

சில குழந்தைகள் அல்லது பள்ளிச் சிறுவர்கள் வருத்தத்தைத் தருகின்ற தோல்வியனுபவத்தைப் பெறுகின்றார்கள். பெற்றோர்கள் அவர்களைத் திட்டியிருக்கலாம். ஆசிரியர்கள் அவர்களைக் கடிந்துரைக்கலாம். அல்லது அவர்கள் வயதைச் சேர்ந்த மற்றச் சிறுவர்கள் கேலி செய்திருக்கலாம்; அல்லது அவர்களுடைய வெற்றிகளைக் கண்டோ மேம்பாட்டைக் கண்டோ வெறுப்பைக் காட்டியிருக்கலாம். ஏதோ ஒன்றின் விளைவாகப் போட்டியை உண்டாக்குகின்ற அல்லது நடத்தையை மதிப்பீடு செய்கின்ற சூழ்நிலைக்கும் பயத்தையுண்டாக்கும் தோல்வியின் கவலையான

துலங்கலுக்குமிடையில் கற்கப்பட்ட ஓர் இணைப்பு அமைக்கப்படு கின்றது. அத்தகைய போராட்டத்தைத் தீர்க்கும் ஒரு வழி கடினமாக முயலுவதுதான். பயத்தை வெற்றிகொள்ளும் பொருட்டு ஒரேயடியாக அல்லது முழுமையாக ஒருவன் தன்னுடைய திறமையை நிலை நாட்ட வேண்டும். ஆனால், தற்காப்பு வழிகள் எல்லாம் ஆக்கிரமிப்பு இயல்பைக் கொண்டவை யாகும். பெரும்பாலும் மற்ற மனிதர்களோடு ஊடாட்டத்தைக் கொண்டவையாக இருக்கின்றன.

தோல்வியினால் ஏற்படுகின்ற பயத்தைச் சரி செய்வதற்குச் சம்பந்தப்பட்டவர்கள் மற்றொரு வழியையும் கடைப்பிடிக்கலாம். அதாவது, பயத்தை உண்டாக்குகின்ற தூண்டல்களிடமிருந்து முற்றிலும் விலகிச் சென்றுவிடுவதாகும். இந்த வகையான தப்பி யோடும் வழியமைப்புகள் (escape mechanisms) குறைந்த இயக்க முள்ளவையாகவும், மிக்க தனித்து இயங்கக் கூடியவையாகவும் இருக்கின்றன. தற்காப்பு வழியமைப்புகள் போன்று அடிக்கடி அதிகமாகச் செயல்படுவதில்லை. ஆனால், தற்காப்பு வழியமைப்பு களும் தப்பியோடும் வழியமைப்புகளும் முரண்பாடானவையல்ல. சில நடத்தைகளில் இரண்டு பண்புக்கூறுகளையும் காணலாம். உதாரணமாக, ஓர் இளைஞன் ஒரு தனித்த விருப்பத்தொழிலில் மேலோங்கியிருக்கின்றான். அவன் மற்றவர்களுடைய மதிப்பீடுகளி லிருந்து தப்பியிருக்கின்றான்; ஆனால், அதே சமயத்தில் தன் னுடைய சொந்த மரியாதையைப் பாதுகாத்துக்கொள்ளு கின்றான்.

குழந்தைப் பருவத்தில் அமைந்த தற்காப்பு வழியமைப்புகள் வயது வந்த பிற்காலத்திலும் தொடர்ந்து இயங்குகின்றன. அவற்றின் மூலக்காரணங்கள் மறைந்துவிட்டபோதிலும் தற்காப்பு வழியமைப்புகள் தொடர்ந்து இருந்து வரலாம். ஆனால், மிகக் கடுமையானதும், மிக நீண்ட நாள்களுக்குத் தொடர்ந்து செல்லு வதுமான தற்காப்புகள்தான் இயல் பிறழ்ந்த மன நிலைமைகளாக இருக்கின்றன.

தற்காப்பு வழியமைப்புகள் எண்ணிக்கையில் மிக அதிகமாகச் செல்லலாம் என்றாலும் அவற்றைச் சில பொது வழியமைப்புகளில் அடைக்கின்றனர். அவை, ஈடு செய்தல் (compensation), ஒன்று தல் (identification), எதிர்வினை அமைப்பு (reaction formation), அறிவார்ந்த விளக்கம் (rationalization), புறத்தெழும் அகக்காட்சி (projection), தனித்து விலகியிருத்தல் (seclusiveness), எதிர்மறை (negativism), மனக்கோட்டை அல்லது கற்பனைத் தோற்றம் (fantasy) என்பவை.

ஈடு செய்தல்: ஈடு செய்தல் என்பது ஒரு மனச் செயல்முறையாகும். ஏதோ ஒரு சாதனையைப் பெறுவதற்குத் தவறியதால் ஏற்பட்ட கவலைக்கு எதிராக விரிவடைந்த ஒரு தற்காப்பு வழியமைப்பாகும். ஈடு செய்தல் முதல் சாதனை தவறியதற்கு ஈடாகப் பெறுகின்ற அடுத்த சாதனையாகும். எனவே, ஈடு செய்தல் என்பது எப்போதும் ஒரு மாற்றுச் சாதனையைப்பெறுவதைத்தான் குறிக்கின்றது. ஆகவே, அஃது ஒரு போலியான சாதனையே. ஈடு செய்தல்கள் இரண்டு பொருத்தப்பாட்டுப் பங்குகளைக் கொண்டிருக்கின்றன. ஒன்று, அவை உண்மையான சாதனைக்கு மாற்றுச் சாதனைகளாகும். ஆகையினால் மனமுறிவடையச் செய்த ஊக்கிகளை மறைமுகமாகவே நிறைவடையச் செய்கின்றன. இரண்டாவதாக, அவை மனமுறிவுக்கு ஆளான மனிதனை அவனுடைய குறைபாடுகளைப்பற்றிச் சிந்திக்காவண்ணம் அவனுடைய கவனத்தைத் தடுத்து, மற்றவர்களுடைய கவனத்தைத் தன்னுடைய மாற்றுத் தேர்ச்சிப் பண்புகளின் பக்கம் திருப்புகின்றன. ஈடு செய்யும் செயல் முறையானது முக்கியமாகத் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ள உதவுகின்றது. அது மற்றவர்களை அவ்வளவு எளிதில் ஏமாற்றிவிடுவதில்லை.

குழந்தைகளிடம் காணப்படும் பிரச்சினையான நடத்தைகளில் ஈடு செய்தல்களை மிக எளிதாகக் கண்டறியலாம். அவர்களுடைய ஆக்கிரமிப்பு நடத்தைகளில் இவை அடிக்கடி வெளிப்படுகின்றன. ஒரு சிறுவன் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டான். அவன் ஒரு பிரச்சினைக் குழந்தை என்று கருதப்பட்டான். அவன் பள்ளிக்கூடத்தில் மிகவும் தொந்தரவு கொடுப்பவனாகவும், விளையாட்டு மைதானத்தில் எளியவரைக் கொடுமைப்படுத்துபவனாகவுமிருந்து வந்தான்; மேலும், அருகிலுள்ள விற்பனைக்கூடத்திலிருந்து சில பொருள்களையும் திருடியிருந்தான். அவனுடைய நடத்தையைப்பற்றித் துருவியாராய்ந்து பார்த்தனர். அவனுடைய இந்த வகையான வெளிப்படையான ஆக்கிரமிப்பு நடத்தைகளுக்கடியில் வேறு சில உண்மைகள் மறைந்திருந்தன. அவன் தன்னுடைய உடல் சார்பான திறமைகளைப்பற்றி மிகவும் தாழ்வான மனப் போக்குடையவனாக இருந்தான். கடந்த சிலவாண்டுகளில் அவன் பல முறைகள் மிகவும் காயமடைந்திருக்கின்றான். மூன்று முறைகள் எலும்பு முறிவுகளும் ஏற்பட்டிருக்கின்றன இந்தக் காலங்களில் முக்கியமாக அவனுடைய தந்தை வீட்டிலிருப்பதில்லை. அவனுடைய தாயார் காயமடைவது தொடர்பாக அதிகமான அளவுக்கு எச்சரிக்கைகள் செய்திருக்கின்றாள். இந்த எச்சரிக்கைகள் அவனுக்கு எளிதில் அஞ்சுகின்ற தன்மையை அதிகரிக்கச் செய்தன.

அவனுடைய உடல் தொடர்பான மேன்மைகளுக்கான ஊக்கி களும், மதிப்புரிமைகளுக்கான ஊக்கிகளும் சிறுவயதுப் பருவத்தில் இயல்பாக இருந்தன; உயர்ந்த மதிப்புள்ளவையாயுமிருந்தன. அவ்வாறு இருந்த நடத்தை வகுப்பறைக் கோளாறுகளிலும், பாது காப்பாகச் சிறு குழந்தைகளைத் தாக்குவதிலும் வெளிப்பட்டு ஈடு செய்யும் நடத்தையாக மாறிற்று. தன்னுடைய சக மாணவர்கள் முன்னால் ஒரு கடினமான பேர்வழி போன்ற தோற்றத்தைக் காட்டி வந்தான். எனவே, இவ்வாறாக அவன் தன்னுடைய நொய்மை யான உடலமைப்பைப்பற்றிக் கொண்டிருந்த தன்னுடைய கவலை யைத் தணித்துக் கொண்டான்.

ஈடு செய்தல் பல்வேறு வடிவங்களில் தோன்றலாம். சமூக மதிப்புரிமை இல்லாமலிருக்கும் ஒருவனிடம் பிறர் கவனத்தை ஈர்க்கும் இயந்திர நுட்பம் தோன்றலாம். ஒருவனுடைய அறி வாற்றல் சம்பந்தப்பட்ட சுயமரியாதைக்குப் பங்கம் ஏற்படு மானால், அதற்கு ஏற்றவாறு ஈடு செய்தல் அவனிடம் காணப்படு கின்றது. பெற்றோர் தம்முடைய அறிவாற்றல் சம்பந்தப்பட்ட தோல்விகளைத் தம்முடைய குழந்தைகள் மூலமாக ஈடு செய்து கொள்ளுகின்றனர். மேலும், தாம் விரும்பிய ஒரு வாழ்க்கைத் துறையில் தாம் செல்ல முடியாதபோது தம்முடைய குழந்தைகளை அத் துறையில் செலுத்தி ஈடு செய்து கொள்ளுகின்றனர் சில பெற்றோர். ஆனால், ஈடு செய்ததிலுள்ள முடிவுகள் எப்பொழுதும் அவப்பேறுடையவையாக இருப்பதில்லை. ஒரு குழந்தையோ வயது வந்தவரோ தாம் மிக அதிகமாக விரும்புகின்ற ஒரு பொருளை அடைய முடியாதவாறு தடுக்கப்படுவாரானால், பொழுது போக்கு நடவடிக்கைகள், பொருள்களைச் சேர்த்தல், வாழ்க்கைத் தொழில் விருப்பங்கள் போன்ற வடிவங்களில் ஈடுசெய்தல் வெற்றி கரமான பொருத்தப்பாட்டுக்கு மறைமுகமான வழியை அமைத் துக் காட்டலாம். மிகவும் அதிகமான சான்றுகளைத் தேடி நாம் செல்ல வேண்டுவதில்லை. போட்டி விளையாட்டுகளில் அச்சம் கொள்ளுகின்ற சிறுவன் அவற்றை ஈடு செய்யும் பொருத்தப் பாடாக அறிவியல், கலை போன்றவற்றில் இறுதி வெற்றி பெறு கின்றான். ஆனால், இந்தச் செயல்முறைக்கு மாறாகவும் செல்லுவ துண்டு. ஈடுசெய்தலுக்குரிய எதிர்வினைகள் கடமையான நடத் தைக் கோளாறுகளின் அறிகுறிகளாகவும் அடிக்கடி காணப்படு கின்றன. ஈடு செய்தல் முறையானது மாற்றுச்சாதனைதான் என்பதாலேயே அது கெட்டது என்று ஒதுக்கிவிடுவதற்கில்லை. மற்ற இயந்திர நுட்பங்களைப் போன்று இதையும் மதிப்பீடு செய்து பார்க்கும்போது அதனுடைய உண்மையான பயன் என்ன என்பது, ஒரு மனிதனுடைய முழு வாழ்க்கையிலும் ஓர் ஒருமையை

உண்டாக்கக்கூடியதாக இருக்கின்றதா அல்லது ஒருமையைக் குழைப்பதாக இருக்கின்றதா என்பதைப் பொறுத்திருக்கின்றது.

ஒன்றுதல்: இது மற்றொரு பொதுவான இயந்திர நுட்பமாகும். இந்தச் செயல்முறையின்படி ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் சாதனைகளையோ ஒரு குழுவின் சாதனைகளையோ தன்னுடைய சொந்த சாதனைகளாக எடுத்துக்கொண்டு தன்னுடைய மன இறுக்கத்தைத் தளர்த்திக்கொள்ளுகின்றான். எனவே, இந்த மனிதன் மற்றொரு மனிதனிடமோ குழுவினிடமோ தன்னையே ஒன்றுதல் செய்துகொள்ளுகின்றான். ஒன்றுதல் எல்லா வயதிலும் நடைபெறுகின்றது. ஒரு குழந்தை தன்னுடைய தந்தையின் வலிமையிலும் அறிவெல்லையிலும் பெருமை கொள்ளுவதும், ஒரு மாணவனின் போட்டிப்பந்தய வெற்றிகளின் பெருமைகளைத் தன்னுடைய பெருமையாகக்கொள்ளுவதும், வயது முதிர்ந்தோர் அரசியல் கட்சிகளிலும், குழுக்களிலும் பங்கு கொண்டு சிறப்புப் பெறுவதைத் தம்முடைய சிறப்பாகக்கொள்ளுவதும் ஒன்றுதலின் செயல்முறைகளேயாகும். பெரும்பாலான நிகழ்ச்சிகளில் ஒன்றுதலானது ஒருமைப்பாட்டுக்கான இயந்திர நுட்பமாக இருக்கின்றது; சமூக இயல்பை உருவாக்கும் ஆக்கச்சார்பான செல்வாக்கைப் பெற்றிருக்கின்றது. ஆனால், இது மிகுந்த அளவுக்குச் சென்று, திரிபுணர்வில் ஒன்றுதல் நடைபெறுமாறு ஏற்படுமானால், அது நடத்தைக் கோளாறை உண்டாக்குகின்றது. அந்த நோயாளி தன்னைக் கடவுளோடும், அரசனோடும் ஒன்றுதல் செய்துகொண்டு தன்னைக் கடவுள் என்றும், அரசன் என்றும் கூறிக்கொள்ளும் நிலை பிறக்கலாம். எனவே, ஒன்றுதல் இயல்பு நிலையில் நடைபெறும் வரையில்தான் அது தற்காப்பு வழியமைப்பாக இருக்கின்றது. அந்த எல்லையை அது கடந்துவிடுமானால், இயல்பிறழ்ந்தமைகளை வெளிப்படுத்தலாம். ஒன்றுதல் ஒருவரால் வேண்டுமென்றே விரும்பி ஏற்ற வழியமைப்பன்று. இது மற்றப் பொருத்தப்பாட்டு இயந்திர நுட்பங்களைப் போன்றதுமன்று.

தற்காப்பு அமைப்பு வழிகள் எல்லாமே புதை உணர்நிலைகளாகும் (unconscious). எவ்வாறெனில், தற்காப்பு அமைப்பு வழிக்கு இலக்கான ஒரு மனிதன் தான் என்ன செய்கின்றான் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால், ஏன் அதைச் செய்கின்றான் என்பது அவனுக்குத் தெரியாது. தேவையை நிறைவு செய்துகொள்ளும் ஏதேனும் ஓர் ஊக்கி வடிவத்தால் வலிவூட்டப்பட்ட துலங்கலைக்கொண்டு செயல்படுகின்றான்; அதனால் எந்த வகையான தெளிஉணர்நிலை திட்டமின்றியே கற்கின்றான். அதனால் துலங்கலின் அடிப்படைக் காரணத்தை அவன் அறியான்.

எதிர்வினை அமைப்பு : ஒரு போராட்டத்திற்குத் தீர்வு காணுகின்ற வழிகளில் ஒன்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊக்கிகளில் ஒன்றை வலிமை பெறச் செய்வதாகும். பால்விருப்பம், பகைமை ஆகியவற்றின் உள்துடிப்புகள் மிகவும் வலிமை மிக்கவையாக இருந்தால், அவற்றை அடக்கும்போதும் திருப்பிச் செயல்படும் ஒரு மனப்பாங்கு அடிக்கடி உடன் தோன்றுகின்றது. அந்த நடத்தையின் வடிவம் அடக்கப்பட்ட மனப்பாங்குகளுக்கு முற்றிலும் எதிரான உணர்ச்சிகளைக் கொண்டிருக்கின்றது. இந்த வகையான நடத்தைக்குப் பெயர்தான் எதிர்வினை அமைப்பு என்பது. மிக வலிமையாக உணரப்பட்ட உள்துடிப்புக்கு எதிரான ஒரு மனப்பாங்கை நிலைநிறுத்துவதுதான் எதிர்வினையமைப்பில் உள்ள முக்கிய செயல்முறையாகும். அது கவலையையும் தூண்டச் செய்யலாம். உதாரணமாக, நள்ளிரவில் திடீரென்று மின்சாரம் நின்றுவிடுமானால் கும்மிருட்டாகிவிடுகின்றது. அது சமயம் சிறுவர்களுக்கு ஏற்படுவது பயந்தான். ஆனால், சிறுவர்கள் விசில் அடிக்கிறார்கள்; உரக்க ஒலி கிளப்பிச் சிரிக்கிறார்கள்; இவ்வாறாகத் தங்களுடைய மகிழ்ச்சித்துலங்கலை வெளிப்படுத்துகின்றார்கள். இந்த மகிழ்ச்சித்துலங்கல் இருட்டினால் ஏற்பட்டுள்ள பயத்திற்கு முற்றிலும் எதிரானது. இது பயத்தைக் கட்டுப்படுத்துகின்றது. குற்றங்காண்பவர்களுடைய மனப்பாங்கு அடிக்கடி எதிர்வினை அமைப்பாகவே இருக்கின்றது. தன்னுடைய உள்துடிப்புகளைக் கட்டுப்படுத்தி அவற்றிற்கு எதிரான பண்புகளை ஆக்கிரமிப்பு உணர்ச்சியுடன் நிலைநாட்டும்போது எதிர்வினையமைப்பு ஏற்படுகின்றது.

ஒரு வெறிகொண்ட சமயப் போர்வீரன் பழிகளுக்கு எதிராக எதிர்வினையமைப்புக்கு இலக்காகலாம். ஏனென்றால், அவன் தன்னுடைய உள்துடிப்புகளால் தன்னால் கடிந்துரைக்கப்பட்ட மிகுந்த பழிச்செயல்களுக்கு எதிராக உந்தப்பட்டுள்ளான். மேலும், மிகுந்த அளவுக்கு வணக்க இணக்கமாக இருப்பதும் ஒரு வழியில் வெறுத்தொதுக்கும் செயல்தான். வீரங்கூட மறைந்துள்ள அச்சத்தின் அறிகுறிதான். எதிர்வினை அமைப்பு மிகவும் வலிமை மிக்க தற்காப்பு அமைப்பு வழியாக இருந்தாலுங்கூட அஃது ஆபத்தான சமூக விளைவுகளையுடையதாக இருக்க முடியும். ஏனென்றால், இதிலுள்ள எதிர்வினையின் செறிவு பகுத்தறிவுக்கு மாறானது.

இந்த எதிர்வினை அமைப்புப்படி எல்லாப் பொருள்களுமே மேற்பரப்பில் காணப்படுவதற்கு முற்றிலும் எதிராகப் பொருள் கொள்ளப்படுமானால், எவ்வாறு ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒருவர் உண்மை ஊக்கமூட்டியை அடையாளம் கண்டறிய முடியும்?

எவ்வாறெனில், மற்றத் தற்காப்பு அமைப்பு வழிகளைப்போல் எதிர்வினை அமைப்பும் தெளிவான தனிப்பட்ட சூழ்நிலைகளில்தான் காணப்படுகின்றது. மிக்க ஆர்வமுள்ள சீர்திருத்தவாதிகளெல்லாம் இரகசியமாகப் பழிகாரர்களல்லர். மிகுந்த அளவுக்குத் தாய்மை உணர்ச்சியைக் காட்டுகின்ற தாய்மார்களெல்லாம் தங்களுடைய குழந்தைகளின் வெறுப்புணர்ச்சியை மறைக்கவில்லை. ஆனால், நடத்தையில் காணப்படுகின்ற மிகுந்த செறிவு எதிர்வினை அமைப்புக்கான ஒரு சான்று என்று கொள்ள முடியாது. ஒரு மனிதனைப் பற்றிச் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஓர் எதிர்வினை அமைப்பைச் சுட்டிக்காட்டி விளக்கம் கூறுவதற்கு முன்பு அதனுடன் செல்லுகின்ற மற்றச் சூழ்நிலைகளையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அறிவார்ந்த விளக்கம் : இந்தத் தற்காப்பு அமைப்பு வழி சிந்தித்தலைப் பற்றியதாகும். ஈடு செய்தல் எவ்வாறு நடத்தையைப் பற்றியதாக இருக்கின்றதோ அது போல அறிவார்ந்த விளக்கம் சிந்தனையைப் பற்றியதாகும். அறிவார்ந்த விளக்கம் தருகின்றவர் தம்முடைய செய்கைகளுக்குத் தகுந்த காரணங்களைத் தருகின்றார். அவை உண்மையான காரணங்களை மறைப்பதற்கு உதவுகின்றன. ஏனென்றால், உண்மையான காரணங்களை வெளிப்படையாக ஏற்றுக்கொண்டால் கவலையை உண்டாக்குகின்றன. மனிதர்கள் எந்தப் பண்பாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் தங்களுக்கு ஒரு பாதுகாப்பு தேடிக்கொள்ளுவதற்கு அறிவார்ந்த விளக்கம் ஓரளவுக்குத் தேவையுள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். அன்றாட வாழ்க்கையில் மனிதர்களிடம் நாம் காணுகின்ற அறிவார்ந்த விளக்கம் ஏராளமாக இருக்கின்றது. சாக்குப்போக்குச் சொல்லுகின்ற எல்லா நடவடிக்கைகளுமே அறிவார்ந்த விளக்கங்களேயாகும்.

தேர்வுக்குச் சரியாகப் படித்து அதிக எண்கள் வாங்கமுடியாத மாணவன் கூறுகின்ற காரணம், ஆசிரியர் சரியாகப் பாடம் நடத்தவில்லை என்பதாகும். இது பெற்றோருக்கு அம் மாணவன் கூறுகின்ற காரணம். ஆனால், அதே குறைபாட்டுக்கு ஆசிரியரிடம் அம் மாணவன் கூறுகின்ற காரணம், தேர்வின்போது உடல்நிலை சரியில்லை என்பதாகும். ஒரே குறைபாட்டுக்கு இரண்டு இடங்களில் கூறப்படுகின்ற இரண்டு காரணங்களும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகவே இருக்கலாம். அது போலவே விளையாட்டுப் போட்டியில் தோற்றுப்போன குழுவும், விளையாட்டு வீரர்களும் தோல்விக்குக் கூறுகின்ற காரணம் ஒன்றாக இருக்கலாம். ஆனால், உண்மைக் காரணம் வேறொன்றாக இருக்கலாம். விளையாட்டு

மைதானம் சரியாக இல்லை; பந்து சரியாக இல்லை; நடுவரின் தீர்ப்புச் சரியாக இல்லை என்று இவ்வாறுதான் அவர்கள் கூறுகின்ற காரணங்களிருக்குமே தவிர, தாங்கள் சரியாக ஆடவில்லை, அதனால் தோற்றுப்போய்விட்டோம் என்று எந்த விளையாட்டு வீரர்களும் கூறுவதில்லை. அன்றாட வேலையைச் சரியாகச் செய்யாத குமாஸ்தா கூறுகின்ற காரணம் மேலாளரிடமிருந்து தாள்கள் எல்லாம் கையெழுத்தாகி இன்னும் வரவில்லை என்பதாகும். இவற்றைப் போன்று கடமை தவறுகின்ற ஒவ்வொருவரும், உண்மைக்காரணத்தைக் கூறமுடியாத ஒவ்வொருவரும் ஏதேனும் ஒரு வழியில் அறிவார்ந்த விளக்கத்தைத் தருகின்றனர்.

அறிவார்ந்த விளக்கம் இயல்பு நிலையிலுள்ள மனிதர்களின் மிகப் பொதுவான தற்காப்பு வழியமைப்புகளில் ஒன்றாக இருக்கின்றது. இது மேலும் பல திரிபுணர்வுகளின் உள்ளடக்கத்தையும் தீர்மானிக்கின்றது. ஆனால், அறிவார்ந்த விளக்கத்தின் உள்ளடக்கம் அளவுக்கு மீறிச்சென்று இயல்பு நிலையைத் தாண்டுமானால், அஃது ஒருவருடைய மனக்கோளாறுகளை வெளிப்படுத்தும் விளக்கமாக அமையலாம். உதாரணமாக, ஏதேனும் ஒரு காரணத்திற்காகச் சிறையிலடைக்கப்பட்ட ஒரு மன நோயாளி கூறுவது என்னவென்றால், தன்னைச் சிறையிலடைத்து விட்டுத் தன்னுடைய செல்வத்தை மற்றவர்கள் எடுத்துக் கொள்ளப் பார்க்கின்றார்கள் என்பதாகும். இந்த விளக்கம் இயல் பிறழ்ந்த நிலையிலிருந்து வெளிப்பட்டதாகும்.

புறத்தெழும் அகக்காட்சி : தன்னிடமுள்ள பண்புகளைப் பிறரிடம் காணுகின்ற மனப்பான்மைக்குப் பெயர் புறத்தெழும் அகக்காட்சியாகும். தனக்குத்தானே ஏற்றுக்கொள்ள முடியாத மனப்போக்குகளுக்கு எதிரான ஒரு தற்காப்பு வழியாக ஒருவன் அவற்றை மற்றவர்கள்மீது சுமத்துகின்றான். சுருக்கமாகக் கூறுவோமானால், ஒருவன் தான் செய்த குற்றத்தை ஏற்றுக்கொள்ளுவதைவிட்டு, அதை மறைக்கும்பொருட்டு அக் குற்றங்களை மற்றவர்களின்மீது சுமத்துகின்றான். உதாரணமாக, ஒரு மாணவன் பிறரை ஏமாற்ற வேண்டுமென்ற ஆசையுடையவனாக இருக்கின்றான். அவன் தன்னுடைய செயலுக்கு ஆதரவு தேடும் பொருட்டுக் கூறுகின்ற காரணம், தன்னைச் சுற்றியுள்ளவர்கள் எல்லோருமே ஏமாற்றுகின்றவராக இருக்கின்றனர் என்பதாகும்.

புறத்தெழும் அகக்காட்சி மனப்பான்மையுள்ளவர்கள் தங்களுடைய வலுவின்மையில் மிக்க கூருணர்ச்சியுள்ளவர்களாக இருக்கின்றார்கள். அந்த வலுமின்மையை மற்றவர்களிடம் மிதந்த முன்னேற்பாடாகக் கண்டுபிடிப்பது ஒரு பொது மனித இயந்திர

நுட்பமாக இருக்கின்றது. இது சில திரிபுணர்வுகளையும் தனிச் சிறப்பாகக் குறிக்கின்றது. குறிப்பாக, துன்பமிழைக்கின்ற திரிபுணர்வைக் கூறலாம். புறத்தெழும் அகக்காட்சி மனப் பான்மைஇயல் பிறழ்ந்த நிலையிலிருந்து இயங்குமானால், அஃது உளப் பித்தன் (Psychotic) நடத்தையாக இருக்கின்றது. உதாரணமாக, ஓர் உளப்பித்தன் தன்னுடைய குடும்பத்தினரைக் கொலை செய்து விட வேண்டுமென்ற தன்னுடைய உந்து சக்தியை (urge) அடக்கு கின்றான் என்று வைத்துக்கொள்ளுவோம். அவன் இந்த விருப் பத்தை மிக எளிதாகத் தன்னுடைய குடும்பத்தினர்மீது திணித்து விடலாம். அதாவது தன்னுடைய குடும்பத்தினர் மிகவும் கொடியவர்கள், பகையுணர்ச்சி கொண்டவர்கள் என்றும், அதனால் அவர்கள் இவனைக் கொன்றுவிடுவதற்குத் திட்டமிடுகின் றார்கள் என்றும் கூறிவிடலாம்.

தனித்து விலகியிருத்தல் : இதுவரையில் மேலே நாம் கூறிய தற்காப்பு நடத்தையினின்றும் சற்று மாறுபட்ட பொருத்தப் பாட்டுக்குரிய நடத்தைகளில் ஒன்று தனித்து விலகியிருத்தலாகும். தனித்து விலகியிருக்கின்ற மனிதன் மற்றவர்களுடைய துணையை வெறுத்து ஒதுங்குகின்றான்; தனிமையான மன மகிழ்ச்சிகளையே விரும்புகின்றான்; போட்டி விளையாட்டுகளை விரும்புவதில்லை. மேலும், எதையும் அவன் பார்வையாளனாக இருந்து கவனிக்க விரும்புகின்றானே தவிர, பங்கெடுத்துக் கொள்ள விரும்புவதில்லை. இவ்வாறான துலங்கல்கள் எல்லாம் ஒரு வகையில் பொருத்தப் பாட்டுக்குரியனவையேயாகும். ஏனென்றால், துன்பம் தருகின்ற தோல்விகளிலிருந்து தப்பிக்கின்ற ஒரு வழி, முயற்சி செய்யாம லிருப்பதாகும்.

சமூகக் குறுக்கீடுகளைச் சந்திக்கின்ற எல்லா மனிதர்களுமே பெரும்பாலும் தனித்து விலகியிருத்தல் பொருத்தப்பாட்டை முயன்று ஏற்றிருக்கின்றார்கள். அடிக்கடி அவர்கள் ஆக்கிரமிப்புப் பொருத்தப்பாட்டிற்கு மாறி மாறிச் செல்லுகின்றார்கள். ஒரு சமூகச் சூழ்நிலையில் பொருத்தக்கேடுற்ற (maladjusted) மனிதர் மிகவும் கூச்சம் கொண்டு, ஓய்வு பெற்று விடலாம். இஃது ஒரு சமயத்தில் நடைபெறுகின்றது. மற்றொரு சமயத்தில் ஆக்கிரமிப்பு உணர்ச்சியுடன் ஈடு செய்தல் நடைபெறுகின்றது. மட்டுமிஞ்சிய அளவுக்குத் தனித்து விலகியிருத்தல் வழக்கமாகச் சமூக நிலைமை களில் ஒரு வலிமை மிக்க ஆக்க நிலையிறுத்திய அச்சத்தினால் ஏற்படுகின்றது. அல்லது சமூக நிலைமைகளில் பொருத்தப்பாடு செய்துகொள்ளுவதற்கு எடுத்துக்கொண்ட மிகுந்த முயற்சிகள் தொடர்ந்து மனமுறிவை உண்டாக்குவதால் தனித்து விலகி

யிருத்தல் நிகழுகின்றது. மிகுந்த அச்சத்தை வெளிப்படுத்து கின்ற பல குழந்தைகளின் வாழ்க்கை வரலாறுகளில் பெற்றோர் களின் கடுமையான போக்குகள் காணப்படுகின்றன. அல்லது அவர்களுடைய தேவைகளைப் பெற்றோர்கள் நிறைவு செய்ய முடியாதவர்களாக இருந்திருக்கின்றார்கள். எனவே, ஈடு செய் வதற்கான பொருத்தப்பாடு கடுமையான கட்டுப்பாட்டினால் நசுக்கப்படுமானால், தனித்து விலகியிருத்தலைத் தவிரக் குழந்தைக்கு வேறு மாற்று வழி கிடையாது.

தனித்து விலகியிருக்கும் தற்காப்பு வழியமைப்புகள் ஆக்கிர மிப்பு வகையைவிட இடுக்கண் நிறைந்தவையாகும். அவற்றை எளிதில் கண்டுபிடித்து ஆக்கச்சார்பான கவனத்தை அவற்றினிடம் செலுத்த முடியாது. ஏனென்றால், அவை அமைதியான சாதாரண நடத்தையை வெளிப்படுத்துகின்றன. அதனால் அவை பெற்றோர் களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடர்ப்பாடுடையவையாக இருப்ப தில்லை. மேலும், அவ் வகையான நடத்தையை மாற்றியமைப் பதும் மிகக் கடினமாகும். ஏனென்றால், அத்தகைய நடத்தை யுடையவர்கள் பொருத்தப்பாட்டைத் தேடிச் சுறுசுறுப்பாக இயங்குவதில்லை. தனித்து விலகியிருத்தல் அளவுக்கு மீறி வெளிப்படுமானால், அது கடுமையான மனக்கோளாறின் அறிகுறி யாகும். உச்சநிலையில் தனித்து விலகியிருத்தலினால் தனிச் சிறப் பாகக் குறிக்கப்படுகின்ற டிமென்சியா பிரிகாக்ஸ் (dementia praecox) என்ற கடுமையான மனக்கோளாறு மிகப் பொதுவான தாகக் காணப்படுகின்றது.

எதிர்மறை வாதம்: நடத்தையில் எதிர்மறையாகக் காணப் படுகின்ற போக்கு மிகவும் வலிமை மிக்க மனவெழுச்சி கொண்டு தனித்து விலகியிருத்தலுக்குப் பெயர் எதிர்மறை வாதமாகும். இது கிளர்ச்சி செய்தல், முரண் பிடிவாதம், சமூகத்தின் உரிமைக் கோரிக்கையை எதிர்த்தல் ஆகியவற்றால் வெளிப்படுகின்றது. எதிர்மறை வாதக் கருத்துச் சொல் மூன்று செயற்படுத்தல்களை யுடையதாக இருக்கின்றது. இது குழந்தைகளால் மிகவும் தவிர்க்க முடியாத ஒரு நடத்தையாகும். மேலும், இது சற்று வளர்ந்த குழந்தைகளிடமும், வயது வந்தவர்களிடமும் ஓர் ஒருமைப்பாடுறாத பொருத்தப்பாடாகவுமிருக்கின்றது; சில உளப் பித்தர்களாக உள்ள மனிதர்களிடம் அளவுக்கு மீறிய ஓர் அறி குறியாகவும் காணப்படலாம்.

இரண்டு அல்லது மூன்று வயதுக் குழந்தைகளிடம் எதிர்மறை வாதம் அடிக்கடி தோன்றுவதைவிட, விட்டுவிட்டுத் தோன்றக் காணலாம். நிலைமைகளோடு தங்களைச் சரிகட்டிச் செல்லவும்,

சமூகத்தின் தேவைகளைப் புரிந்துகொள்ளவும் குறைந்த வழிகளே அவர்கள் பெற்றுள்ளார்கள். ஆனால், அவர்கள் காரணமில்லாத மறுப்புகளினால் பிறருடைய கவனத்தைப் பார்த்துத் தங்களுடைய உரிமைகளை வற்புறுத்திக் கூறித் தங்களை நிலைநாட்டிக்கொள்ளுகின்றார்கள்.

எதிர்மறை வாதம் கோபத் துலங்கலின் ஒரு வடிவமாகும் இது சண்டித்தனம் போன்றதாகும். எதிர்மறை வாதம் தேவைகளை நிறைவேற்றுமானால், அது வலுவூட்டப்படுகின்றது. ஆனால், அவப்பேறுடைய சூழ்நிலைகள் மிகுந்த ஒருமைப்பாட்டுக்குரிய பொருத்தப்பாட்டு வளர்ச்சியைத் தடை செய்யுமானால், எதிர் மறைவாதம் குமரப்பருவத்திலும், வயது வந்த பருவத்திலுங்கூடத் தொடர்ந்து காணப்படும். உளமருத்துவ விடுதிகளிலுள்ள சில உளப்பித்தர்கள் ஒத்துச் செல்ல மறுக்கின்றார்கள். சிலர் உணவு உட்கொள்ளவும் மறுக்கின்றனர். சில சமயங்களில் அவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றார்களோ அதற்கு எதிர்மறையானதைச் செய்கின்றார்கள். இளமைப் பருவத்தில் காணப்படும் இயல்பு நிலையான எதிர்மறை வாதம் உளப்பித்து நிலையிலுள்ள எதிர்மறை வாதத்துடன் தற்செயலான தொடர்புறவு கொண்டிருப்பதில்லை. ஆனால், உளப்பித்து நிலையிலுள்ள எதிர்மறை வாதம் குழந்தைப்பருவத்து எதிர்மறை வாதத்தைப் போல் அதே பயனையுடையதாக இருக்கின்றது.

கற்பனைத் தோற்றம் அல்லது மனக்கோட்டை: கற்பனைத் தோற்றம் அல்லது பகற்கனவு ஒரு பொருத்தப்பாட்டுக்கான தற்காப்பு வழியாகும். எல்லா மனிதர்களுமே ஓரளவுக்கு இதை உபயோகித்துக்கொண்டுதானிருக்கின்றார்கள்; உண்மை வாழ்க்கையில் பெற முடியாத தேவைகளைக் கற்பனை செய்து, அவற்றைப் பெற்று மனநிறைவு கொள்ளுகின்றார்கள். இந்த வழி மிகவும் எளியதாகவும், கிடைக்கக்கூடிய பொருத்தப்பாட்டு அமைப்பாகவுமிருக்கின்றது. மிகப் பெரும்பாலான மனிதர்கள் பகற்கனவு காண்பதால், இந்தப் போக்கிடம் இயல்பு நிலையானதே என்று கருதுகின்றோம்.

ஒரு தேர்வாராய்ச்சி நடத்திப் பார்த்ததில் 98 சதவிகிதம் கல்லூரி மாணவர்கள் ஒரு மாதத்தில் பல பகற்கனவுகள் கண்டிருக்கின்றார்கள் என்று தெரிகிறது. மிகப் பொதுவான வகையைச் சேர்ந்த இயல்புநிலை பகற்கனவுகளெல்லாம் காட்டுவது என்னவெனில், பொதுவான ஊக்கிகள் மிக அதிகமாகக் குறுக்கிடுவதையேயாகும். கல்லூரி மாணவர்கள் காணுகின்ற பகற்கனவுகளில்

அவர்கள் உடல் வலிமையுடையவர்களாகவும், மிகவும் கவர்ச்சிகரமாகக் காணப்படுவதாகவும், ஏராளமான செல்வம் பெற்றிருப்பதாகவும், வாழ்க்கைத் தொழிலில் வெற்றி பெற்றிருப்பதாகவும், தாங்கள் விரும்பிய குணங்களைக்கொண்ட காதலன் அல்லது காதலியைப் பெற்றிருப்பதாகவும் கூறுகின்றார்கள். கவலை கொண்டுள்ள மனிதர்களிடையேதான் பகற்கனவுகள் மிகப் பொதுவாக இருக்கின்றன. ஏனென்றால், அவர்கள்தான் பெருமளவுக்கு அதை விரும்புகின்றார்கள்.

தனித்து விலகியிருப்பவர்களிடையிலும் பகற்கனவு மிகப் பொதுவாக இருக்கின்றது. ஏனென்றால், அவர்கள் மற்றப் பொருத்தப்பாட்டுப் போக்கிடங்களைப் பெறாதவர்களாக இருக்கின்றார்கள். மற்றத் தற்காப்பு வழியமைப்புகளைப் போன்று பகற்கனவும் ஒருமைப்பாடுள்ள செயல்முறையாகவுமிருக்கலாம்; ஒருமைப்பாடற்ற செயல்முறையாகவுமிருக்கலாம்.

ஆனால், ஓர் ஆக்கச்சார்பான திட்டத்திலிருந்தோ ஆக்கச் சிந்தனையிலிருந்தோ பகற்கனவை அவ்வளவு எளிதில் வேறுபடுத்திக் காண முடியாது. ஒருமைப்பாடில்லாத பண்புக்கூறுகளுள்ள பகற்கனவு சில சமயங்களில் அந்த மனிதனுடைய தேவைகளைப் பகற்கனவிலேயே நிறைவு செய்துவிடுவதால், அவன் உண்மையான குறிக்கோளை அடைவதற்கு ஏற்ற அளவு ஊக்கமூட்டப்படுவதில்லை. ஆனால், அளவுக்கு மீறிய பகற்கனவு நல்ல பொருத்தப்பாட்டுக்குத் துணை செய்யாது. பல விசித்திரமான திரிபுணர்வுகள் மனக்கோளாறுள்ளவர்களிடம் காணப்படுகின்றன. அவை இயல்நிலைப் பகற்கனவுகளைப் போலவே இருக்கின்றன. எந்த வழியிலும் உண்மைக்குப் புறம்பானவையாக இல்லை. மற்றப் பண்புகளிலும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன. ஆனால், இந்த இரண்டு வகை மனிதர்களுடைய பகற்கனவுகளில் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. இயல்பு நிலையினுள்ள மனிதன் தன்னுடைய பகற்கனவு உண்மையில்லை என்று அறிந்துகொள்ளுகின்றான். இயல் பிறழ்ந்த நிலையிலுள்ள மனிதன் தன்னுடைய பகற்கனவுகளெல்லாம் உண்மையானவை என்று ஏற்றுக்கொள்ளுகின்றான்.

4. மனக்கோளாறுகள்

மனக்கோளாறுகளைப்பற்றி விளக்கமாக அறியும் நோக்கத்துடன் கோல்டுகாமர் (Goldhamer) என்பவரும், மார்சல் (Marshall) என்பவரும் 1953ஆம் ஆண்டில் ஓர் ஆராய்ச்சி நடத்தினர்; புள்ளிவிவரப் பட்டியல் தயாரித்தனர். அதன்படி அமெரிக்காவில் பிறக்கின்றவர்களில் பத்தில் ஒருவர் தம்முடைய வாழ்நாளில் மருத்துவ விடுதிக்குச் சென்று தம்முடைய மன நோய்க்குச் சிகிச்சை பெறுகின்ற நிலையிலிருக்கின்றனர். இன்றைய நிலையில் மருத்துவ விடுதிகளில் ஏறத்தாழப் பாதி எண்ணிக்கையுள்ள படுக்கைகள் மனநோயால் பீடிக்கப்பட்டவர்களால் நிரப்பப் பட்டிருக்கின்றன என்று கூறுகின்றனர். இவை மட்டுமன்றிப் பெரும்பாலானவர்கள் மனக்குழப்பமுள்ளவர்களாக இருக்கின்றனர்கள். இந்த வகையினர் நோயின் கடுமையான நிலைக்கு ஆளானவர்களல்ல என்றாலும், அவர்களுக்கு மருத்துவ உதவி தேவைப்படுகின்றது. இத் துறையில் மேலும் நடத்தப்பட்ட தேர்வாராய்ச்சிகளின்படி மொத்த மக்கள் தொகையில் முப்பது சதவிகிதத்தினர் ஓரளவு மனக் குழப்பம் உள்ளவர்களாக இருக்கின்றனர் என்று தெரிகின்றது.

மனக்கோளாறுகளில் இரண்டு முதன்மையான வகைகள் இருக்கின்றன. அவற்றில் மென்மையான வகையை உளவழி நரம்பு நோய் (Psychoneurosis) என்னும் கடுமையான வகையை உளப்பிணி (Psychosis) என்றும் கூறுகின்றனர். ஆனால், உடல் நோய்களில் எந்த இரண்டு வகைகளையும் எடுத்துக்கொண்டு அவை ஒன்றிலிருந்து மற்றொன்று எவ்வாறு வேறுபட்டது என்று கூறுவதுபோல் மனக்கோளாறுகளில் இந்த இரண்டு வகைகளையும் எடுத்துக்கொண்டு ஒன்று மற்றொன்றிலிருந்து எவ்வாறு முற்றிலும் தெளிவாக மாறுபட்டுக் காணப்படுகின்றது என்று கூறுவது கடினமாகும். இயல்பு நிலையிலிருந்து விலகிச் செல்லும் படித்தரத்தில்

இரண்டும் வேறுபடுகின்றனவா அல்லது உளவழி நரம்பு நோய்கள் உளப் பிணிகளின் சாயல்களாக இருக்கின்றனவா என்பதைத் தெளிவாக வேறுபடுத்திக் காட்டுவது இன்னும் அவ்வளவு எளிய செயலாக இல்லை.

ஆனல், இந்த இரண்டு வகையான மனக்கோளாறுகளையும் ஒத்திட்டுப் பார்க்கும்போது உளவழி நரம்பு நோயினன் அறியும் நடத்தையிலும் மனவெழுச்சி நடத்தையிலும் குறைவான கடுமையை வெளிப்படுத்துகின்றான்; தன்னுடைய சூழ்நிலையில் தன்னை ஒழுங்குபடுத்திக்கொள்ளுவதில் மிகக் குறைந்த அளவே தவறுகின்றான்; உண்மை வாழ்க்கையோடு குறைவாகவோ அதிகமாகவோ தொடர்பு வைத்திருக்கின்றான்; தன்னுடைய நடத்தையின் இயல்பில் ஓரளவு உள்நோக்கு கொண்டிருக்கின்றான்; தனக்கோ மற்றவர்களுக்கோ உண்மையில் ஆபத்து ஏற்படுகின்ற வழியில் தன் நடத்தை சென்றுவிடாதவாறு பார்த்துக்கொள்ளுகின்றான். மிக அரிதாகவே இவனுக்குச் சிகிச்சையளிக்கப்படுகின்றது.

ஆனல், உளப்பித்து நோயினல் வருந்துகின்றவன் அறியும் நடத்தையிலும் மனவெழுச்சி நடத்தையிலும் மிகக் கடுமையான குழப்பத்தை வெளிப்படுத்துகின்றான்; பொய்த் தோற்றங்களினாலும் (hallucinations) திரிபுணர்வுகளினாலும் (delusions) வருந்துகின்றான்; தன்னுடைய நடத்தையில் உள்நோக்கு அற்றவனாக இருக்கின்றான்; தன்னுடைய சூழ்நிலையில் தன்னைச் சிறிதுகூட ஒழுங்குபடுத்திக்கொள்ள முடியாதவனாக இருக்கின்றான்; உண்மையான உலகத்தோடு முற்றும் தொடர்பற்று விடுகின்றான்; இயல்பு நிலையினின்றும் மிகுந்த அளவுக்கு விலகிச் சென்று, சில சமயங்களில் ஆபத்தான நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றான்; சமூக நடவடிக்கைகளுக்கு முற்றிலும் தகுதியற்றவனாகிவிடுகின்றான்; எனவே, சிகிச்சை தேவைப்படுகின்றவனாக இருக்கின்றான். எனவே, இந்த இரண்டு வகையான மனக்கோளாறுகளையும் சற்று விரிவாக ஆராய்வோம்.

உளவழி நரம்பு நோய்கள் (Psychoneurosis)

உளவழி நரம்பு நோய் என்கின்ற இந்தக் கருத்துச் சொல் இயல்பு நிலையிலிருந்து விலகிச் சென்று நடத்தையில் சீர்க்கேடுகளை வெளிப்படுத்துகின்ற தன்மையின் பல்வேறு படித்தரங்களை உள்ளடக்கிக்கொண்டுள்ள பொருளைக் குறிப்பிடுகின்றது. இயல்பு நிலையின் நடத்தையைக்காட்டிலும் குறைந்த ஒருமைப்பாட்டுத் தன்மையுள்ள நடத்தையையும் சுட்டிக்காட்டுகின்றது இச் சொல். ஆனல், உளவழி நரம்பு நோய் உளப்பித்து நோய் போன்று

அவ்வளவு கடுமையானதன்று. ஆனுல், இயல்பான நடத்தைக்கும் நரம்பு வழி நோய்க்குரிய நடத்தைக்கும் இடையில் அவ்வளவு தூரம் நீண்ட இடைவெளி கிடையாது. இரண்டு நிலைகளுக்கு முள்ள வேறுபாடு முக்கியமாகப் படித்தரந்தான். உளவழி நரம்பு நோய்கள் பல வடிவடிங்களில் வெளிப்படுகின்றன. ஒவ்வொரு வடிவத்தையும் ஒவ்வொரு பெயர் கொண்டு அழைக்கின்றனர். மேலும், ஒவ்வொரு வடிவத்திலுள்ள நோயும் பல அறிகுறிகளை வெளிப்படுத்துகின்றன. எனவே, அந்த அறிகுறிகளைக் கொண்டு அவற்றிற்குப் பெயரிட்டுள்ளனர். ஆக உளவழி நரம்பு நோய்களில் அடங்கியுள்ள சில நோய்க் கூறுகளை இங்கு நாம் ஆராயலாம்.

ஹிஸ்டிரியா (மன அதிர்ச்சி நோய்) (Hysteria) அல்லது செயலின்மையும் தொடர்பறுக்கும் எதிர்வினைகளும் (Inactivation and Dissociative Reactions)

உளவழி நரம்பு நோய்களில் மிகச் சாதாரணமாகக் காணப்படுவதும் மிகவும் கடுமையானதுமான கோளாறுகளையுடையது ஹிஸ்டிரியா எனப்படும் நோயாகும். செயலின்மை எதிர்வினைகள் என்று இதை இக் காலத்தில் கூறுகின்றனர். இந்த நோயின் அறிகுறிகள் பக்கவாதம் (paralysis), மயக்கம் (anesthesias) அல்லது புலனுணர்ச்சி இழப்பு, வலி ஆகியவையாகும்.

ஹிஸ்டிரியா என்னும் நோய் ஒரு தனி பொருத்தக்கேட்டைத் தெளிவாக வரையறுத்துக் கூறவில்லை. இது, நிலைமைகளின் ஒரு பெரிய குழுவைக் குறிப்பிடுவதற்கு வழக்கமாக உபயோகப்படுத்தி வந்த பெயராகும். அவையெல்லாம் ஹிஸ்டிரியாவின் அறிகுறிகளை வெளிப்படுத்தும் தனி மனிதர்களின் ஆளுமைகளில் காணப்பட்ட ஒரு பொதுச் சிறப்புக்கூறோடு தொடர்பு கொண்டிருக்கின்றன. ஹிஸ்டிரியா நோயாளி தொடர்பறுக்கப்பட்டதும், ஒருமைப்பாடில்லாததுமான நடத்தையுடையவன் என்று கூறப்படுகின்றது. இத் துறையில் போதிய பயிற்சி பெருத ஆராய்ச்சியாளர்களும் பெரும்பாலான நோயாளிகளும் கூறுவது என்னவென்ருல், இந்த நோயின் அறிகுறிகள் அடிக்கடி உடல் சார்பான காரணங்களிலிருந்து தோன்றுகின்றன என்பதாகும். ஆனுல், இந்த அறிகுறிகள் உளவியல் காரணங்களினுல் தோன்றுகின்றன என்பதுதான் சான்றுகள் காட்டுகின்ற உண்மையாகும்.

இந்த நோயின் அறிகுறிகள் வழக்கமாக உடம்பின் சில குறிப்பிட்ட உறுப்புகளில்தான் உள்ளடங்கியிருக்கின்றன. உதாரணமாக, ஒரு காலில் பக்கவாதம், ஒரு கையில் உணர்ச்சியிழப்பு, தொண்டையின் தசைநார்களில் இறுக்கம் முதலியவையாகவு

மிருக்கின்றன. இந் நோயின் அறிகுறிகள் வியப்படைத் தருகின்ற தன்மையுடையவை. ஹிஸ்டிரியாவின் அறிகுறி எளிதில் அடையாளம் கண்டறிய முடியும். மற்ற நரம்புவழி நோய்களுக்கு எடுத்துக்கொள்ளும் அளவுக்கு முயற்சிகள் தேவையில்லை. மேலும், ஹிஸ்டிரியா நோயாளி இயல்பு நிலையிலுள்ள மனிதனின் உள வாழ்க்கையில் மிக அதிகமான கவனம் செலுத்துகின்றான்.

ஹிஸ்டிரியாவின் வடிவங்களில் மிகவும் அதிகமாகக் காணப்படுவது மாற்று ஹிஸ்டிரியாவாகும் (conversion hysteria). அதாவது, ஹிஸ்டிரியாவால் பீடிக்கப்பட்ட மனிதன் தன்னுடைய மனப்போராட்டத்தை உடலுக்குரிய அறிகுறியாகமாற்றிக்கொண்டான் என்பதாகும். இந்த வகைக் கோளாறு பல வகையான உடற்கூறு நோய்களைத் தூண்டி விடுகின்றதாகச் சான்றுகள் காணப்படுகின்றன. அவை பெரும்பாலும் பக்கவாதங்கள், வலிகள், மயக்கம் அல்லது உணர்ச்சியற்றுப் போதல் ஆகியவையாக இருக்கின்றன. இவை எல்லாம் காட்டுவது என்னவெனில், இந்த நோய் ஹிஸ்டிரியா என்ற தொடர்பை அறுக்கும் ஒரு கோளாறு என்பதாகும். ஹிஸ்டிரியாவின் பக்கவாதத்தினால் தாக்குண்ட மனிதன் பொருத்தப்பாட்டு எதிர்வினையிலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்டு விட்டான்.

ஹிஸ்டிரியாவின் கடுமையான வகைகள், உறக்க நடை நோய்கள் (somnambulisms), சூழ்நிலையால் நினைவிழத்தல்(fugues), பன்முக ஆளுமை (multliple pesonality) ஆகியவையாகும். அனுபவத்தின் முழுக் கூறுகள் எல்லாம் தனி மனிதரின் மிஞ்சியுள்ள சிந்தனை, நடத்தை ஆகியவற்றிலிருந்து துண்டிக்கப்பட்டு விடுகின்றன.

ஹிஸ்டிரியாவைச் சேர்ந்த பக்கவாதத்திற்கு ஒரு நிகழ்ச்சி வரலாறு கொடுத்து விளக்க முடியும். கேட் என்னும் பெண் பதின்மூன்று வயது நிரம்பியவள்; கவர்ச்சிகரமானவள். அவள் இடக் கால் அரைகுறையாகப் பக்கவாதத்தால் தாக்குண்டதால், மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டாள். அவள் மிகவும் அதிகமாகக் கூச்சமுள்ளவளாகவும், குறிப்பிடத்தக்க அளவு பசியுணர்வு அற்றவளாகவுமிருந்தாள். சில மாதங்களுக்கு முன்பு அவள் பள்ளிக் கூடத்திலிருந்தபோது அவளுடைய இடக் கால் திடீரென்று உணர்ச்சியற்றுப் போய்விட்டது. சிலிர்க்கும் புலனுணர்ச்சியை உணர்ந்தாள். முதலில் அவள் படுக்கையில் கிடத்தப்பட்டாள்; பிறகு சில நாள்கள் ஊன்றுகோல் கொண்டு நடந்து வந்தாள். கோடை காலத்தில் அரைகுறையாகக் குணம் ஏற்பட்டது, பிறகு

பள்ளிக்கூடம் செல்லத் தலைப்பட்டாள்; மறுபடியும் கீழே விழுந்தாள். பழைய அறிகுறிகள் மறுபடியும் தோன்றின. அவள் மருத்துவ விடுதிக்குக் கொண்டு செல்லப்பட்டாள். மருத்துவப் பரிசோதனைகள் மிகக் கவனமாகச் செய்யப்பட்டன. பரிசோதனையின் முடிவுகள் எல்லாம் அவளுக்கு எந்த வகையான நோயும் கிடையாது என்று கூறின. நரம்பு மண்டலத்தினுடைய உறுப்புக்குரிய கோளாறு ஏதும் கிடையாது. அவளுடைய நிலைமையை இதன்மூலம் விளக்கிக் கூற முடியவில்லை.

அவள் உளவியல் பரிசோதனைக்குக் கொண்டு செல்லப்பட்டாள். தொடர்ச்சியான பேட்டிகளுக்குப் பிறகு அவளை இந்த ஹிஸ்டிரியா பக்கவாதத்திற்கு நடத்திச் சென்ற வரலாறு வெளிப்பட்டது. மிகுந்த தயக்கங்களுக்குப் பிறகு கண்ணீர்விட்டுக் கூறிய அவளுடைய சோகக் கதை அவளுடைய பெற்றோரை உள்ளடக்கிய ஒரு முக்கோண நிலைமையுடையதாக இருந்தது.

மூன்றாண்டுகளுக்கு முன்பு அவளுடைய தாய் அங்குக் குடியிருந்த ஒருவனுடன் காதல் தொடர்பு கொண்டு வீட்டைவிட்டே ஓடி விட்டாள். தந்தையும், சகோதரிகளும் அவளுடைய தாயாரைக் கண்டு பிடித்து வீட்டுக்குக் கொண்டு வந்தார்கள். அதன் பிறகு பல இரவுகள் வன்முறையும் வசைமாரியும் காட்சிகளாக இருந்தன. தந்தை தாயாரைக் குற்றங்கூறும்போது தாயாரும் தந்தையை நம்பிக்கையில்லாதவன் என்று குற்றங்கூறினாள். கேட் இந்தக் காட்சிகளுக்கெல்லாம் அழுகையையும் வழிபாட்டையும் துணையாகக் கொண்டொழுகினாள். பிறகு அவள் தன்னுடைய பெற்றோரின் மீது கொண்டிருந்த எல்லா வகை நம்பிக்கைகளையும் இழந்து விட்டாள். மற்றத் தகராறுகளும் சில காலம் நடந்து வந்தன. ஆனால், இறுதியில் அவளுடைய பெற்றோர் தம்முடைய குழந்தைகளின் நலனை முன்னிட்டு வெளிப்பார்வைக்கு அமைதியாக இருப்பதாகத் தோன்றினர்.

கேட் தன்னுடைய ஆழ்ந்த கவலையில் தொடர்ந்து இருந்து வந்தாள். எவ்வாறேனும் மற்றக் குழந்தைகளின் தொடர்பை அவள் தவிர்த்து வந்தாள். பள்ளிக்கூடத்தில் ஓய்வு நேரத்தின் போது அவள் உள்ளேயே தங்கியிருந்தாள்; மற்றப் பெண்களுடைய முகத்தைப் பார்ப்பதையும் தவிர்த்து வந்தாள். ஓய்வு நேரத்தின்போதுதான் அவளுடைய கால் பக்கவாதத்தால் தாக்குண்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும். பல மாதங்களாக நடைபெற்ற நீண்ட தொடர்ச்சியான உரையாடல்களின்போது உளவியல் வல்லுநர்கள் அவளை அவளுடைய பெற்றோருடைய

போராட்டத்தின் கதையை அடிக்கடி கூறுமாறு செய்தார்கள். படிப்படியாக, கேட் அதை ஓர் இடையூறு என்று ஏற்றுக்கொண்டு விட்டாள். அது கடந்த காலம். அது பயத்தினுடைய ஒரு மூலாதாரமாக இப்பொழுது இல்லை. இவ்வாறு அவள் தன்னுடைய அனுபவத்தைத் தன்வயமாக்கிக் கொண்டாள். அவளுடைய நோய்க்கூறின் அறிகுறிகள் மறைந்து போய்விட்டன. இது மாற்று ஹிஸ்டிரியாவுக்கு ஒரு நிகழ்ச்சி வரலாறாகும்.

மாற்று ஹிஸ்டிரியாவின் ஒரு நிகழ்ச்சி வரலாற்றை விளக்க இரண்டு பொருள்கள் இருக்கின்றன. ஒன்று, குழப்பத்தின் பிறப்பிடம் அல்லது ஆளுமையின் தொடர்பறுத்தல்; மற்றொன்று, காணப்படுகின்ற குறிப்பிட்ட அறிகுறிகளின் தோற்றம்.

ஹிஸ்டிரியாவின் ஒரு பொதுத் தொடர்பறுத்தலின் பிறப்பிடம் சில நிலைமைகளோடு மனமுறிவானதும் பொருத்தமில்லாததுமான எதிர்வினைகள் விரிவடைதலாகும். கேட் என்ற இளம் பெண்ணின் வாழ்க்கை நிகழ்ச்சியில் தெளிவாகக் காணப்பட்டது இதுதான். சிறு வயதாக அவளிருக்கும்போது தன்னுடைய பெற்றோரை அன்புடன் நேசித்தாள்; அவர்களை மிகச் சிறந்த உதாரணமாகக் கொண்டிருந்தாள்; இப்பொழுது அவர்கள் அதற்குத் தகுதியில்லாதவர்கள் என்று கருதினாள்; அவர்களோடு தான் அவள் வாழ்ந்து வந்தாள்; வெளிப்பார்வைக்கு அவர்களுக்கு மரியாதை காட்டுகின்றாள். ஆனால், பாகுபாடு செய்யப்படாத ஆழ்ந்த மனவெழுச்சி நடத்தையில் அவள் அவர்கள்மீது அருவருப்பும், வெறுப்பும் கொண்டுள்ளாள். இவ்வாறாக அவள் தன்னுடைய மனவெழுச்சி மனப்போக்கை வெளிப்படையான நடத்தையிலிருந்து வேறுபடுத்தக் கற்றுக்கொண்டு சிந்திப்பது ஒன்றும் செய்வது, மற்றொன்றுமாக இருந்து வந்தாள். இதுதான் தொடர்பறுத்தலின் சாரமாகும். நிலைமைகளுக்குப் பொருத்தமில்லாததும், துண்டு துண்டானதுமான துலங்கலைச் செய்யும்படியான நடத்தை விரிவடைதல் தொடர்பறுத்தலின் முக்கிய குணப்பண்பாகும்.

ஹிஸ்டிரியாவின் குறிப்பிட்ட அறிகுறிகளின் பயன் தற்காப்பு வழியமைப்புகள் போன்றதுதான். ஆனால், அவை அரைகுறையாக இருப்பதால், போதிய அளவு பொருத்தப்பாட்டுக்கு உதவக் கூடியதாகவுமில்லை. உதாரணமாக, கேட் தன்னுடைய ஓய்வு நேரங்களின்போது தன்னுடைய வகுப்பு மாணவிகளோடு சமூகத் தொடர்புகொள்ள விரும்புவதைப் புறக்கணித்தாள்; அதனால் ஏற்கெனவே பல சாக்குப்போக்குகளைச் சொல்லத் தொடங்கினான்.

தன்னுடைய கால் பக்கவாதத்தால் தாக்குண்டது அவளுக்கு ஒரு நல்ல காரணமாக அமைந்தது. தொடர்பறுத்தல் ஆளுமை இந்தப் பகுத்தறிவுக்கு ஒவ்வாத தீர்வையை அனுமதித்தது. அதனால் அவள் இந்த வழியைத் தழுவிக்கொண்டாள். பெரும்பாலான ஹிஸ்டிரிய நிகழ்ச்சிகளில் இந்த உடல் சார்ந்த இயலாமையைச் சிலர் உண்மை என்றும், ஆனால் இந்த இயலாமை தற்காலிகமானதே என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இது நடக்கக்கூடியதுதான்.

பெரும்பாலானவர் கால் பக்கவாதத்தைக் காலுக்கு அமைதியான தூக்கம் என்றே எடுத்துக்கொள்ளுகின்றனர்; துணை கொண்டும் நடக்கின்றனர்; அது சரியாகும் வரையில் இவ்வாறு நகர்ந்துகொண்டிருக்கிறனர். ஹிஸ்டிரியாவால் பீடிக்கப்பட்டவர்கள் இன்னும் என்ன நேருமோ என்று பயப்படுகின்றார்கள்; அத்துடன் தங்களுடைய கால் உண்மையில் பக்கவாதத்தால் பீடிக்கப்பட்டிருக்கின்றது என்று உண்மையாகவே நம்புகின்றார்கள். மேலும், பக்கவாதத்தை ஒரு பொருத்தப்பாடு என்று எடுத்துக்கொண்டு, அதை ஒரு தற்காப்பு வழியமைப்பு என்று மிகைப்படுத்தப்படுகின்றது. ஹிஸ்டிரியா நோயாளி தன்னுடைய நோய்க்கூற்றில் உண்மையான நம்பிக்கை வைத்திருக்கின்றான். அஃது ஒரு பாசாங்கு இடலாமையோ, கற்பனை இயலாமையோ அன்று. அஃது உளவியல் காரணங்களினால் தோன்றுகின்றது என்றாலும் மிகவும் ஓர் உண்மையான நோயாகும். இந்த நோயால் பீடிக்கப்பட்ட மனிதன் அதனுடைய பிறப்பிடம், இயல்பு, தன்னுடைய அறிகுறியின் பயன் ஆகியவற்றைப்பற்றி முற்றிலும் புதை உணர்நிலையிலிருக்கின்றான். அவன் அதனுடைய உண்மை உள்பொருள்களை உணராமலிருக்கின்றான்; அந்த அறிகுறிகளின் தோற்றத்தைப்பற்றி அவன் நன்கு உணருகின்ற பொழுது அவற்றைத் தோற்றுவித்த போராட்டத்தைச் சரி செய்துகொள்ளுகின்றான். அவனிடமுள்ள இயலாமை பொதுவாக மறைகின்றது.

ஹிஸ்டிரியாவின் மற்றக் காரணங்கள்: எந்தச் சமூகத்திலும் ஹிஸ்டிரியா மிகவும் ஒரு பொது பொருத்தக்கேடாக (அல்லிணக்கமாக) இருக்கின்றது. குறைந்த துன்பங்களுக்குள்ள நிகழ்ச்சிகளையும் தள்ளிவிடுவதற்கில்லை. புறக்கணிக்கப்பட்ட பல மனைவியர் ஹிஸ்டிரியாவுக்குரிய களைப்பான அல்லது வாந்தி உணர்ச்சியுள்ள தலைவலிகளை வளரச் செய்துகொள்ளுகின்றனர். அது அவர்களைத் தொந்தரவான கடமைகளிலிருந்து தப்பிக்க வைக்கின்றது. அவளுடைய கணவனிடமிருந்தும் குடும்பத்தினரிட

மிருந்தும் இரக்கத்தைப் பெறச் செய்கின்றது. வாந்தி எடுத்தல் உடற்கூற்றியலை மிகவும் சார்ந்ததாகத் தோன்றுகின்றது. ஆனால், இது மறிவினையாக மட்டுமிருப்பதால், இதை மாற்றுத் தூண்டல்களினால் ஆக்க நிலையுறுத்தச் செய்ய முடியும். மிகச் சாதாரணமான ஹிஸ்டிரியாவின் பொருத்தப்பாடு பள்ளிக்கூடம் போகின்ற நேரம் வந்ததும் ஏற்படுகின்ற தலைவலியாகும். பள்ளிக்கூடம் போகின்ற நேரத்தில் தலைவலி வந்தால் குழந்தை பள்ளிக்கூடம் செல்ல வேண்டியதில்லை. அந்த நேரம் தாண்டிச் சிறிது நேரமானதும் குழந்தைக்குத் தலைவலி நின்றுவிடுகின்றது. இந்த மாதிரியான வலி நோய்கள் பல சூழ்நிலைகளில் பலருக்கு ஏற்படுகின்றன.

போர்க்காலங்களில் மன இறுக்கங்கள் தீவிரமடையும்போது மாற்று ஹிஸ்டிரிய நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை மிக வேகமாக அதிகரிக்கின்றன. கிரிங்கர் (Grinker, R.R) என்பவர் ஓர் உதாரணத்துடன் இதை விளக்குகின்றார். காலாள் படையைச் சேர்ந்த ஓர் இளம் சிப்பாய் எதிரிப் படையிலிருந்த ஒரு சிப்பாயைக் கொன்ற பிறகு அவனுடைய வலக்கை பக்கவாதத்தால் தாக்கப்பட்டது. இந்தச் சிப்பாய் காலாள்படையைச் சாராத பொதுமகனாக இருந்தபோது நேர்மையானவனாகவும் அமைதியானவனாகவும் இருந்து வந்தான்; பிறரைத் தாக்கும் நடவடிக்கைகளுக்கு எதிராகக் கட்டுப்பாடுள்ளவனாகவுமிருந்தான். அவனை மறுபடியும் கொலைகாரனாக்காத ஓர் அறிகுறியினால் அவனுடைய போராட்டங்கள் தீர்க்கப்பட்டன. பலருடைய போர் நரம்புப் பிணிகள் போரின் இறுக்கங்கள் முடிந்தவுடன் மறைந்துவிட்டன. அவ்வாறு மறையாதவர்களுடைய நரம்புப் பிணிகள் உள மருத்துவத்தின்மூலம் குணப்படுத்தப்பட்டன. ஆனால், சில போர் வீரர்களின் போராட்டங்களும் கவலைகளும் மிகக் கடுமையாக இருந்ததால், நோயின் அறிகுறிகள் எப்படியும் தொடர்ந்து காணப்பட்டு வந்தன. இரண்டாவது உலகப் போரின்போது ஊனமடைந்த அல்லது செயலிழந்த போர்வீரர்களில் இருபது சதவிகிதத்தினர் உளவழி நரம்புநோய் நிலைமைகளுடையவர்களாக இருந்தனர்.

தொழில்சாலை விபத்துகளிலிருந்தும், போக்குவரத்துச் சாதனங்களின் மோதுதல்களிலிருந்தும் ஏற்படுகின்ற இயலாமைகளில் ஹிஸ்டிரியாவின் குணைட்டஸ்பு மிக அரிதாகவே காணப்படுகின்றன. ஹிஸ்டிரியாவின் நோய்க்கூறுகள் எல்லா உண்மையான நோய்களையும் தூண்டக்கூடியவையாகையால், பொது நிலையிலுள்ள

மனிதர்கள் அவற்றை நம்பக்கூடிய வகையில் பாகுபடுத்திக் காண முடியாது. நோய்க்கூறுகளை ஆராய்கின்ற மருத்துவர்களையும் அவை ஏமாற்றிவிடுகின்றன.

உறக்க நடை நோய்களும் நினைவு இழப்புகளும்: மாற்று ஹிஸ்டிரியாவினுலோ மற்ற வகையான ஹிஸ்டிரியாவினுலோ ஏற்படுகின்ற தொடர்பறுத்தலின் படித்தரத்தைக்காட்டிலும் மிகவும் வலுவாள தொடர்பறுத்தலை உண்டாக்கும் ஹிஸ்டிரியாவின் வகைகளும் இருக்கின்றன. உறக்க நடை நோய்களும் (somnambulisms), மறவிகள் அல்லது நினைவிழப்புகளும் (fugues) அடிக்கடி தோன்றக்கூடியவையல்ல என்றுலும் மிகக் கடுமையான ஹிஸ்டிரியாவின் வகைகளாகும்.

உறக்க நடை நோய் என்றுல் தூக்கத்தில் நடத்தல் என்று பொருள். இந்த நோய்க்கு ஆளான மனிதன் மெய் மறந்தது போன்ற ஒரு நிலைக்குச் சென்று விடுகின்றுன்; அந்த நிலையிலிருந்து கொண்டு தன்னுடைய வாழ்க்கையின் மனவெழுச்சிக்குரிய நெருக்கடியில் நிகழ்ந்ததொரு காட்சியை மறுபடியும் நிகழ்த்துகின்றுன். ஜெனட் (Janet) என்பவர் கண்ட நிகழ்ச்சியொன்று இதற்கு ஓர் உயர்ந்த சான்றுகும். ஐரின் (Irene) என்ற இருபது வயதுள்ள பிரஞ்சுப் பெண்ணொருத்தியின் வாழ்க்கை நிகழ்ச்சி உறக்க நடை நோயை நன்கு விளக்குகின்றது. ஐரினியின் தாய், உள்ளத்தை மிகவும் புண்படுத்தும் சூழ்நிலையில் இறந்து போனுள்.

சில காலம் சென்ற பிறகு ஐரின் எப்போதாவது மெய்மறந்தது போன்ற ஒரு நிலைக்குச் சென்று விடுவாள். இந்த நிலையில் ஐரின் தன் தாயாரின் மரணக் காட்சியின் துன்பத்தை மிகுந்த வெளிப்பாடுகளுடன் மறுபடியும் நிகழ்த்தி வந்தாள்; அடுத்படியாகத் தன்னுடைய தற்கொலைக்கு முயற்சி செய்தாள். ஆனுல், அது நடை பெறவில்லை. தன்னுடைய உறக்க நடையின்போது அவள் தன்னுடைய சூழ்நிலையைப்பற்றி முற்றிலும் முழு மறதியுள்ளவளாக இருந்தாள். அவள் எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டுத் தன்னுடைய தாயார் எதிரிலிருப்பதாக நினைத்துக்கொண்டு பேசிக் கொண்டிருந்தாள். ஆனுல், இரண்டு உறக்க நடைகளுக்கிடையிலுள்ள காலத்தில் அவள் தன்னுடைய தாயாரைப்பற்றிய கவலையைக் காட்டவில்லை; தன்னுடைய வேலைகளில் இயல்பாகக் கவனம் செலுத்திக்கொண்டிருந்தாள். அவள் தன்னுடைய மற்ற வாழ்க்கை அனுபவத்திலிருந்து தன்னுடைய தாயாரின் மரணத்தை முற்றிலும் தொடர்பறுத்துவிட்டாள். முதலில்

கண்ட ஹிஸ்டிரியாவின் நிகழ்ச்சி வரலாறுக்கும் இந்த நிகழ்ச்சி வரலாறுக்கும் உள்ள வேறுபாடுகள் ஹிஸ்டிரியாவின் விசித்திர மான வகைகளுக்கு நல்ல சான்றாக இருக்கின்றன.

மறவிகள் அல்லது சூழ்நிலை மாற்றத்தால் நினைவிழத்தல் என்பதும் ஹிஸ்டிரியாவின் வகைகளில் ஒன்றாகக் கருதப்படு கின்றது. மறவி என்பது உறக்க நடை நோய் நீண்ட காலத் திற்குத் தொடர்ந்து ஒருவருக்கு இருந்து வருவதனால் ஏற்படு கின்ற நிலையாகும். அந்த நிலையில் நோய்க்கு ஆளானவர் தம் முடைய அடையாளத்தை மறந்துவிடுகின்றார்; அடிக்கடி ஒரு மாறுபட்ட இடத்திற்குப் பிரயாணம் செய்கின்றார். சில காலத் திற்குப் பிறகு அவர் வழக்கம் போலத் தம்முடைய இடத்திற்கு வந்து சேருகின்றார்; தாம் எங்கு இருக்கின்றார் என்பதே தெரியாது; தம்முடைய கடந்த கால வாழ்க்கையை நினைவில் வைத்துள்ளார். ஆனால், இந்த மறவி காலத்தை நினைவில் கொள்ளுவதில்லை. ஆகையினால், மறவி என்பது அந்த மனித ருடைய அனுபவத்தின் ஒரு நிலையற்ற துண்டாகும். அது பெரும் பாலும் முற்றிலும் அவருடைய மற்ற வாழ்க்கையிலிருந்து தொடர்பறுக்கப்பட்டதாகும்.

மறவியின் மிக முக்கிய அறிகுறியை மறதிநோய் என்று கூறு கின்றனர். இதை நினைவிழத்தல் என்றும் கூறலாம். இந்த வகை யான கோளாறுகள் அரிது என்று சொல்ல முடியாது. இப்படிப் பட்ட நோயுள்ளவர்களை நாம் அடிக்கடி, ஏன் அனுதினமுங்கூடக் கேள்விப்படுகின்றோம். காணாமல் போனவர்கள் என்ற தலைப்பில் பத்திரிகைகளில் புகைப்படத்துடன் விளம்பரங்கள் தோன்று கின்றன. வானொலியிலும் அனுதினமும் காணாமல் போனவர்கள் பற்றிய விவரக் குறிப்புகள் வெளியிடப்படுகின்றன. இந்தக் காணாமல் போனவர்கள் எல்லாம் யாவர்? மறவி நோயினால் நினைவிழந்தவர்கள்தான்.

நினைவிழந்தவர்கள் வீதிகளில் சுற்றிக்கொண்டிருக்கலாம்; படிப்படியாகத் தம்முடைய முந்திய குணப்பண்பைத் திரும்பப் பெற்று வீட்டுக்குத் திரும்பிச் செல்வதுண்டு. மறவிநோய் செறி வான மனவெழுச்சி நெருக்கடியினால் விரைவு படுத்தப்படுகின்றது. ஆனால், இதில் இரண்டு பொருத்தப்பாட்டுச் செயல்முறைகளிருப்ப தாக உளவியலார் காணுகின்றனர். ஒன்று, மறவிக்கு ஆளான மனிதன் தன்னுடைய கடந்தகால நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் மறப்பதன்மூலம் அவன் தன்னைத் தன் உள்ளத்தைப் புண்படுத்து கின்ற சிந்தனைகளிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளுகின்றான்.

மற்றொன்று, அவன் வீட்டைவிட்டு ஓடிவிடுவதன்மூலம் தன்னுடைய பகைவெறுச்சியைக் கூட்டுகின்ற தூண்டல்களிடமிருந்து விலகியிருக்கின்றான்.

பன்முக ஆளுமை: ஹிஸ்டிரியாவின் தொடர்பறுத்தல் செயல்முறையின் மிகவும் உச்சவடிவமானது பன்முக ஆளுமையில் காணப்படுகின்றது. இது மிகைப்படுத்தப்பட்டதும், மாறிமாறி விடுவதும் ஒரு கோளாறு. இது மிகவும் நீண்ட நாள்களாக வளர்ந்து வந்த நினைவிழத்தல் நோயாகும்.

ஒரு நிகழ்ச்சி வரலாற்று உதாரணத்தை விளக்குவதன்மூலம் பொருளை நன்கு தெளிவுபடுத்தலாம். குழந்தைப்பருவம் முழுவதும் ஒரு பெண் கடுமையான ஹிஸ்டிரியாவின் அறிகுறிகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள்; விட்டுவிட்டு மயக்கமடைதல், உறக்க நடை நோய்க்கூறுகள், ஹிஸ்டிரியா வலிகள், பக்கவாதம் ஆகிய அறிகுறிகளைக் கொண்டிருந்தாள். சில சமயங்களில் அவளுடைய முன்கை புண்படுவதுண்டு. கால் விறைப்பு ஏற்படும். ஒரு சமயம் அவள் இரண்டு பாதங்கள் நடக்க முடியவில்லை. அவள் தன்னுடைய தந்தையுடன் தொடர்ந்த போராட்டம் கொண்டிருந்தாள். அவர் அவளைக் கடுமையாகத் தண்டித்தார்.

இத்தகைய துன்பம் நிறைந்த வீட்டிலிருந்து தப்பவேண்டும் என்பதற்காகவே ஓர் இளைஞனை அவள் திருமணம் செய்து கொண்டாள். ஆனால், அவனை அவளுடைய பெற்றோர் ஏற்கவில்லை. அவளுடைய கணவன் கொடுமைக்காரனாக இருந்தான். இருந்தும் சிக்கிரத்தில் அவளுடைய குடும்பப்பொறுப்பு அதிகரிக்கும் வகையில் அவளுக்கு ஒரு குழந்தையும் பிறந்தது. இந்தப் பொறுப்புகளிலிருந்து தப்பு வகையில் தான் முதல் இரண்டாவது படி ஆளுமை (secondary personality) தோன்றிற்று. இந்த முதல் இரண்டாவது படி ஆளுமையை உளமருத்துவ வல்லுநர்கள் சூசி என்று பெயரிட்டார்கள். இந்த ஆளுமையில் அப்பெண் துடுக்குத்தனம் கொண்டு பொறுப்பற்ற குழந்தை போன்ற நடத்தை உடையவளாக இருந்தாள்.

சில சமயங்களில் முதல்படி ஆளுமையில் (primary personality) அப் பெண் ஓர் இயல்பான தாயாக இருந்தாள். மற்றச் சமயங்களில் மணிக்கணக்காக, நாள் கணக்காக அவள் சூசியாக (அதாவது முதல் இரண்டாவது படி ஆளுமை) இருந்து வந்தாள்; வீட்டு வேலைகளைப் புறக்கணித்துவிட்டு விளையாடித் திரிந்தாள். வீதிகளில் சுற்றிக் கொண்டிருந்தாள். இந்தக் காலத்தில் அவளு

டைய குழந்தை கவனிப்பாரற்று இறந்து போய்விட்டது. சூசி, முதல்படி ஆளுமைப் பெண்ணுக்குத் தெரியாது. ஆனால், சூசி எழுதி வைத்துள்ள குறிப்புகளில் முதல்படி ஆளுமைப் பெண்ணை 'அவள்' என்று குறிப்பிட்டிருந்தாள். சூசி எப்போதும் பேசிய தில்லை. பெரும்பாலும் வலிக்கு உணர்ச்சியற்றவளாகவே அவளி ருந்தாள்.

இதன் பிறகு அப் பெண் வேறு இரண்டு இரண்டாவது படி ஆளுமைகளை வளர்த்துக் கொண்டாள். அந்த இரண்டில் ஒன்று ஜேக் என்ற ஆண்பால் நடத்தையாகும். இந்த ஆளுமையில் ஏதாவது ஒரு சமயம் அப் பெண் சென்று வந்தாள். ஒரு சமயம் அப் பெண் சில வாரங்கள் வரையில் ஒரு குழந்தை போல் நடித்து வந்தாள்; ஒரு வயதுக் குழந்தையாக இருந்து வந்தாள். ஆனால், இந்த நோயாளியின் வாழ்க்கையில் பிறந நடந்த நிகழ்ச்சி மிகவும் சுவையானதாக இருந்தது. சில ஆண்டுகளுக்குப் பிறகு அவள் இயல்பு நிலைக்குத் திரும்பி விட்டாள். அவள் இயல் நிலைக்குத் திரும்புவதற்கு இரண்டு வழிகள் உதவியிருக்கின்றன. உள மருத்துவம் ஓரளவுக்கும், புதிய இடமாற்றம் ஓரளவுக்கும் உதவியிருக்கின்றன. அவள் சுரங்க வேலைகள் நடைபெறும் ஒரு நகரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டாள். அங்கு அவளுடைய பொறுப்புகளும் போராட்டங்களும் குறைந்து போய் விட்டன.

எனவே, இங்கு நாம் விவரித்த பெண்ணிடம் பன்முக ஆளுமைகள் செயல்பட்டிருக்கின்றன. ஹிஸ்டிரியா நோயினால் வருந்தி வந்த இளம்பெண் கொடுமைகளுக்கு ஆளாகி, அக் கொடு மைகளிலிருந்து தப்ப ஓர் இரண்டாவதுபடி ஆளுமைக்குச் செல்லுகின்றாள்; குழந்தை இறந்த பிறகு வேறு இரண்டாவது படி ஆளுமைகளுக்குச் செல்லுகின்றாள்; பிறகு இயல்பு நிலைக்குத் திரும்புகின்றாள்.

பீதிகளும் கட்டாயங்களும் (Phobias and Compulsions)

உளவழி நரம்புநோய் அநேகமாக நடத்தைக் கோளாறுகளில் கடுமையுள்ள வரையில் பரவிச் செல்லுகின்றது இயல்புநடத்தையில் காணப்படும் ஒருமைப்பாட்டைவிடக் குறைவாக ஒருமைப்பாடு காணப்படுகின்றது; ஆனால், உளப்பித்து நோய் போன்று அவ்வளவு கடுமையான நிலைகளுக்குச் செல்லுவதில்லை. ஆனால், இயல்பு நடத்தைக்கும் நரம்புப்பிணிக்குமிடையில் அவ்வளவு நீண்ட தூரம் கிடையாது. இந்த இரண்டு நிலைகளுக்குமிடையில் உள்ள வேறுபாடுகள் படித்தரம் மிக்கவை.

பீதிகள் : பீதி அல்லது கிலி என்னும் நரம்புப்பிணி பகுத்தறிவுக்கு ஒவ்வாததும் விளக்க முடியாததுமான ஏதோ உறுதியான நிலைமையின் அச்சமாகும். பல்வேறு மனிதர்களிடம் பீதியை எழுப்புகின்ற தூண்டல்கள் ஏராளமானவை. அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளில் காணப்படுகின்ற தூண்டல்களாக இருந்தாலும் அல்லது அடிக்கடி காணுகின்ற தூண்டல்களாக இருந்தாலும் அவை அவர்களுக்குப் பீதியை எழுப்புகின்றன. ஒருவன் இருட்டைக் கண்டு பீதி கொள்ளுகின்றான். மற்றொருவன் மிகுந்த வெள்ளத்தைக் கண்டு கிலி கொண்டுவிடுகின்றான். சிலர் தனியாக வீட்டினுள் நுழைவதற்கு அஞ்சுகின்றனர். சிலர் பெருங்கும்பலைக் கண்டு பீதி கொள்ளுகின்றனர். சிலர் அறையின் ஜன்னல் கதவுகளைத் திறந்துவிடப் பயப்படுவர். சிலர் மூடுவதற்குப் பயப்படுவர். கிலர் நாய், பூனை, குதிரை, எலி போன்ற மிருகங்களைக் கண்டு பேரச்சம் கொள்ளுகின்றனர்.

மனிதர்கள் கொள்ளுகின்ற இந்தப் பீதிகள் செறிவு நிலையில் பெரிதும் வேறுபடுகின்றன. அவை மென்மையான மன உலைவு தருகின்ற நிலைமையிலிருந்து கடுமையானதும் தொடர்ந்து பேரச்சத்தைத் தருவதுமான நிலை வரையில் செல்லலாம். இந்தக் கடுமையான நிலை ஒருவருடைய முழு பொருத்தப்பாட்டு நடத்தையையே சிதைக்கவும் செய்யலாம். மென்மையான மன உலைவு நிலைகள் மிகச் சாதாரணமானவை. இவற்றிற்கான நிகழ்ச்சிகளை அன்றாடம் ஏதேனும் ஓரிடத்தில் கண்கூடாக நோக்கலாம்.

பீதிகள் வேறு பல கோளாறுகளோடும் காணப்படுகின்றன. இவை பெரும்பாலும் கட்டாயங்கள், பிடிப்புகள் (obsessions), உண்மையில்லாததும் சங்கேதமானதுமான உணர்ச்சிகள், இன்னும் இவை போன்ற அறிகுறிகளோடு காணப்படுகின்றன. எனவே, இவை எல்லாம் உளவழி நரம்புநோய்களின் பொதுக்குழுவில் உள நரம்புப்பிணி அறிகுறி (psychasthenia) என்று வழக்கமாகக் கூறுகின்றனர்.

பீதிகள் அல்லது கிலிகளைப்பற்றி விளக்கும் வகையில் ஒரு நிகழ்ச்சி வரலாறு பெரிதும் பயன்படலாம். ஆங்கில நாட்டு உள மருத்துவ வல்லுநரான ரிவர்ஸ் (Rivers, W. A. R.) என்பவர் கொடுக்கின்ற ஒரு நிகழ்ச்சி வரலாறு மிகச் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. இந்த நரம்புவழி நோயினர் ஓர் இளம் மருத்துவர். அவர் தம்முடைய வாழ்நாள் முழுவதும் நாலாப்பக்கங்களிலும் அடைக்கப்பட்ட இடங்களின்மீது செறிவான பயத்தை வளர்த்துக் கொண்டிருந்தார்; கதவுகளெல்லாம் அடைக்கப்பட்ட ஒரு சிறு

அறையிலிருந்தபொழுது கடுந்துயரினல் வருந்தினர். அதனல் அவர் திரைப்படம் பார்க்கப் போக முடியவில்லை. வழிகள் எல்லாம் மக்கள் கூட்டங்களால் அடைக்கப்பட்டிருப்பது போன்று தோன்றியது. முதல் உலகப்போரின் போது குடையப்பட்ட குழியைக் கண்டு பயப்பட்டார்; திறந்த குழியில் நெருப்பினடியி லிருக்க விரும்பினர். அப்பொழுதுதான் தம்முடைய பயம் ஓர் இயல் பிறழ்ந்தது என்று கண்டார். அது விளக்கிக் கூற முடியாத தாக இருந்தது. ஆனல், அதற்குக் காரணமான எந்த ஓர் அனு பவத்தையும் அவர் நினைவில் கொள்ளமுடியவில்லை. உள மருத்துவ ரான ரிவர்ஸ் அந்த இளைஞனுடைய இளம்பருவ வாழ்க்கை நினைவுகளை எவ்வாறு மீட்டறிதல் முடியும் என்பதை அறிவுறுத் தினர்; அவற்றை இந்தப் பீதியோடு எவ்வாறு தொடர்பு உள்ள தெனக் காட்ட முடியும் என்பதையும் கூறினர்.

பல முயற்சிகளுக்குப்பிறகு அந்த இளைஞர் ஒரு நான்கு வயதுச் சிறுவராக இருந்தபோது ஏற்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச் சியை அவரால் நினைவுக்கழைக்க முடிந்தது. உப்பிட்ட ஓர் இறைச் சித்துண்டை ஓரிடத்தில் அவர் கண்டார்; அதை ஒரு கசாப்புக் கடைக்காரனிடம் எடுத்துச் சென்றர்; அவனிடம் பேரம் பேசி விற்றுவிட்டுத்திரும்பி வந்தார். ஒரு குறுகலான இருட்டு வழியே வரும்போது தெருவுக்குச் செல்லும் கதவு அடைக்கப்பட்டிருந்தது. ஒரு நாய் அந்தக் குறுகலான கடந்து செல்லும் வழியில் அவனைப் பார்த்து உறுமிற்று. அச் சிறுவர் திகில்கொண்டு அந்த இடத்தி லிருந்து வெளியேறும் முயற்சியில் வெறிகொண்டார். இடை வெளிக்காலத்தில் அவர் இந்த நிகழ்ச்சியை மீட்டறியவில்லை. ஆனல் பீதியாக முடிவு இருந்தது. அடைத்து வைக்கப்பட்டிருப்ப தாகத் திகில் கொள்ளும் கனவுகள் கண்டார். அந்த அனுப வத்தின் நினைவு மீட்டறியப்பட்டுத் தன்மயமாக்கிய பிறகு அந்தப் பீதிகளும் கனவுகளும் மறைந்தன.

பீதிகளின் தோற்றங்கள் : பீதிகளின் சில முக்கிய சிறப்புக் கூறுகளை வரிசைப்படுத்தலாம். முதலாவதாக, குழந்தைப் பருவத் தில் செறிவான அச்சம் தரும் அனுபவத்தில்தான் பீதிகள் அடிக் கடி தோன்றுகின்றன. அவ் வகையான பிறப்பிடங்களுக்கான பல நிகழ்ச்சிகளைக் காட்டலாம். ஆனல், அதே சமயத்தில் பீதி களின் தோற்ற நிகழ்ச்சிகளை நிரூபிக்க முடியாதபோது சந்தேகங் களும் ஏற்படலாம்.

இரண்டாவதாக, பீதிகளின் இந்தச் சிக்கலான அனுபவம் நோயாளியின் நடத்தையில் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்

தாலுங்கூட விசித்திரமான முறையில் மறக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிகழ்ச்சிக்கான நினைவு நசுக்கப்பட்டிருக்கின்றது.

மூன்றாவதாக, உளவியல் தொழில் நுணுக்கத்தின் உதவிமூலம் அந்த நிகழ்ச்சி மீட்டறியப்பட்டபொழுது நோயாளி அதனுடன் பொருத்தப்பாடு செய்துகொள்ளுகின்றான். அவ்வாறு செய்து கொள்ளும்பொழுது பீதி மறைந்து போகின்றது.

நான்காவதாக, பெரும்பாலான மனிதர்கள் கடுமையான பீதியால் துன்புறும்பொழுது மற்றப்பொருத்தப்பாடுகளை வெளிப் படுத்துகின்றார்கள். அவர்கள் அடிக்கடி மனவுரமில்லாமை, கவலை, திக்கிப் பேசுதல், கெட்ட கனவுகள், மற்றும் பல அறிகுறி களுக்கு ஆளாகின்றார்கள்.

ஆனால், பீதியை எளிதாகவும் விளக்கலாம். ஏதோ ஒரு தூண்டலுக்கான குறிப்பிட்ட பயத்தின் பிறப்பிடந்தான் பீதி என்று கூறலாம். இந்து ஓர் ஆக்கநிலையிறுத்தப்பட்ட அச்ச எதிர் வினை. இது தொடர்பின் மூலம் கற்கப்பட்டதாகும். ஒரு மனிதன் ஓடுகின்ற பெருவெள்ளத்தைக் கண்டோ, நாயைக் கண்டோ, இருளைக் கண்டோ அச்சம் கொண்டான் என்றால், அவனை வலிமை மிக்க பயம் தூண்டியிருக்கின்றது. அதே சமயத்தில் மாற்றுத் தூண்டலும் தோன்றியிருக்கின்றது. எளிய பீதிகளில் இது மிகவும் உண்மையாகும்.

சில நிகழ்ச்சிகளில் கற்றல் செயல்முறை இரட்டையாக ஏற்படுமானால், அச்சத்தைத் தூண்டும் பொருள் இரண்டாந்தர (secondary) ஆக்கநிலையிறுத்தப்பட்ட தூண்டலாகின்றது. உதாரணமாக, ஒரு மனிதன் இருளைக் கண்டு ஆக்கநிலையிறுத்திய பயம் கொண்டிருக்கின்றான். அவன் இதை இருளைப் போன் றிருக்கின்ற பொருள்களின்மீது மாற்றிக்கொள்ளலாம். கருப்புக் கோட்டு அணிந்துகொண்டு செல்லுகின்ற மனிதனைக் கண்டும் அவன் அச்சம் கொள்ளலாம். இருளும், கருப்புக் கோட்டு மனித னும் அவனுடைய சிந்தனையில் இணையாகக் கருதப்படலாம். ஆனால், ஒரு பீதியின் பெரும்பாலான குறிப்பிடத்தக்க பண்புக் கூறுகள் ஆக்க நிலையிறுத்தப்பட்ட அனுபவங்களல்ல. அடியி லேயே படிந்திருக்கின்ற ஆளுமைப் பண்புகளும் நசுக்கப்பட்ட உண்மை நிகழ்ச்சியுந்தான் பீதியின் முக்கிய பண்புக்கூறுகளாகும். ஓர் அச்ச அனுபவம் தெளிவாக நினைவு கொள்ளப்படுமானால், அது சாதாரணமாகக் காலத்தினால் வெற்றி கொள்ளப்படுகின்றது. மூல அனுபவம் அதே சமயத்தில் மீட்டறிய முடியவில்லை என்றால், பயனற்ற ஆக்க நிலைபிறுத்தங்கள் பீதியில் ஏற்பட்டிருக்கின்றன என்றும் அறியலாம்.

ஆனல், பொதுவாக நல்ல முறையில் பொருத்தப்பாடுள்ள ஒரு மனிதன் பீதிக்கு அரிதாகவே இலக்காகின்றான். பீதியையும், நசுக்குதலையும் தோற்றுவிக்கின்ற ஆளுமையின் பழக்கங்களை அமைக்கும் அதே காரணக் கூறுகள் தேவைக்குக் குறைவான பொருத்தப்பாட்டிற்கும் பொறுப்பாக இருக்கின்றன.

கட்டாயங்களும் பீடிப்புகளும் (Compulsions and Obsessions): கட்டாயங்கள் மேலோட்டமாகப் பார்க்கும்போது கோளாறுகளாகத் தெரிய மாட்டா. ஆனல், செறிவான நிலைக்குச் செல்லுமானல், துயரங்களுக்கு ஆளாக்குகின்றன. கட்டாயமென்பது ஒரு வலிமை மிக்க உள் தூண்டலாகும்; அடிக்கடி சில பகுத்தறிவுக்கு ஒவ்வாத நடவடிக்கைகளைச் செய்யத் தூண்டும் உள் தூண்டல். கட்டாயங்களால் துன்புறுகின்ற மனிதர்கள் தங்களுடைய நடத்தை நகைப்பிற்கு இடமானது என்பதை உணருகின்றார்கள். ஆனலும், அவர்களால் அந்தத் தூண்டலை நிறுத்த முடியாது. கட்டாயங்கள் பீதிகளைத் தொடர்ந்து செல்லுகின்றன; அதே உளவியல் பண்புகளும் கொண்டிருக்கின்றன.

ஓர் இளம்பெண்ணொருத்தி, தனக்குப் பின்னல் ஏதோ ஒன்று இருப்பதாகப் பயம்கொண்டாள். அவள் கட்டாயம் என்ற இந்தக் கோளாறை வெளிப்படுத்தினள் சமயத்திற்குச்சமயம் தானிருக்கும் அறையை முற்றிலும் தேடிப் பார்த்து வந்தாள். அங்கு ஒன்றுமே இல்லை என்று அறிந்த பிறகும் அவள் அதைச் செய்தாள்.

கட்டாயம் பொருத்தப்பாட்டுப் பயன் விளைவைக் கொண்டதாக இருக்கின்றது. இது பீதியின் அச்ச எதிர் வினையைக் குறைக்கின்றது. மற்றக் கட்டாயங்கள் எல்லாம் வழக்கமாகப் பீதிகளைக் குறைப்பதாக இருக்கின்றன அல்லது பீதிகளுக்கு மாற்றுச் செயல் முறையாக இருக்கின்றன.

பீடிப்புகள் எண்ணங்கள் சம்பந்தப்பட்டவையாகும். பீடிப்புகள் அடிக்கடி தோன்றுகின்ற சிந்தனை. அதற்கு ஆளான மனிதன் அதைத் தடுக்கமுடியாது. அந்தச் சிந்தனை பொருளற்றது என்றும், பயனற்றது என்றும், பைத்தியக்காரத்தனமானது என்றும் தெரிந்திருந்தாலும் அவனல் அதைத் தடுக்க முடியாது. ஒரு மனிதன் ஒன்பது என்ற எண்ணினல் பீடிப்புக்கு ஆளானன். அவன் எப்பொழுது பார்த்தாலும் இந்த எண்ணை நோக்கிக் கொண்டிருந்தான்; பார்க்கின்ற சொற்களிலுள்ள எழுத்துகளையும், சொற்றொடர்களையும் எண்ணிப் பார்த்து ஒன்பது வருகின்றதா என்று பார்த்து வந்தான். இந்துப் பீடிப்பு ஒருபால் போராட்ட அடிச்சுவடுள்ளதாக இருந்தது.

தன்னுடைய இளமைப்பருவத்தில் அந்த மனிதன் மூட நம்பிக்கையுள்ள ஓர் இளம் நங்கையுடன் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. அந்த இளம் நங்கை ஒன்பது என்ற எண்ணைக் கண்டு பயப்பட்டாள். அந்த மனிதன் இந்தக் கதையினால் மிகவும் வெட்கமடைந்தான்; இதனுடைய நேரடி நினைவை நசுக்கினான். ஆனால், ஒன்பது என்ற எண் பீடிப்பு அவனுடைய முழுக் கவனத்திற்கு ஒரு மாற்றுச் செயல்பட்டது; மேலும், அவனுடைய கவலையின் உண்மைப் பிறப்பிடத்தை அறிந்துகொள்வதிலிருந்து அவனுடைய கவனத்தைச் சிதைத்து வந்தது. பீடிப்பு நோய் எல்லா இயல் பிறழ்ந்த அறிகுறிகளைப் போலவே இயல்புநிலை வாழ்க்கையிலும் காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் தம்முடைய அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகள் சிலவற்றை நன்கு கூர்ந்து நோக்குவார்களானால், இந்தப் பண்புக்கூறுகள் ஏதேனும் ஒரு படித்தரத்தில் இருந்துவரக் காணலாம்.

அடக்குதலும் (நசுக்குதலும்) பொருத்தப்பாடும் (Repression and Adjustment)

அடக்குதல் ஒரு கவர்ச்சிகரமான உளவியல் நிகழ்ச்சியாகும். இது பெரும்பாலும் பீதிகளில் காணப்படுகின்றது; கட்டாயங்கள், பீடிப்புகள் ஆகியவற்றிலும் காணப்படுகின்றது. அடக்குதலின் செயல் முடிவுகள் சாதாரணப் பொது அறிவு கொண்டு நினைத்துப் பார்க்க முடியாதவையாகும். ஒரு தனி மனிதனுடைய வாழ்க்கையில் அவ்வளவு ஆழமான செல்வாக்கை உண்டாக்குகின்ற ஓர் அனுபவத்தை மறந்துவிட முடியுமா? முடியும் என்றுதான் உளவியலார் கூறுகின்றனர். அதற்கான சான்றுகளும் ஏராளமாக இருக்கின்றன. எவ்வாறிருப்பினும், அடக்குதல் நடைபெறுகின்றது. பீதிகளினால் துயருறுகின்ற மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகள் இந்தச்செயல்முறைநடைபெறுவதைத் தெளிவாகவிளக்குகின்றன.

இயல்பு நிலையிலுள்ள மனிதர்களிடம் நடத்திப் பார்த்த ஏராளமான பரிசோதனைகளின்மூலம் தெரிந்த உண்மை என்னவென்றால், மனிதர்கள் தங்களுடைய அனுபவங்கள் பயமுள்ளவையாகவோ, வெட்கப்படக்கூடியவையாகவோ இருக்குமானால், அவற்றை மறந்துவிட வேண்டும் என்ற மனப்போக்குடையவர்களாக இருக்கின்றார்கள் என்பதாகும். மகிழ்ச்சியற்ற அனுபவம் என்பதால், இயல்பு நிலை வாழ்க்கையில் நடைபெறுகின்றபோது இயல்பிறழ்ந்த வாழ்க்கையில் அஃது இன்னும் தீவிரமாக நடைபெற முடியும் என்று உளவியலார் நம்புகின்றனர். அடக்குதல் என்பது கட்டுப்படுத்திய பொருத்தப்பாடு என்றும் விளக்கம் தரப்படுகின்றது.

மனிதர்களில் யார் சிலவற்றைச் செய்யாமலிருப்பதன்மூலம் பொருத்தப்பாட்டைப் பெறுகின்றனர். ஏனென்றால், சிலவற்றைச் செய்வதன்மூலம் அவர்கள் தங்கள் மகிழ்ச்சியை இழக்கின்றார்கள். ஒரு மனிதன் ஒரு சமூக அவமரியாதையைப் போக்கும் பொருட்டுச் சமூகச் சூழ்நிலைகளிலிருந்து தன்னைப் பின்னிழுத்துக் கொள்ளலாம்; பிறருடைய தொடர்புகளை அறுத்துக்கொள்ளலாம். இதில் பிறரோடு சேர்ந்திருக்க வேண்டுமென்ற இயல்நிலை விருப்பம் தடுக்கப்படுகின்றது.

அவமரியாதையை உண்டாக்குகின்ற இடங்களையும் சூழ்நிலைகளையும் மக்கள் புறக்கணிக்கவே விரும்புகின்றார்கள். அது போலவே ஒரு மனிதன் தனக்குத் துன்பம் தந்த ஒரு கடந்த கால நிகழ்ச்சியை மீட்டறிதலைத் தடுப்பதன்மூலம் பொருத்தப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளலாம். நினைவுக்கழைத்தல் அல்லது மீட்டறிதல் ஒரு நடவடிக்கையாகும். இஃது ஒரு தூண்டலுக்கு ஏற்படுகின்ற ஒரு துலங்கல். தசைநார்களின் நடவடிக்கையைப்போல் மீட்டறியும் நடவடிக்கையும் தடைக்கு எளிதில் இணங்கும் தன்மையுள்ளதாக இருக்கின்றது.

அடக்குதல் என்ற செயல்முறை முதலில் முற்றுப்பெறுமலிருக்கின்றது. ஓர் அச்சத்தைத் தருகின்ற நடவடிக்கையோ அவமான கரமான நடவடிக்கையோ நடைபெற்றவுடன் அதை எந்த வகையான சங்கடமுமின்றி மீட்டறிய முடியும். ஆனால், பயிற்சியின் மூலம் ஒரு மனிதன் ஒரு நிகழ்ச்சியை நினைவில் கொள்ளாமலிருக்கும் நடவடிக்கையில் திறமை பெறலாம். ஆகையினால், இறுதியில் அந்த நிகழ்ச்சியை மிகுந்த சிரமத்திற்கிடையேதான் மீட்டறிய முடியும். எனவே, அடக்குதல் அரைகுறையான பொருத்தப்பாடாக இருக்கின்றது. துன்பகரமான சூழ்நிலைகளை மீட்டறியும் செயலைத் தடுப்பதன்மூலம் இந்த அரைகுறையான பொருத்தப்பாட்டை அடக்கல் ஈட்டுகின்றது. ஒரு மறக்கப்பட்ட அனுபவம் ஒரு பீதியைத் தொடர்ந்து உண்டாக்க முடியும் என்பதை நாம் விளக்கிக் கூறலாம்.

அடக்குதல் பீதியை நிலைத்திருக்கச்செய்கின்றது. ஏனென்றால், அது கிடைக்கக்கூடியதாக இருக்கின்ற மறு கல்வியைப் பெறும் வழிகளைத் தடுக்கின்றது. நாயைக் கண்டு பயப்பட்ட குழந்தையின் பயத்தைப் போக்க வேண்டுமானால், நாய் குழந்தைக்குப் பழக்கப்பட வேண்டும். திரும்பத்திரும்ப ஏற்படுகின்ற தொடர்புகளின்மூலம் குழந்தை நாயினிடம் நட்புறவு கொண்டு பயத்தை அகற்ற வேண்டும். ஆனால், குழந்தைக்குப் பயத்தை

விளைவித்த நாய் வெகு நாள்களுக்கு முன்பே இறந்து போயிருந்தால் குழந்தை மறு கல்வி பெறுவது சிரமந்தான். அதை வாய்மொழியாகத்தான் பெற முடியும். முன்பு நடந்த அச்ச அனுபவத்தைப்பற்றிப் பேசுவதன் மூலமும் புதுப் பொருத்தப்பாடுகளை ஏற்படுத்துவதன்மூலமும் மறு கல்வி பெறச் செய்யலாம்.

எந்த ஒரு தூண்டலுக்கும் ஒரு புதுப் பொருத்தப்பாட்டை உண்டாக்க ஒரு தனியாளுக்குப் பயிற்சியளிப்பதுதான் பொருத்தக் கேட்டைக் குணப்படுத்தும் வழியாக இருக்கின்றது. தூண்டல் சொல் வடிவிலோ கருத்து வடிவிலோ உண்மையாக இருக்க வேண்டும் அல்லது மாற்று வடிவத்திலிருக்க வேண்டும். சொற்களோ அல்லது கருத்துகளோ அடக்கப்படுமானால் மறுகல்வி பெறுவது ஒன்று மிகவும் சிரமமாகி விடுகின்றது அல்லது முடியாததாகி விடுகின்றது. நினைவை மறுபடியும் இயங்க வைப்பது தனியாளை அவனுடைய பயத்தினுடைய மூலத்தூண்டலுக்கு ஒரு புதியதும் அதிகமானதுமான பொருத்தப்பாட்டுத் துலங்கல்களைச் செய்ய அவனை அனுமதிக்கின்றது. இதனால்தான் ஒரு பீதியினுடைய தற்செயலான அனுபவத்தை மீட்டறிதல் எப்போதும் நோய் போக்கும் ஒரு வழியாக முடிகின்றது. பொருத்தக் கேடுற்ற மனிதர்களின் பொதுச் சிறப்புக்கூறு துன்பியலான அனுபவங்களை மீட்டறிவதை அடக்குகின்ற மனப்போக்காகும். நற்பேறற்ற இந்த ஆளுமைக்கூறு குழந்தைப் பருவத்தில் பெறப்பட்டதாகும். பெற்றோரின் இரக்கமற்ற நடைமுறைகளினால் குழந்தைகள் பெறுகின்ற துன்ப அனுபவங்கள் இந் நிலைகளை உருவாக்குகின்றன.

குழந்தைகள் தங்களுடைய துன்பங்களையும் அச்சங்களையும் உண்மையென ஒப்புக் கொள்ளுகின்றார்கள். திடீரென்று அவர்கள் தடுக்கப்பட்டால் அல்லது தாங்கள் நம்பிக்கையுடன் அணுகக்கூடியவர்கள் யாருமில்லை என்றால் ஏதேனும் ஒரு பொருத்தப்பாடு செய்துகொள்ளவேண்டும். பீதிகள் பெரும்பாலும் அடக்குதல் பழக்கம் உள்ளவர்களிடம் ஏற்படுவதால், இந்த மனிதர்கள் அடிக்கடி மற்றப் பொருத்தக்கேடுகளையும் வெளிப்படுத்துகின்றார்கள். ஆகையினால், செறிவான பீதிகள் பெரும்பாலும் அடிக்கடி அரைக்கிறுக்காக உள்ளவர்களிடம் அதிகமாகக் காணப்படுகின்றன.

கவலைகளும் அவற்றின் விளைவுகளும் (Anxieties and their Effects)

கவலைகள் பெரும்பாலும் போதாதப் பொருத்தப்பாடுகளைத்தான் மூலாதாரமாகக் கொண்டிருக்கின்றன. நாம் மேலே விவரமாகக் கூறிய பொருத்தப்பாட்டு இயந்திர நுட்பங்களான எளிய

ஈடு செய்தல் முதல் அடக்குதல் வரையில் எல்லாமே போராட்டங்களிலிருந்துதான் தோன்றுகின்றன; பிறகு வலுவூட்டப்படுகின்றன. அதன்மூலம் அவை கலையைக் குறைக்கின்றன. ஒரு மனிதன் தன்னுடைய ஒரு போராட்டத்திற்கு நேர்முகமாகவோ பொருத்தப்பாட்டு இயந்திர நுட்பங்கள் மூலமாகவோ ஒரு தீர்வை அடைய முடியாமல் போவானுனல், அவன் ஒரு நிலையான ஒரு மனவெழுச்சி நிலையிலிருக்கின்றான். கவலை அல்லது போராட்டத்தை நோக்கியுள்ள மனவெழுச்சித் துலங்கல்தான் எல்லா வகையான பொருத்தக்கேடுகளுக்கும் தொடக்கமாக இருக்கின்றது.

நம்மைத் திணறடிக்கச் செய்கின்ற சிரமங்களை நோக்கியுள்ள ஒரு துலங்கலாகத்தான் நிலையான கவலை இருந்து வருகின்றது. இந்த நிலையான கவலை வழக்கமாக மூன்று வகையான அறிகுறிகளாக முடிகின்றன. முதலில் இத்தகைய கவலைக்கு ஆளான மனிதன் தன்னுடைய உடலின் உள்ளுறுப்புகளின் (visceral) நிலையில் மாற்றங்களைக் காட்டுகின்றான். அவை சிறிதும் குறையாத மனவெழுச்சி எதிர்வினைகளைத் தொடர்ந்து வருகின்றன. தொடக்க காலத்தில் விரைவான நாடித்துடிப்பு, அதிகரிக்கப்பட்ட இரத்த அழுத்தம், மூச்சுத் திணறல், வாய் உலர்ந்து போதல், மற்றும் மனவெழுச்சியின் அவசர நிலைமையின் அறிகுறிகள் ஆகியவை இதில் அடங்கியிருக்கின்றன. ஆனால், இந்த உயர்ந்த நிலைமைகளின் வேகம் குறைவடைந்த பிறகு எதிரான நிலைமைகள் உள்ளுறுப்புகளில் தோன்றுகின்றன. இரத்த அழுத்தம் குறைதல், களைப்பு, செறிமானம் பழுதடைதல் ஆகிய வெறுமையாக்கும் அறிகுறிகள் ஏற்படுகின்றன.

இரண்டாவதாக, கவலை இயக்க அறிகுறிகளைத் தொடர்ந்து வருகின்றது. குதிக்கின்ற எரிச்சல், உபயோகமற்றதும் திரும்பத் திரும்பச் செய்கின்றதுமான தசைநார் அசைவு முதலியவை காணப்படுகின்றன.

மூன்றாவதாக, குறியீடு நடவடிக்கை வழக்கமாகத் தோன்றுகின்றது. பெரும் துயரத்னதத் தரும் எண்ணங்களைப்பற்றிச் சிந்தித்தல் அல்லது பேசுதல் வடிவத்தில் இது நடைபெறுகின்றது.

எல்லாவிதப் படித்தரங்களிலும் குறைவடையாத கவலை ஏற்படலாம். இயல்பு நிலையிலுள்ள எல்லா மனிதர்களுமே இதை நடுக்கம் (nervousness). தொல்லை ஆகியவற்றின் வடிவங்களில் எப்போதாவது அனுபவப்பட்டிருக்கலாம். மிகவும் முனைப்பான

வடிவங்களில் போராட்டங்களின் விளைவுகள் கவலை நிலைமைகளாகக் காணப்படலாம். அவை உளவழி நரம்புப்பிணியின் கடுமையைக் காட்டுவதாகும்.

இந்தப் பொதுவான வகுப்பில் உளவழி உடல்கோளாறுகளும் (psychosomatic disorders) அடங்குகின்றன. முற்றிய மனவெழுச்சி இறுக்கத்தால் தூண்டப்பட்ட உறுப்புக்குரிய மாற்றங்களிலிருந்து உள்ளுறுப்பு நோய்களில் ஒன்றான குடல்புண் (peptic ulcer) உண்டாகின்றது. குடல்புண் மருத்துவத் துறைக்கும் உளவியல் துறைக்கும் உள்ள ஒரு பொதுப்பிரச்சினையாகும். ஆனால், குடல் புண்ணின் அடிப்படைக் காரணம் சரியாகத் தெரியவில்லை. உடற்கூற்றுக் கோணத்திலிருந்து பார்க்கும்போது, வயிற்றின் இரைப்பையைச் சார்ந்த சாறு அல்லது சுரப்பிநீர் சிறுகுடலைச் சார்ந்த இழை மூலத்தின் (Tissue) மீது விழும்பொழுது, அந்த நடவடிக்கையை இழை மூலங்கள் தாங்கிக்கொள்ளத் தவறிவிடுகின்றன. இந்தச் செயல்முறை பல்வேறு வழிகளில் வெளிப்படுகின்றது. இது மனவெழுச்சிக்குரிய இறுக்கம், பயம், கவலை, மன இறுக்கம் ஆகியவையாகவும் காணப்படலாம். இதற்குச் சிகிச்சை செய்ய வேண்டுமானால், அறுவை, மருத்துவம், உணவியல் ஆகியவற்றை இணைத்தாக வேண்டும். குடல்புண் பிரச்சினையானது உளவியல் நோக்கிலிருந்து பார்க்கப்படும்போது அது தனியாளின் பொது மனவெழுச்சிப் பொருத்தப்பாட்டோடு தொடர்புள்ளதாக இருக்கிறன்து.

கவலையின் மென்மையான வடிவங்கள்: உண்மையானதும் உடனடியானதுமான காரணங்களிலிருந்து கவலை தோன்ற முடியும். இது பொதுவான அனுபவமாகும். மன உரமின்மை (nervousness), தொல்லை (worry) ஆகியவை இயல்பு நிலையிலும் காணப்படலாம். தந்தையின் அறிவுரையைத் தட்டிச் சென்று, வெளியில் வெகு நேரத்தை வீணாக்கிவிட்டு, குற்றச்சாட்டோடு வீடு திரும்புகின்ற சிறுவன், தந்தை கோபத்தோடு வீட்டினுள்ளிருப்பதையறிந்ததும் வெளியிலிருந்தவாறே நடுக்கம் கொள்ளுகின்றான். இது முதல் தடவையாக இருக்கலாம். தொடர்ந்து இது போன்ற நிகழ்ச்சி சிறுவனின் வாழ்க்கையில் நடைபெறுமானால், அஃது ஆளுமையின் ஒரு பழக்கமாகிவிடுகின்றது. நாள்பட்டதான நடுக்க உணர்வைக் கொண்டுள்ள மனிதன் அடிக்கடித் தன்னைச் சுற்றியுள்ள போராட்டத்திற்கான தூண்டல்களைக் கூடவே கொண்டு செல்லுகின்றான். இஃது அவன் தனக்குரிய பாதுகாப்பைப் பெற்றிருக்கவில்லை என்பதைக் காட்டுகின்றது.

மன உரமின்மையானது அடிக்கடித் தவறாக விளக்கம் செய்யப்படுகின்றது. குறிப்பாகத் தற்காலிகமான மன உரமின்மையும் நாள்பட்ட மன உரமின்மையும் சரியாகப் புரிந்துகொள்ளப்படவில்லை. மன உரமின்மைக்குத் தரப்பட்ட மிகச் சிறந்த விளக்கம் இயக்க அறிகுறிகளை மிகுதியாகக்கொண்ட ஒரு நிலையான கவலை என்பதாகும். உரமில்லாத மனிதன் ஓய்வு கொள்ள முடியாது. அவன் தொடர்ந்து சிறிய பயனற்ற அசைவுகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பான். அவன் தான் உட்கார்ந்திருக்கும் நாற்காலியில் அமைதியாக இருக்க மாட்டான்; புழுப்போல நெளிந்து கொண்டேயிருப்பான்; பெரும் சந்தடிகள் செய்வான்; எப்பொழுதும் படபடத்துக்கொண்டிருப்பான்; அடிக்கடி இங்குமங்கும் காரணமின்றிச் சுற்றிக்கொண்டிருப்பான். மேலும், அவன் எளிதில் கோபிக்கக்கூடியவன்; பிறர்மீது குற்றங்காண்பவன்; சண்டை போடக்கூடியவன். சிறிய கவனச் சிதைவுகள், உதாரணமாக, ஒரே மாதிரித் தோன்றிக்கொண்டிருக்கின்ற ஒலிகள் அவனை மிக அதிகமாகக் கோபம் கொள்ளச் செய்யும். மேலும், திடீரென்று தோன்றுகின்ற தூண்டல்கள் அவனை மிக அதிகமாகக் கலக்கம் கொள்ளச் செய்யும். இந்த இயக்க அறிகுறிகளோடுகூட உரமில்லாத மனிதன் சாதாரணமாக உடல் உள்ளுறுப்புகளின் அறிகுறிகளையும் காட்டுகின்றான். செறிமானக் கோளாறு, திடீரென்று களைப்படைதல் ஆகியவையும், தொல்லை, தீர்மானிக்க முடியாமை ஆகியவற்றின் சொல்வடிவ அறிகுறிகள் ஆகியவற்றையும் அவன் வெளிப்படுத்துகின்றான்.

மேலும், உறுப்புக்குரிய கூறுகள் மன உரமின்மைக்குக் காரணமாக அமையலாம். ஆனால், மன உரமின்மை நரம்புகளின் வலிவின்மையினால் ஏற்படுவதன்று. நரம்பு வலிவின்மை அல்லது நரம்புத் தளர்ச்சி என்பது அறிவியல் அடிப்படையற்ற ஒரு பொது மக்கள் கருத்தாகும். ஆனால், மன உரமின்மையின் சில அறிகுறிகள் நஞ்சு சார்ந்த நிலைமைகளாலும், நாள்பட்ட தொற்று நோய்களாலும், சில சுரப்பிகளின் தொந்தரவுகளினாலும், தைராய்டுச் சுரப்பி அதிகமாகச் சுரப்பதனாலும் ஏற்படுகின்றன; சில சமயங்களில் தீவிரமுமடைகின்றன. மற்றச் சமயங்களில் இந்த நோய் மன உரமின்மைக்கு மறைமுகமான காரணமாக இருக்கின்றது.

ஒரு மனிதன் மிகவும் துன்பம் தரும் நோயால் வருந்துகின்றான். அந்த நோயினின்றும் அவனால் தப்புவதற்கு முடியாது அல்லது அதைக் குணப்படுத்திக் கொள்ள முடியாது என்று கருதி அச்சம் கொள்ளுவானானால், மிகக் கொடுமையான துன்பங்களுக்

சான ஒரு மனவெழுச்சித் துலங்கலாக மன உரமின்மை எழுகின்றது. இவ் வகையான நிகழ்ச்சிகளில் உறுப்புக்குரிய கோளாறுகளுக்காகத்தான் அவன் அச்சம் கொள்ளுகின்றான். ஆனால், மன உரமின்மை என்பன என்னமோ உளவியல் சார்பானதேயாகும். பெரும்பாலான மன உரமின்மைகள் உறுப்புக்குரிய அடிப்படையைக் கொண்டிருக்கவில்லை. ஆனால், தீர்வு காண முடியாத போராட்டத்திற்கு ஒரு கவலையின் எதிர்வினை அறிகுறியாகக் காணப்படுகின்றது. ஒரு மனிதன் ஒரு பிரச்சினைக்குத் துலங்குகின்றான். அவன் அதனோடு தன்னைப் பொருத்தப்பாடு செய்து கொள்ள முடியவில்லை. ஆனால், எதிர்வினைக்கு மிக அதிகமான மனப்போக்கு இருக்கின்றது. அவன் துலங்கலைச் செய்வதற்கு எல்லாவித வகைகளிலும் தூண்டப்பட்டிருக்கின்றான்; ஆனால், தடுக்கப்பட்டிருக்கின்றான். ஏனென்றால், அவனால் எந்தப் பொருத்தப்பாட்டுத் துலங்கலையும் போதிய அளவு செய்ய முடியவில்லை. தடுக்கப்பட்ட ஓர் வலிமை மிக்க உள்துடிப்பானது மற்றத் தூண்டல்களுக்குத் துலங்கும்பொருட்டு முன்னேற்பாட்டின் பொது மட்டத்தை எழுப்புவதை நோக்கிச் செல்லுகின்றது. இதனால் அந்த மனிதன் தன்னுடைய முன்னேற்பாட்டை வெளிவிடுகின்றான். அது நடுக்கத்தின் அறிகுறிகளாக இருக்கின்றன.

ஒரு நடுக்கமுள்ள மனிதனின் இயக்கக்கிளர்ச்சியானது அவனுடைய உள் துடிப்புகளுக்குத் தற்செயலாக நடைபெறுகின்ற துலங்கலாகும். ஒருவனுடைய எரிச்சல் நடத்தையானது அந்த மனிதன் அச்சத்திற்கும், குறை கூறுவதற்கும், கோபத்திற்கும் உடனடியாகத் தூண்டப்பட்டாள் என்று காட்டுகின்றது. ஓர் ஒலியைக் கேட்டபொழுது துள்ளிக் குதிக்கின்ற மனப்போக்கையும் சிறு கவனச்சிதைவுகளையும் பெரிதும் பொருட்படுத்துகின்ற நடுக்கமுள்ள ஒரு மனிதன் அதே நிலைமைகளைத்தான் மேலும் காட்டுகின்றான்.

ஆனால், தற்காலிகமானதும், நிலைமையைச் சார்ந்ததுமான மனஉரமின்மையானது போராட்டம் நடந்ததாக ஆகிவிடுமானால், சாதாரணமாக மறைந்துவிடுகின்றது. நாள்பட்ட மன உரமின்மையானது குழந்தைப்பருவத்தில் நிலைநாட்டப்பட்ட பாதுகாப்பின்மையின் அடிப்படைப் போராட்டங்களின் பின் விளைவாக இருக்கின்றது. அட்டிப்பட்ட நிகழ்ச்சிகளைப் போக்குவது மிகச் சிரமமாகும். நீண்ட நாள்களுக்குத் தரப்படுகின்ற தீவிரமான சிகிச்சையின் மூலம்தான் இந்த அறிகுறியை அகற்ற முடியும்.

சோர்வு என்பது ஒருமைப்பாடற்ற சிந்தனைச் செயல்முறை. இது நிலைத்து நிற்கின்றது; குறையீடு அல்லது சொல் வடிவம் பெற்று மன உரமின்மைக்கு இணையானதாக இருக்கின்றது.

தொல்லைக்கு ஆளான மனிதன் தன்னுடைய துன்பங்களிலேயே கவனத்தைப் புதைத்துள்ளான். அவனால் அவற்றுடன் பொருத்தப்பாடு செய்துகொள்ள முடியவில்லை. பயனற்ற இயக்க நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளான். அதனால் அவன் துன்பத்தை விளைவிக்கும் எல்லா வகையான பொருள்களைப் பற்றியும் பேசுவதற்கும் சிந்திப்பதற்கும் தூண்டப்படுகின்றான்; சில சமயங்களில் தான் கூறுவதைக் கவனிப்பவர்களிடம் கதறவும் தொடங்கிவிடுகின்றான்.

பிரச்சினை உண்மையில் தீர்க்கப்பட்டபொழுது தொல்லையால் நிகழவிருக்கின்ற அச்சுறுத்தல் முடிவடைகின்றது. அல்லது சில தற்காப்பு வழியமைப்பு இறுக்கத்தைக் குறைக்கும்போது தொல்லை மறைகின்றது. தொல்லைக்கு ஆளான மனிதன், தான் தவறுடையவனாக இல்லை என்பதை உணருவானானால், தொல்லை ஒருமைப்பாடற்ற நிலையிலேயே விலகி விடுகின்றது இல்லையென்றால், புறக்கணிக்கப்பட்ட உள் துடிப்புகளை மற்றவர்களின்மீது புறத்தெறிகின்றான். இந்தச் செயல்முறையாலும் தொல்லையிலிருந்து விலகிவிடலாம்.

தொல்லையுடன் அடிக்கடித் தொடர்ந்து வருவது தடுத்தலாகும். ஒரு மனிதன் தன்னுடைய பயத்தின் உண்மையான காரணத்தைத் தன்னிடமே அனுமதிக்கவில்லையென்றால், அவன் இந்த மனவெழுச்சி எதிர்வினையை மற்ற எல்லா நிலைமைகளிலும் காட்சி மாற்றம் (displace) செய்கின்றான். ஒரு நிகழ்ச்சி வரலாற்று உதாரணம் இதை நன்கு விளக்கும்:

ஓர் இளைஞன் தன்னுடைய இயல்பான குமரப்பருவத்துப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுவதிலிருந்து தடுக்கப்பட்டான். தன்னுடைய சுதந்தரம், சமூகப் பொருத்தப்பாடு, பால்பொருத்தப்பாடு ஆகியவற்றைத் தன்னிச்சையாகத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. அவனுடைய தந்தையுடன் அவன் கொண்டிருந்த தொடர்புறவு அவனைத் தந்தையின் வலிமை மிக்க ஆதிக்கத்திலேயே இருக்கச் செய்தது. அந்த இளைஞன் தன்னுடைய தந்தையிடம் கொண்டிருக்கும் பகைமையை அடக்கி வந்தான். ஆனால், தன் தந்தை மிக நல்லவராக இருக்கின்றார் என்று அடிக்கடி அவன் கூறி வந்தான்; மிகவும் உணர்ச்சித் துடிப்புடன் தன்னோடு இருக்கின்றார் என்றும் கூறிவந்தான். இஃது எதிர்வினை அமைத்தலைக் கருத்தேற்றியுள்ளது. அவன் தன்னுடைய உடல் நலம், படிப்பு, சமூகத் தொடர்புறவுகள் ஆகியவற்றைப் பற்றிய கவலைகளை விரிவான

காட்சி மாற்றம் செய்து கொண்டான். அந்த இளைஞனுடைய நடத்தை அரைகுறையான பொருத்தப்பாடும் எஞ்சியுள்ள கவலையும் ஒருங்கே காணப்பெறுவதை விளக்குகின்றது.

அந்த இளைஞனுடைய அடக்குதல், எதிர்வினையமைத்தல், காட்சி மாற்றம் ஆகிய தற்காப்பு வழியமைப்புகள் அவனுடைய தந்தையோடு ஒத்துச் செல்வதற்கு அவனுக்கு உதவியளித்தன. ஆனால், அவன் கவலையுடையவனாக இருந்தான். ஒரு கவலையானது அதனுடைய காரணத்துடன் நேரமாக இருக்கும்பொழுது ஏதேனும் ஒரு காரணம் மறைத்து வைக்கப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

தொல்லையினால் வருந்துகின்றவர்கள் தங்களுக்கு மிகவும் நம்பிக்கையானவர்கள் என்று தோன்றுகின்றவர்களிடம் தொல்லைகளைப்பற்றிப் பேசுவதன்மூலம் அவற்றைப் போக்கிக்கொள்ளலாம். இஃது அடக்குதலை வெற்றி கொள்ளவும் பொருத்தப்பாடற்ற சுற்றி வளைந்து செல்லும் எதிர்வினையை உடைத்தெறியவும் உதவி செய்கின்றது. பொருத்தப்பாட்டுக்கான எந்த சுறுசுறுப்பானதும் ஆக்கச் சார்பானதுமான முயற்சி தொல்லையைக் குறைக்க உதவி செய்ய முடியும். தொல்லைக்கும் மன உரமின்மைக்கும் அடிப்படையான மருத்துவ முறை என்னவென்றால், ஒருவனைத் திகைக்கச் செய்த போராட்டங்களோடு அவன் முழு மன பொருத்தப்பாடு செய்துகொள்ளுவதாகும்.

உளவழி நரம்புப்பிணிக் கவலை (Psychoneurotic Anxiety): உளவழி நரம்புப்பிணிக் கவலையை ஆழமான அல்லது கடுமையான கவலை நிலைமைகள் என்றும் கூறலாம். உளவழி நரம்புப்பிணிக் கவலைகள் பொதுவான கவலைகளான மன உரமின்மை, தொல்லை ஆகியவற்றிடமிருந்து படித்தரத்தில் மாறுபடுகின்றன. இவற்றைப் பகுத்தறிதல் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது. ஏனென்றால், மிகக் கடுமையான கவலையின் நிலைமை மற்றெல்லா உளவழி நரம்புப் பிணிகளையும்விட அதிகமான அளவுக்கு ஒருவனை ஏழை நிலைமைக்கு ஆளாக்கிவிடலாம்.

இந்த நிலையை ஒரு நிகழ்ச்சி வரலாறு மூலம் விளக்கிக் கூறலாம். ஓர் இளம்போர்வீரன் பொது வாழ்க்கைக்குரிய வாழ்க்கையில் கவலை கொண்டான்; சண்டைச் சச்சரவுகளையும், தாக்குதலையும் பொறுத்துக் கொள்ள முடியாதவனாக இருந்தான். வட ஆப்பிரிக்கா முனையில் 1943ஆம் ஆண்டில் போர்முனையை நெருங்கிக் கொண்டிருக்கும்போது அவனுடைய மன இறுக்கம் உச்ச

நிலேயடைந்தது. ஆனுல், அவன் தன்னேத் தன்னுடைய கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தான். முதல் நாள் உண்மையான துப்பாக் கிப்போர் நடைபெறும்போது அவன் நடுங்கத் தொடங்கினுன்; மிகவும் அருவருப்புக் கொண்டான்; என்ன செய்வதென்றும் எங்குப் போவதென்றும் தெரியாமல் நடமாடிக் கொண்டிருந் தான்.

அவன் பிறகு மருத்துவ விடுதியில் சேர்க்கப்பட்டான்; அங்குச் சேர்க்கப்பட்ட பொழுது நிலேயான நடுக்கம் கொண்டான்; அமைதியிழந்து மிகுந்த அச்சத்துடன் காணப்பட்டான். அவன் விமானங்கள் பறக்கின்றனவா என்று தொடர்ந்து ஆகாயத்தைப் பார்த்து வந்தான்; போரிலீடுபடுவது போன்ற கனவுகள் கண்டு தூக்கமிழந்து வந்தான். சில வாரங்கள் சிகிச்சையளிக்கப்பட்ட பிறகு அவனுடைய நிலேமையில் முன்னேற்றம் காணப்பட்டது. போர்த் தொடர்பில்லாத வேலேகள் அவனுக்குத் தரப்பட்டன. இந்த நிகழ்ச்சி வரலாற்றில் உண்மையான ஆபத்துக்கு அந்த இளேஞனேக் குறைவாக வெளிப்படுத்தியதால், அவனுடைய கடுமையான கவலே நிலேமை திடீர் வீழ்ச்சியுற்றது. தாக்குதல் தொடர்புடைய கடுமையான போராட்டங்கள் ஏற்கெனவே அவனிடமிருந்தன.

வேறு சில போர்வீரர்களும் இப்படிப்பட்ட நிலேமைக்குச் சாதகமான பின்னணிகள் தங்களுடைய இளமைக்காலத்திலேயே உடையவர்களாக இருந்தார்கள். கடுமையான சூழ்நிலேயின் இறுக்கத்திற்குப் பிறகு சில சமயங்களில் இதே போன்ற கவலேயின் நிலேமைகள் அவர்களிடமும் வளர்ந்தது. ஓர் உறுதியான இளம் போர்வீரன் மிகவும் பயங்கரமான அனுபவம் கொண்டவன் குண்டுகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும்பொருட்டு இறந்து போன தன்னுடைய நண்பர்களின் உடல்களே எடுத்துப் போட்டுத் தன்னே மூடிக்கொண்டான். கவலேயின் நிலேமை இந்த அளவுக்கும் ஒருவனேச் செயல்பட வைக்கின்றது.

பொது மக்கள் வாழ்க்கையிலும் கடுமையான கவலே நிலேமை களான இப்படிப்பட்ட அறிகுறிகளேயுடைய காட்சிகள் காணப்படு கின்றன. மிகுதியான அச்சம், நடுங்குதல், உடல் உள்ளுறுப்புகளில் கலக்கம் ஆகியவை தோன்றுகின்றன. இந்த அறிகுறிகள் பெரும் பாலும் சில போராட்டங்கள் அல்லது அதிர்ச்சிகளேத் தொடர்ந்து ஏற்படுகின்றன. இவற்றுடன் ஒரு மனிதனிடம் காணப்படும் வழிமுறைகள் எதிர்த்து நின்று சமாளிக்க முடிவதில்லே.

உளவழி உடல் சார்ந்த கோளாறுகள் (Psychosomatic Disorders): நிலையான கவலையின் விளைவுகள் உடல் கோளாறுகளாக வெளிப்படுகின்றன. வலிமையான ஒரு மனவெழுச்சித் துலங்கலின் சிறப்புக் கூறு என்னவெனில், உள்ளுறுப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதாகும். இரத்த ஓட்டம், சுவாசப்போக்கு, சுரப்பிகளின் வழக்கமான செயல்முறை, செறிமான முறைகள் ஆகியவற்றில் கோளாறுகள் ஏற்படுகின்றன. இந்தச் செயல்முறைகளெல்லாம் தானியங்கு நரம்பு மண்டலத்தின் (autonomic nervous system) பகுதியான பரிவுணர்ச்சி நரம்பு மண்டலத்தினுல் (sympathetic nervous system) ஒருமுகப்படுத்தப்படுகின்றன.

கடுமையான கவலையின்போது இருதயத்தின் துடிப்பு அதிகரிப்பதைக் காண முடியும். இதை நெஞ்சுத் துடித்தல் (palpitation) என்று கூறுகின்றோம். ஒழுங்கு குறைந்ததும் தொந்தரவு செய்கின்றதுமான மூச்சு, அளவுக்கு மீறிய வியர்வை, செறிமானத்தில் தலையீடு ஆகியவையும் ஏற்படுவதைக் காண முடியும். இந்தத் துலங்கல்களையெல்லாம் உள் உறுப்புச் சார்புடையவை என்று கூறுகின்றனர்கள். இவை எல்லாம் உடலின் உள்ளுறுப்புகளைப்பற்றியதாக இருக்கின்றன.

ஆனுல், உச்சநிலையிலுள்ள கடுமையான மனவெழுச்சி செலவழிகின்றது. இதை நாம் நம்முடைய ஒவ்வொரு மனவெழுச்சியும் உச்சநிலையிலிருக்கும்போது உணர முடியும். சிறிது நேரத்தில் அந்த மனவெழுச்சி கோபமாக இருந்தாலும், பயமாக இருந்தாலும் இறங்கி வருகின்றது. செறிவான மன வெழுச்சியை நீண்ட நேரத்திற்கு நிலைநிறுத்த முடியாது. அவ்வாறு செய்யும்போது களைப்பு, தளர்ச்சி, முயற்சியை உபயோகிக்க மனமின்மை, தற்சார்புள்ள சிரமமான நோய் ஆகியவை தொடர்ந்து வருகின்றன. ஆகையினுல், நாள்பட்ட கவலைநிலை பெரும்பகுதித் தொடர்புகளில் மிகக் கடுமையானதொன்ருக இருக்கின்றது என்பதுபற்றி ஆச்சரியப்படத் தேவையில்லை.

நாள்பட்ட அல்லது முற்றிய கவலை நிலைமைகள் இரண்டு உளவழி நரம்புப்பிணிகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன. அவை அடங்குப்போக்சன் எதிர்வினை (asthenic) அல்லது களைப்பு நிலைமை, அச்சந்தரும் மனநோய் (hypochandriacal reaction) என்பவையாகும். இவை தெளிவில்லாத உடல் உள்ளுறுப்புச் சார்ந்த சங்கடங்களின் தனிச்சிறப்புக் குறிகளாகும். ஒருவன் தன்னுடைய உடல் நலத்தைப்பற்றி மிகுந்த அக்கரை கொள்ளுவதும் வெளிப்படுகின்றது. இந்த எதிர்வினைகள் தனித்தனியானவை

யல்ல. இவை இரண்டும் முற்றிய கவலைக்கு ஆளான ஒரு மனிதனிடம் சேர்ந்தே காணப்படுகின்றன.

முற்றிய கவலையின் விளைவுகளை விளக்க ஒரு நிகழ்ச்சி வரலாறு காணுவது சிறப்புடையதாகும். ஓர் இளம்பெண் கல்லூரியில் இறுதியாண்டில் பயின்றுகொண்டிருந்தாள். அவள் நடுத்தரமான கடுமையுள்ள களைப்பு எதிர்வினையை வளர்த்துக் கொண்டாள். எப்பொழுது பார்த்தாலும் அவள் களைப்புடன் காணப்பட்டாள். எந்த ஒரு சிறு முயற்சியில் ஈடுபட்டாலும், அஃது உடல் சார்பான தாக இருந்தாலும், அறிவுச் சார்பானதாக இருந்தாலும் அஃது அவளுக்கு மிகப்பெரும் சுமையாகக் காணப்பட்டது.

மேலும், பசியின்மை, செறிமானத் துன்பம், மலச்சிக்கல் ஆகிய வற்றிலும் அளவுக்கு மீறிய அக்கறை கொண்டிருந்தாள். விடியற் காலம் வரையில் அவளுக்குத் தூக்கமே வருவதில்லை; அதன் பிறகு காலை வகுப்புகளுக்குக்கூடச் செல்லாமல் அதிகமாகத் தூங்கினாள். கல்லூரி மருத்துவரால் அவளுடைய குறைபாடுகளுக்கு உடலு றுப்புத் தொடர்பான எந்தக் காரணத்தையும் காண முடியவில்லை; உணவையும் நடவடிக்கையையும் கட்டுப்படுத்தும்படி அறிவுரை கூறினார்.

குழந்தைப் பருவத்திலும், தொடக்க இளமைக் காலத்திலும் அப் பெண் ஓரளவுக்குத் தேவைக்கு மிகுதியான பாதுகாப்புடைய வளாக இருந்தாள். மேலும், அவள் தன்னந்தனியே வளர்ந்த வளாக இருந்தாள்; புத்தகப்பூச்சியாக இருந்தாள்; சமூகப்பயிற்சித் திறமைகளில் பின்தங்கியிருந்தாள். சில மாதங்களுக்குப் பிறகு அவள் காதலில் முதன்முதலாக ஈடுபட்டாள்; ஆனால், அவளுடைய காதல் சார்ந்த துடிப்புகளுக்கும் தன்னுடைய சிறுவயதில் வளர்த் துக்கொண்ட பாசாங்கு மனப்பான்மைக்கும் இடையில் ஒரு கடுமையான போராட்டம் இருக்கக் கண்டாள். இந்தப் பாசாங்கு மனப்பான்மையை ஓர் ஈடு செய்தல் தற்காப்பு வழியமைப்பாக ஒருவேளை அவள் வளர்த்துக் கொண்டிருக்கக் கூடும். அதாவது, அவள் பையன்களைக் கவருவதில் அவள் வெற்றிபுள்ளவளாக இருக்கவில்லை. இந்தக் குறைபாட்டை ஈடு செய்யும்பொருட்டுத் தான் பாசாங்கு மனப்பான்மை கொண்டிருக்கலாம். அவளைக் காதலித்த அந்த மனிதன் இவள் காதலுக்கும் அதைக் கண்டித்துப் பேசுவதற்குமிடையில் ஊசலாடிக் கொண்டிருப்பதைக் கண்டு குழப்பமடைந்தான். எனவே, அவன் அவளை ஏமாற்றிவிட்டான். அவள் கொண்டிருந்த நம்பிக்கை அவளையே பயமுறுத்திற்று. கடுமையான கிலியால் அவள் பீடிக்கப்பட்டாள். அதன் பிறகு அவள் முற்றிய ஒரு கவலை நிலைமையை வளர்த்துக்கொண்டாள்

மேலும் அந்தப் பெண், தன்னுடைய பிந்திய குமரிப்பருவத்துப் பிரச்சினைகள் தீர்க்க முடியாதவையாக இருக்கக் கண்டாள். படித்துப் பட்டம் பெற்றபின் ஒரு வாழ்க்கைத் தொழிலைப் பெற்றுச் சுதந்தரமாக வாழ வேண்டுமென்று பிந்திய குமரிப்பருவத்தில் அவள் கொண்ட விருப்பத்தை நிறைவு செய்துகொள்ளவில்லை. எனவே, இவற்றுக்கெல்லாம் அவளுடைய எதிர்வினை அச்சந்தரும் மனநோய்க் களைப்பாக இருந்தது. மேலும், கடுமையான அடங்குப்போக்கன், அச்சந்தரும் மனநோய் நிலைமைகளை வேறு நிகழ்ச்சி வரலாறுகளிலும் காணலாம்.

சில களைப்பு எதிர்வினைகள் ஒரு மனிதனை உளச்சார்பான நடவடிக்கைகளுக்குத் தகுதியற்றதாகக்கூட ஆக்குமளவுக்குக் கடுமையானதாகவும் முற்றியதாகவுமிருக்கின்றன. சில நோயாளிகள் முறையான சிகிச்சை பெறவேண்டிய நிலைக்கும் செல்லுகின்றார்கள்.

முற்றிய நிலையிலுள்ள அச்சந்தரும் மனநோய் எதிர்வினைகள் வெளிப்படுகின்றதைச் சில மனிதர்களிடம் நாம் காண முடியும். சிலர் தங்களுக்கு உடல் நலமில்லை என்று அடிக்கடிக் குறைபடுவதைக் காணலாம். அவர்கள் அடிக்கடி மருத்துவர்களை மாற்றிக் கொண்டிருப்பார்கள்; தாங்களாகத் தங்களிடம் கண்டுபிடித்த நோய்க் காரணங்களை உறுதிப்படுத்திக்கொள்ளுவதற்கு வீணாக நம்பி அவ்வாறு செய்து கொண்டிருப்பார்கள். அவர்கள் புதிதாகக் கண்டுபிடித்த மருந்துகளை அதிகமாக உபயோகிக்கின்றவர்கள்.

அச்சந்தரும் மனநோய், அடங்குப்போக்கன், எதிர்வினைகள் ஆகியவை பெரிதும் நாள்பட்ட மனவெழுச்சித் துலங்கல்களின் உள்ளுறுப்புக் கூறுகளிலிருந்து தோன்றுகின்றன. அதனால் அவை பொருத்தப்பாட்டின் குறைபாட்டைக் காட்டுகின்றன. ஆனால், அவை சிறு அளவான பொருத்தப்பாட்டுக்குரிய மன நிறைவுகளின் மூலக்கூறுகளாகவுமிருக்கின்றன. இஃது இரண்டாந்தர ஆதாயம் (secondary gain) என்று கூறப்படுகின்றது. அச்சந்தரும் மனநோயால் வருந்துகின்றவர்கள் மற்றவர்களுடைய கவனத்தைத் தங்கள்பால் ஈர்க்கின்றார்கள்; அதன்மூலம் தங்களுடைய தோல்விகளுக்கு அறிவார்ந்த விளக்கம் பெறுகின்றார்கள்; தான் வலிமையற்றவன், நோயாளி, இயலாதவன்; எனவே, மற்றவர்களுடைய அன்பையும் பாதுகாப்பையும் பெறுவதற்குத் தகுதி பெற்றவன் என்று அறிவார்ந்த விளக்கம் தருகின்றான். இவ்வாறு செய்வதன் மூலம் சில நோயாளிகள் மற்றவர்களை எரிச்சலூட்டுகின்றார்கள்

சில சமயங்களில். தங்கள் இயலாமையைத் தவறுகப் பயன் படுத்திக்கொண்டு பாசாங்கு பெறும் அளவுக்குச் செய்கின்றுர்கள். ஆனல், நாள்பட்ட கவலே எதிர்விளைகள் உண்மையான உளவியல் நிலைமைகளாகும்.

உடலுறுப்பு நோய்களுக்கும் உளவியல் போராட்டங்களுக்கும் உள்ள தொடர்புறவுகளின் பக்கம் அண்மைக் காலத்தில் மிக அதிகமான கவனம் செலுத்தப்படுகின்றது. சில கோளாறுகள் நோய்க் கூறுவியல்படி உடல் சார்பானவையே. ஆனல், அவற்றின் காரணங்கள் உளவியல் சார்பானவை. எனவேதான் இத்தகைய நோய்களை உளவழி உடல் நோய் (psychosomotic disorder) என்று கூறுகின்றனர். உளவழி உடல் கோளாறுகளின் ஆராய்ச்சி உடல் நலத்திற்கும் உள நலத்திற்குமிடையிலுள்ள தொடர்புறவுகளை மிகவும் விரிவாகக் காண விரும்புகின்றது. கவலேயும், போராட்டமும் உடல் நோய்களின்மீது துன்பந்தரும் விளைவுகளைக் கொண்டிருக்கின்றன. ஆனல், எல்லா வகையான நோய்த் தடுப்புச் செயல்முறைகளிலும் நம்பிக்கைதான் உதவி புரிகின்றது. இத் துறை இன்று மருத்துவர்களின் கவனத்தைக் கவர்ந்து வருவதால் தான் நோயாளிகளும் மனிதர்களேயாவார்கள். எனவே, அவர்களை மனிதர்களைப்போல் நடத்த வேண்டும் என்று இன்றைய மருத்துவர்கள் சிறிது உணரத் தொடங்கியிருக்கின்றுர்கள். ஆனல், முற்றும் அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லே.

உள நலவியல் (Mental Hygiene)

உடல் நலத்தைப் பேணுவதில் மனிதர்கள் எவ்வாறு கவனம் செலுத்துகின்றுர்களோ அது போலவே உள நலத்தைப் பேணு வதிலும் அவர்கள் உரிய கவனத்தைச் செலுத்த வேண்டும். ஆனல், மனித வரலாறு காட்டுகின்ற குறிப்புகளிலிருந்து பார்க்கும் போது உள நலத்தை அண்மைக் காலம் வரையிலும் மனிதர்கள் புறக்கணித்தே வந்திருக்கின்றுர்கள் என்று தெரிகின்றது. உள நல வியலின் முக்கிய குறிக்கோள் மனக்கோளாறுகளையும் பொருத்தக் கேடுகளையும் தடுப்பதாகும். உள நலவியலின் இந்தக் குறிக் கோள் இரண்டு பொது வழிகளில் நிறைவேற்றப்படுகின்றது. முதல் வழி, மென்மையான கோளாறுகள் மிகக் கொடிய நோய் களாக மாறுவதற்கு முன்பு சிகிச்சை செய்து தடுப்பதாகும். இரண்டாவது வழி, தனி மனிதர்களின்மீது இயங்குகின்ற செல் வாக்குகளை முறையாக அடுக்கி வைப்பதாகும். அதன்மூலம் அவர்கள் தங்களுடைய பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகளைப் போதுமான வகையில் தீர்த்துக்கொள்ளத் தகுதி பெற்றவர்களாக முடியும்.

பொருத்தக் கேடுகளுக்கும் உளவழி நரம்பு நோய்க்கும் பெரும்பாலும் உள மருத்துவர்களும், உளவியல் வல்லுநர்களும் சிகிச்சையளிக்கின்றார்கள். மேலும், உள நோய்ப் போக்கும் மருத்துவ மனைகளிலும், உள மருத்துவத்தைத் தொழிலாக ஏற்றுக் கொண்டவர்கள் தொழில் புரியுமிடங்களிலும் உளவழி நரம்பு நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இஃது உளநோய் நிவர்த்தி உளவியலின் ஒரு பகுதியாகும்.

ஆனால், உளநோய்களைப் போக்குவதற்கு எவ்வளவுதான் சிகிச்சை முறைகளை மேற்கொண்டாலும் அவற்றைத் தடுப்பதற்கான அடிப்படைப் பொறுப்பு பெற்றோர்களையும் ஆசிரியர்களையும் சார்ந்ததாகும். மேலும், உள நலவியல் வெற்றிகரமாகச் செயல்பட வேண்டுமானால், இவர்களுடைய சாதகமான மனப் போக்கு தேவைப்படுகின்றது. ஒரு மனிதன் மற்றொரு மனிதனோடு தொடர்புறவு கொள்ளும்போது விரும்பக்கூடிய தொடர்புறவாகவும் அஃது இருக்கலாம். அல்லது உள நலவியல் வழியில் இந்த உறவு நற்பேறற்றதாகவுமிருக்கலாம்.

உள நலவியலுக்கான கொள்கை நெறிகள் பொருந்தக்கேடுகளின் இயல்பு, காரணங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்படுகின்றன. பிறழ்வு நடத்தையைப்பற்றிய உளவியல் விளக்கம் என்னவென்றால், ஒரு மனிதனுடைய ஊக்கிகள் முரண்படுகின்றபோது அவனால் போதுமான அளவுக்கு அவற்றினிடையே தன்னைப் பொருத்தப்பாடு செய்துகொள்ள முடியாததன் விளைவேயாகும் என்பதாகும். மனிதர்கள் அனைவரும் ஏதேனும் ஒரு மனமுறிவைச் சந்திக்கவே செய்கின்றனர். சங்கடங்கள் ஏற்படும்போது யார் நல்ல வகையான பொருத்தப்பாட்டைச் செய்துகொள்ளுகின்றாரோ அவர்தான் நல்ல மன நலத்தைப் பெற்றிருக்கின்றார் என்று பெறப்படுகின்றது. துன்பங்களுக்கெதிராக நல்ல விதமான பொருத்தப்பாட்டைச் செய்துகொள்ளுகின்ற திறமையை ஒருவன் பெற்றிருக்க முடியும். அவன் தன்னுடைய கடந்த கால அனுபவத்தின்மூலமாகப் பெறப்பட்ட பொருத்தப்பாட்டுப் பழக்கங்களிலிருந்துதான் அந்தத் திறமையை அவன் பெற முடியும். பொருத்தப்பாட்டுப் பழக்கம் அல்லது விரும்பத்தகுந்த இந்தப் பழக்கம் என்ன என்பதை ஓர் எல்லைக்குட்பட்ட இடத்தில் விளக்கிக் காட்ட முடியும்.

பொருத்தப்பாட்டுக்கான பழக்கங்கள் ஒருவரிடம் விரிவடைந்து வருவதையும் அதற்கான பயிற்சிகளை அவர் பெறுவதையும் குழந்தை உளவியல், கல்வி உளவியல், உள மருத்துவம் போன்ற துறைகளில் நன்கு காணலாம். ஆனால், இன்றியமையாத சிறப்புக் கூறுகள் சிலவற்றைப் பார்ப்போம்:

உளநலவியலில் தனியாள் கூறுகள் : ஒரு சமூகத்தில் வாழ்ந்து வருகின்ற மனிதர் அனைவரும் ஒரே மாதிரியான மனநலத்தைக் கொண்டவராக இருக்க முடியாது. திடமான மனநலத்தையுடையவர்களும், திடம் குறைந்த மனநலத்தையுடைவர்களும், இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட மன நலத்தையுடைவர்களும் எங்கும் எந்தச் சமூகத்திலும் காணப்படுகின்றார்கள். ஆனால், திடமான மனநலத்தையுடைய மனிதன் தன்னைப்பற்றிப் புறநிலையான மனப்போக்குக் கொண்டிருக்கின்றான். அவன் தன்னுடைய பிரச்சினைகளைப் பகுத்தறிவு நிலையிலிருந்து காணுகின்றான்; மேலும், தன்னுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் மெய் நிகழ்ச்சிகளையும் சூழ்நிலைகளையும் வழிகாட்டிகளாகக் கொள்ளுகின்றான். தன்னுடைய விருப்பங்களையும் கோரிக்கைகளையும் கொண்டு அவன் தன்னுடைய பிரச்சினைகளை அணுகுவதில்லை.

பிரச்சினைகளைத் தீர்ப்பதில் புறநிலையான மனப்போக்கு அவன் கொண்டிருப்பதால், தன்னையே புறநிலையாகக் காணக்கூடிய திறமையை அவன் பெற்றிருக்கின்றான். தற்காப்பு நடத்தை தொடங்குகின்றதை அவனால் கண்டறிய முடியும். சரியான பொருத்தப்பாடுள்ள மனிதன் தன்னுடைய சொந்த ஒழுக்கத்தையும் உள்நோக்கத்தோடு காணுகின்றான். அவன் இந்த வகையான வழிகளுள்ள நடத்தையைக் குருட்டுத்தனமாகவோ, பிழைகளிலிருந்து பெற்ற அனுபவத்தின்மூலமாகவோ கற்றுக்கொள்ளவில்லை; பிரச்சினைக்குள்ள வழிகளையும் அதனால் ஏற்படும் முடிவுகளையும் தொடர்புபடுத்திப் பார்த்துப் புரிந்து கொள்ளுகின்றான். அவன் தன்னைப்பற்றிச் சரியாகப் புரிந்து கொண்டிருப்பதால், தன்னுடைய குறைபாடுகளைத் தன்மயமாக்கிக் கொண்டுவிடுகின்றான். அதனால் தற்காப்பு வழியமைப்புகளான ஈடு செய்தல், அறிவார்ந்த விளக்கம் ஆகியவற்றுக்கும் இடம் ஏற்படுவதில்லை.

நன்கு பொருத்தப்பாடு செய்து கொண்டுள்ள மனிதனிடம் மற்றொரு முக்கிய சிறப்புக்கூறும் இருக்கின்றது. அவன் தன்னுடைய பிரச்சினைகளை நோக்கிச் செல்லுவதில் முரணில்லாத எதிர்வினைகளைப் பெற்றிருக்கின்றான். அவன் ஒரே பொருளிடத்தில் விருப்பத்தையும் அச்சத்தையும் கொள்ளுவதில்லை; தன்னுடைய வாழ்க்கையின் பெரும் கூறுகளுக்கு எதிராக இனிமையாகவும் முரண்பாடில்லாமலும் துலங்குவதற்குக் கற்றுக் கொண்டுள்ளான். பொருத்தக்கேட்டிலுள்ள அடிப்படையான முக்கிய கூறு என்னவென்றால், எதிர்வினைகளில் முரண்பாடுகளிருப்பதுதான். எதிர்வினைகளில் முரண்பாடுகளிருக்குமானால், தொடர்பறுத்தலாக முடிகின்றது. எனவே, தனியாள் கூறுகள் மன நலத்தில் முக்கிய

பங்கு கொண்டிருக்கின்றன. அவற்றினால் ஏற்படும் விளைவுகளை யறியாமல் தனியாள் கூறுகளைச் சிலர் புறக்கணிக்கின்றனர். உள நலவியல் விடுகின்ற எச்சரிக்கையைச் செவிசாய்த்து ஏற்றுக் கொள்ளுவதில் எந்தவிதமான நட்டமும் ஏற்படுவதில்லை.

உளநலவியலில் சமூகக்கூறுகள்: நல்லிணக்கச் செயல்முறையில் மிகவும் குறிப்பிடத்தக்க கூறுகளாகவுள்ள கட்டளை விதிகள் தனி மனிதன் வாழ்கின்ற சமூகத்தில்தான் பெரிதும் காணக் கிடக்கின்றன. தனியாள் சமூகத்தோடு கொண்டுள்ள தொடர்புறவுகள் அவனுடைய பொருத்தப்பாட்டின் தரங்களை நிர்ணயிக்கின்றன. சமூக நடவடிக்கைகளில் ஒரு மனிதனுடைய பங்கு என்ன என்பதை நோக்கும்போது, அவன் அந்தச் சமூகத்தோடு எத்தகைய பொருத்தப்பாட்டைச் செய்து கொண்டுள்ளான் என்பது நன்கு விளங்கும்.

ஒரு சமூகத்தினிடம் இனிமையான பொருத்தப்பாட்டைச் செய்து கொண்டுள்ள மனிதன், தனக்கு ஏற்ற அளவு பல்வேறு வகையான சமூக நடவடிக்கைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகின்றான். அவன் ஈடுபடுகின்ற நடவடிக்கைகள் பெரும்பாலும் அவனைச் சார்ந்தவையாக இருக்கமாட்டா. தன்னுடைய குழுவைச் சேர்ந்தவர்கள் அனுபவிக்கின்ற சாதாரண களியாட்டங்களைக்கூட அவன் வெறுத்து ஒதுக்குவதில்லை. பொருத்தக்கேடுகள் பெரும்பாலும் மனிதன் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில்தான் விருத்தியடைகின்றன. சமூக நடவடிக்கைகளில் பெரிதும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் மனிதனிடம் பொருத்தக்கேடுகள் அவ்வளவு எளிதில் அணுகுவதில்லை. அவன் தன்னுடைய தோல்விகளையோ மன முறிவுகளையோ எடைபோட்டுப் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. அதற்கு அவனுக்கு நேரம் கிடைப்பதில்லை.

மேலும், இனிமையான பொருத்தப்பாடுள்ள ஒரு மனிதன் சமூகத்தைப் புறநிலையாக நோக்குகின்ற திறமையை வளர்த்துக் கொள்ளுகின்றான்; மற்றவர்களுடைய நடத்தையைப் புரிந்து கொள்ளவும், அவர்கள் கூறுகின்ற காரணங்களைக் கேட்கவும் விருப்பம் கொண்டுள்ளான். அவ்வாறு செய்வதன்மூலம் மிகவும் பயனுடைய வழியில் சமாதானங்களைச் செய்து வைக்க முடியும். ஆனால், ஒவ்வொரு மனிதனும் நம்பிக்கையான ஒருவரைப் பெற்றிருக்க வேண்டும். அவரிடம் தன்னுடைய குறைகளையும் கவலைகளையும் மனம்விட்டுக் கூற வேண்டும். ஏனென்றால், பல பொருத்தக்கேடுகள் கடுமையான நிலைகளுக்குச் சென்றிருக்கின்றன. பிரச்சினைகளைப் பொறுமையுடன் கேட்பதற்கு யாருமில்லாமல் போனதே காரணமாகும்.

5. உளப்பிணிகள்

மனிதர்களைத் தாக்குகின்ற மனக்கோளாறுகளில் மிகவும் கடுமையான வகையைச் சேர்ந்த கோளாறுகளை உளப்பிணிகள் (Psychoses) என்று கூறுகின்றார்கள். உளப்பிணிகளின் விளைவுகள் மிகக் கொடுமையானவையாகும். உளப்பிணிக்கு இலக்கான மனிதன் அன்றாட வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற எந்தப் பொருத்தப்பாடுகளையும் செய்ய இயலாதவனாக இருக்கின்றான். உளப்பிணிகள் என்று நாம் கூறுபவை பித்து (insanity) என்று கூறப்படுகின்ற நிலைக்குச் சமமானதாகும். பித்து என்ற சொல் பொது அறிவு உலகத்தில் வழங்குகின்றது. இதற்குப் பொருத்தமான உளவியல் விளக்கம் கிடையாது. உளப்பிணியால் பீடிக்கப்பட்டவர்கள் எல்லாம் சிகிச்சைக்கு ஏற்றவர்களாகும். ஆனால், இன்றைய சமூகம் உளப்பிணியின் விளைவுகளை மிகவும் அலட்சியமாகக் கருதுகின்றது. உளப்பிணியாளர் தம் வீட்டில் இருப்பதை மறைத்து வைக்கின்றனர்; அதற்கு வேறு பெயர்களையும் கொடுத்து உண்மையை மறைத்துவிடுகின்றனர். எனவே, உண்மையான உளப்பிணியாளர்கள் அனைவரும் உள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்படுவதில்லை.

உளப்பிணிகளின் சிறப்புக்கூறுகள் பல எல்லா உயிரினங்களுக்கும் பொதுவாகக் காணப்படுகின்றன. அறிகுறிகளும் பல பிணிகளுக்கும் பொதுவாகவே காணப்படுகின்றன. ஒரே மாதிரியான அறிகுறிகளைக் கொண்ட உளப்பிணிகள் பல்வேறுபட்ட அடிப்படைக் காரணங்களிலிருந்து தோன்றுகின்றன. உளப்பிணிகளின் அறிகுறிகள் இயல்பு நடத்தையில் காணப்படும் அறிகுறிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. உளவழி நரம்பு நோய்களின் அறிகுறிகள் பலவும் இயல்பு நடத்தை அறிகுறிகளோடு ஒத்துக் காணப்படலாம். ஆனால், உளப்பிணி அறிகுறிகள் குறிப்பிடத்தக்க அளவுக்குச் செறிவும் படித்தரமும் கொண்டிருக்கின்றன.

உளப்பிணிகளைச் சரியாக விளக்கிக் கூறும்பொருட்டு உளப்பிணி அறிகுறிகளை இரண்டு வகைகளாகப் பிரித்திருக்கின்றார்கள். முதல் வகையில் நடத்தையின் பொது ஒழுங்கு முறைகளின் தடை சேர்க்கப்பட்டிருக்கின்றது. இயல்பு நிலையிலுள்ள மனிதர்கள் என்ன வேண்டுகின்றார்களோ அவற்றை உளப்பிணியாளன் செய்ய மாட்டான். அந்தப் பொருள்கள் முதல் வகையில் அடங்கியுள்ளன. எனவே, முதல் வகை அறிகுறிகளில் இயல்புநிலை நடத்தைக்குத் தடையாக உள்ளவை சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இரண்டாவது வகையில் நடத்தையின் மிகத் தெளிவான பிறழ்வு ஒழுங்கு முறைகள் அடங்கியுள்ளன. அந்தக் குறிப்பிட்ட அறிகுறியைக் கண்டவுடன் அதைத் தோற்றுவித்த உளப்பிணி என்ன என்பதையும் காணலாம். ஆனால், எல்லா வகையான உளப்பிணிகளிலும் வரிசைப்படுத்தியுள்ள எல்லா அறிகுறிகளும் எப்பொழுதும் காணப்படும் என்று எதிர்பார்க்க முடியாது. ஓர் உளப்பிணியினின்றும் மற்றோர் உளப்பிணியை அறிகுறிகளைக் கொண்டு அடையாளம் காண முடியும்.

நடத்தையின் பொது ஒழுங்குமுறைகளின் தடை

இயல்பு நிலையிலுள்ள மனிதர்களின் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது போன்ற நிலைமைகள் உளப்பிணிகளின் அறிகுறிகள் பலவற்றிலும் காணப்படுகின்றன. அதாவது, செயலற்றுள்ள ஒரு மனிதனை நாம் நோக்கும்போது என்ன நினைக்கின்றோமோ அதையேதான் உளப்பிணியாளனை நோக்கும்போதும் நினைக்க வேண்டியிருக்கும். ஆனால், இயல்பு நிலையிலுள்ள ஒரு மனிதன் முற்றும் தன்னுடைய செயல்களிலிருந்து தன்னைப் பின் வாங்கிக்கொண்டிருக்க முடியாது. அவனால் அதை வெற்றிகரமாகச் செய்ய முடியாது. ஏதேனும் ஒரு வகையில் அவன் செயல்பட்டுத்தான் ஆக வேண்டும். ஆனால், உளப்பிணியாளன் அவ்வாறு அன்று. அவன் தன்னை எல்லாவிதமான நடவடிக்கைகளிலிருந்தும் பின்வாங்கிக் கொள்ள முடியும். இவற்றில் குறைவாகக் காணக்கூடிய பண்பக் கூறுகளுமிருக்கலாம். ஆனாலும், அவை பயங்கரமான மனக்கோளாறுகளைப் புரிந்துகொள்ளுவதற்கும் அடையாளம் காண்பதற்கும் மிக முக்கியமானவையாக இருக்கலாம். அவற்றில் சிலவற்றை இங்கு நோக்குவோம் :

ஒருமைப்பாடு சிதறல் : உளப்பிணி நிலைமைகள் பலவற்றிலும் மிகப் பொதுவாகக் காணப்படும் ஒரு குறிப்பிடத்தக்க அறிகுறி ஒருமைப்பாடு சிதறல் என்பதாகும். ஒருமைப்பாடு சிதறிய ஓர்

உளப்பிணியாளன் தன்னுடைய பல வகையான அனுபவங்களையும் எண்ணங்களையும் முரணில்லாத முழுமையாகத் தொடர்புபடுத்த முடியாது. அவற்றைப் பொருள் தரும் முறையில் இணைக்கவும் முடியாது. இன்னும் சற்று விளக்கமாகக் கூற வேண்டுமானால், அப்படிப்பட்ட ஒரு மனிதனின் எதிர்வினைகள் பிரிந்து விழுந்துபோய் விட்டன என்று கூறலாம். அவன் தன்னுடைய விருப்பங்களோடும், எண்ணங்களோடும், உணர்ச்சிகளோடும் உண்மையான உலக அனுபவங்களைத் தொடர்புபடுத்திப் பார்க்கக்கூடிய திறமையை இழந்துவிட்டான். அவன் எதையும் தெளிவாகச் சிந்திக்கவோ, பாகுபடுத்திப் பார்க்கவோ, தீர்மானிக்கவோ இயலாதவனாக இருக்கின்றான். மேலும், குறிப்பாகத் தன்குறை காண்டல் என்ற செயல்முறை அவனிடம் தவறிப் போய் விட்டது.

மேலும், இந்த நோயாளி சூழ்நிலையோடு பொருந்தாத கருத்துகளை ஆய்ந்து பார்க்காமல் ஏற்றுக்கொள்ளுகின்றான்; ஆகையினால், திரிபுணர்வுகள் வளர்ச்சி பெறுவதற்கு ஏற்றவனாக இருக்கின்றான்; அப்போதைய நிலைமைகளுக்குப் பொருத்தமில்லாத மனவெழுச்சியை வெளிப்படுத்தும் போக்குடையவனாக இருக்கின்றான்; பொது அறிவு உடனே புறக்கணித்து ஒதுக்குகின்ற நம்பிக்கைகளைத் தங்களவைத்துக் கொள்ளுகின்றான். ஒருமைப்பாடு சிதறலின் ஒரு படித்தரமாகக் கூறப்படுவது குழப்பமாகும். இந்த நிலையில் தனியாள் தடுமாற்றம், குழப்பம், எதையும் தெளிவான முறையில் அறிய முடியாமை ஆகிய அனுபவங்களைப் பெறுகின்றான். இந்த நிலைமையின் உள்நோக்கிப் பார்த்தலின் பகுதியைச் சில சமயங்களில் தெளிஉணர் நிலை மூடியிருத்தல் என்று கூறுகின்றனர். வெளி நிகழ்ச்சிகளைப்பற்றித் தெளிவில்லாததும் குழப்பமுள்ளது மான உணர்வைத்தான் அவன் கொண்டிருக்கின்றான்.

உணர்ச்சியற்ற தன்மையும் பின்வாங்கிக் கொள்ளலும்: உணர்ச்சியற்ற தன்மையைப்பற்றி உளவழி நரம்புநோய்களைப் பார்க்கும் போது தெளிவாகக் கண்டோம். பின்வாங்கிக் கொள்ளலைப்பற்றி அன்றாட வாழ்க்கையின் பொருத்தக்கேடுகள் என்ற தலைப்பில் அதை ஒரு தற்காப்பு வழியமைப்பு என்றும் கண்டோம் இந்த இரண்டு சொற்றொடர்களும் உளப்பிணியிலும் பேசப்படுகின்றன. ஆனால், அவற்றைக் கடுமையான உளநோயினின்றும் வெளிப்படும் அறிகுறிகள் என்றுதான் கொள்ளுகின்றார்கள். எனவே, உளப் பிணிகள் பற்றிப் பேசும்போது குறிப்பிடத்தக்க மற்றோர் அறிகுறி உளப்பிணியாளர்கள் சமூகத் தொடர்புகளிலிருந்து பின்வாங்கிக் கொள்ளுகின்ற மனப்பான்மை கொண்டிருப்பதாகும்.

உளப்பிணியாளர்கள் சமூகத் தொடர்புகளிலிருந்து பின்வாங்கிக்கொள்ளும் மனப்பான்மையை அவர்களுடைய உணர்ச்சியற்ற தன்மைதான் உண்டாக்குகின்றது. அந்த உணர்ச்சியற்ற தன்மை பெருமளவுக்கு வளர்ந்துள்ளது; சூழ்நிலையிலுள்ள மனிதர்களையோ நிகழ்ச்சிகளையோ சிறிதும் கருத்தில் கொள்ளாமை நிலை. ஆனால், இப்படிப்பட்ட நோயாளியைப்பற்றி யாரேனும், 'நீ எவ்வாறு இருக்கின்றாய்?' என்று கேட்டால், அவன் உடனே தருகின்ற விடை 'சரியாக இருக்கிறேன்' என்பதாகும். மேலும், வேறு எதைக் கேட்டாலும் அவனுடைய விடை எல்லாம் சரியாக இருக்கின்றது என்பதாகும்.

ஆனால், கேள்விகளுக்கான இத்தகைய விடைகளை அவன் சிறிதும் உணர்ச்சியற்றுத்தான் தருகின்றான். இந்த நோயாளி எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை. தனக்கும், மற்றவர்களுக்கும், உலகத்திற்கும் எது நடந்தாலும் அவன் அக்கறை கொள்ளுவதில்லை. மிகவும் உணர்ச்சியற்றுப் போயுள்ள நோயாளிகள் பல்வேறு படித்தரங்களில் அணுக முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் மற்றவர்களிடம் நம்பத் தகுந்த செய்திப் போக்குவரத்தை வைத்துக்கொள்ள முடியாது. சில சமயங்களில் உளப்பிணியாளர்கள் வெளியுலகச் செய்திப் போக்குவரத்தை முற்றிலும் புறக்கணித்து விடுகின்றார்கள். அவர்களிடம் மற்றவர்கள் என்ன பேசினார்கள் என்று அவர்களுக்குத் தெரியாது. ஏனென்றால், அவர்கள் எதன்மீதும் எந்த வகையான கவனத்தையும் செலுத்துவது கிடையாது. ஆனால், சில நோயாளிகளைப் பொறுத்த வரையில் அவர்கள் மற்றவர்கள் கூறுவதைப் புரிந்து கொள்ளலாம். என்றாலும், விடையளிப்பதினின்றும் அவர்கள் தடை செய்யப்படுகின்றார்கள். இந்த வகையான நோயாளிகள் சாதாரணமாக மற்றவர்களால் அணுக முடியாதவர்களாக இருக்கின்றார்கள். பிறிதொரு சமயத்தில் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற எல்லா நிகழ்ச்சிகளையும்பற்றிச் சரியாகக் கொடுக்கின்றார்கள்.

இந்த வகையான கோளாறுகளுடன் தொடர்புள்ள மற்றோர் அறிகுறி பின்தங்குதலாகும். இஃது எல்லா வகையான துலங்கல்களையும் குறைப்பதாகும். இந்த நிலைக்கு ஆளான மனிதன் எந்தச் சூழ்நிலையிலும் மிகவும் மெதுவாக நகருகின்றான்; மிக மெதுவாகப் பேசுகின்றான்; ஓர் எளிய வினாவுக்கு விடையளிப்பதாக இருந்தாலும் நீண்ட நேரத்திற்கு மௌனமாக இருக்கின்றான்.

பின்வாங்கிக் கொள்ளலால் வருந்துகின்ற நோயாளிகள் தங்கள் பேச்சில் ஒருபடி வார்ப்பு (sterotype) அல்லது மாறா நிலைமையைக் காட்டுகின்றார்கள்; மாறுபடாத செயற்கைப்

பழக்கத்தை (mannerism) வெளிப்படுத்துகிறார்கள். இப்படிப் பட்டவர்கள் தாழ்ந்த குரலில் காலை முதல் மாலை வரையில் ஒன்றையே திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். மற்றவர்கள் தங்களுடைய அறையிலேயே முன்னும் பின்னும் நடந்துகொண்டிருப்பார்கள்; மூன்றடி முன்னால் நடந்தால் அதே மூன்றடி பின்னால் நடப்பார்கள்.

பின்வாங்கிக்கொள்ளல் நடத்தையிலும் சில படித்தரங் களிருக்கின்றன. பின்வாங்கிக் கொள்ளல் மிகவும் முற்றிய நிலையி லுள்ள மூடுசன்னி அல்லது நினைவற்ற சன்னி நிலை (catalepsy) ஆகும். இந்த வகையான அறிகுறிகளை வெளிப்படுத்துகின்ற நோயாளிகள் முற்றிலும் உதவியற்றவர்களாவார்கள்; அடிக்கடி படுக்கையில் கிடப்பவர்களாக இருப்பார்கள்; ஒரே விதமான நிற்கும் நிலையில் நீண்ட நேரம் நின்றுகொண்டிருப்பார்கள்; அதே நிலையில் பேசாமலும் உணவு உட்கொள்ளுவதற்கும் எந்த முயற்சியும் எடுக்காமலுமிருப்பார்கள்.

சற்றுக் குறைந்த நிலையில் உள்ள இந்த நினைவற்ற சன்னி நிலையின் அறிகுறிகள் சில காட்சி வெளிப்பாடுகளைக் காட்டு கின்றன. பெருமளவுக்குப் பின் தங்குதல், தன் விருப்ப நடவடிக் கையிலிருந்து விலகியிருத்தல், வைக்கப்பட்ட ஒரு நிலையிலேயே நோயாளி தன்னை இருத்தி வைத்துக்கொண்டிருக்கும் போக்கு ஆகியவை வெளிப்படுகின்றன. சில சமயங்களில் விட்ட இடத்தி லிருந்து நோயாளி ஓர் அடிகூட எடுத்து வைக்க மாட்டான்.

டிமென்ஷியா (Dementia) அல்லது கோட்டி நிலை : ஒரு நோக்கி லிருந்து பார்க்கும்போது டிமென்ஷியா அல்லது கோட்டி நிலை மனக் கோளாறு வகையில் குறிக்கப்படுவதில்லை. இந்த நிலையைத் தனியாக எடுத்துக்கொண்டு பார்க்கும் சிலர் அவ்வாறுதான் கருதுகின்றனர். டிமென்ஷியா என்றால் தனியொருவரின் அறிவுச் சார்பான நடத்தை மோசமடைதல் என்பதாகும். ஓர் உளப் பிணி மேல்நோக்கி முன்னேற்றமடைவதால், பல நோயாளிகள் உளச்சார்பான தகுதியை இழப்பதிலும் முன்னேற்றமடைந்து வரக் காணப்படுகின்றனர். டிமென்ஷியா இரண்டு முக்கிய வழி களில் காணப்படுகின்றது.

அறிவுச் சார்பான நடத்தை பெரும்பாலும் கற்றல், நிலை வுறுத்தல், நினைவு, மீட்டறிதல் போன்ற செயல்முறைகளைக் குறிக் கின்றது. எனவே, முதல் வழி வெளிப்படுவது கற்றல் சார் பானதே. நோயாளி எதையும் நினைவு கொள்ளுதலில் மிகவும்

சிரமப்படுகின்றான். அவன் தன்னுடைய பள்ளிக்கூடத்தில் கற்ற வற்றையும், தன்னுடைய வேலையில் கற்றவற்றையும் அல்லது அனுபவத்தில் அறிந்தவற்றையும், கற்றறிந்த பொதுச் செய்திகள் அனைத்தையும் மறந்துவிடுகின்றான்.

இந் நிலை இன்னும் சற்று முற்றுமானால், நோயாளி தன்னுடைய பெயரையுங்கூட மறந்துவிடுகின்றான். தன்னுடைய பெற்றோரின் பெயர்கள், தன்னுடைய மனைவியின் பெயர், குழந்தைகளின் பெயர்கள் ஆகியவற்றையும் மறக்கின்றான். இயல்பு நிலையிலுள்ள மனிதர்கள் மிக எளிதில் நினைவில் கொள்ளுகின்ற பொருள்களில் எதையும் இந்த நோயாளி நினைவுகொள்ள முடிவதில்லை.

இரண்டாவதாக, இந்த நோயாளி புதிய பிரச்சினைகள் எதையும் கற்பதற்கும் அவற்றிற்குத் தீர்வு காணுவதற்கும் மிகவும் இயலாதவனாக இருக்கின்றான். அவனுடைய துணையை நாம் பெற்றிருந்தாலும் மிக எளிதில் முன்பு அவனால் கற்க முடிந்த பயிற்சித் திறமைகளை இப்பொழுது கற்க முடிவதில்லை. டிமென்ஷியாவின் உண்மை நிலை உளப்பிணிகளில்தான் காண முடியும். மூளையின் உறுப்புக்குரிய மாற்றங்கள் தொடர்பாக ஏற்படுகின்ற உளப்பிணிகளில் டிமென்ஷியாவைக் காணலாம். மனச் சிதைவு என்று முன்பு வகைப்படுத்தப்பட்ட நோயாளிகளில் பலர் உண்மையில் உணர்ச்சியற்ற தன்மையாலும் கூட்டுறவுக்கான ஊக்கமூட்டியின்மையாலுந்தான் வருந்துகின்றனர் என்று அண்மைக்கால ஆராய்ச்சி முடிவுகள் காட்டுகின்றன.

ஒழுங்கு குலைதல் (Disorientation): உளப்பிணியாளர்களில் பலர் வாழ்க்கைக்கான ஒழுங்கு முறைகளைக் குலைத்துக் கொண்டவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கு மனிதர்கள் காலம், இடம், பொருள் ஆகியவை தெரிவதில்லை. ஒரு நோயாளி மனிதருக்கான ஒழுங்கு குலைந்தவராக இருந்தால் முன்பு தெரிந்த ஒரு மனிதரையும் இப்பொழுது தெரிந்து கொள்ளுவதில்லை. கால ஒழுங்கு குலைந்தவராக இருப்பாரானால், அவருக்கு ஒதுக்கி வைக்கப்பட்ட தேதி தெரிவதில்லை. அதே போல இட ஒழுங்கு குலைந்தவராக இருந்தால், தாம் எந்த இடத்திலிருக்கிறோம் என்பதே அவருக்குத் தெரியாது. மேலும், அவர் தம் சார்பான ஒழுங்கும் குலைந்தவராக இருக்கலாம். அவ்வாறு ஏற்படுமானால், தாம் யார் என்பதும் அவருக்குத் தெரியாது.

மேலும், சில சமயங்களில் ஒருமைப்பாடு குலைதல் அல்லது குழப்பம் ஆகியவற்றின் சான்றாகவும் ஒழுங்கு குலைதல் இருக்கலாம். மற்ற சில நிகழ்ச்சி வரலாறுகளில் டிமென்ஷியா ஒழுங்குநிலை குலைந்திருப்பதற்குக் காரணமாகத் தெரிகின்றது.

நடத்தையின் பிறழ்வு ஒழுங்கு முறைகள்

உளப்பிணிகளின் மிகவும் சுவையான அறிகுறிகள் நடத்தையின் பிறழ்வு ஒழுங்கு முறைகளில்தான் உறுதியாகக் காணப்படுகின்றன. உளப்பிணியாளர்கள் வெளிப்படுத்துகின்ற அறிகுறிகளில்தான் பிறழ்வு ஒழுங்கு முறைகளைக் காண முடியும். இயல்பு நிலையிலுள்ள மனிதர்களிடம் காணப்படும் அறிகுறிகள் பிறழ்வு ஒழுங்கு முறை எதையும் வெளிப்படுத்தா. அவற்றில் முக்கியமான அறிகுறிகள் என்று கருதப்படுபவை பொய்த்தோற்றங்கள் (Hallucinations), திரிபுணர்வுகள் (Delusions), மனவெழுச்சிக் குணத்தில் மிகையான வேறுபாடுகள் முதலியவை.

பொய்த்தோற்றங்கள்: கண்முன்னல் ஒன்றுமே இல்லாதிருக்கும்பொழுது ஏதோ ஒரு பொருள் நிற்பதாகக் காணுகின்றபோக்குக்குப் பெயர் பொய்த்தோற்றம். வெளியுலகத்தில் எந்த வகையான தூண்டலுமில்லாதபோது தனிமனிதரிடம் நடைபெறுகின்ற புலன்சாட்சி பொய்த்தோற்றக் கோளாறுக்கு ஆளான மனிதன் கண்முன் இல்லாத பொருள்களையெல்லாம் புலன்களால் உணருகின்றான்; இல்லாத மனிதர்களையும் பொருள்களையும் கண்முன்னல் காணுகின்றான்; ஒலிக்காத ஓசைகளையும் இசைகளையும் காதால் கேட்கின்றான்; வீசாத நறுமணங்களையெல்லாம் மூக்கால் நுகருகின்றான். எனவே, புலன்களைக் கொண்டு உணருவதற்கு ஒரு தூண்டலுமில்லாமலிருக்கும்பொழுது அவனுடைய புலன்கள் அவற்றுக்குத் துலங்குகின்றன. எல்லாப் புலனுணர்ச்சிகளிலும் பொய்த்தோற்றங்கள் நிகழலாம்.

மிக எளிதான காட்சிச்சார்புள்ள பொய்த்தோற்றங்கள், ஒளி வீச்சுகள், நிறங்கள் ஆகியவற்றில் ஏற்படுகின்றன. சற்றுச் சிக்கலான பொய்த்தோற்றங்களில் காட்சிச்சார்பான தெளிவற்ற உருவங்களை நோயாளி மிருகங்களாகவும், பேய்களாகவும், பாம்புகளாகவும், இன்னும் பெயர் தெரியாத உயிர்ப்பொருள்களாகவும் விளக்கம் தருகின்றான். சிக்கலான பொய்த்தோற்றங்களில் காட்சிச்சார்பானவை(visual)தான் நோயாளிகளால் மிக அதிகமாக விளக்கம் தரப்படுகின்றன.

பெரும்பாலான காட்சிச்சார்பான பொய்த்தோற்றங்களெல்லாம் உண்மைப் பொருள்களும் மனிதர்களும் உள்ளடங்கியவையாகவிருக்கின்றன. ஒரு நோயாளி சுவரிலிருந்த படங்களைப்பற்றி விளக்கம் செய்துகொண்டிருந்தார். உண்மையில் அங்கிருந்த சுவரில் படங்களே கிடையா. மற்றொரு நோயாளி ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மருத்துவ விடுதியைச் சுற்றிலும் தன்னைத்

தொடர்ந்து வருகின்றார்கள் என்று கூறி, அவர்களைப்பற்றி எல்லா விவரங்களையும் தருகின்றார். கேள்விப் புலன் சார்ந்த பொய்த் தோற்றங்கள் நோயாளிகளிடம் மிகப் பொதுவானதாக இருக் கின்றன. அவை காதில் ஒலிக்கின்ற சிறு பேச்சொலியிலிருந்து நிலையாக ஒலித்துக் கொண்டிருக்கின்ற கோவில் மணி வரையில் நோயாளிகள் கேட்கின்றார்கள்; மேலும், மனிதக் குரல்களையும் கேட்கின்றார்கள். அந்த மனிதக் குரல்கள் நோயாளியைத் திட்டு கின்றன. குறை கூறுகின்றன; பழித்துரைக்கின்றன. சில நோயாளிகள் தாங்கள் கேட்கின்ற குரல்களுடன் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

தொடு புலனுணர்ச்சிப் பொய்த்தோற்றங்களைப்பற்றியும் சில நோயாளிகள் கூறுகின்றார்கள். புழுக்களும் பூச்சிகளும் தங்கள் தோலின்மீது ஊர்ந்து செல்லுவதாக உணர்ந்திருக்கின்றார்கள். சில உளப்பிணியாளர்கள் ஏதோ ஒருவகை மிருகங்களின் வாசனையை நிலையாகச் சுவாசித்து வருவதாகவும், அந்த வாசனை தங்களுடைய உடம்பிலிருந்தே தோன்றுவதாகவும் கூறியுள் ளார்கள். இனிப்பு, கசப்புச் சுவைப் பொய்த்தோற்றங்களும் சிலர் உணர்ந்திருக்கின்றனர். பொதுவாகப் பொய்த்தோற் றங்கள் நோயாளிகளின் திரிபுணர்வுகளோடு தொடர்புடையவை யாக இருக்கின்றன. பிறர் தங்களைத் துன்புறுத்துவதாகத் திரிபுணர்ச்சி கொண்டுள்ள நோயாளிகள் அடிக்கடி கூறுவது என்னவெனில், தங்களைத் துன்புறுத்துகின்றவர்களைத் தாங்கள் பார்ப்பதாகவும், அடிக்கடித் தங்களைப் பழித்துரைக்கின்றதைக் கேட்பதாகவும் கூறுகின்றார்கள்.

உளப்பிணியினர் பொய்த்தோற்றங்களைக் காணுவது போலவே திரிபுக் காட்சிகளையும் காணுகின்றனர். திரிபுக் காட்சி களும் புலன் காட்சிச் சார்புடையவையேயாகும். ஆனால், திரிபுக் காட்சிகள் பொய்த்தோற்றங்களிலிருந்து மாறுபட்டவை. பொய்த்தோற்றங்களுக்குத் தூண்டல் கிடையாது. ஆனால், திரிபுக்காட்சிகளுக்குத் தூண்டல்கள் உண்டு. தூண்டுபொருளே இல்லாதபோது காண்பது பொய்த்தோற்றம். தூண்டுபொருள் ஒன்று இருந்து, அதை வேறொன்றாகக் காண்டல் திரிபுக் காட்சி. காணுகின்ற பொருள் வேறொன்றாக விளக்கம் செய்யப்படுகின்றது. உதாரணமாக, ஒரு துண்டுக் கயிறு பாம்புபோன்று தோன்றலாம். பாம்பின் சாயல் கயிறிடம்காணப்படுவதால்,கயிறைப்பாம்பென்று விளக்கம் கூறப்படுகின்றது. ஆனால், கயிறே இல்லாதபோது அங்குப் பாம்பைப் பார்ப்பது பொய்த்தோற்றமாகும். திரிபுக் காட்சிகள் இயல்புநிலை மனிதர்களிடமும் தோன்றுவதுண்டு.

இவர்கள் பார்க்கப்பட்டது பாம்பன்று, கயிறுதான் என்று பிறகு ஒப்புக்கொள்ளுகின்றார்கள். ஆனால், உளப்பிணியினரால் பார்க்கப் பட்டது கயிறாகவேயிருந்தாலும் அதைப் பாம்பு என்றே கூறுகின் றனர்; உண்மையை ஒப்புக்கொள்ளுவதில்லை.

திரிபுணர்வுகள் : இயல்பிறழ்ந்த நடத்தை வகைகளில் ஒன் றெனக் கருதப்படுவது திரிபுணர்வு. உளப்பிணிகளில் ஒன்றாகும். திரிபுணர்வுகளெல்லாம் தவறான நம்பிக்கைகளாகும். நகைப்பிற் கிடமான வெளிப்பாடுகளைக் கண்டபிறகும், முரண்பாடான சான் றுகளைக் கண்ட பிறகும் அந்தத் தவறான நம்பிக்கைகள் பாராட்டப் படுகின்றன. இதுதான் திரிபுணர்வுகளின் முக்கிய பண்புக்கூறு. இயல்புநிலையிலுள்ள மனிதர்களைப் போன்று தோன்றுகின்ற அரைப்பைத்தியங்கள் இருக்கின்றார்கள். அவர்கள் கொண்டுள்ள அபிப்பிராயங்களில் திரிபுணர்வுகளின் சாயல்கள் படிப்படியாகச் சென்றடைகின்றன.

ஆனால், சில சமயங்களில் சில வகையான இயல்புநிலை மனிதர் களுக்கும் உண்மையான திரிபுணர்வு நோயாளிகளுக்குமிடையில் சரியான வேறுபாட்டைக் கண்டறிய முடியாது. இந்த நாட்டைத் தன்னால்தான் காப்பாற்ற முடியும் என்று வீட்டின் முன்கூடத்தில் உட்கார்ந்து கொண்டு கூச்சலிட்டு அறிக்கைகள் விட்டுக் கொண் டிருக்கின்ற அரசியல்வாதிக்கும் மனக்கோளாறினால் தாக்கப்பட்டு வெளிப்படையான திரிபுணர்வுகளைக் காட்டுகின்ற நோயாளிக்கும் அவ்வளவு வேறுபாடு கிடையாது. திரிபுணர்வு கொண்ட நோயா ளியும் தன்னால்தான் இந்த நாட்டைக் காப்பாற்ற முடியும் என்று கூச்சலிடுகின்றான். ஆனால், உளப்பிணியாளனின் திரிபுணர்வுக ளின் முரண்பாட்டிலும், விளக்கத்திலும் பெரிதும் அரசியல்வாதி யிடமிருந்து வேறுபடுகின்றன.

ஒழுங்கு முறையான திரிபுணர்வுகளை நுணுக்கமாகப் பிரித்துக் காண வேண்டும். தோற்றத்திற்கு நம்பக்கூடியதாக இருந்தாலும் அவற்றை மிகக் கவனமாகத் தணிக்கை செய்து தவறான நிலையைக் கண்டுபிடிக்க வேண்டும். இல்லையென்றால், சில திரிபுணர்வுகள் இயல்புநிலையாகத் தோற்றம் கொடுத்து ஏமாற்றி விடவும் கூடும். ஒழுங்கு முறையில்லாத திரிபுணர்வுகள் தெளிவாகவே தவறாகத் தோன்றுகின்றன; உள்ளேயே தொடர்ச்சியற்றிருக்கின்றன; காலத்திற்குக் காலம் மாறக்கூடியவை. உளப்பிணியினலான திரி புணர்வுகள் எவ்விதப் படித்தரமுள்ள ஒழுங்கு முறையையும் வெளிப்படுத்தக் கூடியவை. கீழான படித்தரமுள்ள திரிபுணர்வுகள் இயல்புநிலை போன்றுகூடக் காட்சித் தரலாம்.

திரிபுணர்வுகள் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. மேலே கண்ட ஒழுங்குமுறை, ஒழுங்குமுறையற்ற என்ற இரண்டு தோற்றங்களைப் பொதுவாக எடுத்துக்கொண்டு திரிபுணர்வுகளை அவற்றின் அறிகுறிகளுக்கு ஏற்பப் பெயர் கொடுத்திருக்கின்றனர். அவற்றில் சில சோர்வுடைமைத் திரிபுணர்வுகள் (melancholy delusions), துன்புறுத்தல் திரிபுணர்வுகள் (delusions of persecution), சிறப்புத் திரிபுணர்வுகள் (delusions of grandeur) என்பவை.

சோர்வுடைமைத் திரிபுணர்வுகள் : தவறான நம்பிக்கையைத் தொடர்ந்து வருகின்ற பொது மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டு திரிபுணர்வுகளை மூன்று வகைகளாகப் பிரித்துள்ளார்கள். சோர்வுடைமைத் திரிபுணர்வுகளால் வருந்துகின்ற ஒரு நோயாளி தான் பாவம் செய்தவன் என்றும், குற்றமுடையவனென்றும், உலகத்தால் புறக்கணிக்கப்பட்டவன் என்றும் நம்புகின்றான்; மேலும், தான் ஈடு செய்ய முடியாத உறுப்புக்குரிய குறைபாட்டால் வருந்துவதாகவும் நம்புகின்றான். இந்த வகையான திரிபுணர்வுகளில் பழி, தன்பழி கூறல் பெரும்பாலும் பொதுவாகக் காணப்படலாம். இந்த நோயாளி, தான் மன்னிக்க முடியாத பழியைச் செய்துவிட்டதாக ஏற்றுக் கொள்ளுகின்றான்; மேலும், உலகத்தில் காணப்படும் எல்லா விதமான நற்பேறற்ற செயல்களுக்கெல்லாம் தானே காரணம் என்று ஏற்றுக் கொள்ளுகின்றான். இந்த நோயாளி எதையும் பணிவுடன் ஏற்றுக் கொள்ளுகின்றான், மேலும் இந்த நோயாளி தனக்கு தரப்படுகின்ற தண்டனை எதுவானாலும், தான் அதற்கு ஏற்றவன் என்றும் நம்புகின்றான். சோர்வுடைமைத் திரிபுணர்வுகளில் காணப்படும் வேறு பல நிகழ்ச்சி வரலாறுகள் சற்று வேறுபட்ட விளக்கங்களையும் தருகின்றன. அந்த நோயாளி தனக்கு வயிறு கிடையாது என்று கூறுகின்றான்; மேலும், தன்னுடைய கால்கள் அழுகிக் கொண்டு வருகின்றன என்று உறுதியாகக் கூறுகின்றான்.

துன்புறுத்தல் திரிபுணர்வுகள் : துன்புறுத்தல் திரிபுணர்வுகளும் மேலே கண்ட சோர்வுடைமை திரிபுணர்வுகள் போன்றவையேயாகும். ஆனால், ஒரு முக்கிய வேறுபாடு என்னவென்றால், துன்புறுத்தல் திரிபுணர்வுகளால் வருந்துகின்ற நோயாளி, தன்னுடைய நிலையைப்பற்றிக் குறைபட்டுக் கொள்ளுகின்றான்; ஏனென்றால், மற்றவர்கள் தனக்கு எதிராகச் சதித்திட்டம் போடுகின்றார்கள் என்று நம்புகின்றான்; எனவே, இந்தச் சதித்திட்டங்களைப்பற்றி மிக விரிவான விளக்கம் தருகின்றான்; அவர்கள் தனக்கு நஞ்சிட்டுக் கொல்லுவதற்குத் திட்டம் போட்-

டிருக்கின்றார்கள் என்றும், கொன்றுவிடுவதற்காகத் தன்னை அடைத்து வைத்திருக்கின்றார்கள் என்றும் விளக்கம் தருகின்றான்.

ஊரிலுள்ள முக்கிய பெரிய மனிதர்களும், செல்வாக்குப் பெற்றுள்ள சங்கங்களும் துன்புறுத்தல்களைத் தங்கள்மீது ஏவிவிடுவதாக அடிக்கடி குற்றம் சாட்டுகின்றார்கள். கொடுமைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுவதற்காக இந்த நோயாளிகள் விரிவான திட்டங்களையும் உருவாக்கி வைத்துக் கொள்ளுகின்றார்கள். கொடுமைகளுக்குப் பயந்துகொண்டு தஞ்சம் புகும் திரிபுணர்வுகளையும் சில நோயாளிகள் வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று அண்மைக்கால ஆராய்ச்சிகள் கூறுகின்றன. மின்விசைச் சங்கங்களும், வானொலி நிலையங்களும் கெட்ட எண்ணத்தோடு தங்களுடைய உடல்களில் அதிர்ச்சிகளைப் பாய்ச்சுகின்றன என்று சில நோயாளிகள் தஞ்சம் புகுந்தார்கள். மின்விசைகள் தோன்றுவதற்கு முன்பு திரிபுணர்வுகளால் வருந்தும் நோயாளிகள், பிசாசுகள் தங்களைத் துன்புறுத்தி வருகின்றன என்று கூறி வந்திருக்கின்றார்கள். எனவே, துன்புறுத்தல் திரிபுணர்வுகள் காலத்திற்குக் காலம் கருவிகளை மாற்றிக் கொண்டு வருகின்றன என்றும் தெரிகின்றது. நோயாளிகள் அடிக்கடி அவற்றையெல்லாம் சந்திக்கின்றார்களோ, எவை தங்களுக்கு அருகிலிருக்கின்றனவோ அவற்றையெல்லாம் தங்களுடைய துன்புறுத்தல் பொருள்களாகக் குற்றம் சாட்டியிருக்கின்றார்கள்.

சிறப்புத் திரிபுணர்வுகள் : திரிபுணர்வுகளால் வருந்துகின்ற நோயாளிகளில் ஒரு வகையினர் மேன்மை அல்லது சிறப்பு மனப்போக்கை வளர்த்துக் கொண்டவர்களாக இருக்கின்றனர். இந்த நிலையிலுள்ள நோயாளிகள் தங்களுக்குப் பெருஞ்செல்வமும் மிகுந்த அதிகாரமும் உண்டு என்று நம்புகின்றார்கள். தாங்கள் மிகப் பெரிய மனிதர்கள் என்றும் சிலர் நம்பிக்கொண்டிருக்கின்றனர். மற்றத் திரிபுணர்வுகளைவிடச் சிறப்புத் திரிபுணர்வுகள் அவ்வளவு நல்ல முறையில் ஒழுங்குபடுத்தப்படவில்லை. ஏனென்றால் மற்றத் திரிபுணர்வுகளைப்போல் இவை தெளிவாகத் தெரிவதில்லை.

ஆனால், இந்தத் திரிபுணர்வுகள் சிற்சில சமயங்களில் வெளிப்படுகின்றன. நோயாளிகளில் சிலர், தாம் அரசன் என்று கூறிக் கொள்ளுகின்றனர்; நாடு கடத்தப்பட்ட அரசர்கள் என்று நம்பிக் கொண்டு, சிற்சில சமயங்களில் அரசர்களைப் போலவே நடிக்கின்றனர். இன்னும் சிலர், புதுமைகளைக் கண்டுபிடித்தவர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளுகின்றனர். கண்டுபிடித்த புதுமைகளை

மற்றவர்கள் திருடிக்கொண்டு, தங்களை இக் கதிக்கு ஆளாக்கி விட்டுவிட்டனர் என்றும் நம்புகின்றனர். ஆனால், சிறப்புத் திரிபு ணர்வுகள் அவ்வளவு ஆழமானவையல்ல. அவை அடிக்கடி மாறக்கூடியவை.

சிறப்புத் திரிபுணர்வுகள் பெரும்பாலும் பிந்திய கட்டத்தில் தான் ஏற்படுகின்றன. அதாவது, மனக்கோளாறுகளின் கடைசிக் கட்டத்தில் டிமென்ஷியா (கோட்டி நிலை) தொடங்கிய பிறகு ஏற்படுகின்றது என்று தெரிகின்றது. இங்கு நாம் விவாதித்த மூன்று வகையான திரிபுணர்வுகளுக்கிடையில் சில தொடர்புற வுகள் இருக்கின்றன.ஒரே நோயாளியிடம் இந்த மூன்று திரிபுணர்வு களும் ஒன்றையொன்று அடுத்தடுத்து ஏற்படக்கூடும். முதலில் சோர்வுத் திரிபுணர்வுகளும், பிறகு துன்புறுத்தல் திரிபுணர்வு களும், மூன்றாவதாகச் சிறப்புத் திரிபுணர்வுகளும் ஏற்படுகின்றன.

மூன்று வகையான திரிபுணர்வுகளும் இந்தவரிசைப்படி ஏற்படு வதற்குஉளவியல் விளக்கங்கள் தரப்படுகின்றன.முதலில்திரிபுணர்வு நோயாளி கடுந்துன்பங்களை உணருகின்றான்;பிறகு சோர்வுணர்ச்சி நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்ளுகின்றான்; அடுத்தபடியாகத் தன்னுடைய துயரம் நிரம்பிய நிலைக்குக் காரணம் கூறுகின்றான். மற்றவர்களால்தான் தனக்கு இத்தகையதொரு நற்பேறற்ற நிலை ஏற்பட்டது என்றும், மற்றவர்களுடைய கொடுமைகளுக்குத் தான் ஆளாகியிருப்பதாகவும் கூறி, துன்புறுத்தல் திரிபுணர்வுகளை வளர்த்துக் கொள்ளுகின்றான். இது பெரும்பாலும் அறிவார்ந்த விளக்கச் செயல்முறை போன்றதாகும். பிறகு தான் மட்டும் ஏன் தனியாகத் துன்புறுத்தல்களுக்கு ஆளாக வேண்டும் என்று தன்னுடைய நிலையை விளக்குகின்றான். இது சிறப்புத் திரிபுணர்வு களை வளர்க்கின்றது. தன்னுடைய செல்வத்தை மற்றவர்கள் எடுத்துக்கொள்ளவும், தன்னுடைய புகழைச் சிதைக்கவும் அவர்கள் செய்கின்ற சதி என்று நம்புகின்றான்; தான் மேன்மை யாகவும் செல்வாக்கோடும் இருப்பதுதான் இதற்கெல்லாம் காரணம் என்ற முடிவுக்கு வருகின்றான்.

மனவெழுச்சிக் குணத்தில் மிகையான வேறுபாடுகள்: உளப் பிணியின் ஒரு பெரும்வகை என்று கருதப்படுவது மிகுந்த மன வெழுச்சி எதிர்வினைகள் என்று தனிச் சிறப்பாகக் குறிக்கப்படு கின்றது. இஃது உடன்பாடான எதிர்வினைகளாகவுமிருக்கலாம்; எதிர்மறையான எதிர்வினைகளாகவுமிருக்கலாம். இந்த நிலை யைக் கடுமையான உளச்சோர்வு (depression) அல்லது மனவூக்க மழிவு என்று கூறுகின்றனர். இதற்கு இலக்கான மனிதன் பெரி

தும் துன்புறுகின்றான். அவனுடைய தோற்றம் எதிலும் கெடு தலையே காணுவதாக இருக்கின்றது. அவன் துன்ப உணர்ச்சியின் அடிமட்டத்திலிருந்து வருகின்றான். எல்லா விதமான எதிர்வினை களும் குறைவதைத் தொடர்ந்து வருகின்ற நிலையாகும் இது. உளச்சோர்வுக்கு ஆளான நோயாளி தற்கொலை செய்துகொள் ளவும் முயற்சி செய்கின்றான். வாழ்க்கை வெறுமையாகிவிட்ட தால், அவன் இந்த முடிவுக்குச் செல்லுகின்றான்.

உளச்சோர்வு இயல்புநிலையிலுள்ள மனிதர்களிடமும் காணப் படலாம். அவர்களும் சார்ந்திருக்கும் போக்கை வெளிப்படுத்த லாம். ஆனால், நோய்க்குணமுள்ள உளச்சோர்வு சார்ந்திருக்கும் போக்கில் வேறுபடுகின்றது. நோய்க்குணமுள்ள உளச்சோர்வு படித்தரங்களில் வேறுபட்டுக் காணப்படுகின்றது. உளச் சோர் வுக்கு எதிரிடையான நிலை எழுச்சிநிலை (eruphoria) ஆகும். நோயாளி இந்த நிலையில் அளவுக்கு மீறிய வகையில் மகிழ்ச்சியாக இருக்கின்றான். அவனுக்கே அது தெரியாது. அவன் எதிலும் இன்பத்தைக் காண்பதிலேயே இருக்கின்றான்; வேடிக்கை செய்து தன்னுடைய கணப்பை வெளியிடுகின்றான். எதுவுமே அவனைக் கவலைக்கு உள்ளாக்குவதில்லை. மேலும், அவன் ஒலி கிளப்பிச் சிரிக்கின்றான்; உரக்கப் பேசுகின்றான்; நகரும் நடவடிக்கைகளில் உச்சநிலைக்குச் செல்லுகின்றான்.

மேலும், சிந்தித்தல் அவனிடம் மிக வேகமாக நடைபெறு கின்றது. ஆனால், அந்தச் சிந்தனை மேலோட்டமான சிந்தனைதான்; எண்ணங்களின் சண்டையாக அந்தச் சிந்தனை அமைகின்றது. எழுச்சி நிலையும் மிதமிஞ்சிய நடவடிக்கையும் ஒன்றாகச்சேர்ந்ததைக் கிளர்ச்சியூட்டப்பட்ட நிலை (manic condition), பித்து வெறியேறிய நிலை என்று கூறுகின்றனர். இஃது எந்தப் படித்தரத்திலும் காணப் படலாம்.

உளப்பிணியாளனின் மனவெழுச்சிக் குணத்தில் காணப்படும் மிகையான வேறுபாடுகளில் ஒன்று நோய்க்குணமுள்ள கோபம் அல்லது எரிவுறுந்தன்மை (Irritability) ஆகும். ஒரு நோயாளி நிலையான சச்சரவுக்குணமுள்ளவனாக இருக்கலாம். அல்லது அவன் பெருங்களிப்பினால் துள்ளிக் குதிக்கலாம். எந்த வெளிச் சூழ்நிலையும் தூண்டிவிடக்கூடியதாகவுமில்லை. இவ் வகையான நிலைகள் உடல் வலிமையையும் தசைநார்களின் நடவடிக்கை யையும் பெருமளவுக்குத் தொடர்ந்து வருகின்றன. நோயாளிகள் மிகுந்தஅளவுக்குக் கிளர்ச்சியூட்டப்பட்ட நிலையிலிருப்பதைப்பார்த் துத்தான் பொதுமக்கள் பைத்தியம் என்று கூறுகின்றார்கள். சில

உளப்பிணியாளர்கள்தான் இந்த நிலையில் காணப்படுகின்றார்கள். ஆனால், பெரும்பாலான உளப்பிணியாளர்கள் சொற்கேட்டு நடக்கக் கூடியவர்களாகவுமிருக்கின்றார்கள்.

உளப்பிணிகளை வகைப்படுத்தல்

உளப்பிணிகளில் பல்வேறு வகைகளிருக்கின்றன. ஒவ்வொரு வகையினுள்ளும் பல சிறு வகைகள் அடங்கியிருக்கின்றன. ஆனால், பல ஆண்டுகளாகவே கடுமையான மனக்கோளாறுகளை இரண்டு பெரும் வகைகளில் அமைப்பது வழக்கமாக இருந்து வருகின்றது. அவை உறுப்புசார் உளப்பிணிகள் (Organic Psychoses), செயல் சார் உளப்பிணிகள் (Functional Psychoses) என்பவை.

உறுப்புசார் உளப்பிணிகள் மிகவும் தெளிவான உடற்கூற்றுக் காரணங்களால் ஏற்படுகின்றன. மூளையின் குருதிக்குழாய்களில் சிரமம் ஏற்படுவதாலும், நரம்பு மண்டலத்தின் மேக நோய்களாலும், மட்டுமிஞ்சிய குடி, மூளைப்பழுது, காக்கை வலிப்பு (epilepsy), கிழப்பருவம் ஆகியவையும், இன்னும் இவை போன்ற பல உடற்கூறு காரணங்களால் உளப்பிணிகள் தோன்றுகின்றன.

ஆனால், அதே சமயத்தில் செயல்சார் உளப்பிணிகள் முற்றிலும் உளவியல் காரணங்களினால் ஏற்படுகின்றன என்று ஒரு காலத்தில் நம்பி வந்தனர். உளப்பிணிக்கான இந்த இரண்டு வகைக் காரணங்களும் உடைத்தெறியப்பட்டு விட்டன என்றாலும் உளப்பிணிகளைப்பற்றித் தெளிவான விளக்கங்களைத் தருவதற்காக இந்த வகைப்படுத்தலை ஒரு பயனுள்ளதாகக் கருதுகின்றனர். செயல்சார் உளப்பிணிகளில் உணர்ச்சிவிண்ட நிலை (Schizophremia), கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மனப்பிணி (Manic-depressive psychosis), கருத்துத் திரிபுநிலை (Paranoia) ஆகியவை அடங்கியிருக்கின்றன.

இந்த வகையான வகைப்படுத்தலை அப்படியே எடுத்துக் கொண்டு நரம்புடல்கூற்று நோக்கு உறுப்புசார் உளப்பிணிகளுக்குத்தான் ஏற்றதென்று சிலர் வாதாடுகின்றனர். ஆனால், உறுப்புக்கூறுகள் இரண்டு வகை உளப்பிணிகளிலும் இருக்கின்றன. வெகு நாள்களாக நரம்புடல்கூற்று (Neruophysiological) நோக்கு உறுப்புசார் உளப்பிணிகளுக்கு ஏற்றதென்று ஒரு நம்பிக்கை இருந்து வருகின்றது. மேலும், உளவியல் காரணங்களும் இரண்டு வகையான உளப்பிணிகளிலும் பங்குகொண்டு அறிகுறிகளை நிர்ணயம் செய்ய உதவுகின்றன.

ஆனால், பல்வேறுபட்ட உளப்பிணிகளும் இணையான அளவில் மக்களிடம் எங்கும் காணப்படுகின்றன என்று கூற முடியாது. சில வகையைச் சேர்ந்த நிகழ்ச்சி வரலாறுகள் ஒரு சமூகத்தில் அதிகமாகக் காணப்படலாம்; சில குறைவாகக் காணப்படலாம். அமெரிக்க நாட்டில் 1945ஆம் ஆண்டில் ஓர் உளமருத்துவ விடுதியில் எடுக்கப்பட்ட கணக்குப்படி, இந்த இரண்டு பெரும் வகைகளில் காணப்பட்ட எல்லா வகை உளப்பிணியாலும் மனிதர்கள் தாக்கப்பட்டிருக்கின்றார்கள் என்று தெரிகின்றது. உதாரணமாக, மொத்த உளப்பிணி நோய்களில் 40 சதவிகிதத்தினர் உறுப்புசார் உளப்பிணிகளால் வருந்துவதாகப் புள்ளிவிவரம் கூறுகின்றது. அவர்களில் 21 சதவிகிதத்தினர் கிழப்பருவக் கோளாறுகளாலும், பத்து சதவிகிதத்தினர் பல்வேறுபட்ட உறுப்புசார் கோளாறுகளாலும் வருந்துவதாகத் தெரிகின்றது. செயல்சார் உளப்பிணியாளர்கள் 46 சதவிகிதத்தினர் என்றும், அவர்களில் 22 சதவிகிதத்தினர் உணர்ச்சிவிண்ட நிலையாலும், ஒன்பது சதவிகிதத்தினர் கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மனக்கோளாறினாலும், இரண்டு சதவிகிதத்தினர் கருத்துத்திரிபு நிலையாலும், பதின்மூன்று சதவிகிதத்தினர் மற்றச் செயல்சார் உளப்பிணிகளாலும் வருந்துகின்றார்கள் என்றும் தெரிகின்றது. இவையன்றிப் பதினான்கு சதவிகிதத்தினர் உளப்பிணி நோயாளிகளல்ல என்றும் தெரிய வருகின்றது. மொத்தத்தில் பார்க்கும்போது செயல்சார் உளப்பிணியினரின் சதவிகிதம் அதிகமாக இருந்திருக்கின்றது. எனவே, பெரும்பாலான உளப்பிணிகளுக்கு உளவியல் காரணங்களே முக்கியமாக இருந்திருக்கின்றன.

உறுப்புசார் உளப்பிணிகள்

உறுப்புசார் உளப்பிணிகள் பல குருதிக்குழாய்களில் ஏற்படுகின்ற கோளாறு காரணமாகவும் மூளைக்குரிய சிதைவு ஏதேனும் ஏற்படுமானாலும் உண்டாகின்றன. மேலும் கிழப்பருவம், மூளையில் ஏற்படும் ஊட்டக்குறைவு ஆகியவை நடத்தையை மாற்றும் காரணங்களாக இருக்கின்றன. பல நிகழ்ச்சி வரலாறுகளில் குருதிக்குழாய்கள் உணர்ச்சியற்றுப் போவதாலோ கெட்டிப்படுவதாலோ நிலைமை சிக்கலாகின்றது என்று கண்டிருக்கின்றனர்.

மூளைக்குரிய குருதிக்குழாய்களின் உணர்ச்சியற்ற நிலை (Cerebral Arteriosclerosis): மூளையிலுள்ள குருதிக்குழாய்கள் உணர்ச்சியற்றுப்போகின்ற நிலைமை ஏற்படுமானால், அது மற்றக் குருதிக்குழாய்களுக்கும் பரவுகின்றது. இந்த நிலை பெரும்பாலும் கிழப்

பருவத்தில்தான் ஏற்படுகின்றது. இந்த நிலையானது மூளையின் ஊட்டத்தைப் பாதிக்கின்றது. இது கிழப்பருவத்து டிமென்ஷியாவின் (கோட்டி நிலை) அறிகுறிகளைச் செறிவர்க்குகின்றது. குருதிக்குழாய்கள் உணர்ச்சியற்றுப் போதலும், குருதியழுத்தம் அதிகரித்தலும் சேர்ந்து மூளையின் குருதிக்குழாய்களை வெடிக்கச் செய்யும் நிலையை உண்டாக்குகின்றன. இது மூளையைச் சிதைக்கச் செய்கின்றது. திடீரென்று மூளையின் குருதிக்குழாய்களில் ஏற்படுகின்ற வெடிப்புக்குப் பெயர் வலிப்பு நோய் (Apoplexy) என்பதாகும். இதற்கு உள்பட்ட நோயாளி நனவிலி (unconscious) நிலையை அடைகின்றான். இதைத் தொடர்ந்து இயக்க வலுக்குறைவு ஏற்பட்டு உடம்பின் ஒரு பகுதி பக்கவாதத்தால் (paralysis) பீடிக்கப்படுகின்றது. வலிப்பு நோய் பெரும்பாலும் கிழப்பருவத்து டிமென்ஷியாவோடு (கோட்டி நிலை) இணைந்து ஏற்படுகின்றது.

கிழப்பருவ டிமென்ஷியா (Senile Dementia): கிழப்பருவத்து டிமென்ஷியா கிழப்பருவத்தில் அறிவாற்றலைச் சிதைக்கின்றது. கிழப்பருவம் எய்திய பல மனிதர்களிடம் புலனுறுப்புகள், தோல், சுரப்பிகள், மயிர் ஆகியவை கிழப்பருவத்துச் சிறப்புக்கூறுகளாக மாற்றிக் காட்டுகின்றன. அவர்களுடைய மூளையும் அதே போன்ற சீர்கேட்டையடைந்தது. மூளையின் எடை குறைந்தது. மேலும், பல நரம்பு உயிரணுக்கள் சீர்கேடுற்றன. உள்ளத்திற்கான அறிகுறிகள் படிப்படியாக வளர்ச்சியுற்றன. முதலில் தோன்றுகின்ற அறிகுறிகள் உடனடி நினைவு இழப்பதாக இருந்தன. கிழப்பருவ உளப்பிணியாளன் சிறிது நேரத்திற்கு முன்பு சந்தித்த மனிதர்களைக்கூட நினைவுகொள்ள முடிவதில்லை. ஆனாலும், அந்த நோயாளியால் தன்னுடைய குழந்தைப் பருவத்து நிகழ்ச்சிகளைக்கூட விளக்கமாகக் கூற முடியும். இந்த டிமென்ஷியாவின் அடுத்தக் கட்டத்தில் நீண்ட காலமாகக் கற்றவை கூற மறக்கப்பட்டு விடுகின்றன. அந்த நோயாளியால் தன்னுடைய பெயரைக்கூடச் சொல்ல முடிவதில்லை. மேலும், அவனுடைய வயது, அவன் செய்து வந்த வேலை, ஊர் முதலியவற்றைக்கூடச் சொல்ல முடியாது. நினைவு இவ்வாறு சிதைவதானது சில நிகழ்ச்சிகளில் ஒழுங்குமுறையற்றுக் காணப்படுகின்றது. உதாரணமாக, ஒரு வயது முதிர்ந்த நோயாளி தன்னுடைய பெயரைக்கூடச் சொல்ல முடியவில்லை; ஆனால், குழந்தைப் பருவத்தில் தம்மோடு கற்ற இரண்டு ஆசிரியர்களின் பெயர்களை நினைவுகொண்டுள்ளார்.

கிழப்பருவ டிமென்ஷியா ஒத்தியங்குகின்ற குலைக்காய்ச்சல் (pneumonia) போன்ற நோய்களினால் தீர்க்கப்படுகின்றது.

பெரும்பாலான கிழப்பருவ டிமென்ஷியாக்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றார்கள். ஆனால், சிலர் வாழ முடியாத வகையுள்ள நடத்தைகளை வெளிப்படுத்துகின்றனர். சிலர் எரியுந்தன்மையுள்ளவர்களாகவும், சுயநலம் கொண்டவர்களாகவும், சச்சரவுள்ளவர்களாகவுமிருக்கின்றனர். இந்த வகையான நடத்தைக்குக் காரணம், ஒரு வேளை அவர்கள் தங்களுக்கு வேண்டியதைத் தாங்களே செய்துகொள்ள முடியாததனால் ஏற்பட்ட எதிர்வினைகளாக இருக்க முடியும்.

சிற்சில சமயங்களில் இந்த நோயாளிகளுக்குத் திரிபுணர்வு நிலை ஏற்படுவதுண்டு. அது சமயங்களில் நோயாளிகள், தங்கள் குடும்பத்தினர் தங்களுக்கு நஞ்சு வைத்துக் கொல்லப் பார்க்கின்றனர் என்று நம்புகின்றனர். இந்த வகையான திரிபுணர்வுகள் ஏற்படுவதற்குக் காரணம், இவர்கள் தங்களுடைய இளமைப் பருவத்தில் சந்தேகமுள்ளவர்களாகவும், நம்பிக்கையற்றவர்களாகவுமிருந்திருக்கின்றார்கள் என்பதாகும். கிழப்பருவ டிமென்ஷியா பெரும்பாலும் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களிடந்தான் காணப்படுகின்றது. ஒரு தேர்வாராய்ச்சிப்படி இந் நோய் எழுபது வயதைக் கடந்தவர்களைத்தான் தாக்குகின்றதாகத் தெரிகின்றது. ஆனால், அறுபது வயதுள்ளவர்களையுங்கூட இது தாக்கலாம்.

இந் நோயால் தாக்கப்படும் மனிதர்களின் வயதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனவே, இந் நோய் உடலமைப்பு நோய்கள், உணவூட்டம், தனி மனிதரின் தொழில் தன்மை ஆகியவை இந் நோய்க்குக் காரணக்கூறுகளாக இருக்கின்றன. இவையன்றி மிதமிஞ்சிய குடிப்பழக்கம், சில தொற்றுநோய்கள் ஆகியவையும் இந் நோயின் காரணமாக அமைகின்றன. ஆனால், கிழப்பருவ டிமென்ஷியாவைக் குணப்படுத்துவதற்கான தனி முறைகள் எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை. மற்ற உளப்பிணியாளர்களைப் போலவேதான் இவர்களையும் நடத்துகின்றனர் என்று தெரிகின்றது.

மட்டுமிஞ்சிய குடிசார்ந்த உளப்பிணிகள் (Alcoholic Psychoses)

குடியினால் தீமைகள் ஏற்படுகின்றன என்று பல நிகழ்ச்சி வரலாறுகளிலிருந்து நாம் அறிய முடியும். ஆனால், அளவான குடிப்பழக்கம் தீமை செய்வதில்லை என்ற கருத்தும் நிலவுகின்றது. ஆனால், குடிப்பழக்கமுள்ளவர்கள்தான் மட்டு மிஞ்சிய குடியர்களாகின்றார்கள். இந்த மட்டுமிஞ்சிய குடிப்பழக்கம் உளப்பிணிகளைத் தோற்றுவிக்கின்றன என்று நிகழ்ச்சி வரலாறுகளிலிருந்து

நாம் அறிந்துகொள்ளும் உண்மைகளாகும். மட்டுமிஞ்சிய குடிப் பழக்கம் பல வகையான மனக்கோளாறுகளுக்குக் காரணமாக இருக்கின்றது. அவற்றில் சில குடிமயக்கம் (intoxication), முற்றிய மட்டுமிஞ்சிய குடிப்பழக்கம் (chronic alcoholism), மட்டுமிஞ்சிய குடிசார்ந்த கடுமையான உளப்பிணிகள் (acute alcoholic psychoses), மருந்து உளப்பிணிகள் (drug psychoses) என்பவை.

குடி மயக்கம்: குடித்த நிலைமையே ஓர் உளப்பிணிதான் என்பது ஒரு பொதுவான கருத்தாக இருந்து வருகின்றது. சிறிது நேரமே குடியின் விளைவு ஒருவரிடம் தங்கியிருந்தாலும் அல்லது ஒரு நாளே தங்கியிருந்தாலும் அஃது உளப்பிணி நிலையேயாகும். அமைதியான குடிமயக்கம் கொண்ட மனிதன் மகிழ்ச்சியடைகின்றான்; துடிப்புணர்ச்சியுடன் காணப்படுகின்றான். எண்ணங்கள் துடித்து எழுகின்றன அவனிடம். அதிகமான குடிமயக்கம் இருந்தால், அவனுடைய இயல்பான ஆளுமைப் போக்குகள் பகுத்தறிவுக்கு ஒவ்வாத மிகைப்படுத்தப்பட்ட காட்சிணியாகத் தெரிகின்றன. மிக்க உரத்த குரல் கொண்டு பேசுகின்றான்; ஆக்கிரமிப்புக் கொள்ளுகின்றான்; சந்தேகமுள்ளவனாகவும் தற்புகழ்ச்சியுள்ளவனாகவும், வருத்தமுள்ளவனாகவும் காணப்படுகின்றான். நடத்தையின் இயல்பான தடைகள் மெலிந்து போகின்றன. மேலும், அவனுடைய நினைவாற்றல் குறைந்து போகின்றது. இறுதியாக உணர்ச்சியிழத்தலுக்கு ஆளாகிவிடுகின்றான்.

இவ் வகையான நிலைமை கடுமையான மனக்கோளாறு என்று கருதப்படுகின்றது. ஆனால், இந் நிலைக்கு ஆளான அம் மனிதன் குடிமயக்கத்திலிருக்கின்றான். அவன் சீக்கிரம் குடிமயக்கத்திலிருந்து விடுபடலாம். இஃது ஒன்றுதான் குடிமயக்கத்திலுள்ளவனுக்கும் வேறு வகையான உளப்பிணிக்கு ஆளானவனுக்கும் உள்ள வேறுபாடாகும். குடிமயக்கம் பெரும்பாலும் ஒருவனுடைய பொருத்தக்கேட்டுக்கு எதிராகத் தற்காப்பு வழியமைப்பாகச் செயல்படுகின்றது. குடியின் செல்வாக்கினடியிலிருக்கின்ற ஒருமனிதன் தன்னுடைய சிரமங்களையெல்லாம் மறந்து விடுகின்றான்; தன்னுடைய போராட்டங்கள் முரண்பாடுகள் ஆகியவற்றின் உணர்வுகளிலிருந்துதப்பித்துக்கொள்ளுகின்றான் மிகையான குடிப்பழக்கத்தின் பக்கம் உள்ள நிலையான மனப்போக்குகளை இது விளக்குகின்றது. உடற்கூற்று முறைகளால் மட்டும் மட்டுமிஞ்சிய குடிக்கு நிலையான தீர்வு காணப் பெறுவது அரிதாகும். ஆனாலும், உடல்கூற்றுப் பொருத்தக்கேடுகள் ஒரு மனிதனைக் குடிப்பதற்காக எடுத்துச் செல்லலாம் என்பதையும் நாம் கவனிக்க வேண்டும்.

குடிக்கின்ற நிலையானது ஏற்கெனவே இருந்து வருகின்ற சில வகையான மனக் கோளாறுகளை அடிக்கடி வெளிப்படுத்துகின்ற தொன்ருகும். மனக் கோளாறுள்ள நோயாளியொருவன் குடித் திருப்பானுனல், அவனிடமும் குடியின் அறிகுறிகள் தோன்றலாம். இவனுடைய உளப்பிணி மட்டுமிஞ்சிய குடியில் தொடங்கியது என்று நாம் எப்பொழுதும் கொள்ள முடியாது. இவன் சம்பந்தப் பட்ட அளவில் மட்டுமிஞ்சிய குடி ஒரு நிகழ்ச்சிதான் துணை செய்கின்ற காரணக்கூருகும்.

முற்றிய மட்டுமிஞ்சிய குடிப்பழக்கம் : தொடர்ந்து நடைபெற்று வருகின்ற மட்டுமிஞ்சிய குடிப்பழக்கம் நரம்பு மண்டலத்திலும், உடலின் மற்ற உறுப்புகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இந்த வகையான நடத்தையின் அறிகுறிகள் நடுக்கம், நினைவையிழத்தல், டிமென்ஷியா ஆகியவையாகும். முற்றிய மட்டுமிஞ்சிய குடிப்பழக்கம் ஏழ்மையான சிந்தனையிலிருக்கின்றது. அவனுடைய தீர்ப்புகள் சரியானவையல்ல. மேலும், அவன் எதையும் சரியானபடி சிந்திப்பதில்லை.

மனவெழுச்சி எடுத்துக்கொண்டு நோக்கும்போது அவன் மற்றவர்களுடைய உணர்ச்சிகளுக்கும் அபிப்பிராயங்களுக்கும் செவி சாய்க்க விரும்புவதில்லை. ஆனுல், எரிபுறுந்தன்மையும் உள் துடிப்பும் கொள்ளுகின்ருன். மற்றவர்கள் தன்னுடைய நடவடிக்கையில் தலையிடும்பொழுது அவன் மிகவும் கோபம் கொள்ளுகின்ருன். முற்றிய மட்டுமிஞ்சிய குடிகள் மோசமாகும்பொழுது திரிபுணர்வுகள் தோன்றுகின்றன. தன்னைத்தானே குறைபட்டுக் கொள்ளுகின்ற திரிபுணர்வுகள், தகுதியில்லாததன் திரிபுணர்வுகள் ஆகியவை மிகவும் பொதுவானவை.

இன்னும் சில திரிபுணர்வுகள் மற்றவர்களைப்பற்றியதாக இருக்கின்றன. நோயாளி தன்னுடைய மனைவி தன்னிடம் உண்மையாக இல்லை என்றும், தன்னுடைய குடும்பத்தினர் தன்னைத் தொந்தரவு செய்கின்றனர் என்றும் நம்புகின்ருள். இவை எல்லாம் புறத்தெழு அகக்காட்சியிலிருந்து (projection) தோன்றுவதாகக் காணப்படுகின்றன. உண்மையில் அவன் தன்னுடைய குடும்பத்தினரிடம் உண்மையாக இல்லை. இந்த மட்டுமிஞ்சிய குடி மற்றவர்கள் அவனிடம் உண்மையாக இல்லை என்று நம்பும்படிச் செய்கின்றது. மட்டுமிஞ்சிய டிமென்ஷியா மூளையின் உயிரணுக்களின் உறுப்புச் சிதைவுறுவதால் ஏற்படுகின்றது. இது விரும்பத் தகாத ஒரு விளைவாகும். இதற்கு உடனடியாகச் சிகிச்சையளிக்கப்படுமானுல், மேலும் தொடருகின்ற கோளாறைத்

தடுக்கலாம். ஆனால், இழந்துவிட்டதொன்றை மறுபடியும் மீட்க முடியாது. அறுவை சிகிச்சைகளின்மூலம் சிதைந்துபோன பகுதியை எடுத்துவிட்டு இணையான பகுதியை வைக்க முடியாது மற்ற உறுப்புகளில் நடத்துகின்ற இத்தகைய முறையை மூளையின் உயிரணுக்கள் சிதைந்துவிட்டபோது செய்ய முடியாது. ஆனால், காலத்தில் எடுத்துக்கொள்ளுகின்ற தடுப்பு முயற்சிகள் நோயாளியை மீட்பதற்கு உதவி செய்யலாம்.

குடிசார்ந்த கடுமையான உளப்பிணிகள்: மட்டுமிஞ்சிய குடிப் பழக்கம் முற்றியதாக இருக்குமானால், அது பல தீமைகளை விளைவிக்கின்றது என்பதைக் கண்டோம் ஆனால், முற்றிய மட்டுமிஞ்சிய குடியே கடுமையான உளப்பிணியைத் தோற்றுவிக்கின்றது. செறிவானதும், நீண்டு செல்லக்கூடியதுமான களியாட்டத்தாலோ அவனுடைய உளச் சக்தியைக் குறைக்கும் நோயினாலோ விபத்தினாலோ உளப்பிணி விரைவுபடுத்தப்படுகின்றது. இந்த விதமான விளைவுகள் பல வகைகளில் அடங்குகின்றன. அவற்றில் மிக முக்கியமானதென்று கருதப்படுவது மயக்கவெறி தரும் அச்சங்கள் (delirium demens) என்பதாகும். குறைந்த நேரமே நிலைத்து நிற்கின்ற மிகக் கடுமையான ஒரு நிலையாகும் இது. மிகவும் முக்கியமான மன அறிகுறிகளாக இருப்பவை மிகவும் பயங்கரமாயுள்ள நிலை, கிளர்ந்து எழுந்த மனவெழுச்சிக் குரல், மிகவும் பயத்தை உண்டுபண்ணக்கூடிய காட்சிக்குரிய பொய்த்தோற்றங்கள் ஆகியவை.

நம்பத்தகாத மிருகங்களான எலிகள், பாம்புகள், புலிகள் ஆகியவை அடிக்கடி காணப்படுகின்றன. கோரமான கடைக்கண் பார்வையுள்ள முகங்களும் அடிக்கடி காணப்படுகின்றன. இவ் வகையான பொய்த்தோற்றங்கள் சில சமயங்களில் துன்புறுத்தல் திரிபுணர்வுகளில் தொடரப்படுகின்றன. அந்த நோயாளி நடுக்கம் கொண்டு காணப்படுவான்; அமைதியிழந்து, தூங்க முடியாமல் தவிப்பான். இந்த மாதிரியான நிலை மூன்று முதல் பத்து நாள்கள் வரையிலும் தொடர்ந்து செல்லலாம். பிறகு முடிவு, ஒன்று அதிலிருந்து விடுபடல் அல்லது இறப்பு. குடிசார்ந்த கடுமையான உளப்பிணிகள் இந்தக் குணப்பண்புகளைக் கொண்டவை.

மட்டுமிஞ்சிய குடிசார்ந்த கடுமையான உளப்பிணிகளில் சற்று வேறுபட்ட கடுமையான நிலைமையுடையது குடிசார்ந்த ஒளிவட்ட விளைவு (alcoholic hallucionsis). இந்த வகையான பொய்த்தோற்றங்கள் கேள்விப்புலன் குணப்பண்புகளுடையவை

யாக இருக்கின்றன. குறிப்பாக, அவை குற்றஞ்சாட்டும் குரல் களாகவும், பயமுறுத்தும் குரல்களாகவும், அவமானப்படுத்தும் குரல்களாகவுமிருக்கின்றன. ஆனல், இந்த நிலையில் தெளி உணர் நிலை அவ்வளவாக மூடப்பட்டு விடுவதில்லை. மயக்கவெறி தரும் அச்ச நிலையில் தெளி உணர்நிலை மூடப்பட்டு விடுகின்றது. குடி சார்ந்த ஒளிவட்ட விளைவு நிலையில் கோளாறு நீண்ட நேரத்திற்கு நிலைத்து நிற்கின்றது. முற்றிப்போன மட்டுமிஞ்சிய குடியில்தான் இந்த நிலை ஏற்படுகின்றது.

குடிசார்ந்த கடுமையான உளப்பிணி வகைகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது கொர்சாகோ உளப்பிணி (Korsakow's Psychosis) என்பதாகும். இந்த வகையான உளப்பிணி மட்டு மிஞ்சிய குடியோடு தொடர்புடையதாகும். ஆனல், இந்த உளப் பிணியின் தோற்றம் குடியினலன்று. கொர்சாகோஉளப்பிணி பி. ஊட்டச்சத்து (vitamin B) குறைவதனல் ஏற்படுகின்றது என்று அண்மைக்கால ஆராய்ச்சிகள் கூறுகின்றன. ஏனென்றல், முற்றிய மட்டுமிஞ்சிய குடியர்கள் வழக்கமான உணவுப் பழக் கத்தைப் புறக்கணித்து விடுகின்றார்கள். இந்த வகையைச் சார்ந்த நோயாளிகள் கவலையும் கிளர்ச்சியுமுடையவர்களாகக் காணப்படு கின்றார்கள்; தவிர, குறிப்பிடத்தக்க அளவுக்கு நினைவிழந்தவர் களாகவுமிருக்கின்றார்கள்; ஆனல், இந்த நிலையைத் தற்காப்பு வழியமைப்பின்மூலம் ஈடுகட்டுகின்றார்கள். இந்த வகையான உளப்பிணியால் வாடும் ஒரு நோயாளி சில நாள்கள் மருத்து விடுதியிலிருந்தார். அவர், தாம் முதல் நாள் பார்த்த ஒரு விளை யாட்டுப் போட்டியைப்பற்றிய விளக்கம் தந்தார்; தம்முடைய நண்பர்களோடு நடத்திய உரையாடலைப்பற்றிய குறிப்புகளைக் கொடுத்தார். இது, தாம் நினைவை இழந்துவிடவில்லை என்பதைக் காட்டுவதற்காகும். எனவே, இஃது ஒரு வகையான தற்காப்பு வழியமைப்பாகும்.

மருந்து உளப்பிணிகள்: மருந்துச் சார்பான பொருள்களை உபயோகித்து நீடித்த பழக்கத்தில் தோய்ந்துள்ளவர்கள் மனச் சிதைவுக்கு ஆளாகி உளப்பிணி நோயாளிகளாகின்றனர். தூக்க மாத்திரைகளையும், ஆரவாரத்தைத் தூண்டும் பொருள்களையும், போதைப் பொருள்களையும் உட்கொண்டு பழக்கப்பட்டவர்கள் அவற்றிலிருந்து தங்களை எளிதில் விலக்கிக்கொள்ள முடியாதவர் களாக இருக்கின்றார்கள்; எனவே, நாளுக்கு நாள் உபயோகிக்கும் பொருள்களின் அளவை அதிகரித்துக்கொண்டு செல்லுகின்றார்கள். அவர்கள் அவற்றை உபயோகிப்பதிலிருந்து விலகுவார்களானல், கவலை, கிளர்ச்சி, குப்புறக் கீழே படுத்துக் கிடத்தல், சில சமயங்

களில் திரிபுணர்வுகள். பொய்த்தோற்றங்கள் ஆகியவற்றின் கடுமையான அறிகுறிகள் அவர்களிடம் தோன்றுகின்றன. எனவே, அவர்கள் விலகியிருக்கவும் முடியாது.

உளப்பிணியாளரின் பொதுப் பக்கவாதம் அல்லது பெராசிஸ் (Paresis)

மேக நோயினால் உண்டாகின்ற முக்கிய உளப்பிணியாகும் இது. உடற்கூற்றுச் சான்றுகளைக்கொண்டு இந்த நோயின் மூலத்தையறிகின்றனர். மேலும், அறிகுறிகளின் குணப்பண்பு களைக்கொண்டும் இந் நோயின் மூலத்தையறியலாம். வாசர்மன் (Wassarmann) என்பவரின் ஆராய்ச்சி இந் நோயின் மூலத்தையறிய உதவியிருக்கின்றது. பரிசோதனைக்குரிய நோயாளி முதுகெலும்பு சார்ந்த திரவப் பொருளைப் பரிசோதித்துப் பார்த்ததில் நரம்பு மண்டலத்தில் மேக நோயின் தொற்றல் இருந்தது. இதன் அறிகுறி பெராசிஸ் அந் நோயாளிக்கு இருக்கின்றது என்பதாகும். எல்லா வகையான பெராசிஸ் நோய்களும் மேக நோயினால்தான் ஏற்படுகின்றன என்றாலும், கிட்டத்தட்ட மூன்று சதவிகிதத்தினர் உளப்பிணிகளுக்கு ஆளாகின்றனர்.

இந்த உண்மைகளை விளக்கும்பொருட்டுக் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டன. மேக நோயின் கருவில் ஏற்படும் தனிப் பட்ட பளு பெராசிஸ் வளர்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றது. மேலும், இந்த நிலை விபத்துகள், மட்டுமிஞ்சிய குடி ஆகியவற்றால் விரைவுபடுத்தப்படுகின்றது,

பெராசிஸ் வளர்ச்சியடைதல் : பெராசிஸ் பொதுவாக நடுத்தர வயதுடையவர்களிடையே வளர்ச்சியடைகின்றது. மேக நோய் தோன்றிப் பத்து அல்லது இருபது ஆண்டுகள் கழித்து இது தோன்றுகின்றது என்று நம்புகின்றனர். பிறகு இது நீண்டதொரு வளர்ச்சிப் போக்குடையதாக இருக்கின்றது. தொடக்க காலத்தில் ஏற்படுகின்ற முதல் மாற்றம் உணர்ச்சி நிலை, தீர்ப்பு, நடத்தை ஆகியவற்றில் காணப்படுகின்றது. நோயாளியின் நினைவும் தீர்ப் பும் தவறி விடுவதால், அவன் தன்னுடைய தொழில் தவறுகள் செய்யலாம். சில சமயங்களில் ஏராளமான பணத்தையும் நட்ட மடையச் செய்துவிடுகின்றான். அவனுடைய உணர்ச்சி நிலைகள் ஒழுங்கற்றிருக்கின்றன. அவன் ஒருசமயம் எதிலும் முட்டாள்தன மாக இன்பம் காணுகின்றவனாக இருப்பான்; மறு சமயம் மிகவும் மனவூக்கமிழந்து காணப்படுவான். பெராசிஸ் நோயா ளிகள் தொடக்க கட்டத்தில் மட்டுமிஞ்சிய குடிப்பழக்கமும், மிகுந்த அளவுக்குச் சிற்றின்பத்தில் ஈடுபடும் விருப்பமும் உள்ள வர்களாக இருப்பார்கள். இந்த வகையான நடத்தைகள் எல்லாம்

ஒழுக்கக் குறைபாடுகள் என்று கருதப்படுகின்றன. மறிவினை களில் தொந்தரவுங்கூட இக் காலத்தில் ஏற்படுகின்றது. ஆனால், இவற்றையெல்லாம் மருத்துவர்கள் நோயாளிகளைப் பரிசோதித்துப் பார்த்துத்தான் கண்டறிய வேண்டும்.

பெராசிஸ் முதல் கட்டத்திலிருந்துதான் இரண்டாவது கட்டத்திற்கு வளர்ச்சியடைந்து செல்லுகின்றது. இந்த இரண்டாவது கட்டத்திற்கான வளர்ச்சி படிப்படியாகத்தான் நடைபெறுகின்றது. இந்தக் கட்டத்தில் காணப்படுகின்ற அறிகுறிகள் எந்த வகையான சந்தேகமுமின்றி இயல் பிறழ்ச்சி நிலைதான் இது என்பதைக் காட்டுகின்றன. இந்த நோயாளி நடந்து செல்லும் பொழுது கால்கள் தடுமாறுகின்றன. அவன் நடந்து செல்லும் முறையில் கால்களை ஒருமுகப்படுத்தலிருக்காது. அவனுடைய குரல் தடிப்பாகக் காணப்படும். ஏனென்றால், பேசுவதற்கு உபயோகிக்கின்ற தசைநார்களைக் கட்டுப்படுத்தக்கூடிய திறமையை அவன் இழந்து விட்டான். சில சமயங்களில் வலிப்பு நோய் திடீரென்று தாக்குவதுண்டு.

இந்த நோயாளி தன்னுடைய மனவாழ்க்கையைப் பொறுத்த வரையில் வளர்ந்து வரும் டிமென்ஷியாவை வெளிப்படுத்துகின்றான்; அடிக்கடி ஒருநிலைப்பாடு தவறுகின்றான். இந்த இடத்தில் தான் பெராசிஸ் நோய்கள் வகைப்படுத்தப்படுகின்றன. எளிய டிமென்ஷியா நோய்வகை சிதைவுறுகின்றது. சிக்கலான வகைகள் விரிவடைகின்றன. ஒழுங்குபடுத்தப்படாத சிறப்புத் திரிபுணர்வுகள் தோன்றுகின்றன. இத்தகைய நோயாளிகள் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றார்கள்; உரக்கப் பேசுகின்றார்கள்; தங்களுடைய பெருமைகளைப்பற்றி மடத்தனமான கதைகள் சொல்லுகின்றார்கள்; தங்களுடைய செல்வம், ஆண்மை ஆகியவற்றைப்பற்றிப் பெருமையடித்துக் கொள்ளுகின்றார்கள்.

ஆனால், உளச் சோர்வடைந்துள்ள நோயாளிகள் சோர்வுடைமைத் திரிபுணர்வுகள் கொண்டவர்களாகி, தங்களுடைய உள் உறுப்புகள் வீணாகிக் கொண்டுவருகின்றன என்றும், பாவம் செய்ததற்காகத் தாங்கள் தண்டிக்கப்படுவதாகவும் நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றார்கள். இவர்களிடம் சிறப்புத் திரிபுணர்வுகள் தான் மிகவும் அடிக்கடி காணப்படுகின்றன.

பெராசிஸ் நோயின் அடுத்தக் கட்டம் சிகிச்சைக்குப்பிறகு வருவதாகும். இரண்டாவது கட்டத்திலேயே நோயாளி சிகிச்சை பெறுகின்றான். அந்தச் சிகிச்சையில் இந்தக் கோளாறு கட்டுப்படவில்லையானால், பெராசிஸ் நோயின் மூன்றாவது அல்லது கடைக்

கட்டம் வருகின்றது. இந்தக் கட்டத்தில் நோயாளி நிலையான அதிர்ச்சி அல்லது நடுக்கம் கொண்டுள்ளான்; மெலிந்துபோய், உதவியற்று, பக்கவாதத்தால் பீடிக்கப்படுகின்றான். மிகவும் ஆழமான டிமென்ஷியா (கோட்டி நிலை) நிலையில் அவனுடைய திரிபுணர்வுகள் மறைந்து போகின்றன. திரிபுணர்வின் இந்த மறைவு நோயாளிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கிவிடுகின்றது; நோயாளி இறந்தும் போகலாம்.

சிகிச்சை முறைகள் : பெராசிஸ் நோய்களை முற்றிய நிலையில் சிகிச்சையளித்துக் குணப்படுத்த முடியாது. மேக நோயிலிருந்து தான் பெராசிஸ் ஏற்படுகின்றது என்றாலும், மேக நோய்க்குத் தரப்படுகின்ற அடிப்படைச் சிகிச்சை முறைகள் பெராசிஸ் நோய்களுக்குப் பயனளிப்பதில்லை; நாள்பட்ட காய்ச்சல் பெராசிஸ் நோயாளியைச் சீர்படுத்தும் என்று நம்புகின்றனர். இந்தக் காய்ச்சல் சிகிச்சை முறை இப்பொழுது ஒரு வரையளவாக உபயோகிக்கப்பட்டு வருகின்றது. இரண்டு வழிகளில் இம் முறை செயல்படுத்தப்படுகின்றது.

பெராசிஸ் நோயாளியின் உடலில் முறைக் காய்ச்சல் மருந்து ஊசிமூலம் பாய்ச்சப்படுகின்றது. இந்த மருந்து காய்ச்சலை உண்டு பண்ணுகின்றது. இந்தக் காய்ச்சல் கட்டுப்படுத்தக் கூடியதாகும். மின்சார வழிமுறைகளையும் உபயோகித்து உடல் வெப்பத்தை அதிகரிக்கச் செய்யலாம். இந்த முறையின்மூலம் பெராசிஸ் நோயைக் கட்டுப்படுத்தலாம். கடுமையின் அறிகுறிகளும் குறைகின்றன. பல நோயாளிகள் மருத்துவ மனைகளில் இந்தச் சிகிச்சை பெற்று, தங்கள் நிலைமைகளில் முன்னேற்றம் கண்டிருக்கின்றார்கள். ஆனால், முழுமையும் குணமடைவது அரிதாகவே இருக்கின்றது.

காக்கை வலிப்பு (Epilepsy) : காக்கை வலிப்பு அல்லது வலிப்பு நோய் எனப்படுவது உளப்பிணி வகையில் சேர்க்கப்படவேண்டிய கடுமையான உளப்பிணியன்று. ஆனால், இஃது ஒரு கடுமையான கோளாறு என்றே கருதப்படுகின்றது. இந் நோய் உடலுறுப்புக்குரிய அடிப்படையைக் கொண்டதாகும். காக்கை வலிப்பு நோயின் வகையை வலிப்பில் (Fit) காணலாம். நோயாளிக்கு நோயாளி குறிப்பிடத்தக்க ஓர் ஒற்றுமை நிகழ்ச்சி கொண்டிருப்பதைக் காணலாம். இந் நோய் திடீரென்று ஒருவரைத் தாக்குவதற்கு முன்பு அவரிடம் சில அறிகுறிகள் காணப்படுகின்றன. உள்ளூர ஏற்படும்ஒலி, திடீரென்று கிளப்பும் ஒலி, வாந்திஎடுத்தல் அல்லது அருவருப்பு உணர்ச்சி ஆகியவை அறிகுறிகளாகத் தோன்றும்.

சரியான திடீர்த் தாக்குதல் ஏற்படும்பொழுது நோயாளி விறைப்பாகிக் கீழே விழுகின்றான்; பிறகு தெளி உணர்நிலையை இழக்கின்றான். சில விநாடிகளுக்குப் பிறகு பலமாக ஆட்டங் கொடுக்கத் தொடங்குகின்றது. இது லயத்துடன் தசைநார் களின் சுருங்குதல்களையும், தளர்ச்சிகளையும் விரைவாக உண்டாக்கு கின்றது. வாயின் அசைவினால் உமிழ்நீர்க் கோழை வெளிப்படு கின்றது. பலமான உடலசைவு ஏற்படும்பொழுது நாக்கு பற்களுக் கிடையில் கடிக்கப்படுகின்றது. இந்த வகையான ஒரு வலிப்பு சிறிது நேரமே தங்குகின்றது. அதன் பிறகு நோயாளி சிறிது நேரம் புதை உணர்நிலையிலேயே இருக்கின்றான். இது போன்ற ஒரு திடீர்த் தாக்குதல் ஏற்பட்ட பிறகு நோயாளி களைப் பாகவும், உளச்சோர்வுடனும் காணப்படுகின்றான்.

காக்கை வலிப்பு நோய்களின் தாக்குதல்கள் செறிவிலும், அலைவெண்ணிலும் மிகவும் மாறுபடுகின்றன. மென்மையான தாக்குதல், வெறும் நடுங்குதல், சிறிது நேரப் புதையுணர்வு நிலை ஆகியவற்றோடு நின்றுவிடுகின்றது. அலைவெண்ணைப் பார்க்கும் போது, ஒருவருக்கு வாழ்க்கையில் ஒரு தடவை மட்டுமே தாக்குதல் ஏற்பட்டிருக்கலாம். வேறு சிலருக்கு ஒரு நாளில் பல முறைகள் தாக்குதல்கள் ஏற்படலாம். உச்ச நிலைகளையுடைய காக்கை வலிப்பு உளப்பிணியானது மயக்கவெறி, குழப்பம், மிகுந்த கிளர்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்தக்கூடியது. இந்த நிலையைச் சில காக்கை வலிப்பு நோயாளிகள் விருத்தி செய்துகொள்ளுகின் றார்கள். அவர்கள் மருத்துவ விடுதிக்குச் சென்று சிகிச்சை பெறுவதுதான் வழியாகும். காக்கை வலிப்பின் உறுப்புச் சார்பான அடிப்படையை அண்மைக்காலத்தில் தெளிவாக்கப் பட்டிருக்கின்றது. மின்மூளைமானி (Electro-encephalogram) என்ற கருவியைக் கண்டுபிடித்த பிறகு உறுப்புச் சார்பான உளப்பிணி களை அறிய வழி பிறந்தது. மூளையில் நடைபெறும் மின்சார நடவடிக்கையின் மாறுபாடுகளை இக் கருவி பதிவு செய்தது. இதை மூளையின் அலைகள் என்று கூறுகின்றனர்.

காக்கை வலிப்பு நோயாளிகளின் மூளை அலைகளைப் பதிவுசெய் யும் மின்மூளைமானி இயல்புநிலையிலுள்ள மனிதர்களின் மூளை அலைகளைப் பதிவுசெய்யும் மின்மூளைமானியினின்றும் வேறுபட்டது. நோயாளிகளுக்கு உபயோகப்படும் மின்மூளைமானி, காக்கை வலிப்பு நோயின் மூலமறிவதற்கு உபயோகமாகின்றது; நோயின் கடுமை, கோளாறு ஏற்படுகின்ற மூளையின் பகுதி ஆகியவற்றை அறிவதற்கும் பயன்படுகின்றது. ஆனால், மூளையில் நடைபெறு கின்ற மின்னியக்கத்தின் இயல்பு கடந்த நடவடிக்கையின் கார ணங்களைச் சரியாகக் கண்டறிய முடிவதில்லை.

கிடைத்துள்ள விவரங்களைக் கொண்டு சிலவற்றில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகளாக இருக்க முடியும் என்று ஊகிக்கின்றனர்; அவை மரபுநிலை, பிறப்பில் ஏற்பட்ட மூளைப்பழுது, நடுக்கம் ஆகியவற்றைக் குறிப்பிடுகின்றனர். ஆனால், காக்கை வலிப்புக்கு எந்த ஒரு குறிப்பிட்ட கூறுதான் காரணம் என்று கூற முடியாது. பல கூறுகள் காரணமாக இருக்கலாம் என்றும், அவை ஒரே முடிவுக்குத்தான் செல்லுகின்றன என்றும் கருதுகின்றார்கள்.

செயல்சார் உளப்பிணிகள்

செயல்சார் உளப்பிணிகள் என்று நாம் இங்கு விளக்கப் போகும் உளப்பிணிகள் உளவியல் காரணங்களினால் தோன்றுகின்ற உளப்பிணிகள் என்று முன்பே கண்டோம். ஆனால், உளப் பிணிகள் அனைத்திலும் இரு காரணக்கூறுகளும் இருக்கவே செய்கின்றன. என்றாலும், உளப்பிணிகளைச் சரியாக ஆராயும்பொருட்டுச் செய்யப்பட்ட வகைப்படுத்தல் சில அடிப்படைக் காரணங்களைக் கொண்டே செய்யப்பட்டிருக்கின்றன. அவ்வாறு வகைப் படுத்தப்பட்ட செயல்சார் உளப்பிணிகளில் பல பிணிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் தனித்தனியே ஆராய்ந்திருக்கின்றனர். பிறகு ஒரே குணப்பண்புகள் கொண்ட சில உளப்பிணிகளை ஒரு சிறு வகையில் அடக்கி வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பார்க்கும்போது செயல்சார் எல்லா உளப் பிணிகளும் மூன்று பெரும் பிரிவுகளில் அடங்குகின்றன. அவை கிளர்ச்சியும் சோர்வும் மாறிவரும் மனப்பிணிகள் (manic depressive psychosis), திரிபுணர்வு மனச்சிதைவு நிலைமைகள் (paranoid conditions), உணர்ச்சி விண்டநிலை அல்லது சிஸ்சபிரோனியா (schizophrenia) என்பவையாகும்.

கிளர்ச்சியும் உளச்சோர்வும் மாறிவரும் மனப்பிணிகள் : இந்தக் கிளர்ச்சி-சோர்வு மனப்பிணி உச்சநிலை மனவெழுச்சியின் கோளாறு என்று கருதப்படுகின்றது. இந்த நிலைமையினால் தாக்குண்ட மனிதன் ஒன்று கிளர்ச்சியூட்டப்பட்ட நிலைமையிலிருக்கின்றான்; அல்லது சோர்வுற்று பின் தள்ளப்பட்ட நிலைமையிலிருக்கின்றான். அண்மைக்காலம் வரையிலும் இந்த இரண்டு நிலைமைகளும் இரண்டு வேறு உளப்பிணிகளாகக் கருதப்பட்டு வந்தன. ஆனால், இந்த இரண்டு நிலைமைகளிலும் ஒரு பொதுத்தன்மை இருப்பதைக் கண்டு பிடித்த பிறகு இரண்டையும் ஒன்றாக்கி விட்டனர். இரண்டிலும் காணப்பட்ட ஒத்த குணம் என்னவென்றால், கிளர்ச்சியும் சோர்வும் மனவெழுச்சிக்குரலைப் பாதிக்கின்றன. தனி மனிதனின் நடவடிக்கை அளவையும் பாதிக்கின்றன. ஆனால், இந்த விளைவு எதிர்த் திக்குகளில்தான் நடைபெறுகின்றது.

இவ்விரண்டு நிலைமைகளிலும் அறிவுச்சார்பான செயல் முறைகள் இடர் தருகின்ற அளவில் தொந்தரவுக்கு இலக்காவ தில்லை. மேலும், டிமென்ஷியா எந்த அளவிலும் ஏற்படவில்லை. இந்த இரண்டு நிலைமைகளிலும் மற்றொரு குறிப்பிடத்தக்க குணம் என்னவென்றால், இவையிரண்டும் ஒரு மனிதனிடமே காணப்படு கின்றன. ஒரு மனிதன் ஒரு சமயத்தில் ஆழ்ந்த மனச்சோர்வைப் புலப்படுத்தலாம்; சில காலம், அதாவது ஓராண்டு சென்ற பின்பு கிளர்ச்சி நிலையை வெளிப்படுத்தலாம். இந்த இரண்டு நிலைமை களுக்கிடையில் இயல்நிலைகூட அந்த மனிதனிடம் காணப்படலாம் மேலும், ஒரு மனிதன் கிளர்ச்சி நிலையிலிருந்து உளச்சோர்வு நிலைக்கும், உளச்சோர்வு நிலையிலிருந்து கிளர்ச்சி நிலைக்கும் மாற வும் செய்யலாம்.

இந்த இரண்டு நிலைமைகளும் ஒரு மனிதனைப் பல முறைகள் தாக்கவும் செய்யலாம்; அல்லது ஒருமுறை தாக்கிவிட்டுச் சென்று விடலாம்; பிறகு தாக்காமலுமிருக்கலாம். பல நோயாளிகள் ஒரு முறை மட்டும் தாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த மனப்பிணி பெரும்பாலும் நடுத்தர வயதிலுள்ளவர் களைத்தான் பெரிதும் தாக்குகின்றது. மருத்துவ விடுதிகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இந்த வகை மனப்பிணியா ளர்கள் பெரும்பாலும் நாற்பதுக்கும் ஐம்பதுக்கும் இடைப்பட்ட வயதுடையவர்களாக இருந்திருக்கின்றார்கள். ஒரு முறை மட் டுமே தாக்கப்பட்ட நோயாளி வெகு விரைவில் குணமடைந்திருக் கின்றான். மேலும், இந்த நோயால் பீடிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் ஓராண்டுக் காலத்திற்குள் குணமடையலாம். சிகிச்சையில் குணமடைகின்ற காலம் நோயின் கடுமையைப் பொறுத்து நீண்டு செல்லலாம். பல முறைகள் இந் நோயினால் தாக்கப்பட்டவர்கள் குணமடைவதற்கு நீண்ட காலம் பிடிக் கின்றது.

கிளர்ச்சி நிலைமை (Manic State): மகிழ்ச்சியுடனிருக்கின்ற மனிதர்களை நாம் எங்கும் காணலாம். மகிழ்ச்சிக் காரணங்கள் பல இருக்கலாம். ஆனால், மென்மையான கிளர்ச்சியினால் தாக்கப் பட்ட ஒரு மனிதனிடம் காணப்படுகின்ற மகிழ்ச்சியைப்போன்று உலகத்தில் யாரிடத்திலும் அந்த மகிழ்ச்சியைக் காண முடியாது. அந்த மனிதன் மகிழ்ச்சியை அனுபவிக்கின்றான்; எதிலும் இன்பத்தையே காண்கின்றான்; புன்முறுவல் பூக்கின்றான்; மேலும், அவன் எல்லா வகையான நடவடிக்கைகளிலும் விரைவு படுத்தப்பட்டவனாகக் காணப்படுகின்றான்; வேகமாக நடக்

கின்றான்; விரைவாகப் பேசுகின்றான். அவன் சிந்தனைகூட அது சமயம் மிக வேகமாகச் செயல் புரிகின்றது.

ஆனால், தன்னுடைய விருப்பங்களை நிறைவு செய்துகொள்ளும் நடவடிக்கைகள் தடை செய்யப்படும்போது அவன் எரிச்சலும் கோபமும் கொள்ளுகின்றான். மேலும், அவனுடைய கவனம் மிகவும் கற்பனை மிகுந்ததாக இருக்கின்றது. ஆனால், அவன் தற்செயலாகத்தான் பேசவும் நடவடிக்கையில் ஈடுபடவும் செய்கின்றான்; இவற்றின்மூலம் தன்னுடைய இயல்பிறழ்ந்தமையை எளிதில் வெளிப்படுத்தி விடுகின்றான். கடுமையான கிளர்ச்சி ஏற்பட்டுள்ளபோது இந்த அறிகுறிகள் மிகைப்படுத்தப் படுகின்றன.

கடுமையான கிளர்ச்சி நிலை ஏற்பட்டுள்ளபோது நோயாளி இடைவிடாமல் அசைவில் ஈடுபடுகின்றான்; ஒலி கிளப்புகின்றான்; பாடுகின்றான். தவிர, அவன் அழிவு வேலைகளிலும் ஈடுபடலாம்; துணிமணிகளைக் கிழித்து எறிகின்றான்; தட்டுமுட்டுச் சாமான்களைப் போட்டு உடைக்கின்றான்; கடுமையான கிளர்ச்சி நிலையில் மிகவும் குறைவாகவே தூங்குகின்றான். அதனால் அவன் தொடர்ச்சியாக உடல் சக்தியைச் செலவழிக்கின்றான். இதனால் அவன் அமைதி குலைந்து குழப்பமடைகின்றான்; ஆனால், அடிக்கடி தன்னுடைய நிலைமையில் ஆச்சரியப்படும் வகையில் உள்நோக்குள்ளவனாக இருக்கின்றான். துன்புறுத்தல் திரிபுணர்வுகளும், மேன்மைத் திரிபுணர்வுகளும் காணப்படுகின்றன. சில சமயங்களில் விரைந்தோடி விடுகின்ற திரிபுணர்வும் காணப்படுகின்றது.

உளச்சோர்வுற்ற நிலைமை: உளச்சோர்வுற்ற நிலைமை மேலே நாம் கண்ட கிளர்ச்சி நிலைமைக்கு முற்றிலும் எதிரானதொன்றாகும். எல்லா நிலைகளிலும் உளச்சோர்வு, உளப்பிணிகள் மாறான நிலைமைகளையே வெளிப்படுத்துகின்றன. நோயாளி துயரத்தினால் பீடிக்கப்பட்டிருக்கின்றான்; வருத்தமும், சோர்வும் கொண்டு காணப்படுகின்றான். அவனுடைய போக்குவரத்து நடவடிக்கைகள் பேச்சு ஆகியவற்றிலும் மாற்றம் காணப்படுகின்றது. மென்மையான தன்மையில் உளச்சோர்வுற்ற பெரும்பாலான நோயாளிகள் தாங்கள் இயல்பு நிலையில் இல்லை என்பதைப் புரிந்துகொள்ளுகின்றார்கள். ஆனால், உளச்சோர்வுற்ற நோயாளிகளுக்கு உள்ள பெரும் ஆபத்து என்னவென்றால் தற்கொலையாகும்.

மருத்துவ விடுதியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட பல நோயாளிகள், தங்களைத் தாங்களே கொன்றுகொள்ளப் போவதாகப் பயமுறுத்தியிருக்கின்றார்கள்; அதற்கான முயற்சிகளும்

எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். புள்ளி விவரங்களிலிருந்து தெரிவதென்னவென்றால், இந்த நிலையிலுள்ள நோயாளிகள் மிக அதிகமான அளவுக்குத் தற்கொலைக்குத் தூண்டப்பட்டிருக்கின்றனர் என்பதாகும். சில உளச்சோர்வுற்ற நோயாளிகள் தீர்க்க முடியாத நோயினால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும், பாவத்தைச் செய்து விட்டதாகவும் திரிபுணர்வுகள் கொண்டிருந்திருக்கின்றார்கள். ஆனால், திரிபுணர்வுகள் பெரும்பாலான நோயாளிகளிடம் காணப்படுவதில்லை.

சிக்கு மனச்சோர்வு (Involution Melancholia) : உளச்சோர்வு உளப்பிணிகளில் ஒன்றென்று கருதப்பட்டது சிக்குமனச் சோர்வு மாகும். இது சிக்கலான காலத்தில் ஏற்படுகின்றது. பெரும்பாலும் பால்சுரப்பிகள் செயல்படாமல் நின்றுபோன காலத்தில் சிக்கு மனச்சோர்வு உண்டாகின்றது. இஃது இரண்டு பாலினருக்கும் பொருந்தும். இந்நோயின் அறிகுறிகள் எரிவுறுந்தன்மை, மனச்சோர்வு, கவலை, திரிபுணர்வுகள், தற்கொலை செய்துகொள்வதற்கான முயற்சிகள் ஆகியவையாகும். சாதாரண மனச்சோர்வுள்ள நோயாளிகளிடம் காணப்படுவதைச் சிக்கு மனச்சோர்வு நோயாளிகளிடம் கிளர்ச்சி அதிகமாகக் காணப்படும். இந்த மனக்கோளாறு உடற்கூற்றியல் கூறுகளையும் உளவியல் கூறுகளையும் பிணைத்துக்கொண்டிருக்கின்றது.

இந்நோய் சுரப்பிகளின் செயல்படு கோளாறுகளால் ஏற்படுவதால், சுரப்பிச் சாறுகளைக்கொண்டு செய்யப்படுகின்ற சிகிச்சை முன்னேற்றத்தையளிக்கின்றது என்று நம்புகின்றார்கள். மேலும், உளவியல் சம்பந்தப்பட்ட சிகிச்சைகளும் அதே முன்னேற்றத்தை அளிக்கின்றன. நடுத்தர வயதிலுள்ள ஒரு பெண் தன்னுடைய குழந்தைகள் வளர்ந்துவிட்டார்கள்; ஆகவே, அவர்களுக்கு அவளுடைய கவனிப்புத் தேவையில்லை என்று நம்புகின்றாள். ஒரு மனிதன் தன்னுடைய வேலையை இனிமேலும் தொடர்ந்து செய்ய வேண்டியதில்லை என்று நம்புகின்றான். இயல்பு நிலையிலுள்ள எல்லா மனிதர்களும் இப்படிப்பட்ட நிலைமைகளைக் கடந்து செல்லும்பொழுது மனச்சோர்வுகளை உணர்ந்திருக்கின்றார்கள். இந்த வகையான நிலைமைகளில் சுரப்பி செயல்படும் காரணங்களும் பொருத்தப்பாட்டுக் காரணங்களும் தற்செயலாக ஒன்றிருந்து இந்த உளப்பிணியை உண்டாக்குகின்றன.

கிளர்ச்சிமனச்சோர்வு உளப்பிணிக் கோட்பாடுகள் : மனக்கோளாறுகளுக்கு எத்தனையோ உடற்கூற்றியல் கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்தக் கோட்பாடுகளின்படி நடத்தப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் எதிர்மறையாகவே

இருக்கின்றன. குறிப்பாக கிளர்ச்சி-மனச்சோர்வு உளப்பிணிகளின் காரணங்களை அறிவதில் தெளிவான விளக்கம் பெற முடியவில்லை. உயிர்ப்பொருள் மாறுபாடு, சுரப்பிக் கோளாறுகள், மூளையின் அமைப்பு மாற்றங்கள் ஆகியவை கிளர்ச்சி-மனச்சோர்வு உளப்பிணிகளோடு தொடர்பு கொண்டிருக்கின்றன என்பதை உறுதியாக நிலைநாட்ட முடியவில்லை. ஆனால், இக் காரணத்தினாலேயே உளப்பிணிகள் உடற்கூறு காரணங்களினால் ஏற்படவில்லை என்று கூறிவிட முடியாது. இதைப் பரிசோதித்துப் பார்த்துக் கண்டறியக்கூடிய சரியான கருவிகள், சோதனைகள் இல்லை என்று வேண்டுமானால் கூறலாம்.

உளவியல் கோட்பாடுகள் கிளர்ச்சி-மனச்சோர்வு பற்றிக் கூறுவது என்னவெனில், கிளர்ச்சி-மனச்சோர்வு நோயாளிகள் அந் நோயினால் தாக்கப்படுவதற்கு முன்பு ஒரு வகையான ஆளுமையை வெளிப்படுத்துகின்றனர் என்பதாகும். இயல்பு நிலையில் உள்ளவர்களிடம் கூட உளச்சோர்வு ஏற்படும்போது ஆளுமைக் கூற்றில் மாற்றங்களிருப்பதாகக் கோட்பாடுகள் காட்டுகின்றன. உதாரணமாக, நெறிமாற்றந்தன்மையுள்ள ஆளுமையின் (cyclothymic personality) உணர்ச்சித் தன்மை மேலும் கீழும் ஏறி இறங்குகின்றது. மனவெழுச்சி எதிர்வினைகளில் உறுதியின்மை காணப்படுகின்றது. வெற்றியை எதிர்நோக்கும்பொழுது எழுச்சியும், துன்பங்களை எதிர்நோக்கும்பொழுது உளச்சோர்வு மிகுதியும் கொள்ளுகின்றனர். நெறிமாற்றப் பண்புள்ள மனிதன் விட்டுக்கொடுக்கும் போக்கைக் கற்றுக்கொள்ளவில்லை. அதனால் எல்லா நிலைமைகளையும் ஒன்று நல்லவையாகக் காண்கின்றான் அல்லது கெட்டவையாகக் காண்கின்றான்.

இவ்வாறான பண்புக்கூறு ஒரு மனிதனிடம் காணப்படுவதற்குக் காரணம், குழவிப்பருவத்திலும் குழந்தைப் பருவத்திலும் ஏதோ ஒரு வகையான பழக்கம் அமைந்து விட்டதன் விளைவு என்பதாகக் கூறுகின்றனர். அந்தப் பழக்கம் அவனுடைய பிற்கால வாழ்க்கையில் அவனை உளப்பிணிக்கு நடத்திச் செல்லுகின்றது. ஆனால், கிளர்ச்சி-மனச்சோர்வு மனப்பிணிகளின் காரணக் கோட்பாடுகள் இன்னும் நடைபெறவிருக்கின்ற ஆராய்ச்சி முடிவுகளைக் கொண்டுதான் சரியாக வரையறுக்கப்பட வேண்டும்.

திரிபுணர்வு மனச்சிதைவு நிலைமைகள்: பல மனக்கோளாறுகளில் திரிபுணர்வுகளின் இயல்புகள் மிக முக்கிய கூறுகளாகக் கருதப்படுகின்றன. உளப்பிணிகளின் அறிகுறிகளில் திரிபுணர்வுகள் முக்கிய அறிகுறிகளாகக் காணப்படுவதால், உளப்பிணி

களைப்பற்றி ஆராய்கின்றபோது திரிபுணர்வுகளைப்பற்றியும் நாம் சரியான விளக்கம் காண முடியும். சில காலத்திற்கு முன்பு கருத்துத்திரிபு நிலையைத் (paranoia) திரிபுணர்வுகளின் பண்புக்கூறு என்று கொண்டு எல்லா வகையான கோளாறுகளுக்கும் பயன்படுத்தி வந்தார்கள். ஆனால், இப்பொழுது மனக்கோளாறுகளை இந்த வகையில் மூலமறிவது கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது.

கலப்பற்ற கருத்துத் திரிபுநிலையடைந்த திரிபுணர்வு நோயாளிகள் எல்லாம் ஒழுங்கான திரிபுணர்வுகள் கொண்டவர்களாகவே இருக்கின்றனர். ஆனால், அவர்களிடம் டிமென்ஷியா, அமைதிக்குலைவு, குழப்பம், மட்டுமிஞ்சிய மனவெழுச்சி ஆகியவை காணப்படவில்லை. மேலும், பெரும்பாலான கருத்துத் திரிபுநிலை நோயாளிகள் எல்லாம் உளநோய் மருத்துவமனைகளில் இல்லை. திரிபுணர்வு நிலை ஒன்றைத் தவிர, மற்ற வகைகளில் அவர்கள் இயல்பு நிலை மனிதர்களைப் போலவே இருக்கின்றார்கள்; பல்வேறு வகையாகப் பல பெயர்களில் கருத்துத் திரிபுநிலையைக் குறித்துள்ளார்கள்.

உதாரணமாக, சமயக் கருத்துத் திரிபுநிலைத் திரிபுணர்வால் (religious paranoia) வருந்துகின்ற நோயாளி, தான் தெய்விக அருள் பெற்றவன் என்றும், புதியதொரு சமயத்தைத் தோற்றுவிக்க வந்துள்ளதாகவும் நம்புகின்றான். உண்மையிலேயே பல சமயக் கருத்துத் திரிபுநிலைத் திரிபுணர்வு நோயாளிகள் தங்களால் கவரப்பட்ட ஒரு கூட்டத்தை வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களும் ஒரு வகையான சமய வழிபாட்டு முறையை நிலைநாட்டிக் கொண்டிருக்கின்றார்கள்; அவர் கடவுளின் அவதாரம் என்று அவருடைய பக்தர்கள் பலரிடையே சென்று பிரச்சாரமும் செய்கின்றார்கள்; மேலும், இந்த நோயாளிகள் பலரைத் திகைக்கச் செய்யும் வழியில் நிகழ்ச்சிகளையும் செய்கின்றார்கள்.

புதுமை கண்டுபிடிக்கும் கருத்துத் திரிபுநிலைத் திரிபுணர்வும் முன்பு கூறிய நிலை போன்றதேயாகும். இந்த நோயாளிகள், தாங்கள் பெரும் பெரும் சாதனங்களைக் கண்டுபிடித்திருப்பதாக நம்புகின்றார்கள். அதற்கான சில விவரங்களைக்கூட இவர்கள் சேகரித்து வைத்துள்ளார்கள். அவர்கள் அவற்றைக் கொண்டு விளக்கம் செய்கின்றபோது, அஃது உண்மையாக இருக்கலாம் என்ற எண்ணத்தையும் சிலரிடம் தோற்றுவிக்கின்றது.

சமூகத்தில் சிலர் ஓயாது வழக்காடுகின்றவர்களாக இருக்கின்றனர். அவர்கள் எப்பொழுது பார்த்தாலும் சட்டம், வழக்கு மன்றம், விவாதம் போன்றவற்றையே எப்பொழுது

பார்த்தாலும் பேசிக் கொண்டிருப்பார்கள் அப்படிப்பட்ட வர்களை ஓயாது வழக்காடும் கருத்துத் திரிபுநிலைத் திரிபுணர்வு நோயாளிகள் என்று கருதுகின்றனர். இவர்கள் முடிவில்லாத வழக்குகளைப் போட்டுக் கொண்டிருப்பார்கள். இந்த நிலைமை களினடியில் வேறுபட்ட படித்தரங்களில் துன்புறுத்தல் திரிபுணர்வு களும் சிறப்புத் திரிபுணர்வுகளும் காணப்படுகின்றன. ஆனால், கலப்பற்ற கருத்துத் திரிபுநிலை திரிபுணர்வுகளை அவ்வளவு பொது வாகக் காண முடியாது.

இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களின் நடத்தை எவ்வாறு இருக்கும் என்பதை விளக்க ஒரு நிகழ்ச்சி வரலாற்றைக் காண் போம். வில்லியம் ஒரு கல்லூரி மாணவன்; இறுதியாண்டில் படித் துக்கொண்டிருந்தான். இவனிடம் திரிபுணர்வுகள் வளர்ச்சி யடைந்தன. இவன் அவ்வளவு பெரிய புத்திசாலி இல்லை என்று லும் மிகவும் அடக்கமாகவும், கவனமாகப் படிப்பவனுகவுமிருந்து வந்தான். மேலும், இவன் ஒரு சிறந்த போட்டி விளையாட்டு வீரனுக இருந்து வந்தான். இவனுக்கென்று சில நண்பர்கள் இருந்தார்கள். ஆனால் மற்றவர்கள்மீதெல்லாம் சந்தேகம் கொள்ளச் செய்தான். இவனுடைய சகோதரன் படிப்பிலும் விளையாட்டிலும் இவனை மிஞ்சி வந்தான். அதனால் இவனுடைய கல்லூரி வாழ்க்கை ஏமாற்றமாக இருந்து வந்தது. நல்ல உடல் நலத்துடன்தான் இருந்தான் என்றாலும், உடல் நலம் சரியில்லை என்று கூறத் தொடங்கினன்.

இறுதியில் தன்னுடைய உள்ளக்கிடக்கையை வெளியிட்டான்; தான் உடல்நலமில்லாமல் போனதற்குக் காரணம், தான் நஞ்சூட் டப்பட்டு விட்டதால் என்றான்; தன்னுடைய உடன்பிறப்பாளர் களும் மற்றையோரும் சேர்ந்து உணவில் நஞ்சு கலந்து விட் டார்கள். விடுதியில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்பொழுது அவர்கள் பின்னல் நின்று கொண்டிருந்தார்கள். பரிமாறுவோ னிடம் இரகசியத் தொடர்பு கொண்டு, தனக்குக் கொடுக்கின்ற உணவில் நஞ்சைக் கலக்கும்படிச் செய்தார்கள் என்று கூறினன்.

இவ்வாறு துன்புறுத்துகிறவர்களிடமிருந்து தப்பும்பொருட்டுத் தூரத்திலுள்ள ஒரு நகரத்திற்கு ஓடிப்போய்விட்டான். அங்கு அவனுடைய அரைக்கிறுக்கான நடத்தை மற்றையோரின் கவனத் தைக் கவர்ந்ததால் மருத்துவ விடுதிக்கு அனுப்பப்பட்டான். மருத்துவ விடுதிக்குச் சென்ற பிறகு அவன் சிறப்புத் திரிபுணர் வுகளை வளர்த்துக் கொண்டான். அதனுடைய விளைவு, தான் எல்லாக் காலத்திலும் இணையற்ற விளையாட்டுவீரன் என்றும், தன்

னுடைய புகழ் பரவுவதைப் பொறுக்காத உடன்பிறப்பாளர்கள் தனக்கு நஞ்சிட்டுச் சிறையிலடைத்து விட்டார்கள் என்றும் மருத்துவ விடுதியில் கூறிக்கொண்டிருந்தான்.

இந்த நிகழ்ச்சி வரலாற்றில் நோயாளியின் திரிபுணர்வுகளை உளவியல் முறைப்படிப் பகுத்துக் காண்பதற்கு வாய்ப்புள்ளது. முதலில் நோயாளியிடம் காணப்பட்டது, நீண்ட நாளாக இருந்து வந்த உருத்திரிந்த சிந்தனை மனப்பாங்காகும். இதனால் நோயாளி மற்றவர்களைச் சந்தேகித்தான்; தன்னுடைய குறைபாடுகளுக்கு மற்றவர்களைக் குற்றம் சாட்டினன். இது நோயாளி வளர்த்துக் கொண்ட தற்காப்பு வழி முறையாகும். இதன்மூலம் இவன் மனநிறைவு கொண்டான்; இவ் வகையாக நீண்ட நாள்களாகத் திரிபுணர்வு மனச் சிதைவு நோயாளியாக இருக்கக் கற்றுக் கொண்டு வந்தான். அடுத்தபடியாக இந்த நிலையை விரைவு படுத்தும் கூறுகள் தோன்றின. நோய்வாய்ப்பட்டிருப்பதாக உணர்ந்தான்; துன்புற்றுக் குழப்பமான சிந்தனையில் காணப் பட்டான். இஃது உடற்கூறு சார்பான காரணமாகத் தெரிகின்றது. ஆனால், நல்ல திடமான உடல் நலத்துடனிருந்தவன் உடல் நலமின்மையாக ஏன் உணர வேண்டும்?

நோயாளி நெடு நாள்களாக மற்றவர்களைக் குறை கூறி வந்தான். அந்தப் பழக்கத்தினால் ஏற்பட்ட சிந்தனை நஞ்சுபற்றிய சிந்தனையைத் தோற்றுவித்தது. இந்தச் சிந்தனை முதலில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றாலும், பிறகு அது மனநிறைவைத் தரும் விளக்கமாகத் தெரிந்ததால் ஏற்றுக்கொண்டுவிட்டான். இது மேலும் ஏற்பட்ட குழப்பத்தினால் ஊக்குவிக்கப்பட்டது. இது துன்புறுத்தல் திரிபுணர்வைத் தோற்றுவித்தது. இந்த நிலையை நிலைநாட்டிக்கொள்ளுவதற்குப் போதுமான பகுத்தறிவுச் சான்றுகளை நோயாளி வைத்திருந்தான். பெரிய மனிதர்கள் எல்லாம் துன்புறுத்தப்பட்டிருக்கின்றார்கள் என்பது நோயாளி கூறும் சான்று. இவ்வாறு காணும்போது திரிபுணர்வுகள் பொருத்தப்பாடுகளாகச் செயல் புரிகின்றன. தன்னைத்தானே நிறைவுபடுத்திக்கொள்ளுவதற்கு ஏற்றதோர் அறிவு விளக்கத்தைப் பெறுகின்றான்.

உணர்ச்சி விண்ட நிலை அல்லது சிஸ்சபிரோனியா: உளப் பிணிகள் பலவற்றிலுள்ளும் மிக அதிகமாக நடைமுறையிலுள்ள வகை சிஸ்சபிரோனியா அல்லது டிமென்ஷியா பிரிகாக்ஸ் (Schizophrenia or Dementia Praecox) என்பதாகும். இஃது உணர்ச்சி விண்ட நிலை என்று தமிழில் கூறப்படுகின்றது. இந்தக் கருத்துச்

சொற்கள் உளப்பிணியின் இரண்டு முக்கிய அறிகுறிகளைக் குறிப்பிடுகின்றன. சிஸ்சபிரேனியா என்ற சொல்லுக்குப் பொருள் உடைந்து சிதறிய மனம் என்று கூறப்படுகின்றது; ஆளுமைப் பண்புக்கூறு ஏற்பட்ட பொருத்தப்பாட்டைக் குறிக்கின்றது. நுண்ணறிவு மோசமடைந்து செல்லுவதை டிமென்ஷியா பிரீகாக்ஸ் குறிப்பிடுகின்றது. இது சில நிகழ்ச்சி வரலாறுகளில் ஏற்படுகின்றது. டிமென்ஷியாவானது அளவுக்குமீறிய அறிவுடையதாக இருக்கின்றது. இஃது இளம் வயதிலேயே ஏற்படத் தொடங்குகின்றது. எனவே, இது கிழப்பருவ டிமென்ஷியாவிடமிருந்து வேறுபடுகின்றது. எனவே, டியென்ஷியா பிரிகாக்ஸ் இளமைப்பருவத்து உளப்பிணியாகும். ஆனல், சில நிகழ்ச்சி வரலாறுகளில் வயது ஏற்ற இறக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது; பத்து வயது முதல் எழுபது வயது வரையிலுங்கூடச் செல்லுகின்றது. ஆனல், அதிக எண்ணிக்கையுள்ள நிகழ்ச்சி வரலாறுகள் இருபது வயது முதல் முப்பது வயதுக்குள் காணப்படுகின்றன. நாள்கள் செல்லச் செல்ல இந்த நோயின் செறிவு நிலை அதிகரித்துச் செல்லுகின்றது.

சிஸ்சபிரேனியாவினல் வருந்தும் நோயாளிகள் பல பொதுப் பண்புக்கூறுகளைக் கொண்டவர்களாக இருக்கின்றனர்கள். அவற்றில் மிகவும் குறிப்பிடத் தக்கது, மனவெழுச்சி உணர்ச்சியற்றிருக்கும் அறிகுறியாகும். இயல்பு நிலையிலுள்ள மனிதர்களின் உணர்ச்சியைக் கலக்குகின்ற நிகழ்ச்சிகளுக்குக்கூட இந்த நோயாளிகள் துலங்குவதில்லை. இந்த நோயாளி தன்னுடைய குடும்பம், தொழில், நண்பர்கள் முதலியவையினிடத்திலும் பாராமுகமாக இருக்கின்றான்; மேலும், தன்னுடைய சொந்த நலத்தில்கூட அக்கரை காட்டுவதில்லை. எனவே, அவன் அழுக்குப் படிந்தும் காணப்படுகின்றான்.

இந்த நோயாளிகளின் அறிகுறிகள், அவர்கள் ஒருமைப்பாட்டை இழந்தவர்கள் என்று காட்டுகின்றன. ஒரு காரணமுமின்றி அவர்கள் சிரிக்கின்றனர்கள். ஆனல், எந்த விதமான உணர்வெழுச்சியையும் அவர்கள் வெளிக்காட்டுவதில்லை. எனவே, அவர்களுடைய எதிர்வினைகள் எல்லாம் உண்மை உலக அனுபவங்களிலிருந்து விலகியிருக்கின்றன. பெரும்பாலான நிகழ்ச்சி வரலாறுகளில் திரிபுணர்வுகளும் பொய்த் தோற்றங்களும் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. சிஸ்சபிரேனியாவை நான்கு வகைகளாகப் பிரித்திருக்கின்றனர்கள். அவற்றினிடையே பொது அறிகுறிகள் காணப்படுகின்றன. சில தனிப்பட்ட அறிகுறிகளும் உண்டு. இந்த நான்கு வகைகள் மட்டுமன்றி இவற்றிற்கிடைப்பட்ட வகை

களும் பல இருக்கின்றன. மேலும், இவை ஒன்ருேடு ஒன்று கலந்தும் காணப்படலாம்.

எளிய சிஸ்சபிரோனியா (உணர்ச்சி விண்ட நிலை) : சிஸ்சபிரோனியா நோயினுல் வருந்தும் சில நோயாளிகளிடம் உணர்ச்சியின்மை, பாராமுகம், அமைதிக் குலைவு ஆகிய அறிகுறிகளைக் காணலாம். வேறு குறிப்பிடத்தக்க அறிகுறிகள் அவர்களிடம் எதுவும் காண முடியாது. இஃது எளிய அமைப்பைக்கொண்ட கோளாறு என்று கருதப்படுகின்றது. ஆனுல், இதன் தோற்றம் படிப்படியாகத்தான் ஏற்படுகின்றது. இந்த நோயினுல் ஏற்படுகின்ற எந்த மாற்றத்தையும் அது சற்று வளர்ந்த பிறகுதான் காண முடியும். ஓர் இளைஞன் எந்த வகையான ஆசையுமின்றிக் காணப்படலாம்; எல்லாப் பொருள்களிடத்தும் ஒரு பாராமுகம். இவன் பள்ளியிலாகட்டும், வேலையிலாகட்டும் மிகவும் மோசமாகவே இருக்கக் காணப்படுவான். இவன் வீட்டில் உட்கார்ந்து கொண்டு மற்றவர்களுடைய தொடர்பை உதறித் தள்ளிவிடுகின்ருன். இவன் சோம்பேறித்தனமாகக் கழிந்த நேரமெல்லாம் இனிமையான பகற்கனவு காணுவதிலேயே கழிக்கப்பட்டிருக்கின்றது. மனவெழுச்சி சம்பந்தமானதும் அறிவுச் சார்பானதுமான மோசமான நிலைமைகள் பிறகு தோன்றலாம். இந்த நோயாளிகள் பெரும்பாலும் வீடுகளிலேயே கவனிக்கப்பட்டு விடுவதால், மனநோய் மருத்துவ விடுதிகளில் அதிகமாக இந்த நோயாளிகளைக் காண முடியவில்லை.

சிறுபிள்ளை மனங்கொண்ட சிஸ்சபிரோனியா (Hebephrenic Schizophrenia) : இந்த வகையான சிஸ்சபிரோனியா அதனுடைய பொருளைச் சரியாக விளக்குவதில்லை. நோயாளி அசட்டுத்தனமாக நடந்துகொண்டு வேண்டிய உணர்ச்சியை வெளிப்படுத்தாமலிருக்கலாம். ஆனுல், சிஸ்சபிரோனிய வகைகளில் இந்த வகைதான் மிகவும் விரிவான வகை என்று நம்பப்படுகின்றது. இந்நோய் திடீரென்று தோன்றக்கூடும்; மேலும், மிகுந்த அளவுக்கு ஒருமைப்பாடிழந்தும் காணப்படும். மிகவும் குறிப்பிடத்தக்க குணப்பண்பு சிறுபிள்ளைத்தனமாகும். பேச்சில் தொடர்ச்சியின்மையும், நடத்தையில் பொருத்தமின்மையும் வெகுவாகக் காணப்படும். மேலும், பொய்த்தோற்றங்கள் மிகச் சாதாரணமான அறிகுறியாகும். ஆனுல் திரிபுணர்வுகள் மாறக்கூடியவையாகவும் செறிவின்றியும் காணப்படுகின்றன.

இந்த வகையைச் சேர்ந்த நோயாளியின் நடத்தையை விவரித்தோமானுல், நோயின் குணங்கள் நன்கு புலனுகும். ஹெலன் என்ற பெண் பத்தொன்பது வயது நிரம்பப் பெற்றவள்.

அவளுடைய பள்ளிக்கூட வாழ்க்கை அவ்வளவு வெற்றிகரமாக இல்லை. அவள் ஒன்பதாவது வகுப்புதான் முடித்திருந்தாள். அவள் தன்னுடைய தாயாருடன் கோபித்துக் கொண்டு, தன்னுடைய மணமான சகோதரியுடன் தங்கியிருந்தாள். சில நாள்களுக்குப் பிறகு அவள் சகோதரியுடன் கோபித்துக் கொண்டு தாயார் வீட்டுக்கே திரும்பிச் சென்றுள்.

அவளுடைய உரையாடலில் மடமைத்தனம் மிகுந்து வருவதைக் கண்டனர். பல சமயங்களில் மிகுந்த ஒலியுடன் கத்தினுள்; தன்னுடைய படுக்கைக்குக் கீழே ஒரு மனிதன் படுத்திருக்கின்றுன் என்று கூறினுள். மற்றொரு சமயம் யாரோ ஒருவனுல் துரத்தப் படுவது போன்ற நடத்தையை அவள் வெளிப்படுத்தினுள். இஃது அவள் பொய்த்தோற்றங்களைக் காண்கின்றுள் என்பதைக் காட்டிற்று. இறுதியில் அவள் சத்தம் போட்டு அழுது பிதற்றிக் கொண்டு தன்னுடைய தந்தையையும் தன்னையும் கொல்லப் போவதாகப் பயமுறுத்தினுள். பிறகு அவள் மருத்துவ விடுதிக்கு அனுப்பப்பட்டாள். அவளைப் பரிசோதித்துப் பார்த்தவர்கள், அவள் முற்றிலும் நிலைகுலைந்து போய்விட்டாள் என்று கூறினுர்கள்.

அவளிடம் கேட்கப்பட்ட விஞக்களுக்கு அவள் பொருத்தமற்ற விடைகளை அளித்தாள். அவள் பரவலாகச் சில பொய்த்தோற்றங்களைப் பார்த்து வந்தாள். யாரோ ஒருவனுல் தான் துரத்தப் படுவதாகச் சொல்லி, மருத்துவரை அழைத்தாள்; அது சமயம் தனக்கு முதலில் அறிமுகமான ஒருவரின் பெயரைச் சொல்லி மருத்துவரை அழைத்தாள். அவள் அளவுக்கு மிஞ்சிய நடவடிக்கையுடையவளாக இருந்தாள்; மேலும், அழிவு வேலைகளிலும் ஈடுபட்டாள்; தன்னுடைய உடைகளைக் கிழித்து எறிந்தாள்; அறையிலிருந்த தட்டுமுட்டுப் பொருள்களைப் போட்டு உடைத்தாள்; தரையில் படுத்து உருண்டாள்; அது சமயம் தன்னுடைய கைகளைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். அடிக்கடி அவள் சிறிது நேரம் சிரித்தாள்; மற்றச் சமயங்களில் கத்தினுள். அவளுடன் தொடர்ச்சியான உரையாடல் கொள்ள முடிவதில்லை. இப் பெண் சிறுபிள்ளை மனங்கொண்ட சிஸ்சபிரேனியாவினுல் வருந்தினுள் என்றுலும், புதிய அறிகுறிகளையும் வெளிப்படுத்தினுள்.

தன்னியக்கு நிலை சிஸ்சபிரேனியா (Cotatonic Schizophrenia: இந்த வகையான சிஸ்சபிரேனியா கிளர்ச்சி சம்பந்தப்பட்டதாகும். இந்த நோய் இரண்டு வகைகளாக அறியப்படுகின்றது. தன்னியக்கு நிலை உணர்ச்சியிழத்தல் என்றும், தன்னியக்கு நிலை

கிளர்ச்சியடைதல் என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந் நோயின் குறிப்பிடத்தக்க பண்புக்கூறு ஒருபடி வார்ப்பாகும். இது நிற்கும் நிலை, அசைவு ஆகியவற்றில் பிடிவாதமாக நிற்கின்றது.

இந்த வகையான நோயின் தோற்றம் மற்ற வகைகளைப் போன்றதேயாகும்; ஆனால் படிப்படியாகத் தோன்றுகின்றது. இது முற்றும் வளர்ச்சியடைய பல ஆண்டுகள் பிடிக்கின்றது. இந்த வகையான நோயாளிகள் ஒன்று உணர்ச்சியிழத்தல் அல்லது கிளர்ச்சியடைதல் என்ற இரண்டு நிலைகளில் ஒன்றுக்கு உட்படு கின்றனர். டேனியல் என்பவன் நன்கு படித்த இளைஞன். அவன் உளப்பிணிக்கு முப்பத்தொன்றாவது வயதில் ஆளானான். ஆனால், இந் நோய் அவனைப் பிடிப்பதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பு அவன் கூச்சமுள்ளவனாகவும், நினைவு தவறக் கூடியவனாகவு மிருந் தான். அவன் ஏதேனும் ஓர் இடத்திற்குப் புறப்பட்டால் அந்த இடத்தை மறந்து விடுவான்; சில சமயங்களில் புதிய மனிதர் களைத் தன்னுடைய நண்பர்களாக நினைத்து நடத்தினான். மேலும், அவர்களிடம் என்ன பேசினான் என்பதே அவனுக்குத் தெரியாது.

அவன் மனநோய் மருத்துவ விடுதியில் சேர்க்கப்படுவதற்கு முன்பு தன்னுடைய வேலையை விட்டுவிட்டான்; பிறகு ஊக்க மிழந்தான்; முழுக்க முழுக்க நினைவிழந்தான். அவனுக்கு எதிலும் பொறுப்புணர்ச்சி இல்லை. எல்லாவற்றிற்கும் தன்னுடைய மனை வியையே நம்பியிருந்தான். அவன் நஞ்சு வாங்கி வந்தான்; ஆனால், தற்கொலைக்கு அதை உபயோகிக்கவில்லை. திரிபுணர்வுகள் அவ்வளவாக அவனிடம் காணப்படவில்லை. ஆனால், ஒரு முறை மட்டும் அவனுடைய மாமியார் தனக்கு நஞ்சு இட்டதாகக் கூறினான்; மருத்துவ விடுதியில் எதிலும் கவனம் செலுத்தவில்லை; பெரும்பாலான நேரத்தைப் படுக்கையிலேயே கழித்தான். தன் னுடைய தேவைகளையும் அவன் நிறைவேற்றிக் கொள்ளவில்லை. நாளுக்கு நாள் அவனுடைய நடத்தையில் மாற்றங்கள் ஏற்பட் டன. ஒரு சமயம் தன்னுடைய நினைவை வெளிப்படுத்தும் பொருட்டுக் கடந்தகால நிகழ்ச்சிகளையும் அண்மைக்கால நிகழ்ச்சி களையும்பற்றி அதிகமாகப் பேசினான்; படிப்படியாக அவன் மிக மோசமான நிலையை அடைந்தான். பல மாதங்களுக்கு அவன் ஒன்றுமே பேசவில்லை.

சில சமயங்களில் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு, குனிந்து மணிக்கணக்காகத் தரையை நோக்கிக்கொண்டிருப்பான். அவன் வைக்கப்பட்ட நிலையிலேயே நீண்ட நேரம் இருந்துகொண்டு குழைவான இணக்கத்தை வெளிப்படுத்தினான். மருத்துவ விடுதி

யில் அனுமதிக்கப்பட்டு ஓராண்டான பிறகு மெட்ரசோல் (Metrazol) என்ற மருந்தை உடலில் ஊசிமூலம் செலுத்திச் சிகிச்சையளித்தனர். அவன் மிகவும் தெளிவு பெற்றான்; வினாக்களுக்கு விடையளித்தான்; நன்றாகக் காணப்பட்டான்; இயல்நிலையிலுள்ளவர்களைப் போலிருந்தான். எவ்வாறிருப்பினும், அவன் பழைய நிலைக்கே திரும்பிச் சென்றுகொண்டிருந்தான். ஆனால், அவன் மௌனமாக இருந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திக் கூறினான்.

ஆனால், இந் நோய் சில சமயங்களில் அடுத்த இறுதிநிலைக்குச் செல்லுகின்றது. அது சுறுசுறுப்பான இயக்க நடத்தையில் காணப்படுகின்றது. ஆனாலும் மனவெழுச்சியோ, உணர்ச்சியோ இல்லாமலிருக்கின்றது. இந் நோயாளி தட்டுமுட்டுப் பொருள்களைத் தூக்கி எறிகின்றான்; மற்றவர்களைத் தாக்குகின்றான்; மிகுந்த ஒலியுடன் கத்துகின்றான். அவன் மேலும் கீழும் பல மணி நேரம் நடந்துகொண்டிருக்கின்றான்; நம்பத்தகாத வகையான சைகைகளைத் திரும்பத் திரும்பச் செய்துகொண்டிருக்கின்றான். இந்த நோயாளி உணர்ச்சியிழக்காமல் சுறுசுறுப்பாகக் காணப்பட்டாலும் அடிக்கடி பின்வாங்கிக் கொள்ளுகின்றான். அவனுடைய நடத்தை தன்னியக்கமுடையது; சூழ்நிலைக்குத் துலங்குவதாக இல்லை. எனவே, இப்படிப்பட்ட நோயாளிகள் தன்னியக்க நிலைக் குழுவில் சேர்க்கப்படுகின்றார்கள்.

திரிபுணர்வு மனச்சிதைவு சிஸ்சபிரோனியா (Paranoid Schizophrenia): சிஸ்சபிரோனியாவின் வகைகளில் திரிபுணர்வு மனச்சிதைவுதான் மிகப் பொதுவான நோயாகும். சாதாரண நிலைமைகளில் இதைக் குணப்படுத்துவதும் கடினம். மனநோய் மருத்துவ விடுதிகளில் சிகிச்சையளிக்கப்பட்டாலும் முழுக் குணம் காண்பது எளிதன்று. இதனுடைய அறிகுறிகள் ஒருமைப்பாடழிதல், உணர்ச்சியற்றிருத்தல், பின்வாங்கிக் கொள்ளல் ஆகியவையாகும். மேலும், திரிபுணர்வுகளின் குணப்பண்புகளும் காணப்படலாம்.

செயல்சார் உளப்பிணிகளுக்கான சிகிச்சை முறைகள்

உளப்பிணிகளுக்குச் சிகிச்சையளிக்கும்பொருட்டு உளநோய் மருத்துவமனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அந்த மருத்துவமனைகளில் முக்கியமாகக் கருதப்பட்டது நோயாளிகளைக் கவனிப்பது தான். சிறந்த முறையில் அவர்களின்மீது கவனம் செலுத்துவது சிகிச்சையளிப்பதைவிடவும் நல்ல முறையில் பயனளிக்கும் என்று நம்பப்படுகின்றது. இந்தக் கவனிப்பு முறை உளப்பிணி

நோயாளிகளுக்குமட்டும் பொருந்துவதன்று. உடல் நோயுற்ற வர்களுக்கும் இது பொருந்தும். கவனிப்பு முறையில் நோயாளிக்கு மன நிறைவும் நல்ல நம்பிக்கையும் ஏற்படுமானல், நோய் நிலையின் கடுமை குறையும் என்பது நம்பிக்கை. எனவே, அண்மைக்காலம் வரையிலும் கவனிப்பில்தான் உளநோய் மருத்துவமனைகள் கவனம் செலுத்தி வந்தன.

நோயாளிகள் நல்ல ஓய்வு தரப்பட்டார்கள். மிகுந்த கிளர்ச்சி அவர்களிடம் காணப்படுமானல், மருந்து கொடுத்து அவர்கள் சாந்தப்படுத்தப்பட்டார்கள். அமைதிக்கும், தூண்டப்படு வதற்கும் குளிர்நீர், வெந்நீர்க் குளிப்புகள் ஏற்பாடுகள் செய்யப் பட்டன. உண்மை உலகத்திற்கு அவர்களுடைய கவனத்தைத் திருப்பும்பொருட்டு வாழ்க்கைத்தொழில், சமூக நடவடிக்கைகள் மூலம் ஊக்கமூட்டப்பட்டார்கள். இவ் வகையான முறைகளில் எந்த விதமான அறிவியல் முறையும் இல்லை என்ருலும், சில நோயாளிகள் குணமடைந்தார்கள். பழைய சிகிச்சை முறைகளில் ஒன்ருன கவனிப்பு இன்றும் ஒரு சிறந்த முறையாகவே கருதப்படு கின்றது. அதனுடைய மதிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. அஃது ஓர் ஒழுங்கு முறையான சிகிச்சையன்று என்ருலும், அதனு டைய முக்கியத்துவத்தையும் பயனையும் நாம் புறக்கணித்து விடுவதற்கில்லை.

மனக்கோளாறு நோயாளிகளிடம் நடத்தப்பட்ட தீவிரமான பல ஆராய்ச்சிகள் சில நல்ல வெற்றிகளை நல்கியிருக்கின்றன. நடத்தப்பட்ட இவ் வகையான ஆராய்ச்சிகளெல்லாம் உறுப்புக் குரிய நிலைமைகளின்மீதுதான் நடத்தப்பட்டிருக்கின்றன. பெராசிஸ் (Paresis) என்ற நோய் போக்கும்பொருட்டு மின்சார முறைப்படிக் காய்ச்சல் உண்டாக்கும் சிகிச்சையும் சிகிச்சை ஆராய்ச்சிகளில் கண்டுபிடிக்கப்பட்டதேயாகும். மட்டுமிஞ்சிய குடி உளப்பிணிக்கு ஊட்டச்சத்து மூலமும், காக்கை வலிப்பு நோய்க்கு மிக்க விளைவுதரும் மருந்து மூலமும் கண்டுபிடித்த சிகிச்சை முறைகள் ஆராய்ச்சிகளின் வெற்றிகளேயாகும்.

இந்தச் சிகிச்சை ஆராய்ச்சி முறைகளெல்லாம் உறுப்புசார் உளப்பிணிகளைச்சார்ந்தவையாகும்எனவேநடைபெற்றஆராய்ச்சி முடிவுகள் செயல்சார் உளப்பிணிகளுக்குப் பயனளிக்கவில்லை என்ற தோன்றுகின்றது. ஆனல், காலத்திற்குக் காலம் நடத்தப் படுகின்ற பரிசோதனை ஆராய்ச்சிகளெல்லாம் ஒரு சிறு குழுவைச் சார்ந்த நோயாளிகளின்மீது நடத்தப்படும்பொழுது வெற்றிகர மாகத்தான் தோன்றுகின்றன; ஆனல், அதே பரிசோதனைகளை விரிவுபடுத்தி நடத்தும்பொழுது எதிர்பார்த்த பயனையளிக்க

முடியாமையைக் காண்கின்றோம். அண்மைக்காலத்தில் இரண்டு புது சிகிச்சை முறைகள் மிகவும் பரந்த அளவில் முயற்சி செய்யப் பட்டன. அவை அதிர்ச்சி மருத்துவம் (shock theraphy), நடத்தையை மாற்றும் முன்மூளை இரண சிகிச்சை (prefrontal lobotomy) என்பவை. இந்த இரண்டு முறைகளும் உளப்பிணி மருத்துவத் துறையில் பிரபலமாகப் பேசப்படுகின்றன. மிகவும் பயனுள்ளவையாகக் கருதப்பட்டாலும் தொடக்க காலத்தில் எதிர்பார்த்த அளவு பயனை இம் முறைகள் அளிக்கவில்லை என்று சிலர் கூறுகின்றனர்.

அதிர்ச்சி மருத்துவம் : கடுமையான உளப்பிணி நோயால் வருந்துகின்ற நோயாளிகள் முறையான சிகிச்சை பெற்றுக் குணமடைந்து வந்தாலும் மறுபடியும் ஒரு சில நோயின் அறிகுறிகள் இருக்கச் செய்தன. மேலும், உளப்பிணி நோயாளிகள் கடுமையான காய்ச்சல் அல்லது உடல் நோயினால் வருந்தினர்களானால், உளப்பிணியினின்றும் குணம் பெறுகின்றார்கள் என்றும் கண்டு வந்தார்கள். எதிர்பாராமல் நடைபெறுகின்ற விபத்துகள், வேறு வகையில் ஏற்படுகின்ற உடல் சிதைவு முதலியவை நோயாளிக்கு ஏற்பட்டாலும் உளப்பிணி குணமடைவதாக மருத்துவர்கள் கண்டு வந்தார்கள். உள மருத்துவத்துறையில் 1935ஆம் ஆண்டுக்குப் பிறகு அதிர்ச்சி மருத்துவமும் உபயோகிக்கப்பட்டு வந்தது. அதிர்ச்சியைத் திட்டமிட்டு நோயாளிக்கு உண்டாக்குவதுதான் இம் முறையின் அடிப்படை நோக்கம். உயிர்ப்பொருள் மாறுபாட்டை ஒழுங்கு படுத்துகின்ற மருந்தான இன்சுலினை (Insulin) அதிகமாகச் செலுத்துவது இம் முறையாகும். இஃது உடலில் சர்க்கரையைக் குறைக்கின்றது. அதனால் நோயாளி புதை உணர் நிலையடையப் பெறுகின்றார். உடலியல் சார்பான அதிர்ச்சி தசை நார்களைச் சட்டென்று இழுப்பதன்மூலம் உண்டாக்கப்படுகின்றது.

நோயாளி மிக அதிகமான அளவுக்கு வியர்வையைச் சிந்துகின்றார்; விளறிய நிறத்தையடைகின்றார்; சில சமயங்களில் நடுக்கம் கொள்ளுகின்றார். சில மணி நேரங்கள் கழித்த பிறகு நோயாளிக்குச் சர்க்கரை செலுத்தப்படுகின்றது. அதனால் அவர் மறுபடியும் தெளிஉணர் நிலையடைகின்றார். இவ் வகையான சிகிச்சை சுமார் முப்பது அல்லது நாற்பது முறைகள் செய்ய வேண்டும். இதுபோன்று மற்றொரு முறை மெட்ரசால் (metrazol) என்ற மருந்தை ஊசிமூலம் உடலில் செலுத்தி உடனடியாக நோயாளி புதை உணர்நிலைக்கு அனுப்பப்படுகின்றார். வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறைகள் வீதம் பத்து அல்லது இருபது சிகிச்சைகள் அளிக்கப்பட வேண்டும். இது பெரும்பாலும்

காக்கை வலிப்புக்கு ஏற்றதாகக் கருதப்படுகின்றது; மூன்றுவது முறையும் பயனுள்ளதாகக் கருதப்படுகின்றது. இது மின்சார அதிர்ச்சி முறை என்று கூறப்படுகின்றது. உச்சந்தலையின்மீது மின்சாரப் பட்டைகளை (electrodes) அமைத்து மின்சாரத்தைப் பாய்ச்சுவதன்மூலம் மூளை மின்சார அதிர்ச்சி பெறுகின்றது. நோயாளி புதை உணர்வு நிலையடைகின்றுன்; நடுக்கம் எடுக்கின்றது. இந்த வகையான சிகிச்சை முறைகளையெல்லாம் உபயோகித்துப் பார்த்ததில் மின்சார அதிர்ச்சி மருத்துவம் மற்ற மருந்து உபயோகிக்கும் முறைகளைவிடப் பயனுள்ளதாகவும் எளிதாகவுமிருக்கின்றது. மேலும், பாதுகாப்பாகச் சிகிச்சையை நடத்த முடியும்.

அதிர்ச்சி மருத்துவம் தொடக்கத்திலிருந்ததைவிடப் பக்குவப் படுத்தப்பட்டிருக்கின்றது என்று சிலர் கருதுகின்றனர். மற்றும் சிலர் அதன் முக்கியத்துவத்தைக் குறைத்துவிட்டனர் என்று கூறுகின்றுர்கள். ஆனுலும், அம் முறையினுல் ஏற்படுகின்ற பயனை நாம் ஏற்றுக்கொள்ளுவதில் தவறென்றுமில்லை. அதிர்ச்சி மருத்துவம் செய்யும் மருத்துவர்களிடையே அதைப்பற்றி மாறுபட்ட கருத்து நிலவுகின்றது. அம் முறை எவ்வாறு வேலை செய்கின்றது என்பதுபற்றி ஒன்றுபட்ட கருத்து இன்னும் ஏற்படவில்லை என்றே கூறுகின்றனர். இதுபற்றி ஆழ்ந்த கவனம் செலுத்திய உடலியல் கோட்பாட்டினர், இம்முறை தானியங்கு நரம்பு மண்டலத்தைத் தூண்டுகின்றது என்றும், அது மூளையின் உயிர்ப்பொருள் மாறுபாட்டைப் (metabolism) பாதிக்கின்றது என்றும் கூறுகின்றனர். இது மூளையின் இழைமூலத்தைப் (brain tissue) பழுதடையச் செய்கின்றது என்றும் கூறுகின்றுர்கள்.

இந்த வகையான சிகிச்சை முறைகளை உளவியல் கோட்பாடுகள் வேறு கோணத்திலிருந்து பார்க்கின்றன. அதிர்ச்சி மருத்துவம் உளப்பிணி நோயாளிகளை மிகுந்த அச்சம் கொள்ளச் செய்கின்றது. அவர்கள் மரண அச்சம் கொள்ளுகின்றுர்கள். அல்லது நோயாளி தன்னைத்தானே தண்டித்துக் கொள்ளும் தேவையை நிறைவு செய்கின்றது என்றும் உளவியல் கோட்பாட்டினர் கருதுகின்றனர். ஆனுல், பெரும்பாலானவர்கள் இக் கருத்தை ஏற்றுக் கொள்ளுவதிலலை.

முன்மூளை இரணச் சிகிச்சை: உளப்பிணிகளுக்குத் தரப்படுகின்ற இவ் வகையான மருத்தவம் மிகவும் புரட்சிகரமானது என்று கருதப்படுகின்றது. இம் முறையில் மூளையில் அறுவைச் சிகிச்சை நடக்கப்படுகின்றது. ஒவ்வொரு நெற்றிப்பொட்டிலிலும்

சிறு துவாரம் செய்யப்படுகின்றது. தாலமஸ் (thalamus) என்ற மூளைப் பகுதியுடன் தொடர்பு கொண்டுள்ள முன் மூளைப் பகுதிகளைச் (prefrontel lobes) சேர்க்கும் நரம்புப்பரப்புகளை ஒரு சிறு கத்தியைக் கொண்டு துண்டித்து விடுகின்றனர். இந்த அறுவை முடிந்தவுடன் நோயாளி குழப்பமடைந்து அமைதி குலைகின்றான்; இதிலிருந்து ஒரு வார காலத்தில் குணமடைகின்றான்.

முன்மூளை அறுவைச் சிகிச்சை பெரும்பாலும் திரிபுணர்வு நோய்களுக்கு மிகவும் வெற்றிகரமாக உதவுகின்றது என்று கூறுகின்றார்கள்; சிஸ்சபிரோனியா நோயாளிகளுக்கும் மிகவும் பயனளிக்கக்கூடியது என்று நம்புகின்றனர். சிகிச்சைக்குப் பிறகு நோயாளி கவலையிலிருந்து மீண்டு எழுகின்றான். இயல்புக்கு மாறான நடத்தை காணப்படுவதில்லை. ஆனால், நோயாளியின் ஆளுமைக்கூறுகளில் வேறு பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. சிகிச்சைக்கு ஆளான நோயாளி பிறகு வேலையில் விருப்பமில்லாதவனாகவும், திறமையற்றவனாகவும், திண்மையற்றவனாகவும் காணப்படுகின்றான்; ஆனால், மனவெழுச்சி எதிர்வினைகளில் ஆழமில்லாத எதிர்வினைகளைக் கொண்டே துலங்குகின்றான். இந்த விளைவுகளைக் கொண்டு பார்க்கும்பொழுது சிகிச்சை வெற்றிகரமாக இருந்தாலும், மனிதன் தன்னுடைய மூல ஆளுமையை இழந்துவிடுகின்றான் என்று தெரிகின்றது. ஆனால், அவனுடைய நுண்ணறிவு மட்டும் எதிர்மறையான விளைவைக் கொள்ளவில்லை. ஆனால், இம் முறையான சிகிச்சை எல்லா வகையிலும் அவ்வளவு நிறைவு தருவதாக இல்லை என்று நோயாளிகளின் ஆளுமைப் பரிசோதனை செய்து பார்த்தவர்கள் நம்புகின்றார்கள். உளப் பிணிகளுக்கான மற்ற சிகிச்சை முறைகளுமிருக்கின்றன. அவற்றை விளக்கமாக உளநோய் நிவர்த்தி உளவியலில் காணலாம்.

குறிப்பு நூல் தொகுப்பு

(Bibliography)

அத்தியாயம் 1

1. Bannister, D., and Fransella, F., 'A Gid Test of Schizophrenlc Thought Disorder', British Journal of Social and Clinical Psychology, 1966, 5, 95-102.

2. Benedict, R., 'Patterns of Culture', London: Routledge and Kegan Pau, 1946.

3. Cameron, N. A., 'The Psychology of Bchavian Disorders', Boston: Houghton, 1947.

4. Finichal, O., 'The Psychologytic Theory of Nemosis,' New York: Norton, 1945.

5. Szasz, T. S., 'The Myth of Mental Illness', American Psychologist, 1960, 15, 113-118.

6. Mowrer, O. H., Sir, 'The Lesser of Two Evils', American Psychologists, 1960, 15, 301-304.

7. Goldstein, K., 'The Organism', New York: American Book 1939.

8. Frend, S., 'A General Introduction to Psychonalysis,' Gorder City, New York: Perma Books, 1917.

9. Eriksm, E. H., 'Childhood and Society', New York: Norton, 1950.

10. Kubie, L. S., 'Fundamental Nature of the Distinction between Normality and Neurosis'. Psychonalytic Quarterly, 1954, 23, 165 - 204.

11. Hillingshead, A. B. and Redlich, C. F., 'Social Class and Mental Illness: A Community Study', New York: Wiley, 1958.

அத்தியாயம் 2

1. Grinker, R. R. and Spiegal, J. P., 'War Neurose in North Africa', New York: Mscy Foundations, 1943.

2. Lendis, C. and Page, J. D., 'Modern Society and Mental Disease', New York: Farrar and Linchart, 1938.

3. Masserman, J. H., 'Behaviour and Neurosis', Chicago: University of Chicago Press, 1943.

4. Robbins, R. R., 'Personality and Psychosometic Illness, Genetic Psychological Monography'. 1969, 8, 51-90.

5. Shields, J. and Slater, E., 'Heredity and Psychological Abnormality', In Hand Book of Abnormal Psychology, Ed. E. J, Eysenck, London: Pitman, 1962.

6. Walker, R. E., Nicolay, R. C., Klucgny, R. and Piedel, R. G., 'Psychological correlates of Somoking', Journal of Clinical Psychology, 1969, 25, 42-44.

7. Williams, M., 'Brain Damage and the Mind', Harmondsworth: Penguin Book, 1970.

8. Lorr, M., Klett, C. J. and Menair, D., 'Syndromes of Psychosis,' New York : Macmillan, 1963.

அத்தியாயம் 3

1. Culpin, M., 'Recent Advances in the Study of Psychoneurosts', London: Churchill, 1931.

2. 'Movement of Patients in Mental Hospitals': 145 V.S. Dept. of Commerce, Bur. of the Census, Series, MP. No.12, March, 26, 1947.

3. Benedik, T., 'Insight and Personality Adjustment; A Study of the Psychological Effects of War', New York: Ronalt Press, 1946.

4. Horney, K., 'Nemotic Personality of Our Time', New York: Norton, 1957.

5. Bettleheim, B., 'Individual and Mass in Extreme Situation,' Journal of Abnormal and Social Psychology, 1943, 38, 417-52.

6. Sears, R.R., 'Experimental Studies of Projection, I Attribution of traits,' Journal of Social psychology, 1936, 7, 151-63.

7. White R.W., 'The Abnormal Personality', New York: Ronald Press, 1948.

அத்தியாயம் 4

1. Masserman, T.H., 'Behaviour and Neurosis' Chicago: University of Chicago Press, 1943.

2. Landis, C., and Page, J.D., 'Modern Society and Mental Diseases', New York: Farrer and Rinehart, 1938.

3. Anderson, V.V., 'Psychiaty in Industry', New York: Hamper and Bros. 1929.

4. Carter, J.W., 'A Case of Reactional Dissocition (Hysterical Paralysis)', American Journal of Ortnophyschatry, 1937, 7, 219-224.

5. Janet, P., 'The Major Symptoms of Hysteria,' New York: The Macmillan Company, 1907.

6. Wholay, C.C., 'A Case of Multiple Personality', American Journal of Pschiatry, 1933, 12, 653-687.

7. Rivers, W.H.R., 'A Case of Claustrophobia,' Lamcet: 1917, 11, 237-240.

8. Ross, T.A., 'The Common Neuroses,' London: Arnold, 1923.

அத்தியாயம் 5

1. Masserman, J.H., 'Principles of Dynamic Pschiatry,' Philadelphia: W.B, Sanders Company, 1946.

2. Dorcus., R.M., and Shaffer, G.W., 'Text Books of Abnormal Psychology,' Third Edition, Baltimore: The Williams and Wilkins Company, 1945.

3. Landis, C., and Bolles, M.M., 'Text Book of Abnormal Psychology,' New York: The Macmillan Company, 1946.

4. Shaffer, L.F., 'The Psychology of Adjustment,' Hongton Mufflin Company, 1936.

5. Maslow, A.H. and Middlemann, B., 'Principles of Abnormal Psychology', New York: Harper and Brothers, 1941.

6. Tinne, G.S., 'Sleep and Wakefulness in 509 Normal Human Adults,' British Journal of Medical Psychology, 1969. 42, 75–79.

7. Becker, W., 'A Genetic Approach to the Interpretation and Evaluation of the Process - Reactive Distinction in Schizophrenia', Journal of Abnormal and Social Psychology, 1956, 52, 225-236.

8. Femichel, O., 'Psychologytic Theory of Neussosis,' New York: Horper and Brothers, 1945.

10. உளநோய் நிவர்த்தி உளவியல்

1. உளநோய் நிவர்த்தி உளவியலின் நோக்கமும் முறைகளும்

மனிதர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு உளவியல் பல துறைகளில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனல் ,எந்த அளவுக்குப் பிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் முயற்சியில் வெற்றி கண்டிருக்கின்றது என்று உறுதியாகக் கூற முடியாது. தனி மனிதனுக்கும் அவனுடைய சூழ்நிலைக்கும் இடையில் நடைபெறுகின்ற பரிமாற்றச் செயல்முறைதான் மனிதனுடைய நடத்தையில் காணப்படும் பிரச்சினைகளாகின்றன. இந்தச் செயல்முறையின் முடிவுகள் எல்லாம் அச்சம் தருகின்றவையாகச் சில சமயங்களில் இருக்கின்றன.

சம்பந்தப்பட்ட தனியாள் மகிழ்ச்சியை இழந்து துன்பத்தில் ஆழ்ந்தும், மனமுறிவுற்றும் காணப்படுகின்ருர். அல்லது தம்முடைய குடும்பத்தோடும், நண்பர்களோடும், மற்றத் தொடர்புடையவர்களோடும், பொதுவாகச் சமூகத்தோடும் முரண்பாடுகள் கொண்டிருக்கலாம். அவருடைய நடத்தையைப் பொறுத்த மட்டில் அவர் மனநிறைவுடனிருந்து வந்தாலும், சமூகத்திலுள்ள மற்றவர்கள் அவருடைய நடத்தையில் அடிக்கடி குற்றம் கண்டு வரலாம். அப்படிப்பட்ட தனியாள்களின் பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகளுக்காக உளவியலைப் பயன்படுத்த வேண்டுமென்பது தான் உளநோய் நிவர்த்தி உளவியலின் முதல் நோக்கமாகும்.

இந்த வகையான பொருத்தப்பாட்டுப் பிரச்சினைகளோடு செயல் தொடர்பு கொள்ளுகின்றபொழுது அவை சம்பந்தமான

பணிகள் செய்கின்றவர்களையும் நாம் குறிப்பிட்டாக வேண்டும். அவர்கள் உளநோய் நிவர்த்தி உளவியலார் என்று அழைக்கப் படுகின்றனர்கள். இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பாகத் தொண் டுகள் செய்து வருவதால், உளநோய் நிவர்த்தி உளவியலார் உள நோய் நிவர்த்தித் துறையில் தொழில் நடத்துபவராக இருக் கின்றார். அவர் தம்முடைய தொழில் துறையில் காணுகின்ற பல புதிய பிரச்சினைகளின்மீது ஆராய்ச்சிகளும் நடத்தி வருகின்றவ ராக இருக்கின்றார். எனவே, ஓர் உளநோய் நிவர்த்தி உளவிய லார் தொழில் நடத்துகின்றவராகவும், ஓர் அறிவியலாராகவு மிருக்கின்றார்.

பெரும்பாலும் உளநோய் நிவர்த்தி உளவியலாரின் கவன மெல்லாம் தனியாள்களின்மீது உளவியல் பணிகளைச் செலுத்து வதாகவே இருந்து வருகின்றது. ஓர் உளநோய் நிவர்த்தி உளவி யலார் எப்பொழுதும் தனியாள்களின் தேவைக்காகத் தனியாள் களுடனேயே இருக்க வேண்டியவராக இருக்கின்றார்; பிரச்சினைக் குரிய மனிதனைப் புரிந்துகொள்ளவும், தனியாகவோ மற்றவர்களு டன் சேர்ந்து அவனுக்கு உதவி செய்யவோ வேண்டியவராக இருக் கின்றார். உளநோய் உளவியலாரின் எல்லை மேலும் விரிந்து செல் லலாம். உளநோய்ப் பேணகத்திலிருந்தபடியே கருத்துரைகள் வழங்கலாம். பள்ளிக்கூடங்கள், நிறுவனங்கள், தொழில் சாலைகள் முதலிய பிரச்சினைகள் எழக்கூடிய இடங்களோடு நேரடித் தொடர்பு கொண்டும் தனி மனிதன் பிரச்சினைகளையும், குழுவின் பிரச்சினைகளையும் கவனிக்கலாம்.

உளநோய் நிவர்த்திப் பிரச்சினைகள்

உளநோய்களை நிவர்த்தி செய்வதிலும் உளநோய் உளவிய லார் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். ஏனென்றால், பிரச்சினைகளைப்பற்றி நல்ல தெளிந்த அறிவு பெற்றால்தான் பிரச் சினைகளை அவர்கள் அணுக முடியும். தெளிவு பெறாத பிரச்சி னைகளை ஊகத்தின்மூலம் அணுகித் தீர்வு காண முடியாது. அது மிகவும் ஆபத்தான சூழ்நிலைகளை உண்டாக்கி விடலாம்.

மூலமறிதல்: உளநோய் நிவர்த்தி உளவியலார் தொடர்பு கொள்ளுகின்ற உளநோய்ப்பேணகம், நிறுவனங்கள் முதலியவற்றி லிருந்து கிடைக்கப் பெறுகின்ற குறிப்பேடுகளில் எல்லாம் பல்வேறு வகையான நிகழ்ச்சி வரலாறுகள் காணக்கிடக்கின்றன. ஒரு குழந்தையின் திறமை அவனுடைய அன்றாடத் தேவைகளை நிறை வேற்றிக் கொள்ளும் வேலைகளைச் செய்வதற்குப் போதியதாக இல்லாமலிருக்கின்றது; அவனை உள்ளத்தால் பின் தங்கியவன்

என்று அழைக்கின்றார்கள். ஒரு வயது முதிர்ந்த மனிதனுடைய நடத்தை சாதாரண இயல்பு நிலையில் இல்லை; அரைக் கிறுக்காகக் காணப்படுகின்றான். அவன் உளநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட வேண்டியவன். ஓர் இளைஞன் தன்னுடைய வாழ்க்கைத் தொழிலைப்பற்றி எந்த விதமான முடிவுக்கும் வர முடியாதவனாக இருக்கின்றான். அவனுக்குக் கருத்துரை தேவைப்படுகின்றது. கடமை தவறுகின்ற சிறுவன் ஒருவனுடைய சமூக விரோதமான நடத்தை அவனை நீதிமன்றத்தில் நிறுத்தியிருக்கின்றது.

ஒரு போர் வீரனுடைய இராணுவ அனுபவங்கள் எல்லாம் அவனுக்கு அச்சத்தையும், பீதியையும் உண்டாக்குகின்றன. பள்ளிக்கூடத்தில் தன்னுடைய பாடங்களைக் கற்க முடியாத சிறுவன் கல்லூரியில் எல்லா வழிகளிலும் பின் தங்கியதாக உணர்ச்சி கொள்ளுகின்ற கல்லூரி மாணவன். இவ்வாறு எத்தனையோ பிரச்சினைகள் தனி மனிதர்களின் வாழ்க்கையில் தோன்றிக் கொண்டிருக்கலாம்.

ஆனால், இந்தப் பிரச்சினைகள் எல்லாம் ஏதேனும் ஒரு வகையில் ஒருவர் தம்மை ஒத்தமைத்துக் கொள்ள முடியாமலிருப்பதிலிருந்துதான் எழுகின்றன. அதாவது, பிரச்சினைக்குரிய மனிதன் தன்னோடோ சமூகத்தோடோ ஏற்றுக் கொள்ளக் கூடிய வழியில் நடந்து கொள்ளுவதில் சிரமப்படுகின்றான் என்று தெரிகின்றது. எனவே, உளநோய் நிவர்த்தி உளவியலின் முதன்மையான நோக்கம் என்னவென்றால், இத்தகைய பிரச்சினைகளையுடைய ஒவ்வொரு மனிதருக்கும் தேவையான உதவியளித்து அவர்களுடைய நடத்தையைச் சீர்படுத்துவதாகும். அதன்மூலம் தனிமனிதன் மனநிறைவு பெற்று, மகிழ்ச்சியான வாழ்வைக் காணுகின்றான். சமூகமும் அவனை ஏற்றுக் கொள்ளுகின்றது.

இந்தக் கடமைகளைச் செய்யும்பொருட்டு முதலில் நடத்தையிலுள்ள சிரமத்தின் இயல்பைப்பற்றிக் குறிப்பாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அதிலிருந்து அத்தகைய நடத்தைக்கான முக்கிய காரணக்கூறுகளைக் கண்டறிய வேண்டும். எனவே, தனியாளின் பிரச்சினைக்குரிய நடத்தையைப்பற்றித் தேர்வாராய்ச்சி ஒன்று நடத்த வேண்டும். அஃது எந்த விதமான ஒரு சார்பெண்ணமுமின்றி அவனுடைய நடத்தையை விவரிக்க வேண்டும். அந்த மனிதனுடைய அனுபவ வரலாற்றில் குறிப்பிடத்தக்க உண்மைகள், அவனுடைய உடல் சார்ந்த நிலைமை, உள்ளம் சார்ந்த நிலைமை, மற்றும் தேவையான உண்மைகள் முதலியவையும்

சேகரிக்கப்பட வேண்டும். இந்த முறையை உளவியல் சார்பான மூலமறிதல் என்று கூறலாம்.

நிவர்த்தி முறை: உளநோய் நிவர்த்தி உளவியலின் இறுதியான நோக்கம் தனியாளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவியளித்து அவனுடைய நடத்தையில் மறுசீரமைப்பை உண்டாக்குவதாக இருந்து, அதில் நிவர்த்தி உளவியலார் வெற்றி காண்பாரானல், மூலமறிதலோடு நின்றுவிடாமல் மேல் நோக்கியும் சென்று பார்க்க வேண்டும். இல்லையென்றால், இத் துறை பலனளிக்காத செயல்முறையாக நின்றுவிடும். நிவர்த்தி முறையைத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும். உதாரணமாக, உள்ளத்தால் பின் தங்கிய குழந்தைக்குக் கவனிப்பும் பயிற்சியும் தேவைப்படுகின்றது. மனநோய் மருத்துவ விடுதியிலுள்ள மனிதனுக்கு ஒரு நீண்ட தொடர்ச்சியான உளக் குண முறையில் அமர்ந்திருக்கும் காலம் தேவைப்படுகின்றது. வாழ்க்கைத் தொழிலுக்கான திட்டமில்லாத இளைஞனுடைய திறமைகள், கவர்ச்சிகள் ஆகியவற்றின் வடிவ மூலங்களுக்கேற்ற வாழ்க்கைத் தொழில் விவரத்தைக் கொடுக்கலாம். கடமை தவறும் சிறுவனுக்கு வாழ்க்கைத் தொழிலுக்கான பயிற்சி தேவைப்படலாம். சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நடத்தை அவனிடம் தோன்றக் கூடியதொரு சூழ்நிலைக்கு அவன் அழைத்துச் செல்லப்படலாம். படிக்காத சிறுவனுக்கு அத் துறையில் குறிப்பான பயிற்சி அளிக்கப்படலாம். தாழ்வு உணர்ச்சிகளை வளர்த்துக் கொண்டுள்ள கல்லூரி மாணவன் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ளக் கற்பிக்கப்படலாம்.

மருத்துவ, சமூக, கல்விப் பண்புக்கூறுகள்: உளநோய் நிவர்த்தித் திட்டத்தைச் செயல்படுத்தும்பொருட்டுத் தனியாளின் நடத்தையையும் அந்த நடத்தை வளர்ச்சியுற்றதன் சூழ்நிலைகளையும் புரிந்து கொள்ளுவதோடு வேறு பல விவரங்களையும் சேகரித்தாக வேண்டும். மூலங்களின் இயல்புகளான வாழ்க்கைத்தொழில், சூழ்நிலை ஆகியவை உள்ளார்ந்த தன்மையாகக் கிடைக்கக் கூடியவை. பிரச்சினைகளோடு செயல் தொடர்பு கொள்ளுவதில் மூலமறிதல், நிவர்த்தி முறை ஆகியவை உளவியலாருக்கு எல்லா மனிதர்களைப்பற்றியும் எல்லா விவரங்களையும் வழங்கக்கூடியவையாக இருக்க முடியாது. அதனால் உளவியலார் திட்டமிட்டபடி எல்லாவற்றையும் செய்ய முடியாது. மற்ற வாழ்க்கைத்தொழில் புரிகின்றவர்களின் கூட்டுறவையும் நம்பியிருக்க வேண்டியிருக்கின்றது.

உதாரணமாக, உள்ளத்தால் பின்தங்கியுள்ள குழந்தைக்கு மருத்துவப் பரிசோதனை செய்தாக வேண்டும். மருத்துவப் பரி

சோதனை ஏதாவது அவனுக்கு உதவி செய்ய முடியுமா என்று காணும்பொருட்டு மருத்துவரைக் கொண்டு தீவிரமான பரிசோதனை செய்ய வேண்டும். மனநோய் மருத்துவ விடுதி நோயாளி உளமருத்துவரோடு ஆழ்ந்த மருத்துவக் கூட்டத் தொடர்கள் கொள்ள வேண்டியிருக்கும். வாழ்க்கைத்தொழில்பற்றி முடிவு எடுக்காத இளைஞன் வாழ்க்கைத்தொழில் செய்தி வல்லுநரின் பணிகள் தேவைப்பட்டவராக இருக்கலாம். கடமை தவறுகின்ற சிறுவனுக்குச் சமூகத் தொண்டு வல்லுநரின் உதவி தேவைப்படலாம். அவன் சமூகவிரோதச் சூழ்நிலையிலிருந்து மிகத் தொலைவிலுள்ள உஷார் விடுதியில் சேர்க்கப்பட வேண்டும். படிக்காத சிறுவனுக்கு நன்கு பயிற்சி பெற்ற பயிற்றுவிப்போரின் உதவி தேவைப்படலாம். தாழ்வு மனப்பான்மை கொண்டுள்ள கல்லூரி மாணவன் பொழுதுபோக்குக் கழக வல்லுநரின் உதவியால் பயனடையலாம்.

எனவே, பொது மருத்துவர், உளமருத்துவர், வாழ்க்கைத் தொழில் வல்லுநர், சமூகப்பணியாளர், அறிவுரை கூறுவோர், குறைபோக்கும் கல்விவாணர், பொழுதுபோக்குக் கழக வல்லுநர் ஆகியவர்களுடன் உளவியலார் தங்களுடைய வாழ்க்கைத் தொழில் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளுகின்றனர். இவர்கள் தவிர, ஆய்ந்து தெளிவுபெறும் அதிகாரி, வாழ்க்கைத்தொழில் மருத்துவர், பேச்சுவல்லுநர் ஆகியவர்களுடனும் உளநோய் நிவர்த்தி உளவியலார் தொடர்பு கொள்ளுகின்றனர். எனவே, உளநோய் நிவர்த்தி உளவியல் பல்வேறு துறைகளுடன் உறுதியான தொடர்புகள் கொண்டிருக்கின்றது; குறிப்பாக, கல்வி, மருத்துவம், சமூகத்தொண்டு ஆகிய துறைகளுடன் நெருங்கித் தொடர்பு கொண்டிருக்கின்றது. உளநோய் நிவர்த்தி உளவியலார் மிக அரிதாகவே தங்களுக்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்கித் தம்முடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றனர்.

உளநோய் நிவர்த்தி உளவியலார் செறிவான மருத்துவம் செய்யும் சூழ்நிலையை உருவாக்கலாம்; மேலே நாம் குறிப்பிட்ட கடமைகளில் எதையேனும் செயல்படுத்தலாம். இஃது ஒரு வகையான தற்காப்புச் செயல்முறையாகும். இஃது அவர் சரியானபடி பயிற்சி பெற்றிருக்கின்றார் என்பதைக் காட்டும் அறிகுறியாகும், மேலும், அவர் முன்னுள்ள கடமையின் இயல்பு செயல் சார்பான நிகழ்ச்சிகளுக்குத் தம்முடைய அறிவியல் அறிவை உபயோகிப்பதாகவே இருக்கின்றது. அதன்பொருட்டுப் பல்வேறு அறிவியல்களிலிருந்து கருவிகளை ஒருமைப்பாடு செய்ய வேண்டுவது அவசியமாகின்றது. புறவயமான உளவியலுக்குரிய கொள்கையின்

முக்கிய செய்திகளை உபயோகிக்கவும் நிலைநாட்டவும் கற்கின்ற பொழுது உளநோய் நிவர்த்தி உளவியலார் மற்றத் துறைகளான சமூகவியல், கல்வித்துறை, மருத்துவ அறிவியல்கள் ஆகியவற்றிலிருந்து செய்திகளைச் சேகரித்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.

உளநோய் நிவர்த்தி முறைகள்

உளநோய் நிவர்த்தி முறைகள் அண்மைக்காலத்தில் மிக முக்கியத்துவம் பெற்று வருகின்றன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதிப் பகுதியிலேயே உலகத்தின் கவனத்தை இம்முறைகள் கவர்ந்தன என்றாலும், பழமை மனப்பான்மை கொண்ட மருத்துவத் துறையினர் எந்தப் புதிய முன்னேற்றத்தையும் ஏற்றுக்கொள்ளுவதற்கு மறுத்து வந்தனர். ஆனால், அத் துறையில் தொடர்ந்து ஆராய்ச்சிகளைச் செய்து வந்தவர்கள் அதை ஓர் அறிவியல் நிலைக்குக் கொண்டு வந்தார்கள். அதன் பிறகுதான் அதன் செல்வாக்குப் பரவுவதற்குத் தொடங்கிற்று. சிறப்பான முறைகள் சிலவற்றை இங்கு விவரிப்போம் :

மூலமறியும் முறைகள் : உளவியல் முறைப்படி, பிரச்சினைகளின் மூலமறியும் முறைகளின் நோக்கம் என்னவென்றால், நோயாளியின் இன்றைய நடத்தை நிலைமையை நன்கு புரிந்துகொள்ள வேண்டுமென்பதாகும். அவனுடைய கடந்த கால வரலாறு, இப்பொழுது அவனுடைய நடத்தை இருக்கின்ற நிலை ஆகியவற்றைப்பற்றிப் போதிய மாதிரிகளைச் சேகரிக்க வேண்டும். இச் செய்திகள் மூலமறிதலை ஒழுங்குபடுத்த உதவுகின்றன. இவை மறுபடியும் நோயாளியினுடைய வருங்கால நடவடிக்கைப் போக்குகளுக்கு அடிப்படையாக இருக்கின்றன. மேலும், ஏற்றதொரு மருத்துவ முறையைத் தேர்ந்தெடுப்பதற்கும் அது ஒரு வழியாக அமைகின்றது. இந்த நோக்கங்களை நிறைவு செய்யும்பொருட்டு நான்கு பெரும் பகுதிகளில் செய்திகளைச் சேகரித்தாக வேண்டும். அவை, தற்பொழுதுள்ள நடத்தையின் விளக்கவுரை, உடல் சார்பானதும் உள்ளச் சார்பானதுமான வரலாறும் நடைமுறை நிலைமையும், உளச் சமூக வரலாறும் நடைமுறை நிலைமையும், நடத்தை மாதிரிகள் என்பவை.

இந்த நான்கு பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்படுகின்ற செய்திகள் நிகழ்ச்சி வரலாறுகளின் இயல்புகளுக்கேற்ப மாறுபடக்கூடியவையாக இருக்கின்றன. மேலும், இச் செய்திகளின் தேவை என்னவோ அவற்றில் ஒரு பகுதியோ அல்லது படித்தரத்திலேகூடச் சில சமயங்களில் கிடைக்கப் பெறலாம். உதாரணமாக, உள்ளத்

தால் பின் தங்கியிருத்தல் உள அளவுச் சோதனையில் (psychometric test) கிடைத்த நடத்தை மாதிரிகளின் அடிப்படை ஓரளவுக்கு உறுதியானதாகத் தோன்றலாம். இந்த உண்மைகளை உடல் சார்பானதும் சமூகச் சார்பானதுமான வரலாற்றைக் கொண்டு சரி பார்த்துக் கொள்ள வேண்டும்.

தற்பொழுதுள்ள நடத்தையின் விளக்கவுரை: ஓர் உளவியல் வாழ்க்கை நிகழ்ச்சியின் மூலத்தையறியும் கட்டத்தின் தெளிவான தொடக்கம் முறையீடாகும். தனியாள் எதற்காக உளநோய்ப் பேணகத்திற்குச் செல்லுகின்றான்? பெற்றோர்களோ, ஆசிரியர்களோ, சமூகப் பணியாளர்களோ அந்தக் குறிப்பிட்ட மனிதரை எதற்காக உளநோய் நிவர்த்தி உளவியலாரிடம் அனுப்புகின்றனர்? ஏனென்றால், குறிப்பிடப்பட்டவர் பள்ளிக்கூடத்தில் வேலைகளைச் சரியாகச் செய்வதில்லை. மற்றொருவர் மருத்துவரைக் கண்டதும் தம்மைக் கொலைசெய்ய வந்திருக்கின்றார் என்று பயந்து கூச்சல் போடுகின்றார். மற்றொருவர் பொதுக்கல்வி பெறுவதை வெறுக்கின்றார். மற்றொருவர் பக்கத்து வீடுகளில் எதையேனும் திருடிக் கொண்டிருக்கின்றார். மனவுரமில்லாததால் தம்முடைய வேலையை ஒருவர் செய்ய முடியவில்லை. ஒரு மாணவர் பள்ளிக்கூடம் போவதைவிட்டு ஊர் சுற்றிக் கொண்டிருக்கின்றார். ஒருவர் தற்கொலை செய்துகொள்ள முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்.

இந்த வகையான நிகழ்ச்சிகளில் எல்லாம் புதுமையான அல்லது ஆவலைத் தூண்டக்கூடிய காரணங்களும் விளைவுகளுமிருக்கலாம்; பொருத்தமான நிகழ்ச்சிகளும், பொருத்தமற்ற நிகழ்ச்சிகளும், உண்மைகளும், ஊகங்களும் கலந்திருக்கலாம். பெற்றோர்களும், ஆசிரியர்களும் கூறுகின்ற காரணங்கள் அடிக்கடி உண்மைப் பிரச்சினையை வெளிப்படுத்துவதாக இல்லை. எனவே, பள்ளிக்கூடத்தில் பையன் பாடங்களைச் சரியாகக் கற்கவில்லை என்பதைப் பல வழிகளில் விளக்கிக் காட்டலாம். பையன் அவன் பயிலுகின்ற வகுப்புக்கு இரண்டு அல்லது மூன்றாண்டுகள் அதிக வயதுள்ளவனாக இருக்கின்றான். அவன் வகுப்பில் சராசரி மாணவனாக இருந்து வரலாம். ஆனால், அவனுடைய முயற்சி போதவில்லை என்று ஆசிரியர் கூறுகின்றார். பையன் முதல் அல்லது இரண்டாம் தரத்திலிருக்க வேண்டுமென்று பெற்றோர் கணக்குப் போட்டனர். ஆனால், அவன் மூன்றாம் தரத்திலிருக்கின்றான்.

நடத்தையைப்பற்றி ஒழுங்கு முறையான கூராய்வு செய்யும் பொருட்டுத் தரமிடும் அளவுகோல், சரிபார்க்கும் பட்டியல் ஆகிய கருவிகள் உபயோகிக்கப்படலாம். இவை நடத்தையைப்

பற்றி விரிந்த பல வகையான உருப்படிகளைக் கொண்டிருக்கின்றன. அவற்றிலிருந்து எந்தப் பிரச்சினை நிகழுகின்றது என்று பொருத்தமாகக் கண்டறியலாம். மேலும், உண்மைகளைக் கவனமாகப் பிரித்தறிந்து விளக்கம் தரப்பட வேண்டும். ஒருவர் ஒரு வேலையைச் செய்வதற்குத் திறமையற்றிருக்கின்றார் என்பது உண்மை. மனவுரமின்மை என்பது ஊகிக்கப்பட்ட ஒரு காரணம். காரணக்கூடிய நிகழ்ச்சியிலிருந்து ஒன்றை ஊகிக்கக்கூடிய செயல் முறையானது உளநோய் நிவர்த்தி உளவியலாருக்கு மிகவும் சிக்கலான செயலாக இருக்கின்றது.

உடல் சார்பானதும் உள்ளச் சார்பானதுமான வரலாறும் நடைமுறை நிலைமையும்: உளவியல் சார்பான நடத்தையில் ஈடுபடுவது உடலையுடைய உயிரினமாகும். ஆகையினால்தான் உயிரினத்தின் உடல் சார்பான நிலைமை எப்பொழுதும் நடத்தையிலுள்ள பிரச்சினைக்கு ஒரு காரணமாக இருந்து வருகின்றது. எனவே, மூலத்தையறிகின்ற ஒவ்வோர் ஆராய்ச்சியிலும் உடல் சார்பான நிலைமையைக் காரணமாகக் கொள்ள வேண்டும். உடல் சார்பான நிலைமையைப் பரிசோதித்துப் பார்க்கின்ற கடமை பொது மருத்துவரையே சாரும். உளவியலார் ஒரு மருத்துவராக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றாலும், பொது மருத்துவரின் கண்டுபிடிப்புகளை நோயாளியின் முழு வாழ்க்கை வரலாற்றினும் புத்திசாலித்தனமாகப் பொருத்திப் பார்க்கக்கூடிய அளவுக்கு மருத்துவச் செய்திகளை அறிந்திருப்பது நலமாகும். சில நடத்தைக் கூறுகள் உடல் முதிர்ச்சியையும் பயிற்சி, அனுபவம் ஆகியவற்றையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, நடத்தல், பேசுதல், கழிவுப் பொருள்களைக் கட்டுப்படுத்தல் முதலியவை உளவியல் சார்பான கூறுகளையும் உடல் சார்பான கூறுகளையும் சார்ந்திருக்கின்றன. பல்வேறுபட்ட குழந்தைகளிடம் வளர்ச்சி ஒப்பீட்டடிப்படையில் ஒரே சீராக இருப்பதால், இந்த வளர்ச்சிகள் தோன்றுகின்ற வயதை வரையளவு செய்திருக்கின்றனர். ஆகவே, இந்த வளர்ச்சிகள் நடைபெற வேண்டிய வயதுகளை உறுதியாக்கும்பொழுது தனியாள் நடத்தையைப்பற்றி விளக்கம் கூறுவதற்குக் குறிப்புகள் கிடைக்கின்றன. பெரும்பாலான நடத்தை வடிவங்கள் தாமதமாக அதாவது சில ஆண்டுகள் கழித்துத் தோன்றுமானால், பொது நடத்தையில் பின் தங்குதல் இருப்பதாக உடனடியான ஐயப்பாடு ஏற்படுகின்றது. இது மனவளர்ச்சிக் குறைதலைச் சுட்டிக் காட்டுகின்றது. வளர்ச்சித் தொடர்ச்சியில் பொருத்தமின்மை காணப்படுமானால், அது பெற்றோர்களின் மனப்பான்மைகளையோ திறமைகளையோ பிரதிபலிக்கின்றது.

உதாரணமாக, கழிவு வெளிநீக்கத்தில் கட்டுப்பாட்டை நிலை நாட்டும் பழக்கத்தைக் குழந்தை மிகவும் தாமதமாகக் கற்றுக் கொண்டிருக்கலாம். தாயார் குழந்தையிடம் காட்டிய மனப் பான்மைதான் இதற்குக் காரணமாக இருக்கின்றது. சிறுவயதி லேயே அவனுக்கு இந்தச் சிரமம் தர வேண்டியதில்லை என்று தாயார் நினைத்திருக்கலாம்; அல்லது தாயாருக்கு இது தெரியாம லிருந்திருக்கலாம். அல்லது அத்தகைய கட்டுப்பாடுகளைக் குழந் தையிடம் ஏற்படுத்துவதில் அக்கறை காட்டாமலிருந்திருக்கலாம். மேலும், சில வகையான உடல் நோய்களின் தோற்றம் தனியா ளின் நடத்தையைச் சரியாக விளக்குவதில் குறிப்பிடத்தக்க முக் கியத்துவம் பெற்றிருக்கின்றது. முக்கியப் பகுதிகளில் ஒன்றுகக் கருதப்படுவது பொது உயிர்ச்சக்தியாகும். அதாவது, பொது உடல்நிலையின் போதுமான மதிப்புநிலை, ஊட்டக்குறைவு, காச நோய், நெஞ்சின் நிலைமைகள் முதலியவை குறிப்பிடத் தக்கவை யாகும். ஏனென்றல், அவை மனிதர்களின் முயற்சிகளையும் செயலையும் குறைத்து விடுகின்றன. மேலும், அவற்றைச் சார்ந் திருக்கின்ற அம் மனிதனுடைய சாதனைகளும் பொருத்தப்பாடு களும் குறைந்து போகின்றன.

நரம்பு, சதைநார், எலும்பு ஆகியவற்றின் குறைபாடுகளும் இயல்பாக நடைபெறுகின்ற செயல்களைக் குறைத்து, நேரடியாக நோயாளியின் நடத்தையையும் மனப்பான்மைகளையும் தாக்கு கின்றன. நரம்பு மண்டலத்தில் ஏற்படுகின்ற சீர்க்கேடுகள்தான் நடத்தையில் சீர்க்கேடுகளை உண்டாக்குகின்றன என்று பரம்பரை யாக நம்பப்பட்டு வருகின்றது. நாளமில்லாச் சுரப்பிகளின் கோளாறுகளும் நடத்தையில் மிக முக்கியத்துவம் பெற்றிருக் கின்றன.புலனுணர்ச்சிகளின் குறைபாடுகள்,குறிப்பாகப் பார்த்தல் கேட்டல் ஆகியவை குழந்தையின் பள்ளிக்கூடப் பொருத்தப் பாட்டில் சிரமங்களை உண்டாக்குகின்றன. இந்தக் குறைபாடுகள் வயது வந்த மனிதனுடைய வாழ்க்கைத் தொழிலில் அவனுடைய திறமைகளைக் குறைக்கின்றன. எனவே, உடல்சார்பான கூறுகள் தனிப்பட்ட உளச்சார்பான முக்கியத்துவங்களைப் பெறுகின்றன.

உளச்சமூக வரலாறும் நடைமுறை நிலைமையும்: தனியாளின் நடத்தை வடிவங்கள், மனப்பான்மைகள், வாழ்க்கையின்மீது கொண்டுள்ள நோக்கம் ஆகியவை தனியாள் தன்னுடைய சூழ் நிலைகளோடு கொண்டுள்ள பரிமாற்றச் செயல்களினல் நிர்ணயிக் கப்படுகின்றன. எனவே, தனியாளின் நடத்தையை அறிவதற்கு முன்பு இந்தப் பகுதியைப்பற்றியும் நாம் தெரிந்துகொள்ள வேண் டியிருக்கின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் பல்வேறு வகைகளைச்

சேர்ந்த சமூகக் குழுக்களுடன் பரிமாற்றச் செயல் புரிய வேண்டி யவனாக இருக்கின்றான். குழவிப்பருவத்திலும் குழந்தைப் பருவத் திலும் குடும்பந்தான் மிக முக்கியமான சமூகக்குழுவாக இருக் கின்றது. குழந்தையின் வயது ஏற ஏற, அவன் பெரியவனாக வளர வளரப் பக்கத்து வீடுகள், பள்ளிக்கூடம், விளையாட்டுக் குழுக்கள், வாழ்க்கைத் தொழில் குழுக்கள், பொழுதுபோக்குக் குழுக்கள் முதலியவற்றின் முக்கியத்துவம் வளர்ந்து வருகின்றது. நோயா ளியின் வயதைப்பொறுத்தும், அவனுடைய பிரச்சினைகளின் இயல் பைப் பொறுத்தும் சில பகுதிகளிலிருந்தோ எல்லாப் பகுதிகளிலிருந்தோ கிடைக்கின்ற செய்திகள் தேவையாகவும் முக் கியமாகவும் கருதப்படுகின்றன.

ஒவ்வொரு குழந்தையும் ஒரு குடும்பத்தில் உறுப்பினனாக இருந்து வருகின்றான். எனவே, குழந்தைகளுக்குக் குடும்பந்தான் அடிப்படையான சமூகக்குழுவாக இருந்து வருகின்றது. குழந் தையின் நடத்தையிலுள்ள பிரச்சினைக்கும், பெற்றோர்களின் நடத் தைக்கும், மனப்பான்மைகளுக்கும், குழந்தையை அவர்கள் வளர்க் கும் பழக்கத்திற்கும் மிகுந்த தொடர்புகள் உண்டு என்பதற்கான சான்றுகள் அதிகரித்து வருகின்றன. குடும்பத்தில் என்ன நடை பெறுகின்றதோ அந் நிகழ்ச்சியால் குழந்தை மிகவும் பாதிக்கப் படுகின்றான். குடும்பத்தின் பொருளாதார நிலைமையும், நோயா ளியின் குடும்பத்தில் உள்ள பொருள் சார்ந்த நிலைமையும் பல உண்மைகளைச் சுட்டிக் காட்டுகின்றன. ஏழ்மையான குடும்பத்தி லிருந்து வருகின்ற பையன் திருடுகின்றான். அவனுடைய பிரச்சி னையும் நடத்தையும் செல்வமுள்ள குடும்பத்திலிருந்து வருகின்ற கெட்டுப்போன பையனுடைய நடத்தையும் மாறுனவை.

பொருளாதாரக் குறைபாடுள்ள குடும்பம் மிகுந்த கவலை யையும் சோர்வையும் கொண்டிருக்கின்றது. இவை குடும்பத்தின் எல்லா உறவு முறைகளிலும் பரவியிருக்கின்றன. ஆனல், அதே சமயத்தில் அளவுக்கு மிஞ்சிய பொருளாதார நிலை அளவுக்குமிஞ்சிய செல்வமாகும். அது தனித்திருத்தலையும் வழிகாணும் திறத்தை யும் திக்குமுக்காடச் செய்கின்றது. ஆனல், குழந்தை முற்றிலும் ஒரு குடும்பத்தின் நிலைமைகளால் மட்டும் உருவாக்கப்படுவதில்லை. அவனுக்கு நண்பர்கள் உண்டு. பள்ளிக்கூடத்திற்கு அனுதினமும் செல்லுகின்றான்; இவற்றாலும் மற்றச் சமூக நிறுவனங்களாலும் ஊக்குவிக்கப்படுகின்றான். 'ஒரு குழந்தை தன்னையொத்த குழந் தைகளிடையிலும் ஆசிரியரிடையிலும் எந்த வகையான உணர்ச்சி களைப் பெறுகின்றான்? அவர்களைப்பற்றி என்ன நினைக்கின்றான்?' என்பவையும் கவனிக்கப்பட வேண்டிய செய்திகளாகும். வயது

வந்த மனிதனும் தன்னுடைய நண்பர்களோடும், பணியாளர்க ளோடும், நிருவாகத்தினரோடும், சமூகவாழ்வின் பிரதிநிதிக ளாக உள்ள மனிதர்களோடும் பரிமாற்றச் செயல் புரிகின்றவனுக இருக்கின்றுன். பல்வேறுபட்ட உளவியல் கோட்பாட்டுச் சிந்தனை களைக் கடந்த கால, நிகழ்காலச் செல்வாக்குகளைக் குறைவாகவோ அதிகமாகவோ தனியாள் நடத்தையின் காரணமாகக் குறிக்கின் றன. எந்தக் கோட்பாடும் ஒரு மனிதனின் கடந்த கால அனுப வத்தைப் புறக்கணித்து விடவில்லை.

குடும்பத்தில் ஏற்படுகின்ற முக்கிய மாற்றங்கள் குழந்தையின் பாதுகாப்பு உணர்ச்சியைக் குறைக்கலாம். தந்தையோ, தாயோ இறந்து போதல், குடும்பத்தின் பொருளாதார நிலை சிதறுதல், வேறு குடும்பத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் புதிதாகக் குடும்பத் தில் வந்து சேருதல் முதலியவை குழந்தையின் மனப்பான்மை களையும் நடத்தையையும் வெகுவாகப் பாதிக்கின்றன. அச்சத்தை உண்டாக்கும் அனுபவம், கோபத்தை உண்டாக்கும் நிலைமைகள் ஆகியவை மறக்கப்படக்கூடியவைதான் என்றுலும், அவற்றின் செல்வாக்கு நடத்தை வடிவங்களில் தங்கியிருக்கின்றன.

கல்வியறிவுசார்ந்த துறையிலும் வாழ்க்கைத்தொழில் சார்ந்த துறையிலும் பெறுகின்ற சாதனைகளும் ஒழுங்குமுறையான கல்வி யனுபவங்களின் விளைவுகளும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. தனியாளின் பள்ளிக்கூட வாழ்க்கை வரலாறும் முக்கியமாகக் கருதப்படுகின்றது. அவனுடைய ஒழுங்குமுறையான சாதனையின் குறிப்பேடுகளும், மற்றக் குழந்தைகளுடனும் ஆசிரியர்களுடனும் அவன் பெற்றிருந்த நல்லிணக்கத்தின் வெற்றியும் முக்கியமாகும். குமரப்பருவத்தினருக்கும் வயது வந்தவர்களுக்கும் வாழ்க்கைத் தொழில் அனுபவங்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்த வையாகும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானல், ஒரு மனித னின் வாழ்க்கையில் ஏற்பட்ட எந்த ஓர் அனுபவமும் நம்முடைய இந்தத் தேவையிலிருந்து தள்ளிவிடக்கூடியதாக இல்லை. எனவே, மிகவும் விரிந்து பரவியுள்ள பரிசோதனைச் செய்திகளைக் கொண்டு எந்த வகையான அனுபவங்கள் உளவியல் பொருத்தக்கேடுகளுக்கு நடத்திச் செல்லுகின்றன என்று கருத்துத் தெரிவிக்கும் கோட் பாடுகளை உருவாக்கி, ஆராய்ச்சிகளைத் தொடங்க முடியும்.

வாடிக்கையாளர் எத் திசையில் செல்லுகின்றுரோ அத் திசை யிலேயே உளநோய் நிவர்த்தி உளவியலாரும் அடிக்கடி செல்லு கின்றுர். ஒருவருக்கு எது மிகச் சாதாரணமானதாக இருக்கின் றதோ அதுவே மற்றொருவருக்கு மிகக் கடினமானதாக இருக்

கின்றது. ஏனென்றால், மனிதன் ஓர் உடலுள்ள உயிரினத்தைச் சேர்ந்தவன். ஒவ்வோர் உயிரினமும் வற்புறுத்தல்களுக்கு எதிர்த்து நிற்பதில் மாறுபடுகின்றன.

இங்குக் கூறப்பட்ட விவரங்களையெல்லாம் உடல் பரிசோதனையின்மூலம் சேகரிப்பதோடல்லாமல் பேட்டி மூலமும் சேகரிக்கலாம். பேட்டி என்பது நோக்கத்தோடு நடத்தப்படுகின்ற ஓர் உரையாடல். பேட்டி தற்செயலாக நடைபெறுகின்ற உரையாடலிலிருந்து ஒழுங்குமுறையாக உருவாக்கப்பட்ட வினாக்களை உபயோகித்து விடைகளைப் பெறுகின்ற முறை வரையில் பல்வேறு படித்தரங்களில் நடைபெறலாம். கேட்கப்படுகின்ற வினாக்களின் தன்மைகளுக்கு ஏற்ப உரையாடல் வெற்றிகரமாக அமையலாம். மேலும், உளநோய் நிவர்த்தி உளவியலார் வாடிக்கையாளரிடம் எத்தகைய தொடர்புறவை நிலைநாட்டுகின்றாரோ அதைப் பொறுத்தும் பேட்டி வெற்றி பெறுகின்றது. எவ்வாறிருப்பினும், இந்தப் பகுதிகளில் சேர்க்கப்படுகின்ற செய்திகள் பேட்டியின் மூலம் ஊகித்தறிந்த செய்திகளைக்கொண்டும், உளவியல் சோதனைகளைக்கொண்டும், சேகரித்த செய்திகளைக்கொண்டும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

நடத்தை மாதிரிகள்: உளவியல் சோதனைகளையும் உபயோகித்துச் சேகரிக்கின்ற விவரங்கள் முன் முறைகளில் சேகரித்த விவரங்களுக்குக் குறை நிரப்பும் செய்திகளாக அமைகின்றன. ஆனால், சில வரலாற்று நிகழ்ச்சிகளில் உளவியல் சோதனைகளை மட்டுமே உபயோகிக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். ஒரு வரையளவாக்கப்பட்ட சூழ்நிலையில் ஒரு தனியாளின் நடத்தையை ஒரு மாதிரியாக உபயோகிப்பதுதான் உளவியல் சோதனை என்று வரையறை செய்யப்படுகின்றது. ஒரு வரையறுக்கப்பட்ட சூழ்நிலையில் ஒரு வாடிக்கையாளரிடம் ஓர் உளவியல் சோதனையைக் கொடுக்கப்பட்டபொழுது என்ன செய்கின்றார் என்பது வெளிப்படுகின்றது. உளநோய் நிவர்த்திச் சூழ்நிலையில் தனியாள் சோதனைதான் உபயோகிக்கப்படுகின்றது. ஏனென்றால், உளவியலார் ஒரு வாடிக்கையாளரைத் தனித்து நோக்கிச் சரியான விவரங்களைச் சேகரிக்க முடியும். சோதனை, தனியாள் சோதனையாக இருந்தாலும், குழுச் சோதனையாக இருந்தாலும் அதிலிருந்து பெறப்பட்டவை பலவகைக் கெலிப்பு எண்களாக இருக்கின்றன. அவன் அதை எவ்வாறு செய்தான் என்பது விடையின் சரியான தன்மை போன்றும், தப்பான தன்மை போன்றும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. சில சோதனைகள் குறிப்பாக மனப்பான்மைகள், கவர்ச்சிகள், ஆளுமை ஆகியவற்றை ஆராய்வதற்

காக உருவாக்கப்பட்ட சோதனைகள் சரியான விடைகளைக் கொண்டிருக்கின்றனவா தப்பான விடைகளைக் கொண்டிருக்கின்றனவா என்று கூற முடியாது. எனவே, நோயாளி சோதனையை எவ்வாறு செய்தான் என்பதும் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றது.

சோதனையின் கெலிப்பு எண்கள் எந்த இடத்தில் ஒப்பீட்டடிப்படையில் மனநிறைவுள்ளதாக இருக்கின்றது என்பதுதான் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். நுண்ணறிவுச் சோதனைகள் இந்த வகையைச் சேர்ந்தவையாகும். வாடிக்கையாளர் எத்தனைக் கடமைகளைச் செய்ய முடியுமோ அத்தனை கடமைகளைச் செய்ய வேண்டும். கடமைகளைப் புரிந்து கொள்ளுவதும், மொழியை உபயோகிப்பதும் சோதனைகளில் அடங்கியிருக்கின்றன. உதாரணமாக, பினெட் (Binet) சோதனையும் அதன் திருத்தங்களும் உபயோகிக்கப்படலாம். கையாலிழைக்கப்படும் செயல் நிறைவேற்றச் சோதனைகளும் உபயோகிக்கப்படலாம். அவை கடமையின் உள்காட்சியின்மீது உருவாக்கப்பட்டவை. உதாரணமாக, உருவப்பலகைகள், படத்தை முழுமையாக்கும் சோதனைகள், சிக்கலறைச் சோதனை முதலியவை இந்த வகையைச் சேர்ந்தவை.

தேவையான அளவு செயல்நிறைவேற்றத்தை வலியுறுத்தாமல், குழந்தைகள் அல்லது வயது வந்தோர் பகுதியிலிருந்து பெரும் பிரதிநிதித்துவக் குழுக்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களிடம் சோதனைகளைச் செலுத்திப்பெற்ற தரங்களோடு (norms) தனியாளின் கெலிப்பு எண்கள் ஒப்பிடப்படுகின்றன. சோதனைகளிலிருந்து பெற்ற கெலிப்பு எண்கள் பல வகைகளில் கணக்கிடப்படுகின்றன. வெற்றிகள், தோல்விகள், காலம், பிழைபாடுகள் முதலியவை துலங்கலின் பண்புகளுக்காக அமைக்கப்பட்ட ஒழுங்கு முறைப்படிக் கணக்கிடப்படுகின்றன. கணக்கிடப்பட்ட முடிவுகள் செயல் நிறைவேற்ற வயது அல்லது மன வயது, நுண்ணறிவு ஈவு என்று அடிக்கடி குறிப்பிடப்படுகின்றன.

இவற்றினுடைய பொருள் என்னவென்றால், ஒரு குழந்தையின் மனவயது ஒன்பதாக இருந்தால், அவனுடைய செயல் நிறைவேற்றம் ஒன்பது வயதுக் குழந்தைகளின் சராசரிச் செயல் நிறைவேற்றத்துடன் சமமாக இருக்கின்றது என்பதாகும். மனவயது தானாகவே பொருளுடையதன்று. பரிசோதிக்கப்படுபவரின் வயது தெரிந்தால்தான் மனவயது முக்கியத்துவம் பெறுகின்றது. உதாரணமாக, ஒன்பது வயது பையனுடைய செயல் நிறைவேற்றம் ஆறு வயது பையனுடைய செயல் நிறைவேற்றத்தி

லிருந்தும் இருபத்திரண்டு வயது மனிதனின் செயல் நிறை வேற்றத்திலிருந்தும் முற்றும் வேறுபட்டிருக்கின்றது. வயதினால் ஏற்படுகின்ற செயல் நிறைவேற்ற வேறுபாடுகளோடு தொடர்பு ஏற்படுத்தி எளிதாக அவற்றை விளக்கும்பொருட்டு இரண்டு மதிப்பீடுகளிடையே விகித அளவு உபயோகிக்கப்படுகின்றது. அது,

$$\frac{\text{மனவயது}}{\text{காலக்கிரம வயது}} \times 100 = \text{நுண்ணறிவு ஈவு என்பதாகும்.}$$

நுண்ணறிவுச் சோதனைகள் உபயோகிக்கப்படும்பொழுதெல்லாம் இந்த விகிதம் உபயோகிக்கப்படுகின்றது. நுண்ணறிவு ஈவு பிழை பாடுகளுக்கு அப்பாற்பட்டதன்று. கிடைக்கக்கூடிய செய்திகளைக் கவனமாக விளக்கிக்கூறும்பொழுதுதான் அதனுடைய மதிப்புப் பொருளுள்ளதாக இருக்கின்றது. உடல்நலக் குறைவு, மன வெழுச்சித் தொல்லை, பரிசோதனையாளரிடம் அச்சம், பரி சோதனையாளரிடம் கவனமின்மை முதலியவை நுண்ணறிவுச் சோதனையின் கெலிப்பு எண்களைக் குறைத்துவிடும்.

நுண்ணறிவுப் பரிசோதனையில் ஸ்டேன்போர்டு-பினெட் சோதனையை உபயோகித்துப் பார்த்ததில் சோதனையின் செயல் நிறைவேற்றத்திற்கும் பள்ளிக்கூடச் சோதனைக்கும் குறிப்பிடத் தக்க தொடர்புறவு இருப்பதாகக் கண்டறிந்திருக்கின்றனர். ஆகையினால், சோதனையின் செயல் நிறைவேற்றத்தில் குறைந்த கெலிப்பு எண்கள் குறைந்த சாதனையைக் காட்டுகின்றன. ஒரு மாணவன் மேற்கொண்டு பள்ளியில் படிப்பைத் தொடருவதா வாழ்க்கைத் தொழிலில் பயிற்சி பெறுவதா என்பதை முன்கூடி அறிவதற்கு நுண்ணறிவுச் சோதனைகள் உதவுகின்றன.

மொழிச் சோதனை, கையாளும் சோதனை ஆகிய இரண்டி னுடைய செயல் நிறைவேற்றங்களை ஒத்திட்டுப்பார்த்து எதில் திறமை அதிகம், எதில் திறமை குறைவு என்று கண்டறியலாம். எனவே, நுண்ணறிவுச் சோதனைகளின் முடிவுகள் நடத்தையி லுள்ள பிரச்சினைகளின் காரணக்கூறுகளை வெளிப்படுத்துகின்றன; இயல்பு நிலையிலிருந்து விலகிச் சென்றவர்களின் திறமைகளை நிலை நாட்டி, நடத்தையின் சீர்கேட்டிலுள்ள காரணங்களைச் சுட்டிக் காட்டுகின்றன.

வேற்றுமைக்குரிய மூலத்தையறிவதில் பிரச்சினை எழும் பொழுது உளவியல் சோதனைகள் மிகுந்த அளவுக்கு உபயோகிக் கப்படுகின்றன. மூலமறிவதிலிருந்து தனியாளின் நடத்தையின் போக்கை முன்கூட்டியறிவதில் நம்பிக்கை கொள்ளலாம். நிலைமைகளின் காரணங்களைப் போக்குவதற்குப் பொருத்தமான

நடவடிக்கை என்ன எடுப்பது என்பது பற்றிய விவரமும் கிடைக்கப் பெறும். ஆகையினால், மூலமறிவதில் சரி நுட்பமிருக்க வேண்டும்.

பொதுவான கூராய்வுகளும் பேட்டியும் ஒரு வகையான சீர் கேடுகளிலிருந்து மற்றொரு வகையான சீர்கேடுகளை வேறுபடுத்திக் காட்டுவதற்குப் போதிய செய்திகளைத் தர முடியாது. சில அறி குறிகள் ஒரு வழியிலும், சில அறிகுறிகள் மற்றொரு வழியிலும் செல்லலாம். ஆகையினால்தான் வேற்றுமைக்குரிய மூலமறிதலின் முயற்சிகள் உளவியல் சோதனையின் அடிப்படையிலிருந்தால்தான் பயனுடைய முடிவுகளைப் பெற முடியும்.

நுண்ணறிவுச் சோதனைகளைத் தவிர, வேறு வகையான கருவி களும் உளவியல் சோதனைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் முக்கியமானதொரு வகையாகக் கருதப்படுவது சாதனைச் சோதனைகளாகும். பள்ளிக்கூடப் பாடத்திட்டத்தில் சில குறிப்பிட்ட பாடப்பொருள்களை வரையளவாக்கப்பட்ட தேர்வுகள்தான் சாதனைச் சோதனைகள். இந்தச் சோதனைகள் ஆரம்பப்பள்ளிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரி களிலும், எல்லாப் பாடங்களிலும் கிடைக்கப் பெறுகின்றன. உள நோய் நிவர்த்தி உளவியலாருக்குப் பள்ளிக்கூடச் சாதனைகளை அளப்பதற்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பொறுத்துத்தான் இச் சோதனைகளின் மதிப்பீடுகள் இருக்கின்றன.

சில வகையான வேலைகளுக்கு இயற்கையாற்றல் சோதனைகள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாக இருக்கின்றன. உதாரணமாக, பொறித் திறமை, இயக்கத் திறமை, இசைத் திறமை, கலைத் திறமை, எழுத்தகர் திறமை ஆகிய துறைகளில் இயற்கையாற்றல் சோதனைகள் அத் துறைகளில் வெற்றிகரமாகப் பணி செய்யக் கூடியவர்களை வெளிப்படுத்திக் காட்டுகின்றன. இயற்கை யாற்றல் சோதனைகளும் நுண்ணறிவுச் சோதனைகள், சாதனைச் சோதனைகள் போன்று தகுதிபெற்ற துறைகளில் திறமைகளைப் பற்றிச் செய்திகளைச் சேகரிக்க உளநோய்ப் பேணகத்தில் உப யோகிக்கப்படுகின்றன. குறிப்பாக, எதிர்காலத்தில் ஒருவருடைய செயல் நிறைவேற்றம் எவ்வாறு இருக்கும் என்று முன்கூட்டியே கணிப்பதற்கு இயற்கையாற்றல் சோதனைகள் பெரிதும் உள நோய் நிவர்த்தி உளவியலாருக்குப் பயன்படுகின்றன.

வாழ்க்கைத்தொழில்துறையில்ஒருவருடையதனிநலன் அல்லது கவர்ச்சி எவ்வாறு இருக்கின்றது என்பதைக் கண்டறிய கவர்ச்சிச் சோதனைகள் உபயோகிக்கப்படுகின்றன. பல்வேறுபட்ட துறை

களில் ஒருவருடையகவர்ச்சியின் படித்ததரத்தை அளவிடுவதற்கும் அவர் மற்றப் பொதுமக்கள் தொகுதியிலிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கின்றார் என்று காண்பதற்கும், சில வாழ்க்கைத் தொழில்களில் வெற்றிகரமாகச் செயல்படுகின்றவரோடு திறமையில் எந்த இடத்தில் நிற்கின்றார் என்று காண்பதற்கும், அவருடைய வாழ்க்கைத்தொழில் வெற்றியை முன்கூட்டியே கணிக்கவும் கவர்ச்சிச் சோதனைகள் பெரிதும் பயனுடையவையாக இருக்கின்றன.

இங்குக் கூறப்பட்ட சோதனைகள் மட்டுமன்றித் தனியாள்களின் பண்புக்கூறுகளை வெளிப்படுத்தக்கூடிய ஆளுமைச் சோதனைகளையும் உளநோய் நிவர்த்தி உளவியலார் உபயோகிக்கின்றனர். ஆளுமைப் பண்புகளை அளக்கும் ஆளுமை வினாத்தொகுதிகள் உளநோய் நிவர்த்தித் துறையின் உபயோகத்திற்காக உருவாக்கப்பட்டு, தகுதியாக்கப்பட்டிருக்கின்றன. உளவியல் சோதனைகளை உருவாக்கும் தொழில் நுட்பம் சோதனைக்குச் சோதனை வேறுபடுகின்றது. ஆனாலும், அந்தச் சோதனைகள் எல்லாம் சூழ்நிலைகளில் தனியாளின் நடத்தையைப்பற்றி அறிய அவருடைய சொல் விவரத்தைத்தான் கேட்கின்றனர். அவை சோதனையின் உருப்படிகளாகத் தரப்படுகின்றன. சோதனைகளின் துலங்கல்கள் பெரும்பாலும் உண்மை அல்லது தவறு என்ற மாற்று விடைகளைக் கொண்டவையாகவே இருக்கின்றன. சில சோதனைகளில் உருப்படிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், விலக்கப்பட்டாலும் எந்தப் படித்தரத்தில் அமைகின்றன என்று அறியப்படுகின்றன. இந்த முறையில் மின்ன சோட்டா ஆளுமைப் பலகூற்றுப் பட்டியல் மிகப் பெரும்பாலானவர்களால் உபயோகிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச் சோதனைகளையெல்லாம் மிகக் கூர்மையான முறையில் உபயோகிக்க வேண்டுமென்ற போக்கு அண்மைக்காலத்தில் உளவியலாரிடையே நிலவத் தொடங்கியிருக்கின்றது. அதன் பொருட்டுக் கெலிப்பு எண்கள் கணிதமுறைப்படிக் கையாளப்படுகின்றன. பின்னேக்கச் சமன் தொடர் (regression equation) முறையை உபயோகிக்கின்றனர். இம் முறையின்மூலம் ஆளுமையின் இன்றைய நிலைபற்றியும், வருங்கால நடத்தைபற்றியும் குறிப்பாக முன்கூட்டிக் கணிக்க முடியும். ஆளுமையை அளவிடும் பொருட்டு முதன்முதலில் இம் முறையை உபயோகித்தவர்கள் கருதுவது என்னவென்றால், இச் சோதனைகள் ஏற்புடையவை மட்டுமன்று, உளநோய் நிவர்த்தி உளவியலார் காலத்தையும் இச் சோதனைகளின்மூலம் மிச்சம் செய்யலாம்; மேலும், நிவர்த்தி முறைகளை நல்ல முறையிலும் உபயோகிக்கலாம்.

ஆளுமைப் பண்புக்கூறுகளை அளவிடுவதில் புறத்துருவ ஆளுமைச் சோதனைகள் மிகவும் முக்கியமாகக் கருதப்படுகின்றன. இச் சோதனைகள் மேலே நாம் விவரித்த சோதனைகளிலிருந்து வேறுபடுகின்றன. புறத்துருவச் சோதனைகள் பல்வேறு வகைகளில் இருக்கின்றன. ஆனால், இந்த வகைச் சோதனைகளின் முக்கிய சிறப்புக்கூறு என்னவென்றால், அளவீடு செய்யும்பொழுது தனி மனிதனோ, குழந்தையோ கொடுக்கப்பட்ட தூண்டலுக்கு என்ன செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றான். கொடுக்கப்படுகின்ற தூண்டல் முழுமையாக அமைக்கப்பட்டதன்று. சோதனையின் அமைப்புகள் படங்களாகவும்,மை-புள்ளிகளாகவும், பொம்மைகளாகவும், ஓவியப்பொருள்களாகவும், சொற்களாகவும் நிறைவடையாத சொற்றொடர்களாகவும் இருக்கின்றன. தெளிவின்மையோடு இருபொருள் உள்ளதாகவும், முரண்பாடுள்ள பொருள்கள் உள்ளதாகவும் தூண்டல்கள் இருக்கின்றன. இவை ஒருவருடைய ஆளுமையின் பண்புகளுக்கேற்ப எந்த வகையான விளக்கத்தைக் காணவும் இடந்தருகின்றன. தூண்டலுக்குத் தரப்படுகின்ற துலங்கல் தூண்டலின் தன்மையைவிட ஆளுமையின் இயக்கத்தினால்தான் மிக அதிகமாக நிர்ணயிக்கப்படுகின்றது.

ஆளுமையை அளவிடுவதற்கு உபயோகிக்கப்படுகின்ற முறைகளில் மிக அதிகமாக உபயோகத்திலுள்ளது ரோஷாக் உளப் பண்பு ஆய்ந்தறிதல் சோதனை (Rorschach Psychodiagnostic Test) ஆகும். நுண்ணறிவுச் செயல்முறையின் பண்புக்கூறுகள், தனியாளின் உணர்ச்சி வாழ்க்கையின் இயக்கங்கள் ஆகியவற்றை அளவிடுவதற்கு இச் சோதனை பயன்படுத்தப்படுகின்றது. இச் சோதனையில் மை-புள்ளிகள் வரையளவாக்கப்பட்ட அட்டைத் தொடர்கள் இருக்கின்றன. சில நிறங்களிலும் - சில கருப்பு வெள்ளையாகவுமிருக்கின்றன. முதல் அட்டை தனியாளிடம் கொடுக்கப்படுகின்ற பொழுது சிறிது அறிவுரை தரப்படுகின்றது. தனியாள் அந்த அட்டையில் என்ன பார்க்கின்றார், என்ன பொருள் உள்ளதாகத் தோன்றுகின்றது என்று கேட்கப்படுகின்றார்; அதைப் பார்த்தபிறகு அதில் பார்த்தவற்றைப்பற்றிக் கூறுகின்றார். சூழ்நிலை என்னவாக மாறுகின்றதோ அது தனியாளைச் சார்ந்ததாக இருக்கின்றது. மை-புள்ளிகள் தெளிவான அமைப்புகளைக் கொண்டிருக்கவில்லை. ஒவ்வோர் அட்டையும் ஒரே மனிதனிடமிருந்து தனித்தனி விளக்கத்தைப் பெறக் கூடியதாக இருக்கின்றது.

தனியாள் ஒரு சமயத்தில் ஒரு குதிரையைக் காணலாம்; மற்றொரு சமயத்தில் பசுவைக் காணலாம்; மற்றொரு சமயம் மரத்

தைக் காணலாம். தனியாள் துலங்குவதற்கு எடுத்துக்கொள்ளு கின்ற காலம், அட்டைகளைக் கொடுக்கின்ற முறை, கொடுக்கப் படுகின்ற துலங்கல்கள் ஆகியவை உளவியலாரால் பதிவு செய்யப் படுகின்றன. அவர் அவற்றைப் பதிவு செய்துகொண்டு, வகுக்கப் பட்ட முறைப்படி ஒவ்வொரு துலங்கலுக்கும் கெலிப்பு எண்களைத் தருகின்றார்.

புறத்துருவச் சோதனை வகையைச் சேர்ந்ததுதான் ரோஷாக் மை-புள்ளி சோதனையும். ஏனென்றால், மை-புள்ளி என்ன பொருளைத் தந்தாலும் அப் பொருள் புறத்துருவமானதேயாகும். இந்தப் பொருள் தனியாளின் உள்ளத்திலிருந்து வெளிவந்த தாகும். ஒரு மை-புள்ளி அட்டையை இரண்டு மனிதர்கள் ஒன்று போலவே காண்பதில்லை; ஒரே பொருளையும் தருவதில்லை. இரு வேறு வகையாக நோக்குகின்றனர்; இரண்டு பொருள்களைத் தருகின்றனர். இஃது அவரவர்களின் ஆளுமைப் பண்புகளைப் பொறுத்திருக்கின்றது.

இச் சோதனையில் தனியாள் எந்த வகையான கட்டுப்பாட்டுக் குள்ளும் அடைக்கப்படாததால், தன்னிச்சையாகத் துலங்கல் களைத் தரலாம். உளநோய் நிவர்த்தி உளவியலாரின் முன்னிலை யில் தனியாள் நிறைவாகச் செய்வது என்னவென்றால், அவர் மகிழ்ச்சியடைகின்ற வகையில் மை-புள்ளி அட்டையைப்பற்றி விளக்கம் தருவதாகும். அந்த விளக்கத்தைப் பிரச்சினையோடு தொடர்புபடுத்திப் பாகுபாடு செய்வது நிவர்த்தி உளவியலாரின் கடமையாக இருக்கின்றது. ஆனால், சில உளவியலார் இம் முறையில் புறவயத் தன்மை குறைவாக இருக்கின்றது என்று கருதி மகிழ்ச்சிகொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். சாதாரண முறைகளிலுள்ள அறிவியல் பரிசோதனையை இதில் நடத்துவது மிகவும் கடினமாகும். இம் முறையின் முதல் ஆதர வாளர்கள் கூறுவது என்னவெனில், சாதாரண முறைகளிலுள்ள ஏற்புடைமை அளவுகள் புறத்துருவச் சோதனைகளுக்குப் பொருந்துவனவாக இல்லை என்பதாகும். இக் கருத்து மற்ற வர்கள் இச் சோதனையைப் பற்றிக்கொண்டிருந்த சந்தேகத்தை மேலும் அதிகப்படுத்துவதாக இருக்கின்றது.

பெரும்பாலான ஒழுங்குமுறையான ஏற்புடைமை ஆராய்ச் சிகள் எல்லாம் பல உளவியல் முறைகளைப்பற்றி விளக்குகின்றன. ஆனால், இம் முறையில் மட்டும் அவை ஏமாற்றத்தைத் தருகின் றன. எனவே, உளநோய் நிவர்த்தி உளவியலார் தங்களுடைய பல்லாண்டுகளின் தொழில் அனுபவத்தின்மூலமாகத் தாங்களே வரையளவுகளை விருத்தி செய்துகொண்டு, சோதனைகளைப்

பயனுடையவையாகவும், பொருளுள்ளவையாகவும் ஆக்கிக் கொண்டனர். இந்த வகையில் ஒழுங்கு செய்யப்பட்டு வெளியிடப்பட்டது ஹோல்ஸ்மன் மை-புள்ளி தொழில் நுட்பம் (Holtzman Ink-blot Technique) ஆகும். இது ரோஷாக் சோதனை முறையிலேயே அமைக்கப்பட்டதாகும். இஃது ஏற்றுக்கொள்ளப்பட்ட உள அளவு கோட்பாட்டு அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டதாகும். நிவர்த்தித்துறைக் கருவிகள் ஆளுமையின் மற்ற பண்புக்கூறுகள், மனவெழுச்சித் திடநிலை, இயக்க ஒருமுகப்பாடு, புலன்கூர்மை, சமூகப்பக்குவம் ஆகியவையும் அளவிடுகின்றன.

உளநோய் நிவர்த்தி முறைகள்: உளநோய் நிவர்த்தி உளவியலார் உபயோகிக்கின்ற மூலமறியும் முறைகள் பல நிகழ்ச்சிகளில் அடிப்படைஒற்றுமைகள்கொண்டவையாகஇருந்தாலும்முற்றிலும் அவை ஒரே மாதிரியானவையல்ல. சில நிவர்த்தி முறைகள் தனி மூலமறியும் முறைகளாக இருக்கின்றன. அவை நிவர்த்திச்செயல் முறைகளோடு நேரடித் தொடர்பு கொண்டிருக்கின்றன. ஆனால், அவை மூலமறிதலின் ஒழுங்குமுறையான தோற்றம் என்று கூற முடியாது. இந்த முறைகளிலுள்ள குறைபாடுகளை நாம் பொருட்படுத்தவில்லை என்றாலும், ஒரு நிவர்த்தி முறையைப்பற்றிப் பேச முடியாதவர்களாக இருக்கின்றோம். ஏனென்றால், எல்லா மூலமறியும் செயல்முறைகளும் ஒரே மாதிரியாக இருக்கலாம்; நிவர்த்தி முறைகள் விரிவாக மாறுபடலாம். ஆகையினால், ஒவ்வொரு புதிய வாழ்க்கை நிகழ்ச்சிக்கும் எளிதாக ஏற்புடையதாக இருக்கின்ற நிவர்த்திமுறைத் திட்டத்தை அமைக்க முடியாது.

எல்லா முறைகளும் பொதுத்தன்மையுடையவையாகவே இருக்கின்றன. சூழ்நிலையில் தனியாள் தன்னைப் பொருத்தப்பாடு செய்து தன்னுடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ளும் நிகழ்ச்சியின் நிலைமைகள் எல்லா முறைகளிலும் பொதுவாகத் தோன்றுகின்றன. உளநோய் நிவர்த்தி முறைகளை மூன்று வழிகளில் செயல்படுத்துகின்றன. ஆனால், எந்த ஒரு தனி வழியும் முழுமை பெற்றதென்று கொள்ள முடியாது. அவை உளக்குண முறை, சூழ்நிலையைக் கையாளுதல், முன்னறிந்து தடுத்தல் என்பவை. அவற்றைப் பற்றிச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

உளக்குண முறை: உளக்குண முறைக்கு நீண்டதொரு வரலாறு இருக்கின்றது. அது படிப்படியாக வளர்ந்து வந்திருக்கின்றது. எனவே, அதனுடைய செயல் முறைகள் பல இருக்கலாம். ஆனால், இரண்டு செயல் முறைகள் அடிக்கடி பேசப்பட்டு வருகின்றன. அவை உதவிசெய் மருத்துவம் (supportive therapy), உள்நோக்கு மருத்துவம் (insight therapy) என்பவை.

முதல்முறை தனியாளுக்குத் தேவையான உதவியை வழங்கு கின்றது. அவனை முதலில் வாழ்க்கைத் தடுமாற்றத்திலிருந்து பாதுகாக்கும்பொருட்டுத் தேவையான உதவிகள் அளிக்கப்படு கின்றன. ஆனால், இந்த உதவிகள் எந்த வகையிலும் தனியாளின் நிலையான ஆளுமையில் செல்வாக்குப் பெறுவதில்லை. ஒரு தனி யாள் ஒரு பிரச்சினையுடையவனாக இருக்கின்றான்; சில சூழ்நிலைத் தொல்லைகளின் காரணமாக மனவெழுச்சி நிலைகுலைவுக்கு ஆட்பட் டிருக்கின்றான். அவன் என்ன செய்ய வேண்டுமென்று கருத் தேற்றம், இணங்குவித்தல், செய்தி, ஒழுங்குமுறைகள் ஆகியவற் றின்மூலம் உதவி செய்யப்படுகின்றான். ஒரு முறை அவன் தன்னு டைய துன்பங்களில் வெற்றி காண்பானாலும், மறுபடியும் அவன் முன்பு இருந்த நிலைக்குச் செல்லுகின்றான். நோய் அறிகுறிகளைப் போக்குதல் இந்த வகையைச் சேர்ந்ததாகும். இம் முறையின் மூலம் மருத்துவம் செய்யும்பொழுது நோயின் அடிப்படைக் காரணத்தைக் காண வேண்டியதில்லை.

உதாரணமாக, ஹிஸ்டீரியாவினால் ஏற்படுகின்ற குருடை அறிதுயில் கருத்தேற்றத்தின்மூலம் போக்க முடியும். ஆனால், நோயாளி உண்மையான குருடாக இருக்கக் கூடாது. ஆனால், நோய் அறிகுறியைத் தோற்றுவித்த உள இயக்க அடையாளம் தொடர்ந்து காணப்படுமானால், குருடு மறுபடியும் ஏற்படலாம். அல்லது நோயாளியின் மாறாத ஆளுமை வடிவம் வேறு நோய் அறிகுறிகளின் தோற்றத்தில் முடிவுறலாம். உதாரணமாக, ஒரு கையில் உணர்ச்சி இழத்தலாக நோய் அறிகுறி தோன்றலாம். எனவே, தனியாளிடம் மாற்றம் ஏற்படவில்லை. ஆனால், முதல் நோய் அறிகுறி மறைந்து போய்விட்டது. என்றாலும், இருந்து வருகின்ற நம்பிக்கை என்னவென்றால், முதலில் தோன்றிய அதே நோய் அறிகுறி மறைந்து போய்விட்டதாலும் வேறு வடிவத்தில் அது மறுபடியும் தோன்றுகின்றது என்பதாகும்.

ஆனால், சில உளநோய் நிவர்த்தி உளவியலார் நோய் அறிகுறியையும் நோயையும் சரி நிகராகக் கொள்ளுகின்றனர். அவர்கள் கொண்டுள்ள ஓர் அடிப்படையான கருத்து என்ன வென்றால், கற்றல் செயல்முறையின்மூலந்தான் நோய் அறிகுறி பெறப்படுகின்றது என்பதாகும். எனவே, கற்றல் விதிமுறை களைச் செயல்படுத்துவதன்மூலம் நோய் அறிகுறியைப் போக்க முடியும் என்று நம்புகின்றனர். நோய் அறிகுறி அகற்றப்பட்ட போது நோயின் காரணமும் அகற்றப்பட்டுவிட்டது. அது மறு படியும் தோன்றுவது எதிர்பார்க்கக் கூடியதன்று; தானாகவும்

தோன்றக்கூடியதன்று. இந்த முறையை எடுத்துக்காட்டுகள் மூலம் ஐசங் (Eysenck) போன்ற இன்றைய உளவியலார் விளக்கிக் கூறியுள்ளனர்.

அறிவுரை கூறலும் வழிகாட்டலும் உதவிசெய் மருத்துவ முறையைச் சேர்ந்தவையாகும். தன்னுடைய வாழ்க்கைத் தொழிலைப்பற்றித் தெளிவான முடிவுகொள்ள முடியாத இளைஞன் மூலமறிதல் செயல்முறைக்குப் பிறகு தன்னுடைய திட்டங்கள் பொருத்தமானவைதான் என்று மறு உறுதியை அவன் செய்யலாம். பெரும்பாலான நிகழ்ச்சிகளில் வேறொன்றும் தேவைப்படுவதில்லை. தனியாளின் ஆளுமை வலிமை வாய்ந்ததாக இருக்குமானால், ஒரு தற்காலிக மருத்துவமே எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவிடுகின்றது. வேறு எந்த வகையான உதவியும் தேவையில்லை. அதற்கு மேலும் ஏதேனும் தேவைப்படுமா என்று கண்டறிவதும் அவ்வளவு எளிதன்று. வாழ்க்கைத் தொழில் சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வரமுடியாத காரணத்தால் உளநோய் நிவர்த்தி உளவியலாரிடம் செல்லுகின்ற இளைஞன் தன்னுடைய உண்மையான நோக்கத்தைப் பிரதிபலிக்கவும் செய்யலாம்; பிரதிபலிக்காமலும் இருக்கலாம்.

உதாரணமாக, அந்த இளைஞன் யாரேனும் ஒருவரைச் சார்ந்திருக்க வேண்டுமென்று தணியாத ஆசை கொண்டவனாக இருக்கலாம். இந்த ஆசை அவனுடைய தெளி உணர்நிலைக்கே கூட மறைவாக இருக்கலாம். இது ஆழ்ந்த நோய்க் குறியாகவும் மிகவும் கடுமையான ஆளுமை முரண்பாடாகவும் தோன்றலாம். வாழ்க்கைத்தொழில் பிரச்சினை அவனிடம் நீக்கப்பட்டாலும் மற்றப் பிரச்சினைகள் அதனுடைய இடத்தில் தோன்றலாம். அறிவுரை கூறலிலும் வழிகாட்டலிலும் இவ் வகையான நிகழ்ச்சிகள் ஒருசில இருக்கலாமே தவிர, அடிக்கடி காணப்படுவதாக நினைக்க வேண்டியதில்லை.

மற்றொரு முறையான உளநோக்கு மருத்துவம் வாடிக்கையாளரை மையமாகக்கொண்டு அணுகுதலாகும்; ஒரு முடிவுக்கு வற்புறுத்தாத முறை. இம் முறையானது மனப்பாகுபாட்டுக் கோட்பாட்டுக் கிளையைச் சார்ந்த ரோசர்ஸ் (Rogers) என்பவரால் போற்றி வளர்க்கப்பட்டது. ஆனால் இம் முறை உளவியலார் மத்தியில் குறிப்பிடத்தக்க வகையில் உடனடியாகச் செல்வாக்குப் பெற்ற நிவர்த்தி முறையாகக் கருதப்பட்டது. வாடிக்கையாளரை மையமாகக்கொண்ட இம் முறை மிகவும் உடன்பாடான கருத்தை வெளிப்படுத்துகின்றது. வாடிக்கையாளரி

தன்னைப்பற்றிப் புரிந்துகொள்ளுகின்ற உண்மைகளின்மீது இம்முறை வலிமை பெறுகின்றது. நிவர்த்தி உளவியலார் எதையும் அனுமதிக்கின்ற மனப்பான்மைமூலமும் வாய்ச்சொல்மூலமும் வாடிக்கையாளரைச் சுதந்தரமாகப் பேச விடுகின்றார்; பேசும் படித் தூண்டுகின்றார். அவனுடைய உணர்ச்சிகளைப்பற்றிச் சுதந்தரமான கருத்து வெளியிடுவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப் படுகின்றான்.

இம் முறையில் வாடிக்கையாளரின் உணர்ச்சி சார்பான கருத்து என்னவோ அதற்கு மட்டுமே நிவர்த்தி உளவியலார் துலங்குகின்றார். அறிவுரை கூறுவதையோ, இணங்கும்படிச் செய்வதையோ உளவியலார் கவனமாகப் புறக்கணித்து வருகின்றார். எனவே, வாடிக்கையாளரோடு செயலற்ற ஒரு பங்கையே உளவியலார் செய்து வருகின்றார். வாடிக்கையாளரிடம் உள்நோக்கை உண்டாக்குவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ள உளவியலார் அதில் என்ன நடைபெறுகின்றது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. வெளிப்படுத்தப்பட்ட உணர்ச்சிகள் போதுமென்றே, தன்னுடைய கருத்தைப் பிரதிபலிக்கும் சொற்களையோ கூறுவதில்லை.

நோயாளியிடம் தன்னுடைய ஆளுமையை வளர்த்துக் கொள்ளும் ஆற்றல் நிறைய இருக்கின்றது என்று கருதிய உளவியலார், நோயாளி தன்னைப் புரிந்து கொள்ளுதலையும், சுதந்தரத்தைப் பெற வேண்டும் என்பதையும் நினைக்கின்றார்; இந்த வழியில் செல்லுகின்ற பொழுது சில இடங்களில் வேறு கூட்டத் தொடர்கள் தேவையில்லை என்றும் கருதுகின்றார். எனவே, மூலமறியும் செயல்முறைகளின்மீது குறைந்த கவனமே செலுத்தப்படுகின்றது.

உளமருத்துவர்களும் உளவியல் வல்லுநர்களும் இம் முறையைப்பற்றிக் கடுமையாகக் குறை கூறுகின்றார்கள். போதிய பயிற்சியில்லாத பணித்துறையினர் மேலோட்டமாகச் சிக்கலான பிரச்சினைகளை அணுகுகின்றனர் என்று அவர்கள் கூறுகின்றார்கள். வெறுமனே உணர்ச்சிகளை ஏற்றுக் கொள்ளுவது மட்டும் போதாது. அறிவுரை கூறுவோர் உணரவில்லை என்றாலும் முயற்சியுடன் வழி காட்ட வேண்டிய நிலை உண்மையில் இருக்கின்றது. அந்த வழி காட்டும் முறை தெளிவாக மருத்துவர்களின் கையில்தானிருக்கின்றது. உள்நோக்கில் சில ஈடுபடுகின்ற வாடிக்கையாளரிடம் அது விடப்படவில்லை. அறிவுரை மூலமோ உள்நோக்கு மூலமோ அவர் பெற்ற சிற்றறிவு ஆபத்தை விளைவிக்கலாம் என்னும் கருத்து வெளியிடப்படுகின்றது.

நாம் முன்னே படித்த இரண்டு செயல் முறைகளிலும் ஆராய்ச்சிப் பரிசோதனைகள் நடைபெறுவதற்கும் உளமருத்துவ முறை விருத்தியடைவதற்கும் ரோசர்ஸும் அவருடைய கூட்டாளிகளும் மாணவர்களும் பேருதவி புரிந்திருக்கின்றார்கள். பயிற்றுவிப்பதிலும் ஆராய்ச்சிகள் நடத்துவதிலும் ஒலிப்பதிவுகளை மிகுந்த அளவுக்கு உபயோகித்தவர்கள் அவர்களேயாவார்கள். உதவிசெய் மருத்துவ முறையிலிருந்தும் உள்நோக்கு மருத்துவ முறையிலிருந்தும் பெறப்படுகின்ற முடிவுகள் மாறுபாடு காணத் தக்கவகையில் வேறுபட்டிருக்கின்றன என்று கருதப்பட்டுவிடக் கூடாது என்பதைக் காட்டுவதற்காக உளமருத்துவத்தின் எல்லா அமைப்புகளுக்கும் பொதுவாக இருக்கின்ற சில கூறுகளை நாம் காட்டியாக வேண்டும்.

நோயாளியிடம் மாற்றங்கள் ஏதும் ஏற்பட வேண்டுமானால், நோயாளி உளமருத்துவரிடம் நல்ல நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். உளமருத்துவரின் திறமையில் நோயாளி நம்பிக்கை வைக்கவில்லை என்றால் விரும்பிய விளைவுகள் ஏற்படுவது அரிதாகி விடும். உளமருத்துவரிடம் நோயாளி கொள்ளுகின்ற நம்பிக்கையானது, உளமருத்துவரின் ஆளுமையினிடத்தும் உளமருத்துவத்தின் எல்லா முக்கிய கூறுகளிடத்தும் காட்டுகின்ற எதிர்வினையாக இருக்கின்றது.

ஆனால், வெற்றிகரமாகத் தொழில் புரிகின்ற ஒருவரின் ஆளுமை ஒன்று மட்டுமே எல்லாவற்றையும் செய்துவிட முடியாது. தொழில் புரிகின்றவர் தன்னம்பிக்கை, இணங்கச் செய்யும் தன்மை, அமைதி, நட்புடைமை, தீர்மானிக்க முடியாத பிரச்சினைகளைக் கையாளும் திறமை, தனியாளின் உணர்ச்சிகளுக்கு விழிப்பாயிருத்தல் முதலியவை உளநோய் நிவர்த்தி உளவியலாரின் ஆளுமைப் பண்புகளாக இருக்கலாம். இவற்றைக் கருத்தளவில் ஏற்றுக்கொள்ளலாம். ஏனென்றால், உளமருத்துவத்தின் எந்த ஒரு கோட்பாட்டுக் கிளையும் இக் குணங்களனைத்தையும் ஒருங்கே பெற்ற உளமருத்துவரைக் கொண்டிருப்பதாகக் கூற முடியாது. இக் கூற்று ஓரளவுக்கு உண்மையாகவுமிருக்கலாம். ஆனால், அதே சமயத்தில் பல்வேறு கோட்பாட்டுக் கிளையிலும் உள்ள அனுபவம் பெற்ற உளமருத்துவர்கள் மிகவும் ஒரே வகையான சூழ்நிலைகளை உண்டாக்குகின்றார்கள் என்று ஆராய்ச்சி முடிவுகள் காட்டுகின்றன. இந்த முடிவுகளையும் நாம் ஒதுக்கித் தள்ளிவிட முடியாது.

உளமருத்துவத்தின் பொது ஆக்கக்கூறுகளில் ஒன்றெனக் கருதப்படுவது மனப்பேதியாகும் (catharsis). ஒருவருடைய உள்ளத்திலிருந்து வாய்ச்சொல்மூலமாகவோ, செயல்மூலமாகவோ வெளியில் கொண்டுவரப்படுகின்ற தேவையில்லாத பொருள் துன்பத்திற்கு அடிப்படையாக இருந்து வந்திருக்கின்றது. அதை உள்ளத்திலிருந்து வெளியில் கொண்டு வருதல் மனப்பேதியாகும். மனவெழுச்சி நிறைந்த தொனியுடன் வெளியில் கொட்டப்படுகின்ற பொருள் நன்மை விளைவிக்கின்ற தன்மையுள்ளதாகும். இவ் வகையாக மனவிறுக்கத்தைத் தளர்த்துகின்ற சிறப்புக் கூற்றை வலியுறுத்துகின்ற மருத்துவத்தின் ஓர் அமைப்பை விளையாட்டு வழி மருத்துவம் என்று கூறுகின்றனர். விளையாட்டின் மூலமாகக் குழந்தைகள் தங்கள் பிரச்சினைகளைச் செயலாக வெளிப்படுத்த உதவி புரிகின்ற ஒரு முறை இது. இயற்கையாக அவர்கள் தங்களை வெளிப்படுத்துகின்ற வழியாக இஃது இருக்கின்றது.

குழந்தைகள் தங்களுடைய விளையாட்டுப் பொருள்களான பொம்மைகள், களிமண், சாயம், நீர் முதலியவற்றை இம் முறையில் உபயோகிக்கின்றனர்கள். இவற்றை அவர்கள் உபயோகிப்பதில் எந்த விதமான கட்டுப்பாடும் கிடையாது. ஒரு குழந்தை ஒரு பொம்மையை எடுத்துத் தரையில் போட்டு அதன்மீது ஏறி நடக்கலாம். அதைப் போட்டு உடைக்கலாம்; அதன்மீது தண்ணீரை ஊற்றலாம்; அதனுடைய உருவத்தைச் சிதைக்கலாம். அதன்மூலம் அவன் மகிழ்ச்சியடையலாம்; ஒரு வகையான துயர் தவிர்க்கலாம்.

உதாரணமாக, ஒரு குழந்தை ஓர் உளமருத்துவரிடம் அனுப்பப்பட்டான். அவன் சண்டித்தனம் செய்கின்றான் என்பது குறைபாடு. அவனுக்கு விளையாட்டு வழி மருத்துவம் செய்யப்பட்டது. பத்தொன்பது விளையாட்டுத்தொடர்களுக்குப் பிறகு அவனுடைய நடத்தையில் முன்னேற்றம் காணப்பட்டது. பேசாமலிருந்து வந்தான். மருத்துவத்திற்குப் பிறகு பேச்சில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. அன்புக்குத் துலங்குவதில்லை. மருத்துவத்திற்குப் பிறகு அன்புக்குச் சரியான துலங்கல்கள் தோன்றின. இந்த மாற்றங்களை ஏற்படுத்துவதற்குப் போதுமான விடுவிப்புகள் உபயோகிக்கப்பட்டன. வேறு விளக்கம் இதற்குத் தேவையில்லை. இம் முறையில் தன்னைப்பற்றிப் புரிந்துகொள்ளக்கூடிய உள்நோக்கு இல்லாததால், இஃது உதவிசெய் மருத்துவ வகையைச் சேர்ந்ததாகும். ஆனால், விளையாட்டு வழி மருத்துவத்தின் சிறப்பு என்னவென்றால் உதவிசெய் மருத்துவ வகையிலும் சேர்க்கப்படலாம்; உள்நோக்கு மருத்துவ வகையிலும் சேர்க்கப்படலாம்.

விளையாட்டு வழி உள்நோக்கு மருத்துவத்தை விளக்குவதற்கு ஒரு நிகழ்ச்சி வரலாறு காண்போம்: ஒரு குழந்தை தன்னுடைய விளையாட்டுப் பொம்மைகளோடு விளையாடுகின்றபொழுது பொம்மைகளைத் தன்னுடைய குடும்பத்தினர்களோடு ஒன்றுதல் செய்துகொண்டிருந்தான்; தந்தை, தாய், சகோதரர், சகோதரி ஆகியவர்களோடு ஒவ்வொரு பொம்மையையும் ஒன்றுதல் செய்து அப் பொம்மைகளிடம் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சியை வெளிப் படுத்தி வந்தான். அவன் தன்னுடைய சகோதரியிடம் எத்தகைய உணர்ச்சியைக் கொண்டிருந்தானே, அதைத் தன்னுடைய விளையாட்டுப் பொம்மைகளின்மீது ஏற்றிக் காட்டினுன். அதன்மூலம் அவன் தன்னுடைய மன இறுக்கத்திலிருந்து விடுதலையடைந்தான். ஆனுல், உளமருத்துவத்தின் விளைவுகள் எல்லா நிகழ்ச்சிகளிலும் வெற்றிகரமாக இருக்கின்றன என்று கூற முடியாது. எல்லா மனக் கோளாறுகளையும், மனவெழுச்சிக் கோளாறுகளையும் குணப் படுத்துகின்றது இம் முறை என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த மருத்துவ முறைச் செயல்விளக்கம் செய்வதும் மிகக் கடினமாகும். சில சமயங்களில் நாள்பட்டவையும் மிகவும் செறிவானவையுமான பிரச்சினைகள் வெற்றிகரமாகத் தீர்க்கப்படு கின்றன. சில சாதாரண பிரச்சினைகள் சிரமங்களை விளைவிக் கின்றன.

சூழ்நிலையைக் கையாளுதல்: இம் முறை அவ்வளவு வெற்றிகர மானது என்று கூற முடியாது; குறைபாடு முறையில்லை. திறமை யின்றி முறையைச் செயல்படுத்துவதில்தான் குறைபாடு இருக்கின் றது. தனியாளின் தேவைகளுக்கு ஏற்பச் சூழ்நிலையில் மாற்றங்களை ஏற்படுத்தும்பொழுது இம் முறையினுடைய கூர்மையான தொழில் திறமை அதிகரித்து வருவதாகச் செயல் விளக்கம் செய்து காட்டி யிருக்கின்றனர். சூழ்நிலைக்கூறுகளால் ஒரு மனிதனுடைய நடத் தையைப் பெரும் அளவுக்கு நிர்ணயம் செய்தாலும் அவனுடைய நடத்தையில் பொருத்தக்கேடு இருப்பதாகச் சுட்டிக்காட்டப் பட்டு, இம் முறை தாக்குதலுக்கு அடிக்கடி இலக்காகி வருகின்றது.

சில சமயங்களில் நிலப்பகுதிகளில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம். உஷார் விடுதிகள் இதற்குச் சான்ருக இருக்கின்றன. கடமை தவறுகின்றவர்களுக்கும் உள்ளத்தால் பின்தங்கியவர்களுக்கும் அமைக்கப்பட்டுள்ள நிலையங்கள், சிறைச் சாலைகள், மனநோய் மருத்துவ விடுதிகள் முதலியவை நிலப்பகுதி களில் மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்து கின்றன. இந்த நிலையங்களில் நோயாளிகளை நேரடியாகக் கையாளுகின்ற முறைகள் இருந்தாலுங்கூடச் சில சிகிச்சைகளின்

நல்விளைவு நடத்தையிலுள்ள சிரமங்களுக்குக் காரணமாக இருக்கின்ற சூழ்நிலையிலிருந்து நோயாளிகளை அப்புறப்படுத்துவதில் அடங்கியிருக்கின்றது. ஆனாலும். சூழ்நிலையைக் கையாளுதல் என்பது நிலப்பகுதியைக் கையாளுதல் என்ற அளவில் கட்டுப்படுத்த வேண்டியதில்லை; சம்பந்தப்பட்ட தனியாள்களின் மனப்பான்மை மாறுவதைப் பெரிதும் சார்ந்திருக்கின்றது.

பெற்றோரின் மனப்பான்மையிலும் அவர்கள் குழந்தைகளை நடத்தும் முறையிலும் மாற்றம் காணப்படுமானால், குழந்தைகளின் நடத்தையிலும் மாற்றம் காணப்படுகின்றது. ஒரு பத்து வயதுக் குழந்தையின் தாய் தன்னுடைய குழந்தையைப்பற்றி முறையிட்டுக் கொண்டாள். அந்தப் பத்து வயதுச் சிறுமி படுக்கையை நனைத்துக் கொண்டிருந்தாள். மேலும், அவள் கீழ்ப்படிய மறுத்து வந்தாள். இந்த நிகழ்ச்சி வரலாறுபற்றித் தேர்வாராய்ச்சி நடத்தப்பட்டது. அதிலிருந்து வெளியான உண்மை என்னவென்றால், பெற்றோர் இருவரும் ஐந்து வயதுள்ள அவளுடைய தம்பியிடம் அதிகக் கவனம் செலுத்தி வந்தனர் என்பதாகும்.

அந்தச் சிறுமியிடம் காணப்பட்ட குறைபாடுகளைப்பற்றிச் சிறிதும் கவனத்தில் கொள்ளாமல் உள மருத்துவர் அவளுடைய பெற்றோர்க்கு ஓர் அறிவுரை கூறினர். அதாவது, அச் சிறுமியுடன் அவர்கள் அரைமணி நேரம் மட்டுமே இருக்க வேண்டும் என்பதாகும். இரண்டு வாரங்களுக்குப் பிறகு அச் சிறுமியின் தந்தையே உள மருத்துவரிடம் சென்று அச் சிறுமியினுடைய மனப்பான்மை முற்றிலும் மாறிவிட்டதென்றும், அவளுடைய படுக்கையை நனைத்தல் நடத்தையிலும் முன்னேற்றம் காணப்படுவதாகவும் கூறினர். இந்த நிகழ்ச்சி வரலாற்றில் பிரச்சினையைப்பற்றி ஒன்றுமே செய்யப்படவில்லை. ஆனால், அச் சிறுமி தன்னுடைய பெற்றோரால் புறக்கணிக்கப்பட்டதாகக் கருதி வந்தாள். அவளுடைய அந்த உணர்ச்சிச் சூழ்நிலையிலிருந்த மன இறுக்கம் தளர்த்தப்பட்டது. காரணங்கள் திருத்தப்பட்டதும் நோய்க் குறிகள் மறைந்து போய்விட்டன. இந்த மாதிரியான நிகழ்ச்சிகளில் பெற்றோர்தான் திருந்திய திட்டங்களை விரிவாகச் செயல் நடத்த வேண்டும்.

பல நிகழ்ச்சி வரலாறுகளில் பெற்றோர்தான் பொறுப்பேற்க வேண்டியவராக இருக்கின்றனர். அந்த நிகழ்ச்சி வரலாறுகளில் பள்ளிக்கூடம் அல்லது பள்ளிக்கூடத்திற்கு வெளியிலுள்ள மனிதர்கள் முக்கிய கூறுகளாக இருக்கின்றார்கள். பெற்றோர் இவ்வாறான பிரச்சினைகளில் ஒத்துழைக்க முடியவில்லையானால்

அல்லது பெற்றோரில் யாரேனும் ஒருவர் இறந்து போயிருப்பா ராஞல், பிரச்சினையைத் திர்க்கும் ஒரே வழி குழந்தைகளைப் பொருத்தமான அனுதை விடுதியில் சேர்த்து விடுவதுதான். இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமாஞல், சமூகப் பணியாளர்கள் அல்லது குழந்தைகளைப் பராமரிக்கும் பிரதிநிதிகள் ஆகியவர்களுடைய ஒத்துழைப்பு கிடைத்தாக வேண்டும்.

பள்ளிக்கூடத்தோடு கல்வி சார்ந்த பொருத்தப்பாட்டுப் பிரச் சினையோ நடத்தைக்குரிய பிரச்சினையோ தொடர்புடைய தாக இருக்குமாஞல், திருத்தப்பட வேண்டிய பிரச்சினைகள் அந்தத் திக்கிலிருந்து அணுகப்பட வேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்கும் வழி பாடத்திட்டத்திலுள்ள ஒழுங்கின்மை, மறுபடியும் பரிசீலனை செய்தல், மாணவனுக்குரிய பாடங்களை மறுமுறை ஒதுக்குதல், பள்ளிக்கூடத்தை மாற்றல் ஆகியவையாக இருக்க லாம். இந்த வகையான வழியைப் பின்பற்றிப் பிரச்சினைகளைத் தீர்க்கும்பொழுது பள்ளிக்கூட ஆசிரியர்களும், பள்ளிக்கூட நிர்வா கிகளும் பொறுப்பேற்க வேண்டும்.

சூழ்நிலையைக் கையாளுவதில் உள்ள மற்றொரு வடிவம் சூழ் நிலை மருத்துவம் (Milieu Therapy) ஆகும். இந்த வகையான சிகிச்சை எப்பொழுதும் நிறுவனத்தின் அமைப்பில்தான் செய லாக்கப்படுகின்றது. நிறுவனத்தின் அமைப்புச் சூழ்நிலையானது நோயாளியை நேரடியாகக் கவனிக்கப் பொறுப்பேற்கின்றது என்ற உண்மையை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. இவ்வகை யான முறையில் நோயாளியை அணுகுகின்றவர் அனைவருமே மருத்துவராக இருக்கின்றனர். நோயாளிக்கு அனுதினமும் அங்கு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. அவை நோயா ளியின் நடத்தையை மாற்றுகின்ற விளைவுகளையுடையவையாக அமைக்கப்படுகின்றன.

முன்னறிந்து தடுத்தல்: மனிதர்களின் உடல் நலத்தைக் கவனிக்கின்ற துறைகளில் கையாளப்படுகின்ற வழிகளைப்போலவே அவர்களுடைய உளநலத் துறையிலும் மனநலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிகள் கையாளப்படுகின்றன. அந்த வழிகளில் மிகச் சிறந்ததென்று கருதப்படுவது முன்னறிந்து தடுத்தல் (prevention) ஆகும். உளநலத்துறையில் முன்னறிந்து தடுத்தல் இரண்டு முகப்புக்கூறுகளைக் கொண்டிருப்பதாகக் கண்டிருக்கின் றனர்.

முன்னறிந்து தடுத்தலின் முதல்நிலை வெளிச் சூழ்நிலையையும் குடும்பச் சூழ்நிலையையும் அமைத்துக் கொள்வதை வலியுறுத்துகின்றது. அவை உடன்பாடான உளநலத்தை மேம்படச் செய்யக்கூடியதாகவும், மனவெழுச்சி விரிவடைதலைச் சீருடன் செலுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும். எனவே, இங்குக் கவனம் பெற்றோரின் கல்வியிலும் வகுப்பறைச் சூழ்நிலையிலும் செலுத்தப்படுகின்றது. வகுப்பறைச் சூழ்நிலையில் தொழில் செய்வோர் அறிவுரை கூறுவோர் நிலையிலிருக்க வேண்டும்.

முன்னறிந்து தடுத்தலின் இரண்டாம் நிலையின் கவனம் சிறிய குறைபாடுகளைச் சீர்திருத்துவதில் செலுத்தப்படுகின்றது. சிறிய குறைபாடுகள் வளர்ந்து பெரும் பொருத்தக்கேடாக உருவாவதற்கு முன்பே அவை சீர்திருத்தப்படுவதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எனவே, பள்ளிக்கூடத்திலுள்ள உளவியலார் ஆசிரியர்களுடனும் பள்ளி நிருவாகத்தினருடனும் கலந்து பேசுகின்றார்; மாணவர்களுடைய பொருத்தப்பாட்டுப் பிரச்சினை எதுவாக இருந்தாலும் உதவி செய்யும் நோக்கத்துடன் தொடர்ந்து கலந்துரையாற்றுகின்றார். ஆசிரியர்களோ நிருவாகத்தினரோ மாணவர்களிடம் காணப்படும் பிரச்சினைகளை உடனே உளவியலாருக்குத் தெரிவித்துத் தீர்ப்பதற்கான வழிகளைச் செய்யலாம்.

2. பிரச்சினைகளின் வகைகள்

மனிதர்களின் வாழ்க்கைத் துறைகள் பல இருக்கின்றன. அவற்றில் எல்லாம் மனிதர்கள் ஏதேனும் ஒரு வகையில் சிறிதும் பெரிதுமான பிரச்சினைகளைச் சந்திக்கின்றார்கள். ஒவ்வொரு துறையிலும் நடைபெறுகின்ற நடத்தையில் பொருத்தப்பாடு ஏற்பட வேண்டும். அது தவறும்பொழுது பொருத்தக்கேடு பிரச்சினைகள் தோன்றுகின்றன. எனவே எந்தெந்தத் துறைகளில் மனிதர்களின் நடத்தையில் பிரச்சினைகள் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் உளநோய் நிவர்த்தி உளவியல் நடைமுறையிலிருந்து வருகின்றது.

உளநோய் நிவர்த்தி உளவியலாரின் பணிகளைப்பற்றி வாழ்க்கைத்தொழில் உளவியலிலும் பிறழ்வு உளவியலிலும் தெளிவாக விவரித்தோம். எனவே, தொடக்க காலத்தில் உளநோய் நிவர்த்தி உளவியலார் கவனம் செலுத்தி வந்த சில பிரச்சினைகளைப்பற்றி மட்டும் இங்குச் சிறப்பாகக் காண்போம். மன வளர்ச்சிகுறைதலிலிருந்து எழுகின்ற பிரச்சினைகள், பள்ளிக்கூடத்திலிருந்து எழுகின்ற பிரச்சினைகள், குழந்தைகளின் நடத்தைப் பிரச்சினைகளிலிருந்து எழுகின்ற பிரச்சினைகள் ஆகியவற்றைப்பற்றி உளநோய் நிவர்த்தி உளவியலார் சிறப்பாக ஆராய்ந்திருக்கின்றனர்; அவற்றைப்பற்றி விரிவாகக் காண்போம்.

மனவளர்ச்சி குறைதல்

மனிதர்கள் ஒன்று போலவே பிறந்து, ஒரேமாதிரி வளர்ந்து வந்தாலும் அவர்கள் தங்களுடைய திறமைகளில் மாறுபடுகின்றார்கள்; எனவே, ஒரு சமூகத்திலுள்ள மக்களைத் திறமையின் அடிப்படையில் வகைப்படுத்தவும் செய்கின்றார்கள். எனவே, திறமையைப் பரப்பி வழங்குப்போது சிலர் மேல்மட்டத்திலும், சிலர் கீழ்மட்டத்திலும், பெரும்பாலோர் மையக் கட்டத்திலும்

விழுகின்றனர். இங்கு நாம் கீழ்மட்டங்தில் அல்லது அடி மட்டத்திலுள்ளவர்களைப்பற்றிக் கவனிப்போம். திறமையைப் பரப்பி வழங்கும்போது அடிமட்டத்திலுள்ளவர்கள் கல்வி, வாழ்க்கைத் தொழில், சமூகம் ஆகிய துறைகளில் ஓர் எல்லைக்குள்பட்ட திறமையையுடையவர்களாக இருக்கின்றனர்கள். அதனால் அவர்கள் எந்த வாழ்க்கைத்துறையிலும் திறமை குறைந்து காணப்படுகின்றனர்கள். முயற்சிகளில் வெற்றி பெற முடிவதில்லை. இப்படிப் பட்டவர்களை மனவளர்ச்சி குறைந்தவர்கள் என்று கூறுகின்றனர்கள். இவர்கள் எல்லாம் உளவியல் பிரச்சினைகளைக்கொண்டிருக்கின்றனர்கள். உளநோய் நிவர்த்தி உளவியல் இத் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி எய்திருக்கின்றது. அந்த வளர்ச்சி பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வழியில் உபயோகமுள்ளதாக இருக்கின்றது.

உளச்சோதனை முறைப்படி பின்தங்குதலைக் காணல்: எந்த ஒரு மக்கள் தொகுதியின் திறமையையும் உளச்சோதனைகளைக்கொண்டு படித்தரமாக்கலாம். உளச்சோதனையின் கெலிப்பு எண்களின் வீச்சு எந்த அளவுக்கு நீண்டு செல்லுகின்றதோ அந்த அளவுக்குத் திறமையில் படித்தரங்கள் அமைகின்றன. அண்மையில் ஹெப்பர் (Heber) என்பவர் இதற்கு என்று ஒரு சொல் துறையை அமைத்து வகைப்படுத்தலைச் செய்தார். அவருடைய முயற்சியின்படி, சோதனையின் செயல் நிறைவேற்றத்தின் அடிப்படையில் பின்தங்குதலில் ஐந்து மட்டங்கள் வரைந்து காட்டப்படுகின்றன. இந்த ஐந்து மட்டங்களும் பொதுமக்கள் தொகையிலிருந்து எடுக்கப் பட்ட சோதனைக் கெலிப்பு எண்களின் தரவிலக்கத்தின்மீது (standard deviation) அமைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, நுண்ணறிவு ஈவின் வீச்சுகள் குறிப்பிட்ட சோதனைக்கேற்ப மாறுகின்றன.

திருத்தப்பட்ட ஸ்டேன்போர்டு-டினெட் சோதனையை 1937ஆம் ஆண்டில் உபயோகித்துப் பெற்ற கெலிப்பு எண்களைக் கொண்டு பின்தங்குதல் ஐந்து கட்டங்களாக வகைப்படுத்தப்பட்டது. முதல் கட்டத்தின் நுண்ணறிவு ஈவு இருபதுக்கும் குறைவாகும். இரண்டாவது கட்டத்தில் நுண்ணறிவு ஈவு 20 முதல் 35 வரையில் சென்றது; மூன்றாவது கட்டத்தில் 36லிருந்து 51 வரையில் சென்றது; நான்காவது கட்டத்தில் 52 முதல் 67 வரையில் சென்றது. ஐந்தாவது கட்டத்தில் 68லிருந்து 83 வரையில் சென்றது. எனவே, நுண்ணறிவு வீச்சின் உயர்ந்த எண் 83 என்றும், தாழ்ந்த எண் 20க்கும் கீழ் என்றும் தெரிகின்றது. மிகவும் கடுமையாகப் பின்தங்கிய கட்டம் முதல் கட்டம். நுண்ணறிவு

ஈவு இருபதுக்குக் கீழ் சென்றிருக்கின்றது. ஆனால், அளக்கப்பட்ட இந்த நுண்ணறிவு காலத்திற்குக்காலம் ஏற்ற இறக்கம் கொள்ள லாம். எனவே, மனவளர்ச்சி குறைதல் என்பது சராசரிக்குக் குறைந்த பொழுது நுண்ணறிவுச் செயல்முறை என்றும், அது வளர்ச்சிக்காலத்தின்போது ஆரம்பிக்கின்றதுஎன்றும்தெரிகின்றது. மேலும், அது முதிர்ச்சி, கற்றல், சமூகப் பொருத்தப்பாடு ஆகிய மூன்றில் ஏதாவது ஒன்றினால் பாதுகாக்கப்படுகின்றது என்றும் அறிகின்றோம்.

பின்தங்குதலும் தழுவலும்: நுண்ணறிவுச் சோதனைகளால் மாதிரியாக எடுக்கப்பட்ட நடத்தைகள் தழுவலில் முக்கிய கூறு களாக இருக்கின்றன. அளக்கப்பட்ட நுண்ணறிவின் அளவு தழுவல் நடத்தையின் அளவோடு இணைப்புத் தொடர்பாடு கொள்ளுகின்றது. தழுவல் நடத்தைக்கான வரையளவுகள் வய தோடு தெளிவான மாறுபாடுள்ளதாக இருக்கின்றது. தனிமனித சுதந்தரம், சமூகப் பொறுப்பு ஆகியவற்றின் படித்தரத்தை அல காகக் கொண்டு இந்தச் செயல்முறை மதிப்பீடு செய்யப்பட்டது. தழுவல் நடத்தை வினிலேண்ட் சமூக முதிர்ச்சி அளவுகோல் கொண்டு சிறப்பாக அளவிடப்பட்டது. இந்த அளவுகோல் உள மருத்துவக் கூராய்வு மூலமும் சமூக ஆராய்ச்சி மூலமும் குறை நிரப்பப்பட்டது.

முதல் இரண்டு கட்டங்களில் பின்தங்குதல்: நுண்ணறிவு அளவு மூலம் பின்தங்குதலை வரையறை செய்வதோடல்லாமல் உளவிய லார் உறுதியான மூலமறியும் கடமைகளையுடையவர்களாக இருக் கின்றனர். முதல் இரண்டு கட்டங்களின் பின்தங்குதலின் மூலத் தையறிவது அவ்வளவு கடினமான செயலன்று. சோதனையின் செயல் நிறைவேற்றத்தைக் கொண்டு போதுமான முடிவுகளைப் பெற முடியும். வரையளவு செய்யப்படாத நடத்தைகளான விளையாட்டு போன்றவற்றின் ஒப்பீடும் விவரங்களைத் தர முடியும். வளர்ச்சியின் வரலாறு பின்தங்குதலைச் சீராகக் காட்டுகின்றது. இந்தக் கட்டத்திலுள்ளவர்கள் நிறுவனங்களில் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். இவர்களுடைய நுண்ணறிவு ஈவு முப்பத்தைந் துக்குக்கீழ் உள்ளது.

பின்தங்குதலின் மூன்றாவது கட்டம்: இந்தக் கட்டத்தில் அடங்குகின்ற மனிதர்களின் தழுவல் நடத்தையும் சமூக நடத்தை யும் அவர்கள் நிறுவனங்களில் இருக்க வேண்டியவர்களா இல்லையா என்பதை நிர்ணயிக்கக்கூடியதாக இருப்பதால், மிகுந்த அளவுக்கு மூலமறியும் பிரச்சினைகளையுடையவர்களாக இருக்கின்

றார்கள். நுண்ணறிவின் இந்தக் கட்டத்திலுள்ளவர்கள் கல்வித் துறை சார்ந்தவர்களால் அடிக்கடி கூறப்படுவது என்னவென்றால், அவர்கள் பயிற்சி பெறக்கூடியவர்கள் என்பதாகும். போதுமான அளவு அறிவிப்பு அளிக்கப்படுவார்களானால், போதுமான அளவு பயிற்சித் திறமைகளைத் தம் உதவியில் பெற முடியும். ஆபத்து களையும் தவிர்த்துக்கொள்ள அவர்களால் முடியும். எவ்வாறிருந்தாலும் அவர்களுக்கு நெருங்கிய மேற்பார்வை தேவைப்படுகின்றது.

பின் தங்குதலின் நான்காவது கட்டமும் ஐந்தாவது கட்டமும்: இந்த இரண்டு கட்டங்களில் அடங்குகின்ற மனவளர்ச்சியுறாத மனிதர்கள் கற்பிக்கத் தகுந்தவர்கள் என்று கருதப்படுகின்றனர். கல்வித் துறையின் பல கொள்கைகள் இவர்களுக்காகத் தனிச் சலுகைகளை ஒதுக்குகின்றன. மனவளர்ச்சியுறாது பின்தங்கியவர்களில் இவ் வகைகளைச் சேர்ந்தவர்கள்தான் உயர்ந்த கட்டத்திலிருக்கின்றவர்கள். மேலும், பின்தங்கியவர்களில் இவர்கள்தான் பெரும்பான்மையானவர்கள். இவர்களுடைய பிரச்சினைகள்தான் மூலமறிவதில் மிகவும் சிரமங்களைத் தருகின்றன. இந்தக் கட்டங்களிலுள்ள மனிதர்களுக்கு நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவதில் குறிப்பிடத்தகுந்த அளவுக்குத் தழுவலையும் சமூகப் பொருத்தப்பாட்டையும் சார்ந்திருக்க வேண்டும்.

பல்வேறு சமயங்களில் பல சோதனைகளின் செயல்நிறைவேற்றம் மூலமறிவதற்கும் வகைப்படுத்துவதற்கும் நல்ல தொடக்கமாக இருக்கின்றது. முடிவுகளை மற்ற உண்மைகளின் அறிவெல்லையின் மூலமாகப் பெற முடியும். முந்திய தம்முடைய சமூகத் தேவைகளுக்கு இந்த மனிதர் எவ்வளவு நல்ல முறையில் தம்மை ஒத்தமைத்துக்கொள்ளக்கூடியவராக இருந்தார்? இது நாள் வரையிலும் அவருடைய பள்ளிக்கூடச் சாதனைகளைப்பற்றிய விவரங்கள் யாவை? அவர் ஏதாவது எளிதில் உணர்ச்சியைக் கிளப்பக்கூடியதும் கடமை தவறக்கூடியதுமான நடத்தையை வெளிப்படுத்தினாரா? இவ்வாறான வினாக்களுக்கு விடைகள் கண்டறிய வேண்டும். குறைமனங்கொண்டவர்களுக்கும் குறைமனம் கொள்ளாதவர்களுக்கும் ஒரே மாதிரியான சோதனையின் செயல்நிறைவேற்றங்களில் இரண்டு நிகழ்ச்சிகள் தெளிவான முரண்பாட்டை இரண்டினிடையிலும் உண்டாக்குகின்றன.

இருபத்தைந்து வயதுள்ள மனிதனுக்குப் பினெட் சோதனை கொடுக்கப்பட்டது. அவனுடைய நுண்ணறிவு ஈவு அறுபதாக இருந்தது. அவனுடைய மனவயது எட்டரை ஆண்டுகளாக இருந்தது. அவன் பதினாறாவது வயதில் பள்ளிக்கூடத்தைவிட்டு

நின்றுவிட்டான். அது சமயம் அவன் நான்காவது வகுப்பிலிருந்தான். ஆனால், அவன் கற்க வேண்டுமென்ற ஆவலுடையவனாகவும் கடின உழைப்புள்ளவனாகவும் காணப்பட்டான். பள்ளிக்கூடத்தை விட்டபிறகு அவன் ஒரு பொறி வண்டிக்குச்சில் வேலைக்குச் சேர்ந்தான். சில ஆண்டுகளில் அவன் தானே இயங்கும் இயந்திர நுட்பங்களைக் கற்றுக்கொண்டான். சிறந்த தொழிலாளி என்று அவன் கருதப்பட்டான்.

மற்றொரு நிகழ்ச்சி ஒரு பதினெட்டு வயது பெண்ணைப்பற்றியது. நுண்ணறிவுச் சோதனைப்படி அவளுடைய நுண்ணறிவு ஈவு எழுபத்தைந்தாக இருந்தது. அவளுடைய மனவயது பத்தரை ஆண்டுகள். அவள் பள்ளிக்கூடத்தைவிட்டு நிற்கும்பொழுது அவளுக்கு வயது பதினாறு. அது சமயம் அவள் ஆறாவது வகுப்பிலிருந்தாள். அவள் மேல் வகுப்புக்கு உயர்த்தப்பட்டதற்குக் காரணம் அவள் பெரியவளாக இருந்தாள் என்பதுதான். அவள் எப்பொழுதும் துன்பம் தருபவளாக இருந்து வந்தாள்; பெற்றோருடனும் ஆசிரியர்களுடனும் எப்பொழுதும் முரண்பாடுடையவளாகவே இருந்தாள்; பிறகு வீட்டை விட்டுச் சென்று வீதியில் பிச்சை எடுத்ததற்காகக் கைது செய்யப்பட்டாள்; சிறைச் சாலைக்குப் போவதில் தனக்கு ஒன்றும் சிரமமில்லை என்றும், விடுதலையடைந்ததும் மறுபடியும் வீதியில் செல்லுவதாகக் கூறினாள். இந்த இரண்டு நிகழ்ச்சி வரலாறுகளும் மிகச் சிறியவையாக இருந்தாலும், சோதனைகளின் முடிவுகளை முகத்தளவில் மதிப்பிடுவதிலுள்ள அபாயங்களைச் சுட்டிக் காட்டுகின்றன.

முதல் நிகழ்ச்சியில் குறிப்பிடப்பட்டுள்ள மனிதன் உடல் பயிற்சித்திறமையில் உயர்ந்த ஆற்றல் பெற்றிருந்தான். அவன் அதை வாழ்க்கைத்தொழில் பொருத்தப்பாட்டைச் செய்து கொள்ளுவதில் சிறந்த முறையில் உபயோகித்தான். ஆனால், அந்தப் பெண் நல்ல அனுகூலத்திற்கு அவள் தன்னுடைய திறமையை உபயோகிக்கவில்லை. போதுமான அளவுக்குச் சமூகப் பொருத்தப்பாட்டை அவள் செய்துகொள்ள இயலாதவளாக இருந்தாள்.

பள்ளிக்கூடப் பிரச்சினைகள்

பல வகையான பிரச்சினைகளையுடைய சிறுவர்கள் உளநோய்ப் பேணகத்திற்கு அனுப்பப்படுகின்றனர்கள். உளநோய்ப் பேணகத்திற்குச் செல்லுகின்றவர்கள் எல்லாம் பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர், சிறுமியர்களாகவே இருக்கின்றனர். ஆகையினால், குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடப் பிரச்சினைகள்தான் அடிக்கடித் தோன்றுகின்றன என்று தெரிகின்றது. குழந்தைகள் உளநோய்ப் பேண

கத்திற்கு அனுப்பப்படுவதில் மூன்று முக்கிய காரணங்கள் காணப் படுகின்றன. அவை, திறமையின் தாழ்வான மட்டம், நுண்ணறிவு சாராத கூறுகள், தனிப்பட்ட கல்விசார்ந்த குறைபாடுகள் என்பவை. அவற்றைப்பற்றிச் சிறிது விரிவாகக் காண்போம்:

திறமையின் தாழ்ந்த மட்டம் : பள்ளிக்கூடத்தில் படித்தரத்தில் பின்தங்கியிருக்கின்ற குழந்தைகள் திறமையில் சராசரி மட்டத் திற்கும் கீழிருப்பதாகச் சோதனைகளின்மூலம் கண்டறியப்பட்டி ருக்கின்றது. சிறிய விகிதாச்சார நிகழ்ச்சிகளில் அவர்களுடைய திறமை அவர்களை மனவளர்ச்சியில் பின்தங்கியவர்கள் என்று காட்டுவதற்குக் கணக்கிடப்படாமலிருக்கலாம். ஆனால், பெரிய விகிதாச்சார நிகழ்ச்சிகளில் குழந்தைகளின் மன அளவு மனவளர்ச் சியில் பின்தங்கியவர்களின் மட்டத்தைவிட உயர்வாகவே இருக் கின்றது. பதினைந்து சதவிகிதத்தினர் அவ்வாறிருப்பதாகக் கணக் கிடப்பட்டிருக்கின்றனர். ஆனால், அவர்கள் சராசரி மன அளவுக்குக் குறைவான மன அளவையே கொண்டிருக்கின்றார்கள். இவ் வகை யான நிகழ்ச்சிகளில் உளவியலாரின் கடமை என்னவென்றால், மன அளவுக்கான சான்றுகளை மதிப்பீடு செய்வதும், அந்தக் குழந் தைகளிடமிருந்து அவர்கள் என்ன எதிர்பார்க்கின்றார்கள் என்ப தைப்பற்றி ஆசிரியர்களுக்குக் கருத்தைத் தெரிவிப்பதுமாகும்.

நுண்ணறிவுச் சாராத கூறுகள்: குழந்தைகள் கல்விசார்ந்த நடவடிக்கைகளில் பின்தங்கியிருப்பதற்குக் காரணம் குறைவான திறமைதான் என்பதில் ஐயமில்லை. பள்ளிக்கூட வேலைகளைத் தப்பும் தவறுமாகச் செய்வதும் திறமைக் குறைவையே காட்டு கின்றது. இஃது ஒன்றுதான் காரணம் என்று கூற முடியாது. பள் ளிக்கூட வேலைகளில் குழந்தைகள் பின்தங்கியிருப்பதன் காரணம் என்னவாக இருந்தாலும் அவர்களுடைய குறைவான செயல் நிறைவேற்றத்தின் காரணங்களைக் கண்டறிய வேண்டியது உள வியலாரின் கடமையாகும். குறைவான திறமை மட்டுமன்றிக் குழந்தைகள் கல்வி சார்ந்த நடவடிக்கைகளில் பின்தங்கி யிருப்பதற்குக் காரணம் அவர்களுடைய குறைபாடுள்ள உடல்நிலைமைகளுமாகும். போதிய அளவு பார்வைக்கூர்மை, கூர்மை யான செவிப் புலனுணர்ச்சி ஆகியவை இல்லாமலிருத்தல் அவர் களுடைய திறமையைக் குறைக்கலாம். மேலும், அவர்களுடைய மனவெழுச்சியிலும் ஆளுமையிலும் தொல்லைகளிருத்தல், வேலை செய்வதில் பழக்கமின்மை, ஒழுங்காகப் பள்ளிக்கூடத்திற்குச் செல்லாமை, அடிக்கடிப் பள்ளிக்கூடத்தை மாற்றிக்கொண்டிருத் தல், தன்னைச் சார்ந்த மனப்பான்மையில் போதிய அளவின்மை, தன்னுடைய மனப்பான்மையில் ஊக்கமின்மை, பெற்றோரின் மனப்

பான்மை, குழந்தைகளின் பள்ளிக்கூடத்திற்கு எதிரான தூண்டலை உண்டாக்கல், ஏதேனும் ஒரு பாடத்தில் தனியான சிரமங்கள் முதலியவையும், மற்றும் பல பொதுக் காரணங்களும் குழந்தைகளைப் பின்தங்கும்படிச் செய்யலாம். குழந்தையினுடைய வாழ்க்கை வரலாற்றை மிகக் கவனமாக உளநோய் நிவர்த்தி முறைப்படி ஆராய்ச்சி செய்துதான் அவன் தன்னுடைய வேலைகளைச் சரிவரச் செய்யாமையின் காரணங்களைக் கண்டறிய வேண்டும். இது முற்றிலும் உளமருத்துவப் பிரச்சினையாகும்.

தனிப்பட்ட கல்விசார்ந்த குறைபாடுகள் : பள்ளிக்கூடப் பாடங்களைக் கற்பதில் தனி ஏலாநிலைகள் குழந்தைகளிடம் காணப்படுகின்றன. இவை கல்வி சார்ந்த பிரச்சினைகளாகவே அடிக்கடி தோன்றுகின்றன. ஒரு குழந்தை எல்லாப் பாடங்களிலும் திறமையாகக் காணப்படலாம். ஆனால், ஒரு பாடத்தில் மட்டும் அவனால் ஏலவில்லை. உதாரணமாக, கணக்கு, மொழிப்பாடம், சரித்திரம் இவற்றில் ஏதேனும் ஒன்றில் அவனால் முன்னேற முடியவில்லை.

இவ்வாறான ஒரு தனிப்பட்ட குறைபாடு ஒரு குழந்தையினுடைய பொதுச் சராசரி வேலையைக்குறைத்து விடும். சில நிகழ்ச்சிகளில் அவன் அடுத்துச் செய்யவிருக்கின்ற எல்லாச் செயல்களிலும் அவனுடைய சாதனையைக் குறைப்பதற்கு இதுவே காரணமாக இருக்கின்றது. ஆரம்பப் பள்ளி வகுப்புகளில் படித்தல், எழுதுதல், எழுத்துக் கூட்டல், கணக்கு, மொழிப்பாடம் ஆகியவற்றின்மீது தான் அதிகக் கவனம் செலுத்தப்படுகின்றது. ஏனென்றால், கல்வி சார்ந்த வேலைகளுக்கு இவை தேவையான கருவிகளாக இருக்கின்றன. உயர்நிலைப்பள்ளி வகுப்புகளில் வரலாறு, பூகோளம், அறிவியல் முதலிய பாடங்கள் சேர்க்கப்படுகின்றன. இவற்றில் அடங்கியுள்ள பொருள்கள் மிக முக்கியமாகக் கருதப்படுகின்றன. உயர்நிலைப் பள்ளிகளில் கற்கப்படுகின்ற பாடங்களில் திறமை பெற வேண்டுமானால், கருவிகளாக உள்ள பாடங்களில் பயிற்சித் திறமை பெற்றாக வேண்டும். இந்தப் பாடங்களின் பொருள்களில் போதிய அறிவின்மையானது கருவியாகவுள்ள பாடங்களில் திறமை பெறவில்லை என்று தெரிகின்றது. மேலும், போதிய அளவு பாடத்தைக் கற்காமை, ஊக்கமின்மை, ஆளுமையில் சீர்குலைவு ஆகியவை பல பொருத்தக்கேடுகளில் விளைவுகளை உண்டாக்குகின்றன. சமூகப் பொருத்தப்பாடுகள் சரியாக அமையாதிருந்தாலும், கல்விசார்ந்த நடவடிக்கைகளில் விளைவுகளை உண்டாக்கலாம்.

நடத்தைப் பிரச்சினைகள்

குழந்தை வழிகாட்டிப் பேணகங்களில் அடிக்கடி காணப்படுகின்ற சிரமங்கள் எல்லாம் பொதுவாக அடிப்படை நடத்தைப் பிரச்சினைகளாக இருக்கின்றன. அவை நடத்தையின் வழக்கமான வடிவங்களாகும். அவை நேரடியான உடல்சார்பான அல்லது உள்ளச்சார்பான ஏலாமைகளினால் ஏற்படுபவையல்ல. அவை சமூகச்சார்பான தொல்லைகளையோ தனியாளின் சொந்த பொருத்தப்பாட்டில் தலையிடுவதையோ செய்கின்றன.

சமூகச்சார்பான தொல்லைகளின் வகையை ஒழுக்கப் பிரச்சினைகள் என்று கூறுகின்றனர். தனியாளின் பொருத்தப்பாட்டுத் தொல்லைகளின் வகையை ஆளுமைப் பிரச்சினைகள் என்று கூறுகின்றனர். இந்த எளிய வகைப்படுத்தல், நடத்தைப் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்துவதற்குச் செயல்சார்பானதும் நியாயவாதத்திற்குரியதுமான அடிப்படையைப் பெறுகின்றது.

நடத்தைப் பிரச்சினைகள்-விளக்கம்: மனிதர்களின் நடத்தையே ஒரு பிரச்சினை என்று கருதப்படுமானால்எந்தவகையான நடத்தைப் பிரச்சினைகளைத் தோற்றுகின்றன என்று முதலில் தெளிவுபடுத்த வேண்டும். ஒரு மனிதன் எவ்வாறு நடந்து கொள்ளுகின்றான் என்று அவனைக் கூர்ந்து கவனித்துத் தெரிந்து கொள்ளுகின்றோம். அது சமயம் அவனுடைய எண்ணங்கள், உணர்ச்சிகள், நம்பிக்கைகள், குறிக்கோள்கள், மனப்பான்மைகள் முதலியவற்றையும், இன்னும் சில உள்ளார்ந்த நடத்தைகளையும் அவனுடைய வெளிப்படையான செயல்சார்ந்த நடத்தையைப் பல்வேறு சூழ்நிலைகளில் கூர்ந்து கவனித்தே தெரிந்து கொள்ளுகின்றோம். எந்த வகையான நடத்தையைப்பற்றி அறிவதற்கும் இதுதான் வழியாக அமைகின்றது.

ஆனால், அம் மனிதன் கூறுவதும் செய்வதும் சமூகக்குழுவின் வரையளவுகளையும், குறிக்கோள்களையும், விதி முறைகளையும் புறக்கணிப்பதாக இருக்குமானால், அவனுடைய நடத்தையை உடனே நாம் பிரச்சினைக்குரிய நடத்தை என்று கருதுகின்றோம். எனவே, பள்ளிக்கூடம் போகாத சிறுவன் பெற்றோரின் கண்டிப்புக்கு உள்ளாகின்றான். ஒரு திருடன் சமூகத்தால் கண்டனத்திற்கு உள்ளாகின்றான். சண்டித்தனம் குடும்பத்தைத் தகர்த்தெறிகின்றது. இவற்றைப் போன்ற பல வகையான நடத்தைகள் பிரச்சினைகளையுடையவை என்று கருதப்படுகின்றன. ஏனென்றால், இவை சமூக முறைப்படிச் சிரமங்களைக் கொடுப்பவை.

இந்தப் பிரச்சினைகளில் இன்னும் சற்று ஆழ்ந்து செல்லுவோமானால், சமூகம் எந்த நிலைகளிலிருந்து இவற்றை நோக்குகின்றது என்று புரியும். ஒரு குழந்தை பள்ளிக்கூடம் போகாததைப்பற்றி மற்றொரு குழந்தையின் தந்தை கவலைப்படுவதில்லை. குடும்பத்திலுள்ள சண்டித்தனத்தைப்பற்றி முறைகாவல் செய்கின்ற காவலர் (policeman) கவலை கொள்ளுவதில்லை. திருடனின் நடத்தையைப்பற்றிக் குற்றவாளிகள் கூட்டம் பாராட்டுகின்றது. எனவே, ஒரு சமூகக் குழுவுக்குப் பிரச்சினைகளாக இருந்த நடத்தைகள் மற்றொரு சமூகக் குழுவுக்குப் பிரச்சினைகளாக இல்லை. இந்தப்பற்றி முடிவு கூறவேண்டுமானால், நடத்தைப் பிரச்சினைகள் சமூக வரையளவை அடிப்படையாகக் கொண்டுதான் தீர்வு செய்யப்படவேண்டியவை என்பதாகும்.

ஆனால், சமூகத் தொல்லைகளாகக் கருதப்படாத நடத்தைகளும் மேலே கண்டவற்றைப் போன்று காணப்படுகின்றன. உதாரணமாக, பின்வாங்கிக் கொள்ளுதல், அச்சம், பொறாமை முதலியவற்றின் இயல்புகளைக் காணும்பொழுது சில உண்மைகள் புலப்படுகின்றன. கூச்சம், நாணம், அமைதி ஆகிய பண்புகளை ஆசிரியர்கள் குழந்தைகளிடம் வரவேற்கின்றார்கள். இவற்றைக் கொண்ட குழந்தை எந்த விதமான துன்பத்தையும் உண்டாக்குவதில்லை. இவ் வகை நடத்தைகளைப் பெற்றோர் தம் குழந்தைகளுக்கு ஊட்டி வளர்க்கின்றனர். எனவே, நடத்தையில் வரையளவுகள் மீறப்பட்டவை உளநலவியலின் குறிக்கோள்களாக இருக்கின்றன. அவற்றை இத் துறையில் தொழில்புரிகின்றவர்களும், பயிற்சி பெற்றவர்களுந்தாம் விரிவாகப் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். கடுமையான துன்பங்களை விளைவிக்கும் நடத்தையைப் போன்றுதான் இந்த நடத்தையும் இருக்கின்றது என்பதை அவர்கள்தாம் தெரிந்திருக்கின்றார்கள்.

ஒழுக்கப் பிரச்சினைகள் : நல்ல ஒழுங்கையும் சமூக இணக்கத்தையும் சிதைக்கக்கூடிய நடத்தைகள் பல இருக்கின்றன. அவை சில சமயங்களில் வெளிப்படையாகத் தெரிவதில்லை என்றாலும் சமூக விதிமுறைகளையும் சட்ட விதிமுறைகளையும் மீறுவதாக இருக்கின்றன. அவற்றில் சில, சண்டையிட்டுக்கொள்ளல், கீழ்ப்படியாமை, தெய்விகத் தன்மையைக் கெடுத்தல், பொய் பேசுதல், போருக்கழைத்தல், தாக்குதல், அழிவுவேலைகளைச் செய்தல், சண்டித்தனம் செய்தல், திருடுதல், மற்றவர்களுடன் சரியான தொடர்பு வைத்துக்கொள்ளாமை என்பவை. இந்த நடத்தைகளில் எதுவும் தனித்து நடைபெறுவதில்லை. பல நடத்தைகள் சேர்ந்து ஒரு குழந்தையிடமோ, மனிதனிடமோ தனிச் சிறப்பாகக் காணப்படுகின்றன.

இந்த நடத்தைகளின் அடையாளங்களையெல்லாம் சம்பந்தப்பட்ட பெரியவர்கள் அடிக்கடி எளிதில் புரிந்துகொண்டுவிடுகின்றார்கள். அவர்கள் மட்டுமன்றி யாரை நோக்கி இந்த நடத்தைகளெல்லாம் செலுத்தப்படுகின்றனவோ, அவர்களும் அவற்றின் அடையாளங்களைப் புரிந்துகொள்ள முடியும். இந்த நடத்தைகள் ஓர் அளவுகோலை அமைப்பதாகத் தோன்றுகின்றன. அதனால் ஒழுக்கப் பிரச்சினையுள்ள குழந்தைகளிடையே காணப்படும் அடையாளங்களிலுள்ள கடுமையானது குறிப்பிடத்தக்க அளவுக்கு மாறுபடுகின்றது. மிகவும் கடுமையான நடத்தையுள்ள குழந்தையிடம் ஆக்கிரமிப்பு, தாக்குதல், கடமை தவறுதல் போன்ற நடத்தைகளைக் காணலாம். கடுமை குறைவாக இருக்குமானால், சிற்சில சமயங்களில்தான் குழந்தைகளிடம் அவ்வகை நடத்தைகள் காணப்படும்.

ஆளுமைப் பிரச்சினைகள் : பிரச்சினை நடத்தைகள் ஏராளமாக இருக்கின்றன. அவற்றையெல்லாம் செயல்விளக்கம் செய்யவும் முடியும். ஆனால், அவை எல்லாம் சமூகச் சிதைவை உண்டாக்கக்கூடியதாகவோ, வரையளவை மீறக்கூடியதாகவோ இருக்கவில்லை. அந்தப் பிரச்சினைகளின் கூட்டம் சில பண்புக்கூறுகளால் சிறப்பிக்கப்படுகின்றன. அவை பின்வாங்குதல், பணிதல், தொல்லை, கவலை, அச்சம், தாழ்வுணர்ச்சி, மந்தம் ஆகியவையாகும். இத்தகைய பிரச்சினைகள் அவ்வளவு எளிதில் மற்றவர்களுடைய கவனத்தைக் கவருவதில்லை. ஏனென்றால், இவை அடிக்கடி குழந்தைகளுக்கு மட்டுமே துன்பந்தருவனவாக இருக்கின்றன. மேலும், இந்த ஆளுமைப் பிரச்சினைகளும் அவற்றின் கடுமையில் மாறுபாடுகளைக்கொண்டவையாக இருக்கின்றன. மற்றப் பிரச்சினைகளைப் போன்று இவையும் அடிக்கடி உளநோய் நிவர்த்தி உளவியலாரிடம் எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆனால், எவ்வளவுக்கெவ்வளவு உளநலக் கோட்பாடுகள் மக்களிடையே பரப்பப்படுகின்றனவோ அவ்வளவுக்கு இந்தப் பிரச்சினைகள் குறைந்து வரலாம். இந்தப் பிரச்சினைகளைப் பையன்கள்தாம் பெண்களைவிட அதிகமாகக் கொண்டிருக்கின்றார்கள்.

தனியாள் ஆராய்ச்சி : இந்த இரண்டு வகையான பிரச்சினைகளையும் மாறுபட்ட சூழ்நிலை அனுபவத்தோடு இணைப்பதற்குச் சான்றுகளைச் சேகரித்து வருகின்றனர். ஆனால், குறிப்பிட்ட முன் நிகழ்ச்சி நிலைமைகளைப்பற்றிய ஆராய்ச்சி ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தேவையாக இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையின் காரணத்தை ஒரு குறிப்பிட்ட குழந்தையிடம் காணுகின்ற தேவையில் ஒரே மாதிரியான நடத்தையின் குறைபாடு

இரண்டு நிகழ்ச்சிகளால் காட்டப்பட வேண்டும். ஆனால், அடிப் படையில் நோக்கிலிருந்து காணும்போது அவை மாறுபட்டிருக் கின்றன; இரண்டு நிகழ்ச்சிகளுமே சிரமம் தருகின்றன. ஏனென்றால், இரண்டு நிகழ்ச்சிகளிலும் குழந்தைகள் தன்னம் பிக்கையற்றவர்களாக இருக்கின்றார்கள்; மற்றக் குழந்தைகளிட மிருந்து வழக்கமான தொடர்பைத் துண்டித்துக் கொண்டு பின் வாங்கிக் கொள்ளுகின்றார்கள்; அச்சத்தை வெளிப்படுத்துகின் றார்கள். பள்ளிக்கூடத்திலுள்ள பொருத்தப்பாட்டு நடத்தை யிலும் இரண்டு நிகழ்ச்சிகளில் பிரச்சினை வெளிப்படுகின்றது. எனவே, நடத்தையின் அடிப்படையில் மட்டிலும் இரண்டும் ஆளுமைப் பிரச்சினைக் குழுவில் வகைப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால், இரண்டு குழந்தைகளின் வரலாற்றுச் செய்திகள் அவர்களிடையேயுள்ள மாறுபாட்டைத் தெளிவாகக் காட்டு கின்றன. ஒரு நிகழ்ச்சி வரலாற்றை இங்குக் காண்போம். பொருளாதார நிலையிலும் சமூக நிலையிலும் உயர்ந்துள்ள ஒரு குடும்பத்திலிருந்து ஒன்பது வயதுள்ள ஒரு பையன் உளவியலாரிடம் கொண்டு செல்லப்பட்டான். அந்தப் பையனுடைய தந்தை அவருடைய மகன் சம்பந்தமான செய்தி யில் நடத்தையிலும் பேச்சிலும் மிகவும் நாணமுள்ளவராகக் காணப்பட்டார். பையன் எப்பொழுதும் தாயாரால் மேற் பார்வை செய்யப்பட்டு வந்தான். கரடுமுரடான விளையாட்டு எதை யும் அவர்கள் அவனிடம் அனுமதிக்கவில்லை. இரண்டு பெற்றோரும் அடிக்கடி அவன் விளையாட்டில் அடிபட்டுவிடக் கூடாது என்று எச்சரிக்கை செய்து வந்தனர். அவன் மிகவும் எச்சரிக்கையாக இருக்கும் மனப்பான்மையை அவர்கள் ஊக்குவித்தார்கள். இந்த விதமான சூழ்நிலையின் செல்வாக்கினால் பையன் தன்னம்பிக்கை இழந்துவிட்டான்; அவனுடைய பள்ளி நண்பர்களின் தொடர் பையும் புறக்கணித்துவிட்டான்.

இந்த நிகழ்ச்சி வரலாறுக்கு முற்றிலும் மாறுபாடானது ஒரு பெண்ணின் நிகழ்ச்சி வரலாறு. அப் பெண் வேற்று நாட்டிலிருந்து வந்து குடியேறிய குடும்பத்தைச் சேர்ந்தவள். அக் குடும்பம் சமூகத்திலும் பொருளாதாரத்திலும் பின்தங்கியதாக இருந்தது. பெற்றோர்கள் தங்கள் தாய்மொழியையே பேசி வந்தார்கள். அப் பெண் தன்னுடைய பெற்றோர் பேசி வந்த மொழியையும் பேசி னாள்; அந்த நாட்டு மொழியை நன்கு கற்றுக்கொண்டு மற்ற வர்களைப் போன்று நன்றாகப் பேசியும் வந்தாள். அவள் உயர் நிலைப்பள்ளியில் நுழைகின்ற சமயத்தில் அவளுடைய பெற்றோர் வேறு இடத்திற்குக் குடிப்பெயர்ந்தனர். அங்கு மற்றக் குழந்தை

களுடன் அவள் பள்ளிக்கூடம் போனாள். அங்குள்ள குழந்தைகளை விட நன்றாக அவள் அங்குப் பேசப்படும் மொழியைப் பேசினாள். எனவே, மற்றக் குழந்தைகள் அவளைத் தங்கள் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள்.

அந்தச் சூழ்நிலையில் அப் பெண் மற்றக் குழந்தைகளைப் புறக்கணிக்க வேண்டியிருந்தது. அவள் அவர்களிடமிருந்து தன்னுடைய தொடர்பை நிறுத்திக் கொண்டுவிட்டாள்; தன்னம்பிக்கையை இழந்தாள்; மற்றக் குழந்தைகளோடு தொடர்பு கொள்ளுவதில் அச்சம் கொண்டாள். எனவே, மேலே கண்ட பையனுடைய நடத்தையும் கீழே கண்ட பெண்ணுடைய நடத்தையும் இன்றியமையாத ஒற்றுமையைக் கொண்டிருக்கின்றன. ஆனாலும், இவை இரண்டும் முற்றிலும் மாறுபட்ட பிரச்சினைகள் என்பது தெளிவாகின்றது. இந்த இருவருடைய வாழ்க்கை வரலாற்றிலும் ஆழமாகச் செல்லாமல் இங்குக் காட்டப்பட்ட சில விவரங்களை மட்டும் வைத்துக்கொண்டு அவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடு எந்த முறையையும் திட்டமிடுவது முடியாத செயலாகும். அஃது ஆபத்தாக முடியலாம்.

குறிப்பு நூல் தொகுப்பு

(Bibliography)

அத்தியாயம் 1

1. Briggs, P. F., 'Eight Item Clusters for use with the M-B History Record', Journal of Clinical Psychology, 1959, 15, 22 - 28.
2. Sarbin, T.R.R., Taft and Bailey, D.T., 'Clinical Infence and Cognitive Theory', New York; Holt Rinehart and Winston, 1960.
3. Hunt, W. A., 'The Future of Diagnostic testing in Clinical Psychology', Journal of Clinical Psychology, 1946, 2, 311-317.
4. Muhl, P. E., 'Clinical vs Statistical Prediction', Minneapolis: University of Minnesota Press, 1954.
5. Rogers, E. L., 'Client - centered Theraphy', New York; Houghton Mufflon, 1951.

அத்தியாயம் 2

1. Becker, W. C., Peterson, D. R., Hellmer, L. A., Shoe maker, D. J., and Quay, H. C., 'Factors in Parental Behaviour and Personality as related to Problem Behaviours in Children', Journal of Consult, Psychology, 1959, 23, 107 - 118.
2. Peterson, D. R., 'Behaviour Problem of Middle Childhood', Journal of Consulting Psychologist, 1961, 25, 205 - 209.
3. Heber, R. A., 'A Mannual of Terminology and Classfication in Mental Retardation', Pinevills, La: American Association on Mental Deficiency, 1959.
4. Waston, R. I., 'A Brief History of Clinical Psychology', Psychological Bulletin, 1953, 18, 321 - 346.

கலைச்சொற்கள்

A

Ability, Artistic	—	கலைத்திறமை
Ability, Linguistic	—	மொழித்திறமை
Ability, Music	—	இசைத்திறமை
Ability, Organizing	—	அமைப்புத்திறமை
Abnormality	—	பிறழ்ந்தமை
Accessary	—	துணையாயிருக்கின்ற கருவி
Accumulate	—	குவிதல்
Activity, Recreational	—	பொழுதுபோக்கு நடவடிக்கை
Adjustors	—	பொருந்துவாய்கள்
Advantage	—	அனுகூலம்
Affair	—	செய்கை, விவகாரம்
Affect	—	எழுச்சி, விளைவித்தல்
Afferent	—	உள்நோக்கிச் செல்லுகின்ற
After Image	—	பின் பிம்பம்
Alcoholic	—	மட்டுமிஞ்சிய குடியர்
Alexia	—	மூளைச்சிதைவினால் ஏற்படுகின்ற மறதி, சொற்குருடு
Alienation	—	தொடர்பறுத்தல்
All-or-non-response	—	எல்லாம் அல்லது ஒன்றுமில்லாமை
Amelioration	—	சீர்திருத்தம்
Amnesia	—	மறதிநோய்
Amnion	—	பனிக்குடம்
Amoebia	—	ஓரணு உயிரி, அமீபா
Amplitude	—	வீச்சு
Amplifier	—	பெரிதாக்கும் கருவி
Anasthesia	—	உணர்ச்சி நீக்கம்

Anasthesis	—	மயக்கம்
Anecdotal	—	செய்தித் துணுக்கு
An ataxia	—	புலன்வலுக் குறைபாடு
Anatomy	—	உடலமைப்பு
Angle	—	கோணம்
Animism	—	உயிராக்கும் கொள்கை
Antisocial	—	சமூக விரோத
Apathy	—	உணர்ச்சியற்ற தன்மை
Aphasia	—	மறதி நோய்
Appitite	—	பசி நாட்டம், ஆர்வம்
Approval	—	ஏற்றம்
Arbitrary	—	மனப்போக்காக, விதிக் கட்டளையின்றி
Atmosphere	—	இயற்சூழ்நிலை
Attitude Formation	—	மனப்பான்மை உருவாதல்
Attitude Change	—	மனப்பான்மை மாறுதல்
Auditory Labyrinth	—	செவியின் சிக்கு வழி
Autokinetic	—	தன்னுள் இயங்கல்
Axon	—	நரம்பிழை, அக்ஸன்

B

Background	—	பின்னணிச் சூழல்
Baffling	—	திகைக்கச் செய்தல்
Beats	—	துடிப்புகள்
Behaviour Pattern	—	நடத்தைக் கோலம், நடத்தை வடிவம்
Behaviour Problem	—	நடத்தைப் பிரச்சினை
Biochemical	—	உயிர் இயைபியல்
Blindness, Colour	—	நிறக்குருடு
Blind Position	—	குருடான இடம்
Blind Spot	—	குருட்டுப் புள்ளி
Blood Pressure	—	குருதியழுத்தம்
Blood Stream	—	குருதியோட்டம்
Brain Washing	—	மூளைச் சுத்தம்
Brightness	—	வெளிச்சம், வெள்ளிய
Bulb	—	மின்விளக்கின் குமிழ்
Buzzar	—	ஒலிக்கும் கருவி

C

Cataleptic	—	மூடுசன்னி, நினைவற்ற சன்னி நிலை
Catharsis	—	மனப்பேதி

Cell Body	—	உயிரணுவின் உடல்
Cell Division	—	உயிரணுப் பிரிவு
Centile	—	நூற்றுமானம்
Central	—	மையம்
Censor	—	தணிக்கை
Cerebellum	—	சிறுமூளை
Cerebrum	—	பெருமூளை
Choroid Coat	—	விழியின் அடிக் கரும்படலம்
Chromosome	—	உயிரணுக்கோல்
Chronic	—	நாள்பட்ட, முற்றிய
Ciliary Muscle	—	சிலியரைத் தசைநார், கண்ணிமையின் தசைநார்
Circuit	—	மின் ஓட்ட மண்டலம்
Circulatory System	—	குருதியோட்ட மண்டலம்
Class Consciousness	—	வகுப்புணர்வு
Cochlea	—	உள்செவிச்சுருள், நத்தை எலும்பு
Cold Spot	—	குளிருணர்புள்ளி
Colour Mixture	—	நிறக் கலவை
Community	—	சமுதாயம்
Complex	—	சிக்கல்
Compulsion	—	கட்டாயம்
Concept Formation	—	கருதுகோள் உருவாதல்
Conception	—	கருதுகோடல்
Concern	—	சார்புடைய, அக்கறை
Concurrent	—	உடன் இயங்குகின்ற, உடன் நிகழ்கின்ற
Concomitant	—	உடன் செல்லுகின்ற
Condition	—	நிலைமை
Confirmity	—	ஒத்தொழுகல்
Conservative	—	மாறுதல் விரும்பாத
Constant Error	—	நிலையான பிழைபாடு
Constructive	—	ஆக்கச்சார்பான
Content	—	உள்ளடங்கிய, உள்பொருள்
Contrast	—	முரண்
Conversion Hysteria	—	மாற்று ஹிஸ்டீரியா
Convolution	—	மடிப்போடிருத்தல்
Cortex	—	புறணி
Correspond	—	ஒத்திரு, இசைந்திரு
Crank	—	வளைவு
Creativity	—	படைப்புத் திறமை

Cross Sectional — குறுக்குப் பகுப்பியல்
Crowd — கூட்டம்
Crowd Mind — கூட்டத்தின் மனம், கூட்டத்தின் வழியில் இயங்கும் அறிவு
Culture — பண்பாடு
Culture Pattern — பண்பாட்டு வடிவம்
Cytoplasm — உட்கருவின் சுற்றுப்பசை, சைட்டோபிளாசம்

D

Day Dream — பகற்கனவு
Defence Mechanism — தற்காப்பு வழியமைப்பு
Delinquent — கடமை தவறுபவர், நெறி பிறழ்ந்தவர்
Delirium — மயக்க வெறி
Delusion — திரிபுணர்வு
Dulusion of Grandeur — மேன்மைத் திரிபுணர்வு
Dementia Praecox — கோட்டி நிலை
Depletion — வெறுமை
Depression — உளச்சோர்வு
Depression Morbid — மனவூக்கமழிவு
Detecting Device — கண்டுபிடிக்கும் முறை
Deviates — விலகியவர்கள், நிலை பிறழ்ந்தவர்கள்
Direction — இலக்கு, ஏவுரை, அறிவுரை
Discharge — செலுத்தல், கடமை
Disability — செயலழிவு
Disintegration — ஒருமைப்பாடு சிதறல்
Disparity, Retinal — விழி வேற்றுமை
Disposition — உளச்சார்பு, மனநிலை
Dissonance — இசை முரண்பாடு, பொருத்தக்கேடு
Disrupt — தகர்த்தெறிதல்
Distortion — திரிபு
Disturbance — தொல்லை, குழப்பம், தொந்தரவு
Dominance — ஆதிக்கம்
Dorsal — முதுகுபுறத்து
Double Personality — இரட்டையாளுமை

E

Ear, External	—	வெளிச்செவி
Ear, Internal	—	உட்செவி
Ear, Middle	—	மையச் செவி
Ectomorphy	—	தொய்ந்த உடலமைப்பு
Effectors	—	இயக்குவாய்கள்
Eidetic Image	—	மீத்தெளி விம்பம்
Electrocardiogram	—	இதயத்துடிப்பைப் பதிவிடும் மின்கருவி, மின் இதயப் பதிவி
Electrochemical Phenomena	—	மின்னியைவு சார்ந்த நிகழ்ச்சி
Electroencephalogram	—	மின் மூளைமானி
Embryo	—	கரு
Emergengy	—	திடீர்த்தேவை
Emotional Expression	—	மனவெழுச்சி வெளிப்பாடு
Emotional Illness	—	மனவெழுச்சி நோய்
Emotional Stability	—	மனவெழுச்சி நிலையுடைமை
Enthusiasm	—	பூச்சியினவியல் வல்லுநர்
Entomologist	—	உணர்ச்சிக் கனிவு, பரபரப்பு
Epilepsy	—	காக்கைவலிப்பு
Ethenocentrism	—	இன மையக் கொள்கை
Euphorin	—	எழுச்சி

F

Feable Minded	—	குறைமனம்
Fertility	—	கருவுறுதல்,
Fervour	—	உணர்ச்சித் துடிப்பு, ஆர்வம்
Fissure	—	பிளவு
Fit	—	வலிப்பு நோய்
Flexibility	—	இசைந்து கொடுத்தல்
Folk Ways	—	பொதுமக்கள் பழக்கவழக்கங்கள்
Formula	—	சூத்திரம்
Foster Children	—	வளர்ப்புப் பிள்ளை
Foster Parents	—	வளர்ப்புப் பெற்றோர்கள்
Frustration	—	மனமுறிவு
Fugue	—	நினைவு இழப்பு, மறவி
Functional Disorder	—	செயல்சார் கோளாறு

G

Ganglia — நரம்பு மையம்
Genetic — பிறப்பு மரபியல்
Genius — மேதை
Gifted — இயற்கைத்திறன் மிக்க
Gland, Adrenal — மாங்காய்ச் சுரப்பி
Gland, Endocrine — உள்நோக்கிச் சுரக்கின்ற சுரப்பி
Gland, Pancreas — கணையச் சுரப்பி
Gland, Parathyroid — கேடயத் துணைச் சுரப்பி, பாராதைராய்டு சுரப்பி
Gland, Pineal — கூம்புருவச் சுரப்பி, பைனியல் சுரப்பி
Gland, Pituitary — கோழைச் சுரப்பி
Gland, Thyroid — புரிசைச் சுரப்பி
Gonads — பால் உள்சுரப்பிகள்
Gregariousness — குழுவூக்கமுள்ள
Group Prejudice — குழுவின் தப்பெண்ணம்
Group, Secondary — வழிநிலைக் குழு
Group Spirit — குழுவுணர்ச்சி
Group Tension — குழு நெருக்கடி நிலை
Group Theraphy — குழு மருத்துவம்
Guss Work — உய்ந்துணர்தல், ஊகித்தல்
Gustatory — சுவைப்புலன்

H

Habit — பழக்கம்
Hallucination — பொய்த்தோற்றம்
Harmoney — ஒத்திசைவு
Hedonism — இன்பியல் கோட்பாடு
Hemisphere — அரை உருண்டை
Heightened — தீவிரப்படுத்தப்பட்ட, உயர்வாக்கப்பட்ட
Heredity — மரபுநிலை
Hind brain — பின் மூளை
Homeostasis — உடல் சமநிலையைப் பேணுதல்
Homogenous — ஒருசீரானுள்ள
Hormone — நாளமில்லாச் சுரப்பிநீர், ஹார்மோன்
Hypnosis — அறிதுயில்
Hypochandrical Reaction — அச்சந்தரும்மனநோய் எதிர்வினை
Hypothalamus — ஹைப்போதாலமஸ்

I

Idiot — பிறவி முட்டாள்
Illusion — திரிபுகாட்சி
Image — விம்பம்
Imagination — கற்பனை
Immigration — குடியேற்றம்
Impotence — ஆண்மையின்மை
Incogurous — இசையாத
Inclubation — அடை காத்தல்
Inertia — இயங்காத
Infection Syphilitic — மேகநோய் தொற்றல்
Insanity — பித்து
Instinct — புலன்தூண்டல், இயல்பூக்கம்
Instinct, Derived — சார்பூக்கம்
Instinct, Maternal — தாய்மையூக்கம்
Intercommunication — இடைப் போக்குவரத்து
Intermixture of races — இனக்கலவை
Introduction — அறிமுகம்
Irrational — அறிவுக்கொவ்வாத
Irritability — எரிவுறுந்தன்மை

K

Kinesthetic — தசையியக்கம்
Knee jerk — முழங்கால் குலுக்கல்

L

Lassitude — தளர்ச்சி
Learning, Animal — விலங்கு கற்றல்
Lesion — நைவுப்புண்
Level — மட்டம், அளவு
Litigious — ஓயாது வழக்காடுகின்ற
Lobe — தொங்கும் பகுதி
Lobe, Frontal — நடவடிக்கைகளை இயக்கும் புறணிப்பகுதி
Lobe, Occipidal — கண்களை இயக்கும் புறணிப்பகுதி
Lobe, Parietal — உடல்பகுதிகளை இயக்கும் புறணிப்பகுதி
Lobotomy — நடத்தையை மாற்றும் நரம்பு இரண சிகிச்சை

Locus — இருப்பிடம்
Longevity — பன்னாள் வாழ்வு, நீண்ட வாழ்வு
Longtitudinal — நீண்டநாளுக்குரிய

M

Manic Depressive Psychosis — கிளர்ச்சியும் சோர்வும் மாறி வரும் மனப்பிணி
Mannerism — செயற்கைப் பழக்கம்
Medulla Oblongata — நரம்புத்தண்டின் மேல்முனை, முகுளம்
Melancholy — சோர்வுடைய
Mental Conflict — உளப்போராட்டம், உள முரண்பாடு
Mental Illness — உளநோய்
Mental Retardation — மனவளர்ச்சி குறைதல்
Mental Set — மன ஆயத்த நிலை
Mesomorphy — எலும்புத் தசை புடைத்த உடலமைப்பு
Midget — குறளன்
Muscle Smooth — மென்மையான தசைநார்
Muscle Striped — பட்டைத் தசைநார்

N

Natural Group — இயல்பாக உண்டான குழு
Negativism — எதிர்மறை வாதம்
Nervous Disorder — நரம்புக் கோளாறு
Neural Circuit — நரம்பு ஓட்டங்கள்
Neurone — நரம்பு உயிரணுக்கள்
Neurologist — நரம்புப்பிணி மருத்துவர்
Neurophysiology — நரம்புடலியல்
Neurotic — நரம்புவழி நோயினன்

O

Obsession — பிடிப்பு
Obstacle — இடையூறு
Olfactory Sense — மோப்பப் புலன்

P

Pain Spot — வலியுணர்புள்ளி
Palpitation — நெஞ்சு துடித்தல்
Panic — கிலி; பேரச்சம்
Paranoia — கருத்துத்திரிபுநிலை,சித்தப்பிரமை

Pathology — நோய் இயல்
Peptic Ulcer — குடல்புண்
Paralysis — பக்கவாதம்
Paresis — பெராசிஸ்
Peripheral Adjustment — மேற்பரப்புப் பொருத்தப்பாடு
Perspective — நோக்கு வாய்ப்பு
Phobia — பீதி, கிலி
Phrenology — மூளை இயல்
Pioneer — புது முயற்சியாளர்
Plastic — இளக்கமான, உருவாக்கத் தக்க
Prejudice — தப்பெண்ணம்
Pressure Spot — அழுத்தப் புள்ளி
Problem Box — பிரச்சினைப் பெட்டி
Projecting — புறத்தெறிதல்
Psychiatrist — உளமருத்துவர்
Psychological clinic — உளநோய்ப் பேணகம்
Psychology, Animal — விலங்கு உளவியல்
Psychology, Clinical — உளநோய் நிவர்த்தி உளவியல்
Psychology, Comparative — ஒப்புமை உளவியல்
Psychology, Differential — வேற்றுமை உளவியல்
Psychosis — உளப்பிணி
Psychosomatic Disorder — உளவழி உடற் கோளாறு
Psychotharaphy — உளக்குண முறை
Psychotic — உளப்பித்தன்
Public Opinion — பொதுமக்கள் கருத்து
Pugnacity — சண்டையியல்பு
Pupillary — கண்மணிக்குரிய

Q

Queer — அரைக்கிறுக்கு

R

Race conscious — இன உணர்வு
Receptors — புகுவாய்கள்
Respiratory system — மூச்சு மண்டலம்
Repression — நசுக்குதல்
Retardation — பின்தங்குதல்
Rumour — வதந்தி, புரளி

S

Sensation, Organic	—	உட்புலனுணர்ச்சி
Sensation, Pain	—	வலியுணர்ச்சி
Sensation, Static	—	நிலையியக்கும் புலனுணர்ச்சி
Sensation, Temperature	—	தட்பவெட்பப் புலனுணர்ச்சி
Severity	—	கடுமை, கடுகடுப்பு
Shock Treatment	—	அதிர்ச்சி மருத்துவம்
Sin	—	பழிவினை, பாவம்
Sociability	—	தோழமை
Social Class	—	சமூக வகுப்பு
Social Confirmity	—	சமூகத்தோடு ஒத்தொழுகல்
Social Learning	—	சமூகக் கற்றல்
Social Motive	—	சமூக ஊக்கி
Socializing Process	—	சமூக இயல்பினளுக்கும் செயல்முறை
Spinal Cord	—	தண்டுவடம், முதுகுத்தண்டு
Somnambulism	—	உறக்கநடை நோய்
Stratification	—	படிமுறையாக்கல்
Structural Disorder	—	அமைப்புக் கோளாறு

T

Tabes Dorsails	—	முதுகு உடலுருக்கி நோய்
Thyroxin	—	புரிசைச் சுரப்பிநீர், தைராக்சின்
Tic	—	முகத்தசைகள், தானே துடிக்கும் நோய்
Timid	—	எளிதில் அஞ்சுகின்ற
Tinge	—	பண்புச்சாயல்
Tissue	—	இழைபொருள்
Tonic	—	வலிமை தருகின்ற
Tremour	—	அதிர்ச்சி
Toxic	—	நஞ்சான

V

Vacillation	—	ஊசலாட்டம்
Vicarious	—	ஒருவர் இடத்தினின்று பெறுகின்ற
View point	—	நோக்குநிலை, பார்வைக் கோணம்
Visceral	—	உடலின் உள்ளுறுப்பு சார்ந்த

W

Worry	—	தொல்லை

———